சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 6)

அணிந்துரையாளர்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **மணிமேகலை புஷ்பராஜ்**

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002 சேலம் – 636 001

கோயமுத்தூர் – 641 001 மதுரை – 625 001

ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-368-1

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 6)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப்லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
	XXII + 298 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00

© பதிப்புரிமை	ஆசிரியர்க்கு

சமகாலத் தமிழியல் வரலாற்றின் ஊற்றுக்கண்கள்

– முனைவர் பொற்கோ

முனைவர் சிலம்பொலியாரின் அணிந்துரைகள் தமிழியல் வரலாற்றில் புகழ்பெற்றவை; தனிப்பெருஞ் சிறப்புக்குரியவை. அவர் பல்வேறு சூழல்களில் பல்வேறு நூல்களுக்கு வழங்கிய அணிந்துரைகள் தொகுக்கப்பெற்றுப் பல்வேறு தொகுதிகளாய் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்போது உங்கள் கைகளில் தவழ்வது ஆறாவது தொகுதி. இன்னும் ஆறு தொகுதிகளாவது வரவேண்டும். முனைவர் சிலம்பொலியார் அவ்வளவு அணிந்துரைகளை வழங்கி யிருக்கிறார். நூலாசிரியர்கள் இவரிடம் அணிந்துரை பெறுவதை ஒரு பேறாகவே கருதி விரும்பிப் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள்.

அணிந்துரை பெற்ற நூலாசிரியர்களில் கவிஞர்கள் உண்டு; கட்டுரையாளர்கள் உண்டு; நாடக ஆசிரியர்கள் உண்டு; உரையாசிரியர்கள் உண்டு; ஆய்வாளர்களும் உண்டு. இப்படிப் பல்வேறு களங்களில் வெளிவந்த நூல்களுக்கும் தகுதிமிக்க அணிந்துரைகளைப் பாங்கறிந்து வழங்கிப் படைப்பாளர்களுக்கும் வாசிப்பாளர்களுக்கும் வேறுவேறு வகையில் முனைவர் சிலம்பொலியார் பேருதவி புரிந்திருக்கிறார்.

ஒரு நூலைப்பற்றி மற்றவர் வழங்கும் அறிமுக உரையை இக்காலத்தில் அணிந்துரை, சிறப்புரை முதலான பெயர்களால் குறிக்கிறோம். முற்காலத்தில் இது சிறப்புப் பாயிரம் என்ற பெயரால் குறிக்கப்பட்டது. தொல்காப்பியத் திற்கு இப்படி ஒரு அறிமுகம் வழங்கியவர் பனம்பாரனார் என்பது தமிழுலகுக்கு நன்கு தெரிந்த செய்தி. இடைக் காலத்தில் செய்யுளில் இப்படி வழங்கப்பெற்ற அறிமுகம் சாற்றுக் கவி என்று பெயர்பெற்றது.

சிறப்புப் பாயிரம், சாற்றுக் கவி, அணிந்துரை ஆகிய இவை யாவும் தம்முள் சில பொதுப்பண்புகளைப் பெற்றிருக்கின்றன என்பது உண்மைதான். இருப்பினும் இவை மூன்றும் காலச்சூழலுக்கேற்ப வேறுவேறு கோலம் பூண்டு விளங்குகின்றன என்ற உண்மையையும் நாம்

புறக்கணிக்க முடியாது. ஆகவே, சிறப்புப் பாயிரத்தையும் சாற்றுக் கவியையும் பார்க்கிற அதே பார்வையில் அணிந்துரைகளைப் பார்க்க முடியாது; அப்படிப் பார்க்கவும் கூடாது. இன்னும் சொல்லப்போனால் சிலம்பொலியா ருடைய அணிந்துரைகள் மற்ற அணிந்துரைகளிலிருந்து சற்று வேறுபட்டவை; விரிவானவை, வளமானவை, ஆழமும் நுட்பமும் வாய்ந்தவை.

நூலின் ஆசிரியர் தாமே தமது நூலுக்கு முன்னுரை எழுதுவது, இயல்பாக நாம் காண்பது. அப்படிப்பட்ட முன்னுரைகளில் மறைமலை அடிகளாரின் முன்னுரைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இந்த முன்னுரைகள் ஒருவகையில் பெர்னாட்ஷாவின் முன்னுரைகளையும் என்றி ஜேம்ஸ் முன்னுரைகளையும் நினைவூட்டுவன. ஒரு நூலுக்கு மற்றவர் எழுதும் முன்னுரைகளில் சிலம்பொலியாரின் முன் னுரைகள் முனைவர் அ. சிதம்பரநாதன் செட்டியார் எழுதிய முன்னுரைகளை நினைவூட்டுவனவாய் அமைந் துள்ளன.

முனைவர் சிலம்பொலியார் கணக்குத் துறையிலிருந்து தமிழுக்கு வந்தவர். கணக்குத் துறையில் இவர் பணிபுரிந்த காலத்திலும் இவரது தமிழ் ஈடுபாடு துலக்கமாகவே வெளிப்பட்டது. தமிழ்மீது இவருக்கு இருந்த ஆர்வமும் ஈடுபாடும் இவரைத் தமிழ்ப் பணியிலேயே முழுமையாக ஈடுபடுத்தி விட்டது. தமிழுக்கு உரிய எல்லாக் களங்களிலும் இவர் நிறைந்த பயிற்சி பெற்றவர். கவிதைக் களத்தில், சங்ககாலம் முதல் இக்காலம் வரை, இவர் பார்வைபடாத கவிதை நூல்கள் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. இவர் எழுதியுள்ள அணிந்துரைகளின் ஒவ்வொரு பக்கமும் இதற்குச் சான்று பகரும்.

இவர் எழுத நினைக்கும் எதையும் திட்டமிட்டு முறையாக எழுதுபவர். பாடுபட்டு ஆராய்ந்து கண்டறிந்த நுட்பமான செய்திகளைக்கூட எல்லோர்க்கும் விளங்கும் வகையில் எளிமையாகப் பேசுபவர். சொற்பொழிவாளர் வரிசையில் இவர் 'சிலம்பொலி' என்றே அறியப்பட்டிருந் தாலும் இவரை ஒரு 'பெருநாவலர்' என்று குறிப்பிடுவதே பெரிதும் பொருத்தம். தமிழகம் கண்ட நாவலர் வரிசையில் இன்று இவர் நம்மிடையே ஒரு பெருநாவலராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

சிலம்பொலியார் அவர்கள் தமிழ்வளர்ச்சித்துறையின் இயக்குநராகவும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக

வும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் சிறப்புறப் பணியாற்றித் தமது நிருவாகத் திறமையைப் புலப்படுத்தியிருக்கிறார். அவ்வப்போது அரசு இவரிடம் வழங்கிய பொறுப்புகளை ஆரவாரமில்லாமல் அடக்கத் தோடு சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார். சுருங்கச் சொன்னால் இவருக்குள் நாம் ஒரு புலமையாளரையும் ஒரு ஆசிரியரையும் ஒரு ஆய்வாளரையும் ஒரு எழுத்தாளரை யும் ஒரு சொற்பொழிவாளரையும் ஒரு நிருவாகியையும் ஒருசேரக் காண்கிறோம்.

சிலம்பொலியார் தமது தமிழ் உணர்வாலும் தமிழ்ச் சமுதாய உணர்வாலும் பயன் கருதாமல் எத்துணையோ பணிகளைத் தம்மீது எடுத்துப் போட்டுக்கொண்டு செய்து முடித்திருக்கிறார். தமக்கு ஏற்றம் வருவதற்குப் பதிலாக இடர்கள் வந்தபோதெல்லாம் யார்மீதும் குறைப்படாமல் யாரையும் தூற்றாமல் இன்முகத்தோடு அந்த இடர்களை யெல்லாம் தாமே எதிர்கொண்டு கடந்து வந்திருக்கிறார். போற்றுதலையும் பாராட்டையும் எதிர்பாராமல் பிறர் பணிகளைப் பாராட்டியும் போற்றியும் மகிழுவது சிலம்பொலியார் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்த ஒரு உயர்தனிப் பண்பு. இந்த உயர்தனிப் பண்பை எளிதாக எல்லோரிடமும் காண முடியாது. இந்தப் பண்பை நினைத்த நேரத்தில் நினைத்தபடி உருவாக்கிவிடவும் முடியாது. இந்த உயர்தனிப் பண்பு இவரிடம் பிறவிக் குணமாக அமைந்திருக்கிறது. இந்த உயர்தனிப் பண்புதான் இவ்வளவு அணிந்துரைகளை வழங்க இவரை வழிநடத்தி யிருக்கிறது.

சிலம்பொலியாரின் அணிந்துரைகள் இத்தோடு முடிந்துவிடவில்லை. எழுதி முடித்தவற்றுள் இன்னும் இருப்பவை பல தொகுதிகளாக மேலும் வெளிவரவேண்டும்; தமிழகத்தில் இன்னும் வெளிவரவேண்டிய எத்துணையோ நூல்கள் இவருடைய அணிந்துரைகளுக்காக இப்போதும் காத்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. இந்த அணிந்துரைகள் தமிழியலில் காப்பியம், கவிதைகள், நாடகம், ஆராய்ச்சி முதலான பல்வேறு களங்களுக்கு உரியன.

இருபதாம் நூற்றாண்டில் இலக்கணம் இலக்கியம் என்பதோடு நில்லாமல் தமிழியல்துறை காப்பியம், கவிதை, நாட்டுப்புறவியல், இலக்கியவியல், பண்பாட்டியல், புதினவியல், சிறுகதையியல், மொழியியல், அழகியல், இசையியல், நாடகவியல் என்று இப்படிப் பலவாகக் கிளைபரப்பிப் பணைத்துச் செழித்துத் தழைத்து நிற்கிறது.

கடந்த நூற்றாண்டில் இப்படிப் பெருவளர்ச்சி பெற்றுப் பரந்து உயர்ந்து நிற்கும் தமிழியல் வரலாற்றை நன்கு விளங்கிக் கொள்ள இப்படிப்பட்ட அணிந்துரைகள் ஒப்பற்ற உறுதுணையாக விளங்கப் போகின்றன.

இலக்கிய வரலாறு பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. மொழி வரலாறு பற்றி முதன்முதல் ஆழமாகவும் முறையாகவும் சிந்தித்தவர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள்தான் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு பதிவுசெய்ய வேண்டும். அந்தக் களத்தில் மிகச் சில நூல்கள்தான் வெளிவந்திருக்கின்றன. தமிழியல் வரலாறு என்பது புதிதாகத் தோன்ற வேண்டிய ஒரு இன்றியமையாத துறை. அந்தத் துறையில் சமகாலத் தமிழியல் வரலாறு என்பது ஒரு உள் பிரிவாகக் கருதத்தக்கது.

சிலம்பொலியாரின் அணிந்துரைகள், மேற்குறித்த நோக்கில், சமகாலத் தமிழியல் வரலாற்றை அறிந்துகொள்ள ஈடு இணையற்ற முறையில் நமக்கு உதவுவன. இவருடைய அணிந்துரைத் தொகுதிகள் தமிழியல் வரலாறு என்ற ஒரு புதிய களத்தைப் பற்றிய சிந்தனைக்கு வித்தூன்றியிருக் கின்றன என்பதை இங்கே மகிழ்ச்சியோடு மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

சிலம்பொலியாரின் அணிந்துரைகள் ஒவ்வொன்றும் ஒரு ஆய்வுரையாகவே கொள்ளத் தக்கன. ஒரு நூலுக்கு இவர் அணிந்துரை எழுதுகிறார் என்றால் அந்த அணிந்தரை அந்த நூலைப் பற்றிய செய்திகளைத் தருவதோடு நிற்காது; அந்த நூலை ஒத்த நூல்களாக நாம் காண்பன என்னென்ன? அந்த நூல் எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது? அந்த வகை தோன்றி வளர்ந்த வரலாறு என்ன? - இப்படிப்பட்ட வினாக்களுக்கெல்லாம் இவருடைய அணிந்துரையில் எதிர்பாராத வகையில் விடை கிடைக்கும். நூலைப் பற்றிய சரியான அறிமுகம் இவர் எழுதிய எல்லா அணிந்துரை களிலும் தவறாமல் கிடைக்கும். நூலாசிரியர்களுக்கு இவருடைய அணிந்துரைகள் பாராட்டாகவும் பரிசிலாகவும் அமைந்து அவர்களை வழிநடத்தி வளர்த்தெடுத்திருக் கின்றன.

சிலப்பதிகாரம் சிலம்பொலியாரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காப்பியம். சிலப்பதிகாரம் தொடர்பான நூல்களுக்கு இவர் அணிந்துரை வழங்கும் போது முழு வீச்சில் சிலம்பொலியார் வெளிப்படுகிறார். இலக்கியம், பண்பாடு, வரலாறு முதலான துறைகளில் இவர்

பெற்றுள்ள அறிவு இவர் எழுத்தில் வெள்ளம்போல் பாய்ந்து வெளிப்படுகிறது. கவிதையிலும் காவியங்களிலும் ஆய்வுரைகளிலும் இவர் எப்போதும் ஆராக் காதல் கொண்டவராக விளங்குகிறார். அதைத் தெளிவாக எல்லோருக்கும் புலப்படுத்தும் பாங்கில்தான் இவருடைய அணிந்துரைகள் யாவும் அமைந்திருக்கின்றன.

சிலம்பு தொடர்பான நூல்களுக்கு இவர் வழங்கியுள்ள அணிந்துரைகளில் வேறு எங்கும் கிடைக்காத அரிய செய்திகள் பதிவு பெற்றுள்ளன. 'பெரியார் குறும்பாவியத்திற்கு' இவர் வழங்கியுள்ள முன்னுரை தமிழறிஞர் பலருக்குத் தெரியாத பல இன்றியமையாத செய்திகளைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. 'சிலம்பும் பொருளும்' என்ற தலைப்பில் அமைந்த அணிந்துரையில் ஒரு அரிய உரைவரலாற்று ஆய்வுரையையே வழங்கியிருக்கிறார்.

சிலம்பொலியாரின் அணிந்தரைகள் செய்திக் கருவூலமாக, கருத்துக் களஞ்சியமாக, தமிழியல் வரலாற்று ஊற்றுக் கண்ணாக இப்படியெல்லாம் இன்றியமையாச் சிறப்பினவாக விளங்குகின்றன. இன்னும் வெளிவர வேண்டிய இவருடைய அணிந்துரைத் தொகுப்புகள் அனைத்தும் வெளிவர வேண்டும். அவை யாவும் சமகாலத் தமிழியல் வரலாற்றைச் சரியாக அறிந்து கொள்ள மிக மிகத் தேவையான அரிய ஆவணங்கள்.

தமிழகத்தில் மட்டுமன்றி உலக நாடுகளில் தமிழ் வழங்கும் இடமெல்லாம் சிலம்பொலியார் நன்கு அறிமுகமானவர். உலகெங்கும் உள்ள தமிழ் நெஞ்சங்கள் சிலம்பொலியாரின் அணிந்துரைத் தொகுப்புகளைப் படித்துப் பயன்பெறுவதோடு போற்றிப் பாதுகாக்கவும் வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். இவர் தமிழ் நெஞ்சங்களின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர். இவருடைய பணி மேலும் மேலும் சிறப்பாகத் தொடரத்தக்க வகையில் இவருக்கு இனிய சூழல்கள் வாய்க்க வேண்டும் என்பது நம் பெருவிருப்பம்.

தொகுப்பாளரின் உரை

– முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார். முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி, அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத்

தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரை களைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும்

இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய் மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின்
முன்னுரை

– சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமை யாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத். தந்துரைப்பதால் தந்துரை;

---

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால் புனைந்துரை
என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது.

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[1]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொட்டியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[2]

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங் களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு.

---

1. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
2. நன்னூல், 47

ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்க வில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காண முடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் 'இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூ'லாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படுகின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

அணிந்துரை இன்று நுழைவாயில், அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது.

இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது.

---

1. நன்னூல், 51

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளையிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கியுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத்

தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத் தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். 'அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது' என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

"கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது. அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத்-தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் 'சிலம்பொலி' எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர். என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடைதொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— பதிப்பகத்தார்

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
	சிறப்புரை	III
	தொகுப்பாளரின் உரை	VIII
	அணிந்துரையாளரின் முன்னுரை	XII
	பதிப்புரை	XIX
1.	பெரியார் ஈ.வே.ரா. குறும்பாவியம் *புலவர் இலமா. தமிழ்நாவன்*	1
2.	நபிகள் நாயகக் காவியம் *கவிஞர் அப்துற்-றஹீம்*	26
3.	சிலப்பதிகார ஆய்வுகள்—ஓர் ஒப்பாய்வு *முனைவர் டி. மகாலட்சுமி*	51
4.	புலம்பும் சிலம்பு *பேராசிரியர் செ. உலகநாதன்*	82
5.	சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள் *கோ. பார்த்தசாரதி*	97
6.	வழிவழிச் சிலம்பு *முனைவர் சரளா இராசகோபாலன்*	126
7.	சிலம்பும் பொருளும் *பாவலர் இறையரசன்*	163
8.	இந்தியமொழிக் கவிதைகள் *கவிஞர் ப. முத்துசாமி*	185
9.	திருவீங்கோய்மலை எழுபது *அப்பரடிப்பொடி ச. திருநாவுக்கரசு*	240
10.	கண்ணதாசன் கவிதைகள்—ஓர் ஆய்வு *கவிஞர் வல்லம் வேங்கடபதி*	258

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!"

- நன்னூல்

1

பெரியார் ஈ.வே.ரா. குறும்பாவியம்

வாழ்க்கை வரலாறு

பெரியவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை அறிவது நமக்குப் பெரும் பயன் நல்கும். அவர்களைப் போலச் சிறந்து விளங்க வேண்டும் என்னும் ஆர்வத்தை ஊட்டும். உயர்ந்தவர்களுடைய வாழ்க்கை வரலாறு மாந்த இனத்தின் மிகச் சிறந்த ஆசிரியர் ஆகும். படிப்பவற்றுள் மிகவும் பயனுள்ளதும் மகிழ்ச்சியளிப்பதும் வாழ்க்கை வரலாறுகளேயாம்.

தந்தை பெரியார் தமிழகத்தின் தனிப்பெருந்தலைவர். உலகத் தற்சிந்தனையாளர்களில் மிகச் சிறந்து நிற்பவர். தமிழர்கள் தலை நிமிர்ந்து நடக்கத் தன் வாழ்நாள் முழுதும் உழைத்தவர். அவருடைய வரலாறு நமக்கெல்லாம் ஒரு பாடம்.

சேலம், ஆத்தூர் பெரும்புலவர் பா. நாராயணன் 'பெரியார் காவிய'த்தை ஏழு காண்டங்களில் எழுதத் திட்டமிட்டார்; ஆயினும் ஆறு காண்டங்களே எழுதிய நிலையில் முதற்காண்டம் 1981 ஆம் ஆண்டிலும், இரண்டாம் காண்டம் 1984 ஆம் ஆண்டிலும் அச்சிடப்பட்டு வெளிவந்தன. இரண்டாம் காண்டத்திற்கு மதிப்புரை வழங்கிய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், "பெரியார் அனைத்தையும் பெற்றார்; என்றாலும், ஒரு பாவியம் (காவியம்) பெறவில்லை என்ற குறையை இந்நூல் போக்கிவிட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார். பெரும்புலவர் இயற்கை எய்தியமையால் அவர் விட்டுச் சென்ற பணி முடிவுறா நிலையில் உள்ளது. இராசிபுரம் பாவலர் கே.பி. முத்துசாமி, 'பெரியார் புரட்சிக் காப்பியம்' எனும் நூலை 3005 வெண்பாக்களில் எழுதி 1988 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூல் பெரியார் வரலாறு கூறுவதாய் இல்லாமல் அவர் கொள்கைகள், செயல்முறைகள் ஆகியன பற்றிய விளக்கமாய் அமைந்துள்ளது.

இந்நிலையில் பாவலர் இலமா. தமிழ்நாவன் பெரியார் ஈ.வே.ரா. குறும்பாவியத்தைப் படைத்தளிக்கிறார். நூலில்

காண்டப்பகுப்பு இல்லை; 22 படலங்கள் உள்ளன. பெரியாரின் பிறப்புமுதல் இறப்புவரையிலான முழு வரலாற்றினைப் பாவியம் பகர்கிறது. தமிழ்நாவன் தந்தை பெரியார் வரலாற்றை உண்மை யாகவும் நுட்பத்துடனும் எழுதியிருக்கிறார்.

பெற்றோர்

பெரியார் ஈரோட்டில் பிறந்தவர். தந்தை, வேங்கடப்ப நாயக்கர்; தாயார், சின்னத்தாயம்மை; வறுமைப்பிடியில் வாழ்ந்து வந்தனர். வேங்கடப்பர் கல் தச்சர்களுக்குக் கையாள் வேலை செய்து நாள்கூலி இரண்டணா (இப்போதைய 12 காசு) பெற்று வந்தார்; படிப்படியாய்க் கூலி உயர்ந்து 12 அணா பெற்றார். சின்னத்தாயம்மையோ காளவாயில் கல் சுமக்கும் வேலை செய்து ஓர் அணா கூலி பெற்றார்.

சின்னத்தாய்,

கல்லும் ஓடும் சுமந்திட்டார்
சல்லி எட்டும் பெற்றிட்டார்
வேங்க டப்பன் உழைத்திட்டார்
வெயிலும் மழையும் பாராமல்; (பக். 252)

தீங்கு போக இரண்டணாக்கள்
திண்ற உழைத்துப் பெற்றிட்டார்;
தூங்கி டாமல் உழைத்தபின்னர்த்
துயர்போம் பன்னி ரண்டணாக்கள்
ஏங்கா திருக்க ஈட்டினரே. (பக். 252)

சிறிது சிறிதாய்ப் பணம் சேர்த்து வேங்கடப்பர் வண்டி மாடு வாங்கி ஓட்டினார். தமது நாணயத்தால் விரைவில் மண்டிக்கடை உரிமையாளர் ஆனார். கூலிக்காரராய் வாழ்க்கையைத் தொடங்கிய வேங்கடப்பர் குன்றெனச் செல்வம் திரட்டி வணிக வேந்தராய் விளங்கினார். வேங்கடப்பர் உழைத்தபோது சின்னத்தாயம்மையும் நெல் குற்றி அரிசி விற்றும், உளுந்து பயறு பருப்புகளை விற்றும் அவருக்குத் துணை நின்றார்.

பிறப்பும் வளர்ப்பும்

வேங்கடப்பர் சின்னத்தாய்க்கு இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து போயின; பின்னர்க் கிருட்டிணசாமி, இராமசாமி எனும் ஆண் மக்கள் இருவர் பிறந்தனர். இராமசாமிதான் பின்னர் இப்பாவியத் தலைவராய் வளர்கிறார். இராமசாமிக்குப் பின்னர்ப் பொன்னுத்தாயம்மாள், கண்ணம்மாள் என பெண் மக்கள் இருவரும் தோன்றினர்.

இராமசாமி பள்ளியில் சேர்க்கப்பட்டார். அப்பள்ளி எண்ணெய் ஆட்டுவோர், கூடை முறம் கட்டுவோர், பீடி சுற்றுவோர் முதலிய அடித்தள மக்கள் வாழ்ந்த பகுதி. இராமசாமியின் தாயார் அவரை அவர்கள் வீட்டில் நீர் குடிக்கக் கூடாதென்றும், வேண்டுமென்றால் ஆசிரியர் வீட்டில் அருந்தலாம் என்றும் சொல்லியிருந்தார். ஆசிரியர் வீட்டில் நீர் கேட்டபோது குவளையை வாயில் படாமல் தூக்கிக் குடிக்கச் சொன்னார்கள். தண்ணீர் குடித்துக் குவளையை வைத்ததும் அதன் மீது தண்ணீர் ஊற்றித் தீட்டுக் கழுவினார்கள். இதை வெறுத்த இராமசாமி செக்காட்டும் வணிகர் வீட்டிலும், அங்கிருந்த மற்ற வீடுகளிலும் வாங்கிக் குடித்தார். பள்ளியில் ஆசிரியர்களிடம் குறும்பு செய்வதுவே அவருக்கு வேலையாயிருந்தது. இச்செய்கைகளால் இராமசாமி பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டார்.

இராமசாமியை அவர் தந்தையார் தன் கடையிலேயே துணைக்கு அமர்த்திக் கொண்டார். மூட்டைகளில் குறிப் பெழுதுதல், மாறேத்தம் கூறுதல், உயர்ந்த விலைக்கு விற்றல், சொல்லாற்றலால் வாடிக்கையாளரை நழுவ விடாமல் பற்றுதல் ஆகிய செயல்களால் தந்தையின் அன்புக்குரியவரானார்.

இளமைக் குறும்புகள்

இராமசாமி குடும்பத்தினர் திருமாலியத்தார்கள் (வைணவர்கள்); ஏழையராயிருந்தும் செல்வரானது திருமாலின் அருளே என எண்ணிப் பார்ப்பனர்களை அழைத்துச் சோறிடு வதும், இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மங்களைக் கதையுரைகளாய் நிகழ்த்தச் செய்வதும் அன்றாட வழக்கமா யிருந்தது. கதை சொல்பவர்களிடம் ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக்களைத் தொடுத்து, அவர்கள் மறுமொழி சொல்ல முடியாமல் தடுமாறுவதைக் கண்டு இராமசாமி மகிழ்ச்சி கொள்வார். பின்னாளில் இராமசாமிக்கு இருந்த சொல் (வாதத்) திறமைக்கும், கடவுள் மத நம்பிக்கையின்மைக்கும் இது கரணிய மாய் அமைந்தது எனலாம்.

பத்தொன்பதாம் அகவையில் (வயதில்) இராமசாமியின் நாட்டம் விலைமாதர்பால் சென்றது. அவர்கள் இல்லம் சென்று திரும்பலானார். உடனே மகனுக்குத் திருமணம் செய்துவிட வேண்டுமெனப் பெற்றோர் விரும்பினர்.

பத்தொன்பான் அகவையிலே இராம சாமி
பரத்தையர் இல்லங்கள் ஏக லானார்;

சொத்துள்ள இளம்பெண்ணை மணம் முடித்துச்
சுவடிசேர்த்து வைத்துவிட்டால் ஒழுக்கங் கெட்டு
நித்தநித்தம் அலைய மாட்டார் (பக். 25)

என எண்ணிச் செல்வக் குடும்பங்களில் பெண் பார்க்கத் தொடங்கினர்.

திருமணம்

சின்னத்தாயம்மையின் தம்பி முறையினர் ஒருவர் சேலத்தில் இருந்தார்; வறுமையில் வாழ்ந்திருந்தார். அவர் மகள் நாகம்மை நல்ல அழகி. இராமசாமி அப்பெண்ணைக் கண்டிருக்கிறார்; மனத்துள் விரும்பியும் இருக்கிறார்; மணப்பதாயிருந்தால் அப்பெண்ணைத்தான் மணப்பேன் என உறுதிபடக் கூறி விட்டார். அப்பெண் வீட்டில் வறுமை காரணமாய், மனைவியர் இருவரை இழந்திருந்த முதியவர் ஒருவருக்கு அப்பெண்ணை மணம் முடிக்க நினைத்திருந்தனர். நாகம்மையும் தாம் மணந்தால் இராமசாமியைத்தான் மணப்பேன் என்றிருந்தார். இருவர் மனவுறுதியால் இராமசாமி - நாகம்மை திருமணம் நடைபெற்றது.

இல்லறம்

நாகம்மை புலால் உண்ணாதவர்; நோன்புகள் பல நோற்பவர். இராமசாமி, புலாலை விரும்பி உண்பவர்; வெள்ளிக் கிழமை நோன்பு நாளிலும் நாகம்மையைப் புலால் சமைக்கச் சொல்வார். அம்மையாரும் அவ்வாறே செய்வார். இராமசாமி உண்டபின்னர் நாகம்மை நீராடி வந்து, தாம் உண்டபிறகே கணவன் உண்ட கலத்தைத் தொடுவார். ஒரு நாள் நாகம்மை, கணவருக்கு உணவு படைத்த பின்னர்க் குளிக்கச் சென்றார். அப்போது இராமசாமி, அம்மையார் உண்ண இருந்த சோற்றினுள் தாம் மென்று துப்பிய எலும்புத்துண்டுகளைப் புதைத்து வைத்தார். அம்மையார் சோற்றை எடுத்தபோது எலும்புத் துண்டினைக் கண்டு அன்று உண்ணாமலேயே இருந்து விட்டார். மகனின் செயல்களைக் கண்ட சின்னத்தாய், 'நீ இனி நோன்பு இருக்க வேண்டா' என மருமகளிடம் சொல்லும்படியாயிற்று. நாகம்மை கோயிலுக்குச் செல்லும்போது இராமசாமி சில முரடர்களை அனுப்பி வழிமறித்து வம்பு செய்தார். கோவிலில் இப்படியுமா நடப்பது என அம்மையார் கோவிலுக்குச் செல்வதையே நிறுத்திவிட்டார். நயமாய்ப் பேசி, 'நான் இருக்கும் போது தாலி எதற்கு' என நாகம்மையிடமிருந்து தாலியைப் பெற்றுக் கொண்டார். மறுநாள் மறந்தவர் போல அதைக் கொடுக்காமலேயே வெளியே சென்று விட்டார். தாலி

யில்லாமலிருந்த நாகம்மையை மற்றப் பெண்கள் பார்த்துச் சிரித்தபோது,

என்ன தெரியும் உங்களுக்கும்?
என்றன் துணைவர் ஊரினிலே
தன்னோடு தாமே இருக்கின்றார்
தாலி இருந்தால் இல்லாதென்? (பக். 35)

என்று சொல்லுமளவுக்கு நாகம்மையாரை இராமசாமி திருத்தி விட்டார். படிப்படியாய்க் கணவரின் கொள்கைகட்கு முற்றிலும் உடன்பட்டவராய் நாகம்மையார் மாறினார்.

இரவு நேரங்களில் இராமசாமி விலைமகளிரோடு ஆற்றங் கரையில் கூத்தடிப்பார். தமக்கும் அவர்களுக்கும் வீட்டிலிருந்து உணவு அனுப்பி வைக்குமாறு நாகம்மையிடம் கூறுவார். நாகம்மையும்,

கொஞ்சம் கூடச் சீற்றமின்றிக்
கோதில் உணவை அனுப்பிவைப்பார். (பக். 37)

இராமசாமி தீயவர் பலருடன் கலந்து உறவாடி யிருப்பினும், மது அருந்துதல் என்னும் தீயொழுக்கத்திற்கு என்றுமே ஆட்பட்டது இல்லை. அக்காலத்தில் அரசு உயர் அலுவலர்களும், பெருநிலக்கிழார்களும் மது அருந்துபவர்களாய் இருந்தனர். பெரும்பாலும் இரவெல்லாம் இக்கூட்டத்தினரிடையேதான் இராமசாமி இருப்பார். இதனைத் தந்தை பெரியாரே, "ஒரு ராத்திரிக்கு 4 பாட்டில் 5 பாட்டில் பிராந்தி உடைபடும் நானே என் கையால் டம்ளரில் ஊற்றிச் சோடாக் கலந்து கொடுப்பேன். சிலர் அதிகம் குடித்துவிட்டுப் போதையில் என்மீது துப்புவார்கள். ஒரு நாள் என்னைப் பிடித்துக் கீழே தள்ளி, என் வாயில் பலவந்தமாய் ஊற்றினார்கள். அப்படியிருந்தும் என்னை அந்தச் சகவாசமும், சுற்றுச்சார்பும் அது (மது அருந்தினால்) எப்படி யிருக்கும் என்று யோசிக்கக்கூடத் தோன்றவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். இதனைத் திருநாவன்,

இரவெல்லாம் அக்கூட்டம் குடித்திட் டாலும்
இவரெப்போ தும்துளியும் குடியார்; கையால்
அரவமின்றிக் காலகத்தில் கலந்தே, ஆங்கே
அன்புமிகு தோழர்க ளுக்கே ஈவார்;
வரம்பின்றிக் குடித்துவிட்டே உளறிக் கொட்டும்
வாட்டசாட்டத் தோழர்கள் குடிக்கச் சொல்லிச்
சரக்கினையே வாயினிலே ஊற்றி னாலும்
சாடிடுவார்; துப்பிடுவார்; குடிக்க மாட்டார் (பக். 89)

என அழகிய பாடலில் கூறுகிறார்.

துறவு பூணல்

ஒரு நிலம் வாங்கியது தொடர்பாக ஒரு நாள் இராமசாமியின் தந்தை அவரை மிகவும் கடிந்து கொண்டார். இராமசாமி துறவியாக முடிவு செய்து வீட்டை விட்டுப் புறப்பட்டார். சென்னை வரை உடன் வந்த இருவர் பிரிந்து விட்டனர். சென்னை நீங்கிப் பெசவாடா அடைந்திட்டார். அங்கு இவரைப் போல துறவு பூண்டு வந்த இரு பார்ப்பனர்கள் சேர்ந்து கொண்டனர். மூவரும் அய்தராபாத் வந்து சேர்ந்தனர். ஓர் ஊண் கொடையகத்தில் (சத்திரத்தில்) தங்கினர். வீடு வீடாய்ச் சென்று அரிசி இரப்பு (பிச்சை) எடுத்துவந்து ஆக்கியுண்டனர். அய்யர் இருவரும் தொன்மக் கதைகளைத் தமிழில் சொல்வர்; அதை இராமசாமி தெலுங்கில் விரிவாய்ச் சொல்வார். அங்கு வாழ்ந்த மக்களில் மிகுதியானோர் தெலுங்கராதலின் இராமசாமிக்குச் செல்சொல் (செல்வாக்கு) மிகுந்தது. சிறிது காலம் மூவரும் முருகேசன் என்பார் வீட்டில் தங்கியிருந்தனர்.

மூவரும் காசி செல்ல முடிவு செய்தனர். முருகேசனாரோ இராமசாமியிடம் இந்த அய்யர்களை நம்பி நீங்கள் செல்ல வேண்டா;

> நடுவிலே நம்மை விட்டு
> நகன்றிடு வார்கள் என்றார். (பக். 53)

ஆனால், மூவரும் சென்றே ஆவது என முடிவெடுத்தனர். இராமசாமி தம் நகைகள் முழுவதையும் முருகேசனாரிடம் தந்து, பாதுகாப்பாய் வைத்திருக்குமாறு கேட்டுக்கொண்டார்; ஒரு மோதிரத்தை மட்டும் அரைஞாணில் முடிபோட்டுக் கட்டி வைத்தார்.

காசி வாழ்க்கை

மூவரும் தொடர்வண்டியில் காசி சென்றடைந்தனர். காசி சென்றவுடன், முருகேசனார் கூறியதுபோலக் கடைகெட்ட அவ்விருவரும் நகன்றுவிட்டார்கள்! காசிருக்கும்வரை உடன் இருந்தவர்கள் காசில்லை என்றறிந்ததும் கழன்று கொண்டனர். காசில்லாமல் பசியால் அல்லற்பட்ட இராமசாமி, ஊண் கொடையகங்களில் (சத்திரங்களில்) வெளியே எடுத்துப்போடும் எச்சிலிலையில் மிச்சமிருந்ததை வாரி விழுங்கினார். 'நூல்' இல்லை என்றால் ஊண் கொடையகத்தில் சோறில்லை. இராமசாமி, துறவியரிடம் சென்று வேலை கேட்டார். முதலில் மறுத்தவர்கள் ஒரு வழியாய் வில்வம் பறித்துத் தருவதற்கும்

விளக்கேற்றுவதற்கும் ஒரு வேளை உணவு தருவதாய்க் கூறினர். நாள்தோறும் குளித்தபிறகே வேலை செய்ய வேண்டும் என்பது அவர்கள் கட்டளை. இராமசாமியோ,

> உடம்புக்கு நான்கைந்து நாள்கள் கூட
> உருக்கமாகச் சொன்னாலும் குளிக்க மாட்டார். (பக். 27)

அவர் குளிக்காமலேயே அவ்வேலைகளைச் செய்து வந்தார். ஒரு நாள் பிடிபட்டார்; கிடைத்த வேலையும் போயிற்று. இரப்பு (பிச்சை) எடுத்தும் ஆற்றங்கரையில் பிண்டங்கரைப்போர் இரப்பாகத் தரும் அரிசி, தேங்காயைப் பெற்றும் காலம் ஓட்டினார்.

காசியில் இருந்த பார்ப்பனர்கள் இறைச்சி உண்டனர். கள்ளுண்டு ஆடினர்; கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பெண்களோடு கூடினர்; அங்கே ஒழுக்கம் என்பது சிறிதும் இல்லை; இழுக்கமே எங்கும் நிறைந்திருந்தது. இதைக் கண்ட இராமசாமி ஒரு கணமும் அங்கு நிற்கவில்லை; உடனே புறப்பட்டார்.

> மயக்கும்கள், மாட்டிறைச்சி, உண்டு நாளும்
> மதிமழுங்கக் கூத்தடிக்கும் பெண்டி ரோடு
> தயக்கமின்றி அருவருக்க ஆட்டம் போடும்
> தன்மானம் இல்லாதோர் மலிந்த கங்கை
> கயவர்கள் தாயகமாம்; அவ்வி டத்தைக்
> காசிஎன்பர்; காசிக்குப் போயும் மூடச்
> செயல்கொண்ட துறவிகாலில் விழுகின் றாரைச்
> சீர்திருத்த வேண்டுமென்று தீர்மா னித்தார். (பக். 640)

பொதுத்தொண்டு

காசியிலிருந்து எல்லூருக்குத் தனக்குத் தெரிந்த ஓர் அரசு அலுவலர் வீட்டிற்கு வந்தார். அங்கிருந்த கடைக்காரர் ஒருவர் வேங்கடப்பருக்குக் கடையில் பொருள்கள் வாங்குபவர். அவர் இராமசாமி எல்லூரில் இருப்பதை வேங்கடப்பருக்குத் தெரிவிக்க அவர் உடனே எல்லூர் சென்று மகனை ஈரோட்டுக்கு அழைத்து வந்தார்.

வேங்கடப்பர் தன் பெயரிலிருந்த கடையை ஈ.வே.ரா. நாயக்கர் மண்டி என்று மாற்றினார். இராமசாமி பொறுப்புணர்ச்சி யுடன் பணிகளாற்றி வந்தார். சாதி சமய வேறுபாடில்லாமல் அனைவர்க்கும் உதவி வந்தார். மக்களுக்குப் பாடுபடும் மாண்புமிக்கார் ஆயினார். ஈரோட்டில் கொள்ளைவாரி (பிளேக்) நோய் வந்து விட்டது. மக்கள் அஞ்சி வெளியூர்களுக்கு ஓடினர். ஆனால் இராமசாமியோ சிறிதும் கலங்காமல், வெறுப்படையாமல்,

அச்சமிக்க உயிர்க்கொல்லி கொள்ளை வாரி
நோயினாலே இடருற்ற மக்களுக்கே
உச்சமான மிகப்பெரிய தொண்டு செய்தார்; (பக். 77)

பிணங்களைத் தாமே தோளில் தூக்கிச் சென்று அடக்கம் செய்தார். பல பொறுப்புகள் இவரை நாடி வந்தன. ஈரோடு நகரவைத் தலைவராகவும் ஆனார். அப்போது,

தண்ணீரின்றி மக்களெல்லாம் தவித்த போது
தலைசிறந்த காவிரியில் இருந்து தண்ணீர்
கொண்டுவந்து, வடிகட்டிக் காக்கப் பட்ட
குடிநீரைக் குழாய்மூலம் வழங்கி னாரே! (பக். 84)

கடைத்தெருவை அகலப்படுத்திப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் செய்தார். ஈ.வே.ரா. ஈரோட்டில் நகரவைத் தலைவராய் இருந்தபோது சேலத்தில் நகரவைத் தலைவராய் இருந்த சி. இராசகோபாலாச்சாரியாரும், சேலம் வரதராசுலு நாயுடுவும் இவரைப் பேராயக் கட்சியில் (காங்கிரசுக் கட்சியில்) சேர்த்துவிட்டனர்.

பேராயக் கட்சிப் பணி

கைந்நூல் (கதர்) ஆடை வளர்ச்சிக்காக அதனை மூட்டை தூக்கி விற்றார். தான் அணிந்ததோடு, தன் குடும்பத்திலிருந்த அனைவரையும் கைந்நூலாடை அணியச்செய்தார்.

வழக்கு மன்றங்களை விலக்க வேண்டும் எனும் கோட்பாட்டிற்கிணங்கத் தம் குடும்பத்திற்கு வரவேண்டிய (ஏறத்தாழ) உருபா 50,000ஐ வழக்காடாமல் இழந்தார்.

அரசு பிறப்பித்த 144ஐ (தடையுத்தரவை) மீறிக் கள்ளுக்கடை மறியலை ஈரோட்டில் முதலில் தொடங்கினார். அவர் சிறைப்பட்டதும் அவர் மனைவி நாகம்மையும் தங்கை கண்ணம்மாளும் மறியலில் ஈடுபட்டனர். மக்கள் ஆதரவு கண்ட அரசு 144ஐ விலக்கிக் கொண்டது. ஈ.வே.ரா. தம் தோட்டத்திற்குச் சென்று,

அங்கிருக் கின்ற தென்னை
அரிய,ஐந் நூற்றுக் கும்மேல்
பொங்கிய மகிழ்ச்சி யோடு
பொருக்கென வெட்டிச் சாய்த்தார். (பக். 96)

கேரளத்தில் திருவிதாங்கூர் அரசின்கீழிருந்த வைக்கம் என்னும் ஊரில் இருந்த தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. அங்கிருந்த பெரியவர்கள் சிலர் அதை எதிர்த்துப் போராடியபோது, தக்க தலைவர் இல்லாது போராட்டம் நின்றுவிடுமோ என்ற நிலையில் ஈ.வே.ரா. வைக்கம் சென்று போராட்டத்தில் ஈடுபட்டார்;

சிறைப்படுத்தப்பட்டார்; எனினும், போராட்டம் வெற்றி பெற்றது; ஈ.வே.ரா. வைக்கம் வீரர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். வைக்கத்தில்,

தெருவிலே நடந்தால் தீட்டு
  தெளிந்நீர் எடுத்தால் தீட்டு
கருவறைக் கோயில் தன்னைக்
  கண்ணிலே கண்டால் தீட்டு
வருபவர் உயர்ந்தோர் என்றால்
  வழியிலே கண்டு விட்டால்
உருவினைக் காட்டா வண்ணம்
  ஒதுங்கியே நடக்க வேண்டும் (பக். 101)

என்றிருந்த நிலையை ஒழித்துக்கட்டப் போராடி வெற்றி கண்டார்.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி சேரன்மாதேவியில் வ.வெ. சுப்பிரமணிய அய்யரால் குருகுலம் ஒன்று நடத்தப்பட்டது. தமிழ்நாடு பேராயக் கட்சியும் அதற்குக் கொடை அளித்து வந்தது. அங்குப் பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவும், பார்ப்பன ரல்லாத சிறுவர்க்கு வேறு இடத்தில் வேறு உணவும் தரப்பட்டது. இதை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று ஈ.வே.ரா. முடிவு செய்தார். காந்தியார் உட்படப் பலர் ஈ.வே.ரா.வின் கருத்தை ஏற்கவில்லை; என்றாலும் ஈ.வே.ரா.வின் தொடர் முயற்சியால் குருகுலம் மூடப் பட்டது.

பேராயக்கட்சியிலிருந்து விலகல்

ஈ.வே.ரா. பேராயக்கட்சியில் பார்ப்பனரின் மேலாண்மை இருப்பதைக் கண்டித்தார். வகுப்புரிமைக் கொள்கை வர வேண்டும் என்றார். இக்கொள்கைகளை விளக்க, 'குடியரசு' திங்களிதழைத் தொடங்கினார். அடுத்தடுத்த மாநாடுகளில் வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டும் நிறைவேறவில்லை. 1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானம் பற்றிப் பேசினார். மாநாட்டுத் தலைவராயிருந்த திரு.வி. கலியாண சுந்தரனார், பார்ப்பனரின் சூழ்ச்சிக்கு அஞ்சி அத்தீர்மானத்துக்கு ஒப்புதல் கொடுக்கவில்லை.

கலியாண சுந்தரரே! வகுப்புக் கூன
  கவின்உரிமை தனைவீழ்த்தித் தமிழி னத்தை
நலிவடையச் செய்கின்ற பேரா யத்தில்
  நான்இனிமேல் ஒருபோதும் இருக்க மாட்டேன்;
வலிமிகு,பே ராயத்தை ஒழித்துக் கட்டி
  வளமான தமிழகத்தைத் தோற்று விப்பேன் (பக். 128)

எனச் சூளுரைத்து மாநாட்டினை விட்டு வெளியேறினார்.

பேராயக் கட்சியிலிருந்து விலகி வந்தபோதும் காந்தியாரின் திட்டங்களுள் நல்லனவற்றைப் போற்றி வந்தார். காந்தியடிகளை நேரில் கண்டு சொன்னால் தம் கருத்தை ஏற்பார் என்றெண்ணி, அவரை வெங்காலூரில் (பெங்களூரில்) கண்டு, குல அறம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும் என வழக்கிட்டார். காந்தியார் ஒப்பவில்லை. இதன் பின்னர்க் காந்தியாரின் போக்கினையும் வெளிப்படையாய்க் கண்டித்தார்.

தன்மான இயக்கம்

தன்மான இயக்கத்தை 1929 இல் செங்கற்பட்டில் நடைபெற்ற மாநாட்டின்வழி வலிவும் பொலிவும் உள்ளதாய் ஆக்கினார். சாதிப்பட்டங்களை விட்டுவிடுதல், மதக்குறிகளை உடலில் அணியாதிருத்தல், பார்ப்பனீயத்தை எதிர்த்தல், தீண்டாமை ஒழிப்பு, எல்லாப் பொது இடங்களிலும் தாழ்த்தப் பட்டவர் நுழையச் சட்டப்படி இசைவு தருதல், பெண்களுக்குச் சொத்துரிமை, மரபுரிமை, கைம்பெண் திருமணத்திற்கு உரிமை தருதல் போன்று இன்னும் பல புரட்சிகரமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாடு, குமுகாய முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் பாடுபடத் தன்மான இயக்கம் கண்ட ஈ.வே. இராமசாமியைப் பாராட்டியதோடு அவர் தலைமையில் முழு நம்பிக்கையும் தெரிவித்தது.

கடல் கடந்து வாழும் தமிழர்கள் தமிழர் தலைவர் ஈ.வே.ரா.வைக் காணத் தணியாத ஆவல் கொண்டனர். ஈ.வே.ரா. தம் நண்பர்களுடன் மலேயா, மேற்கு நாடுகள், இலங்கை முதலான நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

சம அறக் கட்சி

சுற்றுப்பயணம் முடிந்து திரும்பியதும் தன்மான இயக்கத்தில் மாறுதல்செய்ய விரும்பினார். தோழர் சிங்காரவேலு அவர்களுடன் கலந்து ஒரு திட்டம் தயாரித்தார்.1932ஆம் ஆண்டு திசம்பர் இறுதியில் ஈரோட்டில் அவர் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் அத்திட்டம் ஏற்கப்பட்டது. "எந்தத் திட்டங்களையும் அரசியலைக் கைப்பற்றுவதன் வாயிலாய் நிறைவேற்றிக்கொள்ளலாம். அரசியலில் நுழைய விரும்புவோர்க்கும் நம் இயக்கத்தில் இடமிருக்க வேண்டும். தன்மான இயக்கம் எப்போதும் போல் குமுகாய இயக்கமாய் இருந்து வரலாம்; அரசியலுக்காக அதற்குள் 'சம அறக் கட்சி' (சமதர்மக் கட்சி) என்று ஒரு தனிப்பிரிவை அமைத்துக்கொள்ளலாம்" என்பதே இத்திட்டம். இத்திட்டம் நாடெங்கும் மாநாடுகள்வழி பரப்பப்பட்டது.

11-5-1933இல் அன்னை நாகம்மையார் இயற்கை எய்தினார். மனையாளை இழந்த மறுநாளே திருச்சி சென்று கிறித்தவ மதத் திருமணத்திற்கு விதித்திருந்த 144 ஆவது பிரிவுத் தடையை மீறினார். ஈ.வே.ரா.வின் தாயார் 1936, சூலை 28ஆம் நாள் நள்ளிரவில் இயற்கை எய்தினார்.

முதல் இந்தி எதிர்ப்புப் போர்

அவருடைய எழுத்து, பேச்சுகளில் குறை சொல்லி அரசு பலமுறை சிறை செய்தது. 1938 பெப்ருவரித் திங்களில் சென்னை மாநில (மாகாண) முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். ஈ.வே.ரா. இந்தி எதிர்ப்புப் போரை அறிவித்தார். இந்திப் பரணி பாடிய ஈ.வே.ரா. மீது ஆச்சாரியார் அரசு வழக்குத் தொடர்ந்து 2 ஆண்டு சிறைத் தண்டனையும் உருபா 2000 குற்றக் கட்டணமும் விதித்தது. முதலில் சென்னை நடுவண் (மத்திய) சிறையில் அடைக்கப்பட்ட ஈ.வே.ரா. பின்னர்ப் பெல்லாரிக்கு அனுப்பப்பட்டார். பெரியார் சிறையேறியபின் சிறையில் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவரும் களப்பலியானார்கள்.

தமிழ்நாட்டு மகளிர் 1938 நவம்பர் 13ஆம் நாள் சென்னையில் கூட்டிய மாநாட்டில் இனித் தோழர் ஈ.வே.ராமசாமியைப் 'பெரியார்' என்றே அழைத்திடல் வேண்டுமென முடிவு செய்தனர்.

> ஈ.வே.ராவை
> மனமார இனிமேலே 'பெரியார்' என்னும்
> மதிப்புமிகு பட்டத்தால் அழைக்க வேண்டும்

என மகளிர் அனைவரும் தீர்மானித்தார்கள். (பக். 182)

1939ஆம் ஆண்டு மே 22ஆம் நாள் பெரியாரை எவ்விதக் கரணியமும் சொல்லாமல் சிறையிலிருந்து விடுவித்தனர். சிறையிலிருந்தபோது, 'நூற்றுக்கு 3 பேராயுள்ளவரைப் பார்ப்பனர் என்றும், 97 பேராயுள்ளவரைப் பார்ப்பனரல்லாதார் என்றும் ஏன் சொல்ல வேண்டும்? நாம் இந்து என்று கருதிக்கொள்வதால் வரும் இழிவுதானே' என எண்ணி, 'நமது இனப்பெயர் திராவிடர்; அவர்கள் வேண்டுமானால் 'திராவிடர் அல்லாதோர்' எனக் கூறிக்கொள்ளட்டும் எனச் சிந்தித்தார்; விளைவு, 1939ஆம் ஆண்டு திசம்பர் 17ஆம் நாள் குடி அரசு இதழில் 'திராவிடநாடு திராவிடருக்கே' எனும் உரிமை முழக்கத்தை எழுப்பினார்.

பெரியாரைக் காணப் பெல்லாரி சிறைக்கு ஏ.டி.பன்னீர்ச் செல்வத்தைக் கி.ஆ.பெ. அழைத்துச் சென்றார்.

பின்நிகழ்ந்த நயன்மை(நீதி)க் கட்சி மாநாட்டில்தான் பெரியார் அதன் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறையிலிருந்து வெளியே வந்த பெரியார் நயன்மை (நீதி)க் கட்சித் தலைவராய் ஆனார்.

திராவிடர்கழகத் தோற்றமும் பணிகளும்

நயன்மை (நீதி)க் கட்சியினர் பட்டம் பதவிகளில் இருப்பதைப் பெரிதாய்க் கருதினார்கள். பெரியார் 1944இல் சேலத்தில் நடைபெற்ற நயன்மைக் கட்சி மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, நயன்மைக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றிப் பட்டம் பதவி தேடிகளைக் கழகத்தினின்று வெளியேறும்படிச் செய்தார். 1945ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தினர் கறுப்புச்சட்டை அணிய வேண்டுமென்றார்.

11-5-1946 அன்று மதுரை கறுப்புச் சட்டை மாநாடு நடந்தபோது, பார்ப்பனரின் தூண்டுதலால் பந்தலுக்கு நெருப்பு வைக்கப்பட்டபோதும் தோழர்கள் தாக்கப்பட்ட போதும் உணர்ச்சி வயப்படாமல், கொதித்தெழுந்த தோழர்களை அமைதிப்படுத்திப் பல உயிர் இழப்புகளைத் தடுத்துத் தாம் ஒப்பற்ற தலைவர் என்பதை நிறுவிக் காட்டினார்.

1947ஆம் ஆண்டு ஆகசுட்டு 15ஆம் நாள் விடுதலை நாள் என்று சொன்னபோது, பெரியார் அதனைத் துன்பநாள் என அறிவித்தார். அது கழகத்திலிருந்த அண்ணா போன்றவர்கட்கு மனத்தாங்கலை ஏற்படுத்தியது.

1948இல் ஓமந்தூரார் ஆட்சிக்காலத்தில் இரண்டாம் இந்திப் போராட்டம் நடைபெற்றது.

பெரியார் – மணியம்மை திருமணம்

பெரியார் மணியம்மை திருமணத்தால் திராவிடர் கழகத்திலிருந்து பெரும்பாலோர் பிரிந்துசென்று அண்ணாவைப் பொதுச்செயலாளராய்க்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினர். அவர்களைப் பெரியார் 'கண்ணீர்த் துளிகள்' என்று சாடி வந்தார். இருப்பினும், 1952ஆம் ஆண்டுத் தேர்தலில் தி.மு.க. ஆதரவு பெற்றோர் 43 பேர் வெற்றி பெற்றனர். இராசகோபாலச்சாரியார் மேலவை உறுப்பினராக்கப்பட்டு மாநில (மாகாண) முதலமைச்சரானார்.

சாம்பல் பூத்துக் கிடந்த இந்தித் தீ கொழுந்துவிடத் தொடங்கியது. 1952இல் இருப்பூர்தி நிலையங்கள், அஞ்சல்

நிலையங்கள் ஆகியவற்றில் இந்திப் பெயர் தலைமையிடம் பெறுமாறு பலகைகள் வண்ணம் தீட்டப் பெற்றிருந்தன. இப்போக்கினைக் கண்டித்து அந்த இந்தி எழுத்துகளைக் கரிநெய் கொண்டு அழிப்பது எனப் பெரியார் முடிவு செய்தார். அவர்களாக இந்த எழுத்துகளை அழிக்கும்வரை ஒவ்வோராண்டும் ஆகசுட்டு 1ஆம் நாள் இந்தி எதிர்ப்பு நாள் என அறிவித்தார். பெரியாரின் இந்த அறிவிப்பைத் திராவிட முன்னேற்றக் கழகமும் பின்பற்றியது. 1952 ஆகசுட்டு 1ஆம் நாள் திருச்சி இருப்பூர்திச் சந்திப்பில், பலகையில் இருந்த இந்தி எழுத்துகளைக் கரிநெய் பூசி அழித்தார். அன்று மாலையில் தி.மு.க.வினர் மு. கருணாநிதியின் தலைமையில் சென்று மற்றொரு பக்கம் பலகையை அழித்தனர்.

தொடர்ந்து திராவிட வேளாண் தொழிலாளர் கழகம், தென்பகுதி இருப்பூர்திப் பணியாளர் ஒன்றியம் என்பனவற்றை ஈ.வே.ரா. தோற்றுவித்து, உழைப்பாளரிடையேயும் திராவிடர் கழகப் பிடிப்பு ஏற்படுத்தினார்.

குலக்கல்வித் திட்டம்

இராசகோபாலாச்சாரியார் ஊர்ப்புறங்களிலிருந்த 6000 பள்ளிகளை மூடினார். மேலும் பிள்ளைகள் பள்ளிகளில் பாதி நேரம் படிப்பும் மீதிநேரம் அவரவர் அப்பன் தொழிலைச் செய்ய வேண்டும் எனும் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதனைத் தமிழர் அனைவரும் கட்சி வேறுபாடின்றி எதிர்த்தனர். காமராசரே எதிர்த்தார். அண்ணா எதிர்த்தார். மனமுடைந்த இராச கோபாலாச்சாரியார்,

> தூற்று தலுக்கே அஞ்சித்தான்
> துறந்திட் டாரே பதவிதனை. (பக். 301)

காமராசர் முதலமைச்சர் ஆனார். ஆச்சாரியார் மூடிய பள்ளிகளையெல்லாம் திறந்தார்; மேலும், ஆறாயிரம் புதிய பள்ளிகளைத் தோற்றுவித்தார்.

> நண்பகல்,நல் உணவினையும் மாணாக் கர்க்கு
> நாடுபோற்ற வழங்கினாரே; சீரு டையும்,
> பண்போடு படிப்பதற்கும் உதவி யாகப்
> பணம்வழங்கி ஊக்குவித்தார்; வகுப்பொ ழுங்கு
> கண்போன்ற உரிமைதனைக் கடைப்பி டித்தார்;
> காமராசர் ஆட்சியிலே கல்வி வெள்ளம்
> அண்ணாந்து வியக்குமாறு கரைபு ரண்டே
> அணைகடந்தும் ஓடியதே பெருக்கெ டுத்து. (பக். 302)

இதன் பின்னர்த் தந்தை பெரியார் காமராசரைப் 'பச்சைத் தமிழர்' எனக் கூறி அவருக்குத் துணை நின்றார். பேராயக் கட்சியை

ஒழிக்க வேண்டும் என்றாலும், காமராசர் பார்ப்பனரல்லாதார்க்குச் செய்ய முன்வந்த செயல்களைக் கண்டு அவரது ஆட்சிக்கு அரணாய் நின்றார்.

மொழிவழி மாநிலங்கள் (மாகாணங்கள்) அமைக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில் சென்னை மாநிலம் (மாகாணம்) சென்னை, கேரளநாடு, ஆந்திர நாடு, கருநாடக நாடு என நான்காகப் பிரிக்கப்பட்டது.

தி.மு.க. அரசுக்குத் துணை

1967ஆம் ஆண்டுத் தேர்தலில் தந்தை பெரியார் காமராசர் வெற்றி பெறப் பெரும்பாடு பட்டார். தி.மு.க.வைக் கடுமையாய் எதிர்த்தார். எனினும், தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. பேரறிஞர் அண்ணா முதல்அமைச்சர் ஆனார். அண்ணா உடனே தம் அமைச்சர்கள் கருணாநிதி, நெடுஞ்செழியன் ஆகியோருடன் திருச்சி சென்று, பெரியார் மாளிகையில் அவரைக் கண்டு, "அய்யா! இது உங்கள் ஆட்சி; உங்கள் வழியிலேயே ஆட்சி செல்லும்; வாழ்த்துங்கள்" என்றார். பெரியாரும் கூச்சம் கொண்டவராய் வாழ்த்தினார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? அரசுக்கு அவ்வப்போது தம் கருத்துகளை 'விடுதலை' ஏடு வாயிலாகத் தெரிவித்து வந்தார்.

அண்ணா புற்று நோயால் பற்றுண்டார்; மருத்துவத்திற்காக அமெரிக்கா சென்று திரும்பினார். மீண்டும் நோய்வாய்ப்படவே சென்னை புற்று நோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அண்ணாவைப் பெரியார் வந்து பார்த்தார். அண்ணா மறைந்தார் என்ற செய்தியைச் சொன்னதும்,

> பெரியாரும்,தம் வலக்கை யாலே ஓங்கிப்
> பெருவருத்தத்தால், சுவரில் அடித்தார்; 'அண்ணா
> பிரிந்தாரே நமைவிட்டே' என்று நெஞ்சில்
> பெருங்கவலை கொண்டாரே; கண்ணீர் விட்டுப்
> பரிவோடு கதறினாரே. (பக். 371)

அடுத்து, கலைஞர் முதலமைச்சரானார்.

> தெள்ளுதமிழ் வள்ளுவர்க் கோட்டம் வைத்தும்
> திக்கில்லா இரவலர்க்கு விடுதி வைத்தும்
> எள்ளுகின்ற தொழுநோயர் வாழ்வு பூக்க
> ஈடில்லா இல்லங்கள் தோற்று வித்தும்
> தள்ளாடித் தள்ளாடி இழுவை தன்னைத்
> தன்கையால் மாடுபோல இழுத்து வந்தோர்
> கள்ளமின்றி வாழ்வுயரப் பாடு பட்ட
> கலைஞராட்சி தமைப்பெரியார் கண்போல் காத்தார். (பக். 374)

இயற்கை எய்துதல்

19-12-1973 அன்று சென்னை தியாகராய நகரில் தந்தை பெரியார் தம் இறுதிச் சொற்பொழிவை ஆற்றினார். அடுத்த நாள் குடலிறக்க நோய்த் தொல்லையால் வருந்திய அவர் சென்னை பொதுநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அடுத்த நாள் அவர் விருப்பப்படி அவர் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவர்கள் மிக நுணுக்கத்துடன் மருத்துவம் செய்தும் பயனின்றித் தந்தை அவர்கள் 24-12-1973 காலை 7-22 மணிக்கு இறுதி மூச்சைத் துறந்தார்.

அன்று பிற்பகல் சென்னை இராசாசி மண்டபத்தில் அவர் உடல் பொதுமக்கள் பார்வைக்கும் வணக்கத்திற்கும் வைக்கப் பட்டது. கலைஞர் அவர்கள் பெரியார் உடல், அரசுச் சிறப்புடன் அடக்கம் செய்யப்படும் என அறிவித்தார். 25-12-1973 அன்று பிற்பகல் 3 மணிக்கு இராசாசி மண்டபத்திலிருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு மாலை 4-15 மணிக்குப் பெரியார் திடலை அடைந்தது. அய்யா உடல் தேக்கு மரப்பெட்டியில் வைக்கப்பட்டு மாலை 4-57 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

தந்தை பெரியார் 94 ஆண்டு மூன்று மாதம் 7 நாள்கள் உயிர் வாழ்ந்திருந்தார். அவர் பேச்சுகளை ஒலி நாடாவில் பதிவு செய்திருந்தால் 21,400 மணி நேரம் கேட்கலாம். பொதுப்பணியில் 8,20,000 கல் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். 12,84,000 இடங்களில் பேசியிருக்கிறார்.

இவ்வரலாற்றினையே தமிழ்நாவன் குறும்பாவியமாய் இயற்றியிருக்கிறார். 'வரலாறுதான் பாடல்களில் உள்ளனவே; அணிந்துரையில் நூல்பற்றிக் கூறுவதை விடுத்து வரலாற்றினைத் தந்தது ஏன்?' என்று கேட்கலாம். தமிழராய்ப் பிறந்துள்ள ஒவ்வொருவரும் தந்தை பெரியாரின் வரலாற்றினை அறிந்திருக்க வேண்டும். ஓரளவே படித்தவர்கள் பாடலில் உள்ளதைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாதவர்களாயிருப்பர். அவர்கள் உரைநடை யில் படித்தாவது உணரவேண்டும் எனும் ஒரே நோக்கத்தினால் தான் அய்யா அவர்கள் வாழ்க்கையின் முகாமையான நிகழ்ச்சிகள் மட்டும் இங்கே தரப்பட்டன.

வாழ்க்கை நிகழ்ச்சிகள்

பாவலர் இலமா. தமிழ்நாவன் இப்பாவியத்தில் எந்த நிகழ்ச்சியாயினும் செய்தியாயினும் நம் கண் முன்னே தோன்றும் வகையில் சொல்லோவியமாக்குகிறார். பாவியத் தலைவர் தந்தை

பெரியாரின் தோற்றத்தைப் பாவலர் பாடியுள்ள பாடல் பெரியாரின் அழகைவிட அழகாயுள்ளது.

பளபளக்கும் பொன்னிறச்செம் மேனி; ஈர்க்கும்
பாங்கான இளந்தொந்தி; பஞ்சு வண்ண
உளங்கவரும் வெளுத்தமுடி, முறுக்கு மீசை;
ஒப்பிலாக் கண்கவரும் அறிவைத் தேக்கும்
களங்கமிலா உயர்நெற்றி; இவற்றை யெல்லாம்
கண்கவரக் கொண்டிட்ட ஈ.வே.ரா. (பக். 94)

பெரியாரின் சிக்கனம்பற்றிக் கூறும்போது,

குப்பையில் போடுகின்ற துண்டுத் தாளைக்
கூடத்தான் எழுதுதற்குப் பயன்படுத்தும்
செப்பமான சிக்கனத்தின் செல்வப் பிள்ளை

எனப் பாடுகிறார். தந்தை பெரியார் தாடியோடு இருந்தார். இந்தத் தாடி முதன் முதலாய் எப்போது தோன்றியது? தமிழ் நாவன் கூறுகிறார்: அய்யா 1929இல் மலேயா சென்றிருந்தார். அம்

மலையகத்தில் இருந்தபோது முகத்தை என்றும்
மழிக்காமல் இருந்ததினால் பெரியார் அய்யா
கலையாகத் தாடியோடு காணப் பட்டார்;
கடைப்பிடித்தார் அதன்பிறகு மழித்தி டாமல்;
நிலையாக அத்தாடி மறையும் மட்டும்
நெஞ்சுவரை நீண்டுகாணப் பட்ட தன்றோ? (பக். 216)

பெரியார் வாழ்க்கையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை இயல்பான அழகுணர்ச்சியுடன் பாடியுள்ளார். எதிரிகளையும் தம் திறத்தால் எவ்வித ஊறுமின்றிப் பணிய வைக்கின்ற தந்தையின் பண்பினை அந்நிகழ்ச்சிகள் வாயிலாய் அறிகிறோம்!

கடலூரில் பொதுக்கூட்டத்தில் கடவுளை, மதத்தை எதிர்த்துப் பேசினார். ஒரு செருப்பு அவர்மீது வீசப்பட்டது. ஆளிழுவையில் (ரிக்ஷாவில்) அமர்ந்திருந்த பெரியார் செருப்பு விழுந்த இடம் நோக்கிப் போகச் சொன்னார். உடன் இருந்தோர் தடுத்தனர். பெரியாரோ,

எறிந்திட்ட ஒருசெருப்பால் பயன்தான் இல்லை
என்றனுக்கே; இன்னொன்றை அன்னான் மேலும்
எறியாமல் வைப்பதினால் அவனுக் கும்தான்
எள்ளளவும் பயனில்லை. (பக். 263)

"அங்கே நாம் சென்றால் இன்னொன்றையும் வீசுவான். நமக்கு இரட்டை ஊதியந்தானே" என்றார். சொன்னபடி ஆளிழுவை அங்குச் சென்றது; அய்யா சொன்னாவாறே அக்கயவனும் இன்னொரு செருப்பையும் வீசினான். இரு

செருப்புகளும் கிடைத்த மகிழ்ச்சியால் பெரியார் துள்ளிக் குதித்தாராம்!

குலக்கல்வி முறையை இராசாசி நிலைநாட்ட முயன்றபோது, "27-5-53 அன்று பிள்ளையார் உருவப் பொம்மையை மாலை 6-30 மணிக்கு உடைத்துத் தூள்தூளாக்கி மண்ணோடு மண்ணாய்க் கலக்கிவிடுங்கள். புத்தர் விழாக் கொண்டாடிப் பிள்ளையாரைச் சரியாய் உடையுங்கள்" எனப் போர்க்குரல் கொடுத்தார். திருச்சியில் பிள்ளையாரைத் தாமே உடைப்பதாய் முடிவு செய்தார். இதற்குள் பெரியாரின் உருவத்தை உடைக்கவும், கொடுந்திவினையாளன் (கொடும்பாவி) கொளுத்தவும் மாற்றார் சிலர் முயன்றனர். பெரியார், 'என் படத்தையும் அதைக் கொளுத்தப் பணத்தையும் நானே தருகிறேன் வாருங்கள்' என்றார். எதிரிகள் திட்டத்தை அறிந்த

உடன்,பெரியார் 'என்படமும் என்பொம் மையும்
உங்களுக்குத் தருகின்றேன் பணமும் சேர்த்தே
அடம்பிடித்தி டாமல்தான் வாருங் கள்,நீர்
அருள்கூர்ந்தே

என்று அவர்களை அழைத்தார். எந்தப் போராயினும் கலவரம் ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதிலும், பொதுச்சொத்துகள் அழிந்துவிடக்கூடாது என்பதிலும் அய்யா விழிப்பாயிருப்பார்.

புதுமைத் தாலாட்டு

தாய் தன் குழந்தையைத் தாலாட்டும்போது, வருங்காலத்தில் அக்குழந்தை எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் எனச் சொல்லிப் பாடுவது வழக்கம். பகுத்தறிவாளர் பாவேந்தர் பாரதிதாசன் ஆண் குழந்தை தாலாட்டில்,

எல்லாம் அவன்செயலே என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,

காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர் உழைப்பீர் எனஉரைக்கும் வீணருக்கும்

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே,என் செந்தமிழே கண்ணுறங்கு

என்றும், பெண் குழந்தை தாலாட்டில்,

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு
நாணி உறங்கு; நகைத்துநீ கண்ணுறங்கு

என்றும் பாடுவார். ஆண், பெண் குழந்தைகள் இவ்வாறு வளரவேண்டும் என்பது அவர் எண்ணம் - எதிர்பார்ப்பு.

இராமசாமிக்கு அவர் தாயார் சின்னத்தாயம்மை தாலாட்டுப் பாடுகிறார்.

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

ஆரியத்தை வீழ்த்தவந்த ஆண்பிள்ளை வேழமே
வாரி வழங்கும் என்வள்ளல் பெருந்தகையே

உன்னால் இனிமேல் உயர்தமிழ் நாட்டினர்
தன்மானம் பெற்றுத் தலைசிறந்து வாழ்ந்திடுவர்
– ஆராரோ (பக். 11–12)

சின்னத்தாயம்மை பார்ப்பனர்களை அழைத்துவந்து, நாள் தோறும் உணவு படைப்பவர்; அவர்களைக்கொண்டு கதை சொல்லச் சொல்பவர்; பழமையில் மிகவும் ஊறியவர்; புலால் உண்ணும் தன் மகனைத் தொட்டாலே தீட்டு என்று குளிப்பவர். அவர், ஆரியத்தை வீழ்த்த வந்த ஆண் பிள்ளையாகத் தன் குழந்தை வளர்வான் எனப் பாடுவதாய்த் தாலாட்டு அமைந் திருக்கிறது. அந்தத் தாய் அப்படிப் பாடியிருக்கவே மாட்டாள் என்பது உறுதி. அக்குழந்தை அப்படி வளர வேண்டும் என்பது பாவலரின் விருப்பம். அவ்விருப்பத்தைச் சின்னத் தாயம்மை யின் வாய்வழியாய் வெளிப்படுத்தியுள்ளார். குழந்தை பின்னாளில் அவ்வாறு விளங்கினார் என்பதும் அவருக்குத் தெரியும். ஆதலின், தாலாட்டு இவ்வாறு அமைந்திருக்கிறது.

விருந்தோம்பல்

பெரியார் சிக்கனத்திற்குப் பெயர் பெற்றவர். "வீட்டு உணவில் இத்துணை காய்கறிகளா? ஒன்று போதாதா? ஏன் வீண் செலவு" என்று நாகம்மையிடம் கூறுவார். அம்மையாரும் கேட்டுக் கொள்வார். ஆனால், விருந்தோம்பலில் சிறந்து நின்றார். தம் இல்லத்திற்கு வருபவர்க்கு எந்நேரமாயினும் சுவையான விருந்து படைப்பது நாகம்மையாரின் கொள்கை.

நள்ளிரவு நேரத்தில் பலரும் சூழ
நண்ணினாலும் அவர்களெல்லாம் விரும்பும் வண்ணம்
உள்ளத்தில் மட்டில்லா மகிழ்ச்சி யோடே
உடன்சமைத்துப் பரிமாறிக் கவனிக் கின்ற
வள்ளல்வேங் கடப்பனாரின் மருகி யாவாள். (பக். 40)

திரு.வி. கலியாணசுந்தரனார் 1933இல் நாகம்மையாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்தபோது, "விருந்தோம்பலில் அம்மையாருக்கு இணையானவர் எவருமிரார். தம் இல்லத்திற்கு வரும் தொண்டர்களுக்கு இனிய முகத்துடனும் இன்சொல் லுடனும் இன்னமுது படைத்ததை எவரும் மறுத்துக் கூற முடியாது. ஒரு சமயம் நானும் நாயக்கரும் திருநெல்வேலிக்குச் சென்றுவிட்டு,

ஈரோட்டுக்கு இரவு 12-30 மணிக்கு வந்தோம். உணவு (அன்னம்) கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அய்யப்பாட்டுடனே வந்தோம். அப்பொழுது அம்மையார் வரவேற்று, உடனே அறுசுவையுடன் அமுது படைத்ததை யான் என்றும் மறவேன்" என்று பாராட்டிப் பேசினார்.

பாவியக்கூறு

பெரியார் - நாகம்மை திருமணம், உறவு முறையில் அவர்கள் உளம் ஒத்து நடைபெற்றது. பாவலர் இத்திருமணத்தைக் களவு, கற்பு ஆகிய முறையில் நடைபெற்றதாய்க் காட்டியிருப்பது பாவியக்கூறு கருதியேயாம். இராமசாமி நாகம்மையின் முகத்தைக் காணும்போதே,

> கன்றுகண்டே ஓடிவரும் ஆவைப் போலக்
> கண்ணிமைக்கும் நொடிப்போதில் தாவிச் செல்வார். (பக். 24)

நாகம்மையும்,

> நண்புருவாய்ப் பண்புருவாய் முறுவல் பூப்பார்;
> நாணத்தால் கால்விரலால் தேய்த்து நிற்பார்;
> மண்ணுக்குள் இருக்கின்ற புதையல் கண்டால்
> மகிழ்வதைப்போல் இராமசாமி கிட்டச் செல்வார். (பக். 24)

அதனால்தான் பெற்றோரிடம் தம் எண்ணத்தை உறுதியாய்ச் சொல்லிப் புதையலைப் பெற்றார்; மகிழ்ந்தார்.

இப்பகுதி,

> யான்நோக்கும் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்
> தான்நோக்கி மெல்ல நகும்

எனும் திருக்குறளை நினைவுபடுத்துகிறது.

இரங்கல் உரைகள்

நாகம்மையார், சின்னதாயம்மையார், பன்னீர்ச்செல்வம் ஆகியோர் மறைவின்போது பெரியார் எழுதியுள்ள இரங்கல் உரைகள் அவர் உள்ளப் பாங்கினையும், எதையும் மறைக்காமல் உள்ளதை உள்ளவாறே புலப்படுத்துகின்ற மனநிலையினையும் தெரிவிக்கின்றன.

தம் மனைவி நாகம்மையார் இறந்தபோது, "எனக்கு ஓர் அடிமை போயிற்றா? பெருந்துணை போனதா? இன்பம் போனதா? உணர்ச்சி போனதா? ஊக்கம் போனதா? என்ன சொல்வதென்றே விளங்கவில்லை.

> எதுஎவ்வா றிருந்தாலும் நாகம் மையார்
> இறப்பொன்றும் வியப்பில்லை; இயற்கை தானே!

பொதுவாகத் தொண்டுக்குத் துணையி ருந்து
புவிபோற்ற ஒத்துழைத்திட் டாலும், இன்னும்
புதுப்பாதை அமைப்ப தற்கும், மேலும்மேலும்
புத்துணர்ச்சி பெறுவதற்கும், தடையில் லாமல்
ஒதுங்காமல் தொண்டுசெய்ய இறந்தமட்டும்
ஒப்பற்ற நாட்டுக்கு நன்மை தானே?

என்றார். பொதுப்பணிக்கு இடையூறில்லாமல் சுற்றிச் சுழன்று வர, அம்மையார் இறப்பும் ஒருவகையில் நன்மையே என்றார். என்ன நெஞ்சமுத்தம்!

தாயார் இறுதிவரை எழுந்து நடமாடித் தமக்கு வேண்டிய வற்றைத்தாமே செய்துகொண்டார்; இறக்கு மட்டும் துணை யின்றி எழுந்து நடந்தார். பெரியார் சோலையார்ப்பேட்டைக் கூட்டத்திற்குச் செல்ல அவரிடம் கூறிவிட்டுத்தான் சென்றார். இரவு 12 மணிக்கு உயிர் பிரிந்தது. செய்தி கிடைத்ததும் பெரியார் காலை 9 மணிக்கு வந்து சேர்ந்தார். அம்மையார் 95 ஆண்டுகள் வாழ்ந்தவர்.

எனக்கு,அவரும் முடிவெய்தியது, வருத்தம்
இலைமெய்யாய்; மகிழ்ச்சி தானே;

அவர் இறந்தது எனக்கு மகிழ்ச்சியே என்று எழுதினார்.

ஆனால், பன்னீர்ச்செல்வம் மறைந்த போதோ,

நமதுண்மைத் தோழரும், பின்புறம்பே சாத
நற்றுணையும், தமிழினத்தின் உயர்வி னுக்குச்
சமரிட்டும் ஆரியத்தை வீழ்த்த என்னைச்
சந்தித்தும், என்னிடத்தில் அன்பும் பற்றும்
தமர்போலக் காட்டிடுவார் பன்னீர்ச் செல்வம்;
தனக்குவமை இல்லாத அவரின் சாவை
எமதுகுடி யரசினிலே எழுதும்போதே
எழுத்துகளைக் கண்ணீர்தாம் அழிக்கு தந்தோ

என்றெழுதினார். உறவுகள் மறைந்தபோது கவலை கொள்ள வில்லை; தமிழினத்துக்காக உடனுழைத்தவர் மறைந்தபோது கண்ணீர் விடுகிறார்.

நயன்மைக் கட்சி, தன்மான இயக்கம், திராவிடர் கழகம் எனப் பெரியாரின் பெருந்தொண்டில் அவருடன் தோள் கொடுத்துப் பணியாற்றிய அனைவர் தொண்டுகளையும் நிரல்படுத்திச் சொல்லியுள்ளார், திருநாவன். ஒவ்வொருவர் வரலாற்றினையும் சுருங்கச் சொல்லியிருக்கிறார்.

தித்திக்கின்ற பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியையும் முத் தமிழறிஞர் கலைஞர் ஆட்சியின் வெற்றித் திட்டங்களையும் விளங்க வைத்திருக்கிறார்.

இயக்கத்திலில்லாவிட்டாலும் பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட கைவல்ய சாமியார், குன்றக்குடி அடிகளார் ஆகியோர் ஆற்றிய அருஞ்செயல்கள் கூறப்பட்டுள்ளன.

பெண்களுள் டாக்டர் தருமாம்பாள், இராமாமிர்தத் தம்மையார் போன்றோர் செய்த குமுகப் (சமூகப்) புரட்சிகள் விளக்கப்பட்டுள்ளன.

செறிவுரைகள்

பாவியத்தில் செறிவுரைகள் பல நிறைந்துள்ளன.

செக்களவு பொன்இருந்திட் டாலும் நாளும்
செதுக்கிஉண்டால் இல்லாமல் போகும். (பக். 38)

பாடிப் பாடிக் குத்தினாலும்
பதரில் அரிசி வந்திடுமோ?

உவர்நிலந் தனிலே நீங்கள்
ஒப்பிலா விதையைப் போடேல்! (பக். 54)

பந்திக்கே இல்லாத வாழைக் காயும்
பந்தலிலே தொங்குவதால் பயன்தான் யார்க்கு? (பக். 93)

உவமைகள்

உவமைகளைக் கையாளுவதில் திருநாவன் வல்லவரா யிருக்கிறார். ஐம்பதுக்கும் மேற்பட்ட அரிய உவமைகள் உள்ளன. சான்றுக்குச் சில இங்கே தரப்படுகின்றன.

நினைத்தநேரம் நெடுமழைபெய் தாற்போல், வீட்டார்
நிறைமகிழ்ச்சி கொண்டார்கள். (பக். 10)

தூண்டிலினைப் போடுகிறவன் மிதப்பில் கண்போல்
தொடர்ந்துநாளும் விடுதலையில் கண்வைத் திட்டார். (பக். 92)

அறுத்தகோழி துடிப்பதைப்போல் துடித்துப் போனார். (பக். 168)

கதிரவன் இல்லைஎன்று கண்ணிலான் சொல்வதைப்போல் (பக். 341)

கனவில் கண்ட கத்தரிக்காய்
கறிக்கு ஆகா வாறுபோல (பக். 362)

நீந்தஅறி யாதவனை ஆற்று வெள்ளம்
நிலைகுலைய அடித்துக்கொண் டேகல் போலும் (பக். 99)

சிறந்த அடைமொழிகள்

தந்தை பெரியாரைக் குறிப்பிடும் போதெல்லாம் தக்க அடைமொழி கொடுத்தே எழுதுகிறார்; அடைமொழியில்லாது பெரியாரைக் கூறும் இடங்கள் மிகக் குறைவே. இராமசாமி

என்றும், ஈ.வே.ரா. என்றும், பெரியார் என்றும் ஐயாவை நிலைக்கேற்பக் கூறுகிறார்.

அஞ்சா வேழம் இராமசாமி
அறிவு சான்ற இராமசாமி
ஆண்டகை இராமசாமி
ஆற்றல்சால் இராமசாமி
இரக்கமிக்க இராமசாமி
இலகுபுகழ் இராமசாமி
இனிய நெறியார் இராமசாமி
சுடர்மேனி இராமசாமி
சீர் இராமசாமி
நன்னெறிவாழ் இராமசாமி
பாங்கான இராமசாமி
புரட்சி இராமசாமி
புத்துலக முற்காணி இராமசாமி
வித்தகர் இராமசாமி
அரவணைகரும் ஈ.வே.ரா.
அரிமா ஈ.வே.ரா.
அன்புமிக்க ஈ.வே.ரா.
இடிபோலும் ஈ.வே.ரா.
உலகு புகழ் ஈ.வே.ரா.
எரிமலை ஈ.வே.ரா.
எள்ளலிலா ஈ.வே.ரா.
ஏற்றமிக்க ஈ.வே.ரா.
குறிக்கோள் தலைவர் ஈ.வே.ரா.
கூர்மதியர் ஈ.வே.ரா.
கொள்கைவேள் ஈ.வே.ரா.
சிந்தனைவேள் ஈ.வே.ரா.
சிறை அரிமா ஈ.வே.ரா.
செஞ்சொல்லர் ஈ.வே.ரா.
தங்கமன ஈ.வே.ரா.
தமிழர் தலைவர் ஈ.வே.ரா.
தன்மான ஏந்தல் ஈ.வே.ரா.
நற்றொண்டர் ஈ.வே.ரா.
நாடு புகழ் ஈ.வே.ரா.
நேயமிக்க ஈ.வே.ரா.
பட்டறிஞர் ஈ.வே.ரா.
பார்போற்றும் ஈ.வே.ரா.
பிறர்க்குழைக்கும் ஈ.வே.ரா.
பெருந்தகையர் ஈ.வே.ரா.
போராட்ட மாவீரர் ஈ.வே.ரா.
மதிமகன் நல் ஈ.வே.ரா.
மாட்சிமிக்க ஈ.வே.ரா.
முடிசூடா வேந்தர் ஈ.வே.ரா.
வாய்மைத் தலைவர் ஈ.வே.ரா.
விடிவெள்ளி ஈ.வே.ரா.
விடுதலைவேள் ஈ.வே.ரா.
வீரவேழம் ஈ.வே.ரா.
வென்றெடுக்கும் ஈ.வே.ரா.
வேழப்பாய்ச்சல் ஈ.வே.ரா.
அடுகள ஏந்தல் பெரியார்
அருங்குணப் பெரியார்
அறிவுலகப் பெரியார்
தலைவரேறு பெரியார்
தன்மான இயக்கப் பெரியார்
தன்னேரிலாப் பெரியார்
பகுத்தறிவுப் பெரியார்
பார்புகழும் பெரியார்
புவிப் பெரியார்
வெண்தாடிப் பெரியார்

தந்தை பெரியாரைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணத்தும் உள்ளம் உருகிப் போற்றிட வேண்டும். அவர் இல்லாதிருந்திருப்பின் தமிழினம் இந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது. பெரியார் இவ்வளவு பாடுபட்டும், தொடர்ந்து அதனை இட்டுச் சென்றும், இன்றும் குல அறம் முற்றிலும் ஒழிந்து விட்டதாய்க் கூற முடியாது. தமிழன் தமிழனாய் வாழத் தம்மை முற்றிலுமாய் ஈடுபடுத்திப் பாடுபட்ட தந்தை பெரியாரை இப்படி

யெல்லாம் கூறிப் பார்க்க வேண்டும். அதற்கெனவே திருநாவன் இத்தகைய அடைமொழிகளைத் தந்திருக்கிறார் எனக் கருதலாம்.

தனித்தமிழ்ச் சொல்லாட்சி

தமிழ் பிறமொழிக் கலப்பின்றி இயங்க வல்லது. உயர்தனிச் செம்மொழி எனும் ஒப்பற்ற தன்மையைப் பெற்றுள்ளது. ஆனால், நாட்டு நிலை என்ன? அயல்மொழிச் சொற்களையும் தொடர் களையும் வேண்டுமென்றே கலந்து எழுதுகின்றனர்.

மணக்கவரும் தென்றலிலே
  குளிரா இல்லை? தோப்பில்
    நிழலா இல்லை!
தணிப்பரிதாம் துன்பமிது!
  தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
    தமிழ்தான் இல்லை (பாரதிதாசன்)

என வருந்திப் பாடுகின்ற நிலையில் தமிழின் நிலை உள்ளது.

தமிழ்நாவன் தனித்தமிழ் ஆர்வலர்; மறைமலையடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்தைக் காப்பவர். பிற மொழிச் சொல் எதுவுமின்றி ஒரு பாவியத்தை இயற்றிக் காட்டி யிருக்கின்றார். தூய தமிழிருக்க எவ்வெவ் அயல்மொழிச் சொற்களைப் பயன்படுத்தி வருகிறோம் என்பதை சிற்சில பாடல்களின் கீழே குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார். சான்றுக்குச் சில :

அயல்மொழிச் சொல்	ஏற்ற தமிழ்ச்சொல்
இந்தியா (லத்தீன்)	நாவலந்தீவு
ஏலம் (போர்த்துகீசியம்)	மாறேத்தம்
பட்டாணி (மராத்தி)	உருளங்கடலை
தயார் (உருது)	அணியம்
இராவ் பகதூர் (உருது)	அரையப் பகவர்
கதர் (உருது)	கைந்நூல்
தராசு (உருது)	துலை
செலாவணி (உருது)	பொருள் மாற்று
பாஸ்போர்ட் (ஆங்கிலம்)	கடவொப்பம்
தார் (ஆங்கிலம்)	கரிநெய்
சோடா (ஆங்கிலம்)	காலகம்
ரப்பர் (ஆங்கிலம்)	தொய்வை
சிமெண்ட் (ஆங்கிலம்)	பைஞ்சுதை
கட்அவுட் (ஆங்கிலம்)	வெட்டுக் கவின்படம்
ராஜ்பவன் (சமஸ்கிருதம்)	அரசகம்

அலங்காரம் (சமஸ்கிருதம்) – அணிபுனைவு
அங்கி (சமஸ்கிருதம்) நெட்டுடை
உருத்திராக்கம் (சமஸ்கிருதம்) – மணிக்காய்
தீர்க்கதரிசி (சமஸ்கிருதம்) முற்காணி

இன்னும் இவ்வாறான பல சொற்களைப் பாவியத்தைப் படிக்கும்போது அறியலாம். தமிழ்நாவனின் உணர்வு எல்லாருக்கும் இருக்குமானால் தமிழ்,'உலக முதன்மொழி' எனச் சொல்லித் தலைநிமிர்ந்து நிற்கலாம்.

தொடராட்சி

பாவியத்தின் நடை எளிமையாகவும் ஆற்றொழுக்காகவும் அமைந்துள்ளது. இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், அடி முதல் திரிபு, அடி முதல் மடக்கு பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன. விரைந்து படித்துச் செல்ல அவை துணை நிற்கின்றன. மேலும் பாவலரே நேரில் சென்று பேசுவது போன்ற உணர்வையும் ஏற்படுத்துகின்றன.

துறுதுறுத்த வாலாக வளர்ந்தார்
முணுமுணுப்பின்றி உதவியாய் இருந்திட்டார்
மடமடவென் றினிதாகச் செய்திட்டார்
இடக்கு மடக்காய் மறுப்பார்
காணி காணியாய் ஈட்டி
அக்கம் பக்கம் பார்க்காமல்
அல்லும் எல்லும் உழைத்திட்டார்
அடித்துப் பிடித்தும் கிட்டவில்லை
பட்டி தொட்டி எங்கும் சென்று
மிஞ்சி மிஞ்சிக் குடித்திடாமல்
சுழன்று சுழன்று சூறா வளிபோல்
மாய்ந்து மாய்ந்து செயற்பட்டார்

இப்படி எழுதுவது அவருக்கு இயல்பாக இருக்கிறது. பாவியத்தில் பல இடங்களில் இப்படிப்பட்ட தொடர்களை இன்னும் ஏராளமாய்க் காணலாம்.

வாழ்க திருநாவன்

தந்தை பெரியாரின் முழு வரலாற்றையும் தனித்தமிழில் கூறும் முதல் பாவியம் இது. திருநாவன், செய்திகளைப் பொறுப்புடன் சேகரித்திருக்கிறார். கற்பனையோ, புனைவோ இன்றி வரலாறு எழுதப்பட்டுள்ளது. பெரியார்பற்றிய இத்தகைய

வரலாறுகள் இன்னும் பல வரவேண்டும். செய்திகள் சுருக்கமாய்த் தரப்பட்டுள்ளன. மிக விரிவாய்க் காண்டங்களாய் இந்த நூலைப் போல் ஆறேழு மடங்குகளில் வருவதற்கு இந்நூல் கால்கோள் என்றெண்ணுகிறேன்.

தமிழ்நாவனின் இன உணர்ச்சியையும் தமிழ் உணர்ச்சியினையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	புலவர் இலமா. தமிழ்நாவன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	உலகமுதல் தாய்மொழிப் பதிப்பகம், சென்னை. (2004)

2

நபிகள் நாயகக் காவியம்

அப்துற்–றஹீம்

அப்துற்-றஹீம் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவர். இவர் இசுலாமிய நெறி விளக்கம் செய்த ஒளி மாமணி; மனிதநேய மணிப்புறா. தன்னம்பிக்கை நூல்களை முதன் முதலில் தமிழில் தந்தவர் இவரே. இசுலாம் பற்றிய ஏராளமான நூல்களை இவர் எழுதி யுள்ளார். ஒரு பல்கலைக்கழகம் செய்து முடிப்பதற்கு அரியதான இசுலாமியக் கலைக்களஞ்சியத்தை இவர் ஒருவராகவே உருவாக்கித் தந்துள்ளார்.

> சதுமிலை மனித மாட்சி
> சகம்முழு தாண்ட போதும்;
> சதுமுடைத்து இறைவன் ஆட்சி (பா. 137)

எனும் கொள்கையில் ஊறித் திளைத்த இறைநேசச் செல்வர், இவர்.

நான் சென்னையில் சீறாப்புராணத் தொடர் சொற்பொழி வாற்ற நேர்ந்தபோது, இவரை அணுகி, எனக்கு ஏற்படும் ஐயப்பாடுகளை அகற்றிடவும், இசுலாமிய நெறி விளக்கம் தந்திடவும், அவ்வப்போது சிறிது நேரம் ஒதுக்கித் துணை செய்திடுமாறு வேண்டினேன். சொற்பொழிவாற்றப்போவது குறித்து மகிழ்ந்தார்; ஆயினும், "நான் தொடர்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட்டிருப்பவன்; இடையே கவனம் வேறு பக்கம் திரும்பினால் என் எழுத்துப் பணி தடைப்படும். கவிஞர் கா.மு. ஷெரீப், அறிஞர் ஹஸன் ஆகியோரை அணுகினால் அவர்கள் தக்க விளக்கம் தருவார்கள். என்னிடம் கேட்க நினைப்பதற்கு, இவற்றில் நீங்கள் தக்க விளக்கம் காணலாம்" எனத் தாம் எழுதியுள்ள இசுலாமியக் கலைக் களஞ்சியம் மூன்று தொகுதிகளையும் எடுத்துக் கொடுத்தார். முதல் கூட்டத்திற்கு மட்டும் வருகைதந்து, சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்ததோடு, பாராட்டி ஊக்கப்படுத்தியும் சென்றார். எழுத்துப் பணியே அவருடைய

முதற்பணி, முக்கியப்பணி, உயர்பணி, உயிர்ப்பணி. இல்லையெனில் இவ்வளவு நூல்களையும் செய்திகளையும் அவர் தந்திருக்க முடியாது.

நாயகக் காவியம்

நபிகள் நாயகம் (ஸல்)[1] அவர்களின் வரலாற்றினைத் தமிழில் முதன் முதலில், 'சீறாப்புராணம்' எனும் காவியமாக உமறுப்புலவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதினார். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் பெருமானார் வரலாறு பற்றிப் பல உரைநடை நூல்கள் வெளிவந்துள்ளன. கவிதையிலும் பலர் எழுதியுள்ளனர். மௌலவி[2] ஜி.எம். ஸதக்கத்துல்லாஹ் ஸிராஜ் பாக்கவி, 'நெஞ்சில் நிறைந்த நபிமணி' எனும் காவியம் படைத்துள்ளார். பனைக்குளம் அப்துல் மஜீது, 'நாயக வெண்பா' எனும் நூலைத் தந்துள்ளார். கவி கா.மு. ஷெரீப் அவர்கள், 'நபியே எங்கள் நாயகமே' என்னும் தலைப்பிலும், கவிஞர் மு. முகம்மது மைதீன் அவர்கள், 'நாயகப் பேரொளி' எனும் தலைப்பிலும் கவிதை நூல்கள் புனைந்துள்ளனர். கவிஞர் மு. மேத்தா, 'நாயகம் ஒரு காவியம்' எனும் காப்பியத்தைப் புதுக்கவிதை, மரபுக் கவிதை, இசைப்பாடல் ஆகியவற்றை இணைத்து எழுதியுள்ளார். 'நாயகம் எங்கள் தாயகம்' எனப் புதுக்கவிதை நடையில் வலம்புரிஜான் ஒரு

---

1. 'ஸல்லல்லாஹு அலைகி வஸல்லம்' என்பதன் பொருள், 'இறைவனுடைய நல்லாசியும் சாந்தியும் அவர்கள்பால் உண்டாவதாகுக' என்பதாம். இது சுருக்கமாய் (ஸல்) என எழுதப்படும்.

'அலைஹிஸ்ஸலாம்' எனும் சொற்றொடர், 'இறைவனுடைய சாந்தி அவர்கள்பால் உண்டாவதாகுக எனப் பொருள்படும். இது (அலை) என்றெழுதப்படும்.

ரலியல்லாஹு அன்ஹு வரலூஅன்ஹு' என்பதன் பொருள், 'இறைவனுடைய திருப்பொருத்தம் அவர்கள்மீது அமைவதாகுக' என்பதாம். இது (ரலி) என எழுதப்படும். நபிகள் நாயகத்தைக் குறிக்கும்போது (ஸல்) என்பதனையும், வானவர்களையும் மற்ற நபிமார்களையும் சொல்லும்போது (அலை) என்பதையும், நபித்தோழர்களைக் குறிக்கும்போது (ரலி) எனச் சொல்வதும் இசுலாமிய மரபு.

முகம்மது (ஸல்), ஜிபுறயீல் (அலை), கதீஜா (ரலி) என எழுதுவதே முறை.

2. மௌலவி மார்க்க அறிஞர்

காவியம் தந்துள்ளார். இப்போது அப்துற்-றஹீம் அவர்களின், 'நபிகள் நாயகக் காவியம்' வெளிவருகிறது.

இவர் இதனை முன்னரே எழுதியிருக்கலாம். ஆனால் இது தன்னுடைய இறுதிப் பணியாக இருக்க வேண்டும் என எண்ணியிருந்திருக்கிறார். "பெருமானார்' காவியத்தை எழுதியதன் பின்னர் என் எழுதுகோல் வேறெதனையும் எழுதாது" என அவர் சொல்லிவந்ததை, அவருடைய மருகர், திரு. ஷாஜஹான் வாயிலாய்க் கேட்டிருக்கிறேன். அவர் தன் இறுதிக் காலத்தை உணர்ந்திருக்கிறார். எனவேதான் கடைசிப் படைப்பாய் இக் காவியத்தை விட்டுச் சென்றிருக்கிறார்.

இறந்ததன் பின்னரும்
   இறையெழில் தூதரின்
சிறந்தொளிர் பணியினைச்
   செய்திடும் ஆசையால்
இறந்திடும் முன்னரே
   இறந்திடாப் பெருவரம்
இறையிடம் இரந்துயான்
   யாத்தன் இந்நூலையே! (பா. 7)

என அவரே இக்காப்பியத்தின் தொடக்கத்தில் பாடியிருக்கக் காணலாம்.

திருக்குர்ஆனில் முதன் முதலாய் அருளப்பெற்றவை, 'ஸூரத்துல் அலக்' [2] எனும் 96ஆவது அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்களாகும். அதில் 4, 5 ஆவது வசனங்களில்,

உமதிறைவன் மாபெரும் கொடையாளி; அவனே
எழுதுகோலைக் கொடுத்து எழுதக் கற்றுக்கொடுத்தான்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுதக் கற்றுக் கொள்ள இறைவன் தந்த எழுதுகோலை, அவருடைய இறுதித் தூதரின் காவியத்தைப் பாடி முடித்ததும் அவனிடமே திருப்பி ஒப்படைத்துவிட்டார். அந்த எழுதுகோல் இனி எழுதாது! ஆனால் அது கொண்டு

1. முகம்மது நபி அவர்கள் நாயகம், நபிமணி, பெருமானார், அண்ணலார், இறுதி நபி எனும் சொற்களால் வழங்கப் படுவதுண்டு.

2. 'ஸூரா' என்பது திருக்குர்ஆனின் அத்தியாயப் பெயர். அத்தியாயத்திலுள்ள ஒவ்வோர் உரையும் (வசனமும்) ஆயத்து எனப்படும். திருக்குர்ஆனில் 114 அத்தியாயங்கள் உள்ளன. 'ஸூரத்துல் அலக்' என்பது ஓர் அத்தியாயம். இதன்பொருள் 'இரத்தக்கட்டி' என்பதாம்.

எழுதப்பட்டவை, "மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்கும்."

இறைவணக்கம்

தமிழில் சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியங்களுக்குப் பிறகு, வடமொழி மரபை ஒட்டிக் காப்பியங்கள் தோன்றிய காலத்திலிருந்து கடவுள் வாழ்த்து, ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் என்றெல்லாம் கதைக்குள் நுழையுமுன்னர்ப் பாடுவது இயல்பு. இசுலாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் கடவுள் வாழ்த்து ஏறத்தாழ ஒரே முறையில் அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டினராகிய வண்ணக் களஞ்சியப் புலவர் தன் காப்பியத்தில் இறைவன் (அல்லாஹ்), வானவர் தலைவர் நால்வர், 1,24,000 நபிமார்கள், முறுசலீன்கள்[1] எனப்படும் 313 நபிமார்கள், உலுல் அசுமி[2], நபிகள் நாயகம், நாற்பெருங் கலிபாக்கள்[3], பெருமானாரின் பெயரர்களான அசன் - உசைன், அன்பியாக்கள்[4], அவுலியாக்கள்[5], மதீன நகர் நபித்தோழர்கள், விசாரணையின்றிச் சுவர்க்கம் உறுதி செய்யப்பட்ட பதின்மர், இமாம்கள்[6], ஆலிம்கள்[7], உலமாக்கள்[8] என்ற வரிசையில் வாழ்த்தினைக் கூறினார். 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய ஏறத்தாழ இருபது இசுலாமியக் காப்பியங்களிலும் இதே முறை பின்பற்றப்பட்டுள்ளது; என்ற போதிலும் அங்கும் இங்கும் சில மாற்றங்களும் உள்ளன.

முறுசலீன்கள் -	வேதம் அருளப்பட்ட நபிமார்கள்
2. உலுல் அசுமி	உறுதியான எண்ணம் உடையவர்
3. கலிபாக்கள்	முகம்மது நபிக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவர்கள்
அன்பியா	இறைதூதர் என்பதன் பன்மை
அவுலியா	இறைவன் எண்ணத்தால் மனநிறைவு பெற்ற அறவோர்
6. இமாம்	தலைவர்; பின்பற்றத் தகுதிவாய்ந்தவர்; முன்மாதிரியானவர்; கூட்டுத் தொழுகையை முன்னின்று நடத்துபவர்.
7. ஆலிம்	இசுலாமிய சமய (மார்க்க) அறிஞர் (ஒருமை)
8. உலமாக்கள்	இசுலாமிய சமய அறிஞர்கள். (ஆலிம் என்பதன் பன்மை)

இறைதூதர் புகழ்

அப்துற்-றஹீம் அக்காப்பியங்களின் போக்கினைப் பின்பற்றியுள்ள போதிலும் இறைவணக்கம், இறைதூதர் புகழ் என்னும் இரண்டோடு கடவுள் வாழ்த்துப் பகுதியை முடித்துக் கொண்டார். இறையை வணங்கிய பிறகு, காவியத் தலைவர் என்ற முறையிலும், இறுதி நபி இவர் என்ற வகையிலும்,

> ஒருநாளிலும் அவரின்பெயர்
> ஒலியாக்கணம் இலையாம்;
> பெருமைமிகு பெருமான்புகழ்
> பெயரைத்துதி புரிவாம்! (பா. 2)

என இறைதூதர் புகழை ஏத்திப் போற்றுகிறார்.

கவிஞரின், 'இறைதூதர் புகழ்' மிகவும் நுணுக்கம் வாய்ந்தது; காவியத்தின் முழுப்பிழிவையும் உள்ளடக்கியிருக்கிறது. இசுலாமியர்கள் ஒரு நாளில் ஐவேளைத் தொழுகை செய்பவர்கள். ஒவ்வொரு தொழுகையின் போதும் ஒவ்வொரு பள்ளிவாசலிலும் தொழுகைக்கு அழைக்கும் பாங்கு (அழைப்பு) ஓதப்படுகிறது. அந்த அழைப்பு, சில தொடர்களைக் கொண்டது; அதில், 'அஷ்ஹது அன்ன முகம்மதுற் றசூலுல்லாஹ்'[9], என்பது ஒரு தொடர். இத்தொடரில், 'முகம்மது' என்னும் பெயர் இடம் பெற்றுள்ளது. அழைப்பாளர், இத்தொடரை இருமுறை ஓத வேண்டும். எனவே, ஒவ்வொரு தொழுகை அழைப்பின் போதும், 'முகம்மது' எனும் பெயரை ஊரறிய உரத்த குரலில் இருமுறை கூறியாக வேண்டும். ஐவேளைகளிலுமாய் ஒருநாளில் ஒரு பள்ளிவாசலில் பத்துமுறை (5 x 2) இப்பெயர் ஒலிக்கப்படுகிறது. உலகம் முழுவதிலுமாய்ச் சற்றொப்ப 20 இலட்சம் பள்ளிவாசல்கள் இருப்பதாய்க் கொண்டால், ஒரு பள்ளிக்குப் பத்துமுறை எனும் வகையில் மொத்தம் 2 கோடி முறை (20 இலட்சம் x 10) முகம்மது எனும் திருப்பெயர் ஒலித்துக் கொண்டே இருக்கும். தொழுகை, பொழுதினை ஒட்டியது; ஊருக்கு ஊர், இடத்துக்கு இடம் தொழுகை நேரம் வேறுபடும். ஆதலின் உலகளாவி, ஒவ்வொரு கணமும் ஏதாவது ஓரிடத்தில் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும். இவ்வகையில் உலகம் முழுவதுமாய் ஒரு நாளில், இரவு பகல் என்றில்லாமல், கணத்துக்குக் கணம், இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும் பெயர், 'முகம்மது' என்பது. நபிகள் நாயகத்திற்குக் கிடைத்துள்ள இப்பெருமை உலகில் வேறெவர்க்கும் இல்லை; ஆதலால்தான் கவிஞர்,

---

9. அஷ்ஹது அன்ன முஹம்துற்-றசூலுல்லாஹ் இதன் பொருள், 'முகம்மது இறைவன் தூதர் என்பதை நான் உறுதியாய் அறிந்த சான்றளிக்கிறேன்' என்பதாம்.

ஒருநாளிலும் அவரின் பெயர்
ஒலியாக் கணம் இல்லை

எனச் செம்மாந்து கூறுகிறார். இப்பெருமை, முகம்மதுவுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை விளக்குவதே இக்காவியம்.

இப்பெருமைக்குரியவரின் புகழ்ப் பூக்களை மணங் கமழக்கமழக் காவியம் முழுவதுமாய்த் தூவி நம்மை நுகர வைக்கிறார், கவிஞர். அவர், நபிகள் நாயகத்தை எப்படியெல்லாம் புகழ்ந்து போற்றுகிறார்?

பூமான்; எம்மான்; பெருமான்;
ஏந்தல்; தோன்றல்; அண்ணல்;
அருள்நபி; திருநபி; அந்திநபி;
புண்ணியத்தின் திருவுருவர்;
தனக்குநேர் தாமெனும் தருமசீலர்;
பொறையும் புகலை அடைய நினைக்கும் புகழ்வேந்தர்;
கண்ணின் மணிநேர் கருணைக் கடல்;
நரரெனும் சுரங்கந் தனில்விளை நன்மணி;
அறபோதத்தின் பெருமைமிகு முத்திரை;
கருணை முகிலுக்கும் கடன்தரு கடல்நிகர் நபி;
முத்தெனத் தாயின் குடல்கடல் விளைந்த முழுமகன் முகம்மது.

நூலுள் பக்கத்திற்குப் பக்கம் இத்தகு தொடர்களைக் கண்டு மகிழ முடிகிறது.

நவில் நயம்

எளிய நடையில், உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் செய்திகளைச் சொல்வதில் கவிஞர் வல்லவராயிருக்கிறார். முகம்மதுவுக்குப் பெரிய தந்தை, அபூதாலிப்; அவர், பிள்ளை முகம்மதுவை வளர்த்தது எவ்வாறு? கவிஞர் கூறுகிறார் :

உண்ணும் பொழுதும் அவரின்றி
ஒன்றும் உண்ணார் உயர்தந்தை;
எண்ணும் பொழுதும் அவரன்றி
யாதும் எண்ணார்; இளமகனின்
கண்ணுக் கினிய முகஅழகைக்
கன்னல் நிகர்த்த மொழிஅழகை,
எண்ணற் கரிய இயல்பழகை,
எண்ணி உவப்பாய் அவர்வளர்த்தார். (பா. 119)

கதீஜா செல்வச் சீமாட்டி; இருமுறை மணந்து, கணவரை இழந்து, கைம்பெண்ணாய் வாழ்ந்தவர். முகம்மதுவின் நேர்மை

யினையும் நாணயத்தையும் கண்டு, அவரை மணந்துகொண்டவர், அவர் தம் கணவரின் அரிய பண்புகளைத் தொகுத்து அகங்குளிரப் பேசுகிறார். முகம்மது,

ஏழைகளின் பங்காளர்; எளியார் நண்பர்;
எள்முனையும் எவர்தமக்கும் இன்னல் எண்ணார்;
ஆழமிகு அன்பாளர்; அறத்தின் வேந்தர்;
அல்அமீன்[1] எனும்பெயரை அழகு செய்வார்;
வாழியென மக்களெலாம் வாழ்த்துக் கூற
வாழும்விதம் வாழுகின்ற வள்ளல்; (பா. 237)

முகம்மதுவிடம் அன்பு கொண்டோர் கூறிய சொற்களில் அமுது தோய்ந்திருக்கிறது. அவரிடம் பகை கொண்டோர் பாராட்டவா செய்வர்? புதிய நெறியினைப் பரப்பியபோது, பழமை நெறியினர் முகம்மதுவை அழிக்க முயன்றனர். அவர் பெரிய தந்தை அவருக்குப் பெருந்துணையாய் நின்றதால் அவரிடம் சென்று,

அவரைநீர் தாங்கி நிற்றல்
அறத்தினை அழித்தல் போலும்;
அவரைநீர் அணைத்துக் கொள்ளல்
மறத்தினை அணைத்தல் போலும்;
அவரைநீர் அருகி ருத்தல்
அமர்க்கெமை அழைத்தல் போலும்;
அவர்க்குநீர் அமுத ருத்தல்
அரவம்,பால் வார்த்தல் போலும்

எனப் பொங்கிச் சீறுகின்றனர். உற்றார் பேச்சுக்கும், பகைவர் பேச்சுக்கும் உள்ள வேறுபாட்டினைக் கவிதையில் நன்கு உணர்கிறோம்.

சமயச் செய்திகள்

இசுலாமியக் காவியம் இது. ஆதலால், அச்சமயம்பற்றிய செய்திகளைக் கவிஞர் உளம் தோய்ந்து எழுதுகிறார். இறைவன் ஒருவன்; உருவமற்றவன்; இணையற்றவன்; மிகப்பெரியோன்.

அகிலமெலாம் படைத்தாளும் இறைஒருவன்;
பிறர்அவனைப் பெற்றார் இல்லை;
அகலுலகில் அவன்பிறரைப் பெற்றானோ
என்றிடிலோ, அதுவும் இல்லை;
புகழ்க்குரிய அவர்பிறரின் தேவையற்றோன்,
இணையுமற்றோன்; புகல வொண்ணா
மிகப்பெரியோன்

என்பதுவே இறை இலக்கணம்.

---

1. அல்அமீன் - நம்பிக்கைக்குரியவர்.

வானவர் தலைவர் ஜிபுறயீல், பெருமானார்முன் ஒளி வடிவில் தோன்றி, 'ஓதுக' எனக் கூறி, இறையுரையை இறக்கினார்; பெருமானாரும் ஓதினார். அதன் விளைவு,

பிறந்தது புதுமை மார்க்கம்;
பிறந்தது புதுமை நோக்கம்;
பிறந்தது புதுமைப் பாட்டை;
பிறந்தது புதுமை வேட்கை;
பிறந்தது புதுமை ஆய்வு;
பிறந்தது புதுமை வாழ்வு;
பிறந்தது புதுயு கத்தின்
பெற்றிசேர் புனிதப் பொன்னாள். (பா. 248)

வானவர் தலைவர் ஜிபுறயீல் வழியாய் நாயகமவர்களுக்கு இறைவன் அருளிய நன்மறை திருக்குர்ஆன். குர்ஆன் என்னும் சொல்லுக்கு, 'ஓதக்கூடியது' என்பது பொருள். மனித சமுதாயம் மேன்மையடைய 'ஓதவேண்டியது' இது என்பதால் அப் பொருளையே தன் பெயராய்க் கொண்டிருக்கிறது 'குர்ஆன்' என்பர், மார்க்க அறிஞர்கள். முகம்மதுவைக் கொல்வதற்காக வாளுருவிச் சென்ற உமறு[1], அவர் தங்கை வீட்டில் மறை ஏட்டினை எடுத்துப் படிக்க நேர்ந்தது. அதை ஓதியதும் உளம் மாறினார்; நாவில் இன்பத்தேன் ஊறியது; உடலெங்கும் பூரித்தது; புதிய பிறவி பெற்றார்.

இறைவனுடைத் திருவசனம் இதுவன்றி
மனிதருடை இன்சொல் அன்றே;
இறைவனுடை மாண்பறிவில் தெறித்துவிழும்
ஒளிச்சுடரும் இதுவே யன்றோ?
இறைவனன்றி எவராலும் இதுபோன்ற
எழில்வசனம் இயற்றல் சாலா;
இறைபெரியோன் இவ்வுலகை உய்விக்க
அளித்தமறை இதுவென் றோர்ந்தார். (பா. 675)

முகம்மதுவைக் கொல்ல வந்தவர், அவர் கூறிய கொள்கையை ஏற்று இசுலாம் நெறியினராயினார்.

தொழுகை இசுலாமியர்களின் ஐம்பெருங் கடமைகளுள் இரண்டாவதாகும். தொழுகை ஒருவனைப் பாவச் செயல்களி லிருந்தும், மானக்கேடானவற்றிலிருந்தும் தடுக்கிறது எனத் திருமறை கூறுகிறது. மக்கள், கூட்டத்தொழுகை நடத்தும் இடம் மஸ்ஜித் எனப்படும். மஸ்ஜித் என்பதன் பொருள், தொழுமிடம் ஆகும். இதனைப் பள்ளிவாசல் என்கிறோம். உலகில் இறைவனை

1. உமறு - முகம்மதுவைப் பகைத்திருந்தவர்களுள் ஒருவர்; பின்னர் இவர் இசுலாத்தில் இணைந்தார்.

வணங்குவதற்காக நிறுவப்பட்ட முதல் தொழுமிடம்; மக்காவில் உள்ள கஃபா. இது முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களால் உருவாக்கப்பட்டது. இரண்டாவது, சுலைமான் நபி நிறுவிய சக்ரா. இது ஜெருசலேத்தில் உள்ளது. மூன்றாவது, மதீனாவுக்கு அருகில் உள்ள 'குபா'வில் முகம்மது நபி அவர்கள் உருவாக்கிய மஸ்ஜித் தக்வா ஆகும். "ஒருவன் வீட்டில் தொழுவதால் கிடைக்கும் நன்மையைப் போல் இருபத்தைந்து மடங்கு, பள்ளிவாசலில் கூட்டுத் தொழுகை செய்வதால் கிடைக்கும்" என்பது அண்ணல் நபி வாக்கு. 'குபா'வில் பள்ளிவாசல் வேலை நடந்தபோது, நாயகமவர்கள், மற்றவர்களோடு சேர்ந்து தாமும் கல் சுமந்தார். மற்றவர்களுடன் பண்இசைத்துப் பணியாற்றினார்.

பணிசெய்த குழுவினரில் இருந்தஒரு கவிஞர்
"பள்ளிதனைப் பார்மீது நிறுவுபவர் தாமும்,
பணிவோடு நள்ளிரவில் இறைதொழுவோர் தாமும்,
பண்போடு திருமறையை ஓதுபவர் தாமும்,
பிணியின்றிப் புவிவாழ்வார்" எனும்,பண்ணை இசைக்க;
பெருமானார் உளம்அந்த இசைஅருந்தி இனிக்க
உணர்ச்சிமிகு கவிஞருடன் கவர்ச்சிமிகு கீதம்
ஒன்றிணைந்து நபிஇசைத்தார் ஓசைநயம் தொனிக்க". (பா. 947)

முழங்காலால் மண்டியிட்டு, நெற்றி தரையில் படுமாறு தொழுவதால், நெற்றியில் காய்ப்பேறியிருக்கும். இத்தகையவர்க்கு இறைவன் இன்னருள் பொழிவான். கவிஞர்,

மற்றுமே தன்னையே வணங்கு நெற்றியை
எற்றியே ஆக்கினை இறையும் ஆக்குமோ?

என சுதிஜா வாக்காய்ப் பகர்கிறார்.

தெய்வீக இசைஒன்று திசைஎங்கும் செய்முறையில்
மெய்யாக உள்ளதெனில், மேலோனின் திருமறையே!
வையத்தில் மனிதன்,இறை சந்திக்கும் வாய்ப்புளதேல்
பையவே குனிந்து,தலை பணிந்து,தரை வைப்பதுவே (பா. 799)

எனத் திருமறை[1], தொழுகை ஆகிய இரண்டும்பற்றிக் குறிப்பிடுகிறார்.

'ஹஜ்' எனும் சொல், 'புறப்படுதல்' என்னும் பொருளுடையது. ஹஜ் செய்வது தூய பயணம் எனப்படுகிறது. இது, மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று துல்ஹஜ்[2] திங்களில் அங்குச் செய்யும் தூய செயல்களைக் குறிக்கிறது. இது ஐம்பெருங் கடமைகளுள் இறுதியானது. "ஹஜ்ஜை நிறைவேற்றுபவர்,

1. திருமறை - திருக்குர்ஆன்
2. துல்ஹஜ் இசுலாமிய ஆண்டின் இறுதித் திங்கள்

பாவங்களெல்லாம் நீங்கப்பெற்றுத் துப்புரவு அடைகிறார்" என்பது நாயகவாக்கு. ஹஜ்ஜினைக் கவிஞர், பாவமாகிய மரத்தினை வெட்டும் கோடரி என்கிறார்.

பவமாம் மரத்தை வீழ்த்தி, ஒளிர்
பழங்கோடரியாம் ஹஜ். (பா. 816)

அறவுரை

கதை மாந்தர்களிடையே ஏற்படும் அன்பு, உறவு, பகை, நட்பு ஆகியவற்றால் நிகழும் செயல்களின்வழி, மாந்தரினம் அறிந்து கொள்ள வேண்டிய நீதிகள் பல தோன்றும். அவற்றைத் தக்கவாறு எடுத்துச் சொல்ல வேண்டியது காவிய ஆசிரியரின் கடமை. நாயகக் காவியத்தில் அப்துற்-றஹீம் அரிய அறவுரைகளையும் அறிவுரை களையும் சொல்லியுள்ளார்.

மலையுச்சியிலே உள்ள ஒருவன், தான் நிற்கும் நிலை தவறினால், அவன் எவ்வளவு பெரிய செல்வாக்குள்ளவனாயினும் உருண்டு கீழே வரவேண்டியதுதான். அப்படி உருண்டு வரும்போது இடைமலையில் நிற்போர் அவன் தலையை எற்றித் தரையை நோக்கி இன்னும் வேகமாய் உருட்டித் தள்ளுவர். அவனைத் தாங்கித் தடுக்கலாம் என யாராவது முன்நின்றால், வரும் வேகத்தில், காக்க நிற்பவனையும் சேர்த்து உருட்டித் தரை தள்ளி அழிப்பான்.

உலகமாள் பேரர சேனும்
உயர்ந்துள சிகரம் ஏறி,
நிலைமிகக் குலைவா ராயின்,
நீள்மலை உருள்வா ரன்றோ?
மலையினின் நடுவண் நிற்போர்
மகிழ்ச்சிகால் மண்ட, அன்னார்
தலையினில் தமுக்க டித்துத்
தரையினுக் கனுப்பும்; அன்றி
தாங்கிட நினைத்திட் டாலோ
தாங்கரும் சுமையாய் மாறித்;
தாங்கிட முனைந்திட் டோரைத்
தம்மொடு வீழ்து வாரே. (பா. 468–69)

முகம்மது புதிய மார்க்கம் கூறினார். ஊரார் எதிர்த்தனர். அபூதாலிப் அம்மார்க்கத்தை ஏற்கவில்லையெனினும், தம்பி மகன் நலன்காக்கப் பேரரணாய் இருந்து வந்தார். அவரை, முகம்மதுவிடமிருந்து பிரிக்க வேண்டுமென்பதற்காக முகம்மது வின் எதிரிகள் இவ்வாறு பேசினர். "அபூதாலிபே! புதிய நெறி கண்டு மிகப்பெரிய நிலையிலே இருப்பதாய் முகம்மது நினைக்கிறார்; அது ஆகாத எண்ணம்; நிலை தவறி உருளப்

போகிறார்; ஆகாதாரோ அவர் தலையை எற்றி இன்னுஞ் வேகமாய்க் கீழே உருட்டப் போகின்றனர். அவரைத் தாங்குவோம் என நினைக்கும் அபூதாலிபே! அவர் சரிவை நோக்கி உருளும் வேகத்தில் உம்மையும் சேர்த்து உருட்டிக் கீழே தள்ளி அழித்து விடுவார். ஆதலின் அவரை உம்மிடமிருந்து நீக்கி விடுங்கள்" எனக் கூறினர். உவமை வாயிலாக, ஒரு பெரிய நீதி உரையை, எதிரிகள் வாயிலிருந்து வரச் செய்திருக்கிறார் றஹீம்.

முகம்மது நபி குன்றென நிமிர்ந்து நின்று வரும்போதில் எதிர்நின்று அழிய இருப்பவர்கள் இவர்களே என்ற எதிர்காலம் இவர்கட்கு எங்கே தெரியப் போகிறது?

பெருமானார் மகள் பாத்திமாவைப் பெருஞ்செல்வத்தை மஹராகத்[1] தந்து மணந்திட ஒருவர் கேட்டபோது, பெருமானார், "செல்வம் பெரிதெனத் தருக்கி நிற்பவரிடமிருந்து அச்செல்வம் ஒரு நாள் அகன்றோடிடும். எளிமையோடு செருக்கின்றி வாழ்வாரைப் பதவியும் பணமும் தேடிவரும். தூதர், தம் மகளைப் பணத்திற்கு விற்றிடார்" என்றார்.

தம்மையே பெரிதாய் எண்ணித்
  தருக்கியே நடப்போர் கண்டே
இம்மண்ணின் பதவி எல்லாம்
  எடுத்திடும் பெரும் ஓட்டத்தை;
தம்மையே சிறிதாய் எண்ணித்
  தாழ்மையைக் கொண்டோர் கண்டு
வம்மினோ வம்மின் என்று
  பதவிவந் தணைக்கும் அன்றோ? (பா. 1210)

இன்று இப்படி இல்லையே என்று எண்ணலாம்; நபி வாக்கு பொய்க்காது; காலம் மாறியே தீரும்!

அரிய அடைமொழிகள்

கதை மாந்தர்களுடைய செயல்களை அறிவதற்கு முன்னரே, கவிஞர் தந்திருக்கும் அடைமொழிகளைக் கொண்டே, அவர்களுடைய பண்பு நலன்களை அறிந்து கொள்ள முடிகிறது. நூலில் கூறப்படும் செய்திகள் விளங்குவதற்கும், செய்திகளின் சிறப்பு ஓதுவார் மனத்தில் பதிவதற்கும் ஏற்ற வகையில் அடைமொழிகள் தரப்பட்டுள்ளன.

---

1. மஹர் - மணமகன் தான் மணம் செய்துகொள்ளும் மணமகளுக்குக் கொடுக்கும் திருமணச் சீர்வரிசை ஆகும். மஹர் தொகையின் குறைந்த அளவு பத்து நாணயங்கள். அதற்குமேல் மணமகன் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

மிக்குயர் பண்பெலாம் மிகுந்து மேவியே
தக்கதோர் இல்லமாய்த் தங்கும் மேலோன் (288)

என வரக்காவும்,

நச்சி நயனத்துள் நாதரை நயந்துவை நங்கை (297)

எனக் கதீஜாவும்,

தங்கம்நேர் குணத்தைத் தாங்கும் தகைமிகு அபூதாலிப் (475)

என அபூதாலிபும்,

வயதின் மூத்தோன்; அதற்கேற்ப
வளமார் அறிவும் மிகவாய்த்தோன் (513)

என வலீதும்,

கல்லும் கரடும் காடும் காவும் காரியுமிழ்
பொல்லான் (585)

என இப்னு[1] கலஃப்பும்,

நஞ்சினால் அமைந்த நெஞ்சன்;
நரகத்து நெருப்பும் அஞ்சும் வஞ்சன் (1164)

என அபூஜகிலும் கூறப்பட்டுள்ளனர். அடைமொழிகளே அவரவரின் குணங்களை விளக்கிவிடுகின்றன.

பாடலின் இடையிடையே சிறுசிறு தொடர்கள் பொருளாழமும் சுவையும் கொண்டவையாய் அமைந்துள்ளன. இவற்றைப் படிக்கும்போது இத்தகைய தொடர்களை எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் எவர்க்கும் தோன்றும்.

(அ) சுரும்பு காகிதப் பூவை நெருங்காது. (77)

(ஆ) விதையோம், உவர்மண் விதை. (74)

(இ) முகம்மது செம்மணி; அவர்முன்யான் செங்கல். (109)

(ஈ) விரித்திடு குடையைக் கண்டு,
நெறித்திடு காளை ஆனார். (206)

(உ) கன்னலம் மொழிக்கு மாறாய்க்
கந்தக மொழியைப் பெய்வார். (422)

(ஊ) மின்னொளிர் வைரம் என்று
மென்று (அ)தை விழுங்கல் நன்றோ? (463)

(எ) எண்ணச் சிலந்திகள் கவலைகள்
இழைவலை பின்னின. (609)

---

1. 'இப்னு' என்பது இன்னார் மகன் எனப் பொருள் படுவது. ஆங்கிலத்தில் 'son of' என்று சொல்வதையொத்தது. 'இப்னு கலஃப்' என்பது 'கலஃப் மகன் இப்னு' எனப் பொருள்படும்.

(ஏ) அங்கமே அமுதாய் மாறி
ஆனந்த நடம்புரிந்தான். (927)

(ஐ) பெருமானார் நடந்து சென்றபோது அவர் முதுகில் கற்களை வீசினர்; அதனால் முதுகில் காயங்கள் உண்டாயின; இதனை,

அல்லலை மிகப்பொழிந்தே
அம்மியும் பொளிந்தார் அம்மா!

என்பார்.

அம்மி பொளிந்தார் என்பதிலே நயம் மிளிர்கிறது. அம்மி மீது உளியை வைத்துத் தட்டும்போது சிறுசிறு குழிகள் நெருக்கமாய் உண்டாகும். இஃதை 'அம்மி பொளிதல்' என்பர். பெருமான் முதுகு அம்மி; கற்கள்பட்டு உண்டான புண்கள் அம்மி பொளிதல் ஆயிற்று.

மொழிப்பற்று

அப்துற்-றஹீம் மொழிப்பற்று மிக்கவர். காவியத் தலைவர் அரபு நாட்டினர்; அரபு மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர். அவருக்கு இறங்கிய இறையுரையும் அரபு மொழியே! எனவே, காவியத்தில் அரபு மொழியின் இனிமையைச் சுவைபடக் கூறுகிறார். முகம்மதுவை ஹலிமா[1] பாலூட்டி வளர்க்க எடுத்துச் சென்று, திரும்பத் தாயிடம் கொண்டுவருகிறார். குழந்தை குழலினும் யாழினும் இனிய அமுத மொழி அரபுமொழி பேசுகிறது. அதைக் கேட்ட தாய்க்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அம்மகிழ்ச்சியை முற்றிலுமாய் எடுத்துச் சொல்லத் தாய்க்குச் சொற்கள் கிடைக்கவில்லை.

அதிவித அழகார் தாய்மொழி தூய
அரபியில் தம்மகன் பேசும்
புதினமும் கண்டு, இறைக்குமோர் நன்றி
புகன்றிடத், தாய்மொழி அற்றார் (பா. 89)

இளம்பிள்ளை தாய்மொழி பேசுகிறது. அது பேசுகிற அழகைக் கண்டு, மகிழ்ச்சியை எடுத்துச் சொல்லத் தாய்க்கு மொழி (சொல்) இல்லை. தாய்மொழி எனும் சொல்லைக் கவிஞர் ஆண்டுள்ள விதம் சொக்க வைக்கிறது.

முகம்மதுவை அழைத்துவர, அபூதாலிப் ஆள் அனுப்பினார் எனச் சொல்லவரும் இடத்தில் கவிஞர்,

---

1. ஹலிமா - முகம்மதுவுக்குப் பாலூட்டி வளர்த்த செவிலித்தாய்.

கொஞ்சிடும் அரபியின் செஞ்சொலின் செல்வரைக்
குரிசிலை அழைத்திட ஆள்விடுத்தார் (பா. 495)

எனப் பாடுகிறார். முகம்மது கொஞ்சும் அரபிச் செஞ்சொல்லர்.

வழியில் சென்றவர்கள் அமர்ந்து, அரபு மொழியினில் பேசியிருந்தனர் எனப் பிறிதோரிடத்தில் கவிஞர் நவில்கிறார்.

வழியினில் அவர்கள் ஓரிடம் தங்கி
வயிற்றினுக்(கு) உணவினை வழங்கி
அழகியஅரபி மொழியினில் பேசி
அமைதியோடு அமர்ந்திடும் அமயம் (பா. 1645)

தேன் இளைக்கும் அரபி (764), அழகு அரபி (808), தீம் அரபி (809) என்றும் பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

காவியம் அரபு நாட்டதாயினும் அதனை எழுதியிருப்பவர் தமிழ்நாட்டுக் கவிஞர், அப்துற்-றஹீம். சமயத்தால் இசுலாமியரா யினும் நாட்டால் மொழியால் தமிழர். 'இனிமைத் தமிழ்மொழி எமது; எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல்லமுது' எனத் தமிழினிமையில் திளைத்தவர். அரபியர்களைப்பற்றியே பேசும் காவியத்துள், தமிழைத் தக்கதோர் இடத்தில் இழைத்துக் காட்டுகிறார்.

நபிகள் நாயகம், இசுலாத்தில் சேருமாறு ஈரான் நாட்டு மன்னருக்கு அழைப்பு மடல் அனுப்பினார். அவன் அதைக் கிழித்தெறிந்ததோடு தன்கீழிருந்த யமன் நாட்டு ஆளுநருக்கு, முகம்மதுவை உடனே கைது செய்து அனுப்புமாறும் ஆணை யிட்டான். யமன் ஆளுநர் வீரர் இருவரை முகம்மதுவிடம் அனுப்பினார். நாயகமவர்கள், "ஈரான் மன்னன் குஸ்ரூவை அவன் மகன் கொன்றுவிட்டான். ஈரான் நாட்டினை நாங்கள் வெகுவிரைவில் வெற்றி கொள்வோம். உம் ஆளுநர் இசுலாமினை ஏற்றால் அவரை யமன் நாட்டு அரசராக்குவேன்" என்று தாம் சொன்னதாய்ச் சொல்லுமாறு அவர்களைத் திருப்பி அனுப்பினார். செய்தி கேட்ட யமன் ஆளுநர் வியப்பெய்தி, "அவர் எத்தகையவர்?" என வீரரைக் கேட்டார். அவர்கள், அம்மனிதர், "எளிமை இல்லம்; கயமை இல்லார்; இனிய மொழியினர்" என்றனர். வீரர்கள் கூறிய,

அம்மொழிகள் தமிழுள்ள தமிழேபோல்
ஆளுநரின் அகம்இனிக்கச் (பா. 1703)

செய்தன. பெருமானாரின் பெருமையைச் சாற்றிய சொற்கள், ஆளுநரின் காதில் தமிழாய் இனித்தது. கவிஞர் தமிழுக்குத் தந்துள்ள சிறப்பினை எண்ணி நம் உள்ளமும் தமிழாய் இனிக்கிறது.

கவிஞர், 'தமிழுள்ள தமிழ்' என்று கூறியுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று இதழ்களிலும், திரைப்படங்களிலும், பேச்சிலும், எழுத்திலும் தமிழுள்ள தமிழ் இல்லையே! தமிழ்ச் சொற்களைவிட ஆங்கில மற்றும் பிறமொழிச் சொற்கள் மிகுதியாய்க் கொண்டதாய்த்தானே இன்றைய தமிழ் இருக்கிறது. 'தமிழுள்ள தமிழ்' எனச் சொல்வதன் வாயிலாக, அப்துற்-றஹீம், தமிழ் தூய தமிழாக, உயர்தனிச் செம்மொழியாகத் திகழ வேண்டும் அப்போதுதான் அஃது இனிக்கும் என்பதை வலியுறுத்த விழைகிறார்.

தமிழுள்ள தமிழை இக்காவியம் கூறுகிறது. பண்டைய இசுலாமியக் காப்பியமான, 'கனகாபிஷேக மாலை'யில் அதன் ஆசிரியர் கனகவிராயர், 'தமிழிலாத் தமிழை'ச் சொல்கிறார். உமறு கத்தாப் இறந்ததும், மக்கள் அரசிலாக் குடிகளாகி வருந்தியிருந் தனர் என்பதைப் புலவர்,

ஆயிலாக் காலி போலும், அறிவிலாப் புலமை போலும்,
தாயிலாக் குழவி போலும், தமிழிலாத் தமிழே போலும்,
வேயிலாத் திகிரி போலும், விதுவிலா இரவே போலும்,
ஏயவோர் அரசும் இல்லாது, இடர்ப்படும் குடிகள் ஆனார்

எனப் பாடுகிறார். அரசரில்லாததால் மக்கள் பாதுகாப்பும் பெருமையும் அரவணைப்பும் இன்பமும் பற்றுக்கோடும் மகிழ்ச்சியுமில்லாமல் வருந்தியிருந்தனர். இன்பம் இலாத மக்கள், 'தமிழிலாத் தமிழை' ஒத்திருந்தனர்.

இவ்விரு கவிஞர்களின் பாடல்களால் தூண்டப்பெற்றுத் 'தமிழில்லாத் தமிழ்' நீக்கவும் 'தமிழுள்ள தமிழை'க் கொணரவும் உறுதி பூணுவோம்; சூளுரைப்போம்!

நிகழ்காலச் செய்திகள்

• கவிஞர் தாம் எழுதும் காவியத்தில் நிகழ்காலச் செய்தி களை இணைப்பதுண்டு. சில நூற்றாண்டுகட்குப் பின்னர், அக்காவியம் எப்பொழுது எழுதப்பட்டது என்ற விவரத்தை ஏதோ ஒரு காரணத்தால் அறிய முடியாத நிலை ஏற்பட்டால், இந்நிகழ்ச்சிகளைக்கொண்டு காவியம் எழுந்த காலத்தைச் சற்றொப்பத் தீர்மானிக்க முடியும்.

மாந்தர் இனம் நிலவிலே கால் பதித்துவிட்டது. பிற கோள்களை ஏவுகணைமூலம் செலுத்தப்படும் விண்கலங்கள் ஆய்வு செய்து வருகின்றன. நிலாவில் மனிதன் குடியேறி வாழ்வதை வெகுவிரைவில் எதிர்பார்த்திருக்கிறோம். கவிஞரோ,

வையத்தில் வதுவைசெய்து வான்நிலவில்
தேன்நிலவை நுகர வைப்போம் (பா. 441)

என இப்போதே கூறிவிட்டார்.

பெருமானார்க்கு இறையுரை முதன்முறை இறங்கியதன் பின்னர்ச் சிறிது காலம் உரை ஏதும் இறங்கவில்லை. ஒருநாள் திடீரென ஜிபுறயீல் மீண்டும் தோன்றினார். அதுகண்ட நாயகத்திற்கு மூச்சே நின்று போய்ச் சற்று நேரத்தின் பின்னரே மூச்சு விட்டார். இதனைக் கூறவரும் கவிஞர், நிலாவிற்குச் செல்வோர் எடுத்துச் செல்லும் உயிர்க்காற்றுப்பை சிறிது நேரம் தொழிற்படாது - காற்றினைத் தராது பிறகு தொழிற்பட்டுக் கொடுத்ததுபோல ஆயிற்று என்பார்.

அதுகண்(டு)இறை அருள்தூதரும்
அழகார்நிலா அடைந்தார்க்(கு)
எதிராய்உயிர்க் காற்றுப்பையும்
சதிமானமும் இயற்ற,
விதியோ,மிக விளையாடிட,
உள்ளம்விதிர் விதிர்க்க,
அதன்பின்அஃ(து) உயிர்க்காற்றினை
அளித்தால்என உயிர்த்தார். (பா. 311)

நிலாவுக்கு உயிர்க்காற்றுப்பையை எடுத்துச் செல்லும் செய்தியைக் கவிஞர் இங்கே பதிவு செய்துவிடுகிறார்.

ஏதாவது ஒரு செய்தியை அரசுக்கோ அன்றி நிறுவனங் கட்கோ வலியுறுத்திக் காட்டிட மாந்தர் வரிசையாய் நின்று கைகோத்து நிற்பதை இன்று 'மனிதச் சங்கிலி' என்கிறோம். மக்காவை விட்டு முகம்மது வெளியேற இருக்கிறார் என்றறிந்ததும் அதைத் தடுக்க இரவில் அவர் வீட்டினைச் சுற்றிலும் மனிதச் சங்கிலி அமைத்து நின்றார்களாம்!

தொடுத்தனரே மனிதர்களால் சங்கிலியைப்
புனிதர்தம் மனையைச் சுற்றி. (பா. 867)

இடியப்பம் இக்காலத்தில் நமது உணவு வகைகளுள் ஒன்று. இன்றைய இடியப்பத்தை அன்றைய மக்காவில் காட்டுகிறார், கவிஞர். வலீதின் தாடி இடியப்பம் போல இருந்ததாம்!

வலீதும் இடியப்ப தாடி நெருடி (பா. 519)

உயரிய உவமைகள்

இக்காவியத்தில் நூற்றுக்கணக்கில் உவமைகள் இடம் பெற்றுள்ளன. அரிய உவமைகளைக் கையாளுவதில் கவிஞர் சிறந்திருக்கிறார்.

(அ) முகம்மது செவிலிதரும் பாலருந்தி
தருமம்செய் குடி,தழைப் பதுபோல் (பா. 86)

நோய் நொடியின்றி நொடிக்கு நொடி வளர்ந்தார். உவமை இங்கே 'தருமம் செய்ய வேண்டிய' இன்றியமையாமையையும் உணர்த்திவிடுகிறது.

(ஆ) வாளியும் கிணற்றின் கீழே
சென்றுமேல் வருதல் போன்று

போர்க்களத்தில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்தன.

(இ) நெருஞ்சி மலரின் நடுவண்,ஓர்
குறிஞ்சி நறும்பூ (பா. 533)

பூப்பது போல, பல உருவங்களைத் தொழுது பாழ்பட்டுக் கிடந்த இருள் நெஞ்சினராய குறைஷியரின் நடுவிலே, 'ஒருவனே இறைவன்' என்றிட்ட அருள்நெஞ்சினராய் முகம்மது தோன்றினார்.

(ஈ) கொடியவன் உக்பா, அண்ணலார் தொழுது கொண்டிருக்கையில் அவர் மீது ஒட்டை மலத்தைக் கொட்டினான். செய்தியறிந்த அவர் மகள் பாத்திமா ஓடோடி வந்து, அவரைச் சுற்றிச் சுற்றி அவர் உடலைக் கழுவினார். பாத்திமா தன் தந்தையைச் சுற்றிச்சுற்றி வந்தது பூமி முதலாய கோள்கள் சூரியனைச் சுற்றி வருவதுபோல இருந்ததாம்.

பூதலம்முதல் கிரகராசிகள்
புகழ்ப்பரிதியைச் சுழல்தல்போல்
தாதைபொன்னுடல் சுழன்று,சுற்றிளம்
தளிர்க்கரத்தினால் கழுவினார். (பா. 552)

அறிவியல் கருத்தமைந்த அழகிய உவமை இது. சூரியன் நகராக் கோள்; மற்றக் கோள்களே அதனைச் சுற்றிவரும், முகம்மது நிலைத்து நிற்பவர் எனும் கருத்தினையும் இவ்வுவமை தோற்றுவிக்கிறது.

(உ) செவிலித்தாய் ஹலிமா, குழந்தையாகிய முகம்மதுவை தாயிடம் சேர்க்க அழைத்து வந்தபோது மக்கா[1] கூட்ட நெரிசலில் குழந்தை தவறிவிட்டது. பாட்டனார் அப்துல் முத்தலீப் பதறிப்போய்ப் பல இடங்களுக்கும் ஆள்களை அனுப்பித் தேடி, கடைசியாய் ஒரு மரத்தினடியில் குழந்தையைக் கண்டார். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது?

முத்துக் குளிப்பவர்களிடம் சிப்பிகளை வாங்கிய ஒருவன். ஒவ்வொரு சிப்பியாய் அறுத்தான். ஒன்றிலும் முத்தில்லை. மனம் மிக வருந்தி கடைசியாய் உள்ளது இது ஒன்றுதான்; இதையும்

1. மக்கா - முகம்மது பிறந்த இடம்.

அறுத்துப் பார்ப்போம் என மனச்சோர்வுடன் அறுத்தபோது அதனுள் ஆணி முத்தினைக் கண்டால் எவ்வளவு மகிழ்ச்சியை அடைந்திருப்பானோ, அவ்வளவு மகிழ்ச்சி அப்துல் முத்தலீபுக்கு உண்டாயிற்றாம்.

முத்துடைச் சிலாயச் சந்தை, செல்வர்
  முத்தினைக் குளிப்பவர் கொணர்ந்த
அத்தனைச் சிப்பி அனைத்தையும் வாங்கி,
  அறுக்க ஓர்முத்தும் பெறாமல்,
மெத்தவும் சடைவாய் இறுதியாய் ஒன்றை
  வாங்கியே, வெறுப்புடன் அறுக்க,
கத்தின்[1] அருளால் ஆணிமுத்(து) அதனில்
  கண்டவர் போல்,அகம் களித்தார். (பா. 96)

(ஊ) சிறுபானையில் அளவாய்ச் சுண்ணாம்பு தடவி அதைப் பனம்பாளையில் தொங்கவிட்டால் பதநீர் கிடைக்கும். பானையில் சுண்ணாம்பு தடவாது விட்டுவிட்டால் அது பனங்கள்ளாகிவிடும். பட்டறிவும் பகுத்தறிவும் இன்றிச் செய்யும் செயல் பதநீர், மது ஆனதுபோல ஆகிவிடும்.

மட்டோடு சுன்னத்தைத் தடவ,மறந்
  திடில்,பதநீர் மதுஆ தல்போல்,
பட்டறிவும் பகுத்தறிவும் இழந்து,தாம்
  பைத்தியமாய் ஆனது ஓர்ந்தார். (பா. 666)

(எ) கணவன்மீது சினங்கொண்டுள்ள மங்கை அவனை அடிக்க முடியாது; ஏதாவது ஒருவகையில் சினத்தை வெளிப் படுத்த வேண்டும். அருகிலே ஒரு தவறுமே செய்யாது நிற்கும் குழந்தையை அடித்துத் தள்ளுவாள். அபூசுப்யான், நபிகள் நாயகத்தை அழிக்க, மதீனா[2] யூதர்களின் உதவியை நாடினார்; அவர்கள் மறுத்துவிட்டனர். அவர்கள்மேல் தன் ஆத்திரத்தைக் காட்ட முடியாத அவன், கணவன் மேல் உள்ள சினத்தைக் குழந்தைமீது காட்டும் மனைவியைப்போல, அங்கிருந்த ஏழைகளின் குடிசைகளைக் கொளுத்திவிட்டு வந்தான்.

அவர்களுமே கைவிரிக்க அதுகண்டு
  சினமுற்ற அபூசுப் யானும்
புவனத்தில் கைபிடித்த கொழுநர்மேல்
  சினமுற்ற பூங்கோ தைதன்

---

1. கத்து - இறைவன்.
2. மதீனா - முகம்மது மக்காவிலிருந்து பெயர்ந்துவந்து குடியேறிய இடம்.

தவறேதும் செய்யாத்தன் குழந்தைகள்மேல்
தன்சினத்தைக் காட்டல் போன்று
பவமறியா ஏழைகளின் குடில்கொ ளுத்தி
ஒருவனுயிர் பறித்துச் சென்றார். (பா. 1249)

நயவுரைகள்

இக்காவியத்தின் கவிதைகள் நயம் கொழிப்பனவாய் உள்ளன; செய்திகளைச் சொல்வதில் எழில் கொஞ்சுகிறது. அப்துற்-றஹீம், செய்தியை விளக்குவதில் தனியழகு மிளிர்கிறது.

பாலை நிலத்தின் மேற்பரப்பு, வறியவன் ஒருவன் தரமில்லாத போர்வையைப் போர்த்தியிருப்பதுபோல் காட்சி தருகிறது. அதன் ஆழத்திலோ பொன்னை அள்ளிக் குவிக்கின்ற எண்ணெய் வளத்தினைத் தேக்கி வைத்திருக்கிறது. பஞ்சைத் தோற்றம்; ஆனால், பணத்தின் தேக்கம்.

தன்னில் பொன்னீர்த் தேக்கத்தைத்
தாங்கிநிற்கும் வெம்பாலை. (பா. 9)

'பெட்ரோலை'ப் பொன் நீர் எனச் சொல்வது மிகப் பொருத்தமானது; பொன் நிறமுள்ள நீர்; பொன்னை ஈட்டித் தருகின்ற நீர் என இருவகையிலும் பொருள் கொள்ளலாம்.

கோழி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதைப் போல, வானம் என்னும் கோழி, சூரிய முட்டையை இட்டு, அதிலிருந்து 'நாள்' என்னும் குஞ்சினை வெளிப்படுத்துகிறது.

ஞாயிறு முட்டையை வான்கோழி இட்டிட
ஞாலத்தில் நாள்குஞ்சு பொரித்ததுவே. (பா. 494)

'வான் கோழி' முட்டைக்கு ஒரு தனிப் பெருமையைத் தந்துவிடுகிறார், கவிஞர்.

முகம்மதுவை மக்கக் குறைஷியர்[1] இழிவுபடுத்த முற்பட்டனர்; ஆனால், முடியவில்லை. தொடர்கதை எழுதத் தொடங்கி அதை முடிக்கத் தெரியாமல் தவிக்கும் எழுத்தாளனைப் போல ஆயினர், மக்கக் குறைஷியர்.

தொடர்கதையினை முடிக்க அறியா
தோல்விநோக்கியே தவழ்ந்து,மா
இடரில் சிக்கிய எழுத்தர் ஒத்த (பா. 554)

ஈனர்கள் ஆயினர், அப்பாதகர்கள்.

தோழர்களிடம், போருக்குப் பொருளுதவி செய்யுமாறு நபிகள் நாயகம் வேண்டினார். அவர்கள் எல்லோரும் அள்ளிக்

1. குறைஷியர் மக்காவிலிருந்த அரேபிய வாணிகர்கள்.

கொடுத்தனர். உமறு தம் சொத்தில் பாதியினைத் தந்தார். அபூபக்கரோ தம் சொத்தனைத்தும் அள்ளிவந்து அண்ணலாரின் அடிகளில் சேர்த்தார். அப்துற்-றஹீம் இதனை,

உமருடைய சொல்செயலும் உரைநடையே என்றால்
உயர்பண்பின் அபூபக்கரின் சொல்செயலோ கவிதை (பா. 2095)

கவிதை, உரைநடை ஆகியன பற்றிய றஹீமின் எண்ணத்தை இங்கு அறிகிறோம்.

உண்மை வரலாற்றுக் காவியம்

முகம்மது இறைதூதர்; இறையுரையைச் சொல்லி, அதன்படி தாமும் நடந்து மக்களையும் நடக்கச்செய்தவர். அவருக்குப் பகைவர்கள் அவரை மாயம் செய்பவர், மந்திர தந்திரங்களைக் கொண்டு பிறரை மயங்கச்செய்பவர் என்றெல்லாம் பழி கூறி வந்தனர். இவற்றிற்கு முகம்மது முற்றிலும் மாறானவர். கிரகணம் தோன்றுவதால் தீமை ஏற்படும் எனும் நம்பிக்கையையே மூடத்தனம் என்றவர். ஆனாலும் அற்புதங்கள் செய்பவர்களே அருளாளர்கள் எனும் போக்கு இருந்ததால், அந்நோக்கினர், முகம்மதுவும் அற்புதங்களைச் செய்துள்ளார் எனும் கதைகளைப் புனைந்துரைத்தனர். அவ்வற்புதங்களையும் பெருமானாரின் வரலாற்றுடன் பிணைத்துக் கூறுவது பின்னர் வழக்கமாகிவிட்டது.

முகம்மது வணிகக் கூட்டத்துடன் ஷாம் நகர் (சிரியா) சென்றவேளை பாலைநிலத்தில் நீர் கிடைக்காமல் வருந்தியபோது ஆற்றினை வரவழைத்தது; பாதைக்குக் குறுக்கே எவரையும் தாண்டவிடாது கிடந்த பெரிய பாம்பினை ஒரு தூசியினால் கொன்றது; தம்மைப் பின்பற்றுமாறு சொல்லி, கடக்க முடியாத ஆற்றின் குறுக்கே கூட்டத்தோடு நடந்து சென்றது; வழியில் எல்லோரையும் அச்சுறுத்திய புலி ஒன்று முகம்மதுவிடம் பேசியதும், முகம்மது அதனைத் தடவிக் கொடுத்து அங்கிருந்தும் அகன்று காட்டுக்குள் செல்லுமாறு கூறியது; அதேபோல வழியிற் கிடந்து மக்களை மறித்துவந்த பாம்பு முகம்மதுவுக்கு வணக்கம் கூறிப் பேச அதனை அவர் காட்டுக்குள் சென்றுவிடுமாறு கூறியது; ஷாம் நகரில் முகம்மதுவைக் கொல்லக் கல்லைத் தூக்கியவன் கையைக் கல் அழுத்த, அவன் கை முரிய, முரிந்த அக்கையைப் பொருத்தியது; கள்வர் கூட்டம் வணிகர்களை நெருங்கி வந்தபோது இருவர்க்குமிடையே கடக்க முடியாத ஒரு பேராற்றினை ஓட வைத்தது; ஹபீபு அரசன் சொன்னதற்காய் அமாவாசை இரவில் முழுமதியைத் தோற்றுவித்து அது வானத்திலிருந்து இறங்கி கஃபா மீது ஒளிவீசச் செய்தது; அவ்வரசன் மகளின் சதைக்கட்டியை

அழகிய பெண்ணுருவாய் உயிர்ப்பித்தது; வேடனிடம் சிக்கிய மானுக்காக அவனிடம் தாம் பிணை நின்று மானை அனுப்ப, அது சென்று குட்டிக்குப் பால் கொடுத்து, அக்குட்டியுடன் திரும்ப வேடனிடம் வர, மானைப் பிடிக்க வந்தவன் ஈமானோடு[1] வீட்டுக்குத் திரும்பியது; காட்டறபி கேட்டவாறு எதிரே நின்ற ஈத்த மரம் பூவும் குலையும் சிதறாமல் நகர்ந்து தம்மிடம் வருமாறு செய்தது; 'புத்துக்கான்' எனும் சிலையைப் பேசுமாறு செய்தது; மலைகளுக்கு அரசனாகிய வானவரிடம் பேசியது; ஒருபடி சோற்றையும், ஒரு சிறிய கலத்திலிருந்த பாலையும் கொண்டு பெரிய கூட்டத்திற்கே விருந்து படைத்தது என்பனவற்றையும் இன்னும் இதுபோன்ற சிலவற்றையும் முகம்மது செய்து காட்டியதாய் உமறுப் புலவர் சீறாப் புராணத்தில் பாடியுள்ளார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு படலமாய்ப் பாடப்பட்டுள்ளது.

இவையனைத்தையும் அப்துற்-றஹீம் தம் காவியத்தில் விட்டுவிட்டார். வரலாற்று அடிப்படையில் அமைந்தவற்றை மட்டுமே காவியமாக்கியுள்ளார். பெருமானாரின் புகழை மகத்துவங்களுக்குள் அடக்கிவிடக்கூடாது என்பது கவிஞரின் உறுதியான எண்ணமாய் இருந்திருக்கிறது.

காவியச்சுவை

அப்துற்-றஹீம் காவியச் சுவைகள் அனைத்தும் அணிநயங்களுடன் நிரம்ப இதனை இயற்றியுள்ளார். கதீஜா மறைவின்போது பாடுகின்ற பாடலில் அவலச்சுவையுடன், அப்பெருமாட்டி குடும்பத்தை நடத்திய பெருமிதச் சுவையும் புலப்படுகிறது.

அண்ணல் மண்ணில் நடக்கும் காலை
 அவர்தம் காலாய் அமைந்தார்;
அண்ணல் விண்ணில் பறக்கும் வேளை
 அவர்தம் சிறகாய்ச் சமைந்தார்;
அண்ணல் நீரில் நீந்தும் நேரம்
 அவர்தம் கரமாய் இணைந்தார்
அண்ணல் தம்மைத் தரணி விட்டே
 அந்தோ! அவனி மறைந்தார். (பா. 729)

மழைத்துளியே முத்தாகும் என்பதை அறியும் சிப்பி, அதனை உவப்புடன் பற்றிக் கொள்கிறது. சிப்பியும் நத்தையும் தோற்றத்தில் ஒன்றாயினும் சிப்பியைப் போல முத்தினை விளைவிக்கும் அறிவு நத்தைக்கு இல்லையே!

1. ஈமான் நம்பிக்கை. இசுலாத்தின் அடிப்படைக் கொள்கைகளை நம்பி ஏற்றல்.

மழைத்துளியே முத்துஆகும் என்பதுஉணர்
சிப்பி,அதை மகிழ்வாய்ப் பற்றி
விழுங்கும்;அன்றிப் புல்லறிவின் சிறுநத்தை
விளங்கி,அதை விழையுங் கொல்லோ?

எனும் வினாவில் எள்ளல் சுவை இழைந்தோடுவதை உணர முடிகிறது.

ஒப்பீடு

மன்மதன் சீதையின் உருவத்தை வரைய விரும்பி, அமுதத்தில் எழுதுகோலைத் தோய்த்துக் கொண்டு, அவள் உறுப்புகளைச் சித்திரிக்கும் விதம் அறியாமல், அவளுடைய அழகை முழுமையாய் எழுத முடியாமல் திகைப்பானாம். இதனை,

ஆதரித்து, அமுதில் கோல் தோய்த்து, 'அவயவம் அமைக்கும்
தன்மை யாது?' எனத் திகைக்கும் அல்லால், மதனற்கும் எழுத
ஒன்னாச் சீதை

என்பார் கம்பர்.

நபிகள் நாயகம் எத்தகைய அழகுடையவர் என்பதை இக்காவிய ஆசிரியர் கூறுகிறார்.

ஓவியத்தின் புலவனுடைத் தூரிகையும் வரையாது,
ஒடிந்துஒடிந்து தோல்வியினைத் தழுவிடும் பேரழகர். (பா. 147)

ஓவியன் பலமுறை எழுத எழுத அவனுடைய தூரிகை ஒடிந்ததே தவிர, முகம்மதுவின் அழகை வரைய முடியவில்லையாம். அவருடைய அழகு இத்தகையது என எழுதிக்காட்ட முடியாத பேரழகினர், பெருமானார்.

அருணகிரிநாதர், கந்தரலங்காரத்தில்,

சேலார் வயல்,பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்திலனே அந்த நான்முகனே!

எனப்பாடுகிறார். கெண்டை மீன்கள் நிறைந்த வயல்களும், சோலைகளும் நிறைந்துள்ள திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளை, அவனுடைய திருக்கோயிலில் போய், கண்குளிரக் கண்டு வணங்க, பிரமன் எனக்கு நாலாயிரம் கண்களைப் படைக்கவில்லையே! என்பது இதன் பொருள்.

முகம்மதுவின் அழகை அப்துற்-றஹீம் பாடுகிறார் :

அன்னவரின் வியன்அழகை முழுஅளவில் அருந்த
அகல்வானில் மின்னிஒளிர் விண்மீன்கள் போல
என்முகத்தில் இமையாக்கண் இருந்திடினும் பற்றா. (பா. 156)

முகம்மதுவின் முழு அழகைக் காண விண்மீன்கள் போல அத்துணைக் கண்கள் இருந்தாலும் போதாவாம்!

முருகன் அழகைக் காண அருணகிரிநாதர் நாலாயிரம் கண்கள் வேண்டுமென்றார்; முகம்மதுவின் அழகைக் காண விண்மீன்கள் எண்ணிக்கையில் கண்கள் இருந்தாலும் - அதுவும் அக்கண்கள் இமையாக் கண்களாய் இருந்தாலும் போதா என்கிறார் அப்துற்-றஹீம்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

என்கிறது திருக்குறள். இக்குறளின் அடிப்படையில், இக்காவியம்

அஞ்சுதற்கு அஞ்சுதல் அறிவு,என்ற போதினும்
அஞ்சாதற்கு அஞ்சுவோன், ஆண்அலனே! (பா. 493)

குறள் சொன்னபடி அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடைமையே என்றதோடு நில்லாமல் ஒருபடி மேலே போய் அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுபவன் ஆண் மகனே அல்லன் என்றும் கூறுகிறது இப்பாடல்.

கோவலனும் கண்ணகியும் நிலாமுற்றத்தே அமர்ந்திருந்தனர். அக்காட்சி,

முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
கதிர்ஒருங் கிருந்த காட்சி போல

இருந்தது என்பார் இளங்கோவடிகள். கோவலனும் கண்ணகியும், உலகம் முழுவதையும் ஒளி செய்யும் ஞாயிறும் நிலவும் ஒரே இடத்தில் இருந்தாற்போலச் சேர்ந்திருந்தனர்.

ஹிரா மலையில் கதீஜாவும், அலியும், அண்ணலும் ஒன்றித் தொழுகை செய்து கொண்டிருந்தனர். இக்காட்சி நிலவு, வெள்ளி, சூரியன் ஒரே இடத்தில் ஒன்றாய் இருந்ததுபோல் இருந்தது என்கிறது, இந் 'நபிகள் நாயகக் காவியம்'.

துய்யவான் வெளியில் ஒன்றாய்
மதி,வெள்ளி கதிர்,தோன் றல்போல்
தையலும் அலியும் அண்ணல்
தனித்தொன்றித் தொழுதார் குன்றில். (பா. 324)

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பசு, அந்தணர், பெண்டிர், பிணியுடையோர், இறந்தோர்க்குக் கிரியைகள் செய்ய வேண்டி இருப்போர், பிள்ளைகளைப் பெறாத பெண்கள் ஆகியோர் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுங்கள் என அறிவித்ததன் பின்னரே ஓர் இடத்தின் மீது படையெடுத்துச் செல்வான் எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது.

இதுபோல முகம்மது நபி அவர்களும் போர் அறங்கள் பற்றிக் கூறுகிறார்.

படைநடாத்திச் செல்லுங் காலை,
அருங்கனிகள் சொரிசோலை அழித்தல் சாலா;

நிதமுமே மடம்வாழும் துறவிகட்கு
நீர்,யாதும் தொந்தரவு நிகழ்த்தல் கூடா!

மாதர்தமை, மாதாவின் மார்பு கத்தில்
மகிழ்வுடனே அமுதருந்தும் மதலை தம்மை
யாதுமொரு காரணத்தைக் கொண்டும் நீவிர்
எக்காலும் கொன்றிடுதல் சாலா... (பா. 1843, 44)

எனப் போருக்குச் செல்வோரிடம் அறிவிக்கிறார்.

சங்க இலக்கியங்களிலிருந்து இற்றை இலக்கிய்ங்கள்வரை நம் கவிஞர் நிறைந்த பயிற்சியுடையவர் என்பது நன்கு புலனாகிறது.

தன்னடக்கம்

இத்துணைச் சிறப்புடன் காவியத்தை இயற்றியுள்ள அப்துற்-றஹீம், தான் இக்காவியத்தை எழுத முற்பட்டது, என்றுமே அடைய முடியாத ஒன்றை அடைந்திட வேண்டும் எனும் ஆசையாலேயாம் என மிகுந்த தன்னடக்கத்துடன் குறிப்பிடுகிறார்.

ஒருசில கோளத்திற்(கு)
உயர்ந்திடு மானிடன்
அருஷினை அடைந்திட
அவாவுறல் போன்றதே
ஒருசில நூல்களை
எழுதிய உணர்வில்யான்
அருள்நபி காப்பியம்
ஆக்கிடப் போந்ததே! (பா. 6)

'அர்ஷ்' கோளங்கள் எல்லாவற்றிற்கு மேலே மிக உயரத்தில் இருப்பது. கோளங்களின் அலுவல் அனைத்துக்கும் ஆணை இங்கிருந்தே புறப்படுவதால் இதனைக் 'கோளங்களின் அரசாங்கம்' என்பர். இறைவனின் அரியணை இஃது என்றும் இங்கிருந்துதான் இறைவன் ஆட்சி செய்கிறான் என்றும் கூறப்படுகிறது. ஒரு சில கோளங்களை எட்டிவிட்டதாலேயே மனிதன் அர்ஷினை அடைந்துவிட முடியுமா? என்றுமே முடியாது. அதுபோல ஒரு சில நூல்களைப் படைத்துள்ளதனாலேயே இக்காவியத்தை நான் எழுதத் தகுதி பெற்றவன் என்று கூறிவிட முடியுமா? முடியாது. "ஆற்றல் அற்றவன் என்றாலும் ஆசையால் இதனை எழுதலுற்றேன்" என்கிறார். கம்பனும், தான் இராமாயணத்தை

எழுத முற்படுவது, "ஒரு பூனை பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடித்து விடுவேன்' என்பதற்கு ஒப்பாகும் என்கிறானல்லவா? தன்னடக்கம் காரணமாய் அப்துற்-றஹீம் கூறியிருப்பினும் இதனைத் தன்னேரிலாத ஒருகாப்பியமாய் ஆக்கியிருக்கிறார் என்பது உண்மை.

உமறுப்புலவர் பெருமானார் வரலாற்றினை முழுமை யுடையதாய் எழுதவில்லை. பனீஅஹமது மரைக்காயர் அவர்கள் எழுதிய, 'சின்னசீறா' அதனை நிறைவு செய்துள்ளது. பின்னர்த் தோன்றிய நூல்களுள் பல வரலாற்றின் சில பகுதிகளை மட்டும் பாடியுள்ளன; வரலாற்றினை முழுமையானதாய் எழுதிய சில நூல்களும் கூடக் காவிய இலக்கணம் முற்றிலும் பொருந்தியதாய் எழுதப் பெறவில்லை. அப்துற்-றஹீம் எழுதியுள்ள, 'நபிகள் நாயகக் காவியம்' எனும் இக்காப்பியமே பெருமானாரின் முழு வரலாற்றினையும் காவிய இலக்கணம் முற்றிலும் அமைந்ததாய்த் தமிழில் எழுதப்பட்டுள்ள முதல் முழுக் காவியம் எனலாம். இக்காவியத்துக்கு விரிவான உரைநூல் ஒன்று விரைவில் வெளிவர வேண்டும் என்பது என் விழைவு.

நூல் ஆக்கம்	கவிஞர் அப்துற்—றஹீம்
வகைமை	காவியம்
வெளியீடு	யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை—17. (2005)

3

சிலப்பதிகார ஆய்வுகள் ஓர் ஒப்பாய்வு

சிலப்பதிகாரம் எனும் நெஞ்சையள்ளும் காப்பியம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. தோன்றிய காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டுவரை புலவர்களும் பொதுமக்களும் இவ்விலக்கியத்தை இராமாயணம், மகாபாரதம்போல் பெருமளவில் ஏனோ எடுத்தாளாமல் விட்டனர்.

சோழர்களின் தலைநகராய் விளங்கிய பூம்புகாரின் சிறப்பைக் கூறுதற்கெனவே பத்துப்பாட்டில் ஒன்றான 'பட்டினப்பாலை' எழுதப்பட்டுள்ளது. பட்டினம் என்றால் அது காவிரிப்பூம்பட்டினந்தான் என்று சொல்லுமளவுக்கு அந்நகர் சிறப்புப் பெற்றிருந்தது.

வேற்றுநாடுகளிலிருந்து கடல்வழியாய் வந்திறங்கிய விரைந்தோடும் குதிரைகளும்; நிலத்தின் வழியே வண்டிகளில் வந்து சேர்ந்த மிளகுப் பொதிகளும்; வடமலைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொற்கட்டிகளும்; குடகுமலையிலிருந்து வந்த சந்தனம், அகிற்கட்டைகளும்; தென்கடலில் தோன்றிய பவளங்களும்; கங்கை நதிப்புறத்துச் செல்வங்களும்; காவிரி வளத்தால் விளைந்த செல்வங்களும்; இலங்கைத் தீவிலிருந்து வந்திறங்கிய உணவுப் பொருள்களும்; கடாரத்திலிருந்து (பர்மாவிலிருந்து) கொணர்ந்த நுகர்ச்சிப் பொருள்களும்; இவையேயன்றி இன்னும் பல அரிய பண்டங்களும் நிலந்தாங்க முடியாது நெளியும்படியாய்க் காவிரிப்பூம்பட்டினத்தின் (புகார் நகரின்) கடைத்தெருவெங்கும் நிறைந்து கிடந்தன எனப் பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

> நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
> காலின் வந்த கருங்கறி மூடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்

ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.[1]

புகார் நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இருபெரும் பகுதிகளாய் இருந்தது. அவற்றுள் மருவூர்ப் பாக்கத்தின் கடற்கரையோரம் நிலாமுற்றங்களும், பண்டக சாலைகளும், மான்கண் தோற்றமுடைய சாளரங்கள் கொண்ட விண்முட்டும் மாளிகைகளும் இருந்தன. அவற்றில் செல்வ வளமிக்க யவனர்கள் வாழ்ந்தனர். செல்வந்தேடத் தம் சொந்த நாட்டை விட்டுப் புகார் நகரடைந்த பிறநாட்டவர் பலரும் ஒரே நாட்டவர்போல ஒன்றுகலந்து ஒற்றுமையுடன் வாழ்ந்த குடியிருப்புகள் கடற்கரையையொட்டி விளங்கின எனப் புகார்நகரைச் சிலப்பதிகாரம் சிறப்பிக்கிறது.

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கண் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயன்அறவு அறியா யவனர் இருக்கையும்
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்

என்பன சிலப்பதிகார அடிகள்.[2]

இவ்வளவு சிறப்புப் பொருந்திய நகரம் சிலப்பதிகாரத்தின் பின்னர் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகள் பேசப்படாமற்போய் இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிற்றான்

கல்லினால் எல்லை காட்டிக்,
காதலால் இமயம் காட்டி,
வில்லினால் வீரம் காட்டி,
வென்றபின் ஈரம் காட்டிச்,
சொல்லினால் நீதி காட்டிச்,
சோழர்கள் ஆண்டு வந்த,
தொல்புகார் நகரம், கீர்த்தி
தூங்காத நகரம் ஆகும்[3]

என்றும்,

பொன்னகரம்! புதுநகரம்! வருவாய் வந்து
பொங்குகின்ற வளநகரம்! ஒளிசி றந்து
மின்னகரம்! தொழில்கலைகள் குடிபு குந்து
மிகுநகரம்! தகுநகரம்! அங்கி ருப்போர்

1. பட்டினப்பாலை, 185-93
2. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, 7-12
3. சுரதா, தேன்மழை, பூம்புகார், பாடல் 1

'என்னகரம், என்னகரம்' எனமு ழங்கி
இறுமாப்புக் கொள்நகரம்! நகரோம்! இந்த
நன்னகரை விட்டினிமேல் நகரோம் என்றே
நன்கூன்றிக் குடிவாழும் நகரம்'

என்றும், கவிஞர்கள் பாடிப் புகழும் நிலையைப் பெற்றிருக்கிறது.

தன் தந்தை மீனவப் பெண் ஒருத்தியை மணந்துகொள் வதற்காகத் தான் திருமணமே செய்துகொள்ளப்போவதில்லை எனக் கூறித் துறவுகொண்ட பீஷ்ம சூளுரை (சபதம்) பேசப் படுமளவுக்கு, அண்ணன் மனம் துன்பப்படக்கூடாது என்பதற்காக நிமித்திகன் கூற்றினைப் பொய்யாக்கித் தான் துறவுபூண்ட இளங்கோவின் துறவு பேசப்படுவதில்லை.

இலங்கையை அழித்துச் சீதையைச் சிறைமீட்ட இராமன் புகழை இலக்கியங்கள் தொடர்ந்து கூறிவருகின்றன. ஆனால், 'இமாலயப்' போரில், கனக விசயர் தலையில் கல்லேற்றிக் கொணர்ந்து பத்தினிக்கோயிலமைத்த சேரன் செங்குட்டுவனின் வீர வரலாற்றினைச் சிலப்பதிகாரத்திற்குப் பிறகு எழுந்த இலக்கியங்கள் ஏனோ சொல்ல மறந்தன!

இவற்றிற்கு யாது காரணம்? பண்டை நாளில் அனைத்துமே ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுவந்தன. அவை காலப்போக்கில் மக்கி அழிந்துபோய்விடாமல் படியெடுத்துப் பாதுகாக்கப் பட்டிருக்க வேண்டும். சிலரே படி எழுதிவைக்கமுடியும். இராமாயணம், மகாபாரதம் முதலியவை புண்ணிய நூல்களாய்ப் போற்றப் பட்டன. இராமாயணத்தைப் படிப்போர் பக்கம் நின்று கேட்டாலும் கேட்டோர் வீடுபேறு எய்துவர்; நரகம் அவர்களை நாடாது.

....படித்தோர் தாமும் உரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்(று) என்றோர் தாமும் நரகம்அ(து) எய்தி டாரே[2]

எனும் நம்பிக்கை ஊன்றப்பட்டிருந்தது ஆதலால், அத்தகைய சுவடிகள் அழிந்துவிடாமல் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டுவந்தன.

தமிழ்த்தேசியம், தமிழின மேன்மை, கலை, பண்பாடு கூறும் சிலப்பதிகார ஏடுகள் அழிந்து, எளிதில் பெறமுடியா நிலை யிருந்ததால், அக்காப்பியம் மக்களிடையே அறிமுகமாகாமல் போய்விட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஓலைச் சுவடிகளைத் தேடியலைந்து கண்டெடுத்து இக்காப்பியம் அச்சு வடிவம் பெற்ற பின்னரே, இதன் பெருமையை மக்கள்

1. தமிழன்பன், தமிழன்பன் கவிதைகள், கண்ணகி, பாடல் 7
2. கம்பராமாயணம், வை.மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் (பதிப்பு), காப்பு முதலியன, பாடல் 15

உணரலாயினர். 19ஆம் நூற்றாண்டுவரை தமிழரின் ஒப்பற்ற இலக்கியமாகிய சங்க நூல்கள்கூட மக்கள் அறியாதவையாகவே இருந்துவந்தன.

சிலப்பதிகாரப் பதிப்புகள்

"அந்தக் காலத்தில் கல்லூரி வகுப்புகட்குத் தமிழ்ப்பாடம் வைக்கும் முறை மிகவும் வேடிக்கையானது. பெயர்மட்டும் தெரிந்த நூலிலிருந்து ஏதேனுமொரு பகுதியைப் பாடமாக வைத்துவிடுவார்கள். ஏட்டுச் சுவடிகளைத் தேடியெடுத்து உள்ளது உள்ளபடி யாரேனும் பதிப்பிப்பார்கள். அதை வைத்துக்கொண்டு தெரிந்ததோ தெரியாததோ எல்லாவற்றையும் குழப்பித் தமிழாசிரியர்கள் பாடம் சொல்வார்கள். சிலப்பதிகாரம் பழைய நூலென்பது மாத்திரம் அக்காலத்தில் தெரிந்திருந்தது.... தியாகராச செட்டியார் (மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர்) கல்லூரியில் இருந்த காலத்தில் சிலப்பதிகாரத்திலுள்ள இந்திர விழவூரெடுத்த காதை பாடமாக வந்தது. ஏட்டுச் சுவடியை வைத்துக்கொண்டு அதை அவர் பார்த்தார். ஒன்றும் விளங்கவில்லை. பிள்ளையவர்களிடம் (ஆசிரியரிடம்) சென்று இருவரும் சேர்ந்து பார்த்தார்கள்.... தெளிவாக விளங்கவில்லை. "என்ன புத்தகம் இது? இந்திர *வி*ழவூரெடுத்த காதையா? இந்திர இழவூரெடுத்த காதையா?" என்று கூறி 'இந்தச் சனியனை நான் பாடம் சொல்லப்போவதில்லை; எனக்கு உடலும் நலமாயில்லை; ஆறு மாதம் விடுப்புப் பெற்றுக்கொள்கிறேன்' என்றார். அவ்வாறே ஆறு திங்கள் கழித்தே கல்லூரிக்கு வந்தார். சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவர் அப்பாடத்தை நடத்தினார்; கற்பித்தாரென்று சொல்வதற்கில்லை"[1] என அக்காலத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கே சிலப்பதிகாரம் தெரியாமலிருந்தது என்பதை, 'என் சரித்திரம்' எனும் தம் நூலில் வரைந்துள்ளார் உ.வே. சாமிநாதையர். 1870-80களில் இருந்த நிலை இது.

சென்னை மாநிலக் கல்லூரியில் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் சில பகுதிகள் பாடமாய் வைக்கப்பட்டன. அப்போது அங்குத் தமிழாசிரியராயிருந்த ஸ்ரீநிவாசராகவாசாரியார் புகார்க் காண்டத்தின் முதல் எட்டுக் காதைகளின் மூலபாடத்தை மட்டும் கி.பி. 1872இல் அச்சிட்டு வெளியிட்டார். இதுவே சிலப்பதிகாரம் அச்சில் வந்த முதல் பதிப்பாகும். 1876இல் கானல்வரி முதலாகிய நான்கு காதைகள் பாடமாக வைக்கப்பட்டதால் அப்போது

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 519

ஸ்ரீநிவாசராகவாசாரியார் புகார்க்காண்ட மூலத்தை முழுமையாய் வெளியிட்டார். இவர் இந்நூலின் முகப்புப் பக்கத்தில் 'சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்' என்று பதிப்பித்திருந்தார்;[1] சிலப்பதிகாரத்தை இயற்றியவர் பெயரையே ஸ்ரீநிவாசராகவாசாரியார் அறிந்திருக்கவில்லை.

அடுத்து 1880இல் சோடசாவதானம் தி.க. சுப்பராயச் செட்டியார் புகார்க் காண்டத்தை அடியார்க்கு நல்லார் உரையுடன் அச்சிட்டு வெளியிட்டார். இதன் முகப்புப் பக்கத்தில், 'சேரர் குலத்துதித்த இளங்கோவடிகள் இயற்றிய பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய புகார்க் காண்டம்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. சிலப்பதிகாரப்பதிப்பு வரலாற்றில் முதன்முதலில் உரையோடு அச்சியற்றப்பெற்ற பதிப்பு இதுவேயாம். சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் என முதலில் குறிப்பிட்டிருப்பவரும் இவரே![2]

சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்க உ.வே.சா. பல இடங்கள் ஏடுகள் தேடியலைந்தார். அம்பாசமுத்திரம் அருகில் ஓர் ஊரில் அபிஷிக்தர் (சைவர்களின் குரு) ஒருவரைக்கண்டு, சிலப்பதிகார ஏடுகள் இருக்கின்றனவா என்று கேட்டார். அவரோ, 'சிறப்பதிகாரமாக' இருக்குமென்றார்; 'இல்லை சிலப்பதிகாரம்தான்' என்றார் உ.வே.சா. அபிஷிக்தரோ, 'சிறப்பதிகாரம் என்றுதான் சொல்லவேண்டும்; நீங்கள் சிறுபிள்ளை; உங்கட்குத் தெரியாது' என்றாராம்! இவ்வாறான இன்னல்கள் பலவற்றினிடையே தேடியலைந்து சிலப்பதிகாரம் முழுமையையும் அடியார்க்குநல்லார் உரை, அரும்பதவுரை ஆகியவற்றுடன் தம் குறிப்புகளையும் இணைத்து 1892இல் உ.வே.சா. வெளியிட்டார். புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று காண்டங்களுக்கும், அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகிய இரண்டு பழைய உரைகளுடன் சிலப்பதிகாரத்தை உலகம் அறியச்செய்த பெருமை உ.வே. சாமிநாதையரையே சாரும். தொடர்ந்து மறுபதிப்புகள் வெளியாகி வருகின்றன.[3]

1942இல் ந.மு. வேங்கடசாமி நாட்டாருரையைப் பாகனேரி தனவைசியர் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. சாமிநாதையர் அவர்கள் திருத்தமாய் இந்நூலைப் பதிப்பித்திருக்கின்றனராயினும்,

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 520
2. இந்நூல், பக். 9
3. 10ஆம் பதிப்பு 2001ல் வெளியாகியுள்ளது.

நூன் முழுமைக்கும் அமைந்த தெள்ளிய உரையுடையதாய் இதற்கு மற்றுமொரு பதிப்பு வேண்டப்படுவதாயிற்று. இப்பதிப்பு அக்குறையை நிறைவேற்றியிருக்கின்றது என இந்நூலின் பதிப்புரை கூறுகிறது.

1946ஆம் ஆண்டில் சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்திற்கு மட்டும் ஆர்.கே. சண்முகம் செட்டியார் உரை வெளியாயிற்று.

1957ஆம் ஆண்டு சிலப்பதிகார மூலத்தை மட்டும் மர்ரே கம்பெனி எஸ். ராஜம் வெளியிட்டார். இப்பதிப்பில் மூலபாடம் சொல் பிரிக்கப்பட்டு உரிய நிறுத்தக் குறிகளுடன் அமைக்கப் பெற்றுள்ளது.

1958ஆம் ஆண்டு வ.சுப. மாணிக்கம் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களையும் சேர்த்து 'இரட்டைக் காப்பியங்கள்' எனும் பெயரில் வெளியிட்டார்; இப்பதிப்பில் சீர்முறையும் சந்திப்பிரிப்பும் கொண்டு மூலபாடம் அமைந்துள்ளது. தொடக்கத்தில் இரண்டு காப்பியங்களின் கதைச் சுருக்கம் காதை வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது. 'சிலப்பதிகாரத் திறன்', 'மணிமேகலைத் திறன்' எனும் இரு ஆராய்ச்சிக் கட்டுரை களும் உள்ளன. காப்பியம் முழுவதிலும் உள்ள அடிகட்குத் தொடர் வரிசையில் எண்கள் தரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் 5001 அடிகளையும், மணிமேகலை 4759 அடிகளையும் கொண்டுள்ளன என்பதை இதனால் அறியமுடிகிறது.

1958இல் புலியூர்க்கேசிகனுடைய தெளிவுரை வெளிவந்தது; மூலத்திற்கு நேர்பொருளாய்ப் பொழிப்புரையாய் இஃது அமைந் திருக்கிறது. 1964இல் லிப்கோ கம்பெனி சிலப்பதிகார மூலத்தைமட்டும் வெளியிட்டது.

1969இல் பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் இயற்றிய விளக்கவுரையைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் பதிப்பித்துள்ளனர். புலவர் தேர்வுக்குப் பயிற்று விக்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகவும் விளக்கமான உரை அறிய வேண்டும் என்னும் நோக்கில் இவ்விளக்கவுரை தோன்றியுள்ளது.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை என இரு பழையவுரைகள் உள்ளன. அவற்றுள் அரும்பத வுரையே முந்தியதென்பது, இந்திரவிழவூரெடுத்த காதையில் 'ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும்' என்பதனுரையில், 'இனி.... எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்' என அடியார்க்கு நல்லார்

எழுதியிருப்பதால் அறியப்படும். அரும்பதவுரை காப்பியம் முழுமைக்கும் கிடைத்துளது; அடியார்க்குநல்லார் உரை புகார்க் காண்டத்தில் கானல்வரிக்கும் மதுரைக்காண்டத்தில் வழக்குரை காதை தொடங்கி நான்கு காதைக்கும், வஞ்சிக்காண்டம் முழு மைக்கும் கிடைக்கவில்லை; 30 காதைகளில் 18க்கு மட்டுமே உரை கிடைத்துள்ளது.

சிலப்பதிகாரக் காப்பியம் பதிப்பிக்கப்பெற்ற வரலாற்றையும், பதிப்புக்குப் பின்னர் இக்காப்பியத்தில் நடைபெற்றுள்ள ஆய்வுகள் பற்றியும் திருமதி டி. மகாலட்சுமி, 'சிலப்பதிகார ஆய்வுகள் - ஓர் ஒப்பாய்வு' என்னும் இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார்; இதுவரை நடந்துள்ள ஆய்வுகளோடு இனி இன்னும் எவ்வெவ்வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம் எனும் குறிப்புகளையும் தந்துள்ளார். திருமதி மகாலட்சுமியின் 'எம்ஃபில்' ஆய்வேடே இந்நூலாய் உருப்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரப் பெயர்க் காரணம்

சிலப்பதிகாரப் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நீதிகளையும் முக்கியப் பொருளாய்க் கொண்டு, இவற்றைச் சிலம்பு காரணமாய்த் தெரிவித்தலின் இந்நூல் சிலப்பதிகாரமெனப் பெயர்பெற்றது என்பர் உ.வே.சா. சிலப்பதிகாரம் என்னும் பெயருக்கு முதலில் விளக்கம் தந்தவர் சாமிநாதையரேயாவர்.[1]

இக்கதை சிலம்பு காரணமாக அல்லது சிலம்பால் விளைந்த கதையாதலின் சிலப்பதிகாரம் எனும் பெயர் பொருத்த முடையதாய்க் காண்கிறது என்கிறார் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர்.

கண்ணகிதேவி கற்புத் தெய்வமாய்ப் படைக்கப்பட்டிருக் கிறாள். அந்தத் தெய்வத்தின் திருவடியைக் காணத்தான் நமக்கு உரிமை உண்டு. அதனால் 'கண்ணகி காப்பியம்' என்று பெயரிட்டால் அவளது திருமேனி நினைவுக்கு வருமே என்றஞ்சி, அவர் திருவடியை அலங்கரித்த சிலம்பின் பெயரை வைத்து, திருவடி ஒன்றே நமது நெஞ்சிலும் நினைவிலும் பதியும்படிச் செய்துவிட்டார், இளங்கோ என்கிறார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.[2]

சிலம்பு காரணாகவே, இக் காப்பியம் சிலப்பதிகாரம் எனும் பெயர்பெற்றது என்பதே பலராலும் சொல்லப்பட்டுள்ளது.

1. இந்நூல், பக். 22
2. மேலது, பக். 24

சிலப்பதிகார ஆசிரியர்

காப்பிய ஆசிரியர் பற்றியும் சில சிந்தனைகள் எழுந்துள்ளன.

சிலப்பதிகாரத்தை முதன்முதலில் பதிப்பித்த ஸ்ரீநிவாச ராகவாசாரியார் இளங்கோ என்ற பெயர் தெரியாதிருந்திருக்கிறார்.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் எனத் தி.சு. சுப்பராயச் செட்டியார்தான் முதன்முதலில் 1880இல் கூறியுள்ளார்.

'இளங்கோ சேரன் செங்குட்டுவனின் தம்பி; இவர் துறவு பூண்டமையால் இளங்கோவடிகள் என்று பெயர்பெற்றார்; துறவு பூண்ட பின்னரே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்' என்கிறார் சாமிநாதையர்.

'இளங்கோவடிகள் யார்' என்ற நூலில் இரகுநாதன், "இளங்கோ, சேரன் செங்குட்டவன் தம்பியுமல்லர்; அரச குலத்த வரும் அல்லர்; துறவியுமல்லர்; நகை வாணிபத்தில் ஈடுபட்டிருந்த தனவைசியராகவே இருந்திருக்க வேண்டும்"[1] என்கிறார்.

"சிலப்பதிகாரத்தைச் செய்தவர் இளங்கோவடிகளும் அல்ல; சாத்தனாரும் அல்ல; ஏழாம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தி லிருந்த சாத்தனார் மரபினைச் சேர்ந்த ஒரு பெரும்புலவரே சிலப்பதிகாரத்தைச் செய்திருக்கவேண்டும்"[2] என்கிறார் வெ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியார்.

தக்க சான்றுகள் கொண்டு சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகளே சிலப்பதிகாரம் செய்தவர் என்பதை உறுதிப்படுத்துகிறார் பொ.வே. சோமசுந்தரனார்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒருவர் பாடியது; அவர் சாத்தனாரே என்பர் பகலவன். இதனைச் சாமி. சிதம்பரனார் தக்க சான்றுகளுடன் மறுக்கிறார்.

பலவாறான ஆய்வுகள் இருப்பினும் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் என்பதே சிலப்பதிகார ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுவிட்ட முடிவு என்பதைத் தம் முடிவாய்க் கூறுகிறார் இந்நூலாசிரியர்.[3]

---

1. இந்நூல், பக். 26-27
2. வெ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியார், சிலப்பதிகார ஆராய்ச்சி (1947), பக். 31
3. இந்நூல், பக். 29

இளங்கோவடிகள் காலம்

இளங்கோவடிகளின் காலம் பற்றிய ஆய்விலும் பல கருத்து மாறுபாடுகள் தென்படுகின்றன. சிலப்பதிகாரம் எழுந்த காலங்குறித்து முதலில் கருத்துத் தெரிவித்தவர் உ.வே.சா. ஆவர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலைநாட்டி விழா எடுத்தபோது அவ்விழாவிற் கலந்து கொண்டவர்களுள் இலங்கைக் கயவாகு மன்னனும் ஒருவன் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்சத்திலிருந்து கயவாகு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன்னர் இருந்தவன் என்பது அறியவருவதால் சிலப்பதிகாரம் அக்காலத்ததாய் (கி.பி. 2ஆம் நூற்றாண்டினதாய்) இருக்கவேண்டுமெனத் துணிகிறார், உ.வே.சா.

சுந்தானந்த பாரதியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, இரா.பி. சேதுப்பிள்ளை, வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், அ. சிதம்பரநாதன் செட்டியார், மயிலை சீனி. வேங்கடசாமி, வ.சுப. மாணிக்கம் முதலியோரும் இன்னும் பலரும் சிலப்பதிகார காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு என்ற கருத்தை ஏற்கின்றனர்.

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, சிறந்த கணியர்; இவர், சிலப்பதிகாரம் கூறும் 'ஆடித்திங்கள் அழல்சேர் குட்டம்', 'கார்த்திகைப் பரணி' எனும் குறிப்புகளைக் கொண்டு கணித நூல்வழி ஆய்வு செய்து கி.பி. 149இல் கண்ணகி கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டுமென முடிவு செய்கிறார்.

2ஆம் நூற்றாண்டு என்பதிலிருந்து மாறுபட்ட கருத்தை முதலில் கூறியவர் மு. இராகவையங்கார். இவர் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சேரன் செங்குட்டுவன் கி.பி. 5ஆம் நூற்றாண்டினன் என்கிறார். இக்கருத்தைத் தக்க சான்று காட்டி மறுத்திருக்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி.

மதுரை எரியுண்ட காலம்பற்றி வரும் சோதிடக் குறிப்புகளுக்கு கி.பி. 756 ஆகிய ஓராண்டே பொருந்திவருவதாய்க் கூறுகிறார். திவான்பகதூர் சுவாமிக்கண்ணு பிள்ளை. இவருடைய காலக்கணிப்பை அடிப்படையாய்க் கொண்டு மேலும் சில சான்றுகள்காட்டி இக்காப்பியம் எட்டாம் நூற்றாண்டினதே என்கிறார், எஸ். வையாபுரிப் பிள்ளை. வையாபுரிப்பிள்ளையின் சான்றுகளைத் தக்க காரணங்களோடு மா. இராசமாணிக்கனார் மறுக்கிறார். வெ. சுப்பிரமணிய ஆச்சாரியார் எட்டாம் நூற்றாண்டு என்பதே பொருத்தம் என்கிறார்.

மு. வரதராசனார் சிலப்பதிகாரம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டையது என்பதற்கான காரணங்களை முன்வைக்கிறார்.

எட்டாம் நூற்றாண்டில் சோழர்கள் இருந்த இடமே தெரியாது. சோழ அரசர்கள் இல்லாத காலத்தில் அவர்களையும் கதைமாந்தர்களாய்க் கொண்ட நூல் தோன்றுவது இயற்கைக்கு முரண் ஆதலின் சிலப்பதிகார காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு என்பர் செ. கோவிந்தன்.

இதுகாறும் தொகுக்கப்பட்ட 'சிலப்பதிகார காலம்' பற்றிய ஆய்வில், கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுந்தது என்பதை மறுத்துக் கூறியுள்ளவை தக்க சான்றுகளுடன் மறுக்கப்பட்டிருப்பதால் சிலப்பதிகார காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று ஏற்றுக் கொள்ளப்படுவதே பொருத்தமாயுள்ளது என இந்நூலாசிரியர் தன் ஆய்வு முடிவாய்க் கொள்கிறார்.[1]

இளங்கோவின் சமயம்

செங்குட்டுவன் தன்னைச் சைவன் எனக் கூறுவதால் அவன் தம்பியாகிய இளங்கோவும் சைவ சமயத்தவரே என்று முதலில் கூறியவர் உ.வே.சாமிநாதையர். ஆயினும், 'குணவாயிற் கோட்டம்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் அருகன்கோயில் எனப் பொருள் கொள்வதாலும், காப்பியத்தில் சைன சமயக் கருத்துகளை மிகுத்துக் கூறியிருத்தலாலும் இளங்கோவடிகளின் சமயம் சைனம் என ஐயுற இடமுண்டு என்றும் கூறுகிறார்.

'பிறவா யாக்கைப் பெரியோன்', 'உலகுபொதியுருவத்து உயர்ந்தோன்' என இளங்கோவடிகள் தன் கூற்றிலேயே சிவபெருமானை முழுமுதற் பொருளாய்ப் பாராட்டுதலால் அவர் சைவசமயத்தவரே என்பர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

முதன் முதலில் பத்தினி வணக்கத்தைத் தென்னாட்டில் தோற்றுவித்தவன் சேரன் செங்குட்டுவனே. பத்தினிக் கடவுளைப் பிரதிட்டித்தபோது இளங்கோவடிகள் உடனிருந்தமையாலும், பத்தினிக் கடவுளை வணங்கச் சென்றதாலும் இளங்கோவடிகள் செங்குட்டுவனைப்போலவே வைதிக சமயத்தினர் என மேலும் சில சான்றுகளைக் காட்டுகிறார் வி.ஆர். இராமசச்சந்திர தீட்சிதர்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளையும் இளங்கோவைச் சைவரே என்கிறார்.

---

1. இந்நூல், பக். 39-51

பலருடைய கருத்துகளையும் ஆய்ந்து இளங்கோவடிகள் சைவ சமயத்தினர் என்ற கூற்று வன்மையுடையதாகவே தோன்றுகிறது என்கிறார் தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார்.

தி.ஈ. ஸ்ரீநிவாசராகவாச்சாரியார், 'இளங்கோ சைவ, வைணவ சமயக் கொள்கைகளைச் சிறப்பாய்க் கூறியிருப்பினும் அருக சமயத்தளவு சிறந்து கூறினாரில்லை; ஆதலின் இளங்கோவடிகள் அருக சமயத்தவரென்றே கொள்ளவேண்டும்' என்கிறார்.

'பிறப்பில் வருவது பெருந்துன்பம்'; 'பிறவாமையே பேரின்பம்'. 'இப்பிறவியில் அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்கட்கு வினைப்பயனே காரணம்' என்னும் சமண சமய அடிப்படைத் தத்துவமே சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதால் இளங்கோவடிகள் சமயம் சமணம் என்பார் இரா.பி. சேதுப்பிள்ளை.

இளங்கோவடிகள் பிறப்பில் சைவராயிருந்து பின்னர்ச் சமண சமயத்தைத் தழுவியிருக்க வேண்டும். இச்சமய மாற்றம் அவர் துறவு பூண்ட பொழுதுதான் நிகழ்ந்திருக்க வேண்டுமென ஆராய்கிறார் மார்க்கபந்து சர்மா.

சமணக் கருத்துகளைச் சொல்வதற்கென்றே கவுந்தியடிகளை இளங்கோ படைத்துள்ளார்; ஆதலின், அவர் சமயம் சமணம் என விளக்குகிறார் ம.ரா.போ. குருசாமி.

இளங்கோவடிகளின் சமயம் சமணமே எனத் தம்முடைய, 'இளங்கோவடிகளின் சமயம் யாது?' எனும் நூலில் ஜீவபந்து ஸ்ரீபால் வலியுறுத்தியிருக்கிறார்.

இளங்கோவடிகள் தம்மை இன்ன சமயத்தினர் என்று வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்ளவில்லை. எந்த சமயத்தைப்பற்றிப் பாடினாலும் அச்சமயத்தவரினும் ஏற்றங் கொடுத்தே பாடுகிறார். அவர் எச்சமயத்தவராயினும் நடுநிலை யாளர்; சமய ஒருமைப்பாட்டாளர் என்பதை அனைவருமே ஒப்புவர். தம்மை இன்ன சமயத்தவர் என்று அறிய முடியாத அளவுக்குப் பொதுமையுணர்வோடு இளங்கோ எழுதியுள்ளார் என்பது மறுக்கமுடியாததாம்.[1]

இலக்கியக் கூறுகள்

அடுத்து, சிலப்பதிகாரத்தில் காணப்படும் இலக்கியக் கூறுகளான யாப்பு, அணி, மெய்ப்பாடு, திணை, சொல்லாட்சி,

1. இந்நூல், பக். 29-38

வருணனை, இசை, வண்ணம் - வனப்பு, நாடகக் கூறு, இலக்கிய உத்திகள் ஆகியவை ஆய்வு செய்யப்பெற்றுள்ளன. இவற்றுள் யாப்பு, அணி, மெய்ப்பாடு பற்றிய ஆய்வுள் நன்கு நடைபெற்றுள்ளன; எனினும், எல்லாவற்றிலுமே இன்னும் அதிக அளவில் ஆய்வுகள் செய்ய இடமிருக்கிறது என்பதை ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார்.

யாப்பு

சிலப்பதிகாரத்தில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா முதலிய இயற்பா வகைகளும்; கானல்வரி, ஊசல்வரி, கந்துகவரி முதலிய இசைப்பா வகைகளும்; உரை, உரைத்தொடர், கட்டுரை முதலாய நாடகக் கூறுகளும் அமைந்துள்ளன. முத்தமிழுக்குரிய யாப்பு வகைகள் அமைந்த சிறப்பு காரணமாகவே சிலப்பதிகாரத்திற்கு 'இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கி வருகிறது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற பாவகைகளுள் தலைமைச் சிறப்புடையது நிலைமண்டில ஆசிரியப்பா. இக்காப்பியத்திலுள்ள முப்பது காதைகளில் பதினெட்டு காதைகள் இப்பாவுக்குரியவை. எல்லா அடிகளும் அளவொத்து நாற்சீர் கொண்டுவருவது நிலைமண்டில ஆசிரியப்பா எனவும் ஈற்றயலடி மூச்சீரான் வருவது நேரிசையாசிரியப்பா எனவும்; இடையிடை முச்சீர்வரின் இணைக்குறளாசிரியப்பா எனவும் வழங்கப்படும்.

ஆசிரியப்பாக்கள் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்னும் ஈறுகளைப் பெற்று முடியும். சங்க காலத்தில் எழுந்த நிலைமண்டில ஆசிரியப்பா அனைத்தும் 'ஏ' என்னும் இறுதிபெற்றே முடிந்துள்ளன. எட்டுத் தொகையில் ஆசிரியப்பாவால் அமைந்த நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றுள் ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் நான்கு பாடல்களும், பதிற்றுப்பத்தில் ஒரு பாடலும், அகநானூற்றில் நான்கு பாடல்களும், புறநானூற்றில் பதினைந்து பாடல்களும் ஆக இருபத்தேழு பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவாய் அமைந்துள்ளன. பத்துப்பாட்டுள் எந்தவொரு பாடலும் நிலைமண்டில யாப்பால் அமையவில்லை. சிலப்பதிகார நிலைமண்டில ஆசிரியப்பா 'என்' என்றே முடிவடைகிறது.

வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்'தென்' (அரங்கேற்று காதை)
மாமலர் நெடுங்கண் மாதவி தா'னென்' (கடலாடு காதை)

புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்'தென்' (புறஞ்சேரி. காதை)
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்'கென்' (வரந்தரு காதை)

நிலைமண்டில யாப்புக்குரிய இலக்கணத்தோடு அப்பாவுக்குரிய ஈறு இளங்கோ வடிகளால் சிறப்பாகப் பின்பற்றப் பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தைப் போன்றே சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியமும், கொங்குவேள் இயற்றிய பெருங்கதையும் 'என்' ஈறுபெற்ற நிலைமண்டில ஆசிரியப் பாக்களைக் கொண்டுள்ள சிறப்பினைப் பெற்றுள்ளன.

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டுவகையான இலக்கியங்கள் தமிழில் இருந்தன. இவை வனப்பு என்ற பொதுப்பெயரால் வழங்கப்படும் என்பது வரலாறு. நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் சிலப்பதிகாரத்தைத் 'தொன்மை' என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாய்க் காட்டுவர்.

இசைத்தமிழுக்குரிய பாவகைகள் பண்ணத்தி என வழங்கி வந்தன. இவை தொடக்க காலத்தில் ஏட்டில் எழுதா இலக்கியங்களாய் விளங்கின. இளங்கோவடிகள் பண்ணத்தியாகவரும் இசைப்பாடல்களைப் பாவினங்களால் பாடியதோடு மட்டுமன்றி ஏட்டில் எழுதா இலக்கியமாய் விளங்கிய பலவகைப் பாக்களுக்கு எழுத்துருவம் தந்து இலக்கிய வடிவம் தந்த பெருமைக்குரியவரு மாகிறார்.

சிலப்பதிகாரத்தில் *எதுகை, மோனை* முதலாய தொடை வகைகளும் அவற்றின் விகற்ப வகைகளும் இயல்பாகவே செறிந்தன்மந்து இனிய ஒலிநயம் தருவனவாயுள. எதுகைச் சிறப்பு ஈரடிகளில் மட்டுமின்றி,

மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்;
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்

என ஐந்தடிகளிலும் தொடர்ந்து பயின்றுள்ளன; ஏழு அடிகளில் கூட இச்சிறப்பு அமைந்துளது.

முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்....[1]

என வரும் ஈரடிகளில் *அடிமுரண் தொடைச்* சிறப்பை அறிகிறோம்.

1. சிலப்பதிகாரம், வஞ்சினமாலை, 2-3

சிலப்பதிகாரத்துள்ளமைந்த யாப்பு நெறிகள் சங்கவிலக்கிய யாப்பியல் நெறிகளின் தடத்தில் பயின்று, புதுவகை யாப்பு நெறிகளாய்த் தடங்களையும் தோற்றுவித்து, தம் காலத்து யாப்பு நெறிகளையும் சுட்டும் கலங்கரை விளக்கமாயும் உள்ளன.[1]

சிலப்பதிகார யாப்பு பற்றிய ஆய்வில் குறிப்பிடத்தக்கதாய், 'சிலப்பதிகார யாப்பமைதி' என ந.வீ. செயராமன் எழுதியுள்ள நூல் அமைந்துள்ளது. இவ்வகையில் இன்னும்பல ஆய்வு நூல்கள் வெளிவருதல் வேண்டும்.

அணி

அடியார்க்குநல்லார் உரையில் சிலப்பதிகாரத்தில் பயின்று வரும் அணிகள் கூறப்பட்டுள்ளன.

இல்லாத பொருளை இருப்பதாய்க்கொண்டு உவமித்தல் இல்பொருள் உவமை என வழங்கப்படும். கண்ணகியின் பேச்சு குழல், யாழ், அமிழ்து ஆகியவற்றின் இனிமையை ஒன்றாய்க் குழைத்தது போன்றிருந்ததாம்.

> குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
> மழலைக் கிளவி[2]....

இம்மூன்றின் இனிமைக் குழம்பு இல்லாத ஒன்று; ஆதலின் இஃது *இல்பொருளுவமை.*

> அன்னம் மெல்நடை நன்னீர்ப் பொய்கை
> ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்
> தாமரைச் செவ்வாய் தண்அறல் கூந்தல்
> பாண்வாய் வண்டு நோதிறம் பாட
> காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப...

அன்ன நடையையும், ஆம்பல் மணத்தையும், தாமரைச் செவ்வாயையும் அறல் கூந்தலையுமுடைய பொய்கைப் பெண், வண்டுகள் பள்ளியெழுச்சி பாட, குவளைக்கண் மலர்ந்தாள். 'அன்னம்' என்றது முதல் 'விழிப்ப' வென்னுந் துணையும் கூறிய இவை உருவகமென்னும் அலங்காரமென்றுணர்க என்கிறார், அடியார்க்குநல்லார்[3]. உவமை, உவமிக்கப்படும்பொருள் என்னும் இரண்டிற்கும் பேதமின்மை தோன்றச் சொல்லப்படுவது உருவகம்.

---

1. யாப்பு பற்றிய செய்திகள் ந.வீ. செயராமன் எழுதியுள்ள 'சிலப்பதிகாரயாப்பமைதி' என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றது.
2. சிலப்பதிகாரம், மனையறம்., 58-59
3. மேலது, அந்திமாலை., 72-76, அடியார்க்குநல்லார் உரை

ஐயுற்றதனைத் தெளிந்து துணிவது *தெரிதருதேற்றவுவமையாம்.*

மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!

கோவலன் கண்ணகியை மலையிலே தோன்றாத மணியே என்பேனோ! கடலிலே பிறவாத முத்தே என்பேனோ! யாழிலே பிறவாத இசையே என்பேனோ! எனப் புகழ்ந்து பேசுகிறான். இங்கே இளங்கோவடிகள் "மலையிடைப்பிறக்கும் மணி குழையாமையின் அதிற் பிறவா மணியே என்பேனோ! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற் பிறவாத அமுதே என்பேனோ! யாழ் கண்ணுக்கு இன்னாது ஆகலின் அதனிடைப் பிறவாத இசையே என்பேனோ! எனத் *தெரிதரு தேற்றவுவமை* அலங்காரம் புலப்படுத்தினார்; மலை, கடல் என முரணிய சொற்களால் *விரோத அலங்காரம்* புலப்படுத்தினார். 'என்கோ' எனும் சொல் மும்முறை ஒரே பொருளில் வந்திருப்பதால் *'பின்வருநிலை'* என்னும் அலங்காரம் புலப்படுத்தினார் என்க" என்பது அடியார்க்குநல்லார் உரை.[1] மூன்றடிகளிலே மூன்று அணிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார் அடியார்க்குநல்லார். (ஒருசொல் ஒரு பொருளிலேனும் அல்லது ஒரு சொல்லே பல பொருள்களிலேனும் அல்லது ஒரு பொருளுடைய வேறுவேறு சொற்களேனும் பலமுறை வந்து பயிலும்படி அமைப்பது பின்வருநிலை அணிக்குரிய இலக்கணம்.)

சிலேடை என்பது ஓர் அணி. ஒரு சொல் அல்லது சொற்றொடர் பல பொருள் தந்து, பாடும் செய்யுளின் கருத்தோடு பொருந்தும்படி கூறுவது சிலேடை.

காதற் கொழுநனைப் பிரிந்(து) அலர் எய்தா
மாதர் கொடுங்குழை மாதவி...

(*கொழுநன்* - கணவன்; *கொழுநனை* - கொழுவிய பூவரும்பு; *அலர்* மலர்ந்த பூ, பழிச்சொல்; *மாதர்* பெண், அழகு; *கோடுதல்* - வளைதல்; *குழை* - மகரக்குழை எனும் காதணி, இளந்தளிர்; *மாதவி* - மாதவி எனும் மங்கை, குருக்கத்தி எனும் கொடி)

காதலிக்கப்பட்ட தன் கணவனைப் பிரிந்து பழிச்சொல் உறாத வளைந்த மகரக்குழையணிந்த மாதவி என்னும் மங்கை

---

1. சிலப்பதிகாரம், மனையறம்., 77-79, அடியார்க்குநல்லார் உரை

என்றும்; எல்லாரும் காதலிக்கும் கொழுவிய அரும்புத்தி தன்மையை விட்டு முதிர்ந்து பூவாகாத வளைந்த தளிரையுடைய குருக்கத்திக் கொடி என்றும் இருவகையாகப் பொருள்கொள்ள இடந்தருதலின் இவ்வடிகள் சிலேடை அணியின்பாற்படும்.[1]

ஒரு பொருளிடத்து மற்றொன்றின் தன்மையை ஏற்றிக் கூறுதல் *சமாதி அணி* எனப்படும்.

குமரி வாழையின் குருத்தகம் விரித்து.

ஈனாத வாழையின் குருத்தை விரித்துக் கண்ணகி கோவலனுக்கு உணவு படைத்தாள். குமரி வாழை - ஈனாத வாழை. மகளிர்க்குரிய குமரித் தன்மை மரத்தின் மேலேற்றிக் கூறப்பட்ட தாதலின் இது *சமாதி அணி.* குமரி வாழை - இது பெயரின் வந்த 'சமாதி அலங்காரம்' என்பர், அடியார்க்கு நல்லார்.[2]

மதுரைக் கோட்டையின் மீதுள்ள கொடி காற்றில் அசைந்தாடுவது, "நீங்கள் இங்கு வாராதீர்கள்" என்று கையை அசைத்துக் கோவலன் கண்ணகியைத் தடுப்பது போன்றிருந்ததாய் இளங்கோ குறிப்பிடுகிறார்.

போர்உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட[3]

கொடி காற்றில் இயல்பாய் அசைந்து ஆடுகிறது. ஆடும் தன்மை, 'வாராதேயுங்கள்' என்றுரைப்பது போன்றிருந்ததெனக் கவிஞர் தன் குறிப்பை அதன்மேல் ஏற்றிச் சொல்வதால் இது *தற்குறிப்பேற்ற அணி.* தற்குறிப்பேற்ற அணியைக் கையாண்டுள்ள முதற்பாவலர் இளங்கோவடிகளே!

அடியார்க்கு நல்லார் உரையில் விளக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்திலுள்ள அணிகள்பற்றிய ஆய்வினை அ.ச. ஞானசம்பந்தன், ச.வே. சுப்பிரமணியன் முதலிய சிலர் மட்டுமே செய்துள்ளனர். சிலப்பதிகாரத்திலுள்ள அணிகள் அனைத்தையும் கண்டு எவ்வெவ்வணிகளில் இளங்கோ ஈடுபாடு கொண்டுள்ளார், எத்தகைய இடங்களில் அணிகளைக் கையாள் கிறார், அவர் ஆண்டுள்ள அணி வகையிற் காணப்படும் சிறப்புத் தன்மைகள் எவை? என முழு அளவிலான ஆய்வுகள் பெருமளவில் வெளிவருதல் வேண்டும்.

---

1. சிலப். இந்திர. 189-90, அடியார்க்கு நல்லார் உரை
2. மேலது, கொலைக்., 42, அடியார்க்கு நல்லார் உரை
3. மேலது, புறஞ்சேரி, 189-90

சொல்லாட்சி

சொல்லாட்சியில் இளங்கோ வல்லவராய்த் திகழ்கிறார். சொற்களில் புதைந்து கிடக்கும் உணர்ச்சி, பன்முறையும் சிந்தித்துத் தெளிய வேண்டிய கருத்துச் செறிவு, ஆளப்பட்டுள்ள இடங்களில் அதற்கீடான சொல் வேறெதையும் அமைக்க முடியாத்தன்மை கொண்ட அவருடைய சொல்லாட்சித்திறன் வியக்கத்தக்க தாயுள்ளது.

சிலப்பதிகாரத்தின் ஒன்பதாவது காதையாக உள்ள 'கனாத்திறமுரைத்த காதை'யில் தேவந்தியோடு பேசும்பேச்சே கண்ணகியின் முதற்பேச்சு. முதற் பேச்சின் முதற்சொல் 'பெறுகேன்' என்பது. தேவந்தி, 'நீஉன் கணவனைப் பெறுவாய்' என்றபோது கண்ணகி *'பெறுகேன்'*[1] எனும் சொல்லுடன் தன் பேச்சினைத் தொடங்குகிறாள். 'பெறுவேன்' என்பது அதன்பொருள். 'பெறுவேன்' என்றே கண்ணகி கூறியதாய் அடிகள் கூறியிருக்க லாமே! 'பெறுகேன்' எனச் சொல்வதன் வழி இளங்கோவடிகள் ஒரு நுண்மையான கருத்தினை உட்பொதிந்து வைக்கிறார். 'பெறுகேன்' என்பதற்குப் பெறுவேன் என்பது பொருளாயினும், அதைக் கூறும்போது 'பெறமாட்டேன்' என்ற பொருளும் புலப்படுகின்ற மயக்கத்தை உண்டாக்குகிறது. கண்ணகியிடம் கோவலன் திரும்ப வந்து சேர்ந்தான்; எனினும் அவனை அவள் அடைந்ததாய்க் கூறமுடியாது. கோவலன் திரும்ப வந்ததும் மதுரைக்குப் புறப்பட்டு விட்டனர். வழியெங்கும் கவுந்தியுடன் பயணம்; மதுரையில் மாதரி வீட்டிலும் இல்லற இன்பத்தில் அவர்கள் ஈடுபடுதற்கில்லை. சிலம்பை விற்கச் சென்றவன் கொலை செய்யப்பட்டான். எனவே, 'பெறுகேன்' என்ற அச்சொல் அவனைப் பெற்றும் பெறாதவளாயே இருப்பாள் என்பதைக் குறிப்பாய்ப் புலப்படுத்துவதாயுள்ளது. 'பெறுகேன்' எனும் சொல்லை இளங்கோ ஆண்டுள்ள நேர்த்தி இணையற்றது.

கண்ணகி, கையில் ஒற்றைச் சிலம்போடு, நீர்பெருக்கெடுத்த கண்களுடன் தலைவிரி கோலத்தோடு பாண்டியன் நெடுஞ் செழியன் முன் நிற்கிறாள்.

> நீர்வார் கண்ணை என்முன் வந்தோய்
> யாரை யோநீ மடக்கொடி யோய்...[2]

என்று வினவுகிறான். "என்னை யார் என்றா கேட்கிறாய்? சொல்கிறேன் கேள். நீதிநெறி தவறாது நாடாண்ட அரசர்கள்

---

1. சிலப்., கனாத்திறம்., 44
2. சிலப்பதிகாரம், வழக்குரை.,

வாழ்ந்த சோழமண்ணிலே பிறந்தவள் நான். பிறந்த ஊர் பூம்புகார்; மாசாத்துவான் மகனான கோவலனை மணந்தேன். ஊழ் வினையால் தாழ்வுற்று வாழ்வதற்காக உன் ஊரைத்தேடி வந்தோம். காற்சிலம்பை விற்க வந்த என் கணவனைக் கொன்று விட்டாய். என்பெயர் கண்ணகி என்றாள்.

> வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
> சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்கு
> என்கால் சிலம்புபகர்தல் வேண்டி நின்பால்
> கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
> கண்ணகி என்பதுஎன் பெயரே....[1]

இது கண்ணகியின் கூற்று.

'வாழ்தல் வேண்டி' என்ற சொற்களிலே எத்தனை உணர்ச்சி? 'வாழ்வதற்காக வந்தவர்களைச் சாகடித்து விட்டாயே, நீயும் ஒரு மன்னனா?' எனக் கேட்பதுபோலத் தோன்றுகிறது. "மன்னன் மக்களை வாழவைக்க வேண்டியவன். உன் ஆட்சியில் மகிழ்ச்சியோடு வாழமுடியும் என்று நம்பித்தானே இங்கு வந்தோம்! உன் நாட்டுக் காடுகளின் வழியேதான் வந்தோம்; அங்குக் கொடிய விலங்குகள் இருந்தன; வேங்கைகள் உலவின; அவை எங்களைக் கொல்லவில்லை. கரடிகள் இருந்தன; எங்களைக் கடித்துத் துன்புறுத்தவில்லை. பாம்புகள் இருந்தன; நஞ்சுமிழ்ந்து மாய்க்கவில்லை. ஆற்றில் முதலைகள் வாய்பிளந்து திரிந்தன; அவை எங்களை விழுங்கவில்லை"[2] அவை எங்களைக் கொன் றிருந்தால் அறிவற்ற விலங்குகள் எனச் சமாதானம் கூறலாம். வழியெல்லாம் மக்களை அழிக்கும் இயல்புடைய உன் நாட்டு விலங்குகள் எங்களை அழிக்கவில்லை. மக்களைச் சாகடிப்ப தையே வழக்கமாய்க் கொண்டுள்ள அவை எங்களை வாழவிட்டன. ஆனால், வாழவைக்க வேண்டிய நீ கொன்று விட்டாயே, பாவி! விலங்கினும் கொடியவனாய் மாறிவிட்டாயே" என்ற இத்துணைத் துடிப்பும் 'வாழ்தல் வேண்டி' என்ற சொற்களில் அடங்கிக் கிடக்கிறது.

> தூமலர் மாலையின் துணிபொருள் எல்லாம்
> கோவலற் களித்துக் கொணர்க ஈங்குஎன[3]

மாதவி வசந்தமாலையிடம் கடிதத்தைக் கொடுத்தாள். *'கொணர்க ஈங்கு'* என்னும் சொற்றொடரைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

1. சிலப்பதிகாரம், வழக்குரை., 59-63
2. மேலது, புறஞ்சேரி., 5-8
3. மேலது, வேனில்., 70-71

'முடங்கலைக் கொடுத்துக் கோவலனை இங்கு அழைத்து வா' என மாதவி சொல்வது ஒன்று. பாண்டியன் நெடுஞ்செழியன் கோப்பெருந்தேவியின் சிலம்பு,

> கன்றிய கள்வன் கையது ஆகில்
> கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்கு'

என்று கூறுவது மற்றொன்று. 'கொணர்க ஈங்கு' என மாதவி சொன்னது கோவலனை மதுரைக்கு அனுப்பியது; மன்னவன் கூறியதோ அவன் வாழ்வையே முடித்துவிட்டது. சொல்லாட்சியில் இளங்கோவுக்கு ஈடு இளங்கோவே!

வருணனை

இளங்கோவின் வருணனைகள் *தன்மைநவிற்சி*யன வாகவே இருக்கக் காண்கிறோம். தன்மைநவிற்சியிலேயே நம் உள்ளம் பிணிப்பனவாய் அவை அமைந்துள்ளன. மலையில் அவர் எழுப்பிக்காட்டியுள்ள ஒலிகள் அன்றும், இன்றும், என்றும் கேட்கக்கூடியவையே. 'மலையில் குறவர்கள் குரவைக் கூத்தாடினர்; கொடிச்சியர் பாடினர்; வேலனுக்கு வெறியாட்டயர்ந்தனர்; இவற்றால் எழுந்த ஒலிகள் ஆங்காங்கே கேட்டன. தினையைக் குற்றிய மகளிர் வள்ளைப் பாட்டுப் பாடினர். தினைப்புனத்தில் கிளி முதலிய பறவைகளை ஓட்டியவர்களுடைய ஒலியும் தேன்கூட்டை உடைத்த குறவர்களின் ஆரவாரமும் கேட்டன. பறையைப்போல அருவிகள் முழங்கின. புலியொடு போர்செய்த களிறு பிளிறியது. பரண்மீதிருந்தோர் தினைப்புனத்தை உண்ணவந்த விலங்குகளை ஒலியெழுப்பி விரட்டியடித்தனர். குழியில் விழுந்த யானையைப் பிடிக்கப் பாகர்கள் ஒலியெழுப்பினர். இவ்வொலிகளும் சேரன் படையொலியும் சேர்ந்து மலையெங்கும் ஒலி மயமாயிற்று என நெடுக, இன்னும் கூறமாட்டாரா எனும்படியாய் உள்ளவாறே கூறிச்செல்லும் பாங்கினை இளங்கோவின் பாடலடிகளில் காணமுடிகிறது.[2]

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துள் இயற்கை நல்கும் இனிய காட்சிகளைத் திறம்படப் புனைந்துள்ளார். இயற்கையை வருணனை நிலையிலும், காப்பிய நோக்கிலும், பாத்திரப் படைப்பின் வளர்ச்சிப் போக்கிலும், மனித வாழ்க்கையோடு இயைத்துக்காணும் நிலையிலும் அணுகி இளங்கோவடிகள் எழுதியுள்ளார்.[3]

1. சிலப்பதிகாரம், கொலைக்., 152-53
2. மேலது, காட்சிக்காதை., 24-32
3. இந்நூல், பக். 63

இளவேனிற் காலத்தில் வீசும் என்ற அளவில் மட்டுமே, தென்றலைச் சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். இளங்கோவடிகளோ தென்றலைப் பல்வேறு மணக்கலவைகளிலே படியச் செய்து நம் நெஞ்சு குளிரவும் தமிழ் மணக்கவும் உலவ விடுகிறார். தென்றலின் பயணத்தை முதன்முதலில் பாடியிருப்பவர் இளங்கோவடிகளே! தென்றல் கழுநீர், ஆம்பல், குவளை, இன்னுமுள்ள வயற்பூக்களின் மணத்தை உண்ணுகிறது; இவ் வயற் பூக்களருகே கரையில் மலர்ந்துள்ள மடல் விரிந்த தாழை, சண்பகம் ஆகியவற்றிலுள்ள பூந்தாதுகளை வாரி உண்கிறது.

கழுநீர் அம்பல், முழுநெறிக் குவளை,
அரும்புபொதி அவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை,
வயற்பூ வாசம் அளைஇ, அயற்பூ
மேதகு தாழை விரியல் வெண்தோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந்(து) உண்டு....[1]

வண்டுகளைப் போலத் தென்றலும் புகார்நகர .எழுநிலை மாடங்களிலுள்ள மகளிரின் கூந்தலில் கமழும் கலவை மணத்தை அளைவதற்காகச் சாளரத்தின் வழியே நுழைகிறது. வண்டு, தென்றல் ஆகிய இரண்டின் ஒன்றுபோன்ற தன்மையை இவ்வருணனையில் காண்கிறோம்.

மதுரைத் தென்றலின் பயணம் இன்னும் நீண்டதாய் உள்ளது. அத்தென்றல் அகிலின் சாந்து, கத்தூரிச் சாந்து ஆகிய மணம் கமழும் குழம்பில் குளிக்கிறது. கழுநீர், சண்பகம், குருக்கத்தி, மல்லிகை, முல்லை முதலிய மலர்கள் பரப்பப்பட்ட படுக்கைகளில் பொருந்துகிறது. அடுப்பில் தோன்றும் தாளிப்புப் புகை, அங்காடிகளில் அப்பவாணிகர் அப்பம் சுடும்போது உண்டாகும் புகை, ஆடவரும் பெண்டிரும் வீட்டு மாடங்களில் புகைக்கும் அகிற்புகை, வேள்விச் சாலைகளில் எழும் ஓமப்புகை ஆகிய பல்வேறு புகைகளில் படிகிறது. பின்னர்ப் பாண்டியனின் அரண்மனையில் தோன்றும் அளப்பரிய நறுமணக் கலவைகளில் கலக்கிறது. இத்துணை மணங்களையும் தாங்கிக்கொண்டு குளிர்ந்து அசைந்து செல்கிறது.[2]

பல நூல்களிலும் கட்டுரைகளிலும் ஆங்காங்கே அறிஞர்கள் சிலப்பதிகார இயற்கை வருணனையைப்பற்றிய கருத்துகளைக் கூறிச் சென்றுள்ளனர். எனினும் ஒப்பாய்வு மிகக் குறைவாகவே

1. சிலப்பதிகாரம், மனையறம்., 14-19
2. மேலது, புறஞ்சேரி., 115-132

உள்ளது. பிற இந்திய, உலக இலக்கியங்களில் இடம் பெறுகின்ற இயற்கை வருணனைகள், சிலப்பதிகார இயற்கை வருணனைகளுடன் ஒப்பீட்டு முறையில் ஆராயப்பட வாய்ப்புள்ளது'[1] என்கிறார், இந்நூலாசிரியர்.

நாடகக் கூறுகள்

சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம். ஆதலின் நாடகக் கலை நுணுக்கம் அனைத்தும் அதில் நன்கு தெளிவாக்கப் பட்டுள்ளன. சிலப்பதிகாரத் தொடக்கமே நாடகக் கலை நுணுக்கத்துடன் அமைந்திருக்கிறது எனலாம். நாடகத்தின் தொடக்கத்திலுள்ள 'திங்களைப் போற்றுதும்...', 'ஞாயிறு போற்றுதும்...', 'மாமழை போற்றுதும்...', 'பூம்புகார் போற்றுதும்...' என்னும் நான்கு சிந்தியல் வெண்பாக்களையும் சிலப்பதிகார நாடகத்தின் தொடக்கக் *கூட்டப்பாட்டு* (Chorus) எனலாம். நாடகத்தைத் தொடங்கும்போது நாடக உறுப்பினர்கள் அனைவரும் திரைக்குள்ளிருந்து கூட்டப்பாட்டுப் பாடுவர். சிலப்பதிகார நாடகத்தில் மேடையில், திரையில் திங்கள் ஒளி வீசும் காட்சி சித்திரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளேயிருந்து,

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்...

எனப் பாடல் எழுகிறது; பாடல் ஒலித்துக்கொண்டிருக்கும் போதே திரை மெதுவாக மேலேறுகிறது. அடுத்த திரையில் எழுஞாயிற்றின் தோற்றம் எழிலுற வரையப்பட்டுள்ளது. உள்ளேயிருந்து பாடல் முழங்குகிறது.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்.....

இப்பாடலைப் பாடிக்கொண்டிருக்கும்போதே இரண்டாவது திரையும் மேலேறுகிறது. அடுத்து மூன்றாவது திரையில் மழை பெய்யும் காட்சி மாண்புற வரையப்பட்டிருக்கிறது. உள்ளிருப்போர்,

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்.....

எனப் பாடுகின்றனர். அவர்கள் பாடப்பாடத் திரையும் மேலேறுகிறது. நான்காவது திரை. பூம்புகார் நகர வீதிகளின் தோற்றம் அதில் வரையப்பட்டிருக்கிறது. உள்ளே பாடல் எழுகிறது.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்...

கூட்டப்பாட்டு முடிவடைகிறது. மூன்று திரைகள் மேலேறியமை யால் மேடையில் அகன்ற இடம் அமைந்திருக்கிறது. நகர்த் தோற்றமுள்ள திரை பின்புலமாக இருக்க, யானைமீது அமர்ந்த

1. இந்நூல், பக். 65

மகளிர் வெளிப்போந்து 'கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம்' என முரசறைந்து தெரிவிக்கின்றனர். இவ்வாறு நாடகத்தின் முதற்காட்சி தொடங்குகிறது. இன்றும் நாடக மேடைகளில் பொதுச் செய்திகளைச் சொல்ல நேரும்போது வீதிக்காட்சி உள்ள திரை (Street Scene) பின்புலமாய் அமைவதைக் காண்கிறோம். பூம்புகார் நகர வீதித் தோற்றம் பின்புலமாய் அமைந்திருக்க, மகளிர் யானைமீதிருந்து கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் என முரசறைந்து, தெரிவிக்கும் காட்சியோடு நாடகம் தொடங்குவது மிகவும் வியக்கத்தக்கது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே இத்தகு தொடக்கக்காட்சியை அமைத்துள்ள இளங்கோவடிகளின் நாடகக்கலை அறிவு எல்லையிலாதெனலாம்.

இளங்கோ, நாடகம் முழுவதிலுமே இவ்வாறான பல நுணுக்கங்களைக் கையாண்டிருக்கக் காணலாம். நாடகத்தைப் பார்க்கும்போது இன்பியல் காட்சிகளே தொடர்ந்து வருமாயின், அவை எவ்வளவு சிறப்புடையவையாயினும் நாடகத்தைப் பார்ப்பவர்க்கு அலுப்புத் தோன்றிவிடும். அதைப்போக்க இன்ப துன்பக் காட்சிகள் அடுத்தடுத்து வரச் சமனிலைப்படுத்திக் காட்சிகளை அமைப்பது (editing) மிகச் சிறந்த நாடகக் கலைத்திறன். இதை இளங்கோவடிகள் மிக அருமையாய்க் கையாண்டுள்ளார். கோவலன் கண்ணகி திருமணம்; அவர்தம் இனிய இல்லற வாழ்க்கை; மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் ஆகிய இவற்றைக் கண்டு மகிழ்ந்திருப்பவர்க்குக் கோவலனைப் பிரிந்த கண்ணகியின் துயர நிலையைக் காட்டுகிறார். இவ்வவலக் காட்சியைத் தொடர்ந்து, இந்திரவிழா நடைபெறும் இன்ப நிகழ்ச்சியைக் காட்டி முற்காட்சியின் அவலச் சுமையைக் குறைத்துவிடுகிறார். கோவலன் மாதவியைப் பிரிந்தான்; கண்ணகியோடு மதுரை புறப்பட்டான்; வழிநடக்கமுடியாமல் கண்ணகி வருந்தியிருக்கும் நிலையில் அதைச் சற்று மறந்து ஆறுதல்பெற வேட்டுவர்கள் கூத்தாடி மகிழும் காட்சியைக் காட்டுகிறார். இதுபோலவே கோவலன் கொலையுண்ட காட்சியைக் காணுகின்ற சோகத்தைக் குறைக்க ஆய்ச்சியர்களைக் குரவைக் கூத்தாடச் செய்கிறார். கணவனை இழந்த கண்ணகி மதுரையை எரித்துச் சோகமே உருவாய்ச் செல்லும்போது அக்காட்சியின் துன்பச் சுமையைக் குறைக்கக் குன்றக் குறவர்கள் கூத்தாடி மகிழ்கின்ற காட்சியைப் படைக்கிறார். இவ்வாறு காட்சிகளைச் சமன்படுத்தி நாடகத்தை நடத்திச்செல்லும் இளங்கோவின் வியத்தகு கலைநுணுக்கத்தைச் சிலப்பதிகாரத்தில் நாம் காணமுடிகிறது.

ஒரு காட்சியின் முடிப்புக்கும் அடுத்த காட்சித் தொடக்கத்திற்கும் சரியானதோர் இணைப்பைச் செய்யும் அரிய உத்தியையும் சிலம்பில் காண்கிறோம். அந்திமாலைச் சிறப்புசெய் காதையில் ஞாயிறு மறைந்து இருள் பரவுவதோடு காட்சி முடிவடைகிறது. அடுத்த காட்சி இந்திர விழவூரெடுத்த காதை. அதைத் தொடங்கும்போது இருளிலிருந்து சிறிது சிறிதாக வெளிச்சம் பரவி விடிவதைக் காட்டுகிறார்.

நாடகக் கலைநுணுக்கங்களை மட்டுமன்றி நாடக அரங்க அமைப்பு, அரங்கத் திரைகள், விளக்குகள் அமைக்கப்பட வேண்டிய முறை ஆகிய கலைக்கூறுகளையும் இளங்கோ அருமையாய் விளக்குகிறார். நாடக அமைப்பில் உலக நாடக ஆசிரியர்களுள் ஒப்பற்றவராய் இளங்கோ உயர்ந்து நிற்கிறார்.

இந்நூலாசிரியர் டி. மகாலட்சுமி சிலப்பதிகார இலக்கியக் கூறுகளைப் பற்றிய ஆய்வில் நாடகக் கூறுகளைப் பற்றிய ஆய்வே கூடுதலாக உள்ளது என்கிறார்.[1]

கதைமாந்தர் படைப்பு

காப்பியங்களில் கதைமாந்தர்கள் பற்றிய ஆய்வு முக்கியமானது. சிலப்பதிகாரக் கதைமாந்தர்களின் குறை நிறைகளை அறிஞர் பலரும் ஆய்வு செய்துள்ளனர். கதைமாந்தர் நிறையுடையவரோ அன்றிக் குறையுடையவரோ அதுபற்றிய சிந்தனையின்றி அக்கதை மாந்தருடன் நாம் ஒன்றிவிடுமாறு படைப்பதே பாத்திரப்படைப்பில் படைப்பாசிரியர் பெறும் வெற்றியாகும். இளங்கோவடிகள் தாம் படைத்துள்ள கதை மாந்தர்களின் செயல்கள் அவரவர் குணநலங்கட்கேற்ப இவ்வாறுதான் இருக்கமுடியும் என எண்ணச் செய்துவிடுகிறார். சான்றுக்கு ஒன்று

தொடக்கத்தில் கோவலனை அறிமுகப்படுத்தும்போது இளங்கோவடிகள் அவன் உடலழகைப்பற்றி மட்டுமே குறிப்பிடு கிறார். 'இவன் முருகனையொத்த அழகுடையவன்' என்று பெண்கள் பேசுமளவுக்குச் சிறந்த அழகன் அவன்.

அவனுடைய அழகில் நம்மை மயங்கவைத்த அடிகள் அவன் அழகன் மட்டுமல்லன்; ஆற்றொழுக்குப் பேச்சாளன் என்பதைக் காட்டுகிறார். மணிக்கால் அமளிமீதிருந்து மணம்நிறை தென்றலால் மகிழ்வுற்ற அவன் கண்ணகியைப் புகழ்ந்து பேசும் பேச்சு ஓர் உயர்ந்த காதல் இலக்கியமாகும். கோவலன் நாவீறு கொண்டவன்.

1. இந்நூல், பக்.

ஆனால், பேச வேண்டிய இடங்களில் பேசாதிருந்து விடுகிறான். அதனால் கதையின் போக்கே மாறிவிடுகிறது. மாதவியிடம் வெகுண்டெழுந்தபோது மனம்விட்டுப் பேசியிருப்பானேயாகில் மாதவியின் விளக்கத்தைப் பெற்றிருப்பான்; மதுரைப் பயணம் நிகழ்ந்திருக்காது. சிலம்பைக் கவர்ந்த கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டபோது பேசியிருப்பானேல் கொலைநிகழ இடமேது! அவனுடைய பேசாத் தன்மையே காப்பிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

அழகனாயும் சொல்லாளனாயுமுள்ள கோவலன் அடுத்துக் கேளிக்கைப் பிரியனாய்க் காட்டப்படுகிறான். நகரப் பரத்தரோடு வீதிகளில் அலைந்து திரிந்திருக்கிறான்.

நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திருதரு மரபிற் கோவலன் போல[1]

தென்றல் உலவியதென்பார் இளங்கோ.

இதன்பின்னர் அவன் சிறந்த கலைஞன் எனக் காட்டப் பெறுகிறான். அவனுடைய கானல்வரிப் பாடல் அனைவரையும் மயங்கவைக்கக் கூடியது.

மாதவியை விட்டுப் பிரியும்வரை கோவலனை விளையாட்டுப் போக்குள்ளவனாகவே காட்டிவரும் அடிகளார், மாதவியைப் பிரிந்ததும் அவனை ஒரு பொறுப்புணர்ச்சி யாளனாய்க் காட்டுகிறார். கண்ணகியோடு மதுரைசென்று இழந்த பொருளை ஈட்ட முடிவு கொள்கிறான்.

உறையூர்ப் பூம்பொழிலில் கோவலனையும் கண்ணகியையும் தகாத சொற்களால் நகையாடிய பரத்தையையும் வறுமொழியாள னையும் கவுந்தி சினந்து அவர்களை முள்ளுடைக் காட்டில் முதுநரிகளாய் அலையுமாறு சபிக்கிறார். அப்போது கோவலனும் கண்ணகியும், "பெரியீர்! இவர்கள் அறியாமையாற் செய்த பிழையை மன்னித்து உய்யும் காலத்தை உரைத்தருளுங்கள்" என வேண்டினர்.

தம்மையே பழித்தவர்களாயினும் அவர்களிடமும் பரிவு காட்டும் இரக்கத்தையும் பெருமிதப் போக்கையும் கண்டு கோவலன்பால் நமக்கு இரக்கம் உண்டாகிறது. வாழ்ந்து கெட்டவன்; ஆயினும் அவன் வாழ்வு மீண்டும் சிறக்க வேண்டு மெனும் எண்ணம் நம்பால் எழுகிறது.

1. சிலப்பதிகாரம், இந்திர விழவு., 199-201

மதுரைப் புறஞ்சேரியில் தங்கியிருந்த கோவலனைக் காணும் மாடலமறையவன், கோவலனின் பெருமைமிகு செயல்களைக் கூறி, "கோவல! யானறிய நீ இப்பிறவியில் செய்தவெல்லாம் நல்வினையே! அவ்வாறிருக்க நீ துன்பமுற்று மாணிக்கக் கொழுந்தாகிய உன் மனைவியுடன் இங்குப் போந்தது உன் வினைப்பயனோ என்று கூறி வருந்துகிறான். மாடலனின் சொற்கள் கோவலன்மீது நமக்கோர் நன்மதிப்பைத் தோற்றுவிக்கிறது. இல்லறம் பேணமறந்த ஒன்றைத் தவிர வேறெந்த வகையிலும் அவன் குணக்குன்றாகவே விளங்கிடக் காண்கிறோம். இத்தகைய நல்லவனா தொல்லைக்குள்ளாகியுள்ளான் என்னும் பரிவுணர் வைப் பெறுகிறோம். இவ்வாறு கதைமாந்தர் படைப்பில் இளங்கோ காட்டும் திறம் சிறந்து நிற்கிறது.[1]

சிலப்பதிகாரக் கதைமாந்தர் படைப்புகளை ஒப்பாய்வு செய்துள்ள இந்நூலாசிரியர், "கண்ணகி, கோவலன், மாதவி பாத்திரப்படைப்புகள் சிறப்பாகத் திறனாய்வு செய்யப்பட் டுள்ளன. சிலப்பதிகாரப் பாத்திரப்படைப்புகள் புதிய நோக்கில் ஆராயப்பட்டிருப்பினும் ஒப்பாய்வு குறைவாகவே நிகழ்ந்துள்ளது. தற்கால இலக்கியங்களில் வரும் பாத்திரங்களுடன் ஒப்புநோக்கும் ஒப்பாய்வு மலர வாய்ப்பிருக்கிறது" எனும் முடிவுக்கு வருகிறார்.[2]

இலக்கிய ஒப்பீடு

சிலப்பதிகாரத்தைப் பிற தமிழ் இலக்கியங்களுடனும், பிறமொழி இலக்கியங்களுடனும் ஒப்பிட்டு அரிய கருத்துகள் பலவற்றை அறிஞர்கள் கூறியுள்ளனர்.

கண்ணகி ஆயர்பாடியில் கோவலனுக்கு உணவு சமைக்கிறாள். பசிய காய்கறிகளை அரிந்தாள்; அவளுடைய மெல்லிய விரல்கள் சிவந்தன; முகம் வியர்த்தது; கண்கள் சிவந்தன; தோழி ஐயை வைக்கோலால் அடுப்புமூட்டி உதவினாள்; கண்ணகி தன்னுடைய கையாலேயே கணவனுக்கு வேண்டியவற்றைச் சமைத்தாள்;

> மெல்விரல் சிவப்பப், பல்வேறு பசுங்காய்
> கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்,
> திருமுகம் வியர்த்தது, செங்கண் சேந்தன,
> கரிபுற அட்டில் கண்டனள், பெயர
> வையெரி மூட்டிய ஐயை தன்னோடு
> கையறி மடமையிற் காதலற்கு ஆக்கி[3]

---

1. சிலம்பொலி சு. செல்லப்பன், சிலம்பொலி, பக். 232-242
2. இந்நூல், பக். 101-02
3. சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, 29-34

மனநிறைவு பெற்றாள். பனையோலையில் அழகுறப் புனையப் பட்ட அடுக்கு ஒன்றில் கோவலன் அமர்ந்தான்; கண்ணகி தண்ணீர் தெளித்துத் தரையை மெழுகி, குமரி வாழையின் குருத்தை விரித்துக் கோவலனுக்கு உணவு படைத்தாள். 'அடிகாள்! அமுதம் உண்க' என அன்போடு வேண்டினாள். கோவலன் உண்டு மகிழ்வதை ஆயர் முதுமகள் மாதரியும், அவள் மகள் ஐயையும் கண்குளிரப் பார்த்தனர்' என இளங்கோ பாடியுள்ளது குறுந்தொகைப் பாடலொன்றின் விரிவு எனலாம்.

பெண் ஒருத்தி கெட்டியான தயிரைப் பிசைகிறாள்; கை சிவக்கிறது; தயிரைப் பிசைந்துகொண்டிருக்கும்போது இடையி லுள்ள ஆடை நெகிழ்கிறது. தயிர்க்கையோடு ஆடையை எடுத்துச் செருகிக் கொள்கிறாள்; அடுப்பில் உள்ள தாளிப்பை எடுத்துத் தயிரில் கொட்டுகிறாள். அட்டிற்புகை படிவதால் அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்புகின்றன. இவ்வாறு முகம் வியர்க்க அரும்பாடுபட்டுக் கணவனுக்குக் குழம்பு செய்கிறாள். கணவன் அமர்ந்ததும் உணவைப் படைத்துக் குழம்பையும் இடுகிறாள். கணவன் குழம்பு 'நன்று நன்று' என இனிமையைப் புலப்படுத்தி உண்கிறான்; அவன் உண்ணுதலைக் காணுகின்ற மனைவி முகமலர்ச்சி தோன்ற நிற்கிறாள். திருமணமாகிக் கணவன் வீடு சென்றுள்ள மகள் இவ்வாறு வாழ்க்கை நடத்துவதாய்ச் செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறுவதாய் அமைந்துள்ள பாடல் வருமாறு

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்(று) ஒண்ணுதல் முகனே![1]

இப்பாடல் தலைவியைக் கண்ணகியாகவும், தலைவனைக் கோவலனாகவும், செவிலியை ஆயர் முதுமகள் மாதரியாகவும் கொண்டு இளங்கோவடிகள் கோவலனுக்கு உணவு படைத்ததைக் கூறுகின்ற பகுதியோடு ஒப்பிட்டு மகிழலாம்.[2]

மதுரைக் கோட்டையின்மீது கட்டப்பட்டிருந்த கொடிகள் காற்றினால் அசைந்தாடின. அத்தோற்றம் கண்ணகியையும் கோவலனையும் "இம்மதுரை நகருக்குள் நீங்கள் வரவேண்டாம்"

1. குறுந்தொகை, 167
2. சிலம்பொலி க. செல்லப்பன், சிலம்பொலி, 259-62

ஏனத் தம் கைகளை மறித்துக்காட்டித் தடுப்பன போன்றிருந்த தென இளங்கோ படைத்த தற்குறிப்பேற்றம்[1] பின்னர்த் தோன்றிய பெருங்கவிஞர்களைக் கவர்ந்துளதாதலின் அவர்களும் இத்தகைய அணிநலனைக் கொடிகள் கொண்டே காட்டியிருக்கின்றனர்.

இராமன் விசுவாமித்திர முனிவரோடும் தன் தம்பி இலக்குவனோடும் மிதிலைக்குள் நுழைகிறான். அப்போது மிதிலைக் கொடிகள் அசைந்தாடுவதானது, திருமகள் அந்நகரில் சீதையாய்ப் பிறந்து வளர்வதைக் குறிப்பாற் புலப்படுத்தி, அவளுக்குக் கொழுநனாதற்கேற்ற இராமனை மணம்புரிய விரைந்து வருமாறு கைகாட்டி அழைப்பது போன்றிருந்ததெனக் கம்பர் பாடுகிறார்.

மையறு மலரின் நீங்கி,
யான்செய்மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் என்று,
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை, 'ஒல்லை வா'என்(று)
அழைப்பது போன்ற தம்மா[2]

பாரதத்திலும், கொடி அசைந்தாடும் தன்மையைக் கொண்டு ஒரு குறிப்பைப் புலப்படுத்துகிறர், வில்லிபுத்தூரார். கண்ணனைப் போரில் தம்பக்கம் சேருமாறு கேட்கத் துவாரகையை நோக்கித் துரியோதனன் செல்லுகின்றான். துவாரகையின் மதில்களில் உள்ள கொடிகள் காற்றில் அசைகின்றன. அக்காட்சி, "துரியோதனா! நீ இங்கு வந்தாலும் எங்கள் எழிலுடை எழிலிவண்ணனாகிய கண்ணன் உனக்குத் துணையாய் இருக்கமாட்டான். அவன் பாண்டவர்கள் பக்கத்துணையாகவே இருப்பான். எனவே, நீ இங்கு வருவதிற் பயனிலை; திரும்பிப் போ, திரும்பிப் போ" என்று உரைப்பது போன்றிருந்ததாம்.

ஈண்டுநீ வரினும், எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்,
பாண்டவர் தங்கட் கல்லால்
படைத்துணை ஆக மாட்டான்;
'மீண்டுபோ கென்றென்(று), அந்த
வியன்மதிக் குடுமி தோறும்
காண்தகு பதாகை ஆடை
கைகளால் தடுப்ப போன்ற.[3]

1. சிலப்பதிகாரம், புறஞ்சேரி., 189-90
2. கம்பரா., பால., மிதிலைக் காட்சி., 1
3. வில்லிபாரதம், வாசுதேவனைப் படை.,

கம்பரின் மிதிலைக் கொடிக்கும், வில்லிபுத்தூராரின் துவாரகைக் கொடிக்கும் மூலமாய் அமைவது இளங்கோவின் மதுரைக் கொடியேயாம்!

இந்நூற்றாண்டுக் கவிஞர் பாரதிதாசனையும் கொடி அசைவு கொள்ளைகொண்டுள்ளது. கதிர்நாட்டை நோக்கி அதன் பகையான வேழநாட்டுப் படை செல்லும்போது,

கதிர்நாட்டின் நெடுங்கோட்டை மதிலின்மீது
கைகாட்டி வாபகையே எனஅ ழைக்கும்
புதுமைபோல் கொடிபறக்கக் கண்டார் அங்கே.[1]

இலியது (Illiad), *ஒடிசி* (Odyssey) என்னும் இரண்டும் கிரேக்க நாட்டில் தோன்றிய முதல் காப்பியங்களாம். இவை கி.மு. எட்டாம் நூற்றாண்டளவில் ஏடேறியவையாய்க் கருதப்படுகின்றன. இலியது நாடகத்தின் தலைவன் *அக்கில்லீஸ்* என்னும் கிரேக்க அரசன். ஒடிசியின் தலைமைக் கதைமாந்தர் *ஒடீசியஸ்* எனும் கிரேக்க அரசன். கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றிய இலத்தீன் காப்பியத்தின் தலைவனான *ஈனியஸ்* டிராய் நகரத்து அரச மரபினன். வடமொழியின் ஆதி காவியங்கள் இராமாயணமும், மகாபாரதமும். இராமாயணத்தின் தலைவன் அரசகுடியிற் பிறந்த இராமன்; மகாபாரதத்தில் தலைமை மாந்தர்களாய பாண்டவரும் அரச மரபினரே! ஆனால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலெழுந்த தமிழின் முதற்காப்பியத்தின் தலைமை மாந்தர்கள் முடிமன்னர்க ளல்லர்; குடிமக்கள்; குடிமக்களைத் தலைமை மாந்தர்களாய்க் கொண்டு உலகின் முதன்முதலில் தோன்றியது தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமே! தமிழின் முதற்காப்பியமே இத்தகைய சிறப்பைப் பெற்றிருப்பது காப்பியப் படைப்பில் தமிழ் பெற்றுள்ள மிகப் பெரிய பெருமையாகும்.

இலக்கிய ஒப்பாய்வுபற்றி ஆய்ந்துள்ள இந்நூலாசிரியர், "சிலப்பதிகாரம் திருக்குறளோடும், மணிமேகலையோடும், கம்பராமாயணத்தோடும் ஒப்பவைத்து ஆராயப்பட்டுள்ளவை மிகுதியாக உள்ளது. சங்க இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங் களுடன் ஒப்பீட்டு முறையில் ஆராயப்பட்டிருப்பினும் இன்னமும் நடக்க வேண்டிய ஆய்வு மிகுதியாக உள்ளது. இந்திய இலக்கியங் களோடும் உலக இலக்கியங்களோடும் சிலம்பினை ஒப்பவைத்து ஆராய்ந்துள்ளமை குறைவாகவே காணப்படுகிறது" எனக் கருத்தறிவித்துள்ளார்.[2]

1. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, இயல் 1
2. இந்நூல், பக். 129

சமுதாயம்

சிலப்பதிகாரகாலச் சமுதாயம் பற்றிய ஆய்வு அன்றைய மக்களின் இயல்புகள், பழக்கவழக்கங்கள், அரசியல், தொழில், கலை, சமயம், நம்பிக்கை, சடங்கு முதலாயவற்றை அறிந்து கொள்ளத் துணைசெய்யும்.

சிலப்பதிகார காலத்தில் மகளிருள் குலமகளிர், பொதுமகளிரென இருவகையினர் இருந்தனர். பொதுமகளிர் கணிகையர் என வழங்கப்பட்டனர். கணிகையர் கலைகளில் வல்லவராயிருந்தனர். "குலமகளிர் கலையுணர்வு பற்றியும் பொதுமகளிர் குடும்ப வாழ்வு பற்றியும் அக்கறை கொள்ள வில்லை"[1] பரத்தமை போற்றப்படவில்லையாயினும், வெறுக்கத் தக்கதாகவோ, தீவினையானதாகவோ அக்காலச் சமுதாயம் கருதவில்லை[2] ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் தமிழ்மரபு சிலம்பில் காணப்படவில்லை.

பொருளை ஈட்டுவது ஆண்கள் கடமையாய் இருந்தது. பெண்கள் ஆடவரோடு சேர்ந்துதான் அறஞ்செய்கின்ற போக்கிருந்தது. "பொது மகளிர்க்குக் கற்பு வேண்டப்படாததாக இருந்தது. ஆடவர்க்குக் கற்பு வலியுறுத்தப்படவில்லை."[3]

அரசர்கள் நல்லாட்சியே தம் உயிரெனக் கருதினர். நாடாள்வோர் தன்னலமின்றி, கொடுங்கோன்மைக்கு அஞ்சி, குடிமக்களால் குறைகூறப்படாதவகையில் ஆளவேண்டும். அரசனிடம் காட்டும் பற்றே நாட்டுப் பற்றாய்க் கொள்ளப்பட்டது. அரசனை வாழ்த்தியே மக்கள் நற்செயல் எதனையும் தொடங்குவர். மக்கள் மன்னனிடம் நேரில் சென்று முறையிட்டு நீதிபெறும் நிலை இருந்தது.

ஆடல், பாடல், இசை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் சிறப்புற்றிருந்தன. பெண்கள் அடிமுதல் முடிவரை பல்வேறு வகையான வேலைப்பாடமைந்த அணிகலன்களை அணிந்து வந்தனர்; பருவ காலங்கட்கு ஏற்றவாறு வெவ்வேறு வகையான ஆடைகளை அணிவது வழக்கம்.

நாட்டில் பல்வேறு வகையான தொழில்கள் இருந்தன. ஆயினும், உழவும் தொழிலும் வாணிகமுமே முக்கியத் தொழில் களாய்க் கருதப்பட்டன. வாணிகம் மிகச் சிறந்த நிலையில்

1. க. ஆறுமுகன், முதற்காப்பியத்தில் முரண்தொடை, பக். 6-7
2. கா. மீனாட்சிசுந்தரனார், சிலம்பில் துணைப் பாத்திரங்கள், பக். 120-21
3. மு. வரதராசனார், கண்ணகி, பக். 66

நடைபெற்றது. யவனர் முதலிய அயல்நாட்டவர் வாணிபத்தின் பொருட்டு இங்குவந்து குடியேறி வாழ்ந்திருந்தனர். வணிகர்கள் மன்னர்களும் விரும்புமளவுக்குச் செல்வச் செழிப்புடையவராய் வாழ்ந்துவந்தனர்.

சைவம், வைணவம், பௌத்தம், சமணம், சாக்தம் முதலாய சமயங்கள் சிறப்புற்றிருந்தன. எல்லாக் கடவுளர்க்கும் கோயில்கள் இருந்தன. மக்கள் சமய வேறுபாடின்றி ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழ்ந்து வந்தனர்.

பல மாடிகள் கொண்ட வானோங்கி நின்ற கட்டடங்களில் மக்கள் வாழ்ந்து வந்தனர். நகரமைப்புக் கலையில் அன்றைய மக்கள் சிறந்திருந்தனர். தொழில் செய்வோர் ஒரு பகுதியிலும், அரசுப் பணி செய்வோர் ஒரு பகுதியிலும் அங்காடிகள் ஒரு பகுதியிலும் இருக்குமாறு நகரங்கள் அமைக்கப்பட்டன.

வேள்வி செய்தல், தீவலம் வந்து திருமணம் நிகழ்தல் முதலாய ஆரியப் பண்புகள் நிலவி வந்தன. மக்கள் நன்னாள் குறித்தல், நிமித்தம் காணல், கனாப்பயன் கருதுதல் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சிலப்பதிகாரத்தின்வழி இளங்கோவடிகள் பத்தினி வழிபாடு என்னும் புதியதொரு வழிபாட்டினைத் தோற்றுவித்திருக்கிறார்.

"அன்பு அருள், அறிவு, ஆற்றல், வளம், கலை, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றால் சிறந்திருந்த தமிழகச் சமுதாயத்தினை நமக்குக் காட்டும் ஒப்பற்ற நூலே சிலப்பதிகாரம் ஆகும். பேரிலக்கியமான சிலப்பதிகாரம் சமுதாயக் காப்பியமாக நம் நெஞ்சில் நிலைபெறுகின்றது"[1] என்ற கருத்து பொருத்தமானது என்றாலும், 'இன்னும் மிக விரிந்த அளவில் சிலப்பதிகாரச் சமுதாயம் பற்றிய அனைத்துக் கூறுகளும் ஆராயப்படவேண்டிய நிலையிலுள்ளன'[2] என்கிறார், ஆராய்ச்சியாளர் திருமதி டி. மகாலட்சுமி.

பாராட்டு

திருமதி மகாலட்சுமி தம்முடைய ஆய்வுக்காகப் படித்துள்ள நூல்கள், கட்டுரைகளின் பட்டியலைக் காணும்போது அவருடைய பேருழைப்பு புலனாகின்றது. 1872இல் ஸ்ரீநிவாசராகவாச்சாரியார்

1. நா. செயப்பிரகாசு, சிலப்பதிகாரம் காட்டும் தமிழகச் சமுதாய நிலை, பக். 211
2. இந்நூல், பக். 151

பதிப்பித்த 'சிலப்பதிகாரம் - புகார்க்காண்ட மூலம் - வேனிற் காதை முடிய' எனும் நூல் தொடங்கி, 1988இல் கோ. வேங்கடாசலம், தமிழ்ப்பொழில், துணர்-2, மலர்-8இல் எழுதியுள்ள 'கண்ணகியும் பொங்சியாங் நூவும்' எனும் கட்டுரைவரை, 116 ஆண்டுகளில் சிலப்பதிகாரம் குறித்து வெளிவந்துள்ள 372 நூல்களையும், பல்வேறு இதழ்கள் மலர்களில் வெளிவந்துள்ள 344 கட்டுரைகளையும் இவர் தம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்நூல்கள் கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்கள் 413 பேர். தாம் ஆய்ந்த நூல்கள், கட்டுரைகளின் அடைவை ஆய்வாளர் இந்நூலின் இறுதியில் 73 பக்கங்களில் தந்துள்ளார். இந்த அடைவே முழுமையானது அன்று. இன்னும் பல நூல்கள் கட்டுரைகள் விடுபட்டிருக்கலாம். அவ்வாறு விடுபட்டுள்ளவை இருப்பின் அவற்றை இந்நூலாசிரியர்க்கு அறிவித்து, அடைவு அட்டவணையை நிறைவாக்கத் துணைசெய்ய வேண்டுகிறேன்.

ஆய்வு என்றாலே பிறநாட்டுத் திறனாய்வாளர்களின் ஆங்கில மேற்கோள்கள் பெருமளவில் தரப்படுவது இயல்பாயுள்ள இந்நாளில் திருமதி டி. மகாலட்சுமி, தமிழறிஞர்கள் தமிழில் எழுதியுள்ள நூல்கள் கட்டுரைகளிலிருந்து மட்டுமே மேற் கோள்கள் தந்து ஆய்வ்வ நிறைவு செய்திருப்பது தனித்த சிறப்புக்குரியது. பிறமொழிக்கண்கொண்டு பாராமல் தமிழ்க்கண் கொண்டே ஆய்வுப் பார்வை அமைந்துள்ளது.

அரியதோர் ஆராய்ச்சி நூலை உருவாக்கித் தந்துள்ள மகாலட்சுமிக்கு என் உளம்நிறைந்த பாராட்டுகள். சிலம்பில் புதியபுதிய செய்திகள் இவர்வழியே தொடர்ந்து வந்து கொண்டிருக்க வேண்டுமென்பது என் விழைவு.

நூல் ஆக்கம்	முனைவர் டி. மகாலட்சுமி
வகைமை	ஆய்வேடு
வெளியீடு	நர்மதா வெளியீடு, சென்னை. (1989)

4

புலம்பும் சிலம்பு

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியம்; முதல் காப்பியமே முத்தமிழ்க் காப்பியமாகவும் விளங்குகிறது. சிலப்பதிகார அகவற்பாவில் இயற்றமிழைக் காண்கிறோம்.

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி.

பொருள் பஃறுனி ஆற்றுடன், பல பக்கமலைகளை யுடைய குமரி மலையையும் கடல் பொங்கி அழித்தது. இழந்த அவற்றிற்கு ஈடாக வடக்கேயுள்ள கங்கையாற்றினையும் இமய மலையினையும் கைக்கொண்டு தென்திசையை ஆண்ட பாண்டியன் புகழ் வாழ்வதாகுக!

இத்தகைய அகவலையும் பிறபாக்களையும் கொண்ட அரியதோர் இயற்றமிழ் நூலாய்ச் சிலப்பதிகாரம் சிறக்கிறது.

கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளிலுள்ள பண்ணமைந்த பாடல்களில் இசைத்தமிழைக் காண்கிறோம்.

கானல்வரியில் உள்ள,

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புனர்ந்தாலும்
புலவா(து) ஒழிதல் கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்(பு) என்று
அறிந்தேன் வாழி காவேரி!

பொருள் : மாலையணிந்த முழுமதிபோலும் வெண் குடையுடைய சோழ மன்னன், செங்கோல் செலுத்தி, கங்கைப் பெண்ணைக் கூடினாலும், காவேரியே! நீ அதற்காக அவனை வெறுப்பதில்லை நீ வாழ்வாயாக! கயல்போலும்

கண்களை உடையவளே! உன் கணவன் கங்கையைப் புணர்ந்தாலும் நீ வெறுக்காமல் இருப்பது உன்னுடைய உயர்கற்பின் தன்மையே என்பதனை நான் உணர்ந்து கொண்டேன்; நீ வாழ்வாயாக!

எனும் பாடலையும், ஆய்ச்சியர்குரவையில் உள்ள,

பெரியவனை, மாயவனைப், பேர்உலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக், கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக், காணாத கண்என்ன கண்ணே!
கண்இமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண்ணே!

பொருள் எல்லார்க்கும் பெரியவன்; மாயங்களில் வல்லவன்; பெரிய உலகமெலாம் தோன்றுகின்ற உந்தித் தாமரை உடையவன்; கண்களும், திருவடிகளும், கைகளும், அழகிய வாயும், சிவந்து தோன்றும் கரிய நிறமுமுடையவன் ஆகிய அத்திருமாலைக் காணாத கண்ணும் ஒரு கண்ணா? கண்ணை இமைத்துப் பார்க்கும் கண்ணும் ஒரு கண்ணா?

எனும் பாடலையும், குன்றக்குரவையில் உள்ள,

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேல்அன்றே
பார்இரும் பெளவத்தின் உள்புக்குப் பண்(டு)ஒருநாள்
சூர்மா தடிந்த சுடர்இலைய வெள்வேலே!

பொருள் : சிறப்புமிக்க திருச்செந்தூர், திருச்செங்கோடு, திருவெண்குன்றம் (சுவாமிமலை), திருவேரகம் எனும் இடங்களை விட்டு எப்பொழுதும் நீங்காது இருப்பவன் முருகப் பெருமான். நிலவுலகைச் சூழ்ந்திருக்கும் பெரிய கடலின் நடுவே புகுந்து முன்பொருநாள் மாமரமாகி நின்ற சூரபதுமனை வெட்டி வீழ்த்திய ஒளிவீசும் வெற்றிவேல், அம்முருகன் கையில் ஏந்தியுள்ள வேலன்றோ?

எனும் பாடலையும் இசையரங்குகளில் பாடகர்கள் பண்ணமைத்துப் பாடுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். இவ்வாறு பண்ணுடன் பாடக்கூடிய பாடல்கள் பல சிலப்பதிகாரத்தில் இருந்திடக் காண்கிறோம். ஆதலின் இசை கொஞ்சி விளையாடும் காப்பியம் என இதனைக் கூறலாம்.

உரையாடல் போக்கில் அமைந்த பல பகுதிகள் சிலம்பில் உள்ளன. அவை நாடகத்தமிழை நமக்குக் காட்டுகின்றன. 'வழக்குரை காதை' முழுவதுமே சிறந்த உரையாடல் முறையில் அமைந்துள்ளது.

கண்ணகி : *(வாயிற் காப்போனிடம்)* வாயிற் காப்போனே! வாயிற் காப்போனே! அறிவு சிறிதுமிலாது அரசநீதி தவறியவ னுடைய வாயிற் காப்போனே! சிலம்பு ஒன்றனைக் கையிலே ஏந்தியவளாய் கணவனை இழந்த ஒருத்தி வாயிலிலே வந்து நிற்கிறாள் என்பதை ஓடிப்போய் உன் அரசனிடம் அறிவிப்பாயே!

வாயிற்காவலன் *(அரசன்முன் ஓடிவந்து)* கொற்கை மன்ன வாழி! பொதியமலைத் தலைவ வாழி! செழிய வாழி! தென்னவ வாழி! பழிச்செயல் செய்யாத பஞ்சவனே வாழி! அரண்மனை வாயிலில் பெண் ஒருத்தி நிற்கிறாள். அவள் கொற்றவையா... இல்லை; பிடாரியா... இல்லை, பத்திரகாளியா... இல்லை! இவர்களில் எவருமே அல்லள்! கையில் பொற்சிலம்பு ஒன்றனை ஏந்திச் சினத்தோடு நிற்கிறாள்; கணவனை இழந்தவளாய்க் தென்படுகிறாள்.

நெடுஞ்செழியன் அவளை இங்கே வரச்சொல்! *(கண்ணகி அவன்முன் வந்து நிற்க)* நீரொழுகும் கண்களுடன் என்முன்னே வந்து நிற்கும் பெண்ணே நீ யார்?

கண்ணகி ஆராய்ந்து தெளியும் அறிவற்ற மன்னா! புறாவைக் காக்கத் தன் உடலின் முழுத் தசையையும் அறுத்துத் தந்தானே சிபி! பசுவின் கன்றைக் கொன்றதற்காகத் தன் மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்று நீதி செய்தானே மனு! இம் மன்னர்கள் இருந்து ஆட்சி செய்த புகாரே என் ஊர்! அவ்வூரில் பெரு வணிகன் மாசாத்துவானுக்கு மகனாய்ப் பிறந்து பொருளீட்டி வாழ்க்கை நடத்த இவ்வூர் வந்து உன்னால் கொலை செய்யப் பட்டாரே கோவலன்! அவர் மனைவி நான்! என் பெயர் கண்ணகி!

அரசன் பெண்ணே! கள்வனைக் கொல்வது கடுங்கோல் அன்றே! அதுதானே அரசநீதி! இதை நீ அறியாயா?

கண்ணகி அறநெறி அறியாத கொற்கை வேந்தனே! என் காலில் அணியும் பொற்சிலம்பின் உள்ளே இருப்பவை மாணிக்கப் பரல்கள்!

அரசன் பெண்ணே! நீ சொன்னது நல்லதாயிற்று! என் மனைவியின் சிலம்பில் இருப்பவை முத்துப் பரல்கள்! *(ஏவலனை நோக்கி)* அச் சிலம்பை இங்கே கொண்டு வா!

(சிலம்பு கண்ணகி முன் வைக்கப்படுகிறது; அதை எடுக்கிறாள்; உடைக்கிறாள்; மாணிக்கப் பரல்கள் சிதறி மன்னவன் வாயில் பட்டுத் தெறித்து விழுகின்றன)

அரசன் *(உண்மையை உணர்ந்து)* ஆராய்ந்து பாராமல் பொற்கொல்லனுடைய பேச்சைக் கேட்டு அரச நீதி தவறிய நானும் ஓர் அரசனா? இல்லை! நானே கள்வன்! வழியறியாப் பாண்டிய மரபு என்னால் தவறுற்றது! என் வாழ்நாள் அழியட்டும்! என் உயிர் நீங்கட்டும்! *(மயங்கி வீழ்ந்து மாள்கிறான்.)*

கோவலன் கொலைச் செய்தியை ஆயர்பாடிப் பெண் ஒருத்தி கண்ணகியிடம் உரைக்கும் பகுதி, சிலம்பில்,

> சொன்னது :
> அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
> கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
> கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
> குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே!

என உள்ளது. இஃது ஆயர்பாடித் தோழியும், கண்ணகியும் பேசுகின்ற முறையில் அமைக்கப்பட்ட உரையாடல் என்று கொள்ளலாம். கண்ணகி தோழியிடம் என்ன நடந்தது என்று கேட்கிறாள்.

தோழி அரசனுடைய அந்தப்புரத்திலிருந்து அழகுமிக்க சிலம்பினை அரவம் ஏதுமின்றிக் கவர்ந்த கள்வன் இவனேதான் என்று.....!

கண்ணகி அரவம் ஏதுமின்றிக் கவர்ந்த கள்வன் இவனேதான் என்று....?

தோழி வீரக்கழலணிந்த ஊர்க் காவலர்கள் கோவலனைக் கொலைசெய்தனர்.

சிலப்பதிகாரத்தில் உள்ள இந்நான்கு அடிகளும் தோழி யின் தடுமாற்றத்தையும், கண்ணகியின் துடிப்பையும் ஒருங்கே புலப்படுத்தும் உரையாடலாய் உள்ளது. தோழி தொடங்க, இடை மறித்துக் கண்ணகி கேட்க, பின்னர்த் தோழி முடிக்க உணர்ச்சிக் கொந்தளிப்புடன் உரையாடல் அமைகிறது. காப்பியம் முழுவதை யும் நாடக முறையில் உரையாடல், பாடலாய் அமைத்துக் கொள்ளமுடியும். இவ்வகையில் சிலப்பதிகாரம் தலைசிறந்த நாடகத் தமிழாயும் விளங்கக் காண்கிறோம்.

சங்கப்பாக்கள் தனித்தனிச் சிறு பாடல்கள்; கதை நிகழ்ச்சி அமைந்த பாடல்களும் உண்டு. அவற்றை இன்று நாம் வழங்கும் 'சிறுகதைகள்' எனலாம்.

சிலப்பதிகாரம் ஒரு தொடர்நிலைச் செய்யுள். நெடுங் கதையைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. ஆதலின், சிலப்பதிகாரத்

தைத் தமிழில் தோன்றிய முதல் 'புதினம்' என்று சொல்லலாம்; செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ள புதினம். சிலப்பதிகாரத்தை உரைநடையிலும் புதினமாய் எழுதலாம்.

புதினம் எழுதுவதில் கையாளப்படுகின்ற பல்வேறு உத்திகளைச் சிலப்பதிகாரத்தில் நாம் காணமுடிகிறது. கதையைக் கதைமாந்தர் தம் கூற்றாய்ச் சொல்லும் உத்தியைக்கூட நாம் சிலம்பில் காணலாம். கண்ணகிக்குச் சிலை நிறுவி விழாமுடிந்த பின்னர் இளங்கோவடிகள் பத்தினிக் கோட்டத்திற்குச் செல்லுகின்றார். அப்போது நிகழ்ந்ததை அடிகள் தம்கூற்றாய் எழுதிக் காட்டுகிறார்.

"நானும் கண்ணகி கோயிலுள் சென்றேன். என் எதிரே பத்தினித் தெய்வம் தேவந்திமேல் விளங்கித் தோன்றியது. வஞ்சி நகரில், அரண்மனை அத்தாணி மண்டபத்தில் உள்ள தந்தையின் அருகே நீ வீற்றிருந்தாய். அப்போது அங்குவந்த நிமித்திகன் ஒருவன் அரசனாகும் இலக்கணம் உனக்கே உண்டு என்றான். அச்சொல்லைக் கேட்ட செங்குட்டுவனின் வருத்தம் ஒழியுமாறு நீ துறவியாய் மாறினாய்" எனக் கண்ணகித் தெய்வம் என்னுடைய வரலாற்றை என்னிடம் கூறியது என்று எழுதுகிறார். (சிலப்பதிகாரம், வரந்தரு காதை 171-182). கதைமாந்தர் கதையைத் தாமேகூறும் வகையில் எழுதும் இந்த உத்தி இன்று புதினங்களில் பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் தம்முடைய புதினங்கள் பலவற்றில் கதைமாந்தர்களே கதையைச் சொல்லிச் செல்வது போல எழுதியிருக்கிறார். அவரைப் பின்பற்றித் தமிழில் மு.வ. அவர்களும் அவ்வாறு புதினங்கள் படைத்துள்ளார். பேராசிரியர் முனைவர் செ. உலகநாதன் 'புலம்பும் சிலம்பு' என்னும் தலைப்பில் சிலப்பதிகாரக் கதையைக் கதைமாந்தர்களே கூறிச்செல்வது போல இந்நூலை எழுதியிருக்கிறார். சிலப்பதிகாரத்திற்கு இன்றைய புதின வடிவத்தைத் தந்திருக்கிறார். சிலப்பதிகாரத்திலுள்ள செய்தி ஒரு சிறிதும் விடுபடாமல் சொல்லப்பட்டுள்ளது. கதை, படர்க்கைக் கூற்றாய் இல்லாமல் கதைமாந்தர்களும், கதை ஆசிரியரும் தன்மைக் கூற்றில் கூறுவதாய் இருக்கிறது. கதைமாந்தர்களின் தற்கூற்றாய் ஒரு காப்பியத்தைப் புதினவடிவில் முதன்முதலில் ஆக்கித் தந்திருப்பவர் பேராசிரியர் உலகநாதன் அவர்களே ஆவார்.

சிலப்பதிகாரம் முப்பது காதைகளைக் கொண்டது. கோவலன், கண்ணகி சிலப்பதிகாரத்தின் முதன்மைக் கதை

மாந்தர்கள்; மாதவி, கவுந்தியடிகள், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் முதலியோர் துணை மாந்தர்கள். இவர்கள் தத்தம் கதையைத் தாமே கூறுவதாயும் இடையிடையே இளங்கோ அடிகள் கூறுவதாயும் இப்புதினத்தை ஆசிரியர் எழுதிச் செல்கிறார்.

கோவலன் கண்ணகி திருமணம், மங்கலப் பெண்டிர் மணமக்களை வாழ்த்துவது ஆகியவற்றைச் சொல்வது சிலப்பதிகார *'மங்கல வாழ்த்துப் பாடல்'*; கோவலனும் கண்ணகியும் சில ஆண்டுகள் இனிதாய் நல்லறம் நடத்தினர் என்பதைக் கூறுவது *'மனையறம் படுத்த காதை'*. இவ்விரு காதைகளின் கதையைக் கோவலன் தன்கூற்றாய்க் கூறுவதாய் உள்ளது.

அரசன் முன்னர் மாதவி நாட்டியமாடிப் பரிசு பெற்றதுவும், பரிசுமாலையை விலைகொடுத்து வாங்கிய கோவலன் மாதவி வீடு சென்றதுவும், கண்ணகியை மறந்து அங்கேயே தங்கிவிட்டதுவும் காப்பியத்தின் *'அரங்கேற்று காதை'*ச் செய்தி. இக் காதைச் செய்திகளை மாதவி சொல்வதாய் உலகநாதன் எழுதியுள்ளார்.

காதலனோடு கூடியுள்ள மாதவி மகிழ்ந்தும், கணவனைப் பிரிந்துள்ள கண்ணகி வருந்தியும் இருப்பதைக் கூறும் *'அந்திமாலைச் சிறப்புச் செய்காதை'*, புகார் நகரில் நடைபெறும் இந்திரவிழா நிகழ்ச்சிகளை விரிவாய்க் கூறும் *'இந்திரவிழவூ ரெடுத்த காதை'*, இந்திரவிழாவின் முடிவில் மாதவியும் கோவலனும் கடலாட்டினைக்காணக் கடற்கரையைச் சென்றடைவதைக் கூறும் *'கடலாடு காதை'* என்னும் மூன்று காதைகளின் கதைப் பகுதியை இளங்கோ அடிகளே சொல்வதாய் இந்நூலுள் காணப்படுகிறது.

கடற்கரையில் கோவலனும் மாதவியும் கானல்வரிப் பாடல்களைப் பாடுவதும், மாதவியின் பாடலால் மனம் வேறுபட்ட கோவலன் மாதவியைப் பிரிந்து செல்வதும் பற்றிய செய்தியடங்கிய *'கானல் வரி'*க் கதையை மாதவி கூறுகிறாள்.

கோவலனைப் பிரிந்த மாதவி, வீடுசென்றதும் கோவலனுக்குக் கடிதம் எழுதித் தன் தோழி வயந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள்; கோவலன் அதைப் பெற மறுத்து மாதவியைப் பழித்துப் பேசுகின்றான். திரும்பி வந்து இதைச் சொன்ன வயந்தமாலையிடம் மாதவி, 'மாலை வாராராயினும் காலை காண்குவம்' என நம்பிக்கையோடு சொன்னாள். சிலம்பில் *'வேனிற் காதை'* இதனைக் கூறுகிறது. இந்நூலுள் இச்செய்தியை இளங்கோவே கூறுவதாய் உள்ளது.

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியிடம் வந்து சேர்கிறான்; பொருளீட்டக் கண்ணகியையும் உடனழைத்துக் கொண்டு இருள்புலராக் காலையில் மதுரைநோக்கிப் புறப்படு கிறான். *'கனாத்திறம் உரைக்கும்'* இக்காதையைக் கண்ணகி தன் சொற்களால் சொல்கிறாள்.

கவுந்தியடிகள் துணையுடன் கோவலனும் கண்ணகியும் சோழநாட்டு மருத நிலவழியே பாண்டியநாட்டை நோக்கிச் செல்வதைக் கூறும் *'நாடுகாண் காதை'* (49ஆம் அடி முதல்) கவுந்தியடிகள் கூறுகிறார்.

உறையூரிலிருந்து தெற்குத்திசை நோக்கிப் பாண்டிய நாட்டுக் காட்டினுள்ளே பயணம் தொடர்வதைச் சொல்வது *'காடுகாண் காதை'* வழியில் ஐயை கோயில் ஒன்றன் அருகே மூவரும் தங்கினர். தெய்வமேறப் பெற்ற சாலினி கண்ணகியின் பெருமையை எடுத்துரைக்கிறாள். வேட்டுவர்கள் கொற்றவையை வழிபட்டுத் துதிக்கின்றனர். இச்செய்திகளைக் கூறுவது *'வேட்டுவ வரி'.* பயணம் தொடர்கிறது; வழியிடையே கோசிகமாணி என்பான் கோவலனைக் கண்டு மாதவி அனுப்பிய கடிதத்தைத் தருகிறான். கடிதத்தைப் படித்த கோவலன் 'மாதவி தீதிலள்' என உணர்கிறான். தொடர்ந்து சென்று வையை ஆற்றைக் கடந்து மதுரைப் புறஞ்சேரியில் கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் தங்குகின்றனர் என்னும் செய்திகளைக் காப்பியத்தில் *'புறஞ்சேரியிறுத்த காதை'* கூறுகிறது. கோவலன் கண்ணகியைக் கவுந்தியடிகளின் பாதுகாப்பில் இருக்கச் செய்து, மதுரையினுள்ளே சென்று ஊர் முழுதும்கண்டு திரும்புவதைக் கூறுவது *'ஊர்காண் காதை'.* இந்நான்கு காதைகளிலும் அடங்கியுள்ள கதைப் பகுதியைக் கோவலன் எடுத்துரைப்பதாய் இந்நூலுள் உள்ளது.

கவுந்தி அடிகள் கோவலன் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் தந்தார். மாதரி அவர்களை அழைத்துக் கொண்டு ஆயர்பாடி சென்றடைந்தாள் என்பதைக் கூறும் *'அடைக்கலக் காதை'*யின் முற்பகுதி மாதரி வாயிலாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

கண்ணகியையும் கோவலனையும் மாதரி அடைக்கலமாய்ப் பெற்ற செய்தி அடைக்கலக்காதையின் பிற்பகுதி. ஆயர்பாடியில் கண்ணகி சமைத்தளித்த உணவை உண்ட கோவலன் மதுரை யினுள் சென்று சிலம்பைவிற்று வருவதாய்க் கூறிப் புறப்பட்டான். வீதியில் பொற்கொல்லனைக் கண்டான். அரசியின் சிலம்பை முன்னரே மறைத்து வைத்திருந்த பொற்கொல்லன், கோவலனைக்

கள்வன் என்று பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சொல்ல, மன்னன் ஆராயாது கோவலனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருமாறு கூறினான். கோவலன் கொலையுண்டான். *'கொலைக் களக்காதை'* இதனைக் கூறுகிறது. ஆயர்பாடியில் தீய நிமித்தங்கள் தோன்றுவதை அறிந்த மாதரி ஆயமகளிரைக் குரவைக் கூத்தாடச் செய்து மாயவனை வழிபட்டதை *'ஆய்ச்சியர் குரவை'* கூறுகிறது. கோவலன் கொலையுண்டது கேட்டு கண்ணகிபட்ட துன்பத்தைக் கூறுவது *'துன்பமாலை'*. ஊராரிடம் முறையிட்டவாறே வீதிகளில் சென்று வெட்டுண்டு கிடந்த கோவலனைக் கண்டு அரசன்முன் நீதி கேட்கக் கண்ணகி புறப்படுவதைக் கூறுவது *'ஊர்சூழ் வரி'*. இவ்வைந்து காதைகளின் செய்திகளை இளங்கோ அடிகளே கூறுவதுபோல இந்நூலாசிரியர் செய்துள்ளார்.

பாண்டியன் நெடுஞ்செழியன்முன் கண்ணகி வழக்குரைத் தலும், ஆராயாமல் தீர்ப்புச் சொன்ன பாண்டிய மன்னன் உயிர்துறத்தலும், அருகிருந்த பாண்டிமாதேவியும் உயிர் நீத்ததும் ஆகிய செய்திகளைக் கூறும் *'வழக்குரை காதை'*, பாண்டியன் நெடுஞ்செழியன் வாயிலாய்க் கூறப்பட்டுள்ளது.

'அரசொடு மதுரையை அழிப்பேன்' எனக் கண்ணகி கூறுவது *'வஞ்சினமாலை'*. தீ பெருகி மதுரையை அழிப்பதைக் கூறுவது *'அழற்படு காதை'*. மதுராபதித் தெய்வம் கண்ணகியின்முன் தோன்றி மதுரை எரிந்ததற்கும் கோவலன் கொலையுண்டதற்கும் ஊழ்வினையே காரணம் என்பதை எடுத்துரைக்கிறது. கண்ணகி மதுரையிலிருந்து நீங்கி வையைக் கரைவழியே சென்று, சேரநாட்டிலுள்ள நெடுவேள் குன்றத்தின்மீது ஏறிநின்றபோது வானவர்கள் கோவலனோடு வந்து அவளை விண்ணுலகுக்கு அழைத்துச் சென்றனர் எனும் செய்திகளை உள்ளடக்கியது *'கட்டுரை காதை'*. இம்மூன்று காதைகளின் செய்திகளை இளங்கோவடிகளே கூறுவதுபோல எழுதப்பட்டுள்ளது.

*'குன்றக் குரவை'*ப் பகுதியைப்பற்றிய செய்திகளைக் குன்றக் குறவர்களே கூறுகின்றனர். விண்ணவர்கள் கண்ணகியை அழைத்துச் சென்றதை மனைவியோடு மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் மலைக்குறவர்கள் கூறினர். சேரன் கண்ணகிக்குச் சிலை சமைக்க, இமயமலையில் கல்லெடுக்க முடிவு செய்தான் என்பதைக் *'காட்சிக் காதை'* கூறுகிறது. வடநாட்டில் கனகனும் விசயனும் தமிழ் மன்னர் வீரத்தைப்

பழித்தனர் என்பது கேட்டுக் கண்ணகி சிலைக்கான கல்லை அம்மன்னர் தலையில் ஏற்றிக் கொணர்வதாய்ச் சூளுரைத்தான், சேரமன்னன். வடநாடு சென்று பகைவரை வென்று இமயமலையில் கல்லெடுத்து வரச்செய்தான் எனும் வரலாற்றைக் *'கால்கோள் காதை'* கூறுகிறது. இவ்விரு காதைச் செய்தி சேரன்செங்குட்டுவன் கூற்றாய் இந்நூலுள் கூறப்பட்டுள்ளது.

இமயமலையில் எடுத்த கல்லைக் கனக விசயர் தலை மீதேற்றிக் கொணர்ந்து, கங்கையில் நீராட்டுவித்துச் சேரன் வஞ்சி திரும்பியதைக் கூறுவது *'நீர்ப்படைக் காதை'*. கண்ணகியின் சிலையை அதற்கென அமைக்கப்பட்ட கோட்டத்திலே நிறுவியதைக் கூறுவது *'நடுகற் காதை'*. தெய்வ வடிவில் கண்ணகி காட்சியளித்து, 'பாண்டியன் குற்றமற்றவன்; வானுலக விருந்தினன் ஆயினன்; நான் அவன் மகள்' எனக் கூறினாள்; மகளிர் வாழ்த்திப் பாடினர் என்ற செய்தி *'வாழ்த்துக் காதை'*யில் அடங்கியுள்ளது. விழாவிற்கு வந்திருந்த பிற நாட்டு மன்னர்கள், கண்ணகியை 'எங்கள் நாட்டுக்கும் எழுந்தருள்க' என்று வேண்டினர். 'தந்தேன் வரம்' எனக் கண்ணகிதெய்வத்தின் குரல் கேட்டது என்பதைச் சொல்வது *'வரந்தரு காதை'*. இந்நான்கு காதைகளின் கதையை இளங்கோவே கூறுவதுபோல உலகநாதன் அமைத்துள்ளார்.

இவ்வாறாய்க் காப்பியம் முழுவதையும் கதைமாந்தர்களே கூறிச் செல்வதாய் அமைத்துத் திறம்பட இந்நூலை யாத்துள்ளார் அருமைப் பேராசிரியர் உலகநாதன்.

காப்பியத்தில் பயிலும் செய்யுட்பகுதியை எளிய உரை நடையில் புதினத்துக்கேற்ற வகையில், படிப்போர் உள்ளங் களைக் கவரும் வகையில் உலகநாதன் எழுதிச் செல்கிறார்.

இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணஅணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி
யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ,
மாநகர்க்கு ஈந்தார் மணம்.

அவ்வழி,

முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம், வெண்குடை
அரசெழுந்ததொர் படியெழுந்தன அகலுள்மங்கல அணியெழுந்தது
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை?

காப்பியத்தின் இப்பாடற்பகுதியை உலகநாதன்,

"எனக்கும் கண்ணகிக்கும் நடந்த திருமணம் மன்னர் இல்லத்துத் திருமணம்போல் சீரும் சிறப்புமாய் நடந்தது. யானையின் பிடரியில் அழகிய அணிகள் அணிந்த பெண்களை அமரச் செய்து புகார் நகரம் முழுதும் எங்கள் திருமணச் செய்தியை அறிவிக்கச் செய்தனர்.

திருமண நாளில் பல இசைக்கருவிகள் இசைக்கப் பெற்றன. முரசுகள் முழங்கின; மத்தளங்கள் ஒலித்தன; சங்கங்கள் ஒலித்தன. அரசர்களுக்கு எழுந்ததுபோல வெண்கொற்றக் குடைகள் எழுந்தன.

மாலைகள் தொங்கும் வயிரமணித் தூண்கள் அமைந்த மண்டபத்தில் நீலப்பட்டு விதானமும் அழகிய முத்துப் பந்தலும் அமைக்கப்பட்ட இடத்தில் நடந்தது, எங்கள் மணம்; வானில் தவழும் மதியம் உரோகிணி நட்சத்திரத்தைச் சேரும் நல்ல நாளில்தான் மணச்சடங்கு நடந்தது.

முதிய வேதமறிந்த பார்ப்பனன் மறைநெறிப்படி சொல்லிக் காட்டிட நானும் கண்ணகியும் தீயை வலமாக வந்தோம்" எனக் கோவலன் சொல்வதுபோல எழுதியிருக்கிறார்.

நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டினள் ஆதலின் காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை இயல்பினின் வழாஅமைத்
தலைக்கோல் எய்தித் தலைஅரங்கு ஏறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள்; அதுவே
நூறுபத்து அடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுஉயர் பசும்பொன் பெறுவதுஇம் மாலை;
மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்குஎன
மான்அமர் நோக்கிஓர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பாண்மையில் நிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்துஎன்

என அரங்கேற்று காதையில் வந்துள்ள இச்சிலப்பதிகாரப் பகுதியை மாதவி கூறுவதாய் உலகநாதன் எழுதுகிறார்.

'நாட்டிய நன்னூல்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள முறைகளை நன்கு கடைப்பிடித்து நடனம் ஆடினேன்.

சோழமன்னன் என் நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்து 'தலைக்கோலி' என்ற பட்டப்பெயரையும் பச்சைமாலையையும் எனக்கு வழங்கினன். விதிமுறைப்படி ஆயிரத்து எட்டுக் கழஞ்சுப் பொன்னை ஒருமுறையாகப் பெறுபவள் என்னும் உயர்ந்த தகுதியையும் பெற்றேன்.

மான்போன்ற மருண்ட பார்வை அமைந்த கூனியின் கையிலே ஆயிரத்தெட்டு கழஞ்சு வீறு உயர்ந்த பசும்பொன்னின் மதிப்புடைய பச்சைமாலையைத் தந்தேன். அக் கூனி, நகரத்து இளைஞர்கள் சுற்றித் திரியும் மறுகில் (தெருவில்) நின்று, "இம் மாலையை வாங்குபவர் மாதவியாகிய இந்த இளங்கொடிக்கு மணாளனாய் அமைவார்" என விலை கூறுபவள் போன்று கூவினாள்.

முருகன்போன்று அழகிய இளைஞர் கோவலன் என்பவர் அந்த மாலையை உடனே விலைக்கு வாங்கிக் கூனியுடன் என் மனைக்கு வந்தார். என்னை அன்புடன் அணைத்து மகிழ்ந்து மயங்கினார். அவர் மனைவி கண்ணகி குற்றமற்றவள் எனவும் நற்பண்புடையவள் எனவும் அறிந்தேன். எனினும், அவளை மறந்து என்னுடனேயே வாழ்ந்தார்" இவ்வாறு உலகநாதன் எழுதியுள்ளார்.

பச்சைமாலையை மாதவியின் தாய், கூனி கையிலே கொடுத்து நகர நம்பியர் திரியும் தெருவில் நிற்கவைத்தாள் என்பது அனைத்து உரையாசிரியர்களும் கொண்டுள்ள உரை. 'மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு' என்பதை மாதவியின் தாயின் கூற்றாகவே கொள்ள வேண்டும். உலகநாதன் மாதவியே மாலையைக் கூனியின் கையில் கொடுத்து நிற்கச் செய்வதாய் எழுதியுள்ளார். இஃது பொருந்துவதாயில்லை. மாதவி அவ்வாறு கொடுத்து நிற்கச் செய்தாள் என்று கொள்வது அவளுடைய பண்பு நலனுக்கு ஏற்றதன்று.

'புலம்பும் சிலம்பு' என்னும் இப்புதினத்தின் சிறப்புகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியரின் நடை தூய தமிழில் இனியதாகவும் எளியதாகவும் அமைந்துள்ளது.

தமிழகத்தின் ஒருமைப்பாட்டைக் கருதி மூல ஆசிரியர் இளங்கோவடிகள் இயற்றியுள்ள பாடல் அடிகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் உரைநடையில் சிலப்பதிகாரக் கதையை அமைத்துள்ளார், செ. உலகநாதன்.

சான்றாக,

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்
கொங்குஅலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றுஇவ்
அம்கண் உலகு அளித்தலான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொன்கோட்டு
மேரு வலந்திரித லான்

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்

என்னும் பாடலடிகளுக்குப் புதின ஆசிரியர் உய்த்துணர்ந்து அரிய விளக்கம் அளித்துள்ளார்.

விளக்கம் "அடடா! அந்தப் பாடல் வெறும் வாழ்த்துப் பாட்டன்று; போற்றுகின்ற பாடல்மட்டும் அன்று. ஆராய்ந்தால், தமிழகத்தின் ஒற்றுமையை - சேர சோழ பாண்டிய நாடுகளின் ஒற்றுமையை - வலியுறுத்தும் அருமையான பாடல்!

எப்படி என்கிறீர்களா? ஆம்; 'திங்கள்' பாண்டியருடைய மரபைக் குறிக்கிறது (சந்திர குலம்). ஞாயிறு (சூரியன்) சோழருடைய மரபுக்குரியது; 'வான்' என்பது மழையைக் குறிக்கும் சொல்; 'வானவர்' என்பது சேரர்க்குரிய மரபுப் பெயர். எனவே, மழைக்குரிய சேரரைக் குறிக்க "மாமழை போற்றுதும்" என மூவேந்தரையும் சான்றோர் போற்றினர். இந்த ஒற்றுமை உணர்வு நீடிக்க வேண்டும் என்று என் மனத்துக்குள் வேண்டிக் கொண்டேன்" (பக்கம் 11). புதினத்தலைவன் கோவலன் இவ்வாறு கூறுவதாய் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

கானல்வரிப் பாடல்களைக் கோவலனும் மாதவியும் யாழ் மீட்டிப் பாடும்போதுதான் மாதவியின்மீது கோவலன் ஊடல் கொண்டான்; அந்த ஊடல் மாதவியைவிட்டுப் பிரிவதற்குக் காரணமாய் அமைந்தது; மீண்டும் கோவலனை மாதவியால் சந்திக்க முடியாமற் போயிற்று.

கோவலன் பாடிய கானல்வரிப் பாடல்களைக் கேட்ட மாதவி, கோவலன் அழகிய பெண்களிடம் மனத்தைப் பறிகொடுப்பவன் என்றும் அழகியர்பால் நாட்டம் உடையவன் என்றும் தவறாய் நினைத்துவிட்டாள்.

"மீனவர் வாழும் சேரியில் வலை உலரும் முற்றத்தில் மலரைக் கையில் ஏந்தி, மீன்களை உலர்த்தும் பொருட்டாய்ப் பெண்

வடிவம் கொண்டு கொலைவேல் போன்ற நீண்ட கண்களைக் கொண்ட கொடிய கூற்றமாகிய எமன் அலைநீரினை உடைய குளிர்ந்த கானலில் வாழ்வதனை அறியமாட்டேன்; அறிவேனே யானால் கானலிடத்தை அடையேன்!" என்னும் பொருளுடைய பாடல் கேட்டு மாதவி எவ்வாறு எண்ணி இருப்பாள் என்பதனைப் புதின ஆசிரியர், "இப்பாடல்கள் என் கணவர் அழகிய பெண்களின் கண்வீச்சுகளுக்கு ஆளாகி அல்லல்பட்டிருக்கிறார் என்னும் உண்மையை வெளிப்படுத்துவதாய்க் கருதுகிறேன்" (பக். 41) என மாதவி வாயிலாய் உணர்த்தியுள்ளார். கோவலனுக்குப் போட்டியாய் மாதவியும் மற்றொருவனை விரும்புவதுபோல் பொய்யாய்ப் பாடுகிறாள்.

இத்தகைய நுட்பங்கள் சிலப்பதிகாரத்தின் சிறப்பை உணர வழிசெய்கின்றன.

கருத்து எதுவும் விடுபடாமல் உள்ளது; படிக்க எளிமை யாயும் சுவையாயும் இருக்கிறது. இவ்வாறே சிலப்பதிகாரத்தின் முழுப்பகுதியையும் செய்திருப்பது உலகநாதனின் புதிய முயற்சி; அரிய முயற்சியும் ஆகும்.

காப்பியத்தைச் செய்யுள் நடையில் படிக்கத் துன்பப் படுபவர்கள் இந்நூலைப் படித்தால், கதைபடிப்பதுபோலக் காப்பியத்தின் முழுக் கருத்தையும் உணருமாறு செய்திருக்கிறார், உலகநாதன்.

பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படக் கூடிய நூல் இது.

ஆசிரியர் செ. உலகநாதன் தமிழுக்கு அணி செய்யும் காப்பியக் கதைகளை இதுபோன்ற புதினங்களாய் வழங்கிப் புதின இலக்கிய வரலாற்றில் நீங்காத இடம் பெறுவார் என்பது திண்ணம்.

படைப்பிலக்கியங்கள் படைத்து வெளியிடுதற்கென்றே உறுப்பினர்களைச் சேர்த்துவரும் உலகநாதர்க்குக் கதை ஆர்வலர்களும் நாடக ஆர்வலர்களும் மாணவர்களும் உறுப்பினர் களாகி ஊக்கமளிக்க வேண்டுகிறேன். நல்லதமிழ் வளர நல்ல எழுத்தாளர்களைப் புரப்பது தமிழர் கடமை.

அடைக்கலக் காதை, நீர்ப்படைக் காதை ஆகியவற்றில் மாடலன் பெருமளவில் இடம்பெறுவதால் அக்காதைகளின் கதையை மாடலன் கூறுவதுபோல அமைத்திருக்கலாம். ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி போன்ற பகுதிகளை

மாதரியைச் சொல்லச் செய்திருக்கலாம். கதை முழுவதையும் கதை யாசிரியர் கூற்றுக்கு இடமளிக்காது கதைமாந்தர்களாலேயே நடத்திச் செல்லப்பட்டிருக்கலாம். அடுத்துவரும் பதிப்புகளில் ஆசிரியர் இம்முயற்சியை மேற்கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்திற்குத் தெளிவுரை, பதவுரை, கருத்துரை எனப் பல வகைகளில் உரைகள் எழுந்துள்ளன. பேராசிரியர் உலகநாதன் சிலப்பதிகாரத்திற்குப் புதின உரை எழுதியுள்ளார். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

நூலின் இறுதியில் இளங்கோவடிகள் கூற்றாய் ஒரு செய்தியை உலகநாதன் வரைந்துள்ளார்.

"நான் 'சிலப்பதிகாரம்' என்னும் காப்பியத்தை இயற்றி முடித்துள்ளேன். சேரன் செங்குட்டுவனுக்கு இளவலாய் விளங்கித் தமிழ்ப் புலமையுடன் பலசமய அறிவும் உலகியல் அறிவும் வரலாற்று உண்மைகளும் அறிந்திருந்த யான், நாட்டியம், இசை, கூத்து, அரசியல் முதலிய பல நூல்களின் அறிவும் பெற்றிருந்தேன். என் காலத்தில் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனாருடன் நட்புடன் வாழ்ந்தேன்; அவர் என் தமையனார்க்குக் கோவலன் கண்ணகியைப் பற்றியும், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியும், மதுரை மாநகர் எரியுண்டது பற்றியும் விரிவாய்க் கூறியிருந்தார்; அவர் வாயிலாய் அவ்வுண்மை களை யானும் அறிந்தேன்.

சிலம்பின் காரணமாய் நிகழ்ந்த அவலங்கள் புலம்பல்களாய் என் நெஞ்சில் ஒலித்துக்கொண்டே இருந்தன. 'புலம்புதல்' என்னும் சொல்லுக்கு 'ஒலித்தல்', 'அழுதல்' என்னும் பொருள்கள் உள்ளன. இல்லறத்தில் கண்ணகி மகிழ்ச்சியோடு இருந்த காலத்தில் சிலம்புகள் அவள் கால்களில் அணியப்பெற்று ஒலித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. கோவலன் கண்ணகியை விட்டு மாதவியை அடைந்ததும் கண்ணகி சிலம்புகளை அணியவில்லை யாதலின் அவை வீட்டில் முடங்கிக் கிடந்தன. (புலம்பின.)..

கோவலன் பாண்டியன் ஆணையால் கொல்லப்பட்ட பிறகு அச்செய்தி பரவி, பலருக்கும் புலம்பலைத் தருகிறது; கண்ணகி சீற்றமும் புலம்பலும் கொள்கிறாள். பாண்டியன்முன் கண்ணகி வழக்குரைத்துச் சிலம்பை உடைத்து உண்மையை உணர்த்திய போது பாண்டியன் செங்கோல் தவறியதாய்ப் புலம்புகிறான்; அவன் மடிகிறான். அவன் அழிவு கோப்பெருந்தேவிக்குப்

புலம்பல் தருகிறது. அவளும் மடிகிறாள். மேலும் பலர் துன்புற்றுப் புலம்பலுக்கு ஆளாகின்றனர்.

இத்தகைய புலம்பல் தந்த கண்ணகியின் திருவடிச் சிலம்பு காரணமாய் அமைந்த இந்நெடுங்கதைக்குப் 'புலம்பும் சிலம்பு' எனத் தலைப்பிட்டு என் காப்பியத்தைத் தழுவிப் பிற்காலத்தில் எழுதினால் பெருமகிழ்ச்சியடைவேன். தமிழுக்கு முதல் காப்பியம் தந்த என் பணியை எண்ணிப் பெருமை கொள்கிறேன்'' இளங்கோவடிகள் கூற்றாய் உலகநாதன் கூறியுள்ள செய்தி இதுவே!

இளங்கோ கூறியுள்ளதாய் இவர் கூறியுள்ளதற்கேற்ப இவரே, 'புலம்பும் சிலம்பு' எனும் தலைப்பில் இந்நூலை எழுதியுள்ளார். இன்னும் பலரும் எழுத முற்படுவர் என நம்பலாம்.

சிலப்பதிகாரத்தைப் போலவே தமிழிலுள்ள பிற காப்பியங்களையும் உலகநாதன் இவ்வாறே கதைமாந்தர்களின் தற்கூற்றுப் புதினமாய்ச் செய்து தரவேண்டுமென விழைகிறேன்.

நூல் ஆக்கம்	பேராசிரியர் செ. உலகநாதன்
வகைமை	காப்பியப் புதினம்
வெளியீடு	செழியன் பதிப்பகம், திருத்தணி. (1996)

5

சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள்

திரு கோ. பார்த்தசாரதி அவர்கள் சென்னை வாணுவம் பேட்டையில் திருக்குறள் மன்றம் ஒன்றனை நிறுவிப் பல்லாண்டு களாய்ப் பயன்மிகு முறையில் நடத்தி வருகின்ற பண்பாளர். இருப்பூர்தித் துறையில் பணியாற்றிக் கொண்டே இனிமைத் தமிழுக்கும் தொண்டாற்றி வந்த தூயவர். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றது அவருடைய தமிழ்த் தொண்டினை மிகுதியாய் ஆற்றுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறது.

இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரத்தைத் 'தேனிலே ஊறிய செந்தமிழ்' என்பார் கவிமணி தேசிக விநாயகனார். திரு. பார்த்தசாரதி அவர்கள், அத்தேனை மாந்தி மாந்திச் சேர்த்த தேனடையே, 'சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள்' என்னும் இவ்வரிய நூலாகும்.

நூல் பகுப்பு

நூல் இரண்டு பகுதிகளாய் அமைந்திருக்கிறது. முதற்பகுதி சிலப்பதிகாரக் கதையை இளங்கோவழி நின்று கூறுகிறது. இரண்டாவது பகுதியை ஆசிரியரின் எண்ணத்தில் பூத்த ஏழு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழில்மிகு வானவில்லாய் அணி செய்கின்றன.

சிலப்பதிகார மூலத்தில் உள்ளதை - உள்ளவாறே எளிய இனிய, ஆற்றொழுக்கான உரைநடையில் எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் ஆசிரியர் ஆக்கித் தந்திருப்பது மிகவும் போற்றுதற்குரியது. இனிமையும் அழகும் இரண்டறக்கலந்த இனிய தமிழ் நடை ஆசிரியர்க்கு வாய்த்திருக்கிறது. சிலப்பதிகார மூலச் செய்யுள் நடையைப் படிக்க இயலாதவர்கள் இந்நூலைப் படித்தால்போதும் - சிலப்பதிகாரத்தை முழுமையாய் அறிந்தவர்கள் ஆவார்கள். கதைப்போக்கில் இடையிடையே நம் மனத்தில்

என்றும் அழியாது நிற்கவேண்டிய செய்யுளடிகளையும் ஆசிரியர் தந்திருப்பது நூலுக்குத் தனிச் சிறப்பை நல்குகிறது.

சிந்தனைத் துளிகள்

சிலப்பதிகாரக் கதையை எடுத்தியம்புவதோடு இடை யிடையே 'சிந்தனைக்கு... சிந்தனைத் துளிகள்' என்ற வகையில் பல நுணுக்கமான ஆராய்ச்சிக் கருத்துகளையும் ஆசிரியர் தந்திருக்கிறார். பதிகம் இளங்கோவடிகள் பாடியதா அல்லது வேறொருவர் பாடியதா? காப்பியத் தொடக்கத்தில் இருப்பது கடவுள் வாழ்த்தா அல்லது அரச வாழ்த்தா? சிலப்பதிகாரக் காலக் கலை வளர்ச்சி எத்தகையதாய் இருந்தது? கோவலன் மதுரை செல்ல எண்ணியது ஏன்? கண்ணகி கனவின்வழி தீமை வருவது உறுதி என்று அறிந்திருந்தும் பயணம் மேற்கொள்ள உடன்பட்டதேன்? கவுந்தியடிகள் கோபம் எதைக் காட்டுகிறது? கோவலன் மாதவியை மறந்தானா? பாண்டியன் கோவலனைக் கள்வன் எனக் கூறித் தண்டனையளித்தபோது கோவலன் பேசாமல் இருந்ததேன்? சேரன், கனகவிசயரைச் சோழ பாண்டியர்பால் அனுப்பியது சரியா? என்பன போன்ற பல ஆராய்ச்சி வினாக்களுக்கு ஆசிரியர் நமக்கு விளக்கமளிக்கிறார்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஆசிரியர் தந்துள்ள உட்தலைப்புகள் உள்ளங் கவர்வனவாய் உள்ளன. அத்தலைப்பு களைப் படித்தாலே போதும் - கட்டுரையின் முழுச்செய்தியையும் உணர்ந்தவர்கள் ஆய்விடுவோம். முரசு அறைதல், கொடியேற்றம், வீதி புனைதல், இந்திரனை நீராட்டல், கோயில்களில் வேள்வி-விழா, அறவுரை, சிறைவீடு, இசைமுழக்கமும் விழாமகிழ்ச்சியும் என்ற இக்குறுந்தலைப்புகளைப் படித்த அளவிலேயே இந்திர விழாவின் முழுநடைமுறையயம் கொண்டாட்டத்தையும் நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

உரையாக்கம்

மூலத்திற்கு மெருகு சேர்க்கும் வகையில் ஆசிரியரின் உரைநடை அமைந்துள்ளது.

> கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!
> சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
> மாறி வருவன்; மயங்கா தொழிக!

என்ற இச்செய்யுளடிகளை "கற்பின் சுடரே! பொற்புடைய செல்வி! உன் இரு சிலம்புகளில் ஒன்றை எடுத்துச் சென்று அங்காடியில் விற்று வருவேன்! நான் திரும்பிவரும் வரையில்

கவலை கொள்ளாமலும் மயங்காமலும் இருப்பாயாக" என எளிய உரைநடையில் தருகிறார். இவ்வாறே முழுநூலும் அமைந்து சிறக்கிறது.

கோவலன் கண்ணகியைப் பிரிந்த போது,

> விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
> வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்து

என்றும், மாதவியைப் பிரிந்தபோது,

> உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை
> ஞெகிழ்ந்தனனாய்

என்றும் இளங்கோவடிகள் பாடுகிறார். இவற்றை இணைத்து ஆசிரியர், "பிரிவு நேர்ந்தபோது கண்ணகியை 'வடுநீங்கு சிறப்பின்' என்ற அடைமொழியாலும், மாதவியை 'உவவுற்ற திங்கள் முகத்தாள்' என்ற அடைமொழியாலும் குறித்தவற்றால், கண்ணகியின் மாசற்ற கற்பின் சிறப்பையும், மாதவியின் களங்கமில்லாத அழகின் செம்மையையும் அறியமுடிகிறது'' எனப் பார்த்தசாரதியார் தரும் விளக்கம் உன்னி உன்னி மகிழற்பாலது!

முறைவைப்பு

'சில சிந்தனைகள்' என நூலுள் ஆங்காங்கே பல செய்திகளைத் திரு. பார்த்தசாரதி சொல்லிச் செல்கிறார். மேலும் மேலும் நம்மைச் சிந்திக்க வைப்பனவாய் அக்குறிப்புகள் அமைந்துள்ளன.

''காப்பியத் தொடக்கத்தில் திங்கள், ஞாயிறு ஆகிய இரண்டனுள் ஆற்றல்வழி ஞாயிறு முதலில் போற்றப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், திங்கள் முதலிடம் பெற்றுள்ளது. திங்கள், கண்ணகியைக் குறியீடாய்க் காட்டி நிற்பது என்று கொண்டால், காப்பியத் தலைவி சிறப்பிக்கப் பெறுகிறாள் என்று எண்ண முடியும். மணமக்கள் அறிமுகம் பெறுவதிலும் தலைமகன் அறிமுகமே முதலில் இருக்கவேண்டும். சிலம்பு, கதைத் தலைவியாகிய ஒரு வணிகக் குலமகளை இறைநிலைக்கு அழைத்துச் செல்லும் பாதையை வகுப்பதால் மணமகள் முதலில் அறிமுகம் செய்யப்படுகிறாள் என்றும் கொள்ளலாம்.

"திங்களும் ஞாயிறும் முறையே சோழ மன்னனது கருணைப் பண்பையும், ஆணையின் ஆற்றலையும் விளக்கும் பொருள்களாய் இருப்பன. மன்னனின் ஆணையைக் காட்டிலும் கருணையே மக்கள் எண்ணத்தில் முதலிடம் பெறும் என்பதைக் குறிக்கவும்

இம்முறை வைப்பு அமைந்திருக்கலாம் என்றும் பார்த்தசாரதி கருதுகிறார்." [1]

திங்களைப் போற்றுதும்.... ஞாயிறு போற்றுதும்.... மாமழை போற்றுதும்.... என்பது காப்பியத்திலுள்ள முறைவைப்பு. காப்பியத் தலைவியாகிய கண்ணகியின் நிலைப்பாடுகளை இம்மூன்றும் குறிக்கின்றன எனும் வகையிலும் இதனை எண்ணிப் பார்க்கவும் இடமுண்டு. கண்ணகி சோழநாட்டில் பிறந்தாள்; பாண்டி நாட்டிற்குக் கணவனுடன் சென்றாள்; பின்னர்ச் சேரநாடு சென்று மறைந்தாள்! அவள் சோழநாட்டில் அமைதியான குடும்பப் பெண்ணாய்க் குளிர்நிலவு பொழியும் திங்களொப்ப அமைதியாய் வாழ்ந்தாள். பாண்டி நாட்டிலோ அரசன்முன் வழக்குரைத்து, மதுரையைத் தீக்கிரையாக்கிச் சுட்டெரிக்கும் ஞாயிறுபோல விளங்கினாள்; சேர நாட்டிலோ உலகுய்ய வளம் கொழிக்கும் மழைபோல, மக்களுக்கு அருள்பொழிந்து நலம் பயக்கும் தெய்வமானாள். கண்ணகியின் இம்மூவகை நிலைப்பாடுகளைக் குறிக்கவே திங்கள், ஞாயிறு, மழை எனும் முறைவைப்பினை இளங்கோவடிகள் அமைத்தார் என்றும் கூறலாம். தத்தம் நோக்கங்களுக்கேற்ப இவ்வாறான பல விளக்கங்களை இயம்பிச் செல்ல இளங்கோவின் காப்பியம் இடந்தருகிறது.

இருவகைப் பண்பாடு

'கோவலன் கண்ணகி திருமணம் சங்கால மரபாகிய களவின்வழி வந்த திருமணமன்று. பெற்றோர் விழைந்து அமைத்துத்தந்த மணவிழாவே இஃது என்பதையும், வேத நெறிப்படி அந்தணர் வேள்வியியற்றிச் செய்த சடங்கு என்பதையும் அறிய முடிகிறது'' [2] எனப் பார்த்தசாரதி கருத்துரைக்கிறார். இத்திருமணமுறை கொண்டு நாம் சிந்திக்க வேண்டிய முக்கியச் செய்தி ஒன்றுண்டு.

சங்க காலத்தில் திருமணம் நடைபெற்ற முறையை அகநானூறு 86, 136 ஆகிய பாடல்கள்வழி அறிகிறோம். இல்லின்முன் வரிசையாய்க் கால்களை நட்டு எழுப்பப்படும் பந்தரின்கீழ்ப் புதுமணல் பரப்பப்படுகிறது; பந்தர் எங்கும் மாலைகள் தொங்கவிடப்படுகின்றன; மணவறையில் மணிவிளக்கு ஏற்றிவைக்கப்படுகிறது; வைகறைப்பொழுதில் மங்கல மகளிர் நிறைநீர்க் குடங்களைச் சுமந்து வருகின்றனர்; மகப்பேறுற்ற

1. இந்நூல், பக். 19
2. மேலது, பக். 19

மங்கையர் நால்வர், மணமகளைச் சூழநின்று, "கண்மணி போன்றவளே! நீ கற்புநெறி வழுவாமல், கணவனுக்கு உற்ற துணையாய், உயர்வாழ்வு வாழ்வாயாக" என வாழ்த்திப் பூக்களையும் நெல்லையும் தலைமேல் தூவிக் குளிக்கச் செய்து அணிமணி அணிவித்து, அவளைக் கணவனிடம் ஒப்படைக்கின்றனர். பிறகு, உளுந்து கலந்த பொங்கலை அனைவரும் உண்டு மகிழ்கின்றனர்.

இவ்வாறு எளிமையும் இனிமையும் இணைய நடைபெற்று வந்த திருமணத்தில் பார்ப்பனச் சடங்குகள் நுழையத் தலைப்பட்டு விட்டன என்பதைக் கோவலன் கண்ணகி திருமண நிகழ்ச்சியால் அறிகிறோம்.[1]

சிலப்பதிகாரக் காலத்திலேயே தீயை வலம் வருதல், அருந்ததி காட்டல் ஆகிய சடங்குகளோடு பார்ப்பனர்களை முன்வைத்துத் திருமணத்தை நடத்தும் வழக்கம் நுழைந்துவிட்டது.

.... வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக், கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்ய....[2]

திருமணம் நடைபெற்றது.

(முதிய பார்ப்பனன் ஒருவன் மறைவழிச் சடங்குகளைச் செய்து, வானமீனாகிய அருந்ததிபோலும் கற்புடைய கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணத்தை நடத்தி வைத்ததும் அம்மணமக்கள் இருவரும் தீயை வலம் வந்தனர்.)

இந் நிகழ்ச்சிகொண்டு நாம் ஓர் உண்மையை உணர முடிகிறது. சிலப்பதிகாரக் காலத்தில் இருவேறு பண்பாடுகள் இங்கு நிலவிவந்திருக்கின்றன. ஒன்று தமிழர் பண்பாடு; மற்றொன்று பார்ப்பனப் (ஆரியப்) பண்பாடு. இப்பண்பாட்டின் நுழைவைச் சிலப்பதிகாரத்தில் இன்னும் சில இடங்களிலும் காண்கிறோம்.

கணவனைப் பிரிந்திருந்த கண்ணகி, தன் பார்ப்பனத் தோழி தேவந்தியிடம் தான் கண்ட கனவினைச் சொன்னாள். அப்போது தேவந்தி கூறினாள் "பொன்போன்ற கண்ணகியே! கண்ட கனவினால் நெஞ்சம் கலங்காதே! நீ கணவனால் வெறுத்துக் கைவிடப்பட்டவள் அல்லள். மகளிர் கணவன் பொருட்டுச் செய்யும் நோன்பில் பண்டு தவறினைபோலும். அதனாற்றான்

1. சு. செல்லப்பன், சிலம்பொலி, பக். 13
2. சிலப்பதிகாரம், மங்கல., 50-53

உனக்கு இக்குறை நேர்ந்துள்ளது. இக்குறையை எளிதில் போக்கிவிடலாம். காவிரி கடலொடு கலக்குமிடத்தில் நெய்தற் கானல் ஒன்றுள்ளது. அதில் சோமகுண்டம், சூரியகுண்டம் என இரு புண்ணியத்துறைகள் உள்ளன. அவற்றுள் மூழ்கி, அங்குள்ள காமவேள் கோயிலிற் சென்று வணங்கும் பெண்கள் தம் கணவரோடு சேர்ந்து இன்புறுவர். நாம் ஒரு நாள் அப்புனலாடப் போவோம்" என்றாள். அதைக்கேட்ட அக்கணமே, 'பீடன்று' என்ற சொல் கண்ணகியின் வாயிலிருந்து புறப்பட்டது.

கணவன் பிரிந்தால் புண்ணியத்துறைகளில் ஆடி, பூசனை செய்து, 'கணவனைத் தருக' என்று வேண்டுவது தமிழ்ப் பண்பாடு அன்று; அஃது ஆரியப் பண்பாடு என்பதைத் தேவந்தி கண்ணகி உரையாடல் உணர்த்துகிறது. நுணுகி நோக்கினால் காப்பியம் முழுவதும் பல இடங்களில் இவ்வாறான பண்பாட்டு வேறுபாடுகளை இளங்கோ காட்டியிருப்பதை உணரலாம்!

பார்ப்பனத்தி ஒருத்தி கீரிப்பிள்ளை ஒன்றனை வளர்த்து வந்தாள். ஒருநாள் குழந்தையைத் தொட்டிலிலிட்டு, அருகே கீரியை விளையாடவிட்டு, நீர் மொண்டுவரக் குளத்திற்குச் சென்றாள். அவ்வேளையில் பாம்பு ஒன்று வீட்டினுள் நுழையக் கீரி அதனைக் கொன்று, குருதியொழுகும் வாயுடன் பார்ப்பனத்தியைக் காண ஓடியது. கீரியின் வாயில் குருதியைக் கண்ட அவள், அது தன் குழந்தையைத்தான் கடித்து விட்டதென் றெண்ணிக் குடத்தை அதன்மேல் போட்டாள். கீரி இறந்தது. வீட்டில் வந்து பார்த்தாலோ நிலை வேறாய் இருந்தது. கீரியைக் கொன்ற பாவத்திற்காக அவள் கணவன் மனைவியைக் கைவிட்டுப் பாவச் செயலுக்குக் கழுவாய் தேடும் முறையில் கங்கையாட வடதிசை நோக்கிச் சென்றான். தன்னைப் பின்தொடர்ந்த மனைவியிடம், "பாவம் செய்த உன்கையில் உணவு பெற்றுண்பது முறையன்று; வடமொழி வாசகம் எழுதிய இவ்வேட்டினை நீ செய்த குற்றம் நீங்கத் தானம் கொடுக்கக் கூடிய நல்லவர் கையில் கொடுப்பாயாக" என ஓர் ஏட்டினைத் தந்து சென்றுவிட்டான். அவள்,

> பிடிகைத் தெருவில் பெருங்குடி வாணிகர்
> மாட மறுகின் மனைதொறும் மறுகிக்
> கருமக் கழிபலம் கொண்மினோ....'

சிலப்பதிகாரம், அடைக்., 60-62

(கடைவீதியிலும், பெருங்குடி வாணிகர் வாழும் மாட வீதிகளிலும், வீடுதோறும் சென்றலைந்து, 'என் பாவம் தொலையும் தானம் செய்து புண்ணியம் பெறுங்கள்'.)

எனக் கூறித் திரிந்தாள். கோவலன் அவளை அழைத்து, 'நீயார்? உற்ற இடர் யாது?' என வினவினான். அவள் தனக்குற்றதை எடுத்துரைத்து,

இதழ்இது வாங்கிக்
கைப்பொருள் தந்துஎன் கடுந்துயர் களைக...[1]

(இந்த ஏட்டினை வாங்கி, இதன் பொருள் தெரிந்து, கைப்பொருள் தந்து, என் கடுந்துன்பத்தைக் களைந்தருள்க)

என வேண்டினாள். கோவலனும் அவளை 'அஞ்சேல்' எனத் தேற்றி, அந்தணர்கள் உரைத்த நூலில் உள்ளவாறு, பார்பனத்தியின் கொலைக்குற்றம் நீங்கும்வண்ணம் தான தருமங்களைச் செய்து அவளுடைய துன்பத்தைப் போக்கினான்; காட்டு வழியே சென்ற அவள் கணவனையும் அழைத்துவந்து அவளுடன் சேர்ப்பித்தான். கோவலனின் இச்செயலை நினைவு கூர்ந்து மாடல மறையவன், அவனை, 'செல்லாச் செல்வ' என்று மனம்விட்டுப் பாராட்டினான்.

இங்கும் பண்பாட்டு வேறுபாட்டினைக் காணமுடிகிறது.

தானம் செய்ததும் கீரியைக் கொன்ற அவள் பாவம் நீங்கியதாய்ப் பிள்ளையைக் கொன்ற பார்ப்பனத்தியின் கதை கூறுகிறது; பிரிந்த அவள் கணவனும் வந்து சேர்கின்றான். ஏற்ற கழுவாய் மூலம் பாவத்தைப் போக்கிக்கொள்ள முடியும் என்பது பார்ப்பனப் பண்பாடு என்பதை இக்கதை வாயிலாய் அறிகிறோம். தமிழர் பண்பாடோ குற்றம் செய்தால் அது குற்றமே! கழுவாய்மூலம் விடுவாய் தேடும் பண்பு அவர்களிடம் இல்லை. சான்று சிலம்பிலேயே உள்ளது. கோவலனைக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தன் குற்றத்திற்காய் உயிரைவிட்டானேயன்றி, ஆராயாது செய்த கொலைக்கு, 'அந்தணர் உரைநூல் கிடக்கை' யில் கழுவாய் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று தேடிக் கொண்டிருக்கவில்லை. உயிரை விடுகிறான்; பழியைத் துடைக்கிறான்.[2]

---

1. சிலப்பதிகாரம், அடைக்., 66-67
2. சு. செல்லப்பன், சிலம்பொலி, பக். 240

வீரம்மிக்க தமிழ் மன்னர்களை வேள்விக்குத் துணைநிற்கும் கோழைகளாக்கிவிட்டனர் பார்ப்பனர் என்பதையும் சிலம்பிலே காணமுடிகிறது. கண்ணகிக்குச் சிலைசமைக்க இமயத்தில் எடுத்த கல்லைத் தமிழர் வீரத்தை இகழ்ந்த வடநாட்டு மன்னர்களாய கனக விசயர் தலையில் ஏற்றிவைத்த சேரன் செங்குட்டுவனின் வீரத்தை, சோழனும் பாண்டியனும் எள்ளி நகைத்தனர் என்பதைக் கேள்வியுற்றதும் சேரனின் கண்கள் சிவந்தன. அருகிருந்து அதைக் கண்ணுற்ற மாடலமறையோன் என்னும் பார்ப்பனன், தன் இனக்கொள்கையை அரசன் காதில் ஓத அதுவே ஏற்ற தருணம் என எண்ணிப் பேசலுற்றான் "அரசே! ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்துவிட்டாய்! இதுவரை போர்களையே இயற்றிவந்த நீ, விண்ணவர் போற்றும் வீடுபேற்றினை உனக்குத் தரக்கூடிய அறக்கள வேள்வியை நான்கு வேதங்களிலும் விதித்துள்ளவாறு செய்ய வேண்டும். அதையும் வேள்வியினைச் செய்கின்ற அந்தணர்களைக் கொண்டு அரசர்க்கென வகுத்துள்ள முறைப்படி செய்யவேண்டும்" என்றான்.

> வானவர் போற்றும் வழிநினக்கு அளிக்கும்
> நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
> அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய
> பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்.[1]

மாடலனின் கூற்றில் மன்னவன் செங்குட்டுவன் மயங்கினான்.

யாக்கை, செல்வம், இளமை நிலையாமையை விரிவாய் எடுத்துக்கூறி வேள்வியினை இயற்ற உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமெனச் செங்குட்டுவனைத் தூண்டினான், மாடலன்.

உடனே, பார்ப்பனர்களைக் கொண்டு, மாடலமறையோன் கூறிய முறைப்படி, வேள்விச் சாந்தியாகிய விழாவினைச் செய்ய ஏவினான், சேரன் செங்குட்டுவன்.

> மாடு மறையோன் சொல்லிய முறைமையின்
> வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி.[2]

தானைத்தலைவன் வில்லவன்கோதையை அழைத்து, "சிறையி லுள்ள ஆரிய அரசர்களை உடனே விடுதலை செய்! அவர்களை நம் மலர்ப்பொழிலுள்ள மாளிகையில் இருக்கச் செய். வேள்வி முடிந்த மறுநாளே அவர்களை அவருடைய நகருக்கு அனுப்பி வை" எனக் கட்டளையிட்டான். "வேள்வி செய்தால் வீடுபேறடையலாம்"

---

1. சிலப்பதிகாரம், நடுகல்., 175-78
2. மேலது, 193-94

எனும் ஆரியப் பண்பாடு 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' எனக் கொதித்தெழுந்த சேரன் செங்குட்டுவனின் வீரத்தைப் பொருளற்றதாக்கிவிட்டது.

கற்புத் தெய்வமாம் கண்ணகிக்கு நாள்தோறும் அருச்சனை செய்துவர தேவந்தி எனும் பார்ப்பனப் பெண்ணை நியமித்தான், சேரன் செங்குட்டுவன்.

கண்ணகிக்குச் சிலைநிறுவி வழிபாடு முடிந்ததும், சேரன் செங்குட்டுவன் மாடலமறையோனுடன் சென்ற இடம் எது தெரியுமா? வேள்விச் சாலை!

> மாடல மறையோன் தன்னொடும் கூடித்
> தாழ்கழல் மன்னர் தன்அடி போற்ற
> வேள்விச் சாலையில் வேந்தன் போந்த(னன்)[1]

மன்னர் எல்லோரும் சேரன் செங்குட்டுவனின் திருவடிகளைப் போற்றி நிற்கின்றனர்; அவனோ பார்பனர் அடிகளைப் பற்ற வேள்விச் சாலைக்குள் நுழைகிறான். சிலப்பதிகார காலத்தில் ஆரியப் பண்பாட்டின் ஆதிக்கம் தமிழகத்தில் வேரூன்றி வளரத் தொடங்கிவிட்டதை இத்தகைய நிகழ்ச்சிகள் நமக்கு நிரூபணமாக்குகின்றன.

முன்னுரைக்கும் உத்தி

கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடைபெறும் திருமணத்தைக் காணவந்தோர் அவர்களை வாழ்த்துகின்றனர். மகளிர் வரிசை வரிசையாய் மணப்பொருள்களையும் மங்கலப் பொருள்களையும் ஏந்திச் சென்றனர். அழகொளிர் மேனியும் ஒசிந்த நோக்குமுடைய ஒண்டொடியார் இன்னிசை இசைக்கின்றனர். இளநகை தவழும் எழில்முக மங்கையர் சாந்து, நறும்புகை, சுண்ணம், விளக்கு, பாலிகை, நிறைகுடம் ஆகியவற்றை ஏந்தி நின்றனர். அவர்கள் மணமக்கள்மீது மலர்களைத் தூவி,

> காதலற் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமல்
> தீதுஅறுக[2]...

"என்றும் பிரியாமல், இணைந்த கை நெகிழாமல், தீதின்றி வாழ்வீராக" என வாழ்த்தினர் என்கிறது சிலப்பதிகாரம்.

"உடன்பாட்டு முறையில் 'இணைந்து வாழ்க' என்று வாழ்த்துவதற்கு மாறாய், 'காதலன் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக' என்று எதிர்மறையில் வாழ்த்துவது முரணான

1. சிலப்பதிகாரம், வரந்தரு காதை, 168-70
2. மேலது, மங்கல., 61-62

வாழ்த்தாய்த் தோன்றுகிறது. பின்னர்த் தலைவன் பிரிய இருக்கிறான் என்பதையும், இவர்கள் வாழ்வில் தீமையே விளைய இருக்கிறது என்பதையும் குறிப்பாய் உணர்த்தும் இலக்கிய உத்தியாய் இவ்வாழ்த்து அமைந்திருக்கிறது எனக் கருத இடமுண்டு" எனப் பார்த்தசாரதி இவ்வாழ்த்துபற்றிச் சிந்தனை கொள்கிறார்.[1]

பின்னர் நிகழவிருக்கும் தீமைகளை மட்டுமன்று, நன்மைகளையும் உயர்வுகளையும் சுட்டும் இடங்களும் சிலம்பில் உள.

வழியிடையே காட்டில் ஐயை கோட்டம் ஒன்றை அடைந்து கண்ணகி, கோவலன், காவுந்தியடிகள் இளைப்பாறியிருந்தனர். அங்கு வேட்டுவர்கள் கொற்றவைக்கு வழிபாடு நடத்திக் குரவைக் கூத்தாடியிருந்தனர். வேட்டுவக் குடியில் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமையுடைய சாலினி என்பாள் தெய்வமேறப் பெற்று, ஆங்கே ஒருபுறத்தில் கணவனோடு தங்கியிருந்த கண்ணகியைச் சுட்டி,

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி,
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து,
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி;[2]....

எனப் பேசினாள். கண்ணகி பின்னாளில் கொங்குநாட்டில் பெருமைபெற இருப்பதையும், மேற்கு மலையில் தெய்வமாய் மாற இருப்பதையும் இது குறிப்பால் உணர்த்துகிறது. கண்ணகி நெடுவேள் குன்றில் அடிவைத்தேறி வேங்கைமர நிழலில் நிற்க விண்ணவர்கள் அவளை வந்தழைத்துச் செல்வதையும், சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கோயில் அமைப்பதையும் அறியும்போது, இது முன்னரே சாலினி சொன்ன வாக்கன்றோ என்று நினைக்கின்றோம்.

மூன்று உண்மைகள்

'சிந்தனைப் பூக்கள்' எனும் கட்டுரைகளில் பார்த்தசாரதி தந்துள்ளவை நீள நினைந்து ஆய்தற்குரியனவாய் அமைந்து சிறக்கின்றன.

இளங்கோவடிகள்,

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று;
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்;

---

1. இந்நூல், பக். 18
2. சிலப்பதிகாரம், வேட்டுவ வரி 47-50

3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்;

என்னும் மூன்று உண்மைகளை விளக்கத் தாம் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளதாய்க் கூறுகிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராயாது கோவலனைக் கொலைசெய்து அரசியல் பிழைத்தான். கண்ணகி வழக்குரைத்தாள். தன் தவறுணர்ந்து தானே உயிர் துறந்தான். அரசியல் பிழைத்த பாண்டியனுக்கு அறம் கூற்றாய் அமைந்தது.

கண்ணகிக்குச் சொற்கோயில் எடுத்து இளங்கோ ஏத்தினார்; அவர் அண்ணன் செங்குட்டுவனோ, 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' எனக் கற்கோயிலமைத்து ஏத்தினான்.

'கற்புக்கடம் பூண்ட இத் தெய்வமல்லது, பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்' எனச் சமணத்துறவி கவுந்தியடிகள் கண்ணகியைப் போற்றிப் புகழ்ந்தார். 'ஒரு மாமணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணி' எனக் கொற்றவைத் தெய்வமே கொண்டாடியது, கண்ணகியை. அக்கினிக் கடவுளும் மதுராபதித் தெய்வமும் கண்ணகியின் உயர்வை உணர்த்துகின்றனர். இவற்றால், 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது' உண்மையாக்கப்படுகிறது.

சங்கமன் என்னும் வணிகன் குற்றமேதும் செய்யாதிருக்க அவன் கொலையுண்ணப் பரதன் என்பவன், காரணமாயினான். கோவலனின் முற்பிறவியே பரதன். பரதனின் மனைவி நீலி, 'எமக்கு இத் துயர் செய்தவர்கள் இதே துயரை அடைவார்கள்' எனச் சாபமிட்டு மடிந்தாள். அந்த ஊழ் உருத்துவந்து ஊட்டியதாலேயே கோவலன் கொலையுண்கிறான்.

இளங்கோ கூறியுள்ள மூன்று உண்மைகளும் நிறைவேறியுள்ளதைக் காப்பியம் நமக்குத் தெளிவுறுத்துகிறது.

பார்த்தசாரதி, கதைத் தலைவி கண்ணகி தெய்வமான நிலையில் சோழ, பாண்டிய, சேர மன்னர் எனும் மூவரைக் கொண்டு அவர்கள் செயல்வழி ஒருவர்க்கொன்றாய் மூன்று நீதிகளை எடுத்துரைத்தாள் என்பதை நயம்பட விளக்கியுள்ளார்.

அரசர்கள் செங்கோல் முறைப்படி ஆட்சிசெய்தாலன்றி மகளிர்க்குக் கற்புநிலை சிறக்காது. புறம்போகும் ஆடவரைத் தகைத்து அரசன் முறை செய்யாவிடின் நாட்டில் கற்புச் சிறவாது என்பதைச் சோழமன்னனைக் காட்டிச் சொல்கிறாள்.

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதுஎன
ஆர்புனை சென்னி அரசர்க்கு அளித்து[1]...

(ஆர்புனை சென்னி அரசன் ஆத்திமாலை சூடிய முடியினையுடைய சோழ மன்னன்)

செங்கோன்மை வழுவுமானால் உயிர் வாழாமையே சிறந்த அறம் என்ற தன்மையைத் தென்னாடு காக்கும் பாண்டியன்மூலம் உலகினர் அறியுமாறு செய்தாள்.

செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலம் காவல் மன்னவற்கு அளித்து[2]....

(தென்புலம் காவல் மன்னவன் தெற்குப் பகுதியை ஆளுகின்ற பாண்டிய மன்னன்)

தாம் உரைத்த வஞ்சினம் நிறைவுற்றபின் அல்லது மன்னர் தம் சினம் தணியார் என்பதை வடநாட்டு வேந்தர்களை வெற்றிகொண்டு உலகுக்குக் காட்டினான் சேரன் செங்குட்டுவன்.

வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவர்க்கு அளித்து[3]

(குடதிசை வாழும் கொற்றவன் - மேற்குத் திசையில் ஆட்சி செய்யும் சேரன் செங்குட்டுவன்)

அளித்து.... அளித்து.... அளித்து... என மூன்று சொற்களால் முப்பெரும் நீதிகளைக் காப்பியத் தலைவி கண்ணகி கூறியிருப்பதை சிறப்பாய் எடுத்துச் சொல்லியிருக்கிறார் பார்த்தசாரதி[4]. கண்ணகி (1) தன் வாழ்வின் அவலத்தால் (2) கணவன் இறப்பினால் (3) ஆரிய அரசர் தோற்றழிந்த தன்மையால் இவற்றை உணர்ந்து சொல்லி யிருக்கிறாள்.

ஊழின் ஆட்சி

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவதாய்க் காப்பியம் முழுவதும் கூறிச் செல்லப்பட்டிருப்பதைத் தொகுத்து, ஊழ்வினை கோவலனையே தொடர்ந்துவந்து பற்றியது எனப் பார்த்தசாரதி விளக்குகிறார்.

---

1. சிலப்பதிகாரம், நடுகல் காதை 207-11
2. சிலப்பதிகாரம், நடுகல் காதை 212-13
3. மேலது, 214-17
4. இந்நூல், பக். 259-65

'கோவலனும் மாதவியும் கானல்வரிப் பாடல்களைப் பாட, 'மன்னும் ஓர் குறிப்புண்டு; இவன் தன்நிலை மயங்கினான்' என்று மாதவி கருதுகிறாள். மாதவி தானும் ஓர் குறிப்பினள்போல் கானல்வரிப் பாடல் பாட, 'தான் ஒன்றின்மேல் மனம் வைத்து மாயத்தாள் பாடினாள்' எனக் கருதிக் கோவலன் மனவேறுபாடு கொள்கிறான். இங்கேதான் ஊழ்வினை உருத்துவந்து நிற்கின்றது. இளங்கோவடிகள் மனம் உருகி,

> யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து உருத்ததாகலின்
> உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனன்'

என்று கூறுகிறார். யாழிசையே ஊழ்வினையின் உருத்தத்தின் தொடக்கமாகிறது[2]. காட்சி வருணனை வாயிலாயும் இதனை இளங்கோவடிகள் நுணுக்கமாய்ப் புலப்படுத்தியுள்ளார்.

யாழினை மாதவி பெற்றதும் அதில் இசையெழுப்பிச் சுருதி கூட்டுகிறாள். யாழின் நரம்புகள்மீது அவள் விரல்கள் அங்குமிங்கும் அலைகின்றன. அஃதை இளங்கோவடிகள்,

> மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்
> பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர

என்கிறார். மென்மையும் செம்மையும் நிறைந்த தன்னுடைய கைவிரல்களில் மாதவி நீலநிற மோதிரங்களை அணிந்துள்ளாள். நரம்புகளின்மீது கைவிரல்கள் அங்குமிங்குமாய்ச் சென்றுவருவது பாடுகின்ற வண்டுக்கூட்டம் மலர்களில் படிந்து படிந்து எழுவதைப் போன்றிருந்ததாம்!

வண்டுகள் தேனுண்ண மலர்களில் நுழையும்போது மலர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. மகரந்தச் சேர்க்கையினால்தான் பூ கருவுற்று, காயாகி, கனிந்து விதைகளைத் தருகிறது. எனவே, மலர் விதையாய் மாற, மலரில் வண்டு நுழைய வேண்டியது இன்றியமையாததாகிறது. மாதவியின் கையிலுள்ள யாழ் மலரில், மகரந்தச் சேர்க்கை நடைபெற அவள் கைவிரல்களாகிய வண்டுகள் அதில் படிகின்றன. யாழ்ப்பூ கருவுற்று, 'வினைவிதை' உருவாகிறது. 'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது'. ஆதலால், அடிகள் அதற்கேற்ப மாதவியின் கைவிரல்களை வண்டுகளாக்கி அவற்றை யாழ்மலரில் நுழையச் செய்து, வினைவிதையை உருவாக்கிக் காட்டியிருப்பது மிகச் சிறந்த நுணுக்கமாகும். இந்த விதைதான் முளைத்து, வளர்ந்து, பயனை விளைவிக்கவிருக்கிறது.

1. சிலப்பதிகாரம், கானல்வரி, கட்டுரை 4-5
2. இந்நூல், பக். 295

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியையடைகிறான். 'இழந்த பொருளீட்ட மாடமதுரை செல்கிறேன்; நீயும் எழுக' எனக் கோவலன் அழைக்கிறான். கண்ணகியும் மறுக்காமல் புறப்பட்டாள். இந்நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதையின் இறுதியிலுள்ள வெண்பா,

.... மூதை
வினைகடைக் கூட்ட வியம்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்[1]

எனக் கூறுகிறது. 'பழவினை வந்து ஏவுதலானே கோவலன், காலை இருளைக் கதிரவன் ஓட்டுமுன்னரே (இருள்பிரியாப் புலர்காலையிலேயே) ஊரைவிட்டுப் புறப்பட்டான்' என்பது மேலுள்ள பாடலடிகளின் பொருள். யாழில் விளைந்த வினைவிதை, கோவலன் புகாரை விட்டு நீங்கிச் செல்லுதலாய் முளைக்கத் தொடங்கிவிட்டது.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் திருவரங்கத்தை அடைந்து அங்கிருந்த சோலையொன்றில் தங்கினர். அருகதேவனின் அறங்கூறும் சாரணர் அங்குத் தோன்றினர். கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியுடன் அவர்கள் பாற்சென்று, 'முன்செய்த பழவினைகள் கெட்டொழிவதாகுக' என மனத்துட்கொண்டு திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சாரணர் வருங்காலம் உணரும் திறன்பெற்றவர்; விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர். ஆதலின் தம்மை வணங்கியவர்க்கு வரவிருக்கும் துன்பத்திற்காக வருத்தம் கொள்ளவில்லை. ஆயினும் கவுந்தியிடம் குறிப்பாற் புலப்படுத்தினர்.

ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை
இட்ட வித்தின் எதிர்வந் தெய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவும் ஒண்ணா[2]

'சிறப்புமிக்க கவுந்தி! வரவேண்டிய தீவினை வந்தே தீரும். விளைநிலத்திட்ட வித்து விளைந்து பயன்தருவதைப்போல வினை விளைந்து பயன்தருங்காலத்தில் அதை நீக்கிவிட முடியாது' எனச் சாரணர் உரைத்தனர். கோவலனைப் பற்றியுள்ள வினை, பயனைத் தந்தே தீரும் என்பது சாரணர் கூற்றால் உறுதியாக்கப்படுகிறது. யாழில் இட்ட விதை, கோவலன் புகாரைவிட்டு நீங்கியபோது முளைத்து, திருவரங்கச் சோலையில் பயிராய் நிற்கிறது.

1. சிலப்பதிகாரம், கனாத்திறம்., வெண்பா 3-4
2. மேலது, நாடுகாண்., 171-73

கோவலன் மதுரையினுள் சிலம்பு விற்கச் சென்றான். அரண்மனைப் பொற்கொல்லன் கோவலன்மீது திருட்டுப் பழியைச் சுமத்தினான். ஊழ்வினை பயனைத்தரும் காலம் வந்ததாகையால் பாண்டியன் சிறிதும் ஆராயாமல், 'அரசியின் காற்சிலம்பு கள்வனது கையிலிருந்தால் அவனைக் கொன்று அச்சிலம்பை இங்குக் கொண்டு வருக' என்று ஆணையிட்டான்.

வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினைஅலர் வேம்பன் தேரான் ஆகி,
ஊர்காப் பாளரைக் கூவி, 'ஈங்குஎன்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்குஎனக்
காவலன் ஏவ [1].....

முளைத்து, பயிராய் நின்ற வினை கதிர் ஈன்றுவிட்டது.

கொலையாளிகள் கோவலன் இருந்த இடத்தை அடைந்தனர். அங்குக் கோவலன், தன்னைச் சுற்றிலும் தீய வினையாகிய வலை விரிக்கப்பட்டிருக்க, அதனை அறியாது, அதனுள் தானே சிக்கிக் கொண்டிருந்தவன்போல் இருந்தான் என்கிறார், இளங்கோ.

தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன்.[2]

ஓடும் மானைப் பிடிப்பது எளிதன்று; ஆனால் அதுவே வலைக்குள் பட்டால் எளிதில் பிடித்துவிடலாம். கோவலன் வலைக்குள் அகப்பட்ட மானாயிருந்தான். மானைப் பிணிப்பது கயிற்றுவலை; கோவலனைச் சூழ்ந்திருந்ததோ தீவினை வலை. வலையிலகப்பட்ட மான் தப்பிப் பிழைக்க வழியில்லாததுபோல வினையிலகப்பட்ட கோவலனும் இனி மீள வழியில்லை. வினைப் பயிரில் தோன்றிய கதிர் முதிர்ந்து அறுவடைக்கு அணியமாய் இருப்பதை இங்கு அறிகிறோம்.

காவலன் ஒருவன் கோவலனைத் தன் வாளினால் வெட்டினான். வாள் கோவலனின் உடலைக் குறுக்கே அறுத்துக் கழுத்தை வெட்டியது. வெட்டப்பட்ட இடத்திலிருந்து கொப்புளித்த குருதி, நிலமெங்கும் பரவியது. நிலமகள் மிக்க துயரம் அடைய, மன்னனுடைய செங்கோல் வளைய, கோவலனுடைய முன்னைய தீவினை சினத்துடன் வந்து பற்றியதால் அவன் அங்கே வெட்டுண்டு வீழ்ந்தான்.

1. சிலப்பதிகாரம், கொலைக்களா., 148-54
2. மேலது, 157-58

காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டைய ஊழ்வினை உருத்துஎன்[1]

வினைப்பயிர் வளர்ந்து, ஈன்று முதிர்ந்திருந்த கதிர் அறுவடை செய்யப்பட்டுவிட்டது. 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பதுகொண்டு அறிய வேண்டிய செய்தியை கொலைக்களக் காதையின் இறுதியிலுள்ள வெண்பா விளம்புகிறது.

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால் – மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.[2]

"முன்செய்த தீவினையின் பயனால், இவ்வுலகில் என்றுமே வளையாத பாண்டியனுடைய செங்கோல், கண்ணகியின் கணவன் கோவலன் காரணமாய் வளைவுற்றது. எனவே, 'உலகத்தீரே! நீங்கள் செய்யும் இருவினைப் பயனும் உங்களை வந்து சேரும்' என்பதை, அறிந்து நல்வினையே செய்யுங்கள்."

'சிலம்பில் ஊழின் ஆட்சி' எனும் கட்டுரையில் பார்த்தசாரதி, ஊழானது முளைத்து, வளர்ந்து, முடிவைத் தருவதை வரிசைப்படக் கோத்து விளக்கியிருப்பது அருமையிலும் அருமை யாய் உள்ளது.[3]

மதுரை எரிப்பு

பார்த்தசாரதி, 'கண்ணகி மதுரையை எரித்தது நியாயமா?' எனும் வினாவை எழுப்பி அதற்கு விளக்கமாய் ஓர் கட்டுரையை வரைந்திருக்கிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் நாட்டைத் திறம்பட ஆட்சி செய்தான். மதுரையைச் சுற்றிப்பார்த்துத் திரும்பும் கோவலன் 'தீதுதீர் மதுரையையும் தென்னவன் கொற்றத்தையும்' மாதவத்தாட்டி கவுந்தியிடம் மனமகிழ்ந்து கூறுகிறான். கோவலன் கொலையால் வளையாத செங்கோல் வளைந்தது. கண்ணகி வழக்குரைத்தாள். பாண்டியன் தவறுணர்ந்தான்; தன்னுயிர் நீத்தான். அரச மாதேவியும் தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல் ஒருங்குடன் மாய்ந்தாள்.

நாட்டில் மன்னன் இல்லை; அலுவலரும் செயலற்று இருந்தனர்; மக்கள் மன்னனின் குற்றமறிந்து மனங்கொதித்தனர்;

1. சிலப்பதிகாரம், கொலைக்., 216-17
2. சிலப்பதிகாரம், கொலைக்., வெண்பா.
3. இந்நூல், பக். 294 98

கண்ணகியின் அவலத்தையறிந்து மயங்கினர். எங்கும் ஒழுங்கில்லை; குழப்பம் மிகுந்தது. எங்கோ ஓர் அனற்பொறி - காவலர் கையிலிருந்த தீப்பந்தத்திலிருந்தோ, தெருவில் எரிந்த விளக்கிலிருந்தோ - தெரித்திருக்கலாம். அதன் விளைவு, நகர் தீயில் மூழ்கியிருக்கலாம். அதனையே கற்பின் சிறப்பினை உணர்த்துவதற்காய் மதுரை எரிந்ததெனக் கூறப்பட்டிருக்கலாம். 'கண்ணகியின் கற்பால் நகர் எரிந்தது' எனக் காப்பிய மரபு போற்றப்பட எழுதப்பட்டிருக்கலாம் எனும் செய்தியை முன் வைத்துக் கண்ணகி தானாய் மதுரையை எரிக்கவில்லை என்னும் பொருள் தொனிக்கப் பார்த்தசாரதியார் இக்கட்டுரையை வரைந்துள்ளார்.

'இந்தச் சிந்தனை ஏற்புடையதா? பொருந்துமா?' எனும் வினாக்களை எழுப்பிக் கட்டுரையை முடித்திருக்கிறார்.[1] ஆய்வாளர்கள் இவ்வினாக்களுக்கு விடைகாண வேண்டுமெனும் விழைவை இவ்வினாக்கள் உள்ளடக்கியிருக்கின்றன.

ஒற்றைச் சிலம்பு

'ஒற்றைச் சிலம்பு' எனும் கட்டுரையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

பாண்டியன்முன் கண்ணகி ஒற்றைச் சிலம்பை ஏந்தியவளாய் நிற்கிறாள்.

> நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
> யாரை யோநீ மடக்கொடி யோய்.....[2]

'நீர் ஒழுகும் கண்களுடன் என் முன்னே வந்து நிற்கும் இளங்கொடியே! நீ யார்?' என்றான். அரசன் அடக்கத்துடன் கேட்டான்; கண்ணகியோ வெடித்துப் பேசினாள். 'தேரா மன்னா!' எனத் தொடங்கித் தன் கணவனைக் கொன்ற கொடுமையைக் கூறுகிறாள். மன்னவன், 'பெண் அணங்கே! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அல்லவே? அதுதானே அரச நீதி; இதை நீ அறியாயா?' என்றான்.

> கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
> வெள்வேல் கொற்றம் காண்[3]...

கோவலனைக் கள்வன் என்கிறான் மன்னவன். அவன் கள்வன் அல்லன் என்பதற்கான சான்றுகளைக் கண்ணகி உரைக்க வேண்டும். கண்ணகி,

---

1. இந்நூல், பக். 316-322
2. சிலப்பதிகாரம், வழக்குரை.,
3. மேலது, 64-65

நல்திறம் படராக் கொற்கை வேந்தே
என்கால் பொற்சிலம்பு மணிஉடை அரியே[1]

"சிந்தித்துச் செயற்படாத மன்னவனே! என் காற்சிலம்பின் உள்ளே இருப்பவை மாணிக்கப் பரல்கள்" என்றாள். இதுவே கண்ணகிகூறும் முதற்சான்றும் முடிவான சான்றுமாய் இருக்கிறது. குற்றச்சாட்டை மறுக்க, அசைக்கமுடியாத சான்று காட்டவேண்டும். கண்ணகி தன் சிலம்பில் இருப்பவை மாணிக்கப் பரல்கள் என்கிறாள். ஒருவேளை பாண்டியன் மனைவியின் சிலம்பிலும் மாணிக்கப் பரல்கள் இருந்திருந்தால் என் ஆவது? வழக்குத் தோற்றல்லவா போயிருக்கும்! தெய்வமாய் மாற இருக்கும் அறிவார்ந்த கண்ணகி உள்ளீடற்ற இத்தகைய சான்றினை வைத்திருப்பது சரியா என்றவொரு வினா எழுகிறது. கண்ணகியின் தந்தை அரசர்களும் தமக்கு இவ்வளவு செல்வமில்லையே என்றெண்ணி ஏங்குமளவுக்கு உயர்ந்த செல்வந்தன். அவன் தன்மகள் சிலம்பில் வைத்துள்ள மாணிக்கத்தையொத்த உயர்ந்த மாணிக்கத்தை அரசர்களால் பெறமுடியாது என்பதால் கண்ணகி அவ்வாறு கூறியிருக்கவேண்டுமெனும் பொருள் தொனிக்கப் பார்த்தசாரதியின் கட்டுரை அமைந்துள்ளது.[2]

இதை மற்றொரு வகையாகவும் எண்ணிப் பார்க்கலாம். தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடு என முப்பிரிவுகளைக் கொண்டதாய்க் கூறப்பட்டாலும் கொங்கு நாடு, தொண்டை நாடு என்ற பிரிவுகளும் இருந்து வந்திருக்கின்றன. இவ்வைந்து நாடுகளுக்கும் தனித்தனியே ஒவ்வொரு சிறப்புண்டு.

தொண்டை நாடு சான்றோர் உடைத்து;
கொங்கு நாடு ஆ உடைத்து;
சேர நாடு வேழம் உடைத்து;
சோழ நாடு சோறு உடைத்து;
பாண்டி நாடு முத்து உடைத்து.

பாண்டி நாட்டின் தனிச் சிறப்பு அது முத்தைக் கொண்டிருப்பதேயாம்! இம் முத்துகளைப் போட்டியிட்டு வெளிநாட்டினர் வாங்கிச் சென்றனர் என வரலாறு கூறுகிறது. பாண்டியன் தன் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் முத்தினை விடுத்து, வேறொன்றனைத் தன் மனைவியின் சிலம்பில் பரலாய் வைத்திருக்கமாட்டான் என்ற துணிவினாலும் கண்ணகி, 'என்கால் சிலம்பு மணிஉடை அரியே' என்று கூறியிருக்கலாமல்லவா?

1. சிலப்பதிகாரம், வழக்குரை., 66-67
2. இந்நூல், பக். 308-315

பாண்டியன் அவையில் இந்த இரு சிலம்புகளிலும் ஒரே விதமான பரல்கள் இருந்திருக்குமேயானாலும் கண்ணகி தன் கைச்சிலம்பால் வழக்காடி வெற்றியடைந்திருக்க முடியும் என்றெழுதுகிறார் பார்த்தசாரதி. எவ்வாறு என்பதற்கான விளக்கத்தைக் கட்டுரையில் பெறமுடியவில்லை.

மாடலமறையோனைப் பற்றிக் குறிப்பிடும் பார்த்தசாரதி, "மாடல மறையோன் உலகியலறிந்த உயர்ந்தோன். மனைவியைத் துறந்து கணிகையொடு வாழும் வாழ்க்கை கடியப்பட வேண்டியது என்பதை அவன் அறியானா? கோவலன், கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்த வாழ்க்கையை அவன் அறிந்தே இருந்தான் என்பதை மாதவி மகளுக்குப் பெயர்சூட்டுவிழா பற்றி அவன் குறிப்பிட்டதி லிருந்து அறியலாம். இப்போற்றா ஒழுக்கத்தைக் கடியாததோடு, 'இம்மைச் செய்தன யானறி நல்வினை' என்று கூறியதன் பொருள் யாது? கோவலனை நன்கறிந்த மாடலன் அவன் தவற்றினைப் புகாரில் கடியவில்லை என்பதையும், மதுரைப் புறஞ்சேரியில் கோவலனைக் கண்டு அவன் பெருமைகளைக் கூறிய இடத்திலே யும் குறிப்பிடவில்லை என்பதையும் அறிய வியப்பாயுள்ளது" என்கிறார் பார்த்தசாரதி.[1]

தவற்றினைக் கண்டிக்க வேண்டியதுதான்? கண்டிப்ப தற்கான சூழ்நிலை தக்கதாய் இருக்க வேண்டுமன்றோ? கோவலன், மாதவியிடமிருந்து திரும்பி, தன் தவற்றினைச் சொல்லிக் கண்ணகிமுன் நின்றபோது அவள் 'சிலம்புள கொள்ளுங்கள்' என்று தேற்றினாள்; தன்னை முற்றிலுமாய் துறந்து, மற்றொருத்தி வீடு சென்று பொருளிழந்து, திரும்ப வந்து நிற்கும் கோவலனை மேலும் அத்தீயொழுக்கத்தில் செலுத்துவதுபோலச் சிலம்பை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லலாமா? அவனைக் கண்டித்துக் கடிந்துரைக்க வேண்டாமா? என்றெல்லாம் எண்ணத் தோன்றும். கண்ணகி அறியாதவள் அல்லள்; 'சலம்புணர் கொள்கைச் சலதி' என வெறுத்தொதுக்கிய மாதவியிடம் மீட்டும் அவன் செல்ல மாட்டான் என்பதை அவள் அறிவாள்.

தவறு செய்தவர்களைத் தக்க வேளையறிந்து திருத்த வேண்டும். தவறு செய்த ஒரு மகனைத் தந்தையார் ஓங்கி அறைந்ததாய்க் கொள்வோம். மகனுடைய கன்னத்தில் தந்தை யின் ஐந்து விரல் பதிவுகளும் தெரிகின்றன; கன்னம் வீங்கியுள்ளது; வலி தாளாமல் துடித்துக் கொண்டிருக்கிறான். இந்நிலையில் அவனிடம், 'இதோ பார் என் பெருவிரல் புடைப்பு அப்படியே

1. இந்நூல், பக். 283-84

இருக்கிறது; நடுவிரல் புடைப்பைப் பார்" என்று கன்னத்தில் ஒவ்வொரு புடைப்பையும் தொட்டுக் காட்டினால் அடி பட்டவன் உள்ளம் எப்படியிருக்கும்? தந்தையிடம் மரியாதையா கொள்வான்; மாபாவி! என்றன்றோ எண்ணுவான். இதற்கு மாறாய், அடிபட்டதை மறந்து, சொல்வதை ஏற்கும் நிலையில் இருக்கும்போது அவனிடம், "மகனே! நீ தவறு செய்யக்கூடாது. அன்று நீ தவறு செய்ததால்தானே சினத்தினால் நிலைதவறி உன்னை நான் அடிக்க வேண்டியதாயிற்று; மறந்தும் இனித் தவறு செய்யாதே" என்று மனம்கொளக் கூறினால் மகன் திருந்துவான்; தந்தையிடம் மதிப்பும் கொள்வான்.

மாதவியிடம் வெறுப்புற்று வந்துள்ள கோவலனிடம் கண்ணகி, "இப்போதுதான் இங்குவர வழி தெரிந்ததா? ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று கடிந்துகொண்டிருந்தால் கோவலன் உள்ளம் என்ன எண்ணியிருக்கும்? "பெண்களே இப்படித்தானா? அங்கு மாதவி என்றால் இங்கேயோ அவளினும் கொடுமைமிக்க கண்ணகி" என்றுதான் எண்ணத் தோன்றியிருக்கும். மாதவியிடமிருந்து அகன்றதுபோலவே கண்ணகியிடத்திலிருந்தும் நீங்கியிருப்பான். கதையின் போக்கே வேறாகியிருக்கும்.

கோவலன் கலங்கியிருந்ததைக் கண்ணகி அறிந்தாள். அவ்வேளையில் அவனுக்கிருந்த கவலையெல்லாம் பொருளில்லை என்பதேயாம். அந்நேரத்தில் அக்கவலையைப் போக்கி, அவனைத் தேற்றும் முறையிலேதான், 'சிலம்புள கொள்ளுங்கள்' என்றாள். கோவலன் தான் செய்த தவறுகளை உணர்ந்து வருந்தியிருக்கும் வேளையில் அவன் தவற்றினை அவள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

மதுரையில் ஆயர்பாடியில், கண்ணகி படைத்த உணவை உண்டபின் கோவலன், கண்ணகியிடம் தான் அவளுக்கிழைத்த தீமைகளையெல்லாம் சொல்லி வருந்தினான். அப்போது கண்ணகி, "இல்லறக் கடமைகளை நான் ஆற்றமுடியாத நிலையிலிருப் பதை உன் பெற்றோர் கண்டு வருந்திச் செல்லும்படியான, "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என நனிநாகரிகத்துடன் சுட்டிக் காட்டியிருக்கிறாள் என்பதை அறியலாம். உரிய வேளையில் கோவலனுடைய போற்றா ஒழுக்கத்தை மனைவியே கண்டிக்க விருப்பதால், இளங்கோவடிகள் மாடலன் வாயிலாய் அக் கண்டனத்தை எழுப்பவில்லை எனப் பார்த்தசாரதியார் அமைதி கொள்ளலாம்.

மூன்று கனாக்கள்

புகாரில் கண்ணகி தான் கண்ட கனவைத் தன் தோழி தேவந்தியிடம் கூறினாள். "என் கணவர் வந்து என் கையைப் பற்றினார். இருவரும் இந்நகரிலிருந்து நீங்கி வேற்றொரு நகரம் சென்றோம். அங்கிருந்தோர் என் கணவர்மீது அடாப்பழி சுமத்தினர்; அதனால் என் கணவர்க்குப் பெருந்தீங்கு நேர்ந்தது. நான் அவ்வூர் அரசன்முன் சென்று முறையிட்டேன். அதனால் மன்னனுக்கும் ஊர்க்கும் தீங்கு நேரிட்டது.

தீய கனவாகையால் இதை நான் விளக்க விரும்பவில்லை. அத்தீங்கு தீயினால் நேர்ந்த தீங்காய்த் தெரிகிறது! தீங்குற்ற நான் கணவரோடு அடைந்த உயர்நிலையை எண்ணினால் சிரிப்புத்தான் வருகிறது" என்று கூறினாள். கண்ணகி தான் கண்ட கனவைப் பற்றிக் கோவலன் கொலையுண்ணும் வரையிலும் சிந்திக்க வில்லையே; ஏனோ என ஓர் ஐயத்தை எழுப்புகிறார் பார்த்தசாரதி.[1]

பழவினை வந்து ஏவுதலினாலே கோவலன் மதுரைக்குப் புறப்பட்டான். உருத்துவந்து ஊட்டிய கோவலனின் ஊழ்வினை கண்ணகியை எதுவும் சிந்திக்க இயலாதவளாய்ச் செய்துவிட்டது என்று கொள்வதே பார்த்தசாரதியின் வினாவுக்குப் பொருத்தமான விடையெனக் கொள்ளலாம்.

காப்பியத்தில் கண்ணகியின் முதற்பேச்சே இக்கனவைக் கூறுவதுதான். இளங்கோவடிகள் கனா வாயிலாய்ப் பின்னர் நடைபெறவிருக்கும் கதை முழுவதையும் சுருக்கமாயும் தெளிவாயும் சொல்லும் முறையைக் காப்பியத்தில் மேற் கொண்டுள்ளார். கோவலன் வரப்போகிறான்; அவனும் கண்ணகியும் வெளியூர் செல்லப் போகிறார்கள்; அங்குக் கோவலனுக்குத் தீங்கு நேரப்போகிறது; அவர்கள் சென்றடைந்த நாட்டு மன்னனுக்கும் அவனுடைய மாநகருக்கும் தீங்கு நேரவிருக்கிறது; கணவனோடு கண்ணகி நலன்கள்பெறவிருக்கிறாள் என்ற இவ்வெண்ணத்தை நாடகத்தைப் படிப்போரிடையே அல்லது பார்ப்போரிடையே இக்கனாப் பேச்சு ஊட்டிவிடுகிறது. கண்ணகியுடன் கோவலன் மதுரைக்குப் புறப்பட்டதும் கண்ணகியின் கனவு உண்மையில் நடைபெறப்போவதே என நாடகத்தைக் கண்ணுறுவோர் அறிவர். உடனே மதுரையில் கோவலனுக்கு எத்தகைய தீங்கு நேரவிருக்கிறது? மதுரைக்கும் அம்மாநகர் மன்னனுக்கும் விளையவிருக்கும் தீங்குகள் எத்தகையனவாம்? இறுதியில் கோவலனும் கண்ணகியும்

1. இந்நூல், பக். 146

அடையப்போகும் நற்றிறம் யாது? என்பவற்றை எதிர்நோக்கி யிருக்கும் ஆர்வத்தை நாடகத்தைக் காண்போரிடையே இக்கனாக் காட்சி உண்டாக்கி விடுகிறது. கண்ணகியின் முதற்பேச்சையே கதை முழுவதையும் முடிக்கும் பேச்சாய் இளங்கோவடிகள் அமைத்திருப்பது எண்ணியெண்ணி வியத்தற்குரியது.

மதுரைப் புறஞ்சேரியில் தங்கியிருந்தபோது, ஒரு விடியற்காலை கோவலன் கனவு காண்கிறான். "மதுரை மாநகரில் கீழ்மகன் ஒருவன் செயலால் கண்ணகிக்குப் பெருந்துன்பம் விளைந்தது. என் ஆடையைப் பிறர் பறித்தனர். எருமைக் கடா மீதேறி நான் கண்ணகியுடன் விண்ணகம் புகுந்தேன். மாதவி, மணிமேகலையைப் போதி அறவோனிடம் அளித்தாள்" எனக் கோவலன் தான் கண்ட கனவை மாடலமறையோனிடம் கூறினான்.

விடியற்காலையில் காணும் கனா தவறாது பலிக்கும் என்றும், எருமைக்கடாமீது ஏறிச் செல்வதாய்க் கனவு கண்டவர் விரைவில் இறப்பர் என்றும் நம்பிக்கை இருந்துவந்தது. கோவலன் கனவினால் அவனுக்கு விரைவில் இறப்பு நேரவிருக் கிறது என்பதை அறிவதோடு, அவன் இறப்புக்குப் பிறகு மாதவி யும் மணிமேகலையும் துறவறம் பூணவிருக்கின்றனர் என்பதுவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணகி தன் கனவில், அவள் கணவனோடு அவளுக்குக் கிடைத்த நற்பேற்றினைக் கேட்பின் நகைப்புண்டாகும் என்றாள்.

> உற்றேனொடு உற்ற உறுவனோடு யான்உற்ற
> நற்றிறம் கேட்கின் நகையாகும்....[1]

தீமையின் முடிவில் அவர்கட்கு நற்பேறு நேரவிருக்கிறது எனும் குறிப்பு மட்டுமே கண்ணகி கனாவில் காட்டப்பட்டது. விண்ணகம் புகுதலே அந்நற்பேறு என்பது கோவலன் கனவு மூலம் வெளிப்படுகிறது.

> அணித்தகு புரிகுழல் ஆயிழை தன்னொடும்
> பிணிப்புஅறுத் தோர்தம் பெற்றி எய்தவும்[2]

கோவலன் கனாக் காண்கிறான்.

சிலப்பதிகாரத்தில் மூன்றாவதாய் இடம்பெறுவது பாண்டிமா தேவி கனவு. கண்ணகி, கோவலன் கனவுகளில் எதிர்கால நிகழ்ச்சிகள் இவ்வாறு இருக்கும் என்பது கூறப்பட்டது. ஆனால், பாண்டிமாதேவியின் கனவில் தீமைக்கான அறிகுறிகள்

1. சிலப்பதிகாரம், கனாத்திறம்., 53-54
2. மேலது, அடைக்கலக் காதை, 99-100

தென்படுகின்றனவேயன்றி, இன்னாருக்கு இன்ன தீமை விளையும் என்பதை அறிய இயலவில்லை. அவள் கண்ட கனவில் செங்கோலும் வெண்குடையும் நிலத்தில் வீழ்ந்தன; அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சிமணி நெடுநேரம் ஒலித்தது; வானவில் இரவில் தோன்றியது; விண்மீன்கள் பகலில் நிலத்தில் வீழ்ந்தன; எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. அரசனுக்கும் அரசுக்கும் ஏதோ தீங்கு நேரவிருக்கிறது என்பதை மட்டுமே இக்கனவின் வாயிலாய் அறியமுடிகிறது. அரியணைமீதிருந்த தன் கணவனிடம் தான் கண்ட கனவைச் சொல்ல முற்படும் அதேவேளை வாயிற்காவலன் உள் நுழைந்து வாயிலில் விரித்த கருங்குழலோடும், வெய்துயிர்ப்போடும் ஒற்றைச் சிலம்பை ஏந்தி ஒருத்தி நிற்பதைக் கூறுகிறான்.

தீமை விளையும்போது கனவில் தீய நிமித்தங்கள் தோன்றும் என்ற எண்ணம் உலகெங்கும் உண்டு. சேக்ஸ்பியர் நாடகத்தில் ஜூலியஸ் சீசர் ,ஆட்சிப்பேரவைக்குச் செல்ல முற்படும்போது அவன் மனைவி கலிபூர்னியா தான் தீய கனவு கண்டதாய்க் கூறித் தடுத்தாள். அவள் கனவில் தோன்றியவை "பெண்சிங்கம் தெருக்களில் நாய்போல் ஊளையிட்டுச் சென்றது; இடுகாட்டில் புதைகுழிகள் வெடித்து அவற்றிலிருந்து பிணங்கள் வெளியேறின; வானவெளியில் வீரர்கள் வரிசையாய் நின்று போரிட்டனர்; அதனால் குருதிமழை கொட்டியது; பேரொலி விண்ணில் எதிரொலித்தது; குதிரைகள் கனைத்தன; பேய்கள் வீரிட்டு வீதியெங்கும் ஓடின." இவையெல்லாம் வழக்கத்திற்கு மாறான செய்திகளாதலால் தான் அஞ்சுவதாய்க் கலிபூர்னியா கூறினாள்.

A lioness hath whelped in the street;
And graves have yawn'd and yielded up their dead;
Fierce fiery warriors fought upon the clouds,
In ranks and squadrons and right form of war,
Which drizzled blood upon the capital;
The noise of battle hurtled in the air,
Horses did neigh, and dying man did groan,
And ghosts did shriek and squeal about the streets,
O Caesar! these things are beyond all use,
And I do fear for them.

கலிபூர்னியாவுக்குச் சீசர் மறுமொழி கூறினான். "கோழைகள் சாவதற்குமுன் அச்சத்தினால் பல ஆயிரம் முறை சாகிறார்கள்; வீரன் ஒரே முறைதான் சாகிறான். சாவு வந்தே தீரக்கூடியது என்பது தெரிந்திருந்தும் அதற்காக அஞ்சுவது எனக்கு விந்தையிலும் விந்தையாய் இருக்கிறது" என்று பேசிச் சென்றான். சேக்ஸ்பியர் சீசரைப் பேசச் செய்தார். இளங்கோவடிகளோ

பாண்டியன் நெடுஞ்செழியன் அரசியின் கனவைப் பற்றிய தன் கருத்தைச் சொல்வதற்குள் வாயிற் காவலனை உள்ளே நுழையச் செய்து அவனைப் பேசவிடாது தடுத்துவிடுகிறார். அதனால் கனவுபற்றிப் பாண்டியன் கருத்தென்ன என்பதை அறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

அடுத்து என்ன நிகழவிருக்கிறது என்றறிய ஆவலைத் தூண்டுகின்ற உத்தியாகவே இளங்கோவடிகள் கனவுகளைக் கையாண்டுள்ளார்.

சிலம்பில் திருக்குறள்

திருக்குறளைத் 'தமிழ்மாதின் இனிய உயிர்நிலை' என்பார் கவிமணி தேசிக விநாயகனார். திருக்குறளை எடுத்தாளாத தமிழ் நூல்களே இல்லை எனலாம். வள்ளுவம் வாழ்வின் இலக்கணம். அந்த இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாய் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளார். திருக்குறள் தொடர்கள், அடிகள், முழுத் திருக்குறள், திருக்குறட்கருத்து என எல்லா நிலையிலும் திருக்குறளை இளங்கோ எடுத்தாண்டுள்ளார். பார்த்தசாரதியின் கட்டுரை ஒன்று இதனை நன்கு புலப்படுத்து கிறது.

தான் தவறிழைத்ததையுணர்ந்த பாண்டியன் நெடுஞ் செழியன், 'கெடுக என் ஆயுள்' என மயங்கி வீழ்ந்திறந்தான்; அவனருகிருந்த அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உள்ளம் குமைந்து உடல் நடுங்கித் தன் கணவன் காலடிகளில் வீழ்ந்தாள். அப்போது கண்ணகி,

> முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
> பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்....[1]

எனக் கோப்பெருந்தேவியை நோக்கிக் கூறியதாய் இளங்கோ எழுதுகிறார். இது,

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தனக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்[2]

எனும் திருக்குறளின் பொருளும் அடிகளும் பிணைந்துவர எழுதப்பட்டதாம்.

சிலப்பதிகாரம் கட்டுரை காதையின் இறுதியிலுள்ள வெண்பாவின் முதல் இரண்டடிகள்,

---

1. சிலப்., வஞ்சினமாலை, 3-4
2. திருக்குறள் 319

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்...

என அமைந்துள்ளது. இங்கு,

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை[1]

எனும் திருக்குறளின் முதலடியில் உள்ள தொடர் அதிலுள்ளவாறே எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

தலைவி தன் புருவவளைவால் தன்னைக் கொல்வதாய்த் தலைவன் ஒருவன் வருந்திக் கூறுவதைச் சிலப்பதிகாரப் பாடலடி ஒன்று அறிவிக்கிறது.

நெடுங்கண் வலையால் உயிர்கொள்வை மன்,நீயும்.[2]

இக்கருத்துக்கு ஊற்றாய்த் திருக்குறள் ஒன்று அமைந்துள்ளது.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண்.[3]

புருவ வளைவு காதலனுக்குப் பெருந்துன்பத்தை விளைவிப்பதை இக்குறள் கூறுகிறது.

அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லாரும் சிலம்பில் திருக்குறள் எவ்வெவ்வகையில் பயின்று வந்துள்ளன என்பதைத் தம் உரைகளில் குறித்துள்ளனர்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றென்பதூஉம், பத்தினி மகளிர் பெய்யெனப் பெய்யும்மழை யென்பதூஉம், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுமென்பதூஉம் இக்கதையகத்து உண்மை யின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோம் என இளங்கோவடிகள் கூறினர்' என அரும்பதவுரைகாரர் சிலப்பதிகாரப் பதிக உரையில் குறிப்பிட்டுள்ளார்.[4] இங்கே அவர்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை[5]

எனும் குறளின் கருத்தைப் பெய்து எழுதியுள்ளார்.

மாசாத்துவானைக் குறிக்கும் சிலப்பதிகார அடிகளுக்கு உரைகூறும் அரும்பதவுரைகாரர், 'வணிகராகிய தன் கிளையொடு கூடி உயர்ந்த செல்வத்தினையுடையான்; இது சுற்றத்தாற் சுற்றப்

1. திருக்குறள், 55
2. சிலப்., கானல்வரி, 19
3. திருக்குறள், 1086
4. மேலது, 55
5. சிலப்., பதிகம், அடி 87ன் உரை

படவொழுகல்; எனவே, தமக்குத்தாமே நிகராகிய வணிகரென்றூ வாயிற்று' என்றெழுதுகிறார்.[1] இங்கு அவர்,

> சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
> பெற்றத்தாற் பெற்ற பயன்[2]

எனும் திருக்குறளின் முதலடியிலுள்ள தொடரை எடுத்தாண்டுள் ளதைக் காணலாம்.

> இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்

எனும் அடிக்கு, அரும்பதவுரைகாரர்,

இடுபொருள் - பிறர் வரவிட்ட பொருள். படுபொருள் - புதையல்; அன்றித் தன் தேட்டத்தால் மிக்க பொருளுமாம்; 'படுபயன் வெஃகி' என்றாற்போல என உரை வரைகிறார்.[3] இங்கு அவர் 'படுபயன் வெஃகி' எனும் திருக்குறள் தொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

அடியார்க்குநல்லார், 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று'[4] எனும் சிலப்பதிகார அடிக்கு உரையெழுதுங்கால்,

> அன்பி லதனை வெயில்போலக் காயுமே
> என்பி லதனை அறம்[5]

எனக் குறிப்பிட்டுள்ளார்; விளக்கத்திற்கு இங்கு அவர் குறள் ஒன்றனை முழுவதாய்ப் பயன்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

கோவலன், கண்ணகியை,

> மாசறு பொன்னே வலம்புரி முத்தே
> காசறு விரையே கரும்பே தேனே[6]

எனப் பாராட்டுகிறான். இவ்வடிகட்கு உரையெழுதும் அடியார்க்கு நல்லார்,

"இவற்றால் சொல்லியது, ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையுமாகலின்,

> கண்டுகேட்(டு) உண்டுயிர்த்(து) உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள[7]

என நலம் பாராட்டப்பட்டன" என உரைக்கிறார்.

---

1. சிலப்., மங்கல., 31-3-ன் உரை
2. திருக்குறள், 524
3. சிலப். கட்டுரை., 128ன் உரை
4. சிலப். பதிகம், 55ன் உரை
5. திருக்குறள், 77
6. சிலப். மனையறம்.,
7. திருக்குறள், 1101

இம்மைக்(கு) இன்பமும் மறுமைக்(கு) இன்பமும்
இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றியோர்
செம்மையின் நிற்பதுஞ் செப்புமின்–[1]

என்னும் சிலப்பதிகார அடிகட்கு, அடியார்க்குநல்லார்,

"இம்மைக் கின்பம் - புகழ்; மறுமைக் கின்பம் - புண்ணியம்; செம்மையினிற்பது மோக்கம்; இனி, ஒருவர்க்கு இம்மை மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமியுள்ளவும் நிற்பது புகழெனலுமாம்; *'ஒன்றாவுலகத்..... தொன்றில்'* எனவும் கூறினாராகலின்"..... என விளக்கம் தருகிறார். இவ்விளக்கத்தில்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றில்[2]

என்னும் குறள் முழுவதுமாய் இடம்பெற்றுள்ளது.

புலவூண் துறந்து பொய்யா விரதத்(து)
அவலம் நீத்துஅறிந்(து) அடக்கிய கொள்கை
மெய்வகை உணர்ந்த விழுமியோர்[3]

எனும் சிலப்பதிகார அடிகட்கு, "புலாலாகிய ஊனைத் துறந்து, பொய் கூறாமையாகிய விரதத்தோடு பொருந்தி, அழுக்காறு அவா முதலியவற்றைக் கைவிட்டு, அறநூல் முதலியவற்றையறிந்து, ஐம்புலனையுமடக்கிய கோட்பாட்டையுடையராய், உண்மை வகையுணர்ந்த சீரியோர்" என அடியார்க்கு நல்லார் உரை வகுத்துள்ளார். இதிலுள்ள அழுக்காறு அவா.... என்றுள்ளதற்று உ.வே.சாமிநாதையர்,

அழுக்காறு அவா,வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

எனும் திருக்குறளை மேற்கோள் காட்டியுள்ளார்.

காப்பிய முடிவில் இளங்கோ தந்துள்ள அருளுரைகள் திருக்குறளின் பிழிவு என்பதைப் பார்த்தசாரதியார் தன் நூலின் முடிவில் எடுத்துரைத்துள்ளார். 'கண்ணகியின் கதையைக் கேட்ட மக்களே! மனத்தில் இவற்றைக் கொள்ளுங்கள்' எனக்கூறிக் காப்பியத்தை இளங்கோவடிகள் முடித்து வைக்கிறார்.

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;

---

1. சிலப். காடுகாண்., 112-14
2. திருக்குறள் 233
3. சிலப். நாடுகாண்., 15-17

செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கு'[1]....

என்பதுவே இளங்கோவடிகள் காப்பிய முடிவில் கூறும் அறவுரை - அறிவுரை - அருளுரை.

பார்த்தசாரதி தன் நூலைக் கீழுள்ளவாறு முடிக்கிறார் :

"காப்பிய முடிவில் இளங்கோ அடிகளின் அருளுரை இடம் பெறுகிறது. அருளுரையில் திருக்குறள் அதிகாரத் தலைப்புகள் பல அப்படியே அமைவதை அறிந்து இன்புறுவோமாக!

அடிகள் அறவுரை	திருக்குறள் அதிகாரத் தலைப்பு
1. தெய்வம் தெளிமின்	கடவுள் வாழ்த்து (அதி. 1)
2. தெளிந்தோர்ப் பேணுமின்	நீத்தார் பெருமை (3)
3. பொய்யுரை அஞ்சுமின்	வாய்மை (30)
4. புறஞ்சொல் போற்றுமின்	புறங்கூறாமை (19)
5. ஊன்ஊண் துறமின்	புலால் மறுத்தல் (26)
6. உயிர்க்கொலை நீங்குமின்	கொல்லாமை (33)
7. தானம் செய்ம்மின்	ஈகை (23)
8. தவம்பல தாங்குமின்	தவம் (27)
9. செய்ந்நன்றி கொல்லன்மின்-	செய்ந்நன்றி அறிதல் (11)
10. தீநட்பு இகழ்மின்	தீ நட்பு (82)
11. பொருள்மொழி நீங்கன்மின்-	மெய்யுணர்தல் (36)
12. பிறர்மனை அஞ்சுமின்	பிறனில் விழையாமை (13)
13. கள் ஒழிமின்	கள்ளுண்ணாமை (93)
14. களவு ஒழிமின்	கள்ளாமை (29)
15. இளமை, செல்வம், யாக்கை நிலையாமை	நிலையாமை (34)

1. சிலப்பதிகாரம், வரந்தருகாதை, 186-202

இவற்றை நோக்க இளங்கோவடிகள் நம்மைத் திருக்குறள் நெறிக்கு ஆற்றுப்படுத்துகிறார் என்றே அறியலாம்; அறிந்து மகிழலாம்!

'துணை தேடுமின்' என இளங்கோ தன் காப்பியத்தை முடித்துள்ளார்; எனப் பார்த்தசாரதியார் தன் நூலை முடித்துள்ளார்.

சிலப்பதிகாரம் நமக்குத் துணையாகட்டும்; பார்த்தசாரதியின் விளக்கம் நமக்கு மகிழ்வூட்டட்டும்.

கண்ணகியின் 'ஒற்றைச் சிலம்பு' கண்டு பாண்டியன் நெடுஞ்செழியன் மயங்க நேர்ந்தது. இந்நூல் மங்கையோ கதைப்பகுதி என்ற ஒரு சிலம்பும், ஆராய்ச்சிக் கருத்துகள் என்ற மற்றொரு சிலம்புமாய் இரட்டைச் சிலம்பணிந்திருக்கிறாள். எனவே, குழப்பத்திற்கோ மயக்கத்திற்கோ இங்கு இடமே இல்லை. தமிழ்த்தாயின் திருவடிகட்குப் பார்த்தசாரதியார் அணிவித்துள்ள சிலம்புகள் இவை. இச் 'சிலம்பொலி' இடையறாது ஒலித்து நமக்கு இனிமையூட்டுவதோடு தமிழ்த்தாயின் திருவடிகளை எப்போதும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

இந்நூல் பொதுமக்களுக்கும், ஆராய்ச்சியாளர்க்கும் என இருசாரார்க்கும் பயன்படக்கூடியது. பல்கலைக் கழகங்களில் இது பாடநூலாய் அமைந்தால் மாணவர்கள் பயன்பெற்றவராவர்! சிந்தனைப் பூக்களை இணைத்து, சிலம்பு மாலையைத் தொடுத்துள்ள பார்த்தசாரதியார் வாழ்க! அவருடைய தமிழ்த் தொண்டு மேலும் மேலும் வளர்க!

நூல் ஆக்கம்	கோ. பார்த்தசாரதி
வகைமை	கட்டுரை
வெளியீடு	திருவள்ளுவர் இலக்கிய மன்றம், சென்னை. (1992)

(6)

வழிவழிச் சிலம்பு

திருவள்ளுவருக்குப்பின் வந்தோர் திருக்குறள் கருத்துகளையும் திருக்குறளடிகளையும் எவ்வெவ்வாறு எடுத்தாண்டுள்ளனர் என்பதை, 'வழிவழி வள்ளுவர்' என்னும் நூலாய்ச் சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை தந்துள்ளார். அவ்வாராய்ச்சிப் போக்கில் நின்று, திருமதி சரளா ராசகோபாலன் இளங்கோ யாத்த சிலப்பதிகாரக் காப்பியத்தை அவருக்குப் பின்வந்தோர் எவ்வெவ்வகையில் சொல்லியுள்ளனர் என்பதை இந்நூலுள் எடுத்துச் சொல்லியுள்ளார்.

புகழேந்திப்புலவர் தொடங்கிப் புத்தனேரி சுப்பிரமணியம் வரை 30 பேர் எவ்வெவ்வகையில் சிலம்பைத் தத்தம் போக்கில் ஆண்டுள்ளனர் என்பதை விரிவாய் விளக்குகிறது, இந்நூல். இவற்றில் 9 செய்யுள் இலக்கியம்; ஒன்று வில்லுப்பாட்டு; ஒன்று கும்மி; ஒன்று நாட்டுப்புறக் கதைப்பாடல்; இரண்டு சிறுவர்க்கென இயற்றப்பட்ட செய்யுள் நூல்கள்; சிலம்பின் கதைமாந்தருள் ஒருவர் பற்றி மட்டும் விளக்குவன நூல்கள் நான்கு; நாடக வடிவில் அமைந்துள்ள நூல்கள் 12. சிலம்பைக் காப்பியமாய் எழுதுவதைவிட நாடகங்களாய்ப் படைப்பதிலேயே படைப்பாளர் கள் மிகுதியும் நாட்டம் செலுத்தியுள்ளனர் என்பதை இவ்விவரங்கள் புலப்படுத்துகின்றன.

சிலப்பதிகார கதைச்சுருக்கம்

சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஏற்படுத்தியுள்ள மாறுதல்களை அறிய வேண்டுமாயின் காப்பியக் கதை நமக்குத் தெரியவேண்டும்; ஆதலின் காப்பியக் கதையின் சுருக்கம் இங்கு உரைக்கப்படுகிறது.

சோழர்களின் தலைநகரம் பூம்புகார். அங்கு மாநாய்கன் ஒரு பெரு வணிகன்; அவன் மகள் கண்ணகி; வயது பன்னிரண்டு. மாசாத்துவான் மற்றொரு பெரு வணிகன். அவன் மகன் கோவலன்; வயது பதினாறு. கோவலனுக்கும் கண்ணகிக்கும் பெற்றோர் பார்ப்பனர்களைக் கொண்டு வேதமுறைப்படி திருமணம் செய்து

வைத்தனர். கோவலனும் கண்ணகியும் சில ஆண்டுகள் இல்லறத்தை இனிதே துய்த்திருந்தனர்.

பூம்புகாரில் மாதவி என்பவள் கணிகையர் குலத்தில் பிறந்தவள். ஆடலும் பாடலும் அழகும் நிறைந்த அவள் தன் பன்னிரண்டாம் வயதில் சோழ மன்னன்முன் நாட்டிய அரங்கேற்றம் செய்தாள். மன்னன் பட்டமும் பரிசிலும் வழங்கினான். பரிசிலாய்ப் பெற்ற மாலையை மாதவியின் தாய், ஒரு கூனி கையில் கொடுத்து, 'இதனை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்கொடுத்து வாங்குபவர் மாதவியை அடையலாம்' என நகர நம்பியர் திரிதரும் வீதியில் நிற்க வைத்தாள். கோவலன் மாலையை வாங்கினான்; மாதவி வீடு சென்றான்; தன் வீட்டை மறந்து அங்கேயே தங்கிவிட்டான்.

நகரில் நடைபெற்ற இந்திரவிழாவின் கடைசி நாளில் மக்கள் கடலாடச் சென்றனர். கோவலனும் கண்ணகியும் கடற்கரை சென்று ஒரு கூடாரத்தில் தங்கி, யாழ்மீட்டிக் கானல்வரி பாடினர். மாதவியின் பாடலில் மனவேறுபாடு கொண்ட கோவலன் அவளை வெறுத்தொதுக்கிப் பிரிந்தான். தனியே இல்லம் சென்ற மாதவி, முடங்கல் ஒன்றெழுதிக் கோவலனிடம் கொடுக்குமாறு தன் தோழி வயந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள். கோவலன் அம் முடங்கலைப் பெற மறுத்ததோடு மாதவியைப் பலவாறு ஏசி இகழ்ந்தான். தன்வீடு சென்று கண்ணகியைக் கண்டான்; செல்வத்தையெல்லாம் தொலைத்ததைச் சொல்லி நாணி நின்றான். கண்ணகி தன்னிடமிருந்த சிலம்புகளைத் தந்து 'கொள்ளுங்கள்' என்றாள். இச்சிலம்பை முதலாய் வைத்து வாணிகம் செய்ய மதுரை செல்வோம். 'நீயும் புறப்படு' என்றான். இருவரும் இருள்புலராக் காலையில் புகாரைவிட்டு நீங்கினர்.

காவிரிக் கரையோடு சென்றவர்கள், வழியில், காவுந்தியடிகள் எனும் பெண் சமணத் துறவியைக் கண்டனர். அவரும் மதுரை வருவதாய்க் கூறவே மூவரும் பயணம் செய்தனர். காவிரியைக் கடந்து, பாண்டி நாட்டுக் காடுகளில் நடந்து, வையையாற்றைத் தாண்டி மதுரையையடைந்து நகரின் வெளிப்புறத்தே தங்கினர். தமக்குத் தெரிந்த மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் காவுந்தியடிகள் கண்ணகி கோவலனை அடைக்கலப்படுத்தி, நகருக்குள் அழைத்துச் செல்லுமாறு கூறினார். கோவலனும் கண்ணகியும் மாதரியுடன் ஆயர்பாடியை அடைந்தனர்.

கண்ணகியை அங்கிருக்கச் செய்து, அவளுடைய சிலம்பு ஒன்றனை விற்றுவரக் கோவலன் மதுரைக்குள் சென்றான். பொற்கொல்லன் ஒருவனிடம் சிலம்பைக் காட்டி விலைமதிப்பிட

முடியுமா என்று கேட்டான். அப்பொற்கொல்லன் அரசியின் சிலம்பொன்றை முன்னரே திருடியிருந்தவன். அத்திருட்டைக் கோவலன்மேல் ஏற்றிவிடலாம் என எண்ணியவனாய், 'இச் சிலம்பு அரசிக்கே ஏற்றது; அரண்மனை சென்று அறிந்து வருவேன்; அதுவரை இங்கேயே இரு' எனக்கூறி ஒரு குடிலில் அவனைத் தங்கவைத்து அரசனிடம் சென்றான். தன் மனைவியின் ஊடலைத் தீர்க்க அந்தப்புரம் சென்றுகொண்டிருந்த மன்னவனிடம், 'அரசே! அரசியாரின் சிலம்பைத் திருடியவனைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்றான். அரசன் எதனையும் ஆராயாது, 'அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க' எனக் காவலர்களுக்குக் கட்டளையிட்டான். அரசன் ஆணைப்படி கோவலன் கொலையுண்டான்.

செய்தியறிந்த கண்ணகி பொங்கி எழுந்தாள்; அரசனிடம் சென்று வழக்குரைத்தாள். தவறுணர்ந்த பாண்டியன், நீதியிழந்ததை எண்ணி மயங்கி அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தான். கண்ணகி சினந்தணியாதவளாய் மதுரை வீதிகளில் சுழன்று, 'இந்நகரம் அழியட்டும்' எனத் தன் இடப்புறக் கொங்கையைப் பற்றித் திருகி எறிந்தாள். மதுரை தீயுண்டு எரிந்தது. கண்ணகி வையைக் கரை வழியாய்ப் பதினான்கு நாட்கள் நடந்து சேர நாடடைந்து 'நெடுவேள் குன்றம்' என்னும் குன்றின்மீது ஏறி ஒரு வேங்கைமர நிழலில் நின்றாள். தேவர்கள் கோவலனுடன் வந்து அவளை விமானத்திலேற்றி விண்ணுலகு அழைத்துச் சென்றனர்.

மலைக் குறவர்கள்வாயிலாய் இச்செய்தியை அறிந்த சேரன் செங்குட்டுவன், தன் நாடு வந்து தெய்வமாய கண்ணகிக்கு, சிலையமைத்துக் கோயிலெடுக்க விழைந்தான். சிலைக்குக் கல்லை இமயத்திலெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொண்டுவர முடிவு செய்தான். வடநாட்டில் கனகன் விசயன் எனும் இருமன்னர் தமிழர் வீரத்தை விருந்து மண்டபமொன்றில் இகழ்ந்தனர் எனும் செய்தியை அப்போது அறிந்து, 'எடுக்கும் கல்லைக் கனக விசயர் தலையிலேற்றிக் கொணர்வேன்', எனச் சூளுரைத்தான். வடநாட்டின்மீது படையெடுத்தான். கங்கைக்கரையில் தோற்றோடிய கனக விசயர்களைக் கைது செய்தான். இமயத்தில் கல்லெடுத்து அவர்கள் தலைமீது ஏற்றிக் கொணர்ந்தான். கண்ணகிக்குக் கோயிலெடுத்துச் சிலை நிறுவி வழிபாடு செய்தான். கண்ணகித் தெய்வம் அனைவர்க்கும் அருள் பொழிந்தது. செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் இக்கதையைச் 'சிலப்பதிகாரம்' எனும் காப்பியமாய் இயற்றினார்.

கோவலன் கண்ணகி சோழநாட்டைக் கடப்பதுவரையுள்ள கதையைப் புகார்க் காண்டம் எனவும், மதுரையைத் தீக்கிரையாக்கிச் சேரநாடடைந்ததுவரையுள்ள பகுதியை மதுரைக் காண்டம் எனவும், செங்குட்டுவன் படையெடுத்து, கல் கொணர்ந்து, கண்ணகிக்குக் கோயில் சமைத்ததுவரையிலான பகுதியை வஞ்சிக் காண்டம் எனவும், இக்கதையை இளங்கோவடிகள் மூன்று காண்டங்களில், சிலப்பதிகாரம் எனும் காவியமாய் எழுதினார்.

முற்பிறவியில் பரதன் எனும் பெயருடன் கோவலன், அரசன் ஒருவனிடம் பணியிலிருந்தான். அக்காலை சங்கமன் என்னும் வணிகன் ஒருவனை ஒற்றன் என அரசனிடம் கூறி அவனைக் கொலைக்காளாக்கினான். சங்கமனின் மனைவி நீலி, பதினான்கு நாள்கள் அழுது புலம்பித் திரிந்து, முடிவில், "எம்மை இந்நிலைக்கு ஆளாக்கியோர் இதே துன்பத்தை எய்துவர்" எனச் சாபமிட்டு இறந்தனள். கோவலன் கொலைக்கு அவனது பண்டைய இவ்வினையே காரணம் என இளங்கோவடிகள் சுட்டியுள்ளார். இந்திரன் அவையிலிருந்த நடனமங்கை உருப்பசி அகத்தியனது முனிவினால் புகார் நகரில் கணிகையாய்த் தோன்றினாள்; அவள் மரபில் வந்தவளே மாதவி எனும் இவற்றை முற்பிறப்பு நிகழ்ச்சிகளாய் இளங்கோவடிகள் கூறியிருக்கிறார்.

கோவிலன் கதை

வாய்மொழியாய் இக்கதை வழங்கிவந்தமையால் அவ்வக்காலப் பழக்கவழக்கங்கட்கேற்பவும், சொல்லுபவர் தன்மைக்கேற்பவும் பல்வேறு மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. புகழேந்திப்புலவர் பாடிய, "கோவிலன் கதை" என்றொரு நூல் உள்ளது. சங்கரதாஸ் சுவாமிகள் 'கோவலன் கண்ணகி' நாடகம் இயற்றியுள்ளார். இவை போன்றவை இடைக்காலத்தில் எழுந்தவை. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகத்தில் மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய கருத்துகள் ஆங்காங்கிருப்பினும், இந்நாடகம் சிலப்பதிகாரத்தைத் தழுவிய தாய் இல்லை. புகழேந்திப்புலவர் பெயரால் அளிக்கப்பட்டுள்ள 'கோவிலன் கதை'யே இவற்றிற்கெல்லாம் முதனூலாய் இருந் துள்ளது.

புகழேந்தியின் 'கோவிலன் கதை' நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் உள்ளது. ஒட்டக்கூத்தரின் புலமைக்காய்ச்சலால் சிறை செய்யப்பட்டிருந்த புகழேந்திப்புலவர், நீர் மொள்ளச் செல்லும் பெண்களுக்காய்ப் பாடியது இஃது என்பர். ஆதலின் எளிய மாந்தருக்கு ஏற்ற சுவை தரும் கொச்சை மொழி நிறைந்ததாய்

உள்ளது. நீர் மொள்ளச் செல்பவர் நின்று கேட்கவேண்டு மென்றால், இலக்கியச் செவ்வி நிறைந்தவற்றைக் கூறிக்கொண் டிருக்க முடியாது. கால் நடந்தாலுங்கூட, கட்டியிழுத்து நிற்க வைக்குமாறு மந்திர தந்திர நிகழ்ச்சிகளைக் கொண்டதாய்க் கதை இருக்கவேண்டுமெனப் புகழேந்திப்புலவர் இதனைப் பாடியிருக்கலாம். அன்றைய சமூகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி களைக் கதையினூடே சொன்னால் கேட்பவர்க்கு அவை சுவைதரக் கூடியனவாய் இருக்கும். அவற்றை இணைத்துப் பொழுது போக்குக்காய் இக்கதை புனையப்பட்டுள்ளதெனத் தெரிகிறது. சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகளுடன் அவற்றையொத்த வேறு கதைநிகழ்ச்சிகளையும் இணைத்து அந்நிகழ்ச்சிகட்குத் தெய்வ ஆற்றலையும் ஊட்டி, பாட்டிகள் பேரக்குழந்தைகட்குக் கூறுவது போல வேடிக்கைக் கதையாய்ப் புனைந்துவிட்டார், புகழேந்திப் புலவர். அவருடைய கதைச்சுருக்கம்

மதுரையில் எண்ணெய் வணிகன் ஒருவன் தன் எண்ணெய் நன்றாய் விற்பனையானால் அங்கிருந்த பத்ரகாளியம்மன் கோவிலுக்கு விளக்கு வைப்பதாய் வேண்டிக்கொண்டான். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனோ, தனக்கு மகவில்லாததால் காளிமீது கடுஞ்சினம் கொண்டு கோவில் கதவை அடைத்ததோடு, கோவிலில் யார் விளக்கேற்றினாலும் தண்டனையுண்டு என அறிவித்திருந்தான். எண்ணெய் வணிகனுடைய விற்பனை சிறப்பாய் நடைபெற்றது. மன்னவன் அறிவிப்பை அறியாத அவன், தன் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் கோவிலில் விளக்கேற்றிவைத்தான். இதனைக் கேள்வியுற்ற அரசன் அவ்வணிகனின் தலையைத் துண்டித்தான். காளியின் மடியில் விழுந்த வணிகன் தலை, "உனக்கு விளக்கேற்றியதற்கா இத்தண்டனை!" எனப் புலம்பியது.

பாண்டியனைப் பழிவாங்குவதாய்க் காளி ஆறுதல் கூறினாள். வணிகனுடன் அவன் மனைவியும் இறந்தாள். மதுரைச் சொக்கநாதர் அவ்விருவர் உயிரையும் ஒரு தங்கச் சிமிழில் அடைத்து வைத்தார்.

வணிகச்செட்டி கோவிலனுக்கு மனைவியாய் வந்து பாண்டியனைப் பழிவாங்கி உயிர் குடிப்பதாய்க் காளி சூளுரைத்தாள். சொக்கலிங்கர் காளியின் உயிரையும் தங்கச் சிமிழில் அடைத்து வைத்தார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் தவம் செய்த செட்டிக்குச் சொக்கலிங்கர் பிள்ளைவரம் தந்தார். அவன் மனைவி

வர்ணமாலை கோவிலனைப் பெற்றாள். பிள்ளைவரம் வேண்டிய பாண்டியனுக்கும் அவன் மனைவிக்கும் சொக்கலிங்கர் சிமிழியில் அடைத்து வைத்திருந்த காளியின் உயிரை எலுமிச்சம்பழமாக்கிக் கொடுத்தார். அதை உண்ட பாண்டியனின் மனைவி கோவிலிங்கி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். பிறக்கும்போதே அக் குழந்தையின் வலக்காலில் சிலம்பும், இடக்கையில் செப்பேடும், கழுத்தில் பூமாலையும் இருந்தன.

> வலதுகால் செஞ்சிலம்பு, இடதுகை செப்பேடு
> கழுத்திலே பூமாலை, கன்ன வழியாக
> கன்னத்து வழியாகக் கட்டழகி பெண்பிறந்தாள்

என்கிறது பாடல்.

குழந்தை பிறந்தவுடன் இவளால் மதுரை அழியும் எனக் சோதிடர்கள் கூறவே, பாண்டியன் அக்குழந்தையைப் பேழையில் வைத்து வைகையாற்றில் விட்டான். பேழை, காவிரிப் பூம்பட்டினத்துக் கரையோரம் வந்து சேர்ந்தது. மாநாய்கனும் மாச்சோட்டானும் அதைக் கண்டெடுத்தனர். அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி பெட்டியை மாச்சோட்டானும், பெட்டிக்குள்ளிருந்த குழந்தையை மாநாய்கனும் எடுத்துக் கொண்டனர். பிள்ளைப்பேறில்லாத மாநாய்கன் பெட்டியி லிருந்து எடுத்த குழந்தையை அருமையாய் வளர்த்து வந்தான்; கண்ணகி எனப் பெயரும் சூட்டினான்.

திருக்கடையூரிலிருந்த கணிகை வசந்தமாலை பிள்ளைவரம் வேண்டியிருந்தாள். சொக்கலிங்கர் சிமிழிலிருந்த எண்ணெய் வணிகன் மனைவியின் உயிரை எலுமிச்சம்பழமாக்கித் தந்தார். அவளும் ஒரு குழந்தையைப் பெற்றாள். அதற்கு மாதகி என்று பெயரிட்டு வளர்த்தாள். மாதகி பிறக்கும்போதே பொன்னுருவி மாலையுடன் பிறந்தாள்.

கண்ணகி, கோவிலன், மாதகி பிறப்புபற்றிக் 'கோவிலன் கதை' இவ்வாறு கூறுகிறது. மகாபாரதத்தில் குந்திதேவி தான் பெற்ற குழந்தையைப் பேழையில் வைத்து ஆற்றில் விட்டது, கர்ணன் கவசகுண்டலங்களுடன் ஒன்றிணைந்து பிறந்தது ஆகிய செய்திகளைப் புகழேந்திப்புலவர் தம் கதையில் இணைத்து விடுகிறார். தெய்வம் மானுடமாய்ப் பிறந்து மன்னனை அழிப்பதை இராமாயணம் காட்டும்; அதை நினைவில் கொண்டு காளியே கண்ணகியாய்ப் பிறந்து மன்னனை அழிக்கப்போவதாய்ப் புகழேந்தி புனைந்து கொள்கிறார்.

"சிலப்பதிகாரம் கண்ணகியை மானுட மகளாய்ப் படைத்துத் தெய்வமாக்குகிறது. 'கோவிலன் கதையோ' காளியே கண்ணகியாய்ப் பிறப்பெடுத்தாள் என்று காட்டுகிறது. தெய்வப்பிறவி என்பதை நிறுவவும், கண்ணகி பத்தினி என்பதைக் காட்டவும் 'கோவிலன் கதை'யில் பல அற்புதச் செயல்களும், இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் படைக்கப்பட்டுள்ளன" என்கிறார், இந்நூலாசிரியர் திருமதி சரளா இராசகோபாலன்.[1]

கோவிலனின் தந்தையான மாச்சோட்டான் செட்டி மாநாய்கன் வீட்டிற்கு வந்து, கோவிலன் கண்ணகி திருமணத்திற்குப் பரிசம் போட்டுச் சென்றான். பண ஆசை கொண்ட மாநாய்கன் பரிசப் பணமாய்ப் பலரிடம் வாங்கிவிட்டதால், பஞ்சாயத்தார் கூடித் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்த்தனர். சீட்டு, கோவிலன் பெயருக்கே வந்தது. அதனால் கோவிலனுக்கும் கண்ணகிக்கும் திருமண ஏற்பாடாயிற்று. கோவிலன், தன் திருமணத்தின்போது 'மாதகி'தான் சதிர்க்கச்சேரி ஆடவேண்டும் என்றும் வற்புறுத்தினான். மாதகியால் துன்பம் வரும் எனக் கோவிலனின் ஜாதகம் கணித்தபோதே அவன் தந்தை அறிந்திருந்ததால் அவர் மறுத்தார். ஆனால், கோவிலன் பிடிவாதம் பிடித்ததால் தந்தையும் இணங்கினார்.

மாதகி நாட்டியமாட வரும்போதே, "நாட்டிய முடிவில் என்னுடன் தோன்றிய பொன்னுருவி மாலையைச் சுழற்றி விட்டெறிவேன். அது யார் கழுத்தில் விழுகிறதோ அவரை அழைத்துச் சென்றுவிடுவேன்" என்றாள். பெரியோர் ஏற்றனர். மாதகியைக் காணமுடியாதபடி கோவிலன் மறைத்து வைக்கப் பட்டான். ஆனால், அவனோ மீறி வெளியே வந்து பார்த்தான். மாதகி, சொக்கரை வணங்கி மாலையை விட்டெறிந்தாள். அது கோவிலன் கழுத்தில் விழுந்தது. அவனால் மாலையைக் கழற்ற முடியவில்லை. கத்தியால் வெட்டிப் பார்த்தான்; இரம்பத்தால் அறுத்துப் பார்த்தான்; மாலையை அகற்ற முடியவில்லை.

> கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லை
> காண்கிலனே, இது யார் சூதோ?
> கத்தியும் ரம்பமும் வாளு,முனை மழுங்கக்
> காரணம், மா(து)இவள் செய்திதோ![2]

1. இந்நூல், பக். 33

2. ச.சு.சங்கரலிங்க கவிராயர், கோவிலன் சரித்திரம், நாடகப் பாடல்

எனப் புலம்புகிறான். மாதகியோ, 'மாலையைத் தராவிட்டாலும் பரவாயில்லை. இந்த வெற்றிலையைப் போட்டுக்கொள்ளுங்கள்' என வெற்றிலையில் வசியமருந்தினைத் தடவிக் கொடுத்துச் சென்றுவிட்டாள். வெற்றிலையை வாங்கித் தரித்த கோவிலன், அப்போதே மாதகிபால் மையல் கொண்டு,

திருக்கடையூர் என்பதும் இது தானோ
சித்ரத் தேரோடும் வீதியென்ப திது தானோ
தாசிகள் தெருவென்ப திது தானோ
என்னைத் தான்வரச் சொன்னஇட மிது தானோ
மாதவி வாழுமனை யிது தானோ
விலை மாதர் வசிக்குமிடம் இது தானோ[1]

என்று தேடியலைந்தவனாய் மாதகியைச் சென்றடைந்தான். அங்கேயே பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து பொருள் எல்லாவற்றையும் இழந்தான்.

திருமணம் நடைபெற்றபோது கண்ணகிக்கு வயது ஐந்து; தந்தை மடியில் அமர்த்தி அழாதிருப்பதற்காய்க் கையில் மாங்கனியைத் தந்து தாலி அணிவிக்கப்பட்டது. கண்ணகி வளர்ந்து பன்னிரண்டு வயதானதும் கழுத்தில் தாலியிருப்பதைக் காண்கிறாள். மாமியாரிடம் கேட்டு, அவள் கணவன் கோவிலன், மாதகி வீட்டிலிருப்பதை அறிந்தாள்; அவரை ஏன் அழைக்க வில்லை எனக் கேட்டபோது,

வேசியுடன் போனவரை வீட்டுக்கு நாமழைத்தால்
நம்மொத்த வர்த்தகர்கள் நம்மை மதியார்கள்

அதனால் அழைக்கவில்லை; உன்னால் முடிந்தால் அழைத்துக் கொள்" என்றாள், மாமி.[2]

கண்ணகி, தன் கணவன் வரவில்லையென்றால் தன் உயிர் நிலைக்காதெனக் கடிதம் எழுதிக் கோவிலனுக்குக் கொடுத்தனுப்புகிறாள். மனைவியைக் காணச் செல்லக் கோவிலன் மாதகியிடம் அனுமதி வேண்டினான். அவளோ கோவிலனைப் போன்ற ஒரு பொற்பதுமை செய்து கொடுத்த பிறகுதான் செல்ல வேண்டுமென்றாள்.

---

1. ச.சு.சங்கரலிங்க கவிராயர், கோவிலன் சரித்திரம், நாடகப் பாடல்

2. இந்நூல், பக். 37

பொன்னாலே உன்னுரு வார்த்து அதைப்
பூவை எந்தனிடம் சேர்த்து தந்தால்
அன்புடன் நானதைப் பார்த்து உமக்
களிப்பேன் விடையல்ல தீர்த்து.[1]

கோவிலன் பத்தினி கண்ணகியை நினைத்தான். பொற்பதுமை அங்கே தோன்றியது. மாதகி, அப்பொற்பதுமை பேச வேண்டு மென்றாள். மீண்டும் கோவிலன் கண்ணகியை நினைத்தான்; பதுமை பேசியது; அதோடு மாதகியைப் பிரம்பால் அடித்தது. அதனால் மாதகி அவனை வழியனுப்பி வைத்தாள்.

இன்னும் இவைபோன்ற பல இடர்ப்பாடுகளைத் தாண்டிக் கோவிலன் கண்ணகியை அடைந்தான்.

கண்ணகி அவனுக்கு உணவு படைக்கும்போது உண்ண மறுக்கிறான். மாதகியின் கடன் தீர்ந்தால்தான் உண்பேன் என்கிறான். கண்ணகி பணமில்லையே என்று வருந்துகிறாள். கோவிலன் 'உன் சிலம்பைக் கொடு; அதை விற்று மாதகியின் கடனை அடைப்பேன்' என்றான். கண்ணகி பிறந்தபோதே அவள் காலில் சிலம்பிருந்தது; அதனை அப்போது கழற்ற முனைந்தபோது, அச்சிலம்பு புலம்பி, கோவிலன் மதுரைக்குச் சென்றால் அவன் உயிருக்கு ஆபத்து நேரும் என்றது. ஆனாலும் கோவிலன் பிடிவாதம் செய்ததால், சிலம்பைத் தந்தாள். கோவிலன் அவளை விட்டுத் தான்மட்டும் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டான். கண்ணகி விரைந்து பின்தொடர்ந்து அவனைச் சேர்ந்தாள்.

வழியில் கண்ணகி செய்த பல அற்புதச் செயல்கள் கதையில் கூறப்பட்டுள்ளன. மதுரையில் கோவிலன் கண்ணகியை ஆயர் குலத்தைச் சேர்ந்த ஆய்ச்சியிடம் அடைக்கலப்படுத்திவிட்டுச் சிலம்பு விற்கப் புறப்பட்டான். புறப்படுமுன் தனக்கு ஏதாவது நேர்ந்தால்,

தேங்கா யுடைந்து விடும் இந்த
திருவிளக்கு நின்று விடும்;
மாங்கா யழுகி விடும் வைத்த
மல்லிகைப்பூ வாடி விடும்;
இந்த அடையாளங்கள் அது
இப்படியே தானிருந்தால்,
வந்து விடுவேண்டி; இங்கு
வைத்த அடையாளங்கள்

1. ச.சு.சங்கரலிங்க கவிராயர், கோவிலன் சரித்திரம், நாடகப் பாடல்

பந்த மடையுமானால், நான்
பதைத்து மடிவேண்டி;
போக விடை கொடடி உன்
பொற்சிலம்பை விற்றுவர

எனச் சில அடையாளங்களை வைத்துச் சென்றான்.[1]

மதுரையில் வஞ்சிப்பத்தன் என்பான் ஒரு பொற்கொல்லன்; பாண்டிமாதேவியின் சிலம்பைப் பழுதுபார்க்க அவனிடம் தரப்பட்டது. அதனை அவன் பழுது பார்த்து அதிலிருந்த நீர் காய்வதற்காகத் தன்வீட்டுச் சுவர்மீது வைத்திருந்தான். அப்பொற் கொல்லன் வீட்டினருகில் இருந்த மரத்தில் கருடன் ஒன்று கூடுகட்டி முட்டைகளிட்டிருந்தது. வஞ்சிப்பத்தன் பிள்ளைகள் அக் கூட்டினை கலைத்து விட்டனர்; முட்டைகளையும் உடைத்து விட்டனர். இதனால் சினங்கொண்டிருந்த கருடன் பழிவாங்கக் கருதி, சுவர்மீது வைத்திருந்த சிலம்பைத் தூக்கிச் சென்றுவிட்டது. சிலம்பைப் பறிகொடுத்த வஞ்சிப்பத்தன் மன்னனின் சினத்திற்கு ஆளாகியிருந்த நிலையில்தான், கோவிலன் சிலம்பை விற்க வஞ்சிப்பத்தனிருந்த வீதிக்கு வந்தான். வஞ்சிப்பத்தன் கோவில னிடமிருந்து சிலம்பைக் கவர்ந்து அவன்மீது திருட்டுக் குற்றம் சாற்றினான். விதிவழி மதி செல்ல வேண்டுமென்று மனங்கொண்ட சொக்கர் 'வஞ்சிப்பத்தன் சொற்கேட்டு மன்னவன் மதிமயங்க வேண்டுமென' வெண்ணீறு தூவினார். அதனால் மன்னன் பொற்கொல்லனுக்குச் சாதகமாய்த் தீர்ப்பளித்தான். மன்னனின் அமைச்சர்கள் இத்தீர்ப்புக்கு ஒப்பவில்லை. கோவிலிங்கியிடம் சிலம்பைக் காட்டிக் கேட்டபோது அவள் அது தன்னுடையது அன்று என்றாள். இதன் பின்னும் மன்னன் கோவிலனைப் பல சோதனைகளுக்கு ஆளாக்கினான். அனைத்திலும் கோவிலன் வெற்றி பெற்றான். ஆனாலும், பாண்டியன் கோவிலனை வெட்டும்படித் தீர்ப்பளித்தான்.

கோவிலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி அறிந்தாள்; கொலையுண்டு கிடந்த இடத்திற்குச் சென்றாள். தன் தெய்விக ஆற்றலால் அவ்னை உயிர்பெறச் செய்தாள்.

எழுந்தவனோ,

மாதகியாள் வந்தாலே வாடியென் மடிமேலே
கண்ணகியாள் வந்தாலே கடக்கப்போய் நில்லுமென்றான்.

---

1. ச.சு. சங்கரலிங்கக் கவிராயர், கோவிலன் சரித்திரம், பக். 56

கோவலனின் இக்கூற்றால் அவன் கண்ணகியைவிட மாதகியை விரும்புகின்ற தன்மை தெரியவருகிறது என்கிறார் இந்நூலாசிரியர்.[1] இக்காட்சியைச் சங்கரலிங்கச் கவிராயர் 'கோவிலன் சரித்திரம்' எனத் தாம் எழுதியுள்ள நாடகத்தில் இன்னும் விரிவாய் எழுதியுள்ளார்.

தர்க்கம்

கோவலன்	மாதவியோ கண்ணகியோ, வந்தவ ளாரடி; மாதவியானால் மடிமேல் வா, கண்ணகியானால் கடக்கப்போ.	(மாத)
கண்ணகி	தோட்டங் கொண்டாள் கண்ணகியாள், பூமுடித்தாள் மாதவியாள்; தோட்டங் கொண்டவ ளிங்குவந்தேன், பூமுடித்தவ ளேன்வருவாள் ஏன் வருவாள்.	(தோட்)
கோவ.	கூத்தியாளோ கொண்டவளோ, கூறின தாரடி; கூத்தியானால் மடிமேல்வா, கொண்டவளானால் விலகிப்போ.	(கூத்)
கண்	யானை கொண்டாள் கண்ணகியாள், ஏறிக்கொண்டாள் மாதவியாள்; யானை கொண்டவ ளிங்கு வந்தேன், ஏறிக் கொண்டவள் ஏன் வருவாள்?	(யானை)
கோவ.	வைப்பினளோ மணந்தவளோ, வந்தவ ளாரடி; வைப்பினளானால் மடிமேல் வா, மணந்தவளானால் விலகிப்போ.	(வைப்)
கண்.	கழுத்து கொடுத்தவள் கண்ணகியாள், கட்டி யணைத்தவள் மாதவியாள்; கழுத்து கொடுத்தவள் இங்கு வந்தேன், கட்டியணைத்தவ ளேன்வருவாள் ஏன் வருவாள்?	(கழு)

கண்ணகியால் உயிர்பெற்ற கோவிலன் நடந்தவற்றைக் கூறியதோடு தனக்குத் தீங்கிழைத்தவர்களைப் பழிவாங்குமாறும் சொன்னான்.

கண்ணகி மன்னன் அவைக்குச் சென்றாள். நீதிகேட்டாள். மன்னன் காணாமற்போன சிலம்பை வரவழைக்குமாறு கூறினான். கண்ணகி, சிலம்பினை 'வா' எனக்கூற அது அவள்முன் வந்து

1. இந்நூல், பக். 67

நின்றது. மன்னன் தவறுணர்ந்தான். கண்ணகி பாண்டிய மன்னனைக் கொல்லக் காளி உருவெடுத்தாள்.

> இரண்டு கரந்தனிலே எடுத்தாள் திரிசூலம்,
> சூலம் ஒருகையில் சுக்குமாந்தடி யொருகை....
> சூலத்தைக் கொண்டுமவள் குத்தினாள் பாண்டியரை,
> சிறுகுடலும் பெருங்குடலும் சேர்த்துப் பிடுங்கினாளே!

பாண்டியனை அழித்தபின் வஞ்சிப்பத்தனைப் பழி வாங்கினாள். அவன் மனைவி மக்களையும் கொன்று குடலைப் பிடுங்கி விண்ணில் விட்டெறிந்தாள்.

மதுரை நடுவில் வந்து நின்றாள். தன் சிலம்பு, தாயார் சிலம்பு, வலமார்பு, இடமார்பு ஆகியவற்றைப் பறித்து நான்கு திக்கு களிலும் வீசினாள். மதுரை எரிந்தும் அவள் சினம் தணியவில்லை. தயிர் விற்கும் இடைச்சி வெண்ணெயை எடுத்துக் கண்ணகி மார்பில் அப்பினாள்; உடற்சூட்டால் வெண்ணெய் உருகியது. இடைச்சி தன் முன்றானையைக் கிழித்து மார்பில் வரிந்து கட்டி முறத்தால் விசிறினாள். கண்ணகியின் உடல் குளிர்ந்தது. அதனால்

> எந்தத்தெரு வெந்தாலும் இடைச்சிதெரு வேகாது

என்று வரங்கொடுத்தாள்.

கோவிலன் இறந்த செய்தியைக் கண்ணகி மாதகிக்கு ஓலை எழுதித் தெரிவித்தாள். மாதகி வந்தவுடன் அவளுடன் கூடி மாரடித்தாள்; மாதகியைக் கோவிலனுடன் உடன்கட்டையேறச் சொன்னாள். கோவிலன் மாதகியை ஈமப்படுக்கையில் படுக்கவைத்து, ஈனாத வாழை இளவாழைத் தண்டை எடுத்துப் பற்றவைத்தாள். அவளே இருவர் சாம்பலையும் காசியிற் கரைத்தாள். பின்னர், மலையாள எல்லையிலே சிலகாலம் பகவதியாள் என்று பெயர் பெற்று இருந்தாள். இறுதியாய்த் திருவொற்றியூர் வந்து வட்டபுரி அம்மன் என்னும் பெயரில் இங்கேயே தங்கிவிட்டாள்.[1]

எவ்வெவ்வகையில் கதை திரிக்கப்பட்டுள்ளது; இலக்கியம் என்பதற்கிடமின்றிக் கட்டுக்கதையாய்ச் செய்யப்பட்டுவிட்டது என்பதைக் காட்டுவதற்காய் இக்கதை சற்றே விரிவாய் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மானுடப்பெண்ணாய் இருந்து தெய்வமாயவள். கோவிலன் கதையில் காளியே கண்ணகியாய்

---

1. இந்நூல், பக். 6-89ன் சுருக்கம்

பிறந்து பாண்டியனைப் பழிவாங்கியதும் பழையபடி தெய்வமாய் விடுகிறாள். ஆதலின், சிலப்பதிகார வஞ்சிக்காண்ட நிகழ்ச்சி கோவிலன் கதையிலும், அதையொட்டி எழுந்த கதைகள், நாடகங்களிலும் இடம்பெறவேயில்லை; சேரன் செங்குட்டுவன், இளங்கோ என்ற பெயர்களுக்கெல்லாம் இக்கதைகளில் இடமே யில்லை.

இவற்றைப் படிக்கும்போது இலக்கியம் படிக்கும் உணர்வின்றிக் கட்டுக்கதைகளைப் படிப்பதான உணர்வே ஏற்படுகிறது. இளங்கோ எவ்வெந்நோக்கங்களை வலியுறுத்த எழுதினாரோ அவை அத்துணையும் பாழ்பட்டுப் போகும்படியாய் இக்கதைகள் அமைந்துள்ளன. இவற்றைப் படிப்பவர்க்குக் கதைத் தலைவர்களிடம் எவ்வித மதிப்பும் ஏற்படுவதில்லை; ஒரு மந்திரவாதி காட்டுகின்ற வித்தைகளைப் பார்ப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது; பொழுதுபோக்குக்காகவே நாடகம் பார்த்ததுவும் இத்தகைய கதைகள் ஏற்படக் காரணமாய்விட்டது. கதையில் கோவிலன் கசடன்; கண்ணகி கைதேர்ந்த மந்திரக்காரி; மாதவி காசு பறிக்கும் ஒரு வேசை என்ற நிலையே தென்படக் காண்கிறோம்.

கண்ணகி ஆக்கல், அழித்தல் திறம் நிறைந்தவளாய்க் காட்டப்பட்டுள்ளாள். தொட்டதற்கெல்லாம் சாபமிடுகிறாள்; நினைத்தபோதெல்லாம் கோவிலன் அவள் பெயரை மந்திரமாய் உச்சரித்து வேண்டியதைப் பெறுகிறான். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கண்ணகி மாதவியைப் பார்த்ததுமில்லை; கடிந்து கொண்டதுமில்லை. கோவிலன் கதையிலோ மாதகியைக் கண்ணகி வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசுவதோடு இறுதியில் அவளைக் கோவிலனுடன் உடன்கட்டையேறச் செய்து எரித்தும் விடுகிறாள்.

மாதகி மிகவும் இழிதகைமையுடையவளாய்ச் சித்திரிக்கப் பட்டுள்ளாள். கோவிலனை வசிய மருந்துமூலம் வயப்படுத்துகிறாள். அவன் பெருஞ்செல்வத்தையெல்லாம் ஓயாது பெற்று அழிக்கிறாள்.

காலைகடைச் செலவு கொள்ள கால்மரக்கால்
பொன்வேணும்
உச்சிக் கடைச் செலவு செய்ய ஒருமரக்கால்
பொன்வேணும்
பாக்குக் கொள்ள எந்தனுக்குப் பத்துலட்சம்
பொன்வேணும்
வெற்றிலை வாங்குதற்குப் வேணலட்சம்
பொன்வேணும்

புகையிலை வாங்குதற்குப் பொன்கப்பல்
பொன்வேணும்
சுண்ணாம்பு வாங்குதற்குச் சொர்ண கப்பல்
பொன்வேணும்

எனப் பணம் பறிப்பதற்கு ஒரு வரையறையே இல்லை. கோவிலனைக் கண்ணகியிடம் அனுப்பும்போது அவனுடைய கணையாழி, அரைஞாண், உருமாலை முதலாய எல்லாவற்றையும் கழற்றிக் கொண்டு அனுப்புகிறாள்.

பாடல்களில் 'சீல்' (முத்திரை) முதலாய ஆங்கிலச் சொற்களிலிருப்பதிலிருந்து இக்கதைகளெல்லாம் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டளவில் தோன்றியிருக்கவேண்டும் எனத் தெரிகிறது.

ஏட்டினிலிருந்த காவியம் மக்களுக்குக் கிடைக்காத நிலையில் தெரிந்த சில செய்திகளைக் கொண்டு, புகழேந்தி தம் மனம்போன போக்கில் எழுதிவிட்டார்; மற்றவரும் இதனையே பின்பற்றி எழுதியுள்ளனர்.

கண்ணகி வழக்குரை

அக்கால கட்டத்தில் எழுந்த கதைகள் அனைத்துமே சற்றொப்பப் புகழேந்திப் புலவரின் கதைப் போக்கிலேயே அமைந்துள்ளன. கோவலன் கண்ணகி திருமணம்; கோவலன் கண்ணகியைவிட்டு நீங்கி மாதவியுடன் வாழ்தல்; பாண்டியனையும் மதுரையையும் அழித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் மட்டுமே சிலப்பதிகாரத்தை நினைவூட்டுவனவாய் இக்கதைகளில் காணப்படுகின்றன. மற்ற நிகழ்ச்சிகள் முற்றிலும் வேறுபட்டனவாய் உள்ளன.

ஈழத்தில் தமிழர் வாழும் வடபுலத்திலும் பிற இடங்களிலும் கண்ணகி அம்மன் கோயில்கள் உள்ளன; மட்டக்களப்பில் எல்லா ஊர்களிலும் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களில் கண்ணகியின் புகழுரைக்கும் குளுத்திப் பாடல் முதலாய பல பாடல்கள் பாடப்பட்டு வந்தாலும், அவற்றுள் முக்கியமானதாயும் புகழ்பெற்றதாயும், 'கண்ணகி வழக்குரை' இருந்து வருகிறது. கண்ணகி அம்மன் கோயில்களில் பாடும் இப்பாடல், 'கண்ணகி வழக்குரைக் காவியம்' என்றும் வழங்கப்படுகிறது. இக் கதையில் கண்ணகி எனும் பெயர் 'கண்ணகை' என வழங்கப்படுகிறது.

விரிவஞ்சிக் 'கோவிலன் கதை'யிலிருந்து மாறுபட்டுள்ள இடங்கள் மட்டுமே இங்கே கூறப்பட்டுள்ளன. மதுரைப் பாண்டிய

மன்னன் சிவனைப்போல் நெற்றிக் கண்ணை உடையவனா யிருந்தான். இதனை விரும்பாத உமையம்மை, பாண்டியனின் நெற்றிக் கண்ணை அகற்றுமாறு சிவபெருமானிடம் கூறினாள். பரராசன் மகளை, சிவன் ஒரு எலுமிச்சம் பழமாய் மதுரையில் பழுக்கச் செய்தான். அப்பழம் அதனைப் பறிக்க முயன்ற யார் கையிலும் கிடைக்காது பாண்டிய மன்னன் கையை அடைந்தது. அவன் கையில் அது நெருப்புருண்டையாய் மாறியது; உடனே அதனைக் கீழே இட்டு, அஃது இருந்த தன் கையால் நெற்றி வியர்வையைத் துடைத்தான்; அவ்வளவில் நெற்றிக்கண் மறைந்துவிட்டது. நெருப்புண்டை மீண்டும் கனியாய் மாறியது; மன்னன் எடுத்து மனைவி கையில்தர அவள் அதனை ஒரு பொற்குடத்தில் இட்டு வைத்தாள்; மூன்றாம் நாள் அக்கனி அழகிய பெண் குழந்தையாய் மாறியது. அக்குழந்தையால் நாட்டுக்குக் கேடு விளையும் என வேதியர்கள் கூறியதால், மன்னன் அதனை ஒரு பேழையில் வைத்துக் கடலில் விட்டான். பேழை மிதந்துவந்து, காவிரிப்பூம்பட்டினம் சேர்ந்தது. கடற்கரையில் உலவியிருந்த மானாகன், பேழையைக் கண்டு, குழந்தையை எடுத்து வளர்த்தான். குழந்தைக்குக் கண்ணகை எனப் பெயரிட்டான்.

கண்ணகையின் காற்சிலம்பில் மாணிக்கப் பரலை வைக்க மானாகன் விரும்பினான்; கப்பல் செய்து, கடலிற் செலுத்தி, எதிர்த்தவரை வென்று, நாகமலையை அடைந்து நாகமணியைக் கொண்டு வந்தான்....

கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகையை அடைந்தான். மாதவி தன் தோழி வசந்தமாலையை அனுப்பிக் கோவலனை அழைத்து வருமாறு கூறினாள். கோவலனோ,

> எண்ணரிய கற்புடைய கண்ணகையார் இங்கிருக்க
> நண்ணுவனோ மாதவிபால் நான்சென்று சேர்வதில்லை;
> உண்ணநல்ல அமுதிருக்க உவந்துநஞ்சை உண்பார்களோ,
> வெண்ணெயது தேடுவரோ விரும்பிநெய்தான் இருக்கையிலே?

எனக் கூறி மாதவியிடம் திரும்ப மறுத்துவிட்டான்.

கோவலன் பாண்டியனிடம் தான் கள்வன் அல்லன் என வாதாடுகிறான். மன்னனோ பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்டு அவனைக் கொன்று விடுகிறான்..

கண்ணகை பாண்டிய மன்னனை நோக்கி,

> ஆதிபக வன்மதலை வள்ளுவன் உரைத்த
> அருந்தமிழ் படித்த தில்லை யோடாநீ

என வெடித்துப் பேசுகிறாள்.

மதுரையை எரியூட்டிய பின்னர்க் கண்ணகை இடைச்சேரியை அடைந்தாள். அங்கிருந்த இடைச்சியர் அவளுடைய முலையில் வெண்ணெயை அப்புகின்றனர்; பறைச்சியர் சிலர் பஞ்சினை அப்பினர். கண்ணகை இடைச்சேரியிலும் பறைச்சேரியிலும் 'தீ புகாதொழிக' என அருள்புரிகிறாள்.

இடைக்குல மாதர்கள் மழைவேண்டிக் கண்ணகி தெய்வத்தை வேண்டினர். மழையும் பொழிந்தது.[1]

கடல்கடந்து சென்ற பத்தினி வழிபாடு ஈழநாட்டில் சிறந்த காவியம் ஒன்று தோன்ற வழிகோலியது. இந்த ஈழக் காவியத்தையொட்டித் தமிழகத்தில் நூல்கள் எழ வாய்பில்லாது போயிற்று என இந்நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக் கதையைப் படிப்போர்,

ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாது வாழியரே

எனக் 'கண்ணகி வழக்குரை' ஆசிரியர் வாழ்த்துகிறார்.

கோவலன் கர்ணகை கதை

'கோவலன் கர்ணகை கதை' குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வழங்கி வருகின்ற நாட்டுப்புறக் கதைப்பாடலாகும்.

'கண்ணகி வழக்குரை'யில் உள்ளது போலவே இக்கதையிலும் கர்ணகையாளின் காற்சிலம்புக்கு நாகமணி கொண்டுவர நாகமுத்தார் கோட்டைக்குக் கடல்கடந்து செல்லுகின்றான், மானாகன். நாகமுத்தாள், 'பத்தினி அல்லாமல் இம்மணியை வேறொருவர் பூண முடியாது. கர்ணகை சிலம்புக்கே இதனைப் பயன்படுத்துவேன்' என உறுதி சொல்லுமாறு மானாகனிடம் கூறினாள். மானாகன் அவ்வாறு கூறியவுடனே ஐந்து தலை நாகம் வெளிப்பட்டு நாகமணியைக் கக்கித் தந்தது.

திருமணம் முடிந்து ஏழுநாள் முடியுமுன் ஒருநாள் மாதேவி நாட்டியமாடிய இடத்தில் ஒலித்த மத்தள ஓசையைக் கேட்டு, கோவலன், மாதேவி நாட்டியத்தைத் தான் சென்று காணத் தாயிடம் அனுமதி கேட்டான். தாயார் அவன் செல்லக்கூடாதெனத் தடுத்தாள்; மீண்டும் மீண்டும் அவன் வேண்டினான். அதனைக் கண்ட கர்ணகையே அவனை அனுப்புமாறு மாமியிடம் கூறினாள். சென்ற கோவலன் சென்றவன்தான்; திரும்பவில்லை; மாதேவியோடு மகிழ்ந்திருந்தான்; பொருளெல்லாம் கரைந்தது.

1. இந்நூல், கண்ணகி வழக்குரையின் சுருக்கம் (பக். 90-142)

மாதேவியின் தாய் வயந்தமாலை, மாதேவியிடம், 'பொருளில்லாதவனை ஏன் வைத்திருக்கிறாய்; துரத்திவிடு' எனக் கோவலனை வெளியேற்றுமாறு அறிவுரை கூறினாள். மாதேவி கணக்குப் பார்க்க, ஒரு மஞ்சாடிப் பொன் கோவலன் கொடுக்க வேண்டியிருந்தது. அதற்குத் தண்டனையாய்ச் செட்டியார் பலர் செல்லும் பாதையில், கொளுத்தும் வெயிலில் கோவலனை நிற்க வைத்தாள். கோவலன் செட்டியார்களிடம் கடன் கேட்டான்; ஒருவரும் கொடுக்கவில்லை. இந்நிலையில் பரமசிவனே ஆண்டி வேடத்தில் தோன்றி கர்ணகைக்கு ஓர் ஓலையெழுதித் தருமாறு கோவலனிடம் கூறினார். கோவலன் தந்த ஓலையை ஆண்டி, கர்ணகையிடம் சென்று கொடுத்தார். கணவன் நிலைகண்டு கர்ணகை புலம்பி அவன் தன்னோடிருந்தபோது, அணிந்திருந்த மணிகள் பதித்த மாலையை ஆண்டியிடம் கொடுத்தனுப்பினாள். கோவலன் அம்மாலையை விற்று ஒரு மஞ்சாடிப் பொன்னுக்கு இருமஞ்சாடியாய் மாதேவியிடம் கொடுத்துவிட்டுக் கர்ணகை யிடம் மீண்டான். கர்ணகையோ மாதேவியைப் பழித்ததோடு கோவலன் தன்னைத் தொடக்கூடாதென்றும் தடுத்தாள்; அவனுக்கு உணவுகூடப் போடாமல் அவனே சமைத்துண்ண வேண்டும் என்றும் கூறினாள்.

கோவலனைப் பிரிந்த மாதேவி பெரிதும் வருத்தமுற்றாள். கோவலனைக் காணாவிடில் மாதேவி இறந்துவிடுவாள் என வயந்தமாலை சோழமன்னனிடம் முறையிட்டாள். சோழ மன்னனும், 'நீ பன்னிரண்டாண்டுக் காலம் மாதேவியுடன் வாழ்ந்திருக்கிறாய்; நாள்தோறும் அவளிடம் செல்லவில்லை யென்றாலும் ஒருநாளாவது சென்றுவரவேண்டுமெனக் கோவல னுக்குச் சொல்லியனுப்பினான். கோவலனோ,

> தின்றிட்டதோர் தாம்ப லத்தை
> திரும்பக் கையால் தொடுவதில்லை

எனச் சொல்லி அரசன் ஆணையை மறுத்துவிட்டான். தன் ஆணையை மறுத்த கோவலனுக்கு மன்னன், 'செட்டி வரி, நகரி வரி' என இரண்டு வரிகளைப் போட்டுத் தண்டித்தான். வரிகட்டப் பணம் இல்லாத கோவலன் தான் 'பரதேசம்' போவதாய்க் கர்ணகையிடம் கூறினான்; கர்ணகையோ தன் ஒரு காலிலுள்ள சிலம்பை விற்றால் இரண்டு வரிகளையும் செலுத்திவிட்டு மீதியுள்ள பணத்தில் வாழ்நாள் எல்லாம் உண்டிருக்கலாம் என்றாள்.

கர்ணகையும் கோவலனும் மதுரை சென்றனர். சிலம்பை விற்கப் பரத்தையர் வீதிக்குச் சென்றான். பொற்கொல்லன் கோவலனைக் கள்வனெனப் பாண்டியன் முன் நிறுத்தினான். கோவலன் அரசனிடம், "உங்கள் மனைவியை அழைத்து இச்சிலம்பு அவருடையதா எனக் கேளுங்கள். அவர் நடுவுநிலைமையுடன் கூறினால் நீங்கள் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வேன்" என்கிறான். அரசன் தன் மனைவியை அழைத்துச் சிலம்பைக் காட்டினான். "இது என்னுடையதன்று; இச் சிலம்பைச் செய்யும் திறனுடைய தட்டார் இவ்வூரிலில்லை" என்றாள்; பொற்கொல்லனைக் கண்டித்ததோடு சிலம்பைக் கோவலனிடம் கொடுத்தனுப்புமாறும் கூறினாள். பொற்கொல்லன் அரசனிடம் "இவனை விட்டுவிட நினையாதேயும்; உந்தன் தேவியாரையே தொடுவான்" என்றான். ஆயினும், மன்னன் பல வகையிலும் சோதித்துக் கோவலன் கள்வனல்லன் என அறிந்தான். பொற்கொல்லன் விடுவதாயில்லை; பாண்டியனிடம் 'நீங்கள் இவனை விடுவித்தால் இவன் உங்கள் மனைவியையே கவர்ந்து விடுவான்' எனச் சொன்னதும் மன்னன் நிலைமாறிவிட்டான்; அதனால் கோவலனைக் கொல்லுமாறும் ஆணையிட்டான்.

கோவலனை வெட்ட அழைத்துச் சென்ற மழுவரசன் அவனை வெட்ட விரும்பாமல் அவனை மலைவழியிற் சென்று பிழைக்கும்படிக் கூறினான்; ஆனால், கோவலன் ஏற்கவில்லை. கள்வன் என்று பெயர் பெற்றதால் வாழ விரும்பவில்லை என்றான்; ஒரே வெட்டில் வெட்டும்படியாயும் வேண்டினான்.

வழக்குரைக்க வந்த கர்ணகையைக் கண்டு பாண்டிய மன்னன் மையல் கொள்கிறான். அதனைத் தெரிந்துகொண்ட கர்ணகை பெண்ணால் அழிந்துவிட்ட பலரின் வரலாறு கூறினாள்; ஆயினும் பாண்டியன் மனைவியாக ஒப்பினாள்; பொன் சமைக்கத் தட்டானை அழைக்கும்படியாயும் வேண்டினாள். தட்டான் வந்ததும் பரலைப் பார்க்கச் செய்து பாண்டியனை வெல்கிறாள். சிவனை வேண்டி வாள்பெற்ற கர்ணகை, "இதோ! நீ விரும்பிய மார்பு" எனத் தன் இடது மார்பினை அரிந்து பாண்டியனை நோக்கி எறிகிறாள். இதைக் கண்ட இடைச்சி மோரை ஊற்றியதால் முலை மீண்டும் வளர்ந்தது. கர்ணகையாள் சிரித்திடவே மதுரையெங்கும் தீப்பற்றியது. பாண்டியன் ஓடி ஒளிந்த இடமெல்லாம் தேடிச் சென்று தீ அவனை எரித்தது.

தான், பிறவியெடுத்ததன் பயன்முடிந்துவிட்டதால் கர்ணகை கைலாயம் சென்றடைந்தாள்.[1]

கோவலன் கதை

கோவலன் கதை என்ற பெயரில் கேரளச் சுவடிக் காப்பியத்தில் சுவடி ஒன்று காணப்படுகிறது. இச் சுவடியில் கி.பி. 1872இல் எழுதப்பட்டதாய்க் குறிப்புள்ளது.

பாண்டியன் மனைவி கொப்புலிங்கி பத்துமாதம் சுமந்து காளியைக் குழந்தையாய்ப் பெற்றெடுத்தாள். மற்ற கதைகளில் உள்ளது போலவே குழந்தை பிறந்த நேரம் சரியில்லையெனச் சொல்லப்பட்டதால் குழந்தை பேழையில் வைக்கப்பட்டு ஆற்றில் விடப்படுகிறது; பெட்டி திருச்சிரபுரத்திலிருக்கும் வண்ணமாலை செட்டியாரிடம் சேர்கிறது. பெட்டியிலிருந்த குழந்தையை எடுத்துக் கன்னத்தோடு வைத்து முத்தமிடும்போது குழந்தை சிரித்ததனால் அதற்குக் கன்னகை என்று பெயரிட்டு வளர்த்தனர்.

சிலப்பதிகாரத்தில் உள்ள மாதவியைப் போலவே இக்கதையில் வரும் மாதேவியும் கோவலனிடம் மிகவும் அன்புடனிருக்கிறாள். ஆனால் அவள் தாய்க்குக் கோவலன் அங்கிருப்பது பிடிக்கவில்லை. மாதேவிக்குத் தெரியாமல் வெற்றிலையில் மருந்தைக்கலந்து அவளுக்கு கொடுக்கிறாள். அதனால், கோவலனிடம் அன்பாயிருந்த மாதேவி மனம் வேறுபடுகிறாள்.

கோவலன் மதுரைக்கு வந்தவுடனேயே சொக்கர், மீனாட்சியிடம் கோவலன் கொலையுண்ணப் போவதையும் மதுரை எரியப்போவதையும் கூறினார்; "நாம் இனி இங்கு இருக்கக்கூடாது, புறப்படுவோம்" என இருவரும் நகரத்தைவிட்டு நீங்கினர்.

கன்னகையின் சிலம்பைப் பார்த்த பாண்டியனின் மனைவி கொப்புலிங்கி, சிலம்பைக் கொண்டுவந்த கோவலன் தன் மருமகன் என்பதறிந்து அவனுக்கு உணவுதந்து பணமும் கொடுக்கிறாள். இந் நிகழ்ச்சியைக் கொண்டே பொற்கொல்லன் வன்னித்தட்டான் கொப்புலிங்கியைக் கோவலன் மயக்கியதாய்த் திரித்துக் கூறுகிறான்.

வெட்டுண்ட கோவலனைக் கன்னகை உயிர்ப்பித்தபோது, 'வந்தது யார் மாதேவியோ கன்னகையோ' என்று கேட்கிறான். வேங்கை மரத்தின்பின் மறைந்து நின்ற கன்னகை வெளியேவந்து, 'மாதேவி ஆசையின்னும் மறக்கலையோ கோவலவா' எனச் சொல்லி அழுகிறாள்.

1. இந்நூல், கோவலன் கர்ணகை கதை (பக். 143-98)யின் சுருக்கம்

மாதேவியையும் கோவலனையும் விறகுகளின்மேல் அடுக்கி கன்னகையே கொள்ளி வைத்தாள். மற்றக் கதைகளில் சொல்லியிருப்பதுபோலவே கன்னகை பாண்டியன் மார்பைப் பிளந்து, குடலைப் பிடுங்கி மாலையிட்டாள். சொக்கர் வாசலில் வந்துநின்று 'நிற்க நிலைதருக' என வேண்டினாள். அப்போது சொக்கர், 'நீதான் நிற்க இடமில்லாமல் மதுரையை எரித்து விட்டாயே! அதனால் இனிமேல் நீ,

> மலையாள தேசமெல்லாம் பகவதியாய்ப் போயிரென்றார்;
> பாக்காடிச் சீமையெல்லாம் பாராண்டு நீயிரடி

என்று வரங்கொடுத்தார். சொக்கரின் ஆணையையேற்ற கன்னகை மதுரையினின்றும் நீங்கி, இடங்கள் பலவற்றைக் கடந்து ஆ[illegible]யங்கா என்றும் இடத்தை அடைந்தாள். அங்கிருந்த ஐயரைப் பார்த்து வணங்கினாள்; சொக்கர் அங்குத் தங்குமாறு சொன்னதையும் சொன்னாள். அவர் ஒப்புதல் தர அவளும் அங்கேயே தங்கினாள்.

கேரளத்தில் கண்ணகி இன்றும் பகவதியாய் வழிபடப் படுகிறாள்.

யாப்பு மாற்றம்

சிலப்பதிகாரத்தின் கருத்து மாறாது யாப்பை மட்டும் மாற்றி எழுந்துள்ள நூல்களும் உள்ளன.

ஸ்ரீநிவாசாச்சாரியார் எழுதியுள்ள *'கோவல வெண்பா'*வில் 290 வெண்பாக்கள் உள்ளன. இவர் சோழனைக் 'கரிகாலன்' என்று பெயர்சுட்டிச் சொல்கிறார். தன் கணவன் இறந்தது அறிந்து கண்ணகி அழுதல் 'விண்ணெங்கும் பஃறுளியாறு மேவியது போல்' இருந்தது என உவமை கூறியிருப்பது புதுமையாய் உள்ளது.[1]

'பூம்புகார்ப் பத்தினி' எனும் நூலை, க. சம்பந்தம் பிள்ளை எழுதியுள்ளார். இஃது 1558 அடிகளைக் கொண்டிருக்கிறது. கண்ணகியின் கற்பொழுக்க நெறியைப் பின்பற்றிப் பெண்டிர் வாழவேண்டும் என்பதற்காக இந்நூலை எழுதியிருப்பதாய்க் கூறியிருக்கிறார், ஆசிரியர். இவர் வஞ்சிக் காண்டத்தை எழுத வில்லை. மாதவியின் நடன அரங்கேற்றத்தை இந்நூல் கூற வில்லை. வாணிகத் தொடர்பாக வீதியில் நடந்து சென்ற கோவலன் கூனியின் கையிலிருந்த மாலையை வாங்கி மாதவியின் இல்லத்தை அடைகிறான்.[2]

1. இந்நூல், பக். 293
2. மேலது, பக். 297

எ.வெ. முனிசாமி என்பார் சிலப்பதிகாரத்தைச் *'சிலப்பதிகாரச் செம்பொருட் காவியம்'* என 1321 விருத்தப்பாக்களில் எழுதியுள்ளார். 'கண்கள் இரண்டானபோதும் காணும் திறம்மட்டும் ஒன்றாகுமா போல இருவரும் மனமொத்துப்போதல் வேண்டுமென்றும், ஊசிக்குப்பின் நூல் செல்லுதல்போல் கணவன்வழி மனைவி நிற்றல் வேண்டுமென்றும்' மணமக்களுக்கு வாழ்த்துக் கூறுவது சிறப்பாயுள்ளது.[1]

மு.ரா. கந்தசாமிக் கவிராயர் *'கண்ணகி வெண்பா'* நூல் எழுதியுள்ளார். இந்நூல் 30 காதைகளையுடையது. ஒவ்வொரு காதையிலும் 10 வெண்பாக்களாய் இந்நூலுள் 300 வெண்பாக்கள் உள்ளன. பா அமைப்பைத் தவிர வேறு எந்த மாற்றமும் இந்நூலில் இல்லை.

திண்மை கற்புடனே செய்யபொறை நல்வீரம்
கண்ணகியின் வாழ்க்கையுறக் கண்டமையால் எண்ணுமவை
பெண்ணுயர்வு பேசப் பெருந்துணையாம் என்றிசைத்தேன்
கண்ணகி வெண்பாவைக் கனிந்து

என்று நூல் இயற்றியதன் நோக்கத்தை ஆசிரியர் புலப்படுத்தி யுள்ளார்.[2]

ச.து. சுத்தானந்த யோகி *'கண்ணகி'* எனும் தலைப்பில் பன்னிரு விருத்தங்களால் கண்ணகியின் பெருமையைக் கூறியுள்ளார். கோவலன் இறந்தான் எனக்கேட்ட கண்ணகியின் உளநிலையையும் செயல்களையும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிடுகிறார்.

கேட்டனள் எழுந்தாள், துன்பக்
    கிளர்ச் சியின் பொருமலோடு,
வாள்தடம் கண்ணீர் சோர
    மார்பகம் புடைத்து விம்ம,
நாட்டுள வேந்தன் செய்கை
    'நன்றிது நன்றிது' என்னாக்
கோட்டிய புருவத் தோடு
    குதித்தனள் குமுறு கின்றாள்.[3]

பாண்டியன் அவைக்குச் செல்லும் கண்ணகியை அறுசீர் விருத்தம் அருமையாய்க் கூறுகிறது.

---

1. இந்நூல், பக். 298
2. மேலது, பக். 301
3. மேலது, பக். 291

கண்ணகி புரட்சிக் காப்பியம்

பாவேந்தர் பாரதிதாசன், 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' எழுதியுள்ளார்.

நெடுவேள் குன்றில் தேவர்கள் கோவலனுடன் வந்து கண்ணகியை வானுலகுக்கு அழைத்துச் சென்றனர் என எழுதுகிறார், இளங்கோ. பாவேந்தரோ, கண்ணகி தன் கண்ணீர்க் கதையை மலைக்குறவர்களிடம் கூறி உயிர்விட்டதாயும், அக்குறவர்கள் அவளுடலைப் புதைத்ததாயும் எழுதியுள்ளார்.

கோவலன் கண்ணகி திருமணம், சேந்தனார் என்னும் தமிழ்ச் சான்றோர் தலைமையில் நடைபெறுவதாய்ப் பாவேந்தர் எழுதுகிறார்.

> செந்தமிழால் அவையத்தார் வாழ்த்தல் அன்றி
> நாயைப்போல் குரைப்பதெல்லாம் நம்பால் வேண்டாம்
> நரியைப்போல் ஊளையிடல் நம்பால் வேண்டாம்

எனச் சேந்தனார், ஆரியச் சடங்குகளை வெறுத்துக் கூறுகிறார்.

சிலம்பு எப்படித் திருடுபோனது என இளங்கோ கூறவில்லை. பாவேந்தர், காரணம் ஒன்றை உருவாக்கிக் கொள்கிறார். பாண்டிமாதேவி, ஒருநாள் இரவு, புணர்ச்சிக் காலத்தில் சிலம்பு தன் கணவனின் உடலில்பட்டு உறுத்துமேயென, இரு சிலம்புகளையும் கழற்றி ஒரு பெட்டகத்தின்மேல் வைத்தாள். அரசியின் பணிப்பெண் வஞ்சியிடம் அவள் காதலன் பொற் கொல்லன் கருங்கை என்பான், 'திருமணம் செய்யப் பணம் வேண்டுமே' என்று கூறியிருந்தான். கருங்கை பணம் பண்ணுவதற்காய் வஞ்சி, அரசியின் சிலம்புகளுள் ஒன்றைத் திருடிப்போய் அவனிடம் கொடுத்தாள்.

பாண்டியனிடம் வழக்குரைக்கும் கண்ணகியை ஒரு சிறந்த வழக்கறிஞராயும், புரட்சிக்காரியாயும் பாவேந்தர் படைத்துக் காட்டுகிறார். "அரசனாகிய அவன், நாட்டின் பொதுச் சொத்தினை இழக்கவில்லை. தன் தனிச் சொத்தினை இழந்தவன். அந்நிலையில் அவன் அரசனல்லன்; ஒரு வழக்காளி; ஒரு முறையீட்டாளன். இவ்வாறாய் ஒரு தனி ஆள் தன் வழக்கைத் தானே தன்பால் கூறிக்கொள்வதும், தீர்ப்பையும் தானே வழங்கிக்கொள்வதும் முறையா?" எனக் கண்ணகி வழக்காடுகிறாள்.

மதுரைக்குக் கண்ணகி தீயிட்டாள் என்பதைப் பாவேந்தர் மாற்றியமைக்கிறார். பாண்டியன் இறந்ததும் அரண்மனையை விட்டு வெளியில் வந்த கண்ணகி, 'இன்னும் இவை எனக்கு ஏன்' எனத் தன் கூந்தலைப் பிய்த்தெறிகிறாள். இட முலையையும்

பியத்தெறிகிறாள். இதைக் கண்ட மக்கள் ஆத்திரமுற்று அரண்மனைக்குத் தீயிட்டனர். அஃது எங்கும் பரவி மதுரையை அழித்தது என்பது பாவேந்தர் படைப்பு.

தமிழின் பெருமையைத் தமிழனுக்குப் புரியவைக்கவும் ஆரியர்களின் புன்மையைத் தமிழர்கள் நெஞ்சில் உறைக்கும் படியாய்க் காட்டவும் கதைநிகழ்ச்சிகளில் புதுமைகளைப் புகுத்திக் கொள்கிறார், பாவேந்தர்; இயற்கை இறந்த நிகழ்ச்சிகள், பகுத்தறிவுக் கொவ்வாதிருப்பதாலும், அவை ஆரியத்தோடு தொடர்புடையவாதலாலும், அவற்றை அறவே நீக்கி எழுதியிருக் கிறார்; மாற்றங்களும் சேர்க்கைகளும் கதையின் கட்டுக்கோப்பில் எவ்விதச் சிதைவையும் ஏற்படுத்தவில்லை.

இளங்கோவின் சிலப்பதிகாரப் பாலில் கலந்துள்ள ஆரியக் கலப்பை அகற்றித் தூய தமிழ்ப்பாலைத் தருவதற்காய் இக் காப்பியத்தை எழுதியதாய்ப் பாவேந்தர் பகர்கிறார்.

நாடகங்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'சிலப்பதிகாரம்', கதை வடிவு மாறி, நாடக வடிவில் எழுதப்பெறலாயிற்று. இந் நாடகங்கள் புகழேந்திப்புலவரின் 'கோவிலன் கதை'யை ஒட்டியே அமைந்தன. முதன்முதலில் நாடகத்தைப் படைத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் ஆவர். இவர் எழுதிய 'கோவலன் சரித்திரம்' நாடகத்தை ஆலந்தூர் ஒரிஜினல் நாடகக் கம்பெனியார் மேடையேற்றி நடித்தனர். நடிகர்களின் உரையாடல் பெருமளவில் பாடல் வடிவிலேயே இருந்தது. இந்நாடகத்தில் கோவலன், கண்ணகி, மாசாத்துவான், மாநாய்கன் எனும் பெயர்கள் முறையே கோவலன் செட்டியார், கண்ணகை, மாச்சோட்டான் செட்டியார், மாணாக்கன் செட்டியார் என மாற்றம் பெற்றுள்ளன.

மாதவியிடமிருந்து திரும்பிவந்த கோவலனைப் பார்த்த வுடன் கண்ணகை,

> வேசியாசை நீங்கியென் வீடுதேடி வரவும்
> விருப்ப மின்றுதான் வந்ததோ?

என்று கேட்கிறாள். 'கப்பல் கப்பலாய்ச் செல்வம் கணக்கில்லாமல் கொடுத்தீர்' என்று பழிக்கிறாள்.

மதுரையில் பால் விற்றுச் செல்லும் பெண், தான் விற்கும் பாலின் பெருமையைக் கூறுகிறாள் :

> பாலிலே தண்ணீரைக் கலப்பார்கள் சிலபேர்;
> பச்சை நீரில் பாலைக் கலப்பார்கள் சிலபேர்;

ஆதலால் பாலைப் பார்த்து வாங்குங்கள் என்கிறாள். பாலில் கலப்படம் செய்வதை நாடக ஆசிரியர் நயமாய்க் கூறிவிடுகிறார்.

தம் காலத்திய சமுதாயக் கேடுகளை நாடகமாந்தர்களின் வாயிலாய் சுவாமிகள் அங்கங்கே சுட்டிக்காட்டித் திருந்திய சமுதாயம் அமையவேண்டுமெனும் தம் ஆசையை வெளிப் படுத்தியுள்ளார்.[1]

'வட்டப்பாறையில் வதைப்பட்ட கோவலன் கண்ணகி நாடகம்' என்றதொரு நாடகத்தை வீரபத்திரன் என்பவர் எழுதியுள்ளார். 'கோவிலன் கதை'யையே சிற்சில மாற்றங்களுடன் இவர் நாடகமாக்கியுள்ளார். பாடலும் உரைநடையும் கலந்ததாய் நாடகம் அமைந்திருக்கிறது.

மணப்பந்தரில் மாதவி நாட்டியமாடிக் கொண்டிருக்கும் போதே கோவலன்,

> தாசியரே கிட்டவாரும் என்னுடன் பேசி
> சந்தோஷமா நீயொரு முத்தம் தாரும்

என அழைக்கிறான்; ஊர் உலகம் ஏசுமே என்கிறாள், மாதவி. பெரும்பணம் தருவதாய் ஆசைகாட்டினான், கோவலன்; நாட்டிய நிகழ்ச்சி முடியுமுன்னரே இருவரும் திருக்கடையூர் சென்று விடுகின்றனர்.

மதுரையில் பாண்டியனிடம் கோவலன் தான் திருடவில்லை என்பதைத் தக்கவாறு விளக்குகிறான். அரசனோ அதைக் கேட்காமல், தாசிக்குப் பணம் கொடுக்க நீதான் இதைத் திருடியிருக்கிறாய்' என்கிறான்.

> உள்ளபடி கூத்தியாருக்(கு) அளிக்கவென்று
> உலகினிலே திருடி

இக்குற்றத்தைச் செய்திருக்கிறாய் என்கிறான் மன்னன்.

இந்நூல் கூத்தாய் நடிக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. கதை நிகழ்ச்சிகளில் தன் விருப்பத்திற்கேற்ப வீரபத்திரன் பல புதிய நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளார்.[2]

சிலப்பதிகாரம் – நாடகம்

கலைஞர் கருணாநிதி, 'சிலப்பதிகாரம்' நாடகத்தை 38 காட்சிகளில் அமைத்துள்ளார். சிலப்பதிகாரம் முழுவதும் கொண்ட

1. டி.டி. சங்கரதாஸ் சுவாமிகள், கோவலன் சரித்திரம், பக். 328-355

2. வீரபத்திரன், வட்டப்பாறையில் வதைப்பட்ட கோவலன் கண்ணகி நாடகம், பக். 355-91

நாடகம் இது. கலைஞர் பகுத்தறிவு இயக்கத்தினராதலால் பகுத்தறிவுக்கொவ்வாத இளங்கோவின் சிலப்பதிகாரக் காட்சிகளை இந்நாடகத்தில் அகற்றிவிட்டார். 'காவியத்தின் உயர்தரத்தை அப்படியே வைத்துக் கொண்டு சில நிகழ்ச்சிகளை மாற்றி யிருக்கிறார். நம்மால் விளக்க முடியாததும், நமக்குத் தேவை யில்லாததுபோலவும் தோன்றுகின்ற நிகழ்ச்சிகள் சிலவற்றிற்குக் காரணகாரியத் தொடர்புடையதும் நம்பத் தக்கதுமான மாற்றங்களைச் செய்திருக்கிறார்' என இந்நாடகம் பற்றிக் கூறியுள்ளார், அறிஞர் அண்ணா.

வஞ்சி மூதூரில் சேரன் செங்குட்டுவனின் பிறந்தநாள் விழாக்கொண்டாட்டத்துடன் நாடகம் தொடங்குகிறது. அவ்விழாவில், நிமித்திகன் சொன்ன வாக்கினை இளங்கோ பொய்ப்பித்துத் துறவியாகிறார்.

பேரியாற்றங்கரையில் தங்கியிருந்த சேரன் செங்குட்டுவ னிடம், குன்றக் குறவர்கள் கண்ணகி பற்றிக் கூறினர்; உடனிருந்த சாத்தனார் கண்ணகி கதையைக் கூறினார்; இளங்கோவடிகள் காப்பியத்தை எழுதினார்; ஆதலின் இக்காட்சிகளைத் தொடக்கக் காட்சிகளாக்கிக் கதையைத் தொடங்குகிறார், கலைஞர்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் முதற்காட்சியாய் அமைந் துள்ள கோவலன் கண்ணகி திருமணம் பார்ப்பனர்களைக் கொண்டு நடத்தப்படுவதாதலின் அக்காட்சியை கலைஞர் எழுதாது விடுத்தார். வாணிபத்திற்காய்க் கிரேக்க நாடு சென்று திரும்பிய தன் கணவன் கோவலனை வரவேற்கக் கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் காத்திருக்கிறாள். கோவலனுடன் கிரேக்கக் கிழவன் ஒருவனும் வருகின்றான். சோழன் அவையில் மாதவியின் நாட்டியம் நடைபெறுவதறிந்து அதனைக் காண மூவரும் செல்லுகின்றனர்.

ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்கொடுத்து மாதவியின் மாலையை வாங்கி அவளை அடையக் கிரேக்கக் கிழவன் முற்படுகிறான். 'கிழவனையா நானடைவது' என மாதவி பதறுகிறாள். 'ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் தரக்கூடிய தகுதி தமிழகத்தில் ஒருவருக்குமில்லை' எனக் கிழவன் கூறியதும், கோவலன் விலைமதிப்புடைய தன் முத்தாரத்தைக் கழற்றித் தந்து, மாதவி கிழவனுக்கு மனைவியாவதைத் தடுத்தான்; பின்னர்க் கண்ணகியுடன் தன் இல்லம் சென்றான். மாலைக்குக் கோவலன் பணம் கொடுத்தது மாதவியை அடைய அன்று; தமிழரின்

கன்மானத்தைக் காக்கவும், இளம் மாதவி ஒரு கிழவனுக்குப் பெண்டாவதைத் தடுப்பதற்குமேயாம்.[1]

மாலையை வாங்கிய கோவலனை அழைத்து வருமாறு மாதவி தன் தோழி வயந்தமாலையை பன்முறையும் கோவலன் வீட்டிற்கு அனுப்பினாள்; கோவலன் மறுத்தான்; வயந்தமாலை அடுத்தமுறை வந்தபோது, "தாங்கள் ஏன் ஒருமுறை மாதவியைச் சந்தித்து, அடையமுடியாத பொருளைப்பற்றி ஏங்காதே என அறிவுரை கூறி அவள் மனத்தை மாற்றக்கூடாது" எனச் சொல்லி கோவலனை மாதவி வீட்டுக்கு அனுப்புகிறாள், கண்ணகி. சென்றவன், மாதவியின் கலையால் கவரப்பட்டு அங்கேயே தங்கிவிட்டான்.

மாதவி வீடு சென்றவன் திரும்பக் கண்ணகியிடம் வந்திருக்கலாமே என்றொரு வினா எழும்பலாம். அதற்கு விளக்கம் தரக் கலைஞர் ஒரு காட்சியைப் படைத்துக் கொள்கிறார். மாதவி, கோவலனிடம், 'நீங்கள் கண்ணகியக்காளைப் போய்ப் பார்த்து வரவேண்டும்' என்கிறாள். கண்ணகி முகத்தில் விழிக்க வெட்கமா யிருக்கிறது என்கிறான், கோவலன். மாதவி மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே கோவலன் கண்ணகியைக் காணத் தன்வீடு செல்கிறான். அவ்வேளை, ஒரு சேவல் அவன் வீட்டுக் கதவருகில் வந்து உள்ளே நுழையப் பார்க்கிறது. கண்ணகி அதை விரட்டி விட்டுத் 'தடால்' எனக் கதவை மூடுகிறாள். அப்போதுதான் வாயிற்படியை மிதித்த கோவலன் அதிர்ச்சியடைந்து, தன் வரவை வெறுத்தே கண்ணகி கதவை மூடினாள் என வருந்தித் திரும்பி விடுகிறான்.

"கோவலனைக் கண்ணகியிடம் சென்று வருமாறு மாதவியே வலியுறுத்தி அனுப்புவதும், அதற்கிணங்கக் கோவலன் செல்வதும் மாதவியின் நல்லுள்ளத்தை விளக்குவதற்கு இளங்கோவடி களுக்குத் துணைபுரியும் மாற்றமேயாகும்" என்கிறார், நாடகாசிரியர்.[2]

சிலம்பை விற்கச் சென்றவன் இரண்டு சிலம்புகளையும் அல்லவா எடுத்துச் சென்றிருக்க வேண்டும் எனும் எண்ணம் எழுவது எவர்க்கும் இயல்பே! அதற்கொரு விளக்கம் கண்ணகி

1. கலைஞர் மு. கருணாநிதி, சிலப்பதிகாரம் (நாடகக் காப்பியம்), பக். 28-32

2. கலைஞர் மு. கருணாநிதி, சிலப்பதிகாரம் (நாடகம்), முன்னுரை பக். 15

தன் காலிலிருந்து ஒரு சிலம்பைக் கழற்றித் தந்ததும் இன்னொன்றையும் கழற்ற முற்பட்டபோது, கோவலன், "கண்ணகி அது காலிலேயே இருக்கட்டும்! அது ஒலிக்கும்போதெல்லாம், அந்த ஒலி உனக்கு நான் கேடுவிளைத்ததைச் சுட்டிக்காட்டிக் கொண்டேயிருக்கட்டும். இந்தப் புன்மதியாளனுக்கு அப்போதாவது புத்தி வரட்டும்"[1] என அடுத்த சிலம்பைக் கழற்றவிடாது ஒற்றைச் சிலம்புடனேயே சென்றுவிடுகிறாள்.

"பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடியது பொற்கொல்லன் அல்லன்; அரண்மனைக் காவலன் ஒருவன் என்றதொரு மாற்றத்தையும் நாடகாசிரியர் செய்துள்ளார். சமூக நீதிக்காக இம்மாற்றம் செய்யப்பட்டது. இத்தகைய மாற்றங்களைப் பழம்பெரும் இலக்கியங்களில் செய்வது மிகமிக நியாயமானது; தேவையானது; இந்த மாற்றம் சிறந்த நோக்கத்தோடு செய்யப் பட்டுள்ளது."[2]

பாண்டியனும் அவன் தேவியும் இறந்து வீழ்ந்ததும் கண்ணகி 'பூமி பிளக்கட்டும்! புழுதி பறக்கட்டும்! நெருப்பு பரவட்டும்!' என ஆத்திரத்துடன் பயங்கரமாய்ச் சிரித்து வெளியேறுகின்றாள்.

சேரன், கனக விசயர்களை வென்று கைது செய்கிறான். கனகன், 'மன்னவா! மண்டியிடுகிறோம். மன்னித்து விடுங்கள்!' என்கிறான். சேரனோ! 'மன்னிப்பதா. நான் மன்னிப்பதா. தமிழ்நாட்டு மண்ணில் வந்து மண்டியிடுங்கள். அஃது உங்களை மன்னிக்கட்டும்' என்கிறான்.

கண்ணகி சிலைக்கான கல்லெடுக்கப்பட்டதும், சேரன், "அந்தக் கல்லைச் சுமப்பதற்குச் சரியான எருதுகள் கிடைத்து விட்டன. கனகா - விஜயா, தமிழரின் வீரத்தின்மீது வீசினாய் ஒரு கல்; இப்போது தூக்கு கல்" என்றதும் மக்கள் 'சேரன் செங்குட்டுவன் வாழ்க' என வாழ்த்துவதோடு நாடகம் முடிவடைகிறது. தமிழரின் தன்மான எழுச்சி பொங்கி வழிய நாடகம் நிறைவு தருகிறது.[3]

கண்ணகி சிலை நாட்டு விழா, செய்தியாய் மட்டும் நாடக முடிவில் கூறப்பட்டுள்ளது. காட்சி அமைப்பு இல்லை.

---

1. கலைஞர் மு. கருணாநிதி, சிலப்பதிகாரம் (நாடகக் காப்பியம்), பக். 49

2. மேலது, அறிஞர் அண்ணா, அணிந்துரை, பக். 7

3. மேலது, சிலப். நாடகம், பக். 90

'சிலப்பதிகாரத்தின் இனிய எழிலோ உருவோ சிதையா வண்ணம் - சிலம்பில் காணும் செந்தமிழினிமை - இளங்கோ தந்த இன்றமிழ் மாற்றுக்குறையாது இந்நாடக நூலில் இருப்பது மெச்சத்தகுந்தது' எனப் பேரறிஞர் அண்ணா இந்நாடகத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.'[1]

கரந்தைக் கவியரசு அரங்க. வெங்கடாசலம் பிள்ளை *'சிலப்பதிகாரம் ஒரு நாடகம்'* என ஒரு நாடக நூலை உருவாக்கி யுள்ளார். இலக்கியப் பயிற்சியின்மை காரணமாய்ப் பலரால் சிலப்பதிகாரத்தை முழுமையாய் அறிய இயலவில்லை. அனைவரும் அந்நூலைப் பயிலவும், வரலாற்றுணர்ச்சி பெறவும், சிறப்புக் கூறுகளை அறியவும் சிலப்பதிகாரத்தை நாடகமாக்கியதாய்க் கரந்தைக் கவியரசு நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். சிலப்பதிகாரக் கதையில் மாற்றமில்லாமல் நாடகச் சுவைக்கெனச் சிற்சில காட்சிகளை ஆசிரியர் படைத்துக் கொண்டுள்ளார். கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டியபோது கண்ணகி மறுமொழி பேசியதாய்ச் சிலப்பதிகாரத்தில் இல்லை. இந் நாடகத்தில் கோவலனும் கண்ணகியும் நிலாமுற்றத்தில் அமர்ந்து பேசுவதாய் ஆசிரியர் படைத்துக் கொண்டுள்ளார். மக்கள் அறிய வேண்டிய சிலப்பதிகாரப் பாடல்கள் ஆங்காங்கே நாடகத்தில் புகுத்தப் பட்டுள்ளன. நாடக உரையாடல் சுவைக்காய்த் தோழியர் முதலாய புதிய கதைமாந்தர்கள் சிலரைப் படைத்துக் கொண்டுள்ளார்.[2]

'நாடகச் சிலம்பு' எனும் நூலை புலவர் கு. திருமேனி, சிலப்பதிகாரக் காப்பியத்தை நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற முறையில் எழுதியுள்ளார். சிலப்பதிகாரக் கதைப்போக்கில் ஆசிரியர் மாற்றம் செய்யவில்லை. "காப்பியத்தில் சிக்கல் இருப்பது போல் தோன்றும் இடங்களில் சிக்கலை அவிழ்க்கும் முயற்சியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன; நாடகத்துக்கு ஏற்றமுறையில் கதைக்கு மேலும் அழகு சேர்க்கும் முறையில் சில கற்பனைக் காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. காவியத்தில் சுருக்கமாய்க் கூறுப்பட்டுள்ள சில பகுதிகளுக்குத் தெளிவுதரும் முயற்சியில் விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன."[3]

சிலப்பதிகாரக் காவியத்தின் சொற்களை மாற்றாமல், கருத்தை மாற்றாமல் 'சிலம்புச் செல்வி' எனும் பெயரில் மு.வை.

1. கலைஞர் மு. கருணாநிதி, சிலப். நாடகம், அணிந்துரை, பக். 7
2. இந்நூல், பக். 422
3. மேலது, பக். 426

அரவிந்தன் நாடகம் ஒன்றனை ஆக்கியுள்ளார். கண்ணகி விண்ணுலகு செல்லுதல்வரை கதை கூறப்பட்டுள்ளது.

நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகம்நீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறுஆண்டு அகவையாள்
அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ!

என்பது சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் உள்ள அடிகள் (21-29). இவ்வடிகளை அரவிந்தன் அப்படியே பின்வருமாறு நாடகமாக்குகிறார்:[1]

இடம் : மணப்பந்தர். காலம் : காலை

கதைமாந்தர் கண்ணகி, கோவலன்.......

(மணப்பந்தரில் கோவலனும் கண்ணகியும் வீற்றிருக்கின்றனர்; கண்ணகியைத் தோழியர் தமக்குள் பாராட்டிப் பேசுதல்.)

தோழியரில் ஒருத்தி

(கண்ணகியின் அழகை வியந்து மற்றொருத்தியிடம்)

போகம்நீள் புகழ் மன்னும்
புகார் நகரது தன்னில்
மாகவான் நிகர் வண்கை
மாநாய்கன் குலக்கொம்பர்

மற்றொருத்தி

ஈகைவான் கொடி யன்னாள்

வேறொருத்தி

ஈராறாண்டு அகவையாள்

மற்றொரு பக்கத்தில் நிற்கும் மகளிரில் ஒருத்தி

போதிலார் திருவினாள்
புகழுடை வடிவு!

இன்னொருத்தி

தீதிலா வட மீனின்
திறமிவள் திறம்!

1. மு.வை. அரவிந்தன், சிலம்புச் செல்வி, பக். 17-18

மற்றொருத்தி

மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்!

இவ்வாறாய்ச் சிலப்பதிகாப் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம் இரண்டனையும் சிலப்பதிகார அடிகளைக் கொண்டே நாடகமாக்கிச் சென்றிருக்கிறார், அரவிந்தன்.

ஒரு மாந்தர் பற்றியவை

மாதவி பாத்திரத்தை மட்டும் விரிவாய்ப் பேசும் வகையில் *'விதியோ வீணையோ'*, *'மாதவி காப்பியம்'* என்னும் நூல்கள் எழுந்துள்ளன.

கவிஞர் தமிழொளி, *'விதியோ வீணையோ'* என்னும் சிறு காப்பியத்தில்,கோவலன் பிரிவுக்குக் காரணமாய் அமைந்த யாழை உடைத்தெறிவதாய்ப் பாடியுள்ளார். "சிலப்பதிகாரக் கதையில் விதித் தத்துவம் இளங்கோவடிகளுடையது. யாழ் உடைபடும் நிகழ்ச்சி என் சொந்தக் கற்பனை. கண்ணகி சிலம்பை உடைத்தாள் என்றால் மாதவி தன் யாழை உடைக்கட்டுமே என்று என் மனம் எதிரொலித்ததே இதற்குக் காரணம்" என்று நூற்படைப்புக்கான காரணத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.[1]

விதியை உடைத்திட ஓடி
  வீணை உடைத்திடு கின்றாள்;
சதியை உடைத்திட எண்ணித்
  தலையை உடைத்திடு கின்றாள்.[2]

சிலப்பதிகாரக் கதையிலுள்ள கானல் வரி, வேனிற் காதை ஆகிய காதைகளில் நிகழ்ந்த கதை நிகழ்ச்சியை அடிப்படையாய்க் கொண்டு இனிய பாக்களில் இந்நூலை இயற்றித் தந்துள்ளார், தமிழ்ஒளி.

மாதவியின் பெருமையைக் கூறும் முறையில் புலவர் பொன்னிவளவன் *'மாதவி காப்பிய'*த்தைப் படைத்துள்ளார். பரத்தையர் சமுதாயத்தின் புன்மையை மாதவியின் தாய் சித்திராபதி வாயிலாய் விளக்கி, அந்தச் சூழலிலே தோன்றியும் மாசற்ற பொன்னாய் மாதவி விளங்கினாள் என்பதை இக் காப்பியம் தெளிவுறுத்துகிறது.

---

1. சு. செல்லப்பன், இக்காலத் தமிழ்க்காப்பியங்கள், பக். 89
2. தமிழ்ஒளி, விதியோ வீணையோ, பக். 85

'வந்தனம்! ஆடிட வந்தனம்' என்று
வாள்விழி மொழிகூற – தாம்
'தந்தனம் தோம்தன தந்தன தாம்'எனத்
தாளமும் உடன்சேர – யாம்
'தந்தனம் என்மனம் தந்தனம்' என்றே
தக்கவர் தடுமாற – அந்தச்
சந்தன மேனிச் சுந்தரி ஆடிச்
சிந்தை கவர்ந் தாளே!'

-மாதவி அரசவையில் நாட்டியமாடியதைப் பொன்னிவளவன் இவ்வாறு இனிய சந்தத்தில் பாடியுள்ளார்.

கோவலன் இறந்தான் என்று கேட்டதும் மாதவி துறவியானாள் என்பதோடு காப்பியம் நிறைவு பெறுகிறது.

பொட்டழித்தாள்! பூவெடுத்துப் போட்டாள்!தன் கூந்தலினை
விட்டழித்து மொட்டையென வீடுவிட்டுப் புறப்பட்டாள்;
இப்போது துறவி!அவள் எப்போதும் துறவி!இனி
ஒப்பேது அவளுக்கு உலகத்துப் பெண்களிலே.[2]

மாதவியின் வரலாறு சிலப்பதிகாரத்தில் உள்ளபடியே கூறப்பட்டுள்ளது.

காப்பியத்தின் ஒரு பாத்திரத்திற்கு முதன்மை கொடுத்து, அப்பாத்திரத்தின் வாயிலாகவே காவியக் கருத்தைச் சுருக்கிச் சொல்வது இந்தி மொழியில் கண்ட காவியம் எனப்படும். மதுரை தீப்பற்றி எரிகிறது; எரியும் நெருப்பிடையே நடந்து செல்லும் கொல்லன், 'இந்த அழிவுக்கெல்லாம் நான்தானே காரணம். இஃது எப்படி நிகழ்ந்தது, என எண்ணுகையில், அவன் மனத்திரையில் ஓடுவதாய் முந்தைய கதையைச் சொல்லும் முறையில், *'சிலம்பின் சிறுநகை'* என்னும் சிறுகாப்பியம் ஒன்றைச் சாலை இளந்திரையன் படைத்துள்ளார். கொல்லன் சிலம்பைத் திருடியதிலிருந்து மதுரை தீப்பற்றி எரிவது வரையிலான கதை அவன் மனத்திரையில் ஓடுகிறது.

மதுரைமாநகரின் அழிவிலிருந்து ஆசிரியர் கதையைத் தொடங்குகிறார். தீயினுக்கு அஞ்சிப் பொற்கொல்லன் வீதிவழியே ஓடுகின்றான்; வழியில் கண்ணகி சோகமே உருவாய் வருவதைக் காண்கிறான். 'இதற்குக் காரணம் யார்? நான்தானே' என்று புலம்புகின்றான். பொற்கொல்லன் மனைவி மக்கள் தம் நிலைக்குமேல் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். அதற்குச் செல்வம் பெரிதும் தேவைப்பட்டது; அவ்வளவு செல்வம் அவனிடமில்லை;

1. சு. செல்லப்பன், இக்காலக் காப்பியங்கள், பக். 105
2. பொன்னிவளவன், மாதவி காப்பியம், பக். 58

மனைவி மக்கள் மகிழ்வுடனிருப்பதற்காய்ச் சிலம்பைத் திருட நேரிட்டது. "குடும்பத்தினரை வகையோடு வாழவைத்திருந்தால் திருட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதே! அவர்களை அளவறிந்து வாழுமாறு செய்யாத குற்றம் என்னுடையதுதானே" என நினைந்து வருந்துகிறான்.

என்மனைவி மக்கள்
எடுப்பாக வாழ்ந்ததனால்
என்நிலைமை மீறி
இறுக்கியது என்வறுமை

என்றும்,

நின்று வறுமை
நெருக்க உயரறத்தைக்
கொன்(று)அதற்குக் காவு
கொடுக்கத் துணிந்துவிட்டேன்[1]

என்றும் பொற்கொல்லன் சிலம்பைத் திருடியதற்கான காரணத்தைக் கூறுகிறான்.

"சிலப்பதிகாரத்தில் காணாத ஒரு பொற்கொல்லனை இங்கே காண்பீர்கள். அவன் காலத்தால் செத்துப்போகும் ஒரு வில்லன் அல்லன்; சூழ்நிலைக்கு அடிமைப்பட்டு, பிறகு அல்லல்படும் எதார்த்த மனிதன் அவன்" என நூலின் முன்னுரையில் எழுதியுள்ளார், நூலாசிரியர்.

குற்றம் செய்தவர்கள் தண்டனை பெற்றேயாக வேண்டும்; ஒருநாள் இல்லாவிட்டாலும் ஒருநாள் அறம் அவர்களை ஒறுத்தே தீரும்; சமுதாயத்தின் பார்வையிலிருந்து ஒருவேளை தப்பித்தாலும், தம் மனச்சாட்சிக்கு அவர்கள் அஞ்சியே தீரவேண்டும். பொற்கொல்லன் மனமே அவனைக் கொல்லுகிறது. தன் குற்றத்திற்குத் தண்டனையைத் தானே அனுபவிக்கிறான்.

சில்லென்று பூத்த
செழுந்தீச் சுடர்க்குள்ளே...
அவ்வனலின் நேரே
அடிபெயர்த்துச் செல்லுகின்றான்.[2]

பொற்கொல்லனின் முடிவு என்ன என்பதை இப்பாடலடிகள் உணர்த்திவிடுகின்றன.

1. சாலை இளந்திரையன், சிலம்பின் சிறுநகை, பக். 46-47
2. இந்நூல், பக். 327

பல்வகை

சிலம்பு சிறுவர் இலக்கியமாயும் மலர்ந்துள்ளது. 'அய்யாசாமி', சிலப்பதிகாரக் கதைப்போக்கில் எவ்வித மாற்றமுமின்றி, சிறுவர்க்கேற்ற நடையில் *'சிறுவர் சிலம்பு'* எனும் பாடல் நூலைக் கண்ணகி திருமணம் முதல் அவள் தன் கணவனோடு விண்ணுலகு எய்தியதுவரை எழுதியுள்ளார். வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகளை ஆசிரியர் விடுத்துள்ளார்.[1]

சிலப்பதிகாரத்தின் ஒரு காதைக்கு ஒரு பாடலாய் 30 அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் 30 பாடல்களில், *'சிலப்பதிகாரம்'* எனும் பெயரில் ஒரு நூலைக் குழந்தைகளுக்குப் புரியக்கூடிய இனிய எளிய நடையில் ஞானமணி எழுதியுள்ளார். "எதிர்காலத்தில் இத்தகு சிறப்புடைய காப்பியம் முழுவதையும் படித்துப் பார்க்கவேண்டும் என்னும் ஆர்வத்தை, இளமையிலேயே சிறுவர் நெஞ்சத்தில் விதைக்கவேண்டும் என்னும் ஆசையில் படைக்கப் பட்டிருக்கிறது இச்சிறு கவிதைநூல்" என்று ஆசிரியர் முன்னுரையில் கூறுவதன்வழி இந்நூலை எழுதியதன் நோக்கத்தைப் புலப்படுத்துகிறார்.[2]

அ.க. நவநீத கிருஷ்ணனால் இயற்றப்பெற்ற, *'கண்ணகி கதை' வில்லுப்பாட்டு* உருவில் அமைந்துள்ளது. பாடலும் உரையுமாய் இந்நூல் விரவிச் செல்கிறது. சந்தப்பாடல்களால் கண்ணகி கதை கூறப்பட்டுள்ளது. கண்ணகி விண்ணுலகு சென்றதோடு கதை முடிவடைகிறது.

வில்லுப்பாட்டின் முறைமைக்கேற்ப, 'வாழ்த்துடன்' கதை முடிவுபெறுகிறது.

> வாழியவே! இக்கதையைக் கேட்டவர்கள் வாழியவே!
> கற்பரசி நற்கதையைக் கற்றவர்கள் வாழியவே!
> பொற்புடைய கண்ணகியைப் போற்றியவர் வாழியவே!
> அற்புதச் சரிதமிதை ஆய்ந்தவர்கள் வாழியவே![3]

கரூர் மாவட்டத்தில் கண்ணகியின் வரலாறு *கும்மி*ப்பாடலில் பாடப்படுகிறது. இப்பாடலின் கதை புகழேந்திப் புலவரின், 'கோவிலன் கதை'யோடு ஒத்துச் செல்கிறது. இப்பாடல் முற்றுப்பெறா நிலையில் கிடைத்துள்ளது. கண்ணகி திருமணம், மாதவி கோவலனோடு வாழ்தல், மாதவியிடமிருந்து கோவலன் பிரிதல் ஆகிய செய்திகள் மட்டுமே காணப்படுகின்றன.[4]

1. இந்நூல், பக். 307-08
2. மேலது, பக். 308
3. மேலது, பக். 305
4. மேலது, பக். 305

'சித்திரப்பாவை' என்னும் நாட்டிய நாடகம், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பெற்றுள்ளது. நாட்டிய நாடகத்திற்கேற்ற வகையில் சில புதுமைகளை இவர் படைத்துக் கொண்டுள்ளார். இந்நாடகம் நடிக்கப்பெற்றதேயன்றி நூலாய் அச்சுருப் பெறவில்லை.

இந்நாடகத்தில் கோவலன் மாதவியின் நாட்டியம் காண அரசவை செல்கிறான். நாட்டிய முடிவில் மன்னர் மாதவிக்குப் பச்சைமாலை பரிசளிக்கிறார். மாலையுடன் மாதவி திரும்பிய போது கோவலனின் பார்வையில் மயங்கி நிற்க, மாலை நழுவி விழுகிறது. உடனே கோவலன் அதனை எடுத்து மலருடன் சேர்த்துத் தருகிறான். இவ்வாறு இருவரின் உள்ளமும் ஒன்றுபடுகிறது. கண்ணகியின் பணிவிடையும் மாதவியின் வனப்பும் மாறிமாறிக் கோவலனின் மனத்தில் ஊசலாடுகிறது.

ஒருகண் கண்ணகி மறுகண் மாதவி
இருபெண் களினால் இலங்கும்உன் இல்லறம்

எனக் கோவலனின் மனச்சான்று பேசுகிறது; மாதவியையும் ஏற்கலாம் என்ற முடிவுக்கு வருகிறான்.

மாதவி வீட்டில் கோவலனிருக்கும்போது, மாடலன் எனும் அவன் நண்பன் வந்து, அவனிடம்,

கடல்மீது புயல்மோதிக்
கப்பல் கவிழ்ந்ததே
கடன்பட்டார் உனதுதந்தை;
கடமையினை உணர்ந்துவா
காதலினைத் துறந்துவா
கண்ணகியைக் காக்க வாவா!

என்கிறான். மாதவி, கோவலனிடம், 'இச்செய்தி தெரிந்த பின்னரும் வாளாவிருப்பது மாபெரும் குற்றமன்றோ? தடையின்றிச் செல்லுவீர்; தாய் தந்தை மனைவியின் சங்கடம் தீர்த்து வாரீர்" எனக் கூறி அனுப்புகிறாள். கணவனின் கடமையை நினைவுறுத்தும் சிறந்த குலமகளாய் மாதவியைப் புத்தனேரியார் காட்டியுள்ளார்.[1]

ஒரு காண்டம் பற்றியவை

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆரிய திராவிட உணர்வுகளை வலியுறுத்தி, ஆரிய மாயையிலிருந்து மக்கள் விடுபடவேண்டுமெனும் கொள்கை பெரிதும் பேசப்பட்டது; தமிழ்த் தேசிய உணர்வும் தோன்றி வளர்ந்தது. இக்கருத்துகளைச்

1. புத்தனேரி ரா.சுப்பிரமணியம், சித்திரப்பாவை, காட்சி 3, 4, 6

சொல்லச் சிலப்பதிகார வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள் இடமளிக்கின்றன. ஆதலின் இக்காலம் தொடங்கி வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகளை மட்டுமே கொண்ட நாடகங்கள் சில எழலாயின.

கல்சுமந்த கசடர்

சேரன் செங்குட்டுவன் படையுடன் சென்று வடநாட்டு ஆரிய மன்னர்கள் கனக விசயரை வென்றான் எனும் ஒரு செய்தியை மட்டுமே கொண்டுள்ள, *'கல் சுமந்த கசடர்'* எனும் சிறுநாடகம் ஒன்றனைப் பேரறிஞர் அண்ணா எழுதியுள்ளார். இந்நாடகத்தில் சிலப்பதிகாரச் செய்தியைத் தன் கொள்கைப் பரப்புரையாய் பயன்படுத்தியுள்ளார். கதை நிகழ்ச்சியைவிடக் கொள்கை முழக்கமே நாடகத்தில் பேரிடம் பெற்றுள்ளது. சேரன் சென்றான்; வென்றான் என்பது மட்டுமே கதை.

சேரன் செங்குட்டுவன் தன் படைத்தலைவன் வில்லவன் கோதையிடம் பேசுவதாய் அண்ணா எழுதும் உரையாடல் :

சேரன் (வாழ) இடங்கிடைக்காது திண்டாடி இங்கே வந்த சடங்கள், இப்போது படமெடுத்தாடும் பாம்புகளாகிவிட்டனவா? ரோம் நாட்டு வீரரும், யவன நாட்டுத் தீரரும், தமிழரின் வீரத்தைப் பாராட்ட; கலிங்கமும் காந்தாரமும், வங்கமும் அங்கமும் மூவேந்தரின் திறத்தைப் பாராட்டியிருக்க, பிழைக்க வந்த கூட்டம் நம்மை இழிவாகப் பேசுவதா? தமிழகம் அவ்வளவு தாழ்ந்து விட்டதா?[1]

மற்றோர் உரையாடல்

சேரன் கனகன், விசயன்! காவலராம் இவர்கள்! கடும் போரிடத் தெரியுமாம்!! ஏடா மூடர்காள்! கங்கைக் கரையிலே காலம் தள்ளுவதை விட்டு, ஏன் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டீர்?... போர் என்றால் புகை கிளம்பும் யாகம் செய்வீர்கள்! ஆண்டவனிடம் அஸ்திரம் கேட்பீர்கள்! வாள் வீசத்தெரியாத உங்களுக்கு ஏன் இந்த வம்பு? தமிழரைப் பொன் கேட்டீர், கொடுத்தோம். வாழ இடம் கேட்டீர், தந்தோம்! அந்த வாழ்வு பெற்ற பின்னர் தமிழரையா இகழ்ந்து பேசினீர்?[2]

இவ்வாறு நாடகம் முழுவதும் கொள்கைப்பரப்பு உரையாடல்களாகவே உள்ளன. படையினரை உற்சாகப்படுத்துவ

---

1. சி.என். அண்ணாதுரை, அண்ணாவின் நாடகங்கள், பக். 277-78
மேலது, பக். 285-86

தற்காகச் சேரமன்னன் பேசும் உரையாடல், 'டெம்மி' அளவில் இரண்டு பக்கங்களில் அமைந்துள்ளன.[1]

இமயத்தில் நாம்

ரா. வேங்கடாசலம் அவர்களால் எழுதப்பட்டு, டி.கே.எஸ். சகோதரர்களால் நடிக்கப்பட்டது, *'இமயத்தில் நாம்'* என்னும் நாடகம். 'இந்நாடகம் தமிழர்களின் சிறப்பையும் ஆரியர்களின் புன்மையையும் விளக்க எழுந்தது. அதனால் வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகளை மட்டுமே அடிப்படையாய்க் கொண்டுள்ளது.'[2]

இமயவரம்பன் இமயத்தின் உச்சியில் வில், புலி, கயல் என்னும் சின்னங்கள் பொறித்த தமிழ்க்கொடியை நாட்டுதலே நாடகத்தின் தொடக்கமாய் உள்ளது.

குடமலைத் தெய்வம்

புலவர் அரசு, *'குடமலைத் தெய்வம்'* எனும் நாடக நூலை எழுதியுள்ளார். இதுவும் வஞ்சிக் காண்டத்தை மட்டுமே மையமாய்க் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் கண்ணகிக்குக் கோயிலெடுத்த சேரன் செங்குட்டுவனைப் பற்றிய நிகழ்ச்சிகளே முதலிடம் பெறுகின்றன. இந்நாடகம், "தமிழனின் செந்நீரிலுள்ள கோழையணுக்கள் மடிந்து வீர அணுக்கள் செறிந்து ஆக்கம் பெறவேண்டும்" என்னும் உயர்நோக்கத்தில் படைக்கப்பட்டுள்ளது.[3]

மாற்றங்கள் மனத்தைத் தொட்டுள்ளனவா?

வால்மீகி இராமாயணத்தில், மாற்றம் பலசெய்து, தமிழ்ப் பண்புக்கேற்றவாறு கம்பராமாயணம் பாடப்பெற்றது. கம்பராமாயணம் வான்மீகி இராமாயணத்தினும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. சிலப்பதிகாரத்திலும் மாற்றங்கள் செய்து நூல்கள் பல தோன்றியுள்ளன. இந்நூல்களில் எதுவும் கம்பராமாயணம் வான்மீகி ராமாயணத்தினும் விஞ்சி நிற்பதைப் போல சிலம்பை விஞ்சி, மக்கள் மனத்தில் இடம்பெற்றிருப்பதாய்ச் சொல்ல இயலவில்லை. இதற்குக் காரணம் இளங்கோவின் முத்தமிழ்ப் புலமையைப் பின்னர் வந்தவர்களால் விஞ்ச முடியவில்லை என்பதா அல்லது கம்பராமாயணத்தில்

---

1. சி.என். அண்ணாதுரை, அண்ணாவின் நாடகங்கள், பக். 280-81
2. இந்நூல், பக்: 436
3. மேலது, பக். 443

செய்யப்பெற்ற மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுபோல, சிலம்பில் செய்யப்பெற்ற மாற்றங்கள் மக்கள் மனத்தைத் தொடவில்லையா என்பது ஆய்தற்குரியவாம்.

சீரிய ஆய்வு

திருமதி சரளா ராசகோபாலன் இவ்வாய்வை விரிவாயும் ஆழமாயும் செய்துள்ளார். ஒவ்வொரு நூலைப் பற்றியும் குறிப்பிட்டு அஃது எவ்வாறு மூலநூலாம் சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபட்டுள்ளது அல்லது மூலநூல் கருத்தை அரண்செய்கிறது என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்துள்ளார். ஒவ்வொருவரும் செய்துள்ள மாற்றத்திற்குக் காரணமாய் இருந்துள்ளது எது என்பதையும் இயன்ற இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். நெறிநின்று அரிய கருத்துகள் பலவற்றைத் தொகுத்து முடிவு கண்டுள்ள இவருடைய ஆய்வுத்திறம் பாராட்டுதற்குரியது.

'வழி வழி.......' நூல்கள் பலவற்றை வழி வழி எழுதித் தமிழுக்கு வளம் சேர்ப்பாராக என வழி வழி வாழ்த்தி மகிழ்வோம்!

நூல் ஆக்கம்	முனைவர் சரளா இராசகோபாலன்
வகைமை	ஆய்வு நூல்
வெளியீடு	ஒளிப்பதிப்பகம், சென்னை–18. (1986)

7

சிலம்பும் பொருளும்

சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம். இது சேரன் செங்குட்டுவனுடைய இளவல் இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது; காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வாணிகர் மரபில் தோன்றிய கண்ணகி - கோவலன் கதை கூறுவது. இக் காப்பியத்தில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் விரவி வருவதால் இது முத்தமிழ்க் காப்பியம் என்றும், இயல் இசை நாடகத் தொடர்நிலைச் செய்யுள் என்றும் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் நிறுவியுள்ளனர்.

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் சிலப்பதிகாரத்தைப் பலரும் உளங்குளிரப் பாராட்டியுள்ளனர்.

> பழுதற்ற முத்தமிழின் பாடல்

என்கிறது அடியார்க்கு நல்லார் உரை.

> நெஞ்சை, அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்,மணி
> ஆரம் படைத்த தமிழ்நாடு

எனப் பாரதியார் பாடிக் களிக்கிறார்.

> தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
> தேரும் சிலப்பதி காரமதை
> ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்
> ஓதி உணர்ந்தின் புறுவோமே

எனச் சிலம்பைச் சுவைத்து நம் சிந்தையள்ளப் பாடுகிறார் கவிமணி தேசிக விநாயகனார்.

உரையாசிரியர்கள்

இத்தகைய பண்டைய இலக்கியங்களில் தெளிவாய் விளங்கிக் கொள்ள இயலாமல் நுண்மையவாய் அமைந்து நிற்கும் சொல், சொற்றொடர்களை யாவர்க்கும் விளங்குமாறு எழுதுவது உரை எனப்படுகிறது. நூலை எழுதுபவர் நூலாசிரியர் என்றும்,

அதற்குப் பொருள் கூறி விளக்கம் எழுதுபவர் உரையாசிரியர் என்றும் வழங்கப்படுகின்றனர். உரையாசிரியர்கள் பொருள் கூறுவதோடு அல்லாமல், இலக்கியத்தில் உள்ள நுட்பங்களையும், நயங்களையும் எடுத்துச் சொல்வர். நூலாசிரியரின் அரிய கருத்துகளையெல்லாம் உரையாசிரியர்கள் உதவியாலேயே உலகம் அறிந்து இன்புறுகிறது.

பழைய இலக்கிய மொழிநடை இன்றைய பொதுமாந்தர் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை; மொழியை உணர்ந்து கொண்டாலும் அம்மொழியில் அடங்கியுள்ள குறிப்புகளையும் நுண்பொருள்களையும் முழுமையாய் உணர்ந்து கொள்வது கடினம். இதனை உணர வழி அமைப்பவர்கள் உரையாசிரியர்கள். இவர்கள், செய்யுளால் ஆன பழந்தமிழ் நூல்களுக்குப் பிற்காலத்து உரைநடையில் விளக்கம் எழுதினர்.

நல்லாசிரியர்கள் செய்த நூல்களும், செய்யுள்களும் காலத்தை வென்று இறப்பின்றி வழங்கிவருதலால், காலந்தோறும் அவற்றிற்குப் பேரறிஞர் உரைகண்டு வருகின்றனர். '*இறையனார் அகப்பொருள் உரை*'யே தமிழ் மொழியில் தோன்றிய முதல் உரைநூல். உரை நான்கு வகைப்படுமென 'இறையனார் களவியலுரை' கூறுகிறது. அந்நான்கு வகை உரைகளின் தன்மையை விளக்குகிறது, நம்பியகப்பொருள் உரை. நான்கு வகையாவன கருத்துரைத்தல், கண்ணழித்து உரைத்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என்பனவாம். இவற்றுள் *கருத்துரைத்தல்* என்பது செய்யுளின் உட்கோள் (கருத்து) உரைத்தல்; *கண்ணழித்தல்* என்பது செய்யுளில் சொல்தோறும் பொருள் உரைத்தல்; *பொழிப்புத் திரட்டல்* என்பது செய்யுட் பொருளையெல்லாம் தொகுத்துக் கூறுதல்; *அகலம் கூறல்* என்பது வினா விடையால் விரித்துரைத்தல் ஆம்.

நன்னூலின் பொதுப்பாயிரம் உரைவகை பதினான்கு என்கிறது. பொதுவாக இன்று உரைகள், *பதவுரை* (சொற்பொருள்); *பொழிப்புரை* (சொற்பொருளைத் திரட்டித் தருதல்); *கருத்துரை* (அடங்கியுள்ள கருத்தினைமட்டும் கூறுதல்); *விளக்கவுரை* (இலக்கணக் குறிப்பு, மேற்கோள் முதலியன காட்டி விளக்குதல்) என்ற அளவில் மிகுதியும் ஆளப்பட்டுவருகிறது.

பதவுரையோ பொழிப்புரையோ கூறாமல் பாடற் கருத்தினை எளிய இனிய சொற்களால் தொகுத்துக் கூறுவதைத் *தெளிவுரை* என்கிறோம்.

சிலப்பதிகார உரைகள்

சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரையென்றும், அடியார்க்கு நல்லார் உரை என்றும் இரண்டு பழைய உரைகள் உண்டு. இவ்விரண்டனுள் அரும்பதவுரையே முந்தையது. அரும்பத வுரையின் குறிப்புகளிலிருந்து அதற்கு முன்னர் ஓர் உரை இருந்திருக்கக் கூடுமெனத் தெரிகிறது. ஆனால் அது கிடைக்க வில்லை. அரும்பத உரை, நூல் முழுமைக்கும் உள்ளது. இவ் வுரையாசிரியர் பற்றிய பிற குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை.

அடியார்க்குநல்லார் உரை காப்பியத் தொடக்கத்திலிருந்து கானல்வரி நீங்கலாய் ஊர்சூழ்வரி முடியவே உள்ளது. அதற்குப் பின்னர் உள்ள காதைகளுக்கு அவர் உரை கிடைக்கவில்லை. இவருடைய பிறப்பு முதலியவை பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஈரோடு மாவட்டத்தில் ஈரோட்டினை அடுத்து விசயமங்கலம் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. பெருங்கதை இயற்றிய கொங்குவேள் தோன்றியது இவ்வூரே. இவ்வூருக்கு அருகில் உள்ள நிரம்பை என்னும் ஊரில் அடியார்க்குநல்லார் பிறந்தவர் என்பர். அதனால் இவருக்கு 'நிரம்பையர் காவலர்' என்ற பெயரும் உண்டு. இவர் காலத்தில் கொங்குநாட்டிலிருந்த பொப்பண்ண காங்கேயன் என்பார் இவருக்கு உதவி புரிந்து சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதச் செய்திருக்கிறார். இதனை,

> **பொப்பண்ண காங்கேயர் கோன்அளித்த சோற்றுச்**
> **செருக்கலவோ தமிழ்மூன்று உரை சொல்வித்ததே**

என அடியார்க்குநல்லார் உரைச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இவர் கி.பி. 12ஆம் நூற்றாண்டினர் என்பர்.

இவரை அடுத்து ஏழு நூற்றாண்டுகளில் தோன்றியதாய் சிலப்பதிகார உரை ஏதுமில்லை. ஓலைச் சுவடிகளை அரிதின் முயன்று தேடி, ஆய்ந்து, சிலப்பதிகார மூலத்தை அரும்பதவுரை, அடியார்க்குநல்லார் உரையுடன் முதன்முதலில் அச்சில் பதித்த (1892) பெருமை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களையே சாரும். இவருக்கு முன்னரே அந்த நூற்றாண்டில் சிலர் சிலப்பதிகாரத்தின் ஒரு காண்டம் அல்லது சிற்சில காதைகளை மூலமாகவோ, உரையாகவோ தந்துள்ளனர். முழுக் காப்பியத்தை யும் உரையுடன் தந்தவர் உ.வே.சா. அவர்களே!

உ.வே.சா. பதிப்பு இருப்பினும், நூல் முழுமைக்கும் அமைந்த தெள்ளிய உரையுடையதாய் 1942இல் நாவலர் *ந.மு.வேங்கடசாமி நாட்டார்* அவர்கள் உரை வெளியாயிற்று.

பெருமழைப் புலவர் *பொ.வே.சோமசுந்தரனார்* எழுதியுள்ள உரையை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 1961இல் வெளியிட்டுள்ளனர். விளக்க உரை, அகலவுரை இல்லாமல் பாட்டுக்கு நேர்பொருளாய் *புலியூர் கேசிகன்* தெளிவுரை 1958இல் வெளிவந்தது. *திரு. ஜெ. ஸ்ரீ. சந்திரன்* எழுதியுள்ள தெளிவுரை 1988இல் வெளியிடப்பெற்றது. *சிலம்பொலி சு. செல்லப்பன்* எழுதி யுள்ள தெளிவுரை 1994இல் வெளியாயிற்று.

பா உரை

உரைநடையில் மட்டுமன்றிச் செய்யுள் வடிவிலும் சில உரைநூல்கள் தோன்றின. அகநானூற்றுக்குப் பழங்காலத்தில் அகவற்பாவிலே உரை தந்தார் பால்வண்ணதேவன் என்பதனை அதன் உரைச் சிறப்புப்பாயிரம் உரைக்கிறது.

15ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு விருத்தப் பாவில் ஓர் உரை இயற்றினார்.

திருக்குறளுக்குப் பல உரைகள் செய்யுள் வடிவிலே தோன்றியுள்ளன. திருக்குறள் ஒன்றைக் கூறி, அதன் கருத்தை விளக்க ஏதேனும் ஒரு கதையோ வரலாறோ உதாரணம் காட்டிப் பாடல்கள் பிறந்தன. இத்தகைய நூல்களை 'உரைநூல்கள்' என்றே கருத வேண்டும் என்பது டாக்டர். உ.வே.சா. கொள்கையாகும். இவ்வகையில் தோன்றியுள்ளது செகவீரபாண்டியனாரின் குமரேச வெண்பா. இதில் ஒவ்வொரு திருக்குறளையும் ஒரு வெண்பாவின் ஈற்றடிகளாய் வைத்து, இரண்டாம் அடியில் குமரேசா என விளித்து, அக்குறளுக்குத் தொடர்புள்ள ஒரு கதை அமையுமாறு 1330 குறளுக்கும் வெண்பாக்கள் அமைந்துள்ளன.

இக்காலத்தில் பழம்பெரும் நூல்களுக்கு எளிய முறையில் செய்யுளில் உரை எழுதி அவற்றை மக்களிடையே பரப்பும் முயற்சி நடைபெறுகிறது. பாவேந்தர் பாரதிதாசன் குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றை இக்காலத்தவர் எளிதில் பொருள் உணர்ந்து கற்கும் வகையில் அகவற்பாக்களில் தந்துள்ளார்.

கண்ணதாசன் 'பழம்பாடல் புதுக்கவிதை' என்னும் தலைப்பில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் 5, நளவெண்பாப் பாடல் 1, நற்றிணைப் பாடல் 1 ஆக ஏழு பாடல்களுக்குக் கவிதையில் உரை தந்துள்ளார். திரு.மு.ரா.பெருமாள்முதலியார் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகியவற்றிற்கு அகவற்பாவில் உரை எழுதியுள்ளார். கவிஞர் பிரபாகரபாபு என்பவர் பத்துப்பாட்டு முழுமைக்கும் புதுக்கவிதை நடையில் உரை செய்துள்ளார்.

இறையரசன் உரைப்பா

இவ்வுரை நூல் ஆசிரியரான *பாவலர் இறையரசன்* 1982இல், *குறளும் பொருளும்* (பாடல் விளக்கம்) எனும் தலைப்பில் அமைந்த நூலில் ஒவ்வொரு குறளையும் அரைவிருத்தக் கண்ணிகளால் பாடி உரை கண்டிருக்கிறார். 1991இல் நாலடியார்க்கு, *'நாலும் பொருளும்'* எனப் பாடல் வாயிலாகவே உரை தந்துள்ளார்; அவ்வுரையை முழு விருத்தத்தில் (எண்சீர்) செய்துள்ளார். தொடர்ந்து இப்போது, *'சிலம்பும் பொருளும்'* எனச் சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்திற்கு மட்டும் பாடலிலேயே உரை எழுதி அளிக்கிறார். எண்சீர் மண்டிலத்தில் உரை உள்ளது. இடையிடையே அகவற்பா, குறள் வெண்பா, குறள் வெண்செந்துறை, தாழிசை இடம் பெற்றுள்ளன. உரைகள் பற்றிக் கூறியுள்ள அத்துணைச் சிறப்புகளும் கொண்டதாய் இப்பாவுரை திகழ்கிறது.

தமிழ் வாழ்த்து

பெருங்காப்பியத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகியன முன்னுரைபோல் அமையும். காப்பியத்துக்கு உரையெழுதும் இந்நூலாசிரியர் 'அன்னைத் தமிழின் அருள்வளம் வேண்டல்' எனும் தலைப்பில் அமைந்துள்ள வாழ்த்துப் பாடல்களோடு செய்யுளுரையைத் தொடங்குகிறார்.

> சேயுரைக்கும் இவ்வுரைப்பாச் சிலகருத்தை யேனும்
> *சீருலகில் நின்றுய்யச் செஞ்சொற்கள் தாராய்!* (பக். 34)

எனத் தன் உரை சிறப்படையத் தமிழ்த்தாயை வேண்டுகிறார். நிலம், நீர், கனல், புயல், விண் என ஐந்துமூலப்பொருள்களைக் குறிக்கும் சொற்கள் ஐந்து, உடல், வாய், கண், மூக்கு, செவி என ஐம்புலன்களைக் குறிக்கும் சொற்கள் ஐந்து ஆக இப்பத்துச் சொற்களும் ஒவ்வொரு பாடலுக்கு ஒன்றாய் முதலடியில் அமையுமாறு, வரிசையாய் முதற்பத்துப் பாடல்களைப் பாடியிருப்பது சிறப்பாய் உள்ளது. புலன்களைக் குறிக்கும் சொற்கள் ஐந்தும் முதல் அடியின் முதற் சொல்லாகவே அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இவ்வுரைப்பா, நயம்மிக்கதாய் இருக்கும் என்பதைத் தொடக்கமே நன்கு புலப்படுத்துகிறது.

அவையடக்கம்

அவையடக்கம் சொல்வது காப்பிய மரபு. கற்றறிந்தோர் இருக்க, நான் இக்காப்பியம் பாடுவதற்குத் தகுதியுடையவனல்லன்; ஆயினும் காப்பியத்தைப் படிப்போர் அல்லது கேட்போர் என் கவியைக் கருதாது, கூறும் பொருளைக் கருதி என்னைப்

பொறுத்திடவேண்டும் எனக் கூறுவது அவையடக்கம்; தனக்குத் திறமையில்லை என்று கூறுகின்ற அப்பாடல்களோ, கவிஞரின் புலமை நலத்தைப் பெரிதும் வெளிப்படுத்துவனவாய் இருக்கும். சீவகசிந்தாமணியிற்றான் முதன்முதலில் அவையடக்கப் பாடல் இடம் பெறுகிறது. முத்தும், பவழமும், சங்கும் கடலுள் கிடக்கின்றன. கடல்நீர் உவர்ப்பு என்பதால் அவற்றை மூழ்கி எடுக்காமல் விடுவார்களா? நீரின் உவர்ப்பைக் கருதாது பொருளின் சிறப்புக் கருதி எடுக்கவே செய்வர். அதுபோல் என் கவிதை அடக்கியுள்ள பொருள் கருதி அறிஞர்கள் என் கவிதையில் குற்றங்காண மாட்டார்கள் என்கிறார் திருத்தக்க தேவர்.

கம்பர், தான் இராமாயணத்தைப் பாடுவதானது, ஒரு பூனை பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடித்துவிடுவேன் என்று சொல்வதற்கு ஒப்பாகும் என்பார். புகழேந்திப் புலவரோ, தான் நளன் கதையைப் பாடுவது, 'மதம்பிடித்த யானையைத் தாமரைத் தண்டினால் கட்டி அடக்குவேன்' என்பது போலாகும் என்கிறார். உமறுப்புலவர், தான் நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் பாட முற்படுவது, இடி இடித்திடும் ஆரவாரத்தினுக்கு எதிரே, ஒரு கை நொடிநொடிப்பது போலாகும் என்பார். இப்படி எண்ணிறந்த அவையடக்கக் கூற்றுகள் தமிழிலக்கியங்களில் உண்டு. இம்மரபுவழி, பாவலர் இறையரசனும், அறிஞர்கள் பலரிருக்க, தான் உரைப்பா உரைக்க இருப்பது,

> கோடான கோடியுடுக் கூட்டத்தை அள்ளக்
> குறித்திளைத்த கையிலன்போல் (பக். 36)

ஆகும் என்கிறார். தமிழ்த்தாய் வாழ்த்திலேயே இவ்வவையடக்கச் செய்தியினைத் தந்திருக்கிறார்.

> இவ்வுலக நிலப்பரப்பை, இருகாலால் அளக்க
> எண்ணுகிறேன் பேதைமைபோல் இவ்வகன்ற நூற்கே
> ஒவ்வும்பா உரைவகுக்க உள்ளினன்இப் பேதை! (பக். 34)

சிலம்புக்குத் தான் உரை எழுத முற்படுவது இந்நிலவுலகை இரு காலால் அளக்க எண்ணுவது போன்றாகும் என்கிறார்.

உரையின் தன்மை

உரை எழுதுதல் எளிய செயலன்று. மூலநூல் ஆசிரியர் எந்த அளவுக்குப் புலமையுள்ளவரோ அந்த அளவு உரையாசிரியரும் புலமை பெற்றிருக்க வேண்டும்; கற்போர் உளங்கொளப் பல உத்திகளை மேற்கொண்டு விளக்க வேண்டும். நூலாசிரியருடைய உள்ளக் கிடக்கையை நன்கு தெரிந்துகொண்டு கருத்தை

விளக்குவதோடு உவமை, மேற்கோள் முதலியவற்றைக் காட்டித் தெளிவிக்க வேண்டும். இதுவோ அதுவோ என்று ஐயுறுதற்குரிய இடங்களில் இன்னதுதான் என்று தெளிவுபடுத்த வேண்டும்; காலத்திற்கேற்ற நடையைக் கையாள வேண்டும்; அப்போதுதான் பழைய இலக்கியங்கள் ஆர்வத்துடன் கற்கப்பெறும்.

"ஒரு நூலின் கருத்தையோ, பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும் இஃது இன்ன காலத்தில் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச் சொல்லுக்கு இப் பொருள் என்ற சொல் அறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத் தொடர் ஓடிக் கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், இன்னபிறவும் இருந்தால்தான் பொருளை முரணின்றிக் காணமுடியும்" என்பார் டாக்டர்.வ.சுப. மாணிக்கனார்.

இத்துணையையும் உள்ளத்துட் கொண்டவராய்த்தான் பாவலர் இறையரசன் உரைப்பா எழுத முனைந்துள்ளார். சிலப்பதிகாரத்துக்கு இதுவரை வந்துள்ள உரைகள் அனைத்தையும் படித்து நுண்ணிதின் தெளிந்த பிறகே இப்பாவுரையை எழுத முற்பட்டுள்ளார். இருப்பினும்,

இச்சிலம்பும் பொருளுமெனும் பாநூல்,

உரைத்தவற்றுள் உள்ளபிழை சிறுபிள்ளை பிழையாய்
உளம்பொறுப்பீர் சான்றோரும் கற்போரும் தாமே (பக். 37)

என அடக்கத்துடன் கேட்டுக் கொள்கிறார். இந்த முன்னுரையுடன் இனி இறையரசன் உரைப்பாவின் உட்புகுவோம்.

காதைத் தலைப்புகள்

சிலம்பின் காதைத் தலைப்புகளைச் சிலம்பில் உள்ளவாறே இந் நூலுள்ளே வலப்புறம் மேற்புறத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் தந்து, காதைத் தொடக்கத்தில் அதன் பெயரை ஓர் அளவடியாய்ச் செய்துள்ளார், உரை செய்யுளாதலின்.

மங்கல வாழ்த்துப்பாடல்	*மங்கல வாழ்த்து மாண்பார் பாடல்*
அரங்கேற்று காதை	*அரங்கம் ஏற்றும் அரும்புகழ்க் காதை*
வேனிற் காதை	*விரும்பும் இனிமை வேனிற் காதை*

என இவ்வாறே பத்துக் காதைகளின் தலைப்புகளும் யாப்பமைந்த செய்யுளடிகளாகவே உள்ளன.

காப்பியத்தில் புகார்க் காண்ட இறுதியில் சோழநாட்டுச் சிறப்பு, மன்னர் பெருமை, காவிரி வளம், கலைத்திறன் பற்றிச் சொல்லி இத்தகு பெருமை கொண்ட 'புகார்க் காண்டம் முற்றிற்று'

எனும் கட்டுரை 20 அடிகளில் உள்ளது. இறையரசன் காதையின் தொடக்கத்திலேயே அக்காதை சொல்லும் செய்திகளை நிரல்பட, *'காண்டச் சுருக்கம் சுழறும் விளக்கம்'* எனச் சொல்லியுள்ளார்; இறுதியில் உள்ள *'கட்டுரை'*க்கும் உரைப்பா எழுதியிருக்கிறார். காண்டத் தொடக்கத்தில் அக் காண்டம் கூறுவதைத் தொகுத்துத் தருவது எனும் முறையையும் மேற்கொண்டுள்ளார்.

புகார்க் காண்டத்தின் தொடக்கத்தில் அக்காண்டம் கூறும் செய்திகளைக் கீழுள்ளவாறு தொகுத்தளிக்கிறார்

காவிரித்தாய் பொய்யாமல் பாய்ந்தூட்டும் சிறப்பு;
கவின்சோழப் பேரரசின் கரையாத வளங்கள்;
பாவிரிக்கும் வெல்சோழப் பேரரசின் மாண்பு;
பன்னாட்டோர் புகார்வந்து வணிகம்செய் பாங்கு;
நாவிரிக்கும் கண்ணகியாள் கோவலனின் மணமே;
நாட்டியத்தை மாதவியாள் அரங்கேற்றும் நிகழ்வு;
பூவிரிக்கும் கண்ணொளிரும் மாதவியா ளுடனே
போய்ஆடிக் களித்திருக்கும் இன்ப விளையாட்டு;

வளப்புகாரில் இந்திரனின் விழாநிகழும் களிப்பு;
வரிப்பாட்டால் கோவலனும் மாதவியும் பிரிதல்;
களங்கமில்லாக் கண்ணகிமுன் கோவலனும் வருதல்;
காணரிய பொருள்தொலைத்தேன் எனநாணி உரைத்தல்;
உளமுவந்து சிலம்பீந்தே, உடன்கற்பால் செல்தல்;
உயரறத்துக் காவுந்தி உடனிருவர் சேர்தல்;
விளக்கமுறக் காவுந்தி வழிஇயல்பைச் சொல்தல்;
விரிவான சோழநாட்டு வளங்கண்டே செல்தல். (பக்.52)

உரைச் சிறப்பு

ஒவ்வொரு காதையிலும் அடங்கியுள்ள செய்தியை அக்காதையின் தொடக்கத்தில் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறார். அரங்கேற்று காதையின் தொடக்கத்தில்

அழகுமகள் எனத்தக்க மாத விப்பெண்
அரிதரிதாய்க் கற்றுயர்ந்த நடன மெல்லாம்
அழகுநகர் புகார்தன்னில் அரசன் முன்னே
அரங்கேற்றம் செய்தஎழில் உரைக்கும் காதை (பக். 77)

என்கிறார். இவ்வாறே ஒவ்வொரு காதைக்கும் எழுதியுள்ளார்.

நேர்பொருள்

மூலத்தில் உள்ள தொடர்களுக்கு நேர்பொருளாய்த் தந்துள்ள பல இடங்கள் உரைப்பாவில் தென்படுகின்றன.

அ) **மலையிடைப் பிறவா மணியே என்கோ** (சிலப். 2:78)

மலையிடையில் பிறவாத மணியென் பேனா (இந்நூல் பக். 73)

ஆ) **கடும்பரி கடவுநர்** (5 54)

விரைந்தோடும் குதிரையினைச் செலுத்துவோர் (பக். 127)

இ) **மாமலர் நெடுங்கண் மாதவி** (6 174)

பெருமலர்போல் நீண்(டு)அகல்கண் மாதவி (பக். 174)

ஈ) **விளையா மழலையின்** (8 67)

நிறைவுற்று முதிராத இளமழலைச் சொல்லால் (பக். 227)

உ) **தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை** (10 : 53)

தென்தமிழ் நன்னாட்டின், தீதறுத்த மதுரை (பக். 256)

ஊ) **கொலைக்களப் பட்ட கோவலன்** (பதி. 31)

கொலைக்களத்தில் கொலப்பட்ட கோவலன் (பக். 41)

பொருள் எவ்வகையிலும் மாறாது, செய்யுளின் சீர் நிறைவுக்காய் மூலத்தில் இல்லாத சொற்கள் உரையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் வேண்டாத, பொருந்தாத சொல் எதுவுமில்லை; மூலத்தின் பொருளை நன்கு உணர்ந்து கொள்ளவும் துணை செய்கிறது.

அ) **திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்** (1 : 1)

அந்தளறில் திங்களினைப் போற்று வோமே!
அமிழ்தூற்றாம் திங்களினைப் போற்று வோமே ! (பக். 53)

ஆ) **அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை** (4 72)

அன்னங்கள் அசைந்துமெல்ல நடப்ப தைப்போல்
அலையசையும் நன்னீரே நிறைந்த பொய்கை (பக். 117)

பா இனங்கள்

ஓர் அடிக்கோ அல்லது இரண்டு மூன்று அடிகளுக்கோ, குறள் வெண்பாவிலோ தாழிசையிலோ விளக்கந்தரும் இடங்கள் உரைப்பாவில் நிறைய உள்ளன. குறள் வெண்பா 19 இடங்களிலும், குறள் வெண்செந்துறை 73 இடங்களிலும், அகவற்பா 14 இடங்களிலும், வெண்கலிப்பா 13 இடங்களிலும், தாழிசை 13 இடங்களிலும், கலிப்பா 1 இடத்திலும், சிந்தியல் வெண்பா 3 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அ) **சூழ்கழல் மன்னர்க்குக் காட்டல் வேண்டி** (3 : 1)

குறள் வெண்பா :

அரங்கேற்றம் செய்துகாட்ட ஆராத எண்ணம்
நிரம்பலுற்றே நின்றாள் நினைந்து (பக். 78)

ஆ) விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென். (3 174–75)

தாழிசை

அவளுடனே சேர்ந்துவக்கும் பித்தன் ஆனான்!
அணுவளவும் குற்றமிலாச் சிறப்பு டைய
தவமனையாள் நினைவிழந்தான்! மனைம றந்தான்;
தன்னையே தான்மறந்தான்; தவறோன் ஆனான். (பக். 105)

இ) காமர் மனைவிஎனக் கைகலந்து (2 92)

அகவற்பா

தன்னின் கரும்புத் தனிவில் எடுத்து
மென்மை மலரினும் மேலதாம் காதலை,
மலர்ஐங் கணையாய் மாற்றி விடுத்தே,
உலரா வண்ணம் உயிர்கட் கெல்லாம்
இன்பக் கிளர்ச்சியை ஏந்திச் சென்று
முன்எழச் செய்யும் முனைப்புறு தெய்வ
மன்மதன் என்றும், மனையாள் ரதியே
என்றும் புனைந்தே இயம்புவர் சான்றோர். (பக். 75)

ஈ) ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ (5 : 140)

சிந்தியல் வெண்பா

அரிதான பல்வேறாம் ஆருயிர்கள் தம்மைப்
பெரிதுவந்து கொன்று பெரும்பலிகள் இட்டே
விரும்பி வழிபட்டார் வியந்து (பக். 138)

உ) பலவுற்று ஒருநோய் துணியாத
படர்நோய் மடவாள் தனிஉழப்ப
அலவுற்று இரங்கி அறியாநோய்
அன்னை அறியின் என்செய்கோ? (7 : 39 3–4)

குறள்வெண் செந்துறை

பெரிதுற்ற காதல்நோய் தனில்,தனித்தே வருந்திப்
பேதையிவள் தளர்ந்திரங்கித் துயருழத்தல் யார்க்கும்
தெரியாமல் இனும்உளதே அவள்அன்னை, இந்நோய்
தெரிந்தோர்நாள் கடிந்திட்டால் இவளென்ன செய்வாள்? (ப. 208)

(ஊ) கண்ணகி தான் கண்ட கனவில் தான் பெற்ற 'நற்பேற்றைக் கேட்டால் நகைப்பினை உண்டாக்கும்' எனத் தேவந்தியிடம் சொன்னாள்

யான்உற்ற நற்றிறம் கேட்கின் நகைஆகும். (9 53–54)

இதிலுள்ள 'நற்றிறம்' என்பதனை உரைப்பா ஆசிரியர் வெண்கலிப்பாவில் விளக்குகிறார்.

வெண்கலிப்பா :

கோவலனார் மீளுவதும் குறிக்குமுயர் வானூர்தி
மேவவந்து விண்ணகத்தின் மேல்செல்தல் போற்கனவு
கண்ணகியாள் கண்டதனைக் கண்ணகியே நம்பவில்லை!
விண்டுரைத்தல் நகைப்பெனவே விரியறிவால் அவள்சொன்னாள்!
(பக். 245)

நயவுரைகள்

"நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவில் கலைமகள் நடமாடுகிறாள்" என்பார் கவிமணி தேசிக விநாயகம். பெரும் புலவர் நயங்கள் தோய்ந்து நனைக்கும் நயவுரைகளைத் தக்க விளக்கங்களோடு உரையாசிரியர்கள் மேலும் வளப்படுத்த வேண்டும். இம்முயற்சியில் இறையரசன் வெற்றிபெற்றிருக்கிறார். எங்கெங்குக் கூடிய செய்திகளைச் சேர்க்க வேண்டுமோ அங்கே சேர்க்கிறார். செய்திகளை நன்குணரக் காரணம் காட்டி விளக்குகிறார்; செய்திகளை விரிவுபடுத்திப் பொருளை நன்கு புரியவைக்கிறார்.

(அ) கோவலன் கண்ணகி திருமணத்தில், மணமக்கள் இருவரும்,

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்புஎன்னை? (1:52–53)

என்பார் இளங்கோவடிகள். கண்ணகி இப்போது தீயை வலம் வருகிறாள்; பின்னாளில் மதுரையில் தீக்கடவுள் இவளை வலம் வரப்போகிறது. இத்தகைய பெருமைக்குரியவளைக் காண்பவர் கண்கள் என்ன நோன்பு செய்தனவோ என்பார் சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம். இறையரசன்,

நெருப்பொத்த கற்புடைய மங்கை யோடு
நெருப்பையவன் வலம்வந்தான் (பக். 59)

எனக் கூறி நெருப்பை நெருப்போடு இணைக்கிறார்.

(ஆ) உலகம் முழுவதுமே அங்கு வந்துசேர்ந்தாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய குறைவற்ற செல்வவளம் உடையதாய்ப் புகார் நகரம் திகழ்ந்தது என்பதை,

முழங்கு கடல்ஞாலம் முழுவதும் வரினும்
வளங்கத் தவாஅ வளத்தது ஆகி (2 3–4)

என்பார் இளங்கோவடிகள். இறையரசன் கடலையும் வளத்தையும் விவரித்து,

விரிந்தெழுப்பும் பேரலைகள் ஒலிமு ழக்கும்
 வியன்கடலைத் தாண்டியுள்ள உலகில் வாழும்
மாந்தரெல்லாம் ஒருசேர வந்த போதும்
 மனம்விரும்பும் வளமெல்லாம் வழங்கத் தக்க
ஏந்தான வணிகவளம் எல்லாம் பூத்தும்
 இருந்ததுவே! (பக். 63)

என எழுதுகிறார்.

(இ) மாலை நேரம்; நிலாமுற்றத்தில் மாதவி கலவியும் புலவியும் காதலனுக்கு அளித்து முயங்கினாள். இதனை இளங்கோவடிகள்,

கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து (6 : 109)

என்பார். இறையரசன் கூடல், ஊடலை விவரித்துத் தன் உரைப்பாவைத் தருகிறார்.

மெய்யெல்லாம் இன்புறுத்தும் கலவிசெய்து, பின்னர்
மிகையற்ற சுவைஊடல் கோவலனுக்(கு) ஈந்தும் (பக். 167)

மாதவி இருந்தாள். கூடலின் இன்பமும், ஊடலின் தன்மையும் தக்கவாறு சொல்லப்பட்டுள்ளன.

(ஈ) கோவலன் கானல்வரிப் பாடலில் "திங்கள், கயலையும் மீனையும் எழுதிக் கொண்டது; அவை கண்களுக்கும் புருவங்களுக்கும் ஒப்பாயின. அத்தோடு கார்முகிலையும் சுமந்து கொண்டது; அஃது கருங்கூந்தலாயிற்று. அதற்குமேலும் மெல்லியலாரின் முகத்துக்கு ஒப்பாக வேண்டுமென்பதற்காய்க் கண்டாரைக் கவர்ந்திழுக்கும் காந்தப் பொலிவையும் செய்து கொண்டு பெண்ணின் முகமாய் ஆனது" எனப் பாடினான்.

கயல்எழுதி வில்எழுதிக் கார்எழுதிக் காமன்
செயல்எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்! (7 : 11 1–2)

கயல், வில், கார், காமன் செயல் ஆகியவற்றை இறையரசன் உயரழகுடன் விளக்கி உரைப்பா செய்துள்ளார்.

கண்ணனவே கயல்மீனும், புருவமென வில்லும்,
 கருங்கூந்தல் எனக்கரிய மேகத்தையும் தீட்டிப்,
புண்செய்யும் காமனென்போன் தொழிலும்தான் தீட்டிப்,
 போற்றுமுயர் இறைவன்தான் முடித்தமுகம் ஒன்று
வெண்ணிலவோ காண்பீர்காள்! (பக். 190)

(உ) காவுந்தி அடிகள் அருகனைப் போற்றும்போது *'ஒருமூன்று அவித்தோன்'* (10:194) என்கிறார். மூன்று என்ன என்பதை உரைப்பா விளக்குகிறது.

தீக்காமம், வெகுளி,
திரலிலா மயக்கமெனும் ஒருமூன்று குற்றம்
தீர்தவித்த அருகன். (பக். 270)

(ஊ) சாரணர் காவுந்தியடிகளிடம் 'கடுங்காற்றில் பரந்த வெளியில் வைக்கப்பட்ட விளக்கின் சுடர் அலைவதைப்போல உடலிலிருந்து உயிர் நீங்குவது உறுதி' என அறிவுரை கூறியதை,

கடுங்கால் நெடுவெளி இடும்சுடர் என்ன
ஒருங்குடன் நில்லா உடம்பிடை உயிர்கள் (10 : 174–75)

எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இதிலுள்ள உவமையை உரையாசிரியர் உவமையாகவே உரைப்படுத்துகிறார்.

கடத்தும்காற் றடிக்குங்கால் வெட்டவெளி தன்னில்,
கை,கொண்டே ஏற்றிவைத்த விளக்கவிதல் போல;
உடம்பிலுள்ள உயிர்,உடம்பில் ஒருங்குநில்லா வண்ணம்
உறச்சூழ்ந்த தீவினையோ உயிர்பிரித்து நிற்கும். (பக். 268)

(எ) ஒரு தொடர் பல இடங்களில் காப்பியத்தில் பயின்று வருமாயின், அவற்றுக்கு ஓரிடத்தில் தந்த சொற்களையே தந்து செல்லாமல், பொருளை மாற்றாமல் சொற்களை மாற்றிப் பொருள் தருவது சிறப்பு.

'மாமலர் நெடுங்கண் மாதவி' எனும் தொடர் புகார்க் காண்டத்தில் நான்கு இடங்களில் இடம் பெற்றுள்ளது. (3:170), (6:174), (8:16), (8:118). உரையாசிரியர் ஏற்றவாறு மாற்றி எழுதுகிறார்.

3 170 சிறப்புயர்ந்த தாமரைபோல்
கூர்நெடுங்கண் கொண்டொளிரும் மாதவி (பக். 105)

மாமலர், தாமரை என்று கொள்ளப்பட்டு, கண்ணுக்குக் 'கூர்' எனும் அடை சேர்க்கப்பட்டுள்ளது.

6 : 174 : பெருமலர்போல் நீண்டுஅகல் கண் (பக். 175)

மா - பெரிய, என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. நீண்டு அகன்ற கண் என்பதில், 'அகன்ற' சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

8 : 16 நற்கருமாக் குவளைமலர் நெடுங்கண்கள். (பக். 221)

மலர் என்பது இங்குக் குவளைமலர் எனக் கொள்ளப் பட்டுள்ளது.

8 : 118 மையைப், பூண்டொளிரும் நெடும்பெரிய கண்ணுடையாள். (பக். 234)

கண், குவளை மலர் போன்றது. குவளை கருமை நிற முடையது; ஆதலின் மாமலர் என்பது, 'மையைப் பூண்டொளிரும்'

எனக் கூறப்பட்டுள்ளது. கண்ணுக்குப் 'பெரிய' என மேலும் ஓர் அடை சேர்க்கப்பட்டுள்ளது.

அடைமொழி

மக்கட்கு அவரவர் குணவியல்புகளுக்கேற்ப அடை மொழிகள் தருகிறார். அடைமொழியைக் காணும்போதே அவர் எத்தன்மையர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

கோவலனை, *'கேடறியாக் கோவலன்'* (பக். 40), *'எழில்வாய்ந்த கோவலனார்'* (பக். 174) என்றும்;

கண்ணகியை, *'ஒப்பில்லாக் கண்ணகியாள்'* (பக். 56), *'களங்கமிலாக் கண்ணகி'* (பக். 52) என்றும்;

மாதவியை, *'முனிவருமே மயங்குமெழில் மாதவிப்பெண்'* (பக். 101) என்றும்;

பொன்செய் கொல்லனை, *'கெடுநெஞ்சன்'* (பக். 40), *'அக்கொடியன்'* (பக். 41) என்றும் அவரவர் பண்புக்கேற்ப அடைமொழிகளைச் சேர்த்துள்ளார்.

உரை ஒப்பு

பா உரையாசிரியர், தமக்கு முன் இருந்த உரையாசிரியர் களைப் பின்பற்றிப் பல இடங்களில் எழுதுகிறார்; அரும்பதவுரை காரர், அடியார்க்குநல்லார் ஆகியோர் உரைகளைப் பெரும்பாலும் பின்பற்றியுள்ளார்.

(அ) கண்ணகி,

காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் (1 : 29)

என முதலில் அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

இவளை முன்கூறிற்று; கதைக்கு நாயகியாதலின் என்பார் அடியார்க்குநல்லார். இறையரசன், கண்ணகியைத் *'தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்'* (1 27) எனக் கூறுமிடத்தில், திறம் - கற்பு எனப்பொருள் கூறுவதோடு கதைத் தலைவியும் கற்பின் செல்வியும் ஆதலால் கண்ணகியை முதலில் வைத்தார் என்கிறார்.

(ஆ) *மூவா மருந்து* (2 : 46) - அமிழ்து எனப் பொருள்கூறுகிறார், அரும்பதவுரைகாரர்.

அடியார்க்குநல்லார் இமையவர்க்கு மரணமின்மையைப் பயக்குமீ அமிழ்தம் எனக் கூறி, *'மூப்புக்கும் பிணிக்கும் மருந்தாயிற்று'* என்பார்.

இறையரசன்.

வாழ்வில்
ஓடிவரும் முதுமையினைத் தடுத்துக் காக்கும்
சாதலிலாக் கற்பரசி (பக். 69)

என எழுதுகிறார்; அடியார்க்குநல்லார் கூறியுள்ளதில் இமையவர் என்பதை நீக்கி, மரணமின்மையைச் சாதலிலாக் கற்பரசி எனக் கற்புடன் சேர்க்கிறார்.

(இ) முல்லை மலர்கள் அரும்பவிழ்ந்த மாலைநேரம்; மங்கையர்கள் இல்லத்தே மணிவிளக்கேற்றி ஒளிசிந்தச் செய்தனர். பின்னர் இரவிற்கேற்ற கோலம் பூண்டு தம் கொழுநர் வாவைக் கொடியிடையார் எதிர்நோக்கியிருந்தனர் என்பதைக் கூறவரு மிடத்தில் சிலம்பு,

இரவிற்கோர்
கோலம் கொடியிடையார் தாம்கொள்ள (9 3–4)

எனச் சொல்கிறது.

இரவிற்கோர் கோலம் இராப்பொழுதைக்கு ஆம்படி நொய்தானவை உடுத்தும் புனைந்தும் ஒப்பித்த கோலம் என்பார் அரும்பதவுரைகாரர்.

'மகரக்குழை முதலிய மணியும் பூணும் மாதாணியும் முதலிய அணியும்; இரட்டையங்கண்ணி பிணையல் முதலிய பணியுங் களைந்து, நொய்யனவே புனைந்தும் பூண்டும் முடித்தும் செய்தல்' என்பார் அடியார்க்கு நல்லார்.

இறையரசன் அரும்பதவுரைகாரரைச் சார்ந்து, *'கொடியிடையார் மென்மையுடை பூண்டார்'* எனச் சுருக்கமாய்க் கூறிச் செல்கிறார்.

(ஈ) கண்ணகியிடம் திரும்பிய கோவலன், 'என் தீயொழுக்கம் காரணமாய் நம் முன்னோர் தேடிய குன்றனைய பொருட்குவை அனைத்தும் அழிந்தொழிந்தன' என வருந்தி நின்றான். கண்ணகி, இதோ! 'சிலம்பு உள கொள்ளுங்கள்' என்றாள் எனும் செய்தி கனாத்திறம் உரைத்த காதையில் கூறப்பட்டுள்ளது.

இங்கே உரை செய்யும் அடியார்க்குநல்லார், 'சிலம்புள' என்றாள், இவையொழிந்த கலனெல்லாம் தொலைதலால் என்கிறார். காலில் அவள் சிலம்பணியாதிருந்ததால், அஃது உள்ளது அவனுக்கு தெரியாது என்பதால் அவன் தளர்ச்சி நீங்க, சிலம்புள்ளதைக் குறிப்பிட்டாள் என விளக்கமும் தருகிறார்.

இக்கருத்தையேற்கும் இறையரசன் இதனைப் பதிகத்தி லேயே கூறிவிடுகிறார்.

பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டி (பதி. 18)

என்பதற்கு உரையாக,

கண்ணகியின் காலில் கொஞ்சும்
பாடலிசை முழங்குமிரு சிலம்பே மிஞ்சப்
பணத்திற்கே அச்சிலம்பை விலைதான்பேச

மதுரைக்குள் நுழைந்தான் என்றெழுதியுள்ளார். (ப.40)

(உ) கோவலனும், கண்ணகியும் காவுந்தியடிகளுடன் உறையூரை வந்தடைந்தனர் என்பதை இளங்கோவடிகள்,

காவுந்தி ஐயையும் தேவியும் கணவனும்
முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் (10 : 246–48)

என்பார். வாரணம் என்பதற்கு யானை, கோழி என்ற பொருள்கள் உண்டு. முறஞ்செவி வாரணம் என்பது யானையையும், புறஞ்செவி வாரணம் என்பது கோழியையும் குறிக்கும். ஒருகாலத்தில் இவ்விடத்தில் ஒரு கோழி யானையை எதிர்த்துப் போரிட்டுப் புறங்கொடுத்தோடச் செய்ததாம்! இதைக் கண்ட அரசன் அவ்விடத்தில் நகரமைத்து அதற்குக் 'கோழி' என்று பெயரிட்டனன் என்பர்.

'யானையைச் சயித்த கோழி தோன்றினவிடம் வலியுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன் பெயராலேயே 'சோழன்ஊர்' கண்டதாய் அடியார்க்குநல்லாரும்,

'யானையைக் கோழி முருக்கலால் கோழியென்று பெயராயிற்று' என அரும்பத உரையாசிரியரும் உரை தந்துள்ளனர்.

இறையரசனும் இதே கருத்தைத் தன் நடையில் சொல் கிறார் :

முன்னாள்
நெடுமுறம்போல் செவியுடைய யானையுடன் போரில்
வெற்றியுற்றுப் புறமுதுகு பெறச்செய்த வீர
வெல்கோழிப் பெயர்பூண்டு நிற்குமிடம் என்னும்
பெற்றியுள்ள சோழமண்ணாம் உறையூரை நோக்கிப்
பெருவிருப்பால் நடைக்களைப்பால் சென்றடைந்தா ராமே
(பக். 27)

உரை மாறுபாடு

முந்தைய உரையாசிரியர்களிடமிருந்து மாறுபடுகின்ற மிகச் சில இடங்களும் இவ்வுரையில் உண்டு.

அ) *மங்கல அணி* என்பது தாலியைக் குறிக்குமா எனும் பெரிய 'வாதம்' தமிழ்நாட்டில் அறிஞர்களிடையே நீண்ட நாட்களுக்கு முன் நடைபெற்றது. சிலர் மங்கல அணி என்பது தாலியே என்றனர்; சிலர் இது தாலியன்று என்றனர்.

கோவலன் கண்ணகி திருமணம் நகருக்கு அறிவிக்கப்பட்ட போது, 'மங்கலநாண் ஊரை வலம் வந்தது' என்கிறார், இளங்கோ.

அகலுள் மங்கலஅணி எழுந்தது (1 47)

மங்கல அணி எழுந்தது - மாங்கலிய சூத்திரம் வலம்வந்து என்பது அரும்பதவுரை.

மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது என்கிறார் அடியார்க்கு நல்லார்.

இறையரசன்,

மங்கலநாண் எனும்தூய அணியாம்; அஃதை
மணிப்புகாரில் தெருவலமாய்க் கொண்டு செல்ல (ப. 58)

என்று எழுதுவதன்வழி மங்கலநாணைத் தூய அணி என்கிறார்.

கண்ணகி, கோவலனைப் பிரிந்திருந்தபோது, மங்கல அணியைத் தவிர அவள் வேறெதையும் அணியவில்லை என்கிறார் இளங்கோ அடிகள்.

மங்கல அணியிற் பிறிதணி மகிழாள் (4 50)

இங்கு மங்கல அணி என்பதற்கு அரும்பதவுரையாசிரியர், 'இயற்கை அழகு' எனப் பொருள் கொண்டுள்ளார்.

'மங்கல அணியின் வேறான அணி' எனப் பொருள்தருகிறார் அடியார்க்குநல்லார்.

'மணத்தில் பூட்டியதோர் அணி' என்கிறார் இறையரசன்.

மங்கல அணி என்பது இன்ன அணி என அடியார்க்கு நல்லாரும், இறையரசனும் கூறவில்லை. அரும்பதவுரைகாரர், அதை மாங்கலிய சூத்திரம் என்கிறார். மங்கல அணி பற்றிய சர்ச்சை இன்றுவரை தீர்ந்தபாடில்லை.

ஆ) *பட்டிமண்டபம்* வித்யா மண்டபம்; ஓலக்க மண்டபமு மென்ப என்பார் அடியார்க்குநல்லார்.

பட்டி மண்டபம் ஓலக்க மண்டபம் என்கிறது அரும்பதவுரை.

இறையரசன் 'பட்டிமண்டபம்' என்று மட்டுமே கூறுகிறார்.

இ) *மயன்* - என்பவன் 'தெய்வத் தச்சன்' எனப் பண்டைய இரு உரையாசிரியர்களும் கூறியிருக்க, இறையரசன், 'மயன்

என்கின்ற ஓர் தச்சன்' என்று மட்டுமே கூறுகிறார். தெய்வத் தச்சன் என்பதை இவர் ஏற்கவில்லை.

உரை நயம்

அ) மற்ற உரையாசிரியர்கள் கூறியதைவிட இவ்வுரைகாரர் அழகுபடக் கூறுமிடங்கள் பல தென்படுகின்றன. கோவலன், *'மண்தேய்த்த புகழினான்'* எனக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளான்.

அரும்பதவுரைகாரர் இதற்கு, 'பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ்' என்பார்.

'மண்தேய்த்த' என்றார், 'புகழ்வளரப் பூமி சிறுகலான்' என்பது அடியார்க்குநல்லார் கருத்து.

பூமியைச் சிறிது என்று சொல்லும்படியாய்ப் பெரும்புகழ் அவனுக்கு எவ்வாறு வந்தது என்பதற்கு விளக்கம் கூறுகிறார் இறையரசன். 'உலகமெல்லாம் தவறாது வாணிகனாய்ச் சென்றுவந்து, தரை சிறுக்கும் புகழ்பெற்றோன்' என்கிறார். உலகமுழுதும் சென்று வணிகம் செய்து வந்ததால் அவன் பெருமை உலகப் பெருமையினும் பெரிதாயிற்று.

ஆ) உலவாக் கட்டுரை

உலவாமை - ஒழியாமை என்று மட்டுமே அரும்பதவுரை உள்ளது.

'சொல்லித் தொலையாத நலம் பாராட்டாகிய பொருள் பொதிந்தது' என்பது அடியார்க்குநல்லார் உரை.

'அழியாத புகழ்மைச் சொற்கள்' என்பது இறையரசன் கொள்ளும் பொருள். இறையரசன் உரையில் சுருக்கம், தெளிவு, அழகு தென்படுகிறது.

தமிழ்ப்பற்று

இறையரசனின் நெஞ்சுநிறைந்த தமிழ்ப்பற்றினை அவர் உரையில் உணர முடிகிறது. உலகில் கூறப்பட்டுவரும் செம்மொழிக் கெல்லாம் உயர்தனிச் செம்மொழி தமிழ். இதனைச் செம்மொழி என அறிவிக்க வேண்டுமென நூறாண்டுகளுக்கு மேலாய்த் தமிழ் அறிஞர்களும், தமிழ் அமைப்புகளும் கோரி வந்துள்ளனர்; அரசினை வலியுறுத்தியுமுள்ளனர்; கோரிக்கை நிறைவேறாத ஒன்றாகவே இருந்தது. செந்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தனிப்பெரும் முயற்சியினால் நூறாண்டுக் கோரிக்கை இப்போது நிறைவேறியுள்ளது. இறையரசன் நெஞ்சமெல்லாம் குளிர்ந்து கலைஞரைப் பாராட்டி, தமிழை வாழ்த்திக் களிக்கிறார்.

செம்மொழியாய் வானுயர்ந்த வளமுயரப் போகும்
செழுந்தமிழே! இதுகலைஞர் ஈன்மகுடம் ஆகும்!
அம்,மொழியே அமிழ்தூற்றே! அருமணியாம் தாயே!
அணுவளவென் உரையுயர அகத்தமர்வாய் நீயே! (பக். 35)

தமிழ் செம்மொழியாய் நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதெனும் நெஞ்ச நிறைவோடு உரை எழுதுகிறார்.

'தண்டமிழ்ச் சாத்தன்', என்பதற்கு உரைகாணுங்கால் இறையரசன், 'இனிமைத் தமிழ்மொழி எமது' எனும் களிப்போடு,

உவப்பூட்டும் குளிரினிமைத் தமிழில்; வன்மை
உடையதிருச் சாத்தனாரும் (பக். 39)

எனக் குளிர்ந்த உளத்தோடு எழுதுகிறார்.

இளங்கோவடிகளிடம், 'விறலோய்! கேட்டி!' என்கிறார் சாத்தனார். இளங்கோவைக் குறிக்க வந்துள்ள 'விறலோய்' என்ற சொல்,

தொன்தமிழில் வெல்லாற்றல் பெற்றே நிற்கும் தூயடிகாள்

எனத் தமிழ்தழீஇய உரையைப் பெற்றுள்ளது. (பக். 42)

இராவணனைப் பாடுகின்ற பாவேந்தர் பாரதிதாசன் அவனை, 'தமிழ் மறைகள் நான்கும் சஞ்சரிக்கும் நாவான்' எனப் பாராட்டுகிறார். இக்கருத்திலே தோய்ந்த இறையரசன், 'மறையோர் இருக்கை' என்பதனை,

வியன்தமிழின் மறையறிந்தோர் வாழும் இல்லம்

எனக்கூறி, அன்றைய தமிழகத்தில் மறை என்பது தமிழ் நான்மறையையே குறிப்பதாய் இருந்தது எனப் புலப்படுத்துகிறார்.

மன்னன் மாட்சி

அரசு மாட்டு அன்றைய மக்கள் பெரிதும் அன்பு செலுத்தி வந்தனர். மங்கல நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை அரசனை வாழ்த்தி முடிப்பது அன்றைய வழக்கமாயிருந்தது. கோவலன் கண்ணகி திருமண நிறைவில் அரசவாழ்த்துப் பாடப்பட்டுள்ளது. அதேபோலக் கானல்வரி, வேட்டுவவரி, குன்றக்குரவை ஆகிய நிகழ்வுகள் அரசனை வாழ்த்தியே முடிவு பெறுகின்றன. கண்ணகியைக் கணவனுடன் பள்ளியறை சேர்க்கும் பாவையர், 'இமயத்திற்கு இப்பால் விளங்கும் சோழனின் புலிக்கொடி அதற்கு அப்பாலும் சென்று மேருமலையிலும் விளங்குவதாகுக! எங்குச் செல்லினும் எங்கள் வேந்தன் ஒப்பற்ற ஒருவனாய் விளங்குவானாக!' என்று வாழ்த்துகின்றனர் (சிலப். 64-68). இப்பகுதிக்கு உரை எழுதும் இறையரசன்,

மங்கலங்கள் எவ்விடமும் திகழு கின்ற
மாண்பொளிரும் பள்ளியறை ஏற்றி விட்டே
பொங்குதமிழ் மரபொட்டி நாட்டை, வேந்தைப்
பொருந்திடவே அதன்பின்னர் வாழ்த்து கின்றார் (ப. 61)

என அரசனை வாழ்த்தும் தமிழ் மரபை நன்கறிந்து உரை வகுத்துள்ளார்.

முன் சொல்லல்

மாதவி அரசன்முன் நாட்டியமாடியபோது ஒரு மாலையை அவன் பரிசளித்தான். மாதவியின் தாய் அம்மாலையை ஓர் கூனி கையில் கொடுத்து, 'இம் மாலையை விலைகொடுத்து வாங்குவோர் மாதவிக்கு மணமகனாகலாம்' என நகர இளைஞர் உலாவரும் பெருந்தெருவில் விற்கும்பாங்கில் நிறுத்தி வைத்தாள், எனச் சிலம்பு கூறுகிறது.

மாணமர் நோக்கிஓர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையில் நிறுத்த (3 : 166–68)

இங்கு மாதவியின் தாய் எனச் சொல்லப்பட்டுள்ளதே தவிர, அவள் பெயர் சொல்லப்படவில்லை. சிலப்பதிகாரம் முழுவதிலுமே மாதவியின் தாயின் பெயர் இல்லை; பின்னர்த் தோன்றிய மணிமேகலைக் காப்பியத்தில்தான் மாதவியின் தாய் சித்திராபதி எனச் சொல்லப்பட்டுள்ளது. இறையரசன் அப் பெயரை இங்கேயே கூறிவிடுகிறார்.

மாலை எய்துபவர் நம்முடைய மாதவிக்கே மணமகனாய் அமைவார் என்று,

கலைமான்போல் மருள்பார்வை கொண்ட சித்ரா (ப. 104)

மாலையைக் கூனிகையில் தந்தாள் என்கிறார்; மாதவியின் தாய் சித்திராபதி என முழுப்பெயராய்ச் சொல்லாமல் 'சித்ரா' என்று மட்டும் கூறுகிறார். பதியில்லாத அவளுக்குப் 'பதி'யைச் சேர்க்க வேண்டாமென விட்டுவிட்டார் போலும்.

அருஞ்சொற்பொருள் விளக்கம்

ஒவ்வொரு காதையின் இறுதியிலும் அருஞ்சொற்பொருள் தரப்பட்டுள்ளது. அப்பொருளுக்குத் தேவைப்படும் இடங்களி லெல்லாம் விளக்கமும் தந்துள்ளார்.

5 : 88 : மயிர்க்கண் முரசு : புலியுடன் போரிட்டு வென்ற ஆண் காளை இறந்தபின் அதன் மயிர் களையப்படாமல் அத்தோலாற் செய்த முரசு.

உரைப்பாவில் தேவைப்படுவனவற்றிற்கு அங்கங்கே பாவிலேயே விளக்கம் தந்துள்ளார். யாழின் வகை, குழலில் அமையும் துளை, குழல் செய்முறை என்பன போன்று பலவற்றிற்கு உரையில் விளக்கம் கிடைக்கின்றது. சான்றுக்கு ஒன்று : குழலில் இசை எழுப்புதற்கான விளக்கம்

ஒருதுளையின் இடைவெளியே மறுதுளைக்கு வேண்டும்
  ஊதுமிசை அடைத்தெழுப்ப,விரல் இரண்டோ வேண்டாம்.
பெருகிசைக்கோ, ஏழ்துளைக்கும் ஏழ்விரலே கொள்க!
  பெருக்குமிசை ஏழ்விரலும் பின்வருவ தாகும்!
பெருவிரலும், சிறுவிரலும் இடக்கையில் விடுத்துப்,
  பிறங்குநடு மூவிரலும் பயன்படுத்தல் வேண்டும்;
பெருவிரலை வலக்கையில் கழித்தே,நால் விரலும்
  பேறான எழுவிரலும் பயன்படுத்தல் வேண்டும். (பக். 90)

மூலத்தில் உள்ளவற்றிற்கு உள்ளவாறே சொல்லிவிட்டுச் செல்லாமல் எங்கெங்கு விளக்கம் தேவையோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட விளக்கங்களை அங்கங்கேயே தந்து செல்கிறார்.

இக்கால நிகழ்வு

உரையாசிரியர்கள், உரையெழுதுங்கால், தம் காலத்தில் நடப்பனவற்றை உரையில் பொருத்திக் காட்டுவதுண்டு. பின்னொருகால் இவற்றைப் படிக்கும்போது அச்செயல்கள் எப்போது நடைபெற்றன என்பதை அறிய இவை பயன்படும். இந்திரவிழா நடைபெற்றபோது, பூம்புகாரில் பூதம் இருந்த கோயிலின் பலிபீடத்தின் முன்னே சென்று, மறம்மிகு வீரர்கள், 'தம் வேந்தனின் ஆட்சி சிறக்க' என்று கூறி, தம் தலையைத் தம் கையாலேயே அரிந்து பலிபீடத்தில் வைத்தனராம்.

தம்முடைய கருந்தலையை,

வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு (5 85–6)

பலியிடுவார்கள் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வடிகட்கு உரையெழுதும் ஆசிரியர், இதன் இனிய உட்பொருளாய்,

தற்கொலைப் படைகள் தற்போ(து) உளபோல்
முற்படத் தம்தலை முனைந்து வெட்டி
நாடும் வேந்தும் நலங்கொள வென்றிடப்
பீடுடன் வாழ்த்திப் பெரும்பலி யாவர்

என இன்றைய தற்கொலைப் படையினரை இணைத்துக் காட்டுகிறார்.

வாழ்த்து

இறையரசன், கருவூர் மாவட்டம், சின்னதாராபுரத்தைச் (தாரை) சார்ந்தவர். அங்கு ஆடையகத் தொழில் செய்து வருகிறார். சங்க காலத்தில், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், கச்சிப்பேட்டு இளந் தச்சனார் என ஊராலும் தொழிலாலும் புலவர்கள் பெயர் பெற்றிருந்தனர். அவ்வகையில் இறையரசனை, *'தாரை அறுவை வாணிகன் இறையரசன்'* எனக் குறிப்பிடலாம்.

இடையிடையே உரைநடை விரவிவந்த பாட்டுடைய காப்பியத்தை இளங்கோவடிகள் அருளிச்செய்ய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் எனும் புலவர் கேட்டிருந்தார் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறும்.

உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள, மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன். (சிலப். பதி. 87–89)

நாமும், தாரை அறுவை வாணிகன் இறையரசன் அருள, சிலம்பும் பொருளும் எனும் இக் காப்பியத்தைப் படித்து மகிழ்கிறோம்.

புகார்க்காண்டத்தை மட்டும் வெளியிட்டுள்ள இறையரசன், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் ஆகியவற்றை விரைவில் வெளியிடுவதோடு, பண்டைய தமிழ் இலக்கியங்கள் பலவற்றிற்கும் பாவுரை தரவேண்டும் எனும் வேண்டுதலோடு அவருடைய புலமையை மதித்துப் போற்றுவோமாக!

இளங்கோவின் சிலப்பதிகாரக் காப்பியத்தை, இறையரசனின் கவிதையில் படிக்கின்ற இன்பத்தை அளிக்கிறது இந்நூல்!

வாழ்க இறையரசன்! வளர்க அவர்தம் தொண்டு!!

நூல் ஆக்கம்	பாவலர் இறையரசன்
வகைமை	பா உரை
வெளியீடு	மணிமேகலை பதிப்பகம், சின்னதாராபுரம், கரூர். (2004)

8

இந்திய மொழிக் கவிதைகள்

தமிழன்பன் ப. முத்துசாமி சிறந்த கவிஞர்; மரபுக் கவிதைகள் மலர வேண்டும் என்னும் மாறாத கொள்கையினர்; கவிதை வீச்சாலும், பொருள்நலச் சிறப்பாலும் தம் கவிதைகளைப் பொலிவுபெறச் செய்பவர். கம்பன் கூறுவதுபோல, "செவ்விய மதுரம் சேர்ந்த நல்பொருளின், சீரிய, கூரிய, தீஞ்சொல் வவ்விய" கவிஞர் இவர். ஆயிரக்கணக்கான கவிதைகளை இவர் எழுதியுள்ளார்; நூல்கள் பலவாய் அவை வெளிவந்துள்ளன; மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப்போல எப்போதும் கவிதை எழுதிக் கொண்டே இருப்பார்.

பிறமொழிப் பாடல்களை நூற்றுக்கணக்கில் தமிழில் பெயர்த்திருக்கும் தனிச் சிறப்புக்குரியவர் இவர். ஒரு மொழியில் உள்ள கவிதையை மற்றொரு மொழியில் பெயர்க்கும்போது, மூலத்தின் உயிரை முற்றிலுமாய்க் கொண்டுவந்துவிட முடியும் என்று சொல்ல இயலாது. தமிழன்பனோ முன்னரே ஆங்கிலப் படுத்தியுள்ள ஒரு மொழியின் கவிதையைத் தமிழில் பெயர்த்திருக்கிறார்; நேரடி மொழிபெயர்ப்பன்று. எனினும் அவருடைய மொழியின் நடையும், ஆளுமையும் பொருளை உணர்த்தும் நேர்த்தியும் மூலத்தின் உணர்ச்சியை முற்றிலும் உணரும் வகையில் மொழிபெயர்ப்பு அமைந்திருக்குமென எண்ணச் செய்கின்றன.

உலகெங்கும் ஏறத்தாழ 3000 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் இந்தியாவில் சற்றொப்ப 1600 மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றுள் பல, எழுத்து வடிவின்றிப் பேச்சுமொழி யாகவே உள்ளன. இந்திய அரசு 14 மொழிகளை அரசியல் மொழிகளாய் ஆட்சிமொழித் தகுதி படைத்த மொழிகளாய்க் கொண்டுள்ளது. சாகித்திய அகாதெமி இலக்கிய மொழிகளாய் 22 மொழிகளைக் கொண்டுள்ளது. அவற்றோடு போஜ்புரி, கொமெய்னி, கர்வால், துளுவம், மிசோ, கோக்பொராக் என்னும் மொழிகளையும் சேர்க்கக் கிடைக்கும் 27 மொழிப் பாடல்களைக்

கவிஞர் மொழிபெயர்த்திருக்கிறார். இந்திய மொழிகளில் இத்துணை மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்துள்ளவர் இவரன்றி வேறு எவருமிரார் எனக் கருதுகிறேன். எங்கு, எந்த மொழியில், நல்ல கவிதை தென்பட்டாலும் அதை உடனே தமிழில் கொண்டு வந்துவிடவேண்டும் எனும் தணியாத ஆர்வம் கொண்டவர் கவிஞர் முத்துசாமி.

இந்தியாவை தெற்கு, மேற்கு, வடமேற்கு, கிழக்கு, வடகிழக்கு, வடக்கு என ஆறு பகுதிகளாய்ப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் வழங்கி வரும் மொழிகளின் பாடல்களின் பெயர்ப்பு ஒரு தொகுதியாய் அமையுமாறு, ஆறு தொகுதிகளை வெளியிடுகிறார்.

தென்னிந்திய மொழிகள்

கவிதைகள் பெரும்பான்மை சாகித்திய அகாதெமியின் இரு திங்கள் இதழான Indian Literature மற்றும் Modern Indian Literature என்னும் தொகுப்பு நூல் ஆகியவற்றிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தென் இந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் என்னும் ஐந்து மொழிகளின் பாடல்கள் கொண்டதாய் ஒரு தொகுதி விளங்குகிறது. இவை திராவிட மொழிகள்; இம்மொழிகளுள் முக்கியமானதும், முதன்மை யானதும் தமிழ். தமிழே ஞால முதன்மொழி என நிறுவியுள்ளார் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

தமிழ்

மூவாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட இலக்கண இலக்கியங் களைத் தன்னகத்தே கொண்டது தமிழ். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை, சங்க இலக்கியங்கள்; அவற்றையடுத்து நீதி நூல்களும், காப்பியங்களும் தோன்றின. 9ஆம் நூற்றாண் டினை அடுத்துப் பக்தி இலக்கியங்கள் தோன்றின. தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் முதலியவை சிறந்து நின்றன. சேக்கிழாரின் பெரியபுராணமும் கச்சியப்பரின் கந்த புராணமும் எழுந்தன. 14ஆம் நூற்றாண்டிலிருந்து உலா, தூது, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கிய வகைகள் பல்கிப் பெருகின. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் பெருங் காப்பியங்கள் பல இயற்றினர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியாருடைய பாடல்கள், தமிழ் இலக்கிய நோக்கையும் போக்கையும் மாற்றின;

நாடு, மொழி, சமூகம் பற்றிய மக்கள் இலக்கியங்கள் மலர்ந்தன. அவர் காலத்திலேயே பாவேந்தர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை போன்றோர் மக்களுக்குப் புரியும் நடையில் எழுச்சி மிக்க பாடல்களைப் பாடினர். 1960களில் தோன்றிய புதுக் கவிதை, செல்வாக்குப் பெற்று, இன்று மிகச் சிறந்த நிலையில் உள்ளது. அப்துல் ரகுமான், தமிழன்பன், சிற்பி, மேத்தா என ஒரு பெருங்கூட்டமே இன்று புதுக்கவிதை உலகில் உலா வருகின்றது. ஜப்பானிய ஹைகூ, ஆங்கில நாட்டு சென்றியூ கவிதை வகைகளில் எழுதுவதிலும் இன்றைய கவிஞர்கள் முற்பட்டுள்ளனர்.

உலகின் மூத்த மொழியாகிய - முதன் மொழியாகிய தமிழில் சங்ககாலக் கவிஞர்கள் தொடங்கி, இன்றைய கவிஞர்கள்வரை பாடியுள்ள பாடல்களில் தம் நெஞ்சைத் தொட்ட சில பாடல்களைக் கவிஞர் தமிழன்பன் முத்துசாமி தெரிந்தெடுத்து ஒரு தொகுதியில் தந்துள்ளார்.

அரசன் வரி வசூலிக்க வேண்டிய முறை பற்றிப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் கூறிய பாட்டினைப் புறநானூற்றிலிருந்து எடுத்துத் தந்திருக்கிறார்.

பெண்கள், தம் மனம் விரும்பும் கணவனோடு ஒன்றி இல்லறம் நடத்தும்போது சிறப்பெய்துகின்றனர். அவர்கள் பிறந்த வீட்டில் வளர்ந்தாலும், புகுந்த வீட்டிலேயே பயன் எய்துகின்றனர் என்பதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ அழகிய உவமைகள் வாயிலாய்க் கலித்தொகையில் எடுத்துரைக்கிறார். சந்தனம் மலையிலே தோன்றினாலும், அதைப் பூசி மகிழ்பவர்க்கே மணத்தையும் குளிர்ச்சியையும் தருகிறது; முத்து, கடலிலே தோன்றினாலும், மாலையாய்க் கோத்து அணிபவர்க்கே அது பெருமையைத் தருகிறது. யாழ், அதனை மீட்டுபவர்க்கே இனிய இசையினைத் தருகிறது. அதுபோன்றே பெண்களும் எங்குச் சேர்கிறார்களோ அங்குத்தான் பயன்தருவர் எனும் கருத்தமைந்த கலித்தொகைப் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செயும் மனம் தருமாறு இறைவனை வேண்டும் இராமலிங்க அடிகளார் பாடல் நெஞ்சைத் தொடுகிறது.

'தமிழும் நானும் மெய்யாய் உடல் உயிர் கண்டீர்' எனப் பாரதிதாசன், தமிழே தமக்கு உயிர் என்கிறார்.

கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் "பொறுப்புள்ள மனிதர்களின் தூக்கத்தினால் பொன்னான வேலையெலாம்

தூங்குது; ஆகவே தூங்காதே தம்பி தூங்காதே" எனத் தட்டி யெழுப்புகின்ற பாடல் ஒலிக்கிறது. சிற்பி, காசிஆனந்தன் போன்ற இக்காலக் கவிஞர்களின் பாடல்களிலும் திருவாசகம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம் முதலிய பண்டைய இலக்கியப் பாடல்களிலும் நெஞ்சை அள்ளும் அடிகளை எடுத்துத் தந்துள்ளார்.

கங்கையினைக் காவிரியில் இணைக்கவும்
பொங்கும்வளம் தமிழகத்தில் புதுக்கவும்
சிங்கம்நிகர் தமிழறிஞர் சேர்ந்துதான்
திருவளர்க்கும் சட்டமின்று சரித்திரம்.

எனும் தன் பாடலையும் இணைத்து, கவிஞர், தமிழ்ப் பழக்கொத்தினை இனிக்க இனிக்கச் சுவைக்குமாறு இப் பகுதியில் தந்துள்ளார்.

தெலுங்கு

தென்னகத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றது முதல் பிராகிருதம் பழைய தமிழோடு மிகுதியாய்க் கலந்து தெலுங்கு எனும் தனிமொழி பிறந்தது. தெலுங்கு ஆயிரம் ஆண்டுக்கால இலக்கிய வரலாறுடையது. கி.பி.11ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னய்யரின் பாரத மொழிபெயர்ப்பு நூல்தான் முதன் முதலில் தெலுங்கில் உருவான சிறந்த இலக்கிய நூல். நன்னயரே, தெலுங்கின் ஆதிகவி என்று கருதப்படுகிறார்.

நன்னய்யா, திக்கனர், எர்ரனர் எனும் முப்பெருங் கவிஞர்களை, 'கவித்திரயம்' என்று கூறுவதுண்டு. நன்னய்யா பாரதத்தின் மூன்று பருவங்களை மட்டும் எழுதினார். மற்றப் பருவங்களை 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திக்கனரும், எர்ரனாவும் முடித்து வைத்தனர்.

13ஆம் நூற்றாண்டில் தோன்றிய சைவப் புலவர்களில் மிகச் சிறந்தவர் பால்குரிசி சோமநாதர். 'துவிபத' (ஈரடி) என்னும் யாப்பில் தமிழ், தெலுங்கு, கன்னட மாநிலங்களைச் சேர்ந்த சிவனடியார்களைப் பற்றி விளக்கமாய்க் கூறினார். அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி முதன் முதலாய்த் தெலுங்கு மக்களுக்குத் தெரியப்படுத்தியவர் சோமநாதரே!

15ஆம் நூற்றாண்டில் 'கவியரசு' எனும் விருதைப் பெற்ற ஸ்ரீநாதர் சிருங்கார நைசதம் (நைடதம்) போன்ற காப்பியங்களைப் படைத்தார். போதனர் என்பவர், 'மகா பாகவதம்' எழுதியுள்ளார். வடமொழியில் இராமாயண, பாரதங்களுக்கு இருக்கும் மதிப்பு

பாகவதத்துக்கு இல்லை. தெலுங்கில் பாகவதம் ஒரு சிறந்த நூலாய்க் கருதப்படுகிறது.

ஸ்ரீ கிருஷ்ண தேவராயரின் காலத்தில் பல பிரபந்தங்கள் தோன்றின. கிருஷ்ண தேவராயரின் தாய்மொழி கன்னடம். அவர் தெலுங்கில் ஆண்டாள் கதையை, 'ஆமுக்த மால்யத' எனும் காப்பியமாக்கினார். அவருடைய அவையை எட்டுப் பெரும்புலவர்கள் அலங்கரித்தனர்.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் தோன்றிய வேமன்னாவைத் தெரியாத தெலுங்கர் இரார்; நூற்றுக்கணக்கான செய்யுள்கள் படைத்த இவர் சமுதாயத்தில் காணப்பட்ட தீய ஒழுகலாறுகளை வன்மையாய்க் கண்டித்தார்.

புத்திலக்கியத்தின் தந்தையாய்க் கந்துகூலி வீரேசலிங்கம் (1848-1919) கருதப்படுகிறார். இவர் புலவர், நாடக ஆசிரியர், புதின ஆசிரியர். இவருடைய 'இராசசேகர சரித்திரம்' முதன்முதலில் தெலுங்கில் தோன்றிய புதினம்.

குருசாட அப்பாராவ் (1886-1950) புதுயுகம் தோற்றுவித்த கவிஞர்; தேசபக்தி எனும் தன் பாடலில், 'நாடென்றால் மண்ணல்ல, மனிதர்கள்' எனக் கூறியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் கவிதையுலகில் ஒரு புரட்சி ஏற்பட்டது. மரபுக் கவிதை எழுதுவோர்க்கு எதிராக, 'பாவ கவுலு' (Romanticists) கவிதைகள் படைத்தனர். இன்று திகம்பரக் கவிஞர்கள், புரட்சிக் கவிஞர்கள் முதலியோர் புதிய கவிதைகளைப் படைத்து வருகின்றனர். தற்போது உரைநடைக் கவிதை (Free verse) மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ளது. துணுக்குக் கவிதைகளும் இடம் பெற்று வருகின்றன. எனினும் மரபுக் கவிதைகளும் எழுதப்பட்டு வருகின்றன. விசுவநாத சத்திய நாராயணா எழுதிய, 'இராமாயண கல்ப விருட்சம்' ஞானபீடம் விருது பெற்றுள்ளது.

தெலுங்குப் பெண் கவிஞர்களுள் தலையாயவர் தரிகொண்ட வெங்கமாம்ப (1840) என்பவர்; இவர் இலக்கிய வகைகள் அனைத்தையும் எழுதியுள்ளார். இவர் ஒரு ஞானியுமாவார்.

இக்காலப் பெண் கவிஞர்களுள் சிறந்த ஒருவராய் ஆதிலட்சுமி என்பவர் குறிப்பிடப்படுகிறார்.

சுப்பாராவ், குருசாட, தேவுலபல்லி, கிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீஸ்ரீ போன்ற கவிஞர்கள் பலருடைய படைப்புகள் இன்று கவியுலகில் செல்வாக்குப் பெற்று நிலவுகின்றன.

'அச்ச தெனுகு' இலக்கியம் என்பது தூய தெலுங்கில் இயற்றப்படுவதாகும். இதில் சமஸ்கிருதச் சொல் ஒன்றுகூட இராது.

தெலுங்கிலுள்ள கருத்தமைந்த, எழுச்சி மிக்க சில கவிதைகளை முத்துசாமி மொழிபெயர்த்துள்ளார்.

எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதுவதில் என்ன பலன்? புதுப்புதுச் செய்திகளைப் படைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார், தெலுங்குக் கவிஞர் ஸ்ரீஸ்ரீ

மன்னுநற் கவிதை அஃதே
மனத்தினில் நினைக்கின் றேன்யான்
இன்னொருத் தரைப்போல் செப்ப
தேவையும் பயனும் இல்லை.

திருவள்ளுவர் மற்றவர்களைக் குற்றங் காணுவோர், முதலில் தன் குற்றங்களை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பார்.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

என்பது குறள். தெலுங்கு வேமன்னாவும் இதே கருத்தைப் பகர்கிறார்.

மற்றவர் மீதில் குற்றம் சுமத்திச்
சட்டென விரலைச் சுட்டிக் காட்டுவோர்
தம்முடைச் சொந்தத் தவறுகள் தம்மை
அம்மவோ மனத்தில் அறியாது போனார்'

என்பது அவர் பாடல்.

நாடென் பதுஓர் பெருமரம் போன்றது
அன்பெனும் மலர்களால் மலர்ந்திட வேண்டும்

என அன்பின் பெருமையைப் பகர்கிறார் குருசாட அப்பாராவ்.

முயற்சிதான் எதனையும் தீர்மானிக்கிறது. 'முயற்சி திருவினையாக்கும்'.

ஏரியின் கண்ணே
எறிந்து வீசிய கல்லொன்று தானே
ஏரியின் முடிவாம் ஓரம் வரைக்கும்
வட்டச் சுழிகளின் அலைகளை வீசும்.

கல் எறியப்படாவிட்டால் வட்டச் சுழி, அலை ஏது? ஆகவே முயற்சி செய்; செயல் விரிவடைந்து போகும் என்கிறார் பொம்மராசு கோபால கிருஷ்ணன்.

---

1. Those always engaged in pointing fingers at others are not conscious of their very own erors.

பெண்கள் என்றதும் அறிவியல் மேடம் கியூரியையோ, ஆங்கிலேயரை எதிர்த்த இராணி லக்ஷ்மிபாயையோ, வேந்தனிடம் வழக்காடிய கண்ணகியையோ, பசிப்பிணி தீர்த்த மணிமேகலையையோ நினைப்பதில்லை. வெறும் விளம்பரப் பொருள்களாகவே பெண்கள் கருதப்படும் நிலை வளர்ந்துவிட்டதுவே என வேதனைப்படுகிறார் டி. மாதரப்பு ஹிமாரதி.

> பெண்ணென் பவள்தான் பாலுணர் வதனின்
> காம வெறியின் தீவினை அடையாளம்;
> காவியக் காரரும் ஓவியப் பாணரும்,
> தேவியின் உடம்பைத் தீண்டித் தீண்டி,
> அழகுற வருணனை ஆக்கியே மகிழ்வர்;
> வெள்ளித் திரைக்கும் விளம்பர உலகுக்கும்
> பெண்ணுடம் பேதான் முதலீ டானது.

வேள்வி செய்த சூத்திரன் சம்புகனை ஆரிய இராமன் கொன்றான்; இதற்கென இராமர்கள் தண்டிக்கவேபடுவர்; ஒருகுலத்துக்கு ஒருநீதி பேசிய மனுவும் அழித்தொழிக்கப்படுவான்; இதுதான் இனி வரும் வரலாறாய் இருக்க முடியும் என வீரமுழக்கமிடுகிறார் கவிஞர் சிவசாகர்.

> சம்பூகன் தன்னிதழ்ப் புன்முறு வலுடன்
> இராமனைக் கொலைசெய்து தண்டனை கொடுக்கிறான்;
> ஏகலை வன்தான் துரோணரின் பெருவிரல்
> கோடரி கொண்டு வெட்டித் தறிக்கிறான்;
> மாவலி தனது சிற்றடி கொண்டே
> வாமனன் தன்னைக் கீழுலக் குக்கே
> மிதித்தே அழுத்தி அனுப்பிடு கின்றான்.
>
> மனுவின் கண்களில் ஊசிகள் ஏற்றி
> அவனின் நாக்கும் அறுபட்டுப் போக,
> அவன்செவி உருக்கிய ஈயத்தைப் பாய்ச்சி
> இடுகாட்டில் தானே உருண்டுகொண் டுள்ளான்.

ஆரியச் சூழ்ச்சியால், மனுவின் நீதியால் அழிக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் சம்பூகர்கள், ஏகலைவர்கள், மாவலிகள் - விழிப்புற்றுவிட்டனர். தங்கட்குப் பழி இழைத்தவர்களைப் பழிக்குப் பழி வாங்கப்போகின்றனர். இதுதான் இனி வரும் வரலாறு.

கன்னடம்

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுமுதல் பழைய கன்னடத்தில் அமைந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலக்கிய வரலாறு தோன்றுகிறது. இந்நூற்றாண்டில் தோன்றிய கவிராச மார்க்கம் கன்னடத்தில்

கிடைக்கப்பெறும் முதல் இலக்கிய நூலாய்த் திகழ்கிறது. இதனை 'நிர்பதுங்கா' என்பவர் எழுதினார் என்பர். அக்கவிஞர் ஸ்ரீ விஜயாவாக இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. கன்னட இலக்கியத்தில் கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டுகளைப் பொற்காலம் எனக் கூறலாம். இக்காலத்தில் தோன்றிய இரு மகா கவிஞர்கள் பம்பா (Pampa)வும் இரன்னா (Rana)வும் ஆகும்.

மேற்குலகத் தொடர்பு ஏற்பட்ட பின்னரே குறும்பாக்கள், ஈரேழ் வரிப்பாக்கள் (Sonnets) போன்றவை முகிழ்க்கத் தொடங்கின.

எதனாலே தம்முள் கவிதை எழுகிறது என்பதை ஜி.எஸ். சி. ருத்திரப்பா என்பவர் குறிப்பிடுகிறார்:

எழுதுகின் றேன்யான் எழுதுகின் றேனே
    மகிழ்வி னாலும் வலிதுய ராலும்
சினத்தி னாலும் வெறியுணர் வாலும்
    அணைத்திட முடியாத் தீயெரி யாலும்
எழுதுகின் றேன்யான் எழுதுகின் றேனே.

உள்ளத்து உணர்வுகளே கவிதைகளாய் வெளிப்படுவதாய் அவர் கூறுகிறார்.

விலைமகள் ஒருத்தி. நடத்தை கேவலமானதுதான்; என்றாலும் அத்தொழிலில் நேர்மையிலிருந்து சிறிதும் பிறழேன் என்கிறாள். அவள் நடத்தையை வெறுத்தாலும் அவள் நேர்மையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. சுலே சங்கவுவா எனும் கவிஞர் விலைமகள் ஒருத்தி கூற்றாய் இப்பாடலை எழுதியுள்ளார். அவள் கூறுவது என்ன?

நான்செயும் வாணிகம் விலைமகள் தொழிலில்
    நயந்தொரு மனிதனின் பணத்தைத்
தான்தரக் கொண்டு சற்றுநே ரத்தில்
    சால்பின்றி இன்னொரு மனிதன்
வான்செல்வம் தன்னை ஏற்றுக் கொண்டிடவே
    வலிந்துநான் துணிந்திட மாட்டேன்.
அப்படி யானும் செய்திடின் என்னை
    அம்மண மாகவே நிறுத்தி
நைப்புற அடித்து நயமின்றி இகழ்ந்து
    நானிலத் தார்எனைக் கொல்க.[1]

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்
In my harlots trade
    having taken one man's money
I darenot accept a second man's sir
    And if I do
they'll stand me naked and
    kill me sir.
- Sale Sankavva (12th Century)

பரத்தையாரின் இவ்வியல்பைத் தமிழ்க் காப்பியமாகிய பெருங்கதையிலும் காணமுடிகிறது. "பொருள் தந்து தம்மை நாடிவந்தவர்கள் அரசர்களானாலும், ஆண்டிகளானாலும், பள்ளியறையில் பரத்தையார் அவர்களிடம் வேறுபாடு காட்டாது ஒன்றுபோல நடந்தனர். சமுதாயத்தில் உயர்வாய் இருந்தவர்களை ஒரு வகையாயும் தாழ்வாய் இருந்தவர்களை வேறுவகையாயும் அவர்கள் நடத்தியதில்லை. பள்ளியறைப் பணியில் ஓரவஞ்சனை அவர்கள் உள்ளத்தில் இருந்ததில்லை.

அரசர்க்கு ஆயினும் அடியார்க்கு ஆயினும்
அன்றை வைகல் சென்றோர்ப் பேணி
பள்ளி மருங்கில் படிறின்று ஒழுகும்
செல்வ மகளிர் சேரி

எனப் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள் கூறியிருக்கக் காண்கிறோம்.

மலையாளம்

தென்னிந்தியாவில் மேற்குக் கரையோர நாட்டில் 'கொடுந்தமிழ்' வழக்கிலிருந்து வந்தது. கொடுந்தமிழின் ஒரு வகையான நிலையிலிருந்தே மலையாளம் தோன்றிற்றென்பது பலருடைய கருத்து. கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இம் மாற்றம் தோன்றியதெனலாம். கி.பி.9ஆம் நூற்றாண்டில் சாஸ்தா பாட்டு, ஓணப் பாட்டு, திருவாதிரைப் பாட்டு போன்ற பாடல் வகைகள் தோன்றின. பெரும்பாலும் இவை தமிழ்ப் பாடல்களாகவே உள்ளன. புது மொழியின் கூறுகள் தென்படுகின்றன. ஏறத்தாழ 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'இராமசரிதமே' மலையாளத்தில் தனிப்பட்ட முதல் இலக்கிய நூல் எனலாம்.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய எழுத்தச்சனே நவீன மலையாள மொழிக்கு உருக்கொடுத்தவர் ஆவர். இவர் வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாய்க் கொண்டு அத்யாத்ம இராமாயணத்தையும் வியாசபாரதத்தை அடிப்படையாய்க் கொண்டு பாரதத்தையும் மலையாளத்தில் பாடினார். கிளிப்பாட்டு எனும் புதிய இலக்கிய வகைக்கும் தோற்றுவாய் செய்தார்.

துள்ளல் இலக்கிய வகையின் தந்தையாய்க் கருதப்படுபவர் குஞ்சன் நம்பியார். 18ஆம் நூற்றாண்டில் நிலவுடைமையாளர்களின் வீழ்ச்சியையும் சமூகத்தில் நிலவிய அமைதியின்மையையும் துள்ளல் நடையில் பாடினார்.

இவர் காலத்தையொட்டிய இராமபுரத்து வாரியார், வஞ்சிப் பாட்டு வகையில், 'குசேல விருத்தம் வஞ்சிப் பாட்டு' பாடினார்.

1930ஐ ஒட்டிய காலகட்டத்தில் இடமன்ன இராகவன் பிள்ளை, சங்கம்புழ ஆகிய இருவரும் கவிஞர்களின் தனிப்பட்ட பட்டறிவுகட்கு முதன்மையிடம் தந்து கவிதைகள் எழுதினர்.

ஜி. சங்கர குருப் உருவகக் கவிதைகள் எழுதினார். இவருடைய 'ஓடக்குழல்' எனும் கவிதைத் தொகுப்பு ஞானபீடப் பரிசு பெற்றது.

20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடப்பியல் கவிதைகள் மிகுதியும் இயற்றப்பெற்றன. உலகப் போரின் காரணமாய் மனித இனம் பட்ட துன்பம் இதற்குக் காரணமாய் இருக்கலாம்.

புதிய போக்கினைப் புலப்படுத்திக் காட்டுபவர்களில் அய்யப்ப பணிக்கர், கடமனெட்ட, சச்சிதானந்தன், சி.குமாரப் பிள்ளை, மாதவன் அய்யப்பத்து, பாலச்சந்திரன் சுள்ளிக்காடு போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

தன்னுரிமை என்பதற்கு அருமையான விளக்கம் தந்திருக்கிறார், கவிஞர் பாலகிருஷ்ணன் சுள்ளிக்காடு.

விதைக்கின்ற மனிதன் அறுவடை செய்யும்
வெற்றியாம் தானியம் அவனுக்குச் சுதந்திரம்;
நெற்றியின் வேர்வை சிந்தவே உழைக்கும்
பற்றுடை ஒருவர்க்(கு) உணவே சுதந்திரம்;
சட்டையைத் தைக்கும் தையல் காரன்
தானுமோர் சட்டை அணிந்திடல் சுதந்திரம்;

அறியா தவனுக்கு அறிவே சுதந்திரம்;
அறிவுள்ள வனுக்குச் செயலே சுதந்திரம்;
செயல்படும் மனிதனுக்குத் தன்னலந் துறந்த
தியாகம் தானே சுதந்திர மாகும்;
தியாகம் செய்யத் துணிந்த மறவர்க்குத்
தன்னுயிர் விடலே சுதந்திரம்.

தையல் செய்யும் ஒருவன் ஆடைகள் தைக்காதிருப்பானேல் தன்னுடைய இலட்சியத்தைத் தானே இழந்தவன் ஆகிறான். செய்ய வேண்டிய தொழிலைச் செய்யாதிருப்பது, தன்னுரிமை இழந்ததாகும். தைக்கின்ற ஊசிக்கு அதன் முனையில்தான் தன்னுரிமை உள்ளது. தன்னுரிமை என்பதன் உண்மையான பொருளைக் கவிஞர் இங்கே நன்கு விளக்கியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அரசு பல சலுகைகள் தருவதாய் அறிவிக்கிறது. அறிவிப்போடு சரி;

அதனால் உரியவர் பலன் பெறுகின்றனரா எனில், இல்லை என்பதே உண்மை நிலை. நாட்டு விடுதலைக்கு உழைத்த ஒருவர் பற்றிய கவிதை ஒன்று.

அன்றுநீ அந்நியராம் ஆட்சி யோரின்
அஞ்சுதரும் சிறையினிலே உண்டு தூங்கிக்
குன்றாமல் இருந்திட்டாய்; ஆனால் இன்று
குன்றிப்போய், பேருந்து நிலையம் 'தன்னில்
நின்றிருப்பாய்; யாரேனும் நல்ல நண்பன்
நேர்ந்துவிடின் ஒருவேளை உணவு கொள்வாய்;
இன்றந்நாள் அத்தகைய இனிய நண்பன்
எவரேனும் காணல்மிக அரிது கண்டேன்.

விடுதலை பெற்றுத் தந்தவர்க்கு ஒருவேளை உணவு தரக்கூட எண்ணம் இல்லாதவராய் விட்டனர், அவர்கள் தியாகத்தால் வாழ்வு பெற்றவர்கள். அரசாங்கத்திற்கோ அவர்கள் சிறையிலிருந்ததற்கான அத்தாட்சி இல்லையாம்! அதனால் உதவி இல்லையாம்! தியாகியினுடைய உருக்குலைந்த உடம்பை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

துளுவம்

துளுவம் திராவிட மொழிகளுள் ஒன்று; பழமையான மொழி. தென் கன்னடத்தில் 'துளு' என ஒரு பகுதி உள்ளது. நீண்ட காலம் இது மன்னராட்சியில் இருந்ததால், கன்னடமே அரசாங்க மொழியாய் இருந்து வந்தது. ஆயினும் மக்கள் பேசும் மொழி துளுவாகவே இருந்தது.

துளுவம் மிகுந்த சொல்வளம் உடையது. நாடோடிப் பாடல்களும் கதைகளும் இதில் ஏராளமாய் உள்ளன. ஆனால் இம் மொழிக்கு எழுத்து உண்டாகவில்லையாதலால் இலக்கியத்தில் பெரும் பகுதி மறைந்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டில் மலையாள எழுத்துகள் பயன்படுத்தி எழுதப்பட்டது. 1842இல் பாசெல் மிசன் அச்சகத்தார் (Basel Mission Press) கன்னட எழுத்தைப் பயன்படுத்தியதுமுதல் இவ்வெழுத்தே பயன்பட்டு வருகிறது. இதன்மூலம் இக்காலக் கல்வி கற்ற துளுவர்கள் இலக்கியம் படைத்து வருகின்றனர்.

'துளு' என்னும் சொல்லின் பொருள் விளங்கவில்லை. இனிமை அல்லது மென்மை எனப் பொருள்படும் என்கின்றனர். அப்பகுதியில் உள்ளவர் இனிமையும் மென்மையும் உடைய பலாப்பழ வகையைத் துளுவம் பழம் என்றும், கடினமான வகைப் பழத்தைப் பரிக்காய் (Barikka) என்றும் இன்றும்

கூறுகின்றனர். பழங் கன்னடச் சொல்லான 'துளில்' வீரம் எனப் பொருள்படும். அதுகொண்டு, 'வீரம்' எனும் பொருளில் 'துளு' பிறந்திருக்கலாம் என்பர் சிலர்.

துளுவச் சொற்களை ஆராய்ந்தால் தமிழ்ச் சொற்களுக்கும், அவற்றிற்கும் நெருங்கிய உறவு இருப்பது புலப்படும்.

துளுவர்களுடைய நாடோடிப் பாடல்கள் இயற்கைக் காட்சிகளின் வருணனைகள் நிறைந்தவை. அவர்களுடைய பழமொழிகளில் இயற்கையைப் பற்றிய மெய்ம்மைகள் நிரம்ப உள்ளன.

அமிர்த சோமேஸ்வரர் என்பார் சரவண பெல கொலாவில் ஆயிரம் ஆண்டுப் பழமை கொண்டதும் ஒரே கல்லாலானதுமான கோமதீஸ்வரரின் சிலையின் முகத்தில் ஒளிரும் தெய்விக அமைதியான புன்சிரிப்பினைத் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

உலகில் பொருள்கள் அனைத்தையும் துறந்து
    மலையுச் சியினில் தனித்(து)உடை யின்றி
நிற்கிறாய்! ஓஓ நிருவாண அழகா!
    உள்ளூறும் ஆனந்த உவகையில் தொலைந்தே
உளத்தொளிர் தெய்விக ஒங்குயர் முறுவல்
    சூழும் ஆயிரவர் பாவத்தைத் துடைக்கும்;
எனதுநல் வணக்கம் உனக்குரித் தாகுக
    ஆயிரம் ஆண்டின் தெய்விகக் குழந்தாய்![1]

'உன் முறுவலைக் கண்டு என் கண்களைத் தூய்மை செய்து கொள்கிறேன். ஆனாலும் காலங்கடந்து நிற்கும் தியாகத்தை அடைவது எவ்வாறு? உன் இதயத்தூய இயல்பை நான் மனத்துள் பதிப்பதெவ்வாறு? என அத் துறவியின் - சமணசமயத் தலைவரின் - சிலையைப் பார்த்ததும் அமைதி நிறைந்த உலகம் வேண்டுமெனும் ஆழ்மனத்துடன் இக்கவிதையை எழுதியுள்ளார், கவிஞர்.

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்

Renouncing all worldly things
    You stand bare and alone on the hilltop
O graceful nudity
    Lost in inner bliss,
    your radiant divine smile
    lessens the sins of thousands around
    my sallutations to thee
O thousand year old Divine Child. - Amirth Sameshwar (born 1935)

மேற்கு இந்திய மொழிகள்

மராத்தி, குஜராத்தி, கொங்கணி ஆகிய மேற்கு இந்திய மொழிப் பாடல்களின் தமிழ்ப்பெயர்ப்பு ஒரு தொகுப்பாய் வெளிவந்துள்ளது.

மராத்தி மொழி

மராத்தி மொழி 6 அல்லது 7ஆம் நூற்றாண்டில் தோன்றியது. எனினும் மராத்திய அறிஞர்கள் நீண்டகாலமாய்ச் சமஸ்கிருத மொழியிலேயே எழுதி வந்தனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டில்தான் இலக்கிய மொழியாய்க் கருதப்படும் நிலை மராத்திக்கு ஏற்பட்டது. இக்காலத்தைச் சார்ந்து மகாதைசா என்னும் முதல் பெண் கவிஞர் 'ருக்மணி சுயம்வரம்' எனும் நூலைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்-பாடினார். 'விவேக சிந்து' எனும் நூல் கி.பி. 1188இல் எழுதப்பெற்ற புகழ்மிக்க மராத்தி நூலாகும். நாமதேவர் இயற்றிய பக்திப் பாடல்கள் இந்தியா முழுவதிலும் பரவியுள்ளன.

17ஆம் நூற்றாண்டில் சிவாஜி தனியாட்சி அமைத்ததும் அதுவரை ஆட்சிமொழியாய் இருந்த பாரசீகத்திற்குப் பதிலாய் மராத்தியை அந்நிலைக்கு உயர்த்தினார். அக்காலத்தில் வீரர்களைப் பற்றிய பாடல்கள் மிகுதியாய் எழுந்தன. அவை 'பொவாடா' என்றும் 'லாவணி' என்றும் பெயர் பெற்றன. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிருஷ்ண தாயார் நவ, ஸ்ரீதரர் என இரு பெருங் கவிஞர்கள் தோன்றினர். ஸ்ரீதரர் இயற்றிய 'சிவலீலாமிருதம்', மராட்டியப் பெண்கள் நாள்தோறும் ஓதும் வழிபாட்டு நூலாகும். 19ஆம் நூற்றாண்டில் கோல்கட்கர் நகைச்சுவை ததும்பும் புதினங்களை எழுதினார்.

இருபதாம் நூற்றாண்டில் பாட்கே, ·தேஷ்பான்டே, காண்டேகர் போன்றவர் சிறந்த புதின ஆசிரியர்களாய் விளங்கினர். கீர்த்திக்கர், குன்தே இவர்கள் ஆங்கிலக் கவிதை வகைகள் பலவற்றை மராத்தியில் கொண்டு வந்தனர்.

சஞ்சீவணி மராட்டே, பத்மா, இந்திரா சந்த் ஆகியோர் சிறந்த பெண் கவிஞர்கள் ஆவர்.

பெண்கள் ஆண்களோடு சமம் என்பது பேச்சளவில் உள்ளதே தவிர இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. பெண்கள் பருவமடைந்ததும் தனித்து விடப்படுவதில்லை; வீட்டுக்குள்ளேயே சிறை வைத்துவிடுகிறார்கள். பெண்களின்,

> ஊஞ்சலாட் டங்களும் இளமை விளையாட்டும்
> பின்கட்டுக் குத்தான் தள்ளப்பட் டனவே

என்று கூறுவதோடு, பருவமடைந்து மலர்ச்சி அடைந்த கணத்தில் அவர்கள் முடக்கப்பட்டு முடிக்கப்படுகிறார்கள் என்ற உண்மை நிலையைக் கூறிப் பெண் விடுதலை என்பது உண்மையில் இல்லை என்பதைப் புலப்படுத்துகிறார், நீராறா எனும் கவிஞர்.

மனிதன் தன்னலம் மிக்கவன் என்பதை நயமான முறையில் விளக்குகிறார், கவிஞர் ஒருவர். மனிதன் தலையை ஆட்டுவான்; நாய் வாலை ஆட்டும். செயல் 'ஆட்டுதல்' என்ற ஒன்றேதான். ஆனால் இரண்டு 'ஆட்டுதலுக்கும்' இடையே எவ்வளவு வேறுபாடு?

தன்னலக் காரணத் திற்காக
  மனிதன் தலையை அசைக்கிறான்;
நன்றியைக் காட்டுதற் காகவே
  நாய்கள் வாலை ஆட்டிடும்.

இவன் தான் மனிதன் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

ஏழ்மையாளர் துயரினைச் சுருக்கென நெஞ்சில் தைக்குமாறு கூறியுள்ளார், சதீஷ் கலேஷ்கர். ஓயாத மழை; கூரை ஒழுகுகிறது; சுவரில் விரிசல் ஏற்படுகிறது.

கூரை ஒழுகும் என்றால்
  பானை ஒன்(று) அடியில் வை;
சுவரிலே பிதிர்வி ழுந்தால்
  வண்ணத்தாள் ஒட்டி வைப்பாய்.

பானையையும், வண்ணத்தாளையும் தவிர ஏழைக்குதவ வேறு யார் இருக்கின்றனர்?

குசு மகாராஜா என்பார் பண்பாட்டுக்குத் தந்திருக்கும் வரையறை போற்றத் தக்கதாயுள்ளது.

முடிவாகச் சொன்னால் பண்பா டென்பது
எல்லையற் றதனை எல்லையிட் டளக்கும்
மனத்தின் வலிமை எனவுரைத் திடலாம்.

முளைத்து வரும் விதையிலேயே பக்தியை விளங்க வைக்கிறார், பசீன பாய் சௌதுரி. விதை முளைக்கும்போது பருப்பு இலைகள் இரண்டு தரையைப் பிளந்து தலைதூக்கும். அவை இரண்டும் ஒன்றோடொன்று இறுகச் சேர்ந்திருக்கும். அவை விரிந்தபிறகே தளிர் தோன்றும். இறைவனை விதையிலைகள்போலக் குவித்து வணங்கினால்தான் பக்தி எனும் தளிர்தோன்றி இலைகளாய் விரிந்து வளரும்.

கடவுளைப் போற்றிப் புகழ்ந்துதான்
கைகளை இவைகள் குவித்தன.

தொடங்கும்போதே இறைவணக்கத்தோடு தொடங்குகிறது விதை முளைப்பு.

பண்பாட்டுக்கு வரையறை தந்த குசு மகாராஜ் 1938ஆம் ஆண்டு டம்டம் சிறையில் சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்ட அரசியல் கைதிகள் நெஞ்சில் நிறைந்திருந்த விடுதலை உணர்வை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். 'எத்துணை துன்பம் நேர்ந்தாலும் அவை எமக்குத் தூசு; தாயே நீ வென்றிடு; இதோ முன்கூட்டியே எங்கள் வாழ்த்துகள்' என்கின்றனர் அச்சிறைத் தியாகிகள்.

சாவினை வென்றிடும் சான்றோர்கள் நாங்களே!
தாழ்வுடைச் சிறைஎன்பது) எங்கட்குத் தூசியாம்;
மேவுறும் புரட்சியின் தேவதாய் வாழ்கநீ,
வென்றிடும் தேவியே, வாழ்கநீ வாழ்கவே.

"அப்பா, நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும், ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்" என நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து இறைவனை வேண்டினார் நம் நாட்டு வள்ளலார் இராமலிங்க அடிகள். அடிகளார் இறைவனிடம் வேண்டியதுபோலவே மராட்டியக் கவிஞர் அசோக் பாகவே ஆண்டவனிடம் வேண்டுவதை அவரது பாடல் புலப்படுத்துகிறது.

துயர்ப்படும் எல்லா உயிர்வகை களுக்கும்
கருணையோ(டு) அன்பு காட்டிடவும்,
நயத்தகும் சான்றோர் நல்லவர்க்(கு) என்றும்
நலமொடு மகிழ்ச்சிநல் கிடவும்,
அயலவர் பகைவர் நண்பரென்(று) யார்க்கும்
ஒருநிலை யாய்நடந் திடவும்,
இயல்பினால் என்றன் மனத்தினைச் செம்மை
செய்தருள்(க) என்னுடை இறைவா!

துன்பத்தில் சிக்கித் தவிக்கும்போது, போலியாய் இரக்கம் காட்டுவதில் பயனில்லை. துன்பத்துக்கு ஆளானவர்களைப் பிச்சைக்காரர்போல நினைத்து விடாமல், அத்துன்பத்தைத் துடைப்பதற்கு உதவுவதே உண்மையான உதவி என்பதை ஒரு நிகழ்ச்சி வாயிலாய்க் காட்டுகிறார், மராட்டியக் கவிஞர் ஒருவர். பாதிக்கப்பட்டவர்களின் கண்களில் கண்ணீர்த்துளிகளை மட்டும் விட்டுவிட்டு மற்றெல்லாவற்றையும் வாரிச் சென்றுவிட்டது நதிப்பெருக்கு.

எங்களின் கண்களில் சிலகண்ணீர்த் துளிகளை
அருள்போல் நதிதான் விட்டுச் சென்றதுவே.

துன்பத்துக்காளனவர் தோளோடு தோள் நின்று இடிபாடுகளை அகற்றிக் கொண்டும் சுவர்களை எழுப்பிக் கொண்டும் பணி புரிந்து கொண்டுள்ளனர். அங்கே ஒருவருடைய கை, சட்டைப் பைக்குள் சென்றது பணம் கொடுக்கப் போகிறாராம்! வேலை செய்துகொண்டிருந்தவர்களில் ஒருவன் சிரித்துக் கொண்டே சொன்னான்:

பணம்வேண்டாம் ஐயா பணம்ஏதும் வேண்டாம்;
தனிமை தானெனை வாட்டிடு கின்றது;
வீடுதான் பழுதாய்ப் போய்விட்ட போதும்,
முதுகெலும் பேதும் பழுதாக வில்லை;
முதுகைச் சிறிதே தட்டிக் கொடுத்துநீர்
மேலும் தொடர்ந்து போரிடு(க) என்றே
ஊக்குவித் தால்அது போதும்என் றிட்டான்.

'சுனாமி' பேரழிவின்போது, இந்தியா உலக நாடுகளிடம் பணம் ஏதும் கையேந்திக் கேட்கவில்லை. 'எங்கள் முதுகுத்தண்டு இன்னும் பழுதாகவில்லை. உங்கள் ஊக்கவுரைகள் போதும்' என்று சொன்னதை இக்கவிதையோடு சேர்த்து எண்ணிப் பார்த்தால் நம் முதுகுத் தண்டின் வலிமை நமக்குப் புரிந்திருக்கிறது என்பதை உணர்வோம்.

குஜராத்தி

குஜராத்தி இந்தோ-ஆசிய மொழி. பிராகிருத மொழியிலிருந்து குஜராத்தி, மகராஷ்டிரம் முதலிய மொழிகள் உண்டாயின என்பர். 10ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை பழைய குஜராத்திக் காலம் என்றும், 15ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டுவரை மத்திய குஜராத்திக் காலம் என்றும், அதன்பின்னர் குஜராத்தியின் புதுக்காலம் என்றும் கூறுவர்.

சாலிபத்திரரின், 'பாரதி பாகுபலி ராசா' எனும் சமய வரலாற்று நூல் கி.பி.1185இல் இயற்றப்பட்டது. இதுவே இம்மொழியின் பழைய இலக்கியமாகும். வசந்தத்தின் வருகையையும் காதலர்களின் உணர்வுகளையும் சித்திரிக்கும் இலக்கியங்களே பழைய குஜராத்தி மொழியில் எழுதப்பெற்றன. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பக்த சிரோமணி நரசிங்க மேத்தாவே குஜராத்தியில் முதன் முதலில் காவியம் எழுதியவர். காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான, 'வைஷ்ணவ ஜனதோ' என்னும் பாடலை எழுதியவர் இவரே. ஏறத்தாழ இவர் காலத்தில்

தோன்றிய மீராபாய் பாடிய 250 பஜனைப் பாடல்கள் கிடைத்துள்ளன.

புலவர்கள், மிகவும் புரட்சிகரமான கருத்துகளை உள்ளடக்கிய பாடல்களை இக்கால குஜராத்தில் பாடி வருகின்றனர்.

'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' எழுதியவன் மனு. பார்ப்பனனுக்கு ஒரு நீதி; பஞ்சமர்க்கு ஒரு நீதி என்றெழுதிய அறக்கொலையாளன் அவன்.

மனுநீதி அறமானது ஒருநாள் – அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்

என்பார் தமிழ்க் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். மனுநீதியால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குஜராத்திக் கவிஞர் ஜெயந்த் பார்மர் என்பார் மனுவை அழித்தொழித்தே தீருவேன் என்கிறார். மனு இப்போது இருக்கிறானா என்ன? மனுவை அவன் எழுதிய நூலில் கண்டு அந்நூலை கிழித்து, அழித்து எரிப்பேன் எனச் சூளுரைக்கிறார்.

ஒருநாள் என்னுடை வீட்டின் முன்பில்
    வளமுற வளர்ந்திடும் வேப்ப மரத்தினில்
நிருவாண மாய்உனைத் தூக்கில்இட் டிடுவேன்;
    மனுநீதி வழங்கும் ஓஒ மனுவே!
உன்னுடைக் குறுதிக் குழாய்களை யானும்
    உடைத்துத் திறந்தே உள்ளில் நோக்குவேன்!
எனதுமுத் தவர்தம் எவ்வளவு குருதியைத்
    துணிவுடன் நீயும் குடித்துளாய் என்றே
பார்க்க,உன் குருதிக் குழாய்களை நோக்குவேன்!
    ஒருநாள் உனது தோலினை உரிப்பேன்.[1]

நாங்கள் இப்போது நன்கு கற்றவர்கள்; குறி வைத்துத் தாக்கவும்; சொற்களை ஆயுதம்போலப் பயன்படுத்தவும்

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்

In front of my house
    On the neem tree
I will hang you
    naked
O Manu!
I will open your veins to see
    hou much blood of my elders
    you have drunk.
    One day
    I will peel your skin.   - Jayanth Parmer (born 1954)

அறிவோம்; ஓ ஓ மனுவே! உனது தோலினை நான் உரிப்பேன்; அதனை உன் கைகளிலேயே வைப்பேன்;

நிருவாண மாய்,என் தந்தையை நீயும்
நிற்கவைத் தே,நீ அடித்தது போல
ஒருநாள் உனது தோலினை உரிப்பேன்.

1923இல் அரசு நிதியிலிருந்து கட்டப்பட்ட பள்ளி, மருத்துவ மனை, நீர்நிலை போன்ற பொது அமைப்புகளெல்லாம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் உரிமையுள்ளதாக்கப்பட்டு அரசு, ஆணை பிறப்பித்தது. ஆனால் மும்பை மாநிலத்தில் மகாத்து எனும் ஊரிலிருந்த நகர்மன்றம் பொதுக் குளத்தைத் தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தக் கூடாது என ஆணை பிறப்பித்தது.

அம்பேத்கர் 1927இல் இரண்டு நாள் நடைபெறுவதான மாநாடு ஒன்றைக் கூட்டினார். அம் மாநாட்டின் முடிவில் பந்தலிலிருந்து ஊர்வலம் ஒன்று கிளம்பிப் பொதுக் குளத்தை அடைந்தது. முதலில் டாக்டர் அம்பேத்கர் 'அவதார ஏரி' என்னும் அக் குளத்தில் இறங்கி நீரை அள்ளிப் பருகினார். பின் அனைவரும் பருகினர். இதைக் கேள்விப்பட்ட சாதி இந்துக்கள் தாழ்த்தப் பட்டோரைக் கத்தி, அரிவாள் கொண்டு அடித்து நொறுக்கினர். செய்தியறிந்த அம்பேத்கர் ஓடிவந்து பழிக்குப்பழி வாங்கத் துடித்த மக்களை அமைதிப்படுத்தினார். தாக்குதல் நடத்தியோர் கைது செய்யப் பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஊர்க்குளத்தில் தண்ணீர் எடுக்கத் தாழ்த்தப்பட்டவர்க்கு உரிமையில்லை எனச் சாதி இந்துக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். 'உரிமை உண்டு' என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் அம்பேத்கரை, 'பாபா சாகேப்' எனப் பெருமையுடன் அழைத்து வந்தனர். இன்றும் சொல்லிப் பெருமை கொள்கின்றனர். இக்குளச் சம்பவத்தை நினைவு கூர்ந்து, தலித் மக்கள் அம்பேத்கருக்கு அளிக்கும் அஞ்சலிக் குரலாய், குஜராத்திக் கவிஞர் ஒருவர் பாடியிருப்பது நம் உள்ளங்களைச் சிலிர்க்க வைக்கிறது.

ஓ !எங்கள் பாபா சாகீப் தலைவரே!
முதன்முதல் நீகுடித் ததும்ஓர் வாய்நீர்,
காலங் காலமாய் எங்களை வருத்திய
தாகத்தை இனித்தே தணித்தது கண்டோம்;
வாழ்க்கையின் சுவையை உணர்ந்திடக் கற்றோம்.

உனைஎன்றும் நாங்கள் மறந்திட முடியா;
உன்றன் நினைவுதான் நாங்கள் ஏறிடும்
ஒவ்வோ ரடியிலும் உறுதியாய் நிலைக்கும்;
ஓ !எங்கள் தலைவரே பாபா சாகீப்!

நால்வருண வேறுபாட்டால் நடந்த கொடுமைகள் கணக்கிலடங்கா. ஒரு நிகழ்ச்சி "இராமன் சீதையை மீட்டுத் திரும்ப அயோத்தி சென்று முடிபுனைந்து அரசாண்டு வருகையில், ஆரியன் ஒருவன் தன் மாண்ட பிள்ளையுடன் அரண்மனையை அடைந்து, 'உன் நாட்டில் ஒரு சூத்திரன் தவஞ் செய்கிறான், அதனால் என் பிள்ளை இறந்தது' எனக் கூற, அதைக்கேட்ட இராமன் ஆரியர் வழிகாட்ட அங்குச் சென்று, வீடணனது அடிமையாட்சியை வெறுத்து வாள் வடக்கிருந்த - உயிர்விடற்கு உண்ணா நோன்பிருந்த - சம்புகன் எனும் தமிழ் மகனை வெட்டி வீழ்த்தி நகருற்றான். ஆரியர் செத்த பிள்ளை பிழைத்ததெனக் கூறிவிட்டனர்.

மற்றொரு நிகழ்ச்சி ஏகலைவன் சத்திரியன் இல்லையாதலால் துரோணரிடம் வில்வித்தையைக் கற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் துரோணரையே தன் குருவாய் மனத்தில் எண்ணிக் கொண்டு தானே கற்றுச் சிறந்த வில்லாளன் ஆனான். இதனையறிந்த துரோணாச்சாரி குரு காணிக்கையாய் ஏகலைவனிடம் அவனது கட்டை விரலை வெட்டிக் கொடுக்குமாறு செய்து, அவன் கற்ற கலை அவனுக்குப் பயன்படாதவாறு அழிசெயல் செய்தான். இப்படி இன்னும் எத்துணையோ கொடுஞ் செயல்கள்! இவ்வாறாய ஆரியக் கொடுமைகளை, நினைந்து நினைந்து துடிக்கிறார், கிருஷ்ண சசே எனும் குஜராத்திக் கவிஞர். இதோ அவர் குரல் :

மரத்தினில் தொங்கிடும் உயிரிலாத் தலையுடல்
  கிளைநின்று துண்டித்த பெருவிரல் ஒன்றுமே...
ஆயினும் பெருவிரல் இன்னும்எனைக் கடிக்குது;
  தலையங்கே ஊசல்போல் ஆடிக்கொண் டுள்ளது;
உயிரற்ற தலையொன்று மரத்தின்மேல் தொங்குது,
  மரத்தின்மேல் தொங்குது;

எனும் பாடலாய் வெளிப்பட்டுள்ளது; உயிரற்ற சம்புகன் தலையும், வெட்டுண்ட ஏகலைவன் பெருவிரலும் தோன்றித் தோன்றி ஆரியக் கொடுமைகளை வேரோடு அறுத்தெறியத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன.

கொங்கணி

கொங்கணிமொழி இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் வடக்கே டாமன் முதல் தெற்கே கோவா வரை பேசப்பட்டு வருகிறது.

போர்த்துக்கீசியர் கோவாவைக் கைப்பற்றும் முன் கொங்கணி மொழியில் வளமான இலக்கியங்கள் இருந்த தாய்க் கூறப்படுகிறது. போர்த்துக்கீசியர் கோவாவைக் கைப்பற்றியதும், கொங்கண இலக்கியங்களில் கிறித்தவத்திற்கு முரணான கருத்துகள் காணப்படுகின்றன எனக் கூறி அவ்விலக்கி யங்களை அழித்துவிட்டனர். மொழியையும் அழித்துவிடக் கருதி அம்மொழியை யாரும் பேசக்கூடாது என்றும் கட்டளையிட்டனர். ஆனால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை. போர்த்துக்கீசியப் பாதிரிமார்கள் கொங்கணி மொழியில் கிறித்தவ இலக்கியங்களை எழுதினர். கி.பி. 1600இல் தாமஸ் ஸ்டீபன் என்னும் ஆங்கிலேயர் பைபிள் புதிய ஏற்பாட்டைக் கொங்கணி மொழியில் செய்யுள் நடையில் இயற்றியுள்ளார்.

சாகித்திய அகாதெமி கொங்கணி மொழியை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அம்மொழிக்கு அரசியல் தகுதிபெற அம்மக்கள் இன்னும் போராடிக் கொண்டுள்ளனர்.

இன்றைய கவிஞர்கள் நாட்டில் நிலவிவரும் சீர்கேடு களைக் கவிதைகள் வாயிலாய்த் துணிவுடன் வெளிப்படுத்தி வருகின்றனர். நேற்றைய நிலையே இன்றும் நீடிக்கிறது என்றால் நாடு விடுதலை பெற்று விட்டது என்று எவ்வாறு கூற முடியும்? அரசியலின் பெயராலும் மதத்தின் பெயராலும் நடைபெறும் நேர்மையற்ற செயல்கள் நித்தம் நித்தம் நடைபெறுகின்றனவே! இதுதான் விடுதலையா?

வீட்டைக் கொள்ளை யடித்திடும் வீணர்கள்
விரைந்து நாட்டுக் குழைப்பவ ராகவே
மீட்டு யர்ந்த மதிப்புகள் பெற்றிடின்,
மேன்மை யான மதத்தின் பெயரினால்
நாட்டில் நல்லவர் தங்களின் வீட்டு
வாயிற் படியிலே மாய்த்(து)அழிக் கப்படின்,
கூட்டுச் சேர்ந்து வழிப்பறி செய்பவர்,
கொலைகள் செய்வதைக் கலையாய்த் தெரிந்தவர்,
நீட்டிப் பாமர மக்கள் தலைவராய்
நிமிர்ந்து வீறுடன் உலவிடும் நாட்டிலே

விடுதலை கிடைத்துவிட்டது என்று சொல்லலாமா? இது விடுதலை இல்லை; இல்லவே இல்லை என அழுத்தம் திருத்தமாய்க் கூறியுள்ளார், கொங்கணிக் கவிஞர் ஒருவர்.

சமூக அவலங்களைப் பாடும் போதிருக்கும் வேகமும் சீற்றமும், அன்பு பாசம் போன்றவற்றைப் பாடும்போது மென்மையும் தண்மையுமுடையனவாய் மாறிவிடுகின்றன.

குழந்தையின் புன்சிரிப்பு கொள்ளை எழில் கொண்டது. அதைக் காணும் கவிஞர் சி.எப்.டி. கோஸ்டா,

நிலவுல கத்தில் இல்லா
  நித்திலப் புன்சி ரிப்பை
விலையிலாச் சிரிப்பை அன்புக்
  குழந்தையுன் இதழில் கொண்டாய்!

மலர்ந்திடும் ரோசாப் பூவின்
  மாண்பிலே கொண்டா யோ,வான்
நிலவுதான் வீசு கின்ற
  ஒளிநின்றும் கவர்ந்த்தா யோசொல்!

நிலவொளி தன்னை யானும்
  நெடுகவே ஆய்ந்து பார்த்தேன்;
பொலிவுறும் ஒளியின் கற்றைப்
  புரட்டியே அலசிப் பார்த்தேன்.
கலையுலாம் உன்சி ரிப்பைக்
  காண்கிலேன் அங்கே யுந்தான்[1]

எனப் பாடிக் குழந்தையின் சிரிப்பில் சொக்கிப்போகிறார்.

கி.பி. 1931ல் பிறந்த இக் கொங்கணிக் கவிஞர் சிறந்த நாடக, புதின, சிறுகதை ஆசிரியரும் ஆவார்; சாகித்திய அகாதெமி விருதும் பெற்றுள்ளார்.

வடமேற்கு இந்திய மொழிகள்

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் வழங்கி வரும் சிந்தி, பஞ்சாபி, காஷ்மீரி, டோக்ரி, உருது, இராஜஸ்தானி மொழிக் கவிதைகளின் மொழி பெயர்ப்பு ஒரு தொகுதியாய் வெளியிடப் பட்டுள்ளது.

சிந்தி

சிந்தி மொழி, சிந்து நதியின் இரு கரைகளிலும் பேசப் படுகிறது. இம்மொழி சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது.

சிந்தி இலக்கிய ஆசிரியர்களில் புகழ் பெற்றவர் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த அப்துல் லத்தீப் என்பராவர். இவருடைய கவிதை நூல் ஷா-ஜோ - ரிஸாலோ (Sha - Jo - Risolo) என்பது. இஃது இறை தத்துவங்களைக் கதைகள் வாயிலாய் விளக்குகிறது. அப்துல் லத்தீபினுடைய பாடல்களைப் படிக்காத

1. A Rose I took and spreading out its petals
   into its heart I looked
   your smile, there, I did not see.

அல்லது கேட்காத பாமரரோ, பண்டிதரோ இரார்; எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இவருடைய சில பாடல்களை யாவது மனப்பாடம் செய்திருப்பர்.

''சிந்தி மொழி ஒரு முரட்டு மொழி; எனினும் அறிஞர்களின் ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடக்கும் ஏனைய மொழி களுள் ஒன்றிற்காவது இல்லாத ஓர் இயற்கை அழகும் மோகன சக்தியும் இதற்கு உண்டு'' என்கிறார், ஜான் பீம்சு என்பவர். சிந்தி மொழி இந்தியாவில் வழங்கிவரும் பழைய மொழிகளுள் ஒன்றாய்க் கருதப்படுகிறது.

ஆனந்த் காமினி எனும் கவிஞர் இன்றைய அரசியல் ஒழுக்கக் கேட்டினை எடுத்தியம்புகிறார்.

இன்றைய அரசியல் கண்கூசச் செய்யும்
ஆபாச வாணிகம் என்றுயான் காண்கிறேன்;
ஒவ்வோர் அரசியல் இயக்கமும் இன்றே
ஒழுக்கக் கேடாய்ச் சரிந்துள தன்றே!

இன்றைய அரசியலை ஆபாச வாணிகம் என்கிறார், கவிஞர்.

சிந்து நகர்ச் சாலைகளின் சீர்கேட்டினை விளக்குகிறது, வாஸ்தேவ் நிர்மல் எழுதியுள்ள கவிதை.

சாலைகள் உள்ளன; சாலைகள் உள்ளன;
ஆயினும் சிந்துநகர்ச் சாலைகள் ஒருவகை.

மற்றச் சாலைகள் குண்டும் குழியுமாய் நடக்க முடியாமல் இருப்பதுண்டு.

ஆனால் இங்கே நடந்திடும் போதில்
இடறிக் குதிப்பதும் தடுமாறி வீழ்வதும்
ஓசை நயமோ எதுகை நயமோ
ஏதுமில் கவிதையை ஓதுதல் போலாம்.

எதுகை மோனை நயமில்லாத கவிதையைப் படிப்பது போன்ற இடர்ப்பாடுடையது இச்சாலை. சிந்துநதிச் சாலையை ஒரு மதுக்குடி நிலையம் எனலாம்.

ஒவ்வோ ரடிக்கும் ஒருவன் விழுவான்;
பயணிகள் மற்றும் வாகனம் எல்லாம்
தளர்ந்து தள்ளாடிக் குடிகாரர் போலவே
ஆடி அசைந்தே அல்லாடி வீழ்வர்.

மேடுகள் பள்ளங்கள் முடிவில் லாதவை;
எழும்பும் தாழும் அலைகளைப் போல்வன;
வளைவுகள் திருப்பங்கள் மந்திரி மார்களின்
அசட்டுப் பிசட்டுப் பேச்சைப் போலிருக்கும்;
இந்தச் சாலைகளில் அடிக்கடி போவோர்,
இரும்புப் பாதங்கள் வளர்த்துக் கொள்வர்.

பாதையின் திருத்தமற்ற தன்மை மந்திரிமார்களின் பேச்சைப் போலிருப்பதாய்ச் சொல்வதில் உள்ள நையாண்டித் தனத்திலும், அச்சாலையில் நடக்க இரும்புக் கால்தான் வேண்டும் என்று சொல்லும் குத்தலிலும் கவிஞரின் உள்ளது உள்ளபடி சொல்லும் தன்மையைக் காண்கிறோம்.

அங்கதக் கவிதைகள் பாடுவதில் 'அஸ்ஸலாம் அஸ்வனி மற்பூர்' தேர்ந்தவராய் விளங்குகிறார். இவர் பத்து அங்கதக் கவிதைகள் பாடியுள்ளார். அவற்றுள் மூன்று

நாட்டுப் பற்றாளன்

மிகநோ யுற்றோன் நாட்டுப்பற் றாளன்;
சாவதற்(கு) அவனும் ஆயத்த மானான்,
ஆயினும் அமெரிக்க மருத்துவ மனையில்.

கள்வன்

என்ன விதமான அடக்கு முறையிது;
சின்னத் திருடர்கள் சிறையில் உள்ளனர்;
ஊரறிந்த திருடர்கள் சுதந்திர மாயுள்ளனர்.

பிச்சைக்காரன்

பிச்சைக் காரனின் திமிர்தனைப் பாரீர்;
அவன்தான் ஏற்றுக் கொள்ளுவ தில்லை
ஐந்து ரூபாய்க்கும் குறைவான தர்மம்!

சிந்து மாகாணம் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட நிலை கவிஞர்களின் மனங்களைப் பாதித்துள்ளது. மண்ணில் வளரும் மணிச்செடியைக் கிள்ளித் தண்ணீரில்போட்டால் அஃது அங்கும் வேர்விட்டு வளரும். சிந்து மக்கள் அத்தகைய நிலைக்குள்ளாயினர் எனப் பாடுகிறார், ஒரு கவிஞர்.

மணிச்செடி கள்யாம்; நாங்கள் வளர்ந்து
மண்ணி னின்றும் பிரிக்கப்பட் டிட்டோம்;
நீரினில் வளர்ந்தே சீருடன் வாழ்வோம்.

பஞ்சாபி

பஞ்சாப் மாநில மக்கள் பேசும் மொழி பஞ்சாபி. பஞ்சாபில் கி.பி.19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை உருது மொழியே செல்வாக்குப் பெற்றிருந்தது. பஞ்சாபி என்ற மொழி நிலைபெற்றது 1950ஆம் ஆண்டுக்குப் பின்னரேயாம். 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பஞ்சாபிமொழி இலக்கியம் வளரவும் சமூகப் பண்பாட்டுக் கூறுகளின் வெளிப்பாடாய்ப் பஞ்சாபிமொழியை உருவாக்கவும் இயக்கம் தோன்றியது.

பழைய பஞ்சாபி ஏறத்தாழ கி.பி. 11ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குவதாய்க் கூறுவர். பஞ்சாபி இலக்கியத்தின் தொடக்க நிலையைக் குருநானக் (கி.பி. 1468-1538) சீக்கிய சமயத்தை நிறுவியதிலிருந்து காணலாம். பஞ்சாபிமொழி வரலாற்றில் கி.பி.1604 குறிப்பிடத்தக்க காலமாய்க் கருதப்படுகிறது. சீக்கியர்களின் ஐந்தாம் குருவான குரு அர்ச்சுனன் என்பவர், குருநானக்கும் அவருக்குப் பின்வந்தவர்களும் இயற்றிய பாடல்களை, 'குருகிரந்தம்' எனத் தொகுத்தார். இதுவே சீக்கியர்களின் புனித சமய நூல். 18-19ஆம் நூற்றாண்டுகளில் முகம்மதிய எழுத்தாளர்கள் மதச்சார்பற்ற இலக்கியங்களைப் படைத்தனர்.

அண்மைக்காலத்தில் பொதுவுடைமைப் பற்றுள்ள எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் உருசிய இலக்கியங்களைத் தங்கள் தூண்டுகோல்களாய்க் கொண்டுள்ளனர்.

குரு கோவிந்த சிங் மக்கள் அனைவரும் ஒரே நிலையினர்; பெயரால் வேறுபட்டிருந்தாலும் மக்கள் அனைவர்க்கும் இறைவன் ஒன்றே என்பதை வலியுறுத்தி வந்தார்.

நால்வகைப் பொருள்கள் நிலமொடு காற்றும்
  தீயுடன் நீரும்என் றுலவும்
மூலமாம் பொருளில் இயற்றப்பட் டுள்ளார்
  அனைவரும் ஒரேவழி தானே!
இந்துவின் கடவுள், முகமதின் அல்லா
  இருவரும் ஒன்றுதான் அன்றே!

எனச் சமய, இன ஒருமைப்பாட்டினை எடுத்தோதியுள்ளார்.

காஷ்மீரி

காஷ்மீரி மொழி ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பேசப்படுகிறது. காஷ்மீரி மொழியில், கி.பி.13ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியங்கள் காணப்படுகின்றன. காஷ்மீரி மொழி இன்னும் முழுமையாய் ஆராயப்படவில்லை.

சமுதாய உணர்வுடன் கூடிய கவிதைகளை இன்றைய காஷ்மீரிக் கவிஞர்கள் இயற்றி வருகின்றனர். "உன் இறைவன் கோயிலுள் இல்லை. உழுதும், சாலைகள் அமைத்தும், வெயிலிலும் மழையிலும் உழைக்கிறார்களே அவர்களுடன் இருக்கிறான். கோயிலுள் தோத்திரம் பாடி மணிமாலை உருட்டிக் கொண்டிராதே; வெளியில் புறப்படு; உழைப்பவரோடு சேர்ந்து உழு; அதுவே உண்மையான வழிபாடு" என்னும் பொருள்பட

வங்கக் கவிஞர் தாகூர் பாடியுள்ளார். சற்றொப்ப இதே கருத்துடைய காஷ்மீரிப் பாடல் ஒன்று உளது.

கோயிலும் சிலையும் கல்லன்றி
வேறொன்றும் இல்லை;
தோய்வுறும் அவைதான் கல்லன்றி
மற்றொன்றும் இல்லை;
ஆய்வுசெய்(து) அறிவீர்; யாரையே
தொழுகிறீர் இங்கே?

உயர்பதவிக்கு வருபவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்கிறார்களேயன்றி, ஏழை எளிய மக்களின் உயர்வுக்குப் பாடுபடுவதில்லை. இதனை,

மந்திரி மார்கள் புதிதாய் வாங்கிய
மகிழ்வுந்துக் கார்களில் வலம்வரு கின்றனர்;
ஏழைகள் புண்களை இனிதாய்க் குணஞ்செய
எங்கவர்க் கிங்கே நேரம் கிடைக்குமோ?

எனக் கேட்கிறார், கவிஞர் டி. குலாம் அகமத் மக்ஜூர்.

'மிர்சா குலாம் அசன் பேக் ஆரிப்' எனும் காஷ்மீரிக் கவிஞர் கி.பி.1910இல் பிறந்தவர். 1985ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். மதவேறுபாடின்றி மக்கள் ஒன்றுபட்டு வாழும் காலம் என்று வருமென ஏங்கும் அவரது கவிக்குரல் இதோ :

இந்தநாள் இந்துக் கொண்டாடும் நாளென்றும்,
அந்தநாள் ஆப்கனின் மாந்தரின் விழாவென்றும்,
முந்திடப் பகவானின் அல்லது இரகுமானின்
சுந்தர நன்னாட்கள் வெவ்வேறாய்ப் போயின.
நம்மிடைச் சொந்தமாம் நாள்வந்த(து) என்றுதான்
நம்மவர் ஒன்றுசேர்ந்(து) உவக்கும்நாள் உண்மையில்
செம்மைசேர் அருளுடைய நல்லநன் மனிதர்கள்
துயிலெழும் வைகறை நாள்காண ஏங்குவேன்.[1]

"உலகில் உயர்வுதாழ்வற்ற ஒரு சமனிலைச் சமுதாயத்தை உருவாக்க ஓயாதுழைப்பேன்; தடைகள் எதுவந்தாலும் தகர்த்தெறிவேன்" எனும் கருத்தை ஓடிக்கொண்டிருக்கும் ஆறு ஒன்று சொல்வதுபோலச் சொல்கிறார், அப்துல் ஆசாத் எனும் கவிஞர். ஆறு சொல்கிறது

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்

This, the Hindu's day; that the Afghan's, O!
Different are the days of Bhagavan and Rahman
Blessed indeed the day when people say
'Our own day has come'.

சென்றுகொண் டிருப்பேன் என்றும்முன் நோக்கி
பின்நோக்கித் திரும்புதல் என்றும் அறியேன்..
உயர்நிலம் தாழ்நிலம் ஒப்புரவு செய்வேன்...

உலகின் மென்மையாம் அழகிய முகத்தை
முடமாக்கும் பள்ளங்கள் மேடுகள் தவிர்த்து
பிரிக்கின்ற வரப்பினை அகற்றிஇவ் வுலகம்
பெருமைகொள் வரைநான் ஓய்வுகொள மாட்டேன்.

ஆறு சொல்வது போலக் கவிஞர் தன் உள்ளக்கிடக்கையை செம்மையாய்க் கூறிவிடுகிறார்.

டோகிரி

உழைப்பவர்கள் ஒரு சிறிதும் முன்னேறவில்லை; உழைப்பவன் ஒருவன், பயனை நுகர்பவன் வேறொருவன் என்பதை எண்ணெய்ச் செக்கு ஒன்றனைக் கொண்டு விளக்குகிறார் டோகிரிக் கவிஞர், கே.எஸ். மதுக்கர். எண்ணெய்ச் செக்கு,

ஆயிரக் கணக்காம் மைல்கள் நடந்துமே
அதேயிடத் தினிலே நிலைத்து நிற்கின்றது..

எண்ணெய்க் காரன் எண்ணெயை விற்கிறான்;
எருதுஅவ் வாணிகத்தில் எங்கும் இல்லையே...

எண்ணெய் வேறே ஒருவர்க்குச் சொந்தமாம்;
பிண்ணாக் குத்தான் பிறிதொரு வர்க்காம்;

எருதுக்கு மட்டும் உலர்ந்தவைக் கோல்தான்
இப்படித்தானே இந்தக் காலத்தில்
எண்ணெய்ச் செக்கும் இயங்கிக் கொண்டுள்ளது.

உழைப்பு உறிஞ்சப்படுவதை எண்ணெய்ச் செக்கு கொண்டு இக்கவிஞர் நாட்டி விடுகிறார்.

உலகைப் புரட்டும் நெம்புகோல்கவிதையை எழுதப்போவது யார்? புரட்டக்கூட வேண்டாம், சிறிது உந்திவிட்டால் போதும் என்கிறார், டோகிரிக் கவிஞர் ஒருவர்.

உலகத்தின் வடிவந்தான் மாறிக்கொண் டுள்ளது,
உலுக்குதல் ஒன்றுதான் செயலினுக்(கு) ஊக்கிடும்;
சிலகண நேரத்தில் செய்துரு வாக்கிடும்;
சிறிது தள்ளிவிட் டாலது போதுமே!

உழைக்கும் பெண்கள் உறுதியான மனம் படைத்தவர்; தொல்லை தருபவர்களைத் துரத்தியடிக்கும் துணிவு கொண்டவர் என்பதை, 'பால்காரி' எனும் தலைப்புள்ள பாடலில், 'துரின் பாய்பரி' எனும் கவிஞர் கூறுகிறார்.

தேவை இவ(ளுக்கு) என்ன ஆயினும் அஃதினைத்
திறன்கொள் உழைப்பினால் ஈட்டுகிறாள்;
பாவையிவள் தானும், தேடிய தாம்பொருள்
பாங்குடன் உண்டு நுகர்கிறாள்.

சிறையினில் வைத்துச் சிறுமை செய்யஇவள்
சீதையும் அல்லவாம் கண்டீரே!
உறுமிக் கனன்றே இராவணன் மார்பில்
உட்கார்ந்(து) அவன்உரம் கிழித்திடுவாள்!

சீதையன்று இவள் சிறையிருப்பதற்கு; சிறையெடுக்க வரும் இராவணன் மார்பைப் பிளந்து கிழித்தெறிந்திடுவாள்.

உருது

முசுலிம்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது, 'உருது' உருவாக்கப்பட்டது. இம்மொழிக்கு மொகலாய மன்னர் ஷாஜஹான் காலத்தில் 'உருது' என்ற பெயர் உண்டாயிற்று. கி.பி.18ஆம் நூற்றாண்டில் மக்கள் பேசும் மொழியாயிற்று. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் கவிதைகளும் பல்வேறு இலக்கியங் களும் தோன்றின. இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் பெரும்பாலும் உருதுவிலிருந்தே மொழிபெயர்த்துள்ளனர்.

மொகலாயர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் கவிஞர் காலிபு, கஜல் என்னும் மேடை இசையை அதன் உச்சிக்கே இட்டுச் சென்றார். முதல் கஜல் செய்யுள் இலக்கியத்தை உருதுவில் எழுதியவர் 'சந்திரபான் பிரமன்' ஆவார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது எல்லா மொழிகளையும் போலவே உருது இலக்கியங்களின் தன்மை வேறுபட்டது. 'இன்குலாப் ஜிந்தாபாத்' எனும் முழக்கத்தைத் தந்தது உருது மொழியே!

முகம்மது இக்பாலின் (1875-1938) கவிதைகளில் ஒருபகுதி முழுக்க முழுக்க நாட்டுநலம் பற்றியது. 'அகில உலகிலேயே சிறந்தது எங்கள் இந்துஸ்தானம்' எனத் தொடங்கும் அவருடைய இனிய கவிதை இந்திய மக்களின் நெஞ்சங்களை ஈர்த்தது.

பாரசீகக் கவிதையை முன்மாதிரியாய்க் கொண்டு இந்தியாவிலிருந்த உருதுக் கவிஞர்கள் (அ) *கஜல்* (உணர்ச்சிப் பாடல்), (ஆ) *கசீதா* (சிறு கவிதை), (இ) *ருபாயீயத்* (நாலடிச் செய்யுள்), (ஈ) *மர்சியா* (இரங்கற்பா), (உ) *மஸ்னவி* (நீண்ட கவிதை)களை இயற்றினர்.

இந்திய மொழிகளில் உருது மிகவும் இளையது; ஆயினும் இலக்கியச் செழுமையில் சிறந்து நிற்கிறது.

இக்காலத்தில் தோன்றியுள்ள உருதுக் கவிஞர்களின் தொகை பெரிது.

கவிஞர் பெய்ஸ், தான் எழுதுவதை என்றுமே நிறுத்த மாட்டேன் என்கிறார்.

எழுதுகோல் தனக்கே இரைகொடுப் பதைநான்
என்றுமே நிறுத்திட மாட்டேன்...

எழுத்தாளர்கள் கருத்தூற்றைப் பெருக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

தன்னிலை உணராத மக்கள் பலர் உள்ளனர்; அதனாலேயே தாழ்வடைகின்றனர் எனும் கருத்தைக் கவிஞர் பெய்ஸ் தக்கவாறு விளக்குகிறார். தன்னிலையறிந்து அவர்கள் வீறு கொண்டெழுந்தால் அடக்கி வைத்திருப்பவர்களின் அழிவு தடுக்கமுடியாதது. நாய் சாட்டையால் அடிப்பட்டுத் துவண்டு போகிறது; மனிதனை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு இல்லை அதற்கு; தன் ஆற்றல் அறிந்து மனிதன்மீது பாய்ந்தால் அவனைத் குதறிவிடாதா?

சாட்டையால் அடிபட்டுத் தளரும்இப் பிராணி
தலையினைத் தூக்கி விடட்டும்,
தலைமைகொள் மனிதனின் தான்தோன்றித் தனமெலாம்
தரையிலே சிதறி விடுமே!

தாழ்ந்து கிடப்பவர்கள் தலைதூக்கினால் போதும்; தான்தோன்றிகள் அழிந்து போவர்; அதற்கு எழுதுகோல் பயன்படவேண்டும்.

இராஜஸ்தானி

இராஜஸ்தானி பல கிளை மொழிகளை உடையது. ஆனால் எந்தக் கிளை மொழியையும் அரசியல் மொழியாய் இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் அஃது இலக்கியம் உடையதாய் இருக்கிறது. கி.பி.15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மீராபாய் எனும் பெண்பாற் புலவரே இராஜஸ்தானி இலக்கியத்தில் புகழ்பெற்ற கவிஞர் ஆவர். இராஜஸ்தானியில் கதைப் பாடல்களும், நீண்ட வருணனைப் பாடல்களும், நீதி இலக்கியங்களும் காணப்படுகின்றன.

எதை இழந்தாலும் இழக்கலாம்; ஆனால் தன்மானத்தை இழந்துவிடக் கூடாது என்பதை, கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்.

எல்லா உடைமைகளும் விற்றே தீர்ந்தன;
தலைக்குமேல் வைக்கோற் கூரையும் எழுந்தன;
உடைகளும் கந்தலாம்; உடம்பில் துணியிலை;
எனினும் தன்மானம் ஏறுபோல் நிற்குமே!

நம்மால் எதுவும் பயனடைய முடியுமென்றால் தான் உறவு, நட்பு எல்லாம்; நம்மிடம் கொடுக்க ஏதும் இல்லை யென்றால், 'அற்ற குளத்து அறுநீர்ப் பறவைப்போல்' பறந்தோடி விடுவர். உறவுகள் எல்லாம் தன்னல அடிப்படையிலேயே அமைகின்றன என்பதை, மகாவீர் பிரசாத் ஜோஷி எனும் கவிஞர் இராஜஸ்தானி மொழியில் பாடியிருக்கிறார்.

கொடுப்பதற்(கு) ஏதும்இங்(கு) உன்னிடம் இருந்தால்
ஒவ்வொரு வரும்நின் சொந்தம்;
இடும்பையில் நீதான் இருந்திடின் உன்னையே
யாரென்றும் அறிகி லாரே![1]

இக்கவிஞர் 1986ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

கிழக்கு இந்திய மொழிகள்

கிழக்கு இந்தியாவில் வழங்கிவரும் வங்காளி, ஒரியா மொழிக் கவிதைகளின் தமிழாக்கத்தை ஒரு தொகுதியாய்த் தந்துள்ளார், கவிஞர் முத்துசாமி.

வங்கமொழி

சமஸ்கிருதத்திலிருந்து திரிந்தோ, மருவியோ வந்த பிராகிருத மொழியின் ஒரு பிரிவிலிருந்து வங்கமொழி பிறந்தது என்பர். கி.பி.16ஆம் நூற்றாண்டில் கௌடமொழி என்றும், முகம்மதியர் ஆட்சிக் காலத்தில், 'ஜபான்-இ-பங்காலா' என்றும், போர்த்துகீசியர் வருகையின்போது, 'இடியம்மா பெங்கல்லா' என்றும் அழைக்கப்பட்டு வந்த இம்மொழி, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் 'வங்காளி' என்ற பெயர்பெற்றது. ஆங்கில மொழியின் தாக்கத்தால் வங்காள மொழி வளம் பெற்றது; இராஜாராம் மோகன்ராய் வங்க மொழியில் நூல்கள் பல இயற்றினார்.

19ஆம் நூற்றாண்டில் மைக்கல் மதுசூதன தத்தர் என்பாரும், பக்கிம் சந்திர சட்டர்ஜியும் பெயர்பெற்ற இலக்கிய கர்த்தாக்களாய் விளங்கினர். பக்கிம் சந்திரரின், 'ஆனந்த மடம்' எனும் புதினம் சிறப்புப் பெற்றது; இதில் வரும், 'வந்தே மாதரம்' எனும் பாடல் மிகு மதிப்புப் பெற்றது.

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்

Everyone is yours when you have
something to give;
But they fail to recognise you
when you are in distress.

சிறந்த வங்காள எழுத்தாளரான விவேகானந்தர் தம் எழுத்துகள் மூலம் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்தார்.

இருபதாம் நூற்றாண்டு, தாகூரின் கவிக்காலமாய் விளங்கியது. நோபல் பரிசு பெற்ற இவரையடுத்துச் சிறந்த எழுத்தாளராய் விளங்கியவர் சரத் சந்திர சட்டோபாத்தியாயா. இவர் சமூகத்தில் காணும் ஊழல்களைக் கடுமையாய்ச் சாடினார்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த புலவர்கள் ஆசு கவிகளிலும் சித்திர கவிகளிலும் ஆழ்ந்து போயினர். கவிஞரிடையே 'கவி-லடாயி' எனும் சொற்போர் நடைபெற்றது; ஒருவரை ஒருவர் ஏசி ஏளனம் செய்வர். அக் கவிஞர்களை, 'கவி வாலாக்கள்' என்பர். அவர்களுள் தலைச்சிறந்தவர் தாசரதி ராய். அவருடைய ஆசுகவிகள் கருத்து நயமும் நகைச்சுவையும் பொருந்தியவை.

சண்டி அல்லது துர்கை பற்றிய பாடல்கள் வங்காளத்துக்கே உரியன. முகுந்தராமர் எழுதிய சண்டி காவியங்கள் இப்போதும் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன.

சிறிதுகாலம் ஆண் பெண் உறவு பற்றிய நூல்கள் பெரிதும் விரும்பப்பட்டன. பின்னர்ப் பொதுவுடைமை பற்றிய கருத்துகள் விரும்பி ஏற்கப்பட்டன. இப்போது கவிஞர்கள் புதுமை நோக்கில் அரிய பல பாடல்களை இயற்றி வருகின்றனர்.

இயற்கை எழிலைப் பாடாத கவிஞர்கள் இருக்க முடியாது. 'காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்' எனத் தொடங்கி... இயற்கையழகி, தொட்ட இடமெலாம் கண்ணில் தட்டுப்பட்டாள் என்பார் பாவேந்தர் பாரதிதாசன். வங்காளத்தில் பரவிக் கிடக்கும் அழகு, கவிஞர் காஜா நசுருல் இசுலாமின் நெஞ்சில் பரவியதால்,

வண்ணப் பசுமையாம் வங்காளத் தாயின்
வனப்பைக் காண வருகநீ வருக;
எண்ணில் குன்றுகள் பள்ளங்களில், காட்டு
வெளிகளில் வயல்களில் அழகு பரந்தது

என மகிழ்ந்து பாடுகிறார்.

வங்காளிகள் தாய்மொழிப் பற்றுமிக்கவர்கள். தாகூர் தனது, 'கீதாஞ்சலியை' முதலில் வங்கமொழியில் பாடிப் பின்னரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவரவர் அவருடைய தாய் மொழியிலே கற்றால்தான் அறிவு வளம்பெறும். தாய்மொழியை விடுத்துப் பிறமொழியில் கல்வி கற்றல் அறிவு விரிவுக்குத் தடைக்கல் ஆகும். ஆதலினால்தான், கவிஞர் ராம் நிதி குப்தா நிது பாபு,

வெவ்வேறு நாடுகளில் மாந்தரின் வழக்கிலே
வெவ்வேறு மொழிகள் உண்டாம்;
கல்வியே மனத்தினில் விளைந்திடும் விருப்பங்கள்;
தாய்மொழியைத் தவிர வேறே
எவ்வித மொழியிலும் தெளிவாக வெளியிட
இயலுமோ சொல்க நீதான்

என வினவுகிறார்.

தெய்வங்களுக்குப் பலியிடுதல் எனும் படு மூடத்தனத்தை இன்னும் மாந்தர் விட்டபாடில்லை. தான் படைத்த உயிரை, கடவுள், தன்முன்னே பலியிடுமாறு கேட்பாரா? ஆடு மாடுகளை வெட்டுவதா பக்தி; இது மடமையின் கொடுமுடி; உள்ளத்தை அன்பு நதியினில் நனைத்து இறைவனைச் சரணடைவதே உண்மையான பக்தி என்பதை எடுத்துரைக்கிறார், கவிஞர் ராம் பிரசாத் சென்.

ஆடுகள் எருமை வெள்ளாடுகள் கோழி
பலிக்கெனக் கொணர்தலும் ஏனோ?
கூடியே தேவி காளிக்கு வெற்றி,
காளிக்கு வெற்றிஎன் கின்றாய்!
நயந்தரும் பக்தி அமுதத்தேன் கொண்டு
நனியவட் கூட்டுவாய், நின்றன்
மனத்தினை நிறைவு செய்குவாய்; அவளை
வணங்கியே போற்றுவாய் ஐயா!

என அன்போடு கவிஞர் அறிவுரை சொல்கிறார். தாகூரோ, கடவுளையே சாடுகிறார். உன் முன்னாலே பலியிடுகிறார்கள்; அதை நீ பார்த்துக் கொண்டிருப்பதா? உன் குழந்தை உனக்கு முன்னாலேயே பதைபதைக்கக் கொல்லப்படுவதா? எனவே, கடவுளே!

குருதிப் பீடத்தால் கழுவப் பட்டநின்
பலிபீ டத்தைக் காண்பையால்
நொறுக்கி நொறுக்கி நொறுக்கி யதனை
ஒன்றுமில் லாததாய்ச் செய்திடு

என்கிறார். தாகூருக்கு உள்ள ஆத்திரத்தில் பலிபீடத்தை நொறுக்கி யெறியுமாறு கடவுளுக்கே கட்டளையிடுகிறார்.

பெண்ணழகைப் பாடுவதில் எந்த மொழிக் கவிஞர்களும் குறைந்தவரல்லர். சுரேந்திரநாத் நயீன்தார், பெண் அழகைப் பெருமைபடப் பாடுகிறார்.

அவள்முகம் தானோர் முழுமுதல் தாமரை;
காதள வோடிய கடலெனும் விழிகள்;
அழகின் அலைகுழல் அடியினை முத்திடும்;
அவளின் இதயம் அன்பினில் பொங்கிடும்.

அழகான கூந்தல் காலடியினை முத்தமிடுமாம். நீண்ட கூந்தல் எனச் சொல்வதில்தான் எவ்வளவு நேர்த்தி. அழகோடு மட்டும் பெண் இருந்தால் போதாது; அவள் இதயம் அன்பிலேயும் திளைத்திட வேண்டும்!

உதடுகள்; அவற்றினுள்ளே பொதிந்து நிற்கும் அன்பை, உறவைச் சொல்ல ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் போதாவே என்பதை எண்ணிப் பார்க்கிறார், கவிஞர் நபாரும் பட்டாச்சாரியா.

ஒருதுண்டு ரொட்டியில் எவ்வளவு பசிதான்
 உள்ளடங்கி உள்ளதோ யாரே அறிவார்;
ஒருசிறை தன்னில் எவ்வளவு ஆசைகள்
 சிறையிடப் படவும் முடியுமோ அறியோம்;
ஒருபெண் அவளின் இதழ்களில் தானே
 எவ்வளவு முத்தங்கள் மறைந்தே கிடக்குமோ?

எவ்வளவு சொற்கள் என்றாலும் இப்பாடலின் பொருளை முற்றிலுமாய் உணர்த்திவிட முடியாது என்பது உண்மை.

ஓரிய மொழி

ஓரியமொழி ஒரிசா மாநிலத்தில் பேசப்படுவது. கி.பி. 14ஆம் நூற்றாண்டில்தான் ஓரியமொழி முழுமையாய் வளர்ச்சி பெற்றதாய்க் கருதப்படுகிறது. ஓரியமொழிக்கான எழுத்து கி.பி.1540இல் தான் இப்போதுள்ள வடிவத்தைப் பெற்றது. தொடக்கத்தில் மதங்களே இலக்கிய வளர்ச்சிக்குக் காரணமாய் இருந்துள்ளன. கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் பௌத்த மதப் பாடல்கள் எழுந்தன. அடுத்து சைவ, வைணவ மதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பிரம்ம சமாஜம் பரவியது. அப்போது 'பாலா' என்னும் பெயருடைய இலக்கியம் தோன்றியது. அது சத்திய நாராயண தோத்திரமாகும். அதை இந்துக்களும் முசுலிம்களும் ஒருங்கே எவ்வித வேறுபாடு மின்றிப் பயின்று வந்தனர்.

15ஆம் நூற்றாண்டிலிருந்த அர்ச்சுன நாகர் இயற்றிய 'ராமபிரபா' என்னும் காவியமே ஆதிகாவியம். 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த இராமச்சந்திர பட்நாயக், 'ஹாராவதி மகாகாவியம்' எழுதினார். பொதுமக்களைச் சேர்ந்த ஒருவனையும் ஒருத்தியையும் காவியத் தலைவனாகவும் தலைவி யாகவும் வைத்து முதன் முதலில் பாடியவர் இவரே.

இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் ஒரிசா நாட்டினர் இதிகாசங்களாய்க் கருதாமல் புராணங்களாகவே கருதி வந்தனர். 14ஆம் நூற்றாண்டிலிருந்த சரளதாசருடைய மகாபாரதமும், 15ஆம்

நூற்றாண்டிலிருந்த பலராமதாசருடைய இராமாயணமும் சிறந்தவை. மூலநூல்களில் காணப்படாத பல சுவையான கதைகளைத் தாமாய்ப் புனைந்து கொண்டுள்ளனர்.

இந்துக்களையும் முசுலிம்களையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்ட நூல்களும் உள்ளன.

19ஆம் நூற்றாண்டினரான ரகுநாத ராய் என்பாரை இக்கால ஒரியக் கவிதைக்குத் தந்தை என்பர். இவர் தேசியக் கவிஞர்.

குந்தலகுமாரி, அன்னபூர்ணா, அப்பர்ணா, தேவபூதி என்பவர்கள் சிறந்த பெண் கவிஞர்கள்.

ஒரிய மொழியில் இயற்றப்பெற்ற கவிதைகள் பாடலாயினும் காவியமாயினும் இசை நிரம்பியவை. இன்றும் வண்டிக்காரர் பாட்டு, குடியானவர் பாட்டு, மீன் பரவர் பாட்டு எனப் பலவகையான பாடல்கள் உள்ளன.

இன்றைய ஒரிய மொழிக் கவிஞர்கள், உலகின் பொது நடைமுறைக் கேற்பவே இளைஞர் எழுச்சி குறித்தும், சமுதாயக் கொடுமைகளைக் களைவது குறித்தும் எழுதி வருகின்றனர்.

கட்டுகள் எல்லாம் உடைத்தெ றிந்திட
  எழுக எழுகவே!
கண்ணீ ரெல்லாம் துடைத்தெ றிந்திட
  எழுக எழுகவே!
சாதி யெல்லாம் அழித்தெ றிந்திட
  எழுக எழுகவே!
தேச மெல்லாம் ஒன்றி ணைந்திட
  எழுக எழுகவே!

என எழுச்சிக் குரல் கொடுக்கிறார், ஆனந்த் பட்நாயக்.

ஒரிசா மாநிலம் சுற்றுலா இடங்கள் பல கொண்டது. அவற்றைக் காண உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றனர். சுற்றுலாத் தலங்கள் நாட்டின் அவல நிலையை வருபவர்க்கு எடுத்துக் காட்டுவனபோல இருக்கின்றன. புகழ்பெற்ற கோபுரத்தைக் காண வருபவர்கள், கோபுரத்தைப் படமெடுப்பதற்கு முன் அங்குச் சுற்றியுள்ளவற்றை முதலில் தம் படப்பிடிப்புப் பெட்டிகளில் பதிவு செய்கின்றனர்.

தமிழ்க் கவிஞர் சிற்பி குன்றின் உச்சியில் இருக்கும் இறைவழி பாட்டுத் தலத்தின் இன்றைய நிலையைப் பாடுகிறார்.

சந்தனம் புனுகு
சவ்வாது பன்னீர்
மல்லிகை மந்தாரை...

குன்றின் உச்சியில்
சுகலாகிரி வாசம்
சொக்கித் தளும்ப,
எங்கும் மணம்
ஒரே நறுமணம்;
அடிவாரம் எங்கும்
கொசுத் தொட்டில்
சாக்கடைகள்
முடைநாற்ற பஸ்நிலையம்
அழுகிய புண்சீழ் நாற்ற
அம்மணம்...
ஒரே அம்மணம்.

பழனிக் குன்றின் நிலைகுறித்த சிற்பியின் படப்பிடிப்பு இது. ஒரிசா கவிஞர் இரமேஷ் பிரதாப் அங்குள்ள கறுப்புக் கோபுரத்தை நமக்குக் காட்டுகிறார்.

கற்பழிக்கப் பட்ட ஊமைப்பெண் போலவே
    கற்கவி தையிது காணுது;
தொழுநோய்ப் பெண்ணங்(கு) ஒருத்திதன் புண்நின்றும்
    துடைத்தே ஓட்டுவாள் ஈக்களை;
முழுமையும் அம்மணச் சிறுவன் ஒருவன்
    வழியினிற் பிச்சை எடுக்கிறான்...

இதனைச் சுற்றுலாப் பயணி தன் நிழற்படத்தில் பதிக்கிறார். சிற்பி காட்டும் வழிபாட்டுத் தலத்தையும் இரமேஷ் பிரதாப் காட்டும் சுற்றுலாத் தலத்தையும் காணும்போது, 'இந்தியத் திருநாடே' எங்கும் உன் நிலை இதுதானா?' என்றுதான் கேட்க வேண்டியுள்ளது.

கவிஞர் பாரதிதாசன்,

ஊரிலேனும் நாட்டிலேனும்
    உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலைஒக்கும்
    நேர்உழைப் பவர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும்
    நிறைமுதல் கொள்வோர்தொகை
நேரிற்சூறை மோதுமாயின்
    தோணிஒட்டம் மேவுமோ?

முதலாளிகளே நீங்கள் ஓடங்கள் போன்றவர். தொழிலாளி களோ கடலை ஒப்பவர். கடலிற் சூறைக் காற்றும் எழுந்தால் தோணி ஓட்டம் என்ன ஆகும்? எனச் சிந்திக்கச் சொல்கிறார். ஒரியக் கவிஞர் கோப பந்து தாஸ் (1876-1928) இதே போக்கில் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். ஆட்டிப் படைக்கும் அரசே! மக்கள் ஒன்று

சேர்ந்துவிட்டால் உன் ஆட்டம் எல்லாம் அவ்வளவுதான்; ஆதலால் அரசிலிருப்போரே ஆட்டத்தை விட்டு, மக்கள் நலனில் நாட்டத்தைச் செலுத்துங்கள் என்கிறார்.

மக்கள்தாம் தண்ணீர்த் துளிகளைப் போல்வார்;
ஆயினும் ஒன்றுசேர்ந் திட்டால்
தக்கவா(று) அவர்கள் அரசெனும் அமைப்பில்
தகுந்தஓர் பெருங்கடல் ஆவார்;
மிக்க வாரெண்ணும் ஆளுவோர் அதனின்
விசையோட்டம் அதற்குமேல் இல்லை.[1]

கவிஞர்க்குப் பாடுபொருள் எதுவாயுமிருக்கலாம். சத்ருக்கன பண்டாலா எனும் கவிஞர் இயல்பு நிலையில் நம் சிந்தனையைப் பல்வகையில் ஓடவைக்கும் முறையில் ஒரு தார்ச்சாலையைப் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

தார்ஊட்டப் பட்ட சாலைதான் இங்கே
கருத்த மனிதனின் முதுகைப்போல் ஒளிருது;
என்ன நேர்ந்தே ஏதென்ன செய்திடும்
எண்ணிலாக் காலடி, லாரிகள், கார்கள்
இந்தச் சாலையை நொந்திட மிதித்தால்;
மழைபொழி யினும்வெயில் கனலினும் இதுதான்;
வனத்தில் மலைப்பாம் பெனக்கிடந் திடுமே
நம(து)உடல் களைத்தான் சுமந்திடத் தானே!

கருத்த மனிதனின் முதுகு, வனத்தில் கிடக்கும் மலைப் பாம்பு எனும் உவமைகள் பாடலுக்கு அழகு சேர்க்கின்றன. வனத்தில் கிடக்கும் மலைப்பாம்பு அருகில் சென்றவர்களை யெல்லாம் விழுங்கி அழித்து விடும். ஆனால் மலைப்பாம்புபோலக் கிடக்கும் சாலையோ மிதிபட்டு மிதிபட்டு அழிந்துபோகிறது.

வடகிழக்கு இந்திய மொழிகள்

இந்தியாவின் வடகிழக்குப் பகுதி வங்காள தேசத்திற்கு அப்பால் தனித் துண்டாக நிற்கிறது. முற்காலத்தில் காந்தருபம் என்று வழங்கப்பட்ட நிலப்பகுதி பிற்காலத்தில் அசாமி என்று அழைக்கப்பட்டுப் பின்னாளில் அசாம் மாநிலம் ஏழு பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டு அசாம், நாகாலாந்து, மிசோராம், அருணாசலப் பிரதேசம், மணிபுரி, திரிபுரா, மேகாலயா என்ற தனித்தனி மாநிலங்களாய் இயங்கி வருகின்றன. இந்த மண்ணுக்குள்ள கவிதைகள் 'வடகிழக்கு இந்தியக் கவிதைகள்' எனும் தலைப்பில்

1. People are drops of water. but together
They form the ocean of the state
The ruler is but a current, nothing more.

தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் அசாமி, மணிப்புரி, மிசோராம், கோக் பொராக், வங்காளி ஆகிய மொழிக் கவிதைகள் அடங்கியுள்ளன.

அஸ்ஸாமி

அஸ்ஸாம் மாநிலத்திலுள்ளவர்கள் பேசும் மொழி அஸ்ஸாமி. இஃது இந்தோ-ஆரிய மொழிகளுள் ஒன்று. அஸ்ஸாம் மொழியில் எழுதப்பெற்ற மிகப் பழைய நுல்கள் இப்போது கிடைத்தில. 13ஆம் நூற்றாண்டிலிருந்த ஹேம சரசுவதி இயற்றிய பிரகலாத சரித்திரம் எனும் சிறிய கவிதை நூலே இப்போது கிடைக்கப்பெறும் பழைய நூலாகும். 14ஆம் நூற்றாண்டில் குறுநில மன்னன் ஒருவனுடைய ஆதரவில் 'மாதவி கந்தலி' என்பார் இராமாயணத்தை எழுதினார். அது கவிதைச் சிறப்புடையது. பீதாம்பர் என்பவர் உஷை அநிருத்தனுடைய காதல் கதைகளைக் கீர்த்தனங்களாய்ப் பாடினார்.

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்கரதேவருடைய தலைமையில் புது வைணவ இலக்கியம் தோன்றியபோதுதான் அஸ்ஸாமிய இலக்கியம் முழு உருவத்துடன் திகழத் தொடங்கியது. சங்கரதேவர் பாகவதத்தின் பல பகுதிகளை மொழிபெயர்த்தார்.

16ஆம் நூற்றாண்டில் புது வைணவக் கவிஞர்கள் இரண்டடியுடைய, 'பதம்' என்னும் செய்யுள் வகையில் எழுதினர். எதுகைத்தொடையுடைய நாலடிச்செய்யுள்களையும் கையாண்டனர்.

17ஆம் நூற்றாண்டில் உரைநடை வரலாறுகள் தோன்ற லாயின.

18ஆம் நூற்றாண்டில் நாட்டியத்தைப் பற்றிக் கூறும், 'ஸ்ரீ ஹஸ்த முக்தாவலி' என்னும் நூல் உண்டாயிற்று.

19ஆம் நூற்றாண்டிலிருந்த புலவர்களுள் தலைசிறந்தவர் ஹேமச் சந்திர பருவா. இவர் அபினியின் தீமைகளைக் கூறும் நாடகம் ஒன்று எழுதினார். மேலும் புரோகிதர்களுடைய பித்தலாட்டங்களை விளக்கி, 'பாகிரே ரங்சங் பிதரே கொவாபாதுரி' எனும் புத்திலக்கிய காலத்திய முதல் புதினத்தை இயற்றினார்.

இருபதாம் நூற்றாண்டிலிருந்து அஸ்ஸாமிய இலக்கியம் செழித்து வளரத் தொடங்கியுள்ளது. இலக்கியத்தில் எல்லா வடிவங்களிலும் நூல்கள் வெளிவந்தன. அகவற்பாவைச் செய்யுளுக்கு அனைவரும் கையாளும் யாப்பாய்ச் செய்தனர். துன்புறுவோர் துயரங்களைச் சித்திரிக்கும் பாடல்களை எழுதினர்.

இக்கால இலக்கியங்கள் உள்ளதை உள்ளபடிக் கூறுவதிலும் சமூக உணர்ச்சிகளை எழுப்புவதிலும் கவனம் செலுத்துவனவாய் உள்ளன.

கோஸ்வாமி எனும் அசாமியக் கவிஞர் காதலியின் கடிதத்திற்குள்ள ஆற்றலைக் கவிதையோடு ஒப்பிட்டு, கவிதை யினும் ஆற்றல் வாய்ந்தது காதலியின் கடிதம் என்கிறார்.

கவிதை எழுதுவோரிடமிருந்து கணக்கற்ற கவிதைகள் எழுகின்றன. புவியின் எல்லாத் திசைகளிலும் அவை மிதந்து செல்கின்றன. எங்கும் விரைந்தும் செல்கின்றன. அவற்றில் தோய்ந்துள்ள அழகு அவற்றை எங்கும் செலுத்திவிடுகின்றன. ஆயினும் காதலியின் கடிதம் தரும் இன்ப விளைவினைக் கவிதை அடிகளால் காட்டமுடியாது.

கவிதை இயற்றுவோர் காவணந் தன்னிலே
    கணக்கற்ற கவிகள் எழுகின்றன;
புவியின் எல்லாத் திசைக்கும் காற்றினால்
    மிதக்க விடப்பட்டுச் செல்கின்றன.
ஆயினும் நின்றன் கடிதத்தில் தோய்ந்துள்ள
    அழகும் இசையும்நான் ஆய்ந்து விட்டால்
மேவி,அவ் வானில் சிறகடித்துச் செல்லும்
    மேன்மைகொள் பாடல் கவிவரிகள்
மாயஎழில் நங்கை நின்கடிதம் செல்லும்
    வழியையும் மோப்பம் பிடித்ததில்லை.

கவிதைக் கருத்தை எல்லோருக்கும் சொல்ல முடியும். காதலியின் கடிதம் பற்றிச் சொல்ல முடியுமா?

நம்பிக்கையே முன்னேற்றம் தரும். ஆகவே நம்பிக்கை யூட்டும் கவிதைகளையே நாங்கள் இசைக்கிறோம் என்கிறார், கவிஞர் கேசவ் மகந்தா.

வெற்றிக் கொடியைநம் கையினில் தூக்கி
    விரைந்து வருகின்றோம்;
விடியலைக் கூவும் நெடிதிசைப் பாடலை
    விழைந்தே இசைக்கின்றோம்;

கீழ்த்திசைத் தொடுவான் தனிபொரு புதிய
    கதிரவன் காண்கின்றோம்;
பாழ்த்துயர் எல்லாம் பறக்கத் துரத்தும்
    பகலொளி காண்கின்றோம்.

மொழிபெயர்ப்பாளர், அசாமிக் கவிதைகளில் பெரும் பான்மை காதற் கவிதைகளையே மொழிபெயர்க்கத் தேர்ந் தெடுத்துள்ளார்.

பாலத்தீனம், ஆப்பிரிக்கா ஆகிய இரண்டு பாடல்களும் மக்கள் பட்ட கொடுமைகளை உள்ளம் நெகிழ உரைக்கின்றன.

விதி வெல்ல முடியாதது என்பதை,

ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

எனக் கூறிய திருவள்ளுவர், சோம்பலின்றி முயன்றால் ஊழையும் உப்பக்கம் காணலாம் என்ற நம்பிக்கையையும் தந்தார். அசாமியக் கவிஞர் சந்திரகுமார் அகர்வாலும் ஊழினை, உப்பக்கம் காண்பேன் என்கிறார்.

விதியே என்னை வெந்துயர் என்னும்
அரைவைக் கல்லின்கீழ் அழுத்தியே வைத்தனை;
என்வாழ்வின் விதையைத் தூசியாய் நசுக்கினை;
எனினும் என்றன் அறைகூவல் கேளாய்!
அரைத்தஅப் பொடியில்என் கண்ணீரைக் கூட்டிப்
பசையென் றாக்கிப் பயன்படுத் திடுவேன்...[1]

மணிப்புரி

மணிப்புரி திபேத்தோ-பர்மன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. மணிப்புரியில் 'ஔக்ரி' என்னும் செய்யுள் ஞாயிற்றைப் போற்றும் இலக்கியமாகும். கி.பி.12ஆம் நூற்றாண்டில் சமயம் சார்ந்த இலக்கியங்கள் தோன்றின. அக்காலத்தில் எழுதப்பட்ட தனிப்பாடல்கள் அகப்பொருளைக் கருவாய்க் கொண்டிருந்தன. அகப்பொருளை உள்ளடக்கமாய்க் கொண்ட 'மொய்ரான் சையோன்' கவிதைகள் மணிப்புரியில் மிகவும் புகழ் பெற்றவை. 'கம்பா'வைத் தலைவனாயும், 'தோய்பி'யைத் தலைவியாயும் கொண்ட அக்கதை மணிப்புரிக் காப்பியமாய்க் கொள்ளப்படுகிறது. கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியில் போரைக் கருவாய்க் கொண்ட பிற இலக்கியங்கள் தோன்றின. இம்மொழியில் கமல், மினகேதன், கர்ச்சந்த் சர்மா போன்றோரின் கவிதைகள் சிறப்பானவை.

---

1. இப்பாடலின் ஆங்கில வடிவம்

Destiny, you have placed me beneath
sorrow's grinding stone;
crushed my life's seed to dust;
Yet take my challenge thus :
I will add my tears of these powders
and make a paste,
The paste to prepare cakes, cookies
and balls of Hope.

☞ இந்திய அரசியல் சட்டத்தில் இம்மொழி இடம் பெறா விட்டாலும் சாகித்திய அகாதெமி இதனை ஓர் இலக்கிய மொழியாய் ஏற்றுக்கொண்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தீமைகளை அந்நூற்றாண்டு 21ஆம் நூற்றாண்டுக்குப் பரிசாய்த் தந்து செல்கிறது எனக் கவிஞர் திலிப் மேயெங்பம் என்பார் 'அன்புப் பரிசு' எனும் தலைப்பில் எழுதியுள்ள பாடல் நம்மைப் பெரிதும் சிந்திக்க வைப்பதாயும் தீமைகட்குத் தீர்வுகாணத் தூண்டுவதாயும் அமைந் துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இளம்வீரர் கருத்தெலாம்
'எராயின்' போதைப் பொருளோங்கி நின்றது;
'எயிட்சு'எனும் குழந்தை விலைமகள் வீட்டில்
இனிதாகப் பிறந்தே வளர்ந்துவந் திட்டது;
துப்பாக்கி வாள்கள் குண்டு,போர் விமானங்கள்
எதனாலும் பாதிக்காப் புதிதான பிராணிகள்,
எலும்புக் கூடுகள்தாம் வயல்களில் சமவெளி
எங்கணும் நிரம்பி இறைந்தே கிடந்தன;
புதியஇப் பிராணிகள் மண்டையோ டுகள்மேல்
பூரிப்பாய் நடந்தே வீறுடன் சென்றன...

எராயின் போதை, எயிட்சு நோய், குண்டு வீச்சு, வன்முறைச் செயல்கள்

இதுதான் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டுக்(கு)
இருபதாம் நூற்றாண்டின் இனிதான கொடைகளாம்.

கொடையா இது? அழிக்கப்பட வேண்டிய படை அன்றோ?

மணிப்புரியைப் போற்றிப் பாடுகின்ற பாடல் சிறப்பாய் உள்ளது.

தொழிலாளர்கள் சாலை ஒன்றை அமைக்க வழியில் பெரும்பெரும் கற்களைப் புரட்டினர்; சரளைக்கல் குவித்தனர். பூ ஒன்று கற்களால் நசுக்கப்பட்டது; அதனைப் பொருட்படுத்தாமல், அது பற்றிய எண்ணமே இல்லாமல் மக்கள் வேலை செய்தனர். சாலையின் உருளை அப்பூவை மேலும் நசுக்கியது; உருளையை இயக்குவோன் தன் அழுக்குப் பற்களைத் திறந்து சிரித்தான்.

அண்டையில் ஓய்வுகொண் டிருந்தநாய் ஒன்(று)இந்த
அநியாயம் தன்னைக் கண்டே
அவலக் குரலுடன் இதயத்தைப் பிளக்கவே
அழுதுதான் கதறும் அன்றே.

தொழிலாளரோ, உருளை இயக்குவோனோ பூ நசுக்கப் பட்டது குறித்துக் கவலைப்படவில்லை. ஆனால் பூ நசுக்கப்

பட்டதைக் கண்டு நாய் அழுதது. கவிஞன் உள்ளம் கசிந்தது. நாய் குரைத்ததை, பூ நசுங்கியதற்காக அஃது அழுதது என்று கூறியிருப்பது மிகவும் நயமாய் உள்ளது.

மிசோராம்

மிசோ குன்றுகளின் இயற்கை அழகை எழிலுறக் கூறுகிறார், அம்மொழிக் கவிஞர் ரோகுங்கா.

எங்களின் மிசோரக் குன்றுக ளேநீர்,
இனிமையும் அழகும் எழிலும் நிறைந்தீர்;

இங்கே மகிழ்வின் குவளையை நாங்கள்
இனிதே பருகிக் களிந்திடு கின்றோம்...

எங்களின் அழகு மிசோரக் குன்றுகள்
எதனோடும் ஒப்பிடற்(கு) அரியவை நீங்கள்...

நின்னுடைக் குன்றிலும் சமவெளி களிலும்
நிறைமகிழ்(வு) அமைதி பிணைந்து கொண்டுள்ளன.

கவிஞர் முத்துசாமி மிசோ கவிதைகளில் இயற்கை எழில் கூறும் கவிதைகளையே பெரும்பாலும் மொழிபெயர்த்துள்ளார். மிசோரத்தை இனிய ஓசைகளின் நாடாய்க் காண்கிறார், ஒரு கவிஞர்.

பசுமரக் காடுகள் சூழ்ந்து விளங்கும்நம்
பாங்குடை இனிய மலைநாட்டில்
இசைவுறும் படிகத் தெளிந்த பனித்துளி
இனிதாய்த் திரண்டு பாய்கிறது;

இன்னிசைப் பாடல் இசைக்கும் பறவையும்
சிள்வண்டும் சேர்ந்தே இசைக்கிறது;
நன்னர்தம் மகிழ்வின் புகழ்ப்பெரும் பாட்டை
நாள்நெடு கிலுமே நவில்கிறது...

கிளைகள்ஒவ் வொன்றும் மலர்களி னாலே
கிளர்ந்தெழில் குலுங்கி நிற்கிறது...

இன்னிசை ஒலிகள் இளந்தூய காற்றின்
இனிய நாடெங்கள் மிசோராம்.

மிசோரத்தில் வீசும் கீழ்க்காற்று, 'பூர்வையா' எனப்படும். கீழ்க்காற்றைப் பெறும் மிசோரம் பற்றிக் கவிஞர் ஒருவர் மகிழ்ந்து பாடுகிறார்.

கிழக்கிந் தியாவின் நெடுந்தொலைப் பகுதியில்
மிசோரத்தில் என்றன் பிறப்பிடம் இருந்து,
பூர்வையா என்னும் கீழ்க்காற்று மிகவும்
விரைந்தே வீசும் பகுதியைச் சேர்ந்தேன்;

அசாம்,உயர் மணிபுரி, மிசோக்கள், திரிபுரி,
மேற்கு வங்கத்து விருந்தளிப் பவரும்
எல்லா மாந்தரும் ஒன்று கூடுகிறோம்;
நாமெல் லாரும் மகிழ்வாய் இருக்கிறோம்;
கீழ்க்காற் றினாலே எல்லாப் பகுதியின்
மாந்தரும் ஒன்றாய்க் கட்டுண் டிருக்கிறோம்.

காதலைப் பற்றியும் சில பாடல்கள் இடம் பெற்றுள்ளன. காதலன் ஒருவன் தன் காதலியை நினைத்ததால் இரவு முழுவதும் தூக்கமின்றித் தவித்தான்; மறுநாள் காலை, வேலைக்குச் சென்றபோது, தூங்காத களைப்பினால் உறுப்புகள் சோர்ந்து போயின. முகத்தினைக் கழுவ ஆற்றில் இறங்கினான். அப்போது அவன் கண்ணில் ஆற்றின் தண்ணீரைவிட மிகுதியான கண்ணீர் வழிந்தது.

முகத்தினைக் கழுவ ஆற்றில் இறங்கினேன்;
உகுக்குமென் கண்ணீர், ஆற்றினில் ஓடும்
நீரினும் மிகவாய்ப் பெருகிய தன்றே!

காதலியைக் காணததால் ஆற்று நீரைவிடக் கண்ணீர் அதிகமாய்ப் பெருகியதாம்.

'மபா அ காஹ்னர்' என்னும் கவிஞர், இளைஞர்கட்கு ஓர் அறிவுரை கூறுகிறார்.

காதல்செய் வதற்குமுன் நன்றாய் எண்ணிடு;
இன்றேல் காதலில் விழாமல் நின்றிடு.

காதலன் ஒருவன் தன் காதலியிடம் 'காதலில் நாம் பதற்றம் காட்டக்கூடாது; நிதானமாய்ச் செயல்பட வேண்டும்' என்கிறான்.

இளைஞன் தன் காதலியிடம் சொல்லுகிறான் :

பொறுமையில் லாமல்நீ பதறிடல் வேண்டாம்!
உனக்கும் எனக்கும் இடையுள்ள காரியம்
நிதான மாய்ச்செயல் படுத்திட வேண்டும்;
மண்வெட்டி தன்னை ஒருமுறை தூக்கியோர்
கிணற்றினை வெட்டி முடிக்க முடியாதே!
தூரிகை தன்னை ஒருமுறை தேய்த்தே
அரக்கர் உருவத்தை வரைய முடியாதே!

பாடலில் பயன்படுத்தியுள்ள உவமைகள் எண்ணி மகிழத் தக்கனவாய் உள்ளன.

கோக்பொராக்

மந்திரிகள், மக்களுக்குத் தொண்டு செய்கிறார்களோ இல்லையோ, அப்பதவியிலிருப்பதால் அவர்கள் பெறுகின்ற

நன்மைகள் கணக்கிலடங்கா, வருவாயோ, நன்மையோ முறையாய்ப் பெறுவதைவிட முறையற்ற முறையிலே எதையும் சேர்ப்பதுதான் இன்றைய நடைமுறையாய் விட்டது.

சாலைகளில் போக்குவரத்து நெரிசல்; எல்லா வண்டிகளும் நின்றுகொண்டிருக்க, மந்திரி கார் மட்டும் போய்க்கொண்டே இருக்கும். மந்திரி கார் வருகிறது என்பதற்காகவே மணிக்கணக்கில் பாதைகளில் வேறு வண்டிகள் செல்லாமல் தடைப்படுத்தப் படுவதும் உண்டு. இதைப் பார்த்த, 'சந்திர காந்தே முராசிங்' என்பவர் கோக்பொராக் மொழியில் எழுதிய கவிதையில், 'மந்திரிகள் எதையும் பெறலாம்; எதையும் செய்யலாம்; நான் என்ன மந்திரியா?' என மந்திரிகள் மக்களோடு இல்லாமல் அயன்மைப் பட்டுப்போயிருப்பதைக் குறிக்கிறார்.

எல்லாச் சாலையும் அடைக்கப் பட்டதோர்
தொல்லையாம் நேரம் சிலஉண்(டு) ஆங்கே;
எல்லா மருங்கிலும் அச்சூட்டு கின்ற
'கோர்'எனும் வில்தான் குறிபார்த்து நிற்கும்;
இம்மா திரியாம் நேரங் களில்யான்
மந்திரி யாயிருந் தால்மிக நன்றாம்;
மந்திரி கள்தாம் தங்களுக் கென்றே
ஆயிரம் சாலைகள் அறிந்திருப் பார்கள்.[1]

வட இந்திய மொழிகள்

இந்தி, சமற்கிருதம், போஜ்புரி, மைதிலி, நேபாளி, கொமெய்னி, கர்வால் எனும் மொழிகளில் தோன்றிய பாடல்கள் வடஇந்திய மொழிகள் எனும் தலைப்பில் தமிழாக்கம் பெற்றுள்ளன.

இந்தி

கி.பி. 1050லிருந்துதான் இந்தி இலக்கியத்தின் தொடக்கக் காலம் எனக் கூறப்படுகிறது. 14ஆம் நூற்றாண்டு வரை வீரக் காப்பியங்களே பெருமளவில் தோன்றின.

14ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டுவரை பக்தி இலக்கியங்கள் மிகுந்து காணப்பட்டன. கபீர், துளசிதாசர், சூர்தாசர் போன்றோர் இலக்கியங்கள் முதன்மை பெற்றிருந்தன. கபீரின் துதிப் பாடல்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இவருடைய 44 செய்யுள்களைக் கொண்ட கபீர் நூல் கி.பி. 1977இல் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டுள்ளது. துளசிதாசர்

1. The ministers know then a thousand roads

இராமாயணம் எழுதியவர். இராம இராச்சியம் அமையவேண்டு மென்றவர் இவர். சூர்தாசர் இலட்சம் பாடல்கள் இயற்றினார். இவற்றுள் 40,000 பாடல்கள், 'சூரசாகரம்' எனும் நூலாய்த் தொகுக்கப்பெற்றுள்ளன.

17, 18 நூற்றாண்டுகளில் சொந்தமாய் இலக்கியங்கள் ஆக்கும் முயற்சி இலாது போயிற்று.

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சுவாமி தயானந்தர் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்தார். இவரும், பாரதேந்தும் இந்தி மொழிக்குப் புத்துயிர் அளித்தனர். இராஜாராம் மோகன்ராயின் கருத்துகளும் இக்கால இலக்கிய வளர்ச்சிக்கு உதவின.

விடுதலைப் போராட்டத்தின்போது அரசியல் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இலக்கியங்களில் இடம் பெற்றன. காந்தீயத்தையும் கம்யூனிசத்தையும் அடிப்படையாய்க் கொண்டு நூல்கள் பல எழுந்தன.

பிரபாகர் மாக்வே எனும் இன்றைய கவிஞர் எழுதுகிறார் விருப்ப உயிரினங்களாய் ஒருவன், நாய்க்குட்டிகள் வளர்த்தான்; அவை பெரிதானதும் ஓடிவிட்டன; பூனைக் குட்டிகள் வளர்த்தான்; அவற்றை நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டான்; கிளியை வளர்த்தான்; அது கூண்டைவிட்டுப் பறந்து சென்றுவிட்டது; செம்மீன்களை வளர்த்தான்; அவை அனைத்தும் இறந்துவிட்டன; ஒன்றும் நிலைத்து நிற்கவில்லை.

இப்பொழு(து)அவன் மனிதரை விருப்ப
விலங்காய் வளர்க்கிறான்;
தப்பிடும் அவைதாம்; நிறையநிறையக்
கணக்கின்றி உள்ளனவே!

அண்டை நாட்டாரின் குண்டுகள் அவன்மீது பாய்ந்து அழித்தன. அப்போதும் மனித எண்ணிக்கை குறைந்ததாய் அடையாளம் காட்டவில்லை. மக்கட் பெருக்கம், என்ன செய்தாலும் கூடிக்கொண்டே இருக்கிறது என்பதைக் கவிஞர் இவ்வாறு நயம்படக் கூறியுள்ளார்.

பூ ஒன்று சொல்கிறது "காதலன் ஒருவன் என்னைத் தன் காதலியின் கூந்தலில் சூடுவதில் நான் பெருமை கொள்ளவில்லை. தெய்வத்தின் தலையில் தூவப் பெற்றுப் பெறுகின்ற புகழ் எனக்குப் பெரிதாய்த் தெரியவில்லை." பின் எதைத்தான் பூ விரும்புகிறது? அது சொல்வதையே கேட்போமே!

பறிப்பீர் என்னை,ஓ பைம்பொழில் தலைவா!
பாதையில் என்னை எறிந்தே விடுவீர்;

தாய்நாட்டுக் காகத் தலைகளை உவந்தே
தந்திடக் குறித்த வெந்திறல் மறவர்கள்
நடந்திடும் பாதையில் எனைஎறிந் திடுவீர்.

தாய்நாட்டுக்காய்த் தம் உயிரைத் துச்சமென மதித்துப் போரிடுகின்ற வீரர்களின் காலில் மிதிபடுவதைவிடத் தனக்குப் பெருமை வேறெதுவும் இல்லை என்கிறது மலர். இந்த 'மலர் உள்ளம்' நம்மில் எத்துணை பேருக்கு இருக்கிறது என்பதை எண்ணிடவேண்டும். மலரின் விருப்பத்தைப் பாடியிருப்பவர், இந்திக் கவிஞர் மக்கலால் சதுர்வேதி.

ஒரு செயலின் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவரினும் அதன் விளைவு ஒரே ஒரு கணத்தில்தான் நடைபெறுகிறது. சீதையை இராவணன் கவர்ந்தது ஒரு கணத்தில்தான். துரியோதனன் குருதியில் திரௌபதி தன் கூந்தலை நனைத்தது ஒரே கணம். ஹிரோஷிமா, நாகசாகியில் ஆருயிர் மாந்தர் அழிவுற்றதும் ஒரு கணநேரச் செயலே! மேனகையின் பார்வையாலே விசுவாமித்திரன் தவத்தை இழந்ததும் ஒரே ஒரு கணமேதான்.

ஆழ்ந்துள்ளே பொங்கிக்
கவிஞனின் மனத்தில் கற்பனை எழுந்து
முடிவிலாக் கவிதையாய் முகிழ்த்தெழுந் ததும்ஓர்
நொடியெனும் ஒருகண நுண்ணிய காலமே!

கவிஞரின் சிந்தனைகளின் தேக்கம் மின்னலென ஒரு கணத்திலே கவிதையாய் வெளிப்பட்டுவிடுகிறது என்கிறது இக்கவிதை. பல காலம் சிந்தித்திருப்பினும் கவிதை பிறப்பது எண்ணச் சூல் முதிர்ந்த ஒரு கணத்தில்தான் என்கிறார் கவிஞர் ஆர்.எஸ். கேல்கர். அவருடைய இக்கவிதை பிறந்ததும் அந்த ஒரு கணத்தில் அடங்கும்.

வெவ்வேறு மொழிகள் இருந்தபோதிலும் ஒருவனுக்கு அறிவைப் புகட்டுவது அவனுடைய தாய்மொழியேயாம்! எங்குச் சுற்றினாலும் தாயின் மடிதான் தஞ்சம் அளிக்கும். எறும்பு வளைக்கு எப்படித் திரும்புமோ, மரங்கொத்தி எவ்விதம் கிளைக்குத் திரும்புமோ, விமானம் எப்படி நிலையத்தை அடையுமோ, அப்படி,

சிறந்தஎன் தாய்மொழி அன்னையே உன்னைநான்
தேடியே உன்னிடம் திரும்புகின் றேன்அம்மா

என்கிறார், கவிஞர் கேதார் நாத் சிங்.

எட்வின் ஆர்னால்டு எழுதியுள்ள Light of Asia எனும் நூலைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தமிழாக்கி யிருக்கிறார். அதில் அவர் புத்தர் கூறுவதாய்,

வாழும் உயிரினை வாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!

ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ கூறுமையா

எனப் பாடியுள்ளார்.

அருளாளர் கபீரும் புத்தருடைய இந்நெறிகளை வலியுறுத்தி வந்தார். மனத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு, நீராடி, புறந்தூய்மையோடு பூத்தூவி இறைவனை வழிபடும் போலிகளை வன்மையாய்க் கண்டிக்கிறார்.

களிமண்ணைக் கொண்டும் கல்லினைக் கொண்டும்
கடவுள்கள் தேவிகள் வார்த்(து)உரு வாக்குவை;
துளிஇரக்கம் இன்றி வாழ்ந்திடும் உயிர்களை
தேவர்கள் மகிழ்ந்திடக் கழுத்தினை அறுப்பைநீ

எனப் பலியிடுவோரைச் சாடுகிறார்.

உயர்வு தாழ்வு, சாதி வேறுபாடு கற்பித்து மக்களைக் கொடுமைப் படுத்துவோரைக் கவிஞர்கள் தம் எழுத்து ஈட்டி களால் தாக்கியுள்ளனர். 'ஜெயப் பிரகாஷ் கந்தம்' என்பவர் தாழ்த்தப்பட்டவர்களின் மனத்திலெழும் எண்ணங்களைத் தம் பாட்டு அடிகளில் பதியவைத்துள்ளார்.

உன்னுடை நிலத்தில் பாலும் தேனும்
ஓடி வழிந்து பெருக்கெடுக் கின்றது;
நீயோ தலைவன்; நானோ பணியாள்;
நமக்குள் எங்கே சமத்துவம் உள்ளது?
இராம ராச்சியம் வருவிப்பேன் என்றாய்!
நீஎன்றும் தூய்மையாய் நிலைத்திருந் திட்டு
சூத்திர னாய்எனை வைத்திருப் பாய்நீ;
உரிமைகள் அனைத்தும் உன்னிடம் கொண்டே
தடையாம் சுமைகளை ஏற்றுவாய் என்மேல்;
சாதலும் இல்லை,நான் பிழைத்தலும் இல்லை
என்னுடைத் தலைவனே எங்கேஎன் உரிமை?

வினா எழுந்துவிட்டது; விடை காண நீண்டநாள் ஆகாது.

சமற்கிருதம்

சமற்கிருதம் இந்தியாவின் மிகப் பழம்மொழிகளுள் ஒன்று. இம்மொழி இன்று பேச்சு வழக்கில் இல்லை; இருப்பினும் புலவர் கூட்டங்களிடையே இது பேசப்பட்டு வருகிறது. இன்றும் பலர் செய்யுள்களையும் நூல்களையும் இம்மொழியில் எழுதி வருகின்றனர். வேதகால இலக்கியம், பிற்கால இலக்கியம் என இம்மொழி இலக்கியத்தை இரண்டாய்ப் பிரிக்கலாம். இவ்விரு பிரிவுகளுக்கும் இடைப்பட்டது புராண, இதிகாச காலங்கள் ஆகும். பிற்கால இலக்கியத்தை, *சிரவியம்* (கேட்பது), *திருசியம்* (பார்ப்பது) என இரு பெரும் பிரிவுகளுக்குட்படுத்தலாம்.

சிரவியம் - செய்யுள், உரைநடை, சம்பு என மூவகைப்படும்.

மகா காவியம், கண்ட காவியம் எனச் செய்யுள் இருவகைப்படும். காளிதாசனின் இரகுவம்சம் போன்றவை மகா காவியம்.

சிறு காப்பியம் கண்ட காவியம் எனப்படுகிறது. இவை காதல், பக்தி, நீதி முதலியவற்றை விவரிக்கும். இக் கண்டகாவியங்களில் ஒரு செய்யுளைமட்டும் கொண்டு பொருளை விளக்கக்கூடியதை 'முத்தகம்' என்றும், இரண்டு செய்யுள்மூலம் விளக்குவதை 'உயிக்கம்' என்றும், மூன்று செய்யுள்கள்மூலம் கூறுவதைக் 'குளகம்' என்றும், நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட செய்யுள்கள் மூலம் விளக்குவதை 'சங்காதம்' என்றும் வழங்கப்படும்.

சம்பு என்பது செய்யுளும் உரைநடையும் கலந்தது. நாட்டியம் (கதை தழுவி வருவது), நிருத்தியம் (அபிநயம்), நிருத்தம் (வெறும் கூத்து) எனத் *திருசியம்* மூவகையாய்க் கூறப்படும்.

கவிதையில் கதைமாந்தர்களுடனும் வருணனையுடனும் இயற்கையை இணைத்து, மனித உள்ளத்தையும் இயற்கையையும் ஒன்றுபடுத்துவது சமற்கிருதக் காப்பியங்களுக்கும், நாடகங்களுக்கும் உள்ள தனிச்சிறப்பாம். இதைக் காளிதாசனின் சாகுந்தலம், மேகதூதம் போன்ற காவியங்களில் காணலாம்.

சிறந்த உணவு வகைகள் கிடைத்தாலும், போற்றி வளர்க்கப்பட்டாலும் கூண்டுக் கிளிக்கு, வெளியில் பறந்து திரியும் விடுதலை இருக்க முடியாது என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் ஓர் அழகிய பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தித்திக் கும்பழம் தின்னக் கொடுப்பார்;
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கு;

பொன்னே மணியே என்றுனைப் புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே! அதோபார்;
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றில் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?

என்பது அவர் பாடல். விடுதலையில்லா நாடு கூண்டுக் கிளிக்கு ஒப்பு என்பதைப் பாடல் புலப்படுத்துகிறது. இதே கருத்தில் சமற்கிருதத்தில் 'அப்பசாசிரி ராசி வடேகர்' ஒரு பாடல் இயற்றி யுள்ளார்.

அன்புடைக் கிளியே பொன்னி னாலியன்ற
அழகுடை நின்கூண்டு, நின்னைத்
துன்புறப் பிணித்திப் பொழுதுவைத் திருக்கும்;
பொன்கூண்டு தானும்நீ காட்டில்
இன்புற மகிழ்ந்து விரும்பியே அமரும்
உயர்மரக் கிளையதன் மேலே
முன்புறக் குதித்தே அழகுறும் இனிய
மென்கிளைக் கொப்பாவது உண்டோ?

இப்பாடற்கருத்து பாவேந்தருடைய கருத்தை ஒத்திருக்கிறது; கவிஞரின் மொழிபெயர்ப்பு பாவேந்தர் பாடல் நடையை ஒத்திருக்கிறது.

அங்கதம் ஓர் இலக்கிய வகை. இது தனி மனிதன், சமுதாயம், நிறுவனம் முதலியவற்றில் காணப்படும் குறைபாடுகளைத் திறனாய்வு செய்யும் ஒரு கேலிச் சித்திரம். அன்றியும் அங்கதம் (Satire) செய்யுளில் கையாளப்படும் ஓர் உத்தியுமாகும். எல்லா நாட்டு இலக்கியங்களிலும் மிகப் பழங்காலத்திலேயே இந்த உத்தி தோன்றியுள்ளது. இன்றைய புதுக் கவிதைகளில் அங்கதக் குறிப்பு முதலிடம் பெற்றுள்ளது. கண்டகார்ச்சுனா என்னும் புலவர் சமற்கிருதத்தில் இயற்றியுள்ள அங்கதக் கவிகள் இரண்டு இங்கே தரப்படுகின்றன.

சமற்கிருத அறிஞர்

சமஸ்கிருத மொழியின் அறிஞர் யாரெனில்,
சமஸ்கிருத நுட்பம் வற்றிடுங் காலை
ஆங்கில மொழியில் அழகாய்ப் பேசுவார்.[1]

1. Sanskrit Scholar is
one who is in English fluent
when talking of Sanskrit ebullien.

இந்திய தேசியவாதி

இந்திய தேசிய வாதி,யார்? என்றால்,
இந்திய நாட்டின் கொள்கைகட் கெதிராய்ச்
சதிச்செயல் களிலே ஈடுபட் டிருப்பவர்.

மருத்துவம் இப்போது வணிகமாய்விட்டது. மருத்துவர்கள் நோயைக் குணப்படுத்துவதைவிடப் பணத்தைக் கறப்பதிலேயே குறியாயிருக்கின்றனர் என்பதை அங்கதமாய்ப் பாடுகிறார், இன்னொரு சமற்கிருதக் கவிஞர்.

செருப்புக் கடிபட்ட ஒருவன் ஒரு மருத்துவமனை சென்றான். அங்கு, ஒரு மருத்துவர் அவன் மலத்துடன் சிறுநீரை ஆய்வுக்காய் எடுத்தார். மற்றொருவர் இரத்த மாதிரியை ஆய்வு செய்தார்.

மூன்றாமவர் அவன் கைகளைப் பொறுப்பாய்
எக்ஸ்கதிர் ஒளிப்படம் எடுத்தே முடித்தார்;
இறுதியில் ஆங்கோர் மருத்துவர் வந்தார்,
வயிற்றில் அறுவை மருத்துவம் செய்தார்;
ஆயிரம் ரூபாய் செலவுக் கணக்கே
போதும்,அவ் ஏழை நோயாளி தன்னை
வேதனைப் படுத்திக் கொன்றிடத் தானே!

செருப்புக் கடிக்கு மருந்து கேட்கப்போனவர் பட்டபாட்டினை எடுத்துச்சொல்ல வார்த்தைகள் போதா! மருத்துவம் கொள்ளை ஆவதா?

மற்றொரு கவிஞர் பாடுகிறார். ஒருவன் மாம்பழம் எங்கே போகிறது? என்றான்; அமெரிக்காவுக்கு என்றனர். முந்திரிக் கொட்டை எங்கே என்றான்? அதுவும் அமெரிக்காவுக்குத்தான் என்றனர். வாழைப்பழம் என்றான்; உருசியாவுக்கு என்றனர். தேநீரில் சர்க்கரையே இல்லை என்றான். இன்றுதான் சர்க்கரை முழுவதையும் ஏற்றுமதி செய்தோம் என்பது உனக்குத் தெரியாதா என்றனர்.

எல்லாப் பொருளும்
பறந்தெங்கு போனதோ, அவ்விடத் தினுக்கே
அதிகாரத் துள்ளவர் நமையெல் லாரையும்
அங்கே அனுப்பி வைத்திடல் நன்றே.

பொருள்கள் எதுவும் இங்கிருப்பதற்கில்லாமல் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்துவிடுவது என்றால், மனிதனையும் அவ்விடங்களுக்கே ஏற்றுமதி செய்துவிட வேண்டியதுதானே!

சீதையைப் பற்றிக் கூறும்போது கம்பன், "அழகு, இவளைத் தவம் செய்து பெற்றது என்பார். உலகில் மங்கையர்கள் அழகைத்

தவம் செய்து பெறுவர். ஆனால் அழகோ சீதையைத் தவம் செய்து தன்னைப் பெற்றுக் கொண்டதாம். அணிகலன்கள் பெண்களின் உடலில் அணியப் பெற்று அவர்களுக்கு அழகு தரும். ஆனால் சீதையின் உடலில் அணியப்பெற்றதால் அவ்வணிகலன்கள் அழகைப் பெற்றனவாம். இதனைக் கம்பர், "அழகு எனும் அவையும் ஓர் அழகு பெற்றதே" என்பார். இக்கருத்து முழுமையாய் அமையுமாறு சுபஸ்தவதி எனும் சமற்கிருதக் கவிஞரின் பாடல் உள்ளது.

நங்கைதான் அணிந்து கொண்ட
  நகையினுக்(கு) அழகு சேர்ப்பாள்;
நங்கைக்கு நகைகள் எந்த
  அழகுமே சேர்ப்ப தில்லை;
நங்கைதான் நகையின் றேனும்
  நயனுறக் கவர்ச்சி வாய்ந்தாள்;
நங்கையின் கைகால் மற்ற
  அங்கத்தில் சேரா தாயின்
பொங்கும்அந் நகைகள் எல்லாம்
  மங்கியே தோன்றும் அன்றோ!

நங்கை நகையினுக்கு அழகு சேர்ப்பதுபோல, இங்கே மொழிபெயர்ப்பு, கவிதைக்குப் பேரழகு சேர்த்திருக்கிறது.

போஜ்புரி

போஜ்புரி என்னும் இனமொழி பீகார் மாநிலத்திலுள்ள போஜ்பூர் என்னும் பகுதியின் பெயரால் வழங்குவது.

பெண்களுக்கு இழைக்கப்படும் வரதட்சிணைக் கொடுமையைப் பாடுகிறது, போஜ்புரி கவிதை ஒன்று.

நாடு விடுதலை பெற்றுப் பல பத்தாண்டுகள் பறந்து போயின. திட்டங்கள் பல வகுத்து நிறைவேற்றி வருகிறோம். எனினும் பெண்களுக்கிழைக்கப்படும் கொடுமை இன்னும் தீர்ந்த பாடில்லையே! பெண்களும் ஆண்களைப்போல வாக்குரிமை பெற்றவர்கள்தாமே! அவர்கட்கு மட்டும் ஏன் இந்த அநீதி?

படிமிசை ஒவ்வோர் பெண்ணும் தன்வாக்கைச்
  செலுத்துதற்(கு) உரிமைஇங்(கு) உண்டாம்!
எனினும் இந்நாட்டில் வரதட் சிணைதான்
  முதன்மையாய் ஆட்சி செய்வதுவே!

இக்கொடுமையை அவள் எவ்வளவு நாள் தாங்குவாள்? கடவுளே அறிவார்! படுக்கையின் கீழே இருந்த இனிப்புகளைப் பூனை தின்றுவிட்டாலும் அவள்தான் தின்று தீர்த்தாள் எனப் பழி அவள்மீதுதான் சுமத்தப்படும்.

அரக்கியர் நடுஇருந் தாற்போல்
    இரங்கத் தக்கதுஓர் நிலைமைதான்; இந்தச்
சிறைசில ஆண்டுகட்(கு) இல்லை
    வருங்காலம் என்றன் வாழ்நாட்கள் முழுதும்;
நெருங்கிநான் இதன்மேல் முறையீடு செய்யும்
    நீதிமன்றம் ஏதும் இல்லை.

மணப்பெண் வருந்தி வாடி அழுவதற்குக் காரணம் இக் கொடுமையே!

கோடி கோடியான துன்பங்கள் தாக்கினபோதும் அவற்றைத் தாங்கி விடுதலை பெற்றோம்; எனினும் நாம் பெற்றது ஏமாற்றமே எனும் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது, போஜ்புரி கவிதை, ஒன்று.

சுதந்திரத் தினைநாம் துயர்பொறுத் தடைந்தோம் ;
தூற்றும் பழிச்சொல்லைத் தாங்கிப் பொறுத்தோம் ;
இதந்தரும் சுதந்திரம் எண்ணிய(து) அடைந்திலேம்
ஏமாற்றும் சுதந்திரம் எய்தினம் தோழரே!

மைதிலி

பீகார் மாநிலத்தில் மிதிலைப் பகுதியில் வழங்கும் மொழி மைதிலி. மைதிலி என்பது பண்டைய மிதிலையில் பேசப்பட்ட மொழி. இப்போது கிடைக்கும் பீகார் இலக்கியங்களுள் பெரும்பாலானவை மைதிலி மொழியில் எழுதப்பட்டவையே. நாம் அறியும் மைதிலி இலக்கிய முற்காலப் படைப்பாளர் வித்தியாபதி தாக்கூர் (1350-1450) இனிய காதற் கதைகள் இயற்றியவர். இராதை-கிருஷ்ணன் பற்றிப் பாடியுள்ள கவிஞர்களின் முன்னோடி இவரே.

வடஇந்தியாவில் முதன்முதலில் எழுந்த கிறித்தவ வேதத்தின் மொழிபெயர்ப்பு மைதிலி மொழியில் செய்யப்பெற்றது.

இன்றைய கவிஞர்கள் நாட்டு விடுதலை, மொழி, அறிவியல் பற்றிய கவிதைகளை எழுதுகின்றனர்.

என்ன நேர்ந்தாலும் தன்னுரிமை பெற்றே தீருவோம் என முழங்குகிறார் மைதிலிக் கவிஞர், இராகவாச்சாரிய ஷாசிரி.

முன்னேறிச் செல்லும் என்னுடைக் காலடி
    பின்னே வைத்துநான் தன்னிலை மாறிலேன்;
தன்னுரிமை யெனும் புதுநல் யுகத்தினைத்
    தயங்கிடாதுநான் படைத்திடப் போகிறேன்;
அறைகூவல் விட்டுக் குழுக்கள் குழுக்களாய்
    அச்சம் ஊட்டும் எதிரியின் கூட்டத்தை,
அறுத்தெ றிந்து தலைகள் உடல்களால்
    நிலப்ப ரப்பை நிறைத்திட முடுவேன்.

'தன்னுரிமை எனும் புது யுகத்தைப் படைப்பேன்' எனத் தன்னம்பிக்கையுடன் பாடுகிறார், இக்கவிஞர்.

மைதிலிமொழி சிறப்புப் பெறவேண்டும்; தனித்தியங்கும் மொழியாய், ஆட்சிப் பொறுப்புள்ள மொழியாய் உயரவேண்டும்; அதற்காவன செய்ய இளைஞர்களைக் கிளர்ந்தெழக் கூறுகிறார், கவிஞர் அஞ்சி பிரசார் சிங்.

எனதுநாட்டின் இளைஞர் கூட்டமே!
இன்னும்நீங்கள் தயங்கி நிற்பீர்களோ?
மைதிலித்தாய் மொழியின்னும் அடிமையாய்க்
கைகளில் விலங்கேற்றுக் கிடப்பவோ?
நையுறக்கிடந்(து) அசோக மரத்தடி
நலியும்ஜானகி போல வருந்தவோ?[1]

இன்று அணுசக்தி யுகம். இச்சக்தி ஆக்கத்திற்கன்றி அழிவுக்குப் பயன்பட்டுவிடக்கூடாது; அழிக்கத் தொடங்கினால் உலகையே விழுங்கிடும் என எச்சரிக்கிறார், கவிஞர் டி.சிகுன்.

இன்றைய நிலையில் அறிவியல் நுட்ப
இணையிலாச் சாதனை யதனின்
வென்றிடும் வலிமை உதவியி னோடே
விரைந்திடும் அழிவதன் வேகம்
தின்றுதான் நிலமும் கடலின்நீர் எல்லாம்
தீர்த்திட விழுங்கிடும் குர்சா
என்றபெண் பூதம் போல,முன் னேற்றம்
எதனையும் துடித்தழித் திடுமே!

நேபாளி

இமயமலைச் சாரலில் இருக்கும் சுதந்திர நாடு நேபாளம். இஃது அரசியலமைப்புக்குட்பட்ட பரம்பரையான குடியாட்சி நாடு. உலகிலேயே இஃது ஒன்றுதான் இந்து அரசு. கூர்க்கர்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். சிறந்த போர்வீரர்களான இவர்களுடைய வீரத்தை உலகறியும். இவர்கள் இப்பெயரை 18ஆம் நூற்றாண்டில் பெற்றனர்.

இந்நாட்டு அரசு மொழியான நேபாளி, இந்தோ-ஐரோப்பிய மொழி இனத்தைச் சார்ந்தது.

போர்முனை வாழ்க்கையின் கடுமையை இ.ஹரிபட்டா கட்டுவால், "இது என்ன வாழ்க்கையோ" என வருந்திப் பாடுகிறார்.

1. Will maithili still remain in fetters
Pining like Janaki under the Ashoka tree?

துப்பாக்கிக் குழல்மேல் தலைவைத்துத் தூங்கி,
வாள்முனை மேலே வாழ்ந்திட நடந்து,
கண்ணை மூடவும் கடினமா யிருப்பது,
இந்த வாழ்க்கைதான் என்ன வாழ்க்கையோ?

'துளசி அபானம்' எனும் கவிஞர் கர்ணன் குந்தி பற்றிய இதிகாச நிகழ்ச்சி ஒன்றைப் பாடலாக்கியிருக்கிறார். குந்தி, கர்ணனிடம் தான் அவனுடைய தாய் என்பதை அறிவித்தால் போர் முடிவினை அவன் அறிவித்திடமாட்டானா எனும் ஆசையோடு அவனிடம் செல்வதைப் பாடல் விவரிக்கிறது.

குருட்டுக் கட்டினை அகற்றநான் வேண்டும்;
இரந்துகொண் டியாரே சென்றிடும் போதும்
கருணன் வாரிக் கொடுத்திடு கின்றான்;
யான்அவன் அன்னை; எனக்(கு)அவன் தனது
வாக்கினைக் கொடுத்தே வரமருள் வானோ?
போர்முடி வினையே அறிவித் திடானோ?

கொமெய்னி

கொமெய்னி மொழியில் கவிஞர் முத்துசாமி, இன்றைக்குத் தேவைப்படும் கருத்தமைந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்திருக்கிறார். 'ஷெர்சி ரிஸ்ட்' எனும் கவிஞர், போர்க்களத்திலிருந்து தந்தை ஒருவர் தன் மகனுக்குக் கடிதம் எழுதுவதாய்ப் பாடியுள்ள கவிதை மிகவும் உருக்கமானதாய் உள்ளது.

"மகனே! உன் தந்தை மாண்டுவிட்டார் என்று நினைக்க வேண்டும். எப்படியும் ஒரு நாள் இறந்துதான் ஆக வேண்டும். நாட்டுக்காய் இறப்பது பெருமை தரத்தக்கது அன்றோ?

ஒவ்வொரு வரும்,இங் கொருநாள் இறப்பரே!
ஆயினும் நாட்டினுக் காகவே மாள்பவன்,
உண்மை மகனாய் ஒளிர்ந்திடு கின்றான்;
அன்னைதான் பிறரால் அச்சுறுத்தப் படுங்கால்
மூலையில் பதுங்கி முடங்கிடும் மகன்தான்,
மகனே இல்லாத மலட்டு நிலையினும்
மிகவும் கீழாய் வீழ்ந்துபோ கின்றான்.

'தந்தை இறந்துவிட்டார்; இனி ஆதரவில்லையே என வருந்தாதே; ஒவ்வொரு தந்தையும் உன்னை மகனாய் ஏற்றுப் பேணுவர். மகனே நீ அழாதே!'

நீயழு திட்டால் என்னுடைத் தியாகம்
வீணாய்ப் போகும் என்பதை உணர்வாய்!

'என் மகனே நீ நீடுழி வாழ்க! நான் இறப்பதற்காய் வருத்தப்படவில்லை. என்னுடைய நண்பர்களுக்குப் பின்னாலே

இறக்கப் போகிறேனே என்பதால் வருந்துகிறேன். எதிரியின் குண்டுகளுக்கு வருந்துகிறேன் என்று எண்ணி விடாதே!

ஒவ்வொரு குண்டின் முகத்திலும் நானே
உன்னுடை உருவப் படத்தினைக் காண்கிறேன்.

என் குருதி நீ! என் குருதியை உயிருடன் வைத்திரு.

அன்புடை மகனே இதுவுன்றன் நாடாம்;
இந்தநன் நாட்டினைக் காத்திடு நீயே!
என்னுடைய மகனே நீ,நீடு வாழ்கவே!"

அழவேண்டாம் என மகனுக்குத் தந்தை கூறுகிறார். ஆனால் இக்கடிதத்தைப் படிக்கும்போது நம் கண்களில் நீர் வருவதைத் தடுக்க முடியவில்லையே. உணர்ச்சி குறையாத சிறந்த மொழிபெயர்ப்பினை இங்குக் காணமுடிகிறது.

இம்மொழிக் கவிஞர் ஒருவர், 'இராசம்மாள் எனும் பெண்ணின் அழகை எப்படிச் சொல்வதென்றே தெரியாமல் திகைக்கிறேன்' என்கிறார். பகலில் அவள் சூரியன்போல் ஒளிர்வாள்; இரவிலோ நிலவைப் போலத் திகழ்வாள். அவள் மேனி பனியைப் போலக் குளிர்ந்திருக்கும்.

புல்லின் மேல்அவள் வெறுங்காலில் நடந்தால்
அவளின் கால்கள் பச்சையாய்த் தோன்றும்![1]'

பாதங்களின் மென்மையை - ஒளி ஊடுருவும் தன்மையைக் கவிஞர் சொல்லியிருக்கும் அழகே அழகு!

கர்வால்

காடுகள் இயற்கைச் செல்வங்கள், காடுகள் இல்லையேல் மழை இல்லை. காடுகளை அழிப்பவர்களைக் கண்டித்துக் கர்வால் கவிஞர் 'கான்ஷியான் ரதூரி ஷைலானி' ஆவேசம் பொங்கப் பாடியுள்ள கவிதை ஒன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"அண்ணன்மார்களே! தம்பிமார்களே! அக்காள்-தங்கைகளே! எல்லோரும் ஒருங்கு திரளுங்கள். அரசாங்க ஆணைகளிலிருந்து காடுகளைக் காப்போம் வாரீர்.

சட்டங் களையவர் கையில்வைத் துக்கொண்டு
மரங்களை எல்லாம் வெட்டிவீழ்த் துகிறார்.

கெடுங்காலம் வந்துவிட்டது; மழை நம்மை விட்டுப் போய்விட்டது.

மலைச்சரி வின்மேல் காடுகள் எல்லாம்
அழிக்கப் பட்டே வீணாகிப் போயின.

---

1. As she walks barefoot on the grass
   her feet are green

அதன்செல்வ மெல்லாம் ஒன்றாய்த் திரட்டி
ஒப்பந்தக் காரன் சுருட்டிக்கொண் டிட்டான்.

ஆண்டாண்டுக் காலமாய் நாம் வளர்த்தோம்; இன்று அவற்றை வெட்டித் தாங்கள் செல்வம் தேடிக் கொண்டனர்; மலைகளின் புதல்வர்களோ தொலைதூர நகர்களில் பாத்திரம் கழுவி வாழ்ந்து வருகின்றனர். ஆள்வோரோ மரங்களை அடியோடு வீழ்த்தி அரித்துக் கொண்டுள்ளனர்.

புதிய காட்டுக்காய்ப் புதிய மரங்களை
யாரும் இங்கே நடுவ தில்லையே!

வனத்துறை மற்றும் வனக்காப்பாளர்கள் காடுகளைக் காக்கவில்லை; அவற்றுக்குச் சாவினையே விளைக்கின்றார்கள். நம்முடைய காட்டுக்கு அவர்கள் நல்லது செய்வார்கள் என எதிர்பார்த்தோம்; அவர்களுக்குப் 'பாதுகாத்தல்' என்னும் சொல்லே தெரியாது போயிற்றே!

மரங்களை நீங்கள் அணைத்துக் கொள்ளுங்கள்; அவர்களை வெட்டவிடாதீர்கள்.

மனிதர் உயர்ந்தே போகிறார் ;
  துச்சாதனர் வனத்தில் நுழைந்தனர்
கண்ணனாய் வருவான் ஒருவனே
  காட்டையும் நிலத்தையும் காக்கவே.[1]

காடுகள் அழிக்கப்பட்டால் இனி இந்த மலைகளில் என்று மழை பொழியும்.?"

கவிஞர் முத்துசாமியின் மொழிபெயர்ப்பால் இந்தியாவிலுள்ள 27 மொழிக் கவிதைகளின் கருத்துகளை அறிந்து கொள்ள முடிகிறது; அக் கருத்துகள் தமிழ் இலக்கியக் கருத்துகளோடு ஒத்திருப்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

முற்போக்கு எண்ணங்களில் இந்தியக் கவிஞர்கள் ஒத்த சிந்தனையுடையவராய் இருப்பதை இம்மொழிபெயர்ப்பால் அறியமுடிகிறது. அத்தகைய எண்ணங்கொண்ட கவிதைகளையே முத்துசாமி மொழிபெயர்ப்புக்குத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதுவும் புரிகிறது.

எல்லா மொழிகளிலும் எல்லாப் பொருள்களிலும் கவிதைகள் இருக்குமாயினும், இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் நாட்டுப் பற்று, தேசிய

1. Dussasan has entered our jungles
The one who comes as Krishna shall save the earth.

ஒருமைப்பாடு, விடுதலையுணர்வு, மத இன ஒற்றுமை, சாதி சமயக் கொடுமைகளைக் களைதல், அரசியலில் நேர்மை, பெண்கள் முன்னேற்றம், தலித்தியச் சிந்தனை, ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக் குரல், நால்வருண நச்சுத்தன்மையைப் போக்கல், அறக்கோட்பாடுகள், இயற்கை எழில், மரங்களை அழித்தலைத் தடுத்தல், சுற்றுச்சூழல் தூய்மை முதலாய சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் கவிதைகளேயே மொழி பெயர்த்துள்ளார், முத்துசாமி; அவருடைய நெஞ்சைத் தொட்ட உணர்வுகளை நம் நெஞ்சுக்கு மாற்றியுள்ளார்.

பாடல்களைப் படிக்கும்போது மொழிபெயர்ப்பு என்ற எண்ணம் தோன்றா வகையில் பெயர்ப்பு அமைந்திருப்பது மொழி பெயர்ப்பாளருக்குக் கிடைத்துள்ள வெற்றி.

கவிஞர் முத்துசாமி மொழிகள் பலவற்றிலிருந்தும் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். ஒரு மொழியினரால் அறியப்பட்டிருக்கும் கவிஞர்கள் மொழிபெயர்ப்பால் பலமொழி மக்களிடையே அறிமுகம் பெறுகிறார்கள்; புகழும் பெறுகிறார்கள்.

எழுத்து விதைகள்
இதயங்களில் தூவப்படும்போது
செழித்து வளர்வது
ஒரு தனிமனிதன் அல்ல
சமுதாயம்!

என்பார் கவிஞர் மு. மேத்தா. தனி மனிதனையோ, சமுதாயத் தையோ நல்வழிப்படுத்தும் ஈடிணையற்ற பணி, எழுத்துகளால் நடைபெற்று வருகிறது. இப்பணி ஒருபுறம் மூலநூல்களாலும் மற்றொருபுறம் மொழிபெயர்ப்பு நூல்களாலும் நிறைவேற்றப் படுகின்றன.

கருத்துப் பரப்பல் செய்யும் மொழிபெயர்ப்புப் பணியில் முனைந்து ஈடுபட்டிருக்கும் கவிஞர் முத்துசாமிக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

நூல் ஆக்கம்	எழுச்சிக்கவிஞர் ப. முத்துசாமி
வகைமை	கவிதை மொழிபெயர்ப்பு
வெளியீடு	சிவிகைப் பதிப்பகம், சிவியாம்பாளையம், நாமக்கல் மாவட்டம். (2005)

9

திருவீங்கோய்மலை எழுபது

ஒவ்வொரு நூலும் ஒரு பொருள்பற்றி நாற்பது பாடல்கள் கொண்டதாய் இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என நான்கு நூல்கள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் உள்ளன. எழுபது பாடல்களைக் கொண்ட நூலுக்கு எண்ணல் அளவை ஆகுபெயராய் 'எழுபது' எனப் பெயரிடுவது மரபாயிருந்துள்ளது. இவ்வகையில் பதினொன்றாம் திருமுறையில் உள்ள 'ஈங்கோய்மலை எழுபது' எனும் நூலே நமக்கு முதலாவதாய்க் கிடைக்கிறது. இதன் ஆசிரியர் நக்கீரர். கம்பர் எழுதியதாய்க் கூறப்படும் 'ஏர் எழுபது', 'சிலை எழுபது', ஒட்டக்கூத்தர் எழுதியதாய்க் கூறப்படும் 'ஈட்டி எழுபது' எனும் நூல்களும் உள்ளன.

திருஈங்கோய்மலை எழுபது அம்மலைமீதுள்ள இறைவனைப் பாடியுள்ளது. இந்நூல் எழுந்த காலத்தை உறுதியாய் அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. இம்மலை பெருஞ்சோலைகள் நிறைந்ததாயும், சிங்கம், யானை, முதலிய விலங்குகள் உடையதாயும் விளங்கியது என நூலில் பாடப்பட்டுள்ளது. ஆனால் இன்றோ வெறும் கற்பாறைக் குன்றாய்க் காட்சி தருகிறது. நூலுள் கூறப்பட்டுள்ள நிலைமாறி இன்றையநிலை ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுகளாவது ஆயிருக்க வேண்டும். அதுகொண்டு, இந்நூல் சங்க காலத்ததாயிருக்க வேண்டும் என்னும் அறிஞர் குறிப்பு ஆயத்தக்கது.

இந்நூலுக்கு இலக்கிய வரலாற்றறிஞர் மு. அருணாசலம் பிள்ளையும், பெரும்புலவர் பாலூர் கண்ணப்ப முதலியாரும் எழுதியுள்ள உரைகள் உள்ளன. அப்பரடிப்பொடி ச.திருநாவுக்கரசு எழுதியுள்ள உரையாய் இந்நூல் இப்போது வெளிவருகிறது.

ஈங்கோய்மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரியின் வடகரையில் திருச்சிராப்பள்ளி - சேலம் பெருவழியில் திருச்சிராப்பள்ளியிலிருந்து 42 கி.மீ. தொலைவில் உள்ளது.

"அகத்திய முனிவர் மலைமேலுள்ள இறைவனை வழிபட இங்கு வந்தபொழுது கோயில் நடை சாத்தப்பட்டிருந்ததாம். அவர் காவிரி ஆற்றில் முழுகி 'ஈ' உருவம் பெற்றுச் சென்று இறைவனை வழிபட்டாராம். திருவீங்கோய் மலையில் அகத்தியர் 'ஈ' உருவாய் இருந்து இன்றும் இறைவனை வழிபட்டுக் கொண்டிருப்பதாய்ப் புராணம் கூறும். இதனால் இத்திருத்தலம் 'ஈங்கோய்மலை' என்ற பெயரைப் பெற்றது என்பர். கோய் என்பதற்குக் குகை என்பதும் ஒரு பொருளாதலின் குகைகளையுடைய என்ற பொருளில் 'கோய்மலை' ஆயிற்று; அதுவே பின்னர் 'ஈங்கோய்மலை' என்றாயிற்று என்றும் கூறுவர். ஈங்கை என்பது இண்டைக் கொடியைக் குறிக்கும். இண்டைக்கொடி நிறைந்திருந்தமையால் ஈங்கைமலை எனப் பெயர் பெற்றுப் பின்னர் ஈங்கோய் மலையானது எனக் கருதவும் இடமுண்டு" என ஊர்ப் பெயர்க்கான காரணங்களை உரையாசிரியர் திருநாவுக்கரசு கூறிடக் காண்கிறோம்.[1]

இந்நூலை எழுதியவர் நக்கீரதேவ நாயனார் ஆவர். "இவர் வேறு; சங்கத் தமிழ்ப் புலவரான நக்கீரனார் வேறு; நக்கீரனாருக்குப் பன்னூறு ஆண்டுகள் பிற்பட்டுத் தோன்றியவர், இந் நக்கீரதேவ நாயனார்" என்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார் இவர் சங்ககால நக்கீரரே என்பர். சங்ககால நூல்களில் விநாயகரைப் பற்றிய குறிப்புக் காணப்படாததுபோல இந்நூலிலும் காணப்படவில்லை. ஈங்கோய்மலை எழுபதின் பத்தாம் பாடலில் இடம்பெற்றுள்ள,

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரல...

என்னும் அடிகள்,

யாழ்இசை இனவண் டார்ப்ப	(முல்லைப்பாட்டு)
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும்	(கலித்தொகை)
வண்டு யாழாக	(அகநானூறு)
மழலை வண்டினம் நல்யாழ் செய்ய	(மணிமேகலை)

என்ற சங்கநூற் கருத்துகளுடன் ஒத்துவருகின்றன. இன்னோரன்ன காரணங்களால் திருவீங்கோய்மலை எழுபது பாடியவர் சங்ககால நக்கீரரே என நிலைநிறுத்துவர் பால்வண்ண முதலியார் அவர்கள்" என்பதை எடுத்துக்காட்டி, 'நக்கீரர் திருவுருவம் திருப்பரங்குன்றத்தில் முத்துக்குமாரசாமிப் பெருமானின் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. திருவீங்கோய்மலையிலும் இவரது

1. இந்நூல், பக். 31

திருவுருவச்சிலை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது' என்கிறார் இவ்வுரையாசிரியர், திருநாவுக்கரசு. இதுகொண்டு இவர் ஈங்கோய் மலை எழுபது எழுதியவர் சங்ககால நக்கீரரே என்ற எண்ண முடையவர் என்பதை அறியமுடிகிறது.[1]

ஒவ்வொரு பாடலுக்கும் சொற்பொருள், பொழிப்புரை, விளக்கவுரை என மூன்று பகுதிகளில் உரை அமைந்திருக் கிறது. விளக்கவுரையில் திருஈங்கோய்மலைப் பாடலோடொத்த தேவார, திருவாசகப் பாடல்களும் பிறவும் மேற்கோள்களாய்க் காட்டப்பட்டுள்ளன. பொழிப்புரை சுருக்கமாயும் செறிவாயும் உள்ளது. ஓரளவே படித்தோரும் அறியும் வண்ணம் சொற் பொருள் மிக எளிமையாய் எழுதப்பட்டுள்ளது.

வெண்பா 15 சீர்கள் கொண்டது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு வெண்பாவிலும் பெரும்பாலும் முதல் 11 சீர்கள் மலையின் வளத்தைக் கூறுகின்றன. அடுத்த மூன்று சீர்களில் ஈங்கோய்மலை இறைவனின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. இறுதிச் சீர், மலை என்றோ அல்லது மலை எனப் பொருள்தரும் வேறு சொல்கொண்டோ முடிவடைகிறது. பெருமளவில் மலை, குன்று, வெற்பு, பொருப்பு, சிலம்பு எனும் சொற்களுள் ஒன்றுகொண்டு பாடல் முடிவடை கிறது. 'வரை' என்று ஒரு பாடலும் 'கடறு' என்று மற்றொரு பாடலும் முடிந்திருக்கக் காண்கிறோம்.

பாடல்கள் மலையின் இயற்கை எழிலை மிக அருமையாய்க் காட்டுகின்றன. உரையாசிரியர் தந்துள்ள கருத்துகளைத் தொகுத்து, அம்மலையின் எழில், அங்கு வாழும் உயிரினங்களின் தன்மை, மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் காணும்போது ஈங்கோய்மலை எழுபதின் அருமையையும் பெருமையையும் உணர்கிறோம்.

இயற்கை எழில்

ஈங்கோய் மலர்க்காட்டால் கமழ்கிறது. வண்டுகள் ஒலியெழுப்பி எங்கும் பறக்கின்றன. அவ்வொலி கேட்டு மகிழ்ச்சிப் பெருக்கால் மயில்கள் தோகை விரித்தாடுகின்றன.[2] ஆடுகின்ற மயில்களுக்குப் பரிசளிப்பன போல் (பொன் சொரிவனபோல்) கொன்றை மரங்கள் மலர்களைச் சொரிகின்றன.[3] கொன்றை

1. இந்நூல் பக். 35-36
2. திருவீங்கோய்., பாடல் 10
3. மேலது, பாடல் 31

மரங்கள் பொன்மாலைகளைத் தாங்கியுள்ளனபோலச் சரஞ்சரமாய்ப் பூத்துள்ளன. முல்லையின் அழகிய மலர்கள் நெருங்கியுள்ள பற்கள் போல மலர்ந்துள்ளன.[1] சுனையிலுள்ள தாமரைப் பூக்களை வண்டுகள் குடைந்துண்ணும்போது ஒளிமிக்க பூந்துகள் அவற்றின்மீது படிவதால் அவ்வண்டுகள் தங்கக் கட்டிகள்போல் காட்சியளிக்கின்றன.[2]

விண்ணளாவிய அடர்ந்த மரங்கள் மலையை அணி செய்கின்றன. பகலவன் ஒளியால் அம்மரங்கள் ஒளிபரப்பி நிற்கின்றன. ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் கணுக்களிலிருந்து முத்துகள் தாமே தெறித்து நிலத்தில் உதிர்கின்றன.[3]

இலவ மரங்களில் செந்நிறப் பூக்கள் நெருங்கிப் பூத்துள்ளன. அவற்றினிடையே கார்மயில் ஒன்று நிற்கும் காட்சி, எரி நடுவுள் பெண்ணொருத்தி நிற்பதுபோன்ற தோற்றத்தைத் தருகின்றது.[4]

அசைந்து வீசும் குளிர்த்தென்றல் வேனிற் பருவத்தில் மாமரங்களின் மகரந்தத்தில் படிந்து கணக்கற்ற பிஞ்சுகளைத் தோற்றுவிக்கிறது.[5]

அகன்ற சுனைகளில் தாமரைகள் பூத்துள்ளன. வெண்ணிற வயிற்றையுடைய கருநிற ஆமைகள் தாமரை மலரின் நடுவில் படுத்துறங்குகின்றன.[6]

குரங்குகள்

மந்தி ஒன்று மலையுச்சிக்குத் தாவிச் சென்று அங்குத் தொங்கிய தேனடையைப் பிய்த்து வருகிறது; அதில் தன் விரலை நுழைத்துத் தோய்த்துத் தோய்த்து ஆசையுடன் தன் குட்டிக்கு ஊட்டுகிறது.[7] செம்முகக் கருங்குரங்குகள் தேன்சுவைப் பலாச்சுளைகளைத் தம் குட்டிகட்கு ஊட்டுகின்றன.[8] பலாச்சுளைகளைக் குரங்குக் குட்டிகள் கசக்கிப் பிழிகின்றன; அவற்றினின்று வடியும் தேன், மரத்தினடியில் ஆறாய்ப் பெருக்கெடுக்கிறது.[9] மஞ்சு திரள்வதைக் காண மந்திகட்கு ஒரே மகிழ்ச்சி; முண்டியடித்துக் கொண்டு மலைமுகட்டிற்குத் தாவி ஓடுகின்றன. அங்கே முகிற்கூட்டத்தைக் கைகளால் அளைந்தாடி மகிழ்ந்து குதிக்கின்றன.[10] சுனைநீரில் போதிய குளிர்ச்சியில்லை

1. திருவீங்கோய்., பாடல் 28
2. மேலது, பாடல் 43
3. மேலது, பாடல் 41
4. மேலது, பாடல் 66
5. மேலது, பாடல் 67
6. திருவீங்கோய்., பாடல் 47
7. மேலது, பாடல் 9
8. மேலது, பாடல் 48
9. மேலது, பாடல் 65
10. மேலது, பாடல் 64

என்று பிணங்கிய மந்தி ஒன்று மலையுச்சிக்குச் சென்று, அங்குப் படிந்திருக்கும் மேகத்தைத் கீறி, அதனால் கிடைக்கும் குளிர்நீரைக் குடித்து வேட்கை தணிகிறது.[1] சிங்கமும் இவ்வாறே செய்து நீர்வேட்கை தணிவதுண்டு.[2] விண்ணிலே நிலவு வெளிப்படுகிறது. அதைக் கைப்பற்ற ஆசை கொள்கிறது ஓர் இளமந்தி; உயர்ந்த மூங்கிலின் உச்சிக்கு விரைந்தேறி அங்கிருந்து நிலவை எட்டிப் பிடிக்க முயல்வதுபோலக் கையை உயர உயர நீட்டுகிறது.[3]

செந்நிறக் காந்தள் மலரினுள் வண்டுபடிந்து தேனுண்ணு கிறது. அதைக்காணும் மந்தி, வண்டு நெருப்பில் வீழ்ந்து விட்டதாய் எண்ணிக் கலங்குகிறது; 'நெருப்பு நாசமாய்ப் போக' எனத் தன் கைகளில் நெட்டிமுறித்துத் தன் வெறுப்பினை வெளிப்படுத்துகிறது.[4] செந்நிற இலவம் பூக்களை நெருப்பு என மயங்கிய ஆண் குரங்கு ஒன்று, அம்மரம் தீப்பற்றிக் கொண்டதாய் எண்ணிப் பதறுகிறது. தீயை அவிக்கத் துடிக்கிறது; பச்சை மூங்கிற் கொத்துகளைப் பறித்துப் பறித்து அதன்மீது வேகமாய் வீசுகிறது.[5]

பளிங்கு போன்ற பாறையருகே ஒரு பழமரம்; அதன் கனிகளின் நிழல் பாறையில் தோன்றுகிறது. ஒரு குரங்கு நிழலுருவில் தெரியும் பழங்களை உண்மையான பழங்களென் றெண்ணி மற்றக் குரங்குகளிடம் காட்டுகிறது; எல்லாக் குரங்கு களும் தரையில் சூழ்ந்தமர்ந்து நகங்களால் பாறையைக் கீறிக் கீறிப் பழங்களைப் பறிக்க முயல்கின்றன. பழமாய் இருந்தால்தானே பறிக்க முடியும்; பாறையில் பட்டுத் தேய்ந்து குரங்குகளின் நகங்கள் தேய்ந்ததுதான் மிச்சம்.[6]

மூத்த மந்தி ஒன்று ஒரு கோலை எடுத்துத் தேனடையைக் குத்துகிறது; அதனால் ஒழுகும் தேனை, இளங்குரங்கு ஒன்று வாழை இலையில் ஏந்திப் பிடித்துச் சுவைக்கிறது.[7]

யானைகள்

யானை ஒன்று கண்ணுறங்குகிறது; கரு வண்டுகள் இசை முரல்கின்றன; குறத்தியர் பாட்டொலி ஒருபக்கம் எழுகிறது; அதுகேட்டுக் கிளிகளும் மகிழ்ச்சி பொங்க இன்னிசை பாடுகின்றன. அடேயப்பா! தூங்கும் யானைக்குத்தான் எத்துணை வகையான தாலாட்டுகள்.[8]

1. திருவீங்கோய்., பாடல் 19
2. மேலது, பாடல் 18
3. மேலது, பாடல் 68
4. மேலது, பாடல் 70
5. திருவீங்கோய்., பாடல் 17
6. மேலது, பாடல் 29
7. மேலது, பாடல் 33
8. மேலது, பாடல் 22

பிடி ஒன்று தன் களிற்றுடன் ஊடிக்கொள்கிறது; களிற்றுடன் திளைக்காமல் உறங்குவதுபோலப் பாசாங்கு செய்கிறது; பிடியின் ஊடலைத் தணிக்கக் களிறு சுவைமிக்க கதலிக் குலையைக் கொண்டுவந்து பிடிக்கு ஊட்டுகிறது; களிற்றின் அன்புப் பெருக்கைக் காணும் பிடியும் ஊடல் நீங்கி உவகை கொள்கிறது.[1] சோர்வுற்ற பெண் யானை காற்றின்மையால் வருந்த அச்சோர்வைப் போக்க ஆண்யானை இலைக் கொத்துகளை ஒடித்து வீசிக் காற்றுண்டாக்குகிறது; பெண் யானையும் களைப்பு நீங்கிக் களிப்புக் கொள்கிறது.[2] சூல் முதிர்ந்து, முலைகறுத்து, எழுந்திருக்கவும் முடியாது படுத் திருக்கும் பெண்யானையின் சோர்வைப் போக்க ஆண்யானை சந்தனப்பூம் பைந்தழையைப் பறித்துச் செந்தேனில் தோய்த்து தன் மடப்பிடிக்குக் கொடுக்கிறது. அதைப் பெற்றுண்ணும் பிடியின் கண்கள் களிக்கக் களிறும் மகிழ்கிறது.[3]

யானைகள் கொல்லைக்குள் புகுவதைத் தடுக்க வேட்டுவர் ஆங்காங்கே ஆழமான குழிகளைத் தோண்டி இலைகளை இட்டு மூடிவைத்திருப்பர். வழியில் புதைகுழிகள் உள்ளனவா என்றறிய மரக்கிளைகளை ஒடித்துத் தண்டுபோல் ஊன்றி ஊன்றிப் பார்த்து ஊறின்மையை அறிந்து யானைகள் விழிப்புடன் செல்லுகின்றன.[4]

யானைக்கு மஞ்சள் நீராட வேண்டுமென்ற ஆவல். வேங்கைக் கொம்பை முறித்துவந்து சுனையிலிட, சுனை நீர் மஞ்சள் நிறமாய் மாறுகிறது. யானையும் அதில் படிந்து நீராடிக் கரையேறுகிறது.[5]

கொம்பு நீண்ட களிறு ஒன்று பாறையில் தன் நிழலைக் காணுகிறது. அது மற்றொரு யானை என்ற கருத்தில் சீற்றமுற்றுப் பாய்ந்து குத்துகிறது; கோடு முறிகிறது; மீண்டும் நிழலைக் கண்டபோது கொம்பு தோன்றாமையால், இதுவரை பெண் யானையுடனல்லவா போரிட்டுவிட்டோம் என்று வெட்கப்பட்டு நிற்கிறது.[6]

---

1. திருவீங்கோய்., பாடல் 11
2. மேலது, பாடல் 25
3. மேலது, பாடல் 38
4. மேலது, பாடல் 36
5. மேலது, பாடல் 34
6. மேலது, பாடல் 56

யானையைக் கொன்ற ஒரு சிங்கம், அவ்வியானையின் மத்தகத்தைப் பிளக்க அதனுள்ளிருந்து முத்துகள் வீழ்கின்றன.[1]

பாம்புகள்

பாம்புகள் இரைதேட இரவில் புற்றைவிட்டு வெளி வருகின்றன. புற்றருகே கிடந்த செம்மணிக் கற்களின் ஒளிவீச்சை நெருப்பென அஞ்சி மீண்டும் புற்றுக்கே விரைந்தோடுகின்றன.[2] தோகை மயிலினங்கள் அகவி ஆடுதலால் பகலிலும், பாவம், பாம்புகள் வெளிவர முடிவதில்லை.[3] மலைப்பாம்புகள் குரங்கை விழுங்க அது கண்டு அஞ்சிய யானை துதிக்கையை நீட்டிப் பிளிறுகிறது.[4] பாம்புப் புற்றிலுள்ள புற்றாஞ்சோற்றை ஆண் கரடி தோண்டியெடுக்க, அதைப் பெறுவதற்காய்ப் பெண் கரடி கையேந்தி நிற்கிறது.[5]

வேட்டுவர்கள்

விலங்கினங்களைப் போலவே வேட்டுவர் பற்றியும் இந்நூல் விளக்கமுறக் கூறுகிறது. வேட்டுவர்கள் ஆளியையும் சிங்கத்தையும் அம்பெய்து கொல்லுகின்றனர்.[6] வேட்டுவன் ஒருவன் ஓர் அம்பால் பன்றியை எய்து கொன்றான்; மற்றோர் அம்பால் யானையையும் எய்து வீழ்த்தினான்; இதுகண்டு அஞ்சிய சிங்கம் அஞ்சித் தானே ஓட்டமெடுக்கிறது.[7]

ஒருவன் வேட்டைக்குச் செல்கிறான். அங்கொரு மான் தென்படுகிறது. அதைக்கொல்ல அம்பு தொடுக்க முயல்கிறான். அம்மானின் மருண்ட கண்கள் தன் மனைவியின் கண்களை நினைவூட்ட, அவனிடம் கனிவு பிறக்கிறது. கணையைத் தூர எறிகிறான். "கன்னிமானே! கவலைப்படாதே! உன்மீது அம்பு தொடுக்க மாட்டேன், 'பையப் போ' எனச் சொல்லும் வகையில் கையசைத்து அம் மானைச் செல்லவிடுகிறான்.[8]

வேட்டுவன் ஒருவன் ஒரு பெண் மானைப் பிடித்து வருகிறான். அவன் மனைவி, "ஆண் மானிடமிருந்து இதனைப் பிரித்துக் கொண்டு வந்திருக்கிறாயே! துணையைப் பிரிப்பது கொடுமையல்லவா" எனச் சீறி விழுகிறாள்.[9]

---

1. திருவீங்கோய்., பாடல் 48
2. மேலது, பாடல் 24
3. மேலது, பாடல் 50
4. மேலது, பாடல் 52
5. மேலது, பாடல் 54
6. திருவீங்கோய்., பாடல் 6
7. மேலது, பாடல் 16
8. மேலது, பாடல் 12
9. மேலது, பாடல் 60

வேட்டைக்குச் செல்லும் வேட்டுவன் ஒருவன் கண்களில் யானைக் கன்று ஒன்று தனித்துத் தென்படுகிறது. அதன் நிலை கண்டு இரங்கி, 'ஏழை இளமாதே! என்னோடு வா' என்று இட்டுச் சென்று, அதை யானைக் கூட்டத்துடன் இணைத்துவிட்டு வந்தான்.[1]

குறமகள் ஒருத்தி இனத்தினின்று பிரிந்து நிற்கும் இளமான் கன்றுக்குச் சந்தனத்தின் இளந்தளிரைத் தேனிலே தோய்த்து ஊட்டுகிறாள்.[2] மகவை ஈன்ற பெண்ணுக்கு ஊட்டச்சத்தாய் மலைக்குறத்தியர் அசலைக் கிழங்கை வேகவைத்துக் கொடுக்கின்றனர்.[3] யானைக் கொம்பு கொண்டு குறத்தி தினையைக் கல்லுரலிலிட்டு இடிக்கிறாள்; குறவன் செந்தேன் கொணர்கிறான்; தேனும் தினைமாவும் கலந்து இருவரும் உண்டு மகிழ்கின்றனர்.[4] குறமகளிர் தேனையும் தினைமாவையும் முதலில் மந்திக்குக் கொடுத்துப் பின்னரே தாமுண்ணுவர்[5]; இவ்வுணவைத் தேக்கிலையில் இட்டு, வந்த விருந்தினர்க்கு முகமலர்ந்து படைத்திடுவர்.[6] இவர்கள் மான்தோலை ஆடையாய் உடுத்து மயிலிறகைத் தலையிலே சூடியிருப்பர்.[7] போற்றிப் பாதுகாக்க வேண்டிய பவழங்கள் அம்மலையில் எடுப்பாரற்றுக் கிடப்பதால் மண்மூடிக் கிடக்கின்றன. ஒரு கொம்பைக் கொண்டு தரையைக் கீறிய அளவிலேயே பவழங்கள் வெளிப்படும். அப் பவழங்களைக் காய்களாய்க் கொண்டு சிறுமியர் அம்மனை விளையாடுவர்.[8]

இவ்வாறான எழிலும் வளமும் நிரம்பிய மலையில் மழை பொழிகிறது; அம் மழையின் பொழிவைக் கொண்டு நக்கீரர் அறியதொரு கற்பனையைத் தோற்றுவிக்கிறார். மலையின் ஒருபுறத்தில் பாம்பு யானையை அழிக்கிறது; மற்றொருபுறம் புலி மானைக் கொன்று அதன் உடலைக் கவ்வி உண்ணுகிறது; இவற்றைக் கண்டு மேகம் வருந்திச் சொரித்த கண்ணீர் ஒழுக்கே மலையிற் பெய்த மழைப்பெருக்கு என்கிறார், நக்கீரர். இவற்றைப் படிக்கும்போது நம் கண்களும் நீரைச் சொரிகின்றன. ஆம்! இன்பக் கண்ணீர்!

ஒவ்வொரு பாடற் கருத்தும் தனித்தனியே அழகிய ஓவியமாய் வரையக் கூடியவாறு அமைந்திருப்பது இந்நூற் பாடல்களின் தனிச் சிறப்பாம்.

---

1. திருவீங்கோய்., பாடல் 13
2. மேலது, பாடல் 2
3. மேலது, பாடல் 8
4. மேலது, பாடல் 20
5. திருவீங்கோய்., பாடல் 39
6. மேலது, பாடல் 44
7. மேலது, பாடல் 61
8. மேலது, பாடல் 3

சிவபெருமான் பெருமை

சிவபெருமான் ஈங்கோய் மலையில் மரகதாசலர் எனும் பெயருடன் விளங்குகிறார். அவ்விறைவனின் தோற்றப் பொலிவு, சீரிய செயல்கள், மெய்ஞ்ஞான மேன்மை, அருட்பண்பு ஆகியவற்றை இந்நூற் பாடல்கள் சுருங்கிய சொற்களில் விரிவாய்க் கூறுகின்றன. கற்போரின் சிந்தனைக்கு விருந்தாகும் என்பதால் அவை இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

(அ) சிவன் பொன்னார் மேனியன்; மேனி முழுவதும் நீறு பூசியிருப்பவன்; காதுகளில் சங்குக் குழை அணிந்தவன்; கைகளில் மான் தலையும் நெருப்பும் ஏந்தியிருப்பவன்; யானைத் தோல் போர்த்தவன்; ஒளி பொருந்திய சடையினன்; முடியில் கொன்றை சூடியவன்; சடைமீது இளமதியையும் கங்கையையும் தரித்தவன்; அரவம் ஊரும் மேனியன் எனச் சிவபெருமானின் தோற்றத்தை ஈங்கோய்மலைப் பாடல் தொடர்கள் அழகாய்ப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

ஏந்து அழலிற் பொன் ஏர் அனையான்	(பா. 42)
வெண்பொடி நீற்றான்	(பா. 25)
பொன்நிற வெண்ணீற்றான்	(பா. 61)
சங்கங் குழை இறுத்த காதுடையான்	(பா. 17)
கடதடத்த தோலுரிவைக் காப்பமையப் போர்த்தவன்	(பா. 23)
மின் அன்ன செஞ்சடையான்	(பா. 8)
செஞ்சடைமேல் கார்க் கொன்றை ஏற்றான்	(பா. 31)
செஞ்சடைமேல் வண்கொன்றைத் தாரான்	(பா. 41)
தாழ்சடைமேல் வண்டுன்றும் தாரான்	(பா. 36)
குரவரும்பு செஞ்சடையான்	(பா. 21)
மாமதியைச் சென்னி அணிந்தான்	(பா. 43)
தேங்கு புனல் கூனல் பிறை அணிந்தான்	(பா. 63)
திங்கள் கொழுந்து எழுந்த செஞ்சடையான்	(பா. 70)
செஞ்சடைமேல் வான் ஆறு வைத்தான்	(பா. 65)
செஞ்சடைமேல் வண்கங்கை ஏற்றான்	(பா. 54)
நங்கை விரைத் துவலைச் செஞ்சடையான்	(பா. 51)
மேனிப் பொருந்த அராப் பூண்டான்	(பா. 29)

(ஆ) சிவன் உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவன்; அவன் முருகனின் தந்தை.

மாதைப் புரிந்து இடத்துக் கொண்டான்	(பா. 62)
வெற்பின் வளமகளிர் பாகன்	(பா. 39)

குமரன் முது தாதையர் (பா. 40)

பூ மயிலி தாதை (பா. 10)

அழகிய மயிலை ஊர்தியாய் உடைய முருகனை, 'பூ மயிலி' எனச் சொல்லியிருப்பது அழகுக்கு அழகு சேர்க்கிறது.

(இ) சிவன் விடை (எருது) ஊர்தி உடையவன் என்பதை,

ஏங்குமணி பூண்ட கழை(காளை) ஏறி (பா. 7)

பொரு விடைக்கண் ஊர்வான் (பா. 53)

எனும் தொடர்கள் அறிவிக்கின்றன.

(ஈ) தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சினைச் சிவன் தாம் உண்டார். அந்நஞ்சு அவர் கழுத்திலேயே தங்கியது; கழுத்து நிறம் மாறியது; ஆதலின் சிவன் நீலகண்டன் என வழங்கப்படுகிறான். இச்செய்தியை உள்ளடக்கிய அடிகள்

மையடுத்த கண்டன் (பா. 4)

மைக் கொணரும் கண்டன் (பா. 20)

விட மிடற்றினான் (பா. 23)

மை நீட்டும் கண்டன் (பா. 32)

விண்களிக்க நஞ்சுண்டான் (பா. 38)

வானோர் வெருவுகடல் நஞ்சுண்டான் (பா. 49)

(உ) அசுரர்கள் மூன்று கோட்டைகளாய் விண்ணில் இயங்கித் தேவர்கட்குத் தொல்லை விளைத்து வந்தனர். அவர்களை அழிக்கச் சிவபெருமான் மேரு மலையை வில்லாயும், வாசுகி என்ற பாம்பை நாணாயும், திருமாலை அம்பாயும் கொண்டார். ஆயினும் தான் வெகுண்டு சிரித்த அளவிலேயே அக்கோட்டைகள் எரிந்து சாம்பலாகுமாறு செய்தார். சிவன் முப்புரங்களை எரித்த புராணக் கூற்றை விளக்கும் ஈங்கோய் எழுபது அடிகள் வருமாறு

மேருமலை வளைக்கை வில்லி (பா. 2)

தூங்கு எயில்கள் சென்றன்று வென்றான் (பா. 12)

மூ எயிலும் கொல்லரும்பக் கோல் கோத்தான் (பா. 28)

இஞ்சி சிலையால்தான் செற்றான் (பா. 23)

மூ எயிலும் வில்லே கொடு வெகுண்டான் (பா. 56)

மூ எயிலும் திக்கு உகக்கச் செற்றான் (பா. 58)

மூன்று வள எயில் தீயிட்டான் (பா. 59)

(ஊ) சிவபெருமான் சோதி வடிவில் நின்றபோது அவன் முடியைக் காணப் பிரம்மன் அன்ன வடிவில் உயரப் பறந்தும், திருமால் பன்றி வடிவாய் நிலத்தை அகழ்ந்து சென்றும் அவர்களால் சிவனுடைய முடியையும், அடியையும் காண முடியவில்லை. அரி, அயனாலும் அடிமுடி காண முடியாதவன் சிவபெருமான். "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி" என்பது மாணிக்கவாசகர் வாக்கு. இச்செய்தியை ஈங்கோய் எழுபது பாடல் தொடர்களும் அறிவிக்கின்றன.

> கோள் அரிக்கும் காண்பு அறியான் (பா. 16)
> கோச்சீயம் காண்பு அறியான் (பா. 18)

(எ) மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டு இறைவன் இயமனை உதைத்துச் சாய்த்தான்.

> மார்க்கண்டர்க் காக,மறலிபட்ட பாட்டை உன்னிப்
> பார்க்கில்,அன் பர்க்கு,என்ன பயங்காண் பராபரமே

என்பது தாயுமானார் பாடல். அடியார்கள் பக்கம் இயமன் இனிச் செல்லாமலிருப்பதற்காகவே இறைவன் இயமனை உதைத்துச் சாய்த்தான் என்ற கருத்து ஈங்கோய் பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

> கூற்றம் வளைந்தோடச் செற்றான் (பா. 64)
> கூற்றம் திரியாமல் செற்றான் (பா. 5)
> வெங்கூற்றைச் சேராமல் செற்றான் (பா. 47)

(ஏ) சிவபெருமான் யோக நிலையில் இருந்தபோது அவனுடைய அந்நிலையைக் கலைத்துப் போகநிலையினை ஊட்டத் தேவர்கள் மன்மதனை ஏவினர். அவன் தன் கரும்பு வில்லை வளைத்து, மலர் அம்புகளை எய்தபோது, இறைவன் சிறிது விழித்துப் பார்க்க, அவன் கண்களிலிருந்து எழுந்த தீ காமனை எரித்துச் சாம்பலாக்கியது. இச்செய்தியை அறிவிப்பனவாய்,

> தீங்கரும்பு வில்லிக்குக் கூற்றானான் (பா. 67)
> காமன் வெருவொன்றக் கண்சிவந்தான் (பா. 24)

இத் தொடர்கள் அமைந்துள்ளன.

(ஐ) சிவன் தென்முகக் கடவுளாய்க் கல்லால மரத்தின் கீழமர்ந்து சனகாதி முனிவர் மக்கள் நால்வர்க்கும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களைத் தன் சின்முத்திரையால் தெரியச் செய்தான்.

> நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
> அன்(று)ஆலின் கீழிருந்து அங்(கு)அறம் உரைத்தான்

என்பது திருவாதவூரர் திருவாக்கு. இதனை ஈங்கோய்மலை எழுபது

ஆல்கீழ் நால்வேதம் தெரிந்துரைப்பான் (பா. 22)

நான்கு மறைக்கு ஈறு கண்டான் (பா. 19)

என இயம்புகிறது.

(ஓ) சிவபெருமானை என்றும் வேதங்கள் புகழ்ந்தவண்ணம் இருக்கும் என்பதை, *'வேதம் விளம்பு இறை'* (30) எனவும்

உலகம் நன்கு நடைபெற இறைவன் எல்லாக் கலைகளையும் உலகுக்குத் தந்துள்ளான் என்பதை, *'மாக்கலைகள் வைத்தான்'* (44) எனவும்,

உலகு இயங்க இறைவன் ஓயாது நடம்புரிபவன் என்பதை, *'மாக்குரவை ஆடி'* (45) எனவும்,

அவன் முப்புரிநூல் அணிந்த மார்பினன் என்பதை, *'புரி நெடுநூல் மார்பன்'* (66) எனவும்,

வேதங்கள் போற்றுகின்ற, பூ இட்டு அருச்சிக்கக் கூடிய அழகிய திருவடிகளைக் கொண்டவன் இறைவன் என்பதை, *'மறைபரவு பூம்பிடி பொன் தாளான்'* (69) எனவும்,

எல்லா உயிர்களிடத்தும் என்றும் நீங்காமல் நின்று, அவ்வுயிர்களைத் தொழிற்படச் செய்பவன் இறைவனே என்பதை, *'ஓங்காரமாய் நிற்பவன்'* (1)

எனவும் ஈங்கோய்மலை எழுபது புலப்படுத்துகிறது.

(ஓ) வானவர் வணங்கி வழிபடுகின்ற தலைவனாயும், அவர்களுடைய துயர்போக்கி அருள்பவனாயும் ஈங்கோய் மலை இறைவன் இருக்கின்றான்.

வானோர் குணமருட்டும் கோளரவன் (பா. 11)

பாங்கு அமரர் சீராட்ட நின்றான் (பா. 48)

வானோர் மருவு அரியான் (பா. 55)

வானோர் குருவருள் குன்றாய் நின்றான் (பா. 57)

(ஔ) நம் வினைகளை அகற்றி அருள்புரிபவன் ஈங்கோய்மலை இறைவனே என்பதை நூலுள் பல தொடர்கள் எழிலுற எடுத்தியம்புகின்றன.

கொடுவினைகள் வீட்டுவிப்பான் (பா. 6)

நம்தம் வினைக் குவால் வீட்டுவிப்பான் (பா. 13)

நம்மேல் வினை இரியச் செற்றுகந்தான் (பா. 15)

நம்மேல் வினைவளையச் செற்றுகந்தான் (பா. 50)

நம்மேல் வருந்துயரம் தீர்ப்பான் (பா. 68)
நம்தம் மனக்கவலை தீர்ப்பான் (பா. 27)
தீங்கு வரவுஅதனைக் காப்பான் (பா. 37)
நம்மேல் மறுக்கங்கள் தீர்ப்பான் (பா. 14)
மறுதலைநோய் தீர்ப்பான் (பா. 3)
நம்மேல் வரல்ஆம் நோய் தீர்ப்பான் (பா. 9)
மேல்நோய் வருங்கைக் களைவான் (பா. 34)
அன்பர் குறித்த வரந்தான் கொடுப்பான் (பா. 35)
எவ்வுயிர்க்கும் வாட்டங்கள் தீர்ப்பான் (பா. 46)

ஈங்கோய்மலை இறைவனே. அப்பெருமானின் அருட் பெரு வெள்ளத்தில் ஆடித் திளைக்கத் திருநாவுக்கரசு அவர்களுடைய உரை வழிகாட்டி அழைத்துச் செல்கிறது.

'ஈங்கோய்மலை எழுபது' எனும் நூலுக்குத் திருநாவுக்கரசு எழுதியுள்ள உரை மெச்சுந்தகையதாயுள்ளது. பண்டைய உரையாசிரியர்கள் நெறிநின்று திருநாவுக்கரசு இந்நூலுக்கு உரை வரைந்துள்ளார். (இனி இங்கு 'உரையாசிரியர்' என வழங்குவது திருநாவுக்கரசு அவர்களைச் சுட்டுவதாகும்.)

(அ) ஈங்கோய் மலை எழுபது பாடல்களில் இடம்பெற்றுள்ள புராணக் குறிப்புகளுக்குரிய முழுச் செய்திகளையும் கதைகளையும் விளக்கவுரையில் உரையாசிரியர் தெளிவாய்த் தந்துள்ளார்.

(ஆ) ஒவ்வொரு பாடலுக்கும் ஒப்புமைப் பகுதிகளைத் திருத்தமாய்ப் பொருத்தமுறத் தந்திருக்கிறார்.

'மறைபரவு பூப்பிடிபொன் தாளான் பொருப்பு'[1] என்பது பாடலில் உள்ள தொடர். இதற்கு, 'வேதங்கள் துதிக்கும் பூவின் தன்மையைக் கொண்ட அழகிய தாள்களையுடைய சிவபெருமான்' எனப் பொருள் கூறியுள்ள உரையாசிரியர், 'வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்பார் மாணிக்கவாசகர்; 'ஆர் அறிவார் என அனந்தமறை ஓலமிடும்' என்பார் தாயுமானார்; 'சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும், மதுரம் பொழில்சூழ் மறைகாட்டுறை மைந்தா' எனத் திருஞானசம்பந்தரும் அருளிச் செய்துள்ளனர் என ஒப்புமை காட்டியுள்ளார். இவ்வாறே ஒவ்வொரு பாடலுக்கும் ஒப்புமைப் பகுதிகள் தரப்பட்டிருப்பது உரையாசிரியரின் பன்னூற் புலமையை நன்கு புலப்படுத்துகிறது.

1. திருவீங்கோய்., பாடல் 69

சமயம் சார்ந்த தொடர்களுக்கு ஒப்புமைப் பகுதிகள் பெரும்பான்மை தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய சைவத் திருமுறைகளிலிருந்தே தரப்பட்டுள்ளன. இயற்கை எழிலைக் கூறுமிடங்களில் சங்க இலக்கியங்கள், இராமாயணம் முதலாய நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகள் சுட்டப் பட்டுள்ளன.

(இ) பாடல் ஒன்றிலுள்ள செய்தி, முன்னரே கூறப் பட்டிருப்பின் அது எங்கெங்குளது என்பதைக் குறிப்பிடுகிறார். *'நம்மேல் வரும் துயரம் தீர்ப்பான் மலை'* எனும் 'அடி 68ஆம் பாடலிலுள்ளது. இதனை முன்னரும் 3, 9, 14, 34, 37, 46 ஆகிய பாடல்களிலும் பாடியுள்ளமை காண்க' என்கிறார். இது கொண்டு அனைத்துப் பாடல்களையும் மனத்திற்கொண்டே உரையாசிரியர் உரைவரைந்து செல்கிறார் என்பதை உணரமுடிகிறது.

(ஈ) நக்கீரதேவரின் சொல்லாட்சித் திறனைத் தெளிவாய் உணர்ந்து உரையாசிரியர் சொற்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

'பச்சைத்தேன்' என்பது பாடலில் உள்ள தொடர்.[1] தேன் பச்சையா? என்ற ஐயம் படிப்போர்க்கு எழக்கூடும். அம் மயக்கத்தை நீக்க, உரையாசிரியர் அதற்குக் 'காய்ச்சப்படாத தேன்' எனப் பொருள் கூறியுள்ளார். ஆசிரியர் தந்துள்ள இப்பொருள் நம்மை மேலும் சிந்திக்க வைக்கிறது. 'அப்பொழுதுதான் எடுக்கப்பட்ட புதியதேன்' என்றும் பொருள் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது. 'பச்சை இரத்தம் பரிமாறி இந்த நாட்டைச் சலியாத வருவாயும் உடையதாகத் தந்தது எவர்?' எனும் பாரதிதாசன் பாடலடியையும் இங்கே நினைவு கூரலாம்.[2]

'பெருந்திசை நான்கு' என்பது பாடலடி.[3] திசைக்குப் பெரிய என்ற அடையை ஆண்டிருப்பதற்கான காரணத்தை உரையாசிரியரின் விளக்கம் தெளிவுபடுத்துகிறது. "திசைகளைப் பத்தாகவும், எட்டாகவும், நான்காகவும் பிரித்துக் கூறப்படுதல் வழக்கம். நான்காகப் பிரிக்கப்பட்டதனை இங்குப் 'பெருந்திசை' என்றார்" என்கிறது உரை. எட்டாகவோ, பத்தாகவோ பிரிக்கும் போது நான்காகப் பிரிப்பதைவிடத் திசையின் பரப்பு சிறுகும். ஆதலால் 'பெருந்திசை' என நான்கு திசை கூறப்பட்டிருப்பதற் கான விளக்கத்தினை இங்கே பெறுகிறோம்.

---

1. திருவீங்கோய்., பாடல், 44
2. பாரதிதாசன் பாடல்கள், முதல் தொகுதி, புரட்சிக் கவி
3. திருவீங்கோய்., பாடல் 57

பாடல் 52இல் *'நாகம்'* எனும் சொல் நான்கு இடங்களில் உள்ளது. 'நாகம்' என்ற சொல் பலபொருள் தரும் ஒரு சொல். "இங்கு முறையே மலை, மலைப்பாம்பு, குரங்கு, யானை என்ற பொருள்களில் வந்துள்ள அழகைக் காண்க" எனும் உரைக்குறிப்பு பாடலின் பொருளைத் தெளிவுற உணரவைக்கிறது.

பாடல் 48இல் *பைங்குரங்கு* என்றது கருங்குரங்கை எனப் பொருள் தந்துள்ளார். (பசுமை + குரங்கு = பைங்குரங்கு). பசுமை என்பதற்குக் கறுப்பு என எவ்வாறு பொருள் கொண்டுள்ளார் என்பது விளங்கவில்லை.

(உ) சொற்கள் சில அப்பெயர் பெற்றமை ஏன் என்பதற்கான விளக்கமும் ஆங்காங்கே உள்ளன.

கருமை நிறமுடைமையின் யானைக்குக் கரி எனும் பெயர் உளதாயிற்று.[1]

ஆறு பாதங்களைப் பெற்றது வண்டு ஆதலின் அறுபதம் எனப்பட்டது.[2]

வெள்ளிலவம் - வெள்ளிலவ மரம். 'வெள்ளியது' என்றது அம் மரத்தின் நிறம் வெண்மையாய் இருத்தல் பற்றி.[3]

(ஊ) சொற்களுக்கு விரிவான பொருள் விளக்கமும் உரையில் தந்து செல்கிறார். பாடல் ஒன்றில் 'அம்மனை' எனும் சொல் இடம் பெறுகிறது. "அம்மானை என்பது மகளிர் ஆடும் ஒருவகை விளையாட்டு. அஃது இங்கு அம்மனை என வந்தது. இதனை மூன்று பெண்கள் சேர்ந்து விளையாடுவர். முதலில் ஒருத்தி ஒரு கருத்தைக் கூறிக் காயை உருட்டுவாள். மற்றொருத்தி அதன்மேல் ஐயத்தோடு வினா எழுப்பிக் காயை உருட்டுவாள். மூன்றாமவள் அவ்வினாவிற்கு விடைகூறிக் காயை உருட்டுவாள். அம்மானை ஆடும்போது முத்து, பவழம், மாணிக்கம் போன்ற பொருள்களை ஆடும் காய்களாய் அமைத்துப் பாடுவது இலக்கிய வழக்கு" என விரிவான விளக்கம் தருகிறார்.[4]

(எ) "அருவி என்பது இக்காலத்தே நீர்வீழ்ச்சி என வழங்கப்படுகிறது. நீர்வீழ்ச்சி என்பது Water falls என்பதன் மொழி பெயர்ப்பே. அருவி என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும். அருவி மலையினின்று ஒழுகுதலைத் திருமுருகாற்றுப்படை,

1. திருவீங்கோய்., பாடல் 63
2. மேலது, பாடல் 10
3. மேலது, பாடல் 66, விளக்கவுரை
4. மேலது, பாடல் 3, விளக்கவுரை

"இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர்சோலை மலை கிழவோனே" என்று சிறப்பு 'ழ' கரம் அணிவகுக்கக் கூறிய அழகு காண்க" [1] எனக் கூறிச் சொற்கள் மரபுவழி எழுதப்பட வேண்டும் என்பதை உரையாசிரியர் வலியுறுத்துகிறார்.

(ஏ) சிலேடை, உவமை, கற்பனை முதலாயவை இடம்பெற்றுள்ள இடங்களைச் சுட்டித் தக்க விளக்கமும் தந்து செல்கிறார்.

(ஐ) உரையாசிரியரின் உயரிய தமிழ்ப்பற்று 22ஆம் பாடல் உரையால் புலப்படுகிறது. ஆலின்கீழ் வேதம் நான்குரைத்தவன் சிவபெருமான். அவன் கல்லால மரத்தின் கீழமர்ந்து சனகர், சனாதனர், சனற்குமரர், சனந்தனர் என்னும் நால்வர்க்கும் நான்குமறைகளின் பொருளை அறிவித்தான். இங்கு, உரையாசிரியர் 'கல்லாலின்கீழ் நால்வர்க்கு உரைத்த தமிழ்மறை தான் நான்மறை; அவை வடமொழி வேதங்களன்று என்பதை உணரவேண்டும் என்னும் குறிப்பைத் தருகிறது என அழுத்தந்திருத்தமாய்ச் சொல்கிறார்.' [2] 'நூலைப்படி - இறந்த தமிழ் நான்மறை பிறந்ததென்று சொல்லும்படி நூலைப்படி' எனும் பாவேந்தர் பாடலில் பண்டு தமிழ் நான்மறைகள் இருந்தனவெனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

(ஒ) வேண்டிய இடங்களில் இன்றியமையா இலக்கணக் குறிப்புரைகளையும் உரை கொண்டிருக்கிறது.

'தம் அன்னையை' என்பது இடைக் குறைந்து 'தம் அனையை' என வந்தது.[3]

'நக' என்பது 'நக்கு' என்று திரிந்து வந்தது.[4]

கடறு - காடு; இங்கு ஆகுபெயராய் மலையைக் குறித்தது.[5]

– நெடுநெடென
நீண்டகழை முத்துதிர்க்கும் ஈங்கோயே! ஏங்குமணி
பூண்டகழை யேறி பொருப்பு [6]

ஏங்குமணி பூண்ட கழை ஏறி இதன் பொருள் ஒலிக்கின்ற மணிகள் அணிந்த காளையின் (எருதின்) மேல் ஏறியவனான சிவபெருமான் என்பதாம். காளை என்றிருக்கவேண்டிய இடத்தில்

1. திருவீங்கோய்., பாடல் 49, விளக்கவுரை
2. மேலது, பாடல் 22, விளக்கவுரை
3. மேலது, பாடல் 3
4. மேலது, பாடல் 58
5. மேலது, பாடல் 31
5. மேலது, பாடல் 7

'கழை' என்றிருக்கிறதே! நக்கீரர் பிழைபட எழுதிவிட்டாரா? அன்றன்று. பூண்ட கழை என்பது, மேலடியிலுள்ள நீண்ட கழை என்பதற்கு எதுகையாய் அமைந்துள்ளது. காளை என்பது எதுகை நோக்கிக் குறுகலும் திரிதலும் பெற்றுக் கழை என வந்தது என உரையாசிரியர் கூறியுள்ள அமைதியின்றெனின் நாம் பாடலைப் பிழை எனக் கருத நேரிடும்.

(காளை - களை என்பது குறுகுதல்; களை - கழை என்பது திரிதல்)

51ஆம் பாடல் :

நறவம் நனிமாந்தி நள்ளிருட்கண் ஏனம்
இறவில் இயங்குவான் பார்த்துக் – குறவர்
இரைத்துவலை தைத்திருக்கும் ஈங்கோயே...

என உள்ளது. இரவில் இயங்குவான் பார்த்து - (காட்டுப்பன்றி) இரவில் நடமாடுவதைப் பார்த்து என்பது பொருள். இரவில் என்றிருக்க வேண்டிய இடத்தில் 'இறவில்' என்றிருக்கின்றதே! பிழையன்றோ, எனின் அன்று; இரவு என்பது எதுகைநோக்கி இறவு எனத் திரிந்தது என விளக்கம் தந்து உரையாசிரியர் நம் மயக்கம் தீர்க்கிறார். முதலடியில் நறவம் என்றுள்ளதால் எதுகை நோக்கி இரண்டாம் அடி 'இறவில்' எனத் தொடங்குகிறது; இடையின 'ர' கரம் எதுகை நோக்கி வல்லினமாய் 'ற' என்றாயிற்று.

40ஆம் பாடலில் இறுதியடியின் முதற்சீர் 'குமரன்முது' என்றுள்ளது. இது கனிச்சீராகும். (கும, ரன், முது - விளமாங்கனி). வெண்பாவில் கனிச்சீர் இடம் பெறுவது பிழையாயிற்றே! உரையாசிரியர் 'குமரன்முது' என்ற சீரினை 'ன'கர ஒற்று நீக்கி அலகிடுக எனக் கூறி நக்கீரர் இலக்கணப் பிழைபட எழுதினவ ரல்லர் என அரண் செய்கிறார்.

(ஓ) உரையாசிரியர் சிவனிய (சைவ) நெறியினர். வாய்ப்பு நேருமிடங்களிலெல்லாம் தம் நெறிக் கருத்தை நிலைநாட்டிச் செல்கிறார். மாலிய (வைணவ) நெறியினரும் சிவனிய நெறியை ஏற்பவரே என ஓரிடத்தில் இயம்பியிருப்பதைக் காண்கிறோம். பாடல் 25இல் உள்ள 'வெண்பொடி நீற்றான்' எனும் தொடருக்கு 'வெண்ணீறணிந்த சிவபெருமான்' எனப் பொருள் தருகிறார். 'முற்றும்வெண் ணீறணிந்த திருமேனியன்' எனத் திருஞான சம்பந்தரும், 'பூசுவதும் வெண்ணீறு' என மணிவாசகரும் பாடியிருப்பதை ஒப்புமை காட்டுகிறார். சிவபெருமான் திருநீறு பூசியிருப்பவன் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இவ்வுரையாசிரியர் திருமாலும் திருநீற்றை அணிந்துள்ளான்

எனக் கூறி, "கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும் பெரியகோலத் தடங்கண் விண்ணோர் பெருமான்" எனும் நம்மாழ்வார் பாடலடிகளை மேற்கோளாய்க் காட்டியுள்ளார். 'வெளியநீறு சிறிது' என்பது திருமால் நெற்றியில் தரித்துள்ள திருமண்ணிலுள்ள சிறிய வெள்ளைக் கோட்டினையே குறிக்கும். ஆனாலும், உரையாசிரியர் தம் சைவப்பற்றால் திருமாலையும் திருநீறணியச் செய்துவிடுகிறார்.

ஈங்கோய் மலை இறைவனின் சிறப்புகளையெல்லாம் அன்னவரும் நன்கறியும் வகையில் திருநாவுக்கரசு அவர்கள் உரை வரைந்துள்ளார்கள். இவர் கணித ஆசிரியர்; தமிழின்பால் கொண்ட பற்றால் தமிழ் கற்றுப் புலவரானவர். ஆதலின், இவர் உரை கணித நுணுக்கமும் தமிழ் இனிமையும் ஒன்றிணைந்த சிறப்புடையதாய் இருக்கிறது.

இந்நூலுள் பாடலின் நேர்பொருள் மட்டுமே தரப் பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இயற்கை வருணனையின் உள்ளுறையாய்ச் சிறந்த ஆன்மிகப் பொருள் பொதிந்து கிடக்கிறது. இந்நூலுக்கு ஓர் ஆன்மிக உரையையும் திருநாவுக்கரசர் தரவேண்டும் எனும் விழைவோடு உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	அப்பரடிப்பொடி ச. திருநாவுக்கரசு
வகைமை	உரைநூல்
வெளியீடு	திருவள்ளுவர் மன்றம், திருஈங்கோய்மலை. (2003)

10

கண்ணதாசன் கவிதைகள் ஓர் ஆய்வு

இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன் வரிசையில் உடன் வைத்து எண்ணத்தக்க பெருமைக்குரிய கவிஞராய் விளங்கியவர், கண்ணதாசன். பாரதியார் பாடல்களில் தேசியச் சார்பு பெரிதும் உண்டு. பாரதிதாசன் தொடக்கத்தில் தேசியப் பாடல்களை யாத்துள்ளார்; எனினும், அவர் சுயமரியாதை இயக்கச் சார்புக் கவிஞராகவே பெரும் புகழ் பெற்றுள்ளார். கண்ணதாசன் தொடக்கத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்; பின்னர்த் தமிழ்த் தேசியக் கட்சியின் பெருந்தலைவர்களுள் ஒருவரானார்; அடுத்து அவர் தம்மைக் காங்கிரசு இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்.

கண்ணதாசன் அரசியல்

அரசியல் கருத்துகளை அவர் அவ்வப்போது மாற்றிக் கொண்டபோதிலும் அவ்வப்போது தாம் சரியென எண்ணிய வற்றை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் துணிவினராய் விளங்கி வந்தார். அவரே,

> போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்!
> ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்;'

எனப் பாடியிருக்கக் காணலாம்.

தம் எழுத்தின் வன்மையை நன்குணர்ந்தவர், கண்ணதாசன். அதனை அவரே வெளிப்படுத்தியுமிருக்கிறார். "ஜான்சன் என்னும் ஆங்கில ஆசிரியரைப்பற்றி நண்பர்கள் சிலர், 'அவன் திமிர் பிடித்தவன்' என்று கூறுவர். சரக்கு இருப்பதனால் அவன் அந்தத் திமிரைத் தைரியமாய் வெளிக்காட்டிக்கொண்டான் எனச் சிலர் சமாதானம் கூறுவர். ஒன்று உண்மை. 'அவன்' தானே தனக்குநிகர் என்று வாழ்ந்தான். ஒருமுறை அவன் எழுதிய நூலைப்பற்றிப் பல

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக்.

ஆங்கில விமரிசகர்கள் தாக்கி எழுதினர். ஜான்சன் பதில் எழுதாமல் வாய்மூடி மௌனியாய் இருந்தான். இதுபற்றி அவனது நண்பர்கள் சிலர், 'நீங்கள் பதில் எழுதவேண்டும்' என்று வற்புறுத்தினார்கள். அதற்கு ஜான்சன் சொன்ன பதில் இது

"என்னைத் தாக்கி எழுதுபவர்கள் பெரிய எழுத்தாளர்களாய் இருக்கலாம். ஆனால், என்வரையில் அவர்கள் சாமானியர்கள். நாளைக்கு அவர்கள் செத்துப்போவார்கள்; அத்தோடு அவர்கள் எழுதிய நூல்களும் செத்துப்போகும். நான் செத்தாலும் என் எழுத்துகள் நிலைத்து நிற்கும். என் எழுத்துகளில் அவர்கள் பெயர்கள் வந்தால் எதிர்காலத்தில் மக்கள் 'ஓகோ! இப்படியும் சிலர் இருந்திருக்கிறார்கள்' என்று தெரிந்துகொள்வார்கள். அவர்களுக்கு இந்த விளம்பரமுமா நாம் தரவேண்டும்?"

"இது திமிர் என்றால், இந்தத் திமிர் என்னையும் பிடித்திருக்கிறது என்பதைத் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஜான்சன் அல்லன்; மிகச்சாமானியன். ஆனால், சாமானியர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சிறப்பில் திமிர் வரலாமல்லவா?" [1] என அவர் எழுதியுள்ளார்.

இத்தகைய மனப்பக்குவம் உடையவராதலின் விமரிசனங்கள் எழுமே என்பதற்காய்த் தம் எழுத்தில் எதையும் மறைக்காதவர், கவிஞர் கண்ணதாசன்.

கண்ணதாசனின் முரண்பாடுகள்

போற்றுவதோ தூற்றுவதோ, கண்ணதாசன், உச்ச எல்லைக்குச் சென்றிடுவார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த போது பேரறிஞர் அண்ணாவை,

> சங்கத் தமிழெடுத்து
> தங்கத்திலே இணைத்து
> எங்குந் தருவாரடி – என்அண்ணா
> இன்பத் தமிழாரடி!...
>
> நாட்டிற்கு ஒருவரடி!
> நற்றமிழ் அறிஞரடி!
> கேட்டவர் அறிவாரடி – என்அண்ணா
> கீழ்க்குணம் அறியாரடி! [2]

எனப் பெருமைப்படுத்தப் பாடினார். தமிழ்த் தேசியக்கட்சியில் கவிஞர், சம்பத்துடன் இணைந்தார். அக்கட்சி சிறிது காலம் செயற்பட்டது. பிறகு, அக்கட்சி அனைத்திந்திய காங்கிரசுக்

1. கண்ணதாசனின் தென்றல் இதழ், 11 - 9 - 1954
2. கண்ணதாசன் கவிதைகள் தொகுதி 1 & 2, பக். 268

கட்சியில் இணைந்துவிட்டது. இந்நிலையில் தேசம் ஒன்று; தேசியம் ஒன்று எனும் உணர்வு கண்ணதாசனிடம் மலர்கிறது. திராவிட நாடு பிரிவினையை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தார். திராவிட நாடு பிரிவினையை, சீனப்போரின்போது, அண்ணா கைவிட்டு இந்திய அரசுடன் சேர்ந்து சீன எதிர்ப்புக்குத் துணை நின்றார். அவ்வேளை,

திண்ணையிலே காண்பேன்
'திராவிடநா டென்றானே!
திண்ணையிலே காண்பதற்குத்
திராவிடநா டென்பதென்ன
தொன்னையிலே நெய்யா
சோற்றுப் புளிக்குழம்பா?'[1]

என அண்ணாவைக் கேலியும் கிண்டலுமாய் விமரிசித்தார்.

அண்ணா முதலமைச்சராய் இருந்த காலம். கண்ணதாசன், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து அண்ணா சாலையில் ஊர்வலமாய்ச் சென்றவர், அண்ணா சிலையருகே வந்ததும் தம் முகத்தைக் கறுப்புத்துணியால் மூடிக்கொண்டு அச்சிலையின் முகத்தைப் பார்க்காது அகன்றார். ஆனால், அண்ணா நோய்வாய்ப் பட்டு அவர், உயிருக்கு உறுதியில்லாத நிலையிலிருந்தபோது, தில்லானா மோகனாம்பாள் படத்தில்,

நலந்தானா... நலந்தானா
உடலும் உள்ளமும் நலந்தானா (நலந்தானா)

நலம்பெற வேண்டும் நீஎன்று
நாளும் என்நெஞ்சில் நினைவுண்டு
இலைமறை காய்போல் பொருள்கொண்டு
எவரும் அறியாமல் சொல்இன்று (நலந்தானா)

கண்பட்டதால் உந்தன் மேனியிலே
புண்பட்டதோ அதை நானறியேன்
புண்பட்ட சேதியைக் கேட்டவுடன் – இந்த
பெண்பட்ட பாட்டை யாரறிவார்? (நலந்தானா)

நடந்த தெல்லாம் மறந்திருப்போம்
நடப்பதையே நினைத்திருப்போம்
கட்டுண்டோம்.... பொறுத்திருப்போம்
காலம் மாறும் சந்திப்போம் (நலந்தானா)

எனக் கண்ணதாசன் எழுதிய பாடல், உண்மையில் அண்ணாவின் நலம் விசாரிப்பதற்கென்றே எழுதப்பட்ட பாடல் என்பர். நேரில் சென்று கண்டு தம் உள்ளத்தைப் புலப்படுத்த முடியாத அவர்,

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 78

இப்பாடல் வாயிலாய்த் தம் எண்ணத்தை வெளிப்படுதியிருக்கிறார். இந்தச் சூழ்நிலையை மனத்திற்கொண்டு நோக்கும்போது இப்பாட்டில் உள்ள ஒவ்வொரு சொல்லும் எவ்வளவு உணர்ச்சி வயப்பட்டு எழுந்திருக்கவேண்டும் என்பதை உணரமுடிகிறது. கனிவின் உச்சியில் கண்ணதாசன் பாடிய பாடல் இது.

கண்ணதாசன் ஒருவரைப் புகழ்வதோ, இகழ்வதோ இந்த அளவுதான் என்று கூறமுடியாது. 'சித்தம் போக்கு சிவன்போக்கு' என்பார்களே, அப்படி அவருடைய மனத்தில் தோன்றும் உணர்ச்சி அதே கணத்தில் வெளிப்பட்டுவிடும்.

நேருவை, கண்ணதாசன் இகழ்ந்தது இவ்வளவு அவ்வளவு என்று சொல்லுதற்கில்லை. நேரு ஒரு தலைவரா? ஆங்கிலேயர் சென்றுவிட்டனர்; நாட்டை முன்னேற்ற முடியவில்லை; செயற்கரிய செய்யும் அமெரிக்காவில் போய்,

> முயற்கொம்புப் பண்டிதர்தம் பெருமை பற்றி
> முழநீளம் அளக்கின்றார் திரும்பு கின்றார்;
>
> நெய்வெட்டிப் பண்டிதரோ அங்கே சென்று
> தோள்தட்டிப் பாடுகிறார்! நிதியைத் தாங்கும்
> சூரரெனில் கடன்வாங்க ஓடுகின்றார்...[1]

என நேருவின் திறமையை இகழ்ந்துரைக்கிறார்.

நேரு பெருமகனார் தமிழ்மக்களை 'நான்சென்ஸ்' என இகழ்ந்தார். அப்போது கண்ணதாசன் சீறிப்பாய்ந்து இழிசொற் களை அள்ளி வீசுகிறார்.

> ஞானத்தை தமிழ்க்குலத்தை நாவடக்க மில்லாமல்
> பேசியதால் தன்புகழைப் பேதைஇவர் அழித்தார்!
> திறமைஇலை! அறிவில்லை! தினந்தோறும் பேருலகை
> நாவால் அளவெடுக்கும் ஞானமலால் ஏதுமிலை!
> வெறுந்தலையர்! ஆகையினால் வீரத் தமிழ்மாந்தர்
> நேருவே'போ' என்றார்...[2]

இவ்வாறு இழித்தும் பழித்தும் நேருவைத் தூற்றிய கண்ண தாசனே, பிற்காலத்தில் நேருவை இவரைப்போல் எவரும் புகழ்ந்ததில்லை என்னுமளவுக்குப் பல கவிதைகள் பாடியுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசனையும் அவர் வையாதுவிட்டவரல்லர். சாடித் தீர்த்தபிறகு பாவேந்தர் தலைமையில் ஒரு கவியரங்கில் கண்ணதாசன் பாட நேர்ந்தது! அப்போது, 'அறியாப் பிள்ளை! ஆத்திரத்தில் ஏதோ கூறிவிட்டேன்! பெருந்தகை நீவிர் பொறுத்திடுவீர்' என வேண்டிக்கொள்கிறார்.

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக். 254 - 55
2. மேலது, பக். 149

சிறுகுழந்தை கடித்ததெனில் கோபம் கொள்ளாச்
சிறப்பான தாயுள்ளம் படைத்த தந்தாய்!.....
இருள்சூழ்ந்த உலகில்யான் வாழ்ந்த காலை
என்பெரும! நின்கையைக் கடித்து விட்டேன்,
பொறுத்தருள்வாய், யானறிவேன் என்ற போதும்
பொறுக்காத நெஞ்சத்தால் புலம்பு கின்றேன்[1]

எனத் தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றார்.

இந்தியைக் கொண்டு வந்தபோது,

குள்ளநரிச் செயல்செய்யும் நச்சு உள்ளக்
கொலைகாரன் இராசகோ பாலாச் சாரி[2]

என இராசாசியைப் பண்புக் குறைவான சொற்களால் விமரிசித்துப் பாடியவர், பின்னர் இராசாசி இந்தியை எதிர்த்தபோது, 'வீரர் சக்ரவர்த்தியார்' எனப் புகழ்ந்து பாடினார்.

கலைஞர் கருணாநிதி கண்ணதாசனுடைய உற்ற நண்பர். ஓரிடத்தில் உண்டு ஓர் அறையில் தங்கியிருந்தவர்கள். கருணாநிதி அவர்களால்தான் கண்ணதாசன் தி.மு.க.வில் இணைந்தார். இவ்வளவிருந்தும் அவரோடும் மாறுபாடு கொண்டார், கண்ணதாசன். கருத்து வேறுபாடு முற்றிய நிலையிலிருந்தனர். பின்னர் ஒன்றுசேர நேர்ந்தது. அப்போது கண்ணதாசன் பாடுகிறார்,

காலங்கள் மாறும்; காணும்,
  காட்சிகள் மாறும்; போடும்
கோலங்கள் மாறும்; கொள்ளும்
  கொள்கைகள் மாறும்; இந்த
ஞாலமே மாறும் போது
  நாம்மாறா திருந்தால் போதும்![3]

என இணைந்த தன்மை இணைந்ததாயே இருக்கவேண்டுமென விரும்புகின்றார்.

கண்ணதாசன் எத்துணை இகழ்ந்தாலும், அச் சொற்கள் அவருடைய உணர்ச்சி வேகத்தினால் உதட்டளவில் தோன்றுவனவேயன்றி அவை உள்ளத்தின்பாற்பட்டவை அன்று என்பதை உணர்வதால் தாக்குதலுக்குட்பட்டவரே அவரை வெறுப்பதில்லை; மாறாய், அவர் எவ்வளவுதான் திட்டினாலும், அவர் உள்ளத்தில் கரவில்லை என்பதனால் அவரை எதிரியாய் அல்லாமல் நண்பராகவே கருதினர். அவருடைய தமிழ் அனைவரையும் சொக்க வைத்தது. கண்ணதாசன் தி.மு.க. வை விட்டு நீங்கிய பின்னர் ஒரு

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 60
2. மேலது, தொகுதி 1 & 2, பக். 170
3. மேலது, தொகுதி 4, பக். 142

சமயம் பேரறிஞர் அண்ணா அவர்கள் கவிஞரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "தனிப்பட்ட கண்ணதாசன் என்ற ஒருவர் கட்சியை விட்டுப் போய்விட்டாரே என்ற வருத்தத்தைவிட, கவிஞர் கண்ணதாசன் என்ற கவிக்குயில் இன்று நம் தோட்டத்திலே இருந்து பாடவில்லையே என்ற உளைச்சல்தான் என் உள்ளத்தை நெருடிக்கொண்டிருக்கிறது" என்று சொன்னார்கள்.[1]

கண்ணதாசன் மறைவின்போது டாக்டர் கலைஞர் அவர்கள்,

கண்ணதாசா! என்
எண்ணமெலாம் இனிக்கும் நேசா...
கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!....
இயக்க இசைபாடிக் களித்த குயில் உன்னை
மயக்க மருந்திட்டுப் பிரிந்தார் முன்னை;
தாக்குதல் கணை எத்தனைதான் நீ தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட என்நெஞ்சே உன் அன்னை!
திட்டுவதும் நீ தமிழில் திட்டியதால் – சுவைப்
பிட்டு என ஏற்றுக் கொண்ட என்னை
தித்திக்கும் கவித் தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன் விட்டுச் சென்றுவிட்டாய்?[2]

என வருந்திப் பாடியுள்ளதைக் காணலாம்! அவர் எவ்வளவு திட்டினாலும் அத் திட்டுதலை ஒரு குழந்தையின் மழலை என்றே அத்திட்டுதலுக்கு ஆளானவர் எண்ணினர்; எப்போதும் எந்நிலையிலும் மனத்தளவில் கண்ணதாசனிடம் மாறாத அன்பும் கொண்டிருந்தனர்.

காமராசர் இவரைச் சரியாய்க் கணித்து, அவருக்கேயுரிய சுருக்கத்தோடு, 'எந்தக் காட்டில் இருந்தாலும் சிங்கம் சிங்கம்தான்' என்றார். இவர் எந்த அமைப்பில் எந்த இயக்கத்தில் இருந்தார் என்பது ஆய்வுக்குரியதன்று. அவர் எந்த இடத்தில் இருந்தபோதும் அவர், 'அவராகவே' இருந்தார்; கவிஞராகவே வாழ்ந்தார்.

அரசியலில் ஓர் அணியில் இருப்பவர் அணிமாறி மற்றோர் அணிக்குச் சென்றால் அன்றுவரை எவ்வெவருடைய குண நலன்களை ஏற்றியும் போற்றியும் எழுதியும் பேசியும் வருகின்றனரோ அதற்கு நேர் எதிர்மாறாய்த் தாழ்த்தியும் இகழ்ந்தும் மறுநாளே எழுதுவதும் பேசுவதும் இன்றைய அரசியல் போக்காய் இருந்துவருகிறது. "இந்த அணியின் இக்கொள்கைகள் எனக்கு

1. ப. முத்துக்குமாரசாமி, கண்ணதாசன் கவிதைகள் ஒரு மதிப்பீடு, பக். 7

2. கலைஞர் 17-10-81இல் எழுதியது.

ஏற்புடையவனாய் அமையவில்லை. ஆதலின் இக் கொள்கை களைத் தன்பாற் கொண்டுள்ள வேறு அணிக்கு மாறியுள்ளேன்" எனக் கொள்கை அடிப்படையில் தன் மாற்றத்துக்குக் காரணம் கூறவேண்டுமேயன்றித் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவது பொருத்தமுடையதன்று. இன்றைய அரசியல் போக்கு அவ்வாறில்லையே! இன்றைய போக்கினையொட்டியே கண்ணதாசன் கவிதைகளில் அரசியல் வசவும் வாழ்த்தும் பின்னிக் கிடக்கின்றன.

''கவிஞன் ஒருவன் அரசியல் வாதியாகவும் இருந்தால் கவிதைக் கருத்துகள் எவ்வளவு முரண்படும் என்பதற்கு என் கவிதைத் தொகுப்புகளே சான்று.

"யார் யாரைப் போற்றியிருக்கிறேனோ அவர்களைக் கேலி செய்தும் இருக்கிறேன். யார் யாரைக் கேலி செய்திருக்கிறேனோ அவர்களைப் போற்றியும் இருக்கிறேன்.... எந்த நேரத்திலும் மிகைப்பட்ட உணர்ச்சியோடு நான் வாழ்ந்திருக்கிறேன். நான் நடத்திய அரசியலில் எது சரியானது? இதற்குப் பதில் சொல்ல வேண்டியது காலமே தவிர நான் அன்று. எதிர்கால விமரிசகர் களுக்கு என் கவிதைகள் நல்ல தீனியாக இருக்குமென்பதில் ஐயமில்லை"[1] என அவரே கூறியிருக்கக் காண்கிறோம்.

கண்ணதாசன் பாடல்களில் காணப்படும் அரசியல், முரண்பாடானதாயும் நிறை மாற்றங்களோடு கூடியதாயும் இருக்கிறது என்றால் இம்முரண்பாடுகளும் மாற்றங்களும் அவருடைய கவிதை வளர்ச்சியின் அடையாளங்களாகவே உள்ளன என்பதைத் திறனாய்வாளர்கள் ஒப்புகின்றனர்.

இத்தகைய உணர்ச்சிப் போக்குடைய கண்ணதாசனின் தன்னுணர்ச்சிப் பாடல்களை மட்டும் (கண்ணதாசன் கவிதைத் தொகுப்புகள் ஆறு, தைப்பாவை, கவிதாஞ்சலி, பொன்மழை, ஸ்ரீகிருஷ்ண அந்தாதி, ஸ்ரீகிருஷ்ண கவசம் எனும் பதினொரு நூல்களை மட்டும்) பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து, கவிஞர் வல்லம் வேங்கடபதி இவ்வரிய நூலினை உருவாக்கி யுள்ளார். வல்லம் வேங்கடபதி இன்றைய தமிழக முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர். ஒரு கவிஞர் சமகாலத்திய மற்றொரு கவிஞரின் கவிதைகளை ஆய்வுசெய்கின்ற தனிச் சிறப்புக்குரியதாய் இந்நூல் திகழ்கிறது.

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2 முன்னுரை

நாட்டொருமைப்பாடு

நாட்டொருமைப்பாட்டுணர்வை இன்று பாடாதார் எவருமிலர். செந்தமிழ் நாட்டுப் பொருநர், சிந்தை துணிந்த தெலுங்கர், தாயின் சேவடிக்கே பணி செய்திடு துளுவர், கன்னடர், ஒட்டியர், போரில் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர், இந்துஸ்தானத்து மல்லர், சீர்த்திகொள் இரஜபுத்திர வீரர், பஞ்சநதத்துப் பிறந்தோர், துஞ்சும் பொழுதினும் தாயின் தொண்டு நினைந்திடும் வங்கத்தினோர் என அனைவரும் ஒன்றுபட்டுத் தாயின் மணிக்கொடியைக் காத்து நிற்கும் ஒருமைப்பாட்டுணர்வைக் கண்டு களிக்கிறார், பாரதியார்.[1] வெள்ளையரை விரட்டுதவற்கு ஒற்றுமை தேவைப்பட்ட காலம் அவருடையது.

பலமொழி, இன மக்கள் வாழும் நாடாதலின்,
அவ்வவ் வினத்தின் அவ்வம் மொழிகளைச்
செம்மை செய்து, செழுமை யாக்கி,
இனத்து மக்கள் எவர்க்கும் பரப்பும்
ஒன்றினால், நாட்டில் ஒற்றுமை ஏற்படும்
என்பதென் எண்ணம்[2]....

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். பல துறைகள் கொண்ட பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு துறையும் அதனதன் வளர்ச்சியைச் செம்மையுறப் பெற்றால் பல்கலைக் கழகம் பாங்குற வளர்வது இயல்பு. அவ்வகையில் ஒவ்வோர் இனமும் மொழியும் அதனதன் தன்மையிற் சிறந்து, மாலையில் இணைந்த பூக்களைப் போல நாட்டொருமைப்பாட்டு மணம் வீச வேண்டுமென்பது பாரதிதாசன் கருத்து.

தொடக்க காலத்தில் கண்ணதாசன் பாடிய பெரும்பாலான கவிதைகள் திராவிட நாடு கோரிக்கை, இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு பற்றியனவே.

எவ்வழி வேங்கையும் செவ்விய மானும்
'இந்திய ஒற்றுமை'ப் பண்பாடும்?
செவ்வழி, தமிழர் ஆந்திரர் ஒன்றாய்
திராவிடம் காணல் நன்றாகும்[3]

எனத் திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்திப் பாடினார்.

இத்தரணி உள்ளவரை இந்தி நாயின்
இடுப்புவலி மாறாமல் உதைத்தா லன்றிக்

1. பாரதியார் பாடல்கள், பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்
2. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 4, நாட்டியல் நாட்டுவோம்
3. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக். 138

கத்திரியால் பைகவரும் கள்வ னைப்போல்
காசினியை அந்தமொழி கவர்ந்தே செல்லும்[1]

என இந்தியை எதிர்த்துக் கடுமையான சொற்களில் சாடினார்.

.......வடநாட்டை
நோக்கித் தவங்கிடந்து
நோயாகி....
தேசியம் பேசித்
திருட்டுப் பொதுவுடைமைக்
கூப்பாடு போட்டு....[2]

தமிழர்கள் வடவரால் வஞ்சிக்கப்பட்டு வாழ்விழந்து கிடக்கின்றனர்; எனவே இந்திய தேசியம் என்பதைத் திருட்டுத்தனம் என வன்மையாய்க் கண்டித்தார்.

தம் கொள்கை மாற்றத்திற்குப் பிறகு இப்பாடல்கள் தாம் சேராத இடஞ்சேர்ந்து கெட்டொழிந்ததால் பாடியவை என்றார்.

எங்கோ திரிந்தேன்
எப்படியோ வாழ்ந்திருந்தேன்;
தங்காத மண்டபத்தில்
தங்கிளனை இழந்தேன்;
தேராத தத்துவத்தைத்
தேரேற்றி அலைந்திருந்தேன்;
சேராத இடஞ்சேர்ந்து
திசைமறந்து போயிருந்தேன்![3]

'சேராத இடஞ்சேர்ந்து திசைமறந்து போயிருந்த நான் வெறித்தனமான கவிதைகளைப் பாடினேன்' என்று வாக்குமூலம் தருகிறார். சேரிடமறிந்து (காங்கிரசில்) சேர்ந்ததும் தம்முள்ளே 'தேசம் ஒன்று; தேசியம் ஒன்று' என்னும் எண்ணம் மலர்ந்தது என்றும் கூறுகிறார்.

ஒரு நாட்டு மக்களிடையே பிரிவினை உணர்வுகளுக்கு இடந்தரலாகாது; அப்படிப் பிரிவினை உணர்வுகள் தோன்றுமாயின் அவற்றை மாய்த்திடல் வேண்டும். இந்தியர் என்ற ஒருமை உணர்வே இயல்பானது; நியாயமானது. வடஇந்தியர், தென்னிந்தியர் என்ற வேற்றுமையுணர்வு நாட்டு நலனுக்குக் கேடு சூழும்; துன்பமே சூழும் என நாட்டொற்றுமையை வலியுறுத்துகிறார், கண்ணதாசன்.

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக்.
2. மேலது, பக். 103
3. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 66

சுடுகாட் டெலும்புகளைச் சோதித்துப் பார்த்ததிலே
வடநாட் டெலும்பென்று வந்ததெலும் பில்லையடி!
தென்நாட் டெலும்பென்று தெரிந்தஎலும் பில்லையடி!
எந்நாட் டெலும்பென்றும் எழுதிவைக்க வில்லையடி!
ஒருநாட்டு மக்களுக்குள் ஓராயிரம் பிரிவை
எரியூட்ட வில்லையெனில் எந்நாளும் துன்பமடி[1]

எனக் கவிஞர் உறுதிபடச் சொல்லுகிறார்.

மல்லிகை, முல்லை, மந்தாரை, செண்பகம், தாழை, சாமந்தி, மகிழம், குவளை என,

மலர்கள் நிறத்தால் மணத்தால் மாறினும்
இனத்தால் மலர்கள் இயற்கையின் கலைகள்!

மயில், சிட்டு, மணிப்புறா, அன்னம், குயில், செம்போத்து, மைனா,

பறவைகள் நிறத்தில் பலப்பல வாயினும்
இனத்தால் ஒன்றெனல் இயற்கையின் பாட்டு...[2]

இதுபோலே இனங்கள், மொழிகள் பலவாயினும் நாம் அனைவரும் இந்தியரே. மதங்கள் பலவாயினும் நிறங்கள் பலவாயினும் நாம் அனைவரும் ஒரு நாட்டினரே!

உணவு முறை, உடுத்தும் முறை, பேச்சு முறை, துதிப்பு முறை வேறுவேறாயிருந்தாலும் அனைத்துப் பண்புகளுக்கும் அடிப்படை ஒரே பண்பாடு; அதுவே இந்தியப் பண்பாடு என்பதில் வேறுபட்ட எண்ணத்துக்கே இடமில்லை என்பது கண்ணதாசனின் ஒருமைப்பாட்டுணர்வுக் கொள்கையாயிருக்கிறது.

பாரதம் முழுதும் ஒருபண் பாடாம்...

இமயம் தொட்டுக் குமரிவரை பகிர்ந்து பார்த்தாலும் பண்பாடொன்றே!

தேசம் ஒன்று தேசியம் ஒன்று;
அருமை மாந்தர் ஐம்பது கோடியும்
ஒருமை கண்டதில் வியப்பொன் றில்லை;
தாய்பதி னான்கு பிள்ளைகள் பெற்றாள்;
வாய்பதி னான்கு, மனத்தால் ஒன்று;[3]

இந்த ஒருமைப்பாட்டுணர்வு இருப்பதால், 'நான் காஷ்மீரில் இயற்கையை ரசிப்பேன்; புதுதில்லியில் இந்தியில் பேசி மகிழ்வேன்; சண்டிகார் நகரில் தமிழ் நாட்டின் உணவு கொள்வேன்; ஜெய்ப்பூரில் அழகுக் காட்சிகள் காண்பேன்; கோவாவில் சிறு

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 95
2. மேலது, தொகுதி 3, பக். 98
3. மேல்து, பக். 99

கப்பல் ஓட்டுவேன்; பம்பாயில் இந்துஸ்தானி இசை கேட்பேன்; மலையாளத்தில் மங்கையர் அழகு காண்பேன்; கர்நாடகத்தில் தென்றல் நுகர்வேன்; சென்னையைத் தமிழில் வாழ்த்துவேன்' எனப் பாரதமெங்கும் சென்று அங்கங்குள்ள சிறப்புகளைக் கண்டு மகிழ்வேன் என உற்சாகத்துடன் பாடுகிறார்.[1]

இனம், மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா ஒருமையுணர்வு கொண்டு வாழவேண்டிய இன்றியமை யாமையைக் கவிஞர் தேசிய காங்கிரசில் இணைந்த பின்னர்ப் பெரிதும் வலியுறுத்தி வருவதைக் காணமுடிகிறது என்பதை வேங்கடபதி நன்கு விளக்கியுள்ளார்.

விடுதலை பெற்ற நாடு எல்லா வழிகளிலும் முன்னேறிச் செழிக்க வேண்டுமெனும் ஆர்வத்துடிப்புள்ள காலத்தில் வாழ்ந்தவராதலின் கண்ணதாசனின் பாடல்களில் ஒருமைப் பாட்டுணர்வின் எழுச்சிப் போக்கினைக் காண முடிகிறது. தேசிய ஒருமைப்பாட்டு விளக்கமாய்க் கவிதாஞ்சலியைப் படைத்து,

> மொழிபதி னான்கென முளைத்த நாட்டின்
> வழிமுறை கூறவும், வாழ்வில் அனைவரும்
> ஒன்றெனக் கூறவும், ஒருமைப்பாட்டினை
> நாட்டிய வழியில் நாட்டிக் காட்டவும்,
> பாட்டியல் முறையில் பாடிக் காட்டவும்,
> ஆகிய கவிதை அஞ்சலி தானிது[2]

என ஆடல், பாடல் மூலம் நாட்டொருமைப்பாட்டை உணர்த்து வதே கவிதாஞ்சலியின் நோக்கம் என்பதை விளக்குகிறார்.

மொழிவழி வேறுபாடுகளிருப்பினும் உணர்வுவழி இந்தியா ஒன்று என்ற எண்ணத்தை ஊட்டுவதோடு மொழிவழிப் பூசல்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைத்துவிடும் என எச்சரிக்கிறார். இனம், மொழி, சமய ஒருமையுணர்வு கொண்டு இந்தியர்கள் வாழ வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்து கிறார்.

சமுதாயச் சிந்தனை

இலக்கியம் இலக்கியத்திற்காக இல்லாமல் நாட்டுக்காக - சமுதாயத்திற்காக எழுதப்படும்போது அது நிலைத்து நின்று நீள்பயன் நல்குகிறது. இலக்கியப் படைப்பாளன் சமுதாயப் படைப்பாளனாயும் இருக்க வேண்டும். அவனது எழுத்து சமுதாய

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 5, பக். 89-90
2. கண்ணதாசன், கவிதாஞ்சலி, பக். 10

வளமைக்காய் எழுதப்படும்போதுதான் அவன் மக்கள் கவிஞனாய் மதிக்கப் பெறுகிறான். கண்ணதாசன், தம் கவிதைகளில் சமுதாயப் பார்வையைப் புலப்படுத்தத் தவறவில்லை. அரசியல், தனிமனிதர் பற்றிய கருத்துகளில் அவருடைய கவிதைகளில் முரண்கள் பல தென்படினும், சமுதாயம் பற்றிய அவருடைய கருத்துகள் ஒரே நிலையினதாய் அமைந்துள்ளதை உணரமுடிகிறது.

சாதிப் பிரிவினை, பெண்ணடிமை, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகிய இம்மூன்றுமே சமுதாயச் சீர்கேட்டிற்கான முதன்மைக் காரணங்களாய் இருந்து வருகின்றன.

சாதியெனும் பகையுணர்ச்சி வாழு மட்டும்
தமிழ்நாட்டின் முன்னேற்றம் கானல் நீரே![1]

என்கிறார், கண்ணதாசன். சமுதாய சீர்திருத்தத் தலைவர்கள் சாதியினை ஒழிக்க அரும்பாடுபட்டுள்ளனர்.

சாதியெனும் நாகத்தைத் தூக்கித் தூக்கிச்
சாகடித்த பெருமைஅவர் தடிக்கே உண்டு[2]

எனத் தந்தை பெரியாரின் சாதியொழிப்புச் செயல்குறித்துப் பெருமைபொங்கப் பாடுகிறார், கண்ணதாசன். அழிய இருக்கும் சாதியை அரசியல்வாதிகள் வாக்குகள் பெறுவதற்காய்ப் பிழைக்கச் செய்கிறார்களே என வெகுண்டுரைக்கிறார். அப் பொல்லாச் சாதி அவர்களையும் சேர்த்து அழிக்கப்போவதை அவர்கள் அறியவில்லையே என்றும் கலங்குகிறார்.

சாதியே! பேயே! சாவின்
    தளத்திலே கிடந்த உன்னைத்
தேர்தலால் மீண்டும் கொண்டு
    திணித்தவர் அழத்தான் வேண்டும்.[3]

காலம் காலமாய் அடிமைப் பட்டிருக்கும் பெண்கள் உரிமைபெற்று விளங்கவேண்டும் என்னும் எண்ணமே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் தோன்றியது. ஏழ்மையும் சமூக நிலைமையும் அவர்களைப் பலவகைகளில் அலைக்கழிக்கின்றன.

குணமிருந்தும் தவறு செய்வாள்
குழந்தைக் காக ஒருத்தி; – இந்தக்
கொடுமை செய்ய உடன்படுவாள்
குடும்பம் காக்க ஒருத்தி;
படித்தி ருந்தும் வேலையின்றிப்
பள்ளி கொண்டாள் ஒருத்தி; – திரைப்

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக். 259
2. மேலது, தொகுதி 3, பக். 7
3. மேலது, தொகுதி 1 & 2, பக். 252

படத்தொழிலில் ஆசை வைத்துப்
பலியானாள் ஒருத்தி...[1]

தத்தம் வாழ்வைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை பெண்களுக்கிருந்தால் இத்தகைய கேடுகளுக்கு அவர்கள் ஆளாக வேண்டியதில்லையே!

ஆண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமை கொடுத்த சமூகம் பெண்களுக்கு மட்டும் அவ்வுரிமையை மறுப்பது ஏன்? கணவன் இறந்தால் பெண்கள் உடன்கட்டையேறி உயிரைவிடும் அவலத்திலிருந்து இப்போதுதானே தப்பித்துள்ளார்கள்.

மங்கலக் கணவன் மடிந்தபின் அவளும்
மாள்வதே விதியென வகுத்தோம்!
மங்கையர் குலங்கள் மட்டுமே வாழ்வில்
மறுமணம் பெறுவதைத் தடுத்தோம்!
பொங்குமோர் பருவம் பொசுக்குமே என்னும்
புத்தியில் லாமலே கழித்தோம்!
இங்குநாம் பெண்ணுக் கிடர்செய்தோ மன்றி
இதுவரை வாழவா விடுத்தோம்![2]

சங்ககாலந்தொட்டு இன்றுவரை சமுதாயத்தில் இழித்துப் பேசப்படுவது பரத்தமை. பரத்தமையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிபாதி பங்குண்டு. ஆனால், தண்டனை பெண்களுக்கு மட்டுமே! மலருக்குத்தான் தண்டனை தரப்படுகின்றதே யன்றி மலரில் தேன்குடிக்கும் வண்டு தண்டிக்கப்படுவதில்லை. தினமும் கூழுக்காய் வழுக்கிவிழும் பெண்களுக்குக்கூட சட்டத்தில் வஞ்சனைதான் செய்யப்படுகிறது.[3]

வறுமையாலும் ஆணாதிக்க வன்மையாலும் அழுத்தப் பட்டுச் சமுதாயத்தின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டுள்ளவர்களின் மறுவாழ்விற்கு வழிசெய்யாமல், 'கண்ணகியின் கற்புயர்வைப் பேசிக் காலங்கழித்து வருகிறோமே! நியாயமா?'

பொற்போடும் வாழஒரு புகலின்றி
வழியின்றிப் புனிதங் கெட்டுப்
பற்போட இடமின்றிப் பலர்கூடிக்
கடித்துண்ணும் பஞ்சை யாகி
நிற்பாளைத் தமிழ்நாட்டு நிலந்தோறும்
நிதங்காணும் நிலையைக் கண்டும்
கற்போடும் கண்ணகியாள் கதைபேசித்
திரிவதிலே கனிவ தென்ன?[4]

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 6, பக்.
2. மேலது, தொகுதி 5, பக். 200
3. மேலது, தொகுதி 6, பக். 126
4. மேலது, தொகுதி 5, பக். 193-94

சாதி ஒழிப்பு, மறுமணம் போன்று குடும்பக் கட்டுப்பாடும் இன்று சமுதாயத்தில் இன்றியமையாச் சீர்திருத்தமாய்க் கருதப் படுகிறது. கி.பி. 2000இல் மனித வாழ்க்கை அடையக் கூடிய கொடிய துன்பங்களிலொன்று மக்கட் பெருக்கமாய் இருக்கும். 'கருப்பாதை சாத்த' வழிகாண்பது ஒன்றே இக்கொடிய துன்பத்திற்காட்படாதிருக்க வழியாகும்.

மக்கள்தொகை குறைத்து,
தாழாத தத்துவம்
கர்ப்பத் தடையென்று
தழுவினால் எதிர்காலமே
சரியாகும்; இல்லையேல்
சஞ்சலம் தான்மூளும்
தர்மபா ரததேசமே![1]

கைம்பெண் திருமணம் புரிந்துகொண்டவர்களையும் அதற்கு ஆக்கம் தந்தவர்களையும் போற்றிப் புகழ்வதன் வாயிலாய்க் கைம்பெண் மணத்தின் இன்றியமையாமை கண்ணதாசன் கவிதையில் வலியுறுத்தப்படுகிறது.

இன்றுநான் கண்டேன் செட்டிநாட் டரசர்
இயற்றிய விதவையின் வாழ்வு;
நன்றவர் செய்கை; நகரமே நாளை
நட,அவர் காட்டிய வழியில்...
நல்லறங் கண்டார் நற்பணி புரிந்தார்
நமக்கிது முதன்முதற் புரட்சி.[2]

இந்தியா வேளாண்மை நாடு. வேளாண்மைக்கு நீர் மிகமிக வேண்டப்படுவது. 'நிலந்தாழ்ந்த இடத்திலெல்லாம் நீர்நிலையை உண்டாக்குபவரே உலகில் புகழை நிறுத்திச் செல்வர்' என மன்னனுக்குப் பொருளுரை கூறிய செய்தியைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[3] இந்தியாவின் ஒரு பகுதியில் நீரின் வறட்சி; ஒரு பகுதியிலோ நதிகளின் நீர்ப்பெருக்கினால் பேரழிவு. இந்நிலையை நீக்க இந்திய நதிகள் ஒன்றிணைக்கப்படவேண்டும் எனும் கருத்து நீண்ட காலமாய்க் கூறப்பட்டு வருகின்றது. இதனை உடனே செயற்படுத்தி நாட்டில் வளங்காண வேண்டுமென்கிறார், கண்ணதாசன். அவருடைய உருசியப் பயணத்தில் கண்ட ஒரு காட்சியையும் செயலாக்கத்திற்கான வழியாய்க் கூறுகிறார்.

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 6, பக். 47
2. மேலது, தொகுதி 5, பக். 201-202
3. புறநானூறு, 18

"உருசியாவில் துர்க்மினிஸ்தான் பகுதியில் 'அமுதாரியா' என்னும் நதியின் குறுக்கே பெரிய அணைகட்டியுள்ளனர். நூறு அடி அகலத்தில் கால்வாய் ஒன்றனை அவ்வணையிலிருந்து 'சேராகும்' பாலைவனத்தின் நடுவே செல்லுமாறு தோண்டியுள்ளனர். அக்கால்வாயில் பாய்ந்தோடும் நீரால் பாலை சோலையாய் மாறியுள்ளது.

ஒருகடல் கடக்கும் நதியினைத் திருப்பி
மறுகடல் காணவைத்தார் – இடையில்
மணலையும் விளைய வைத்தார் – மக்கள்
மனதையும் மலர வைத்தார்.[1]

கால்வாயில் ஓடும் மோட்டார் படகுகள் எத்துணை எத்துணை? சரக்குப் படகுகள் சாரிசாரியாய்ச் செல்கின்றன. ஒரு மோட்டார் படகில் ஏறி இருபது மைல் சென்றோம். ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள கூட்டுப்பண்ணை அருகில் படகு நின்றது. பண்ணையில் வண்ண வண்ண மலர்கள்; கனித் தோப்புகள். தேன், பழம், திராட்சை, சோறு, மீனுடன் எங்கட்கு விருந்து வைத்தனர். கால்வாய் தோண்டிய காலத்திலிருந்தே காடுகள் வளர்க்கப்பட்டு வருவதாயும் கூறினர்.

எத்தனை தோழர்கள் கைகளி னாலே
வெட்டிய கால்வாயோ! – வேர்வை
கட்டிய கால்வாயோ! – ரத்தம்
கொட்டிய கால்வாயோ.[2]

'இரத்தக் கால்வாய்' என்று அதற்கு நானே பெயரிட்டுக் கொண்டேன். இதைக் கண்டதும்,

கங்கை நதியைத் திருப்பி யிழுத்துக்
காவிரிவரை கொணர்வோம்; – முகவைக்
காடுவரை கொணர்வோம்; – சேதுக்
கால்வாய் தனில்விடுவோம்[3]

என்ற எண்ணம் மனத்திலோடியது" எனத் தாம் கண்ட காட்சியை விவரித்து, நாம் செய்யவேண்டிய பணியினையும் சுட்டிக் காட்டுகிறார். நதிகள் இணைக்கப்படவேண்டும்; கூட்டுப் பண்ணை ஏற்படவேண்டும்; காடுகள் வளர்க்கப்படவேண்டும் என்னும் கருத்துகளை எடுத்துக்காட்டுவழி அழுத்தமாய்க் கூறி விடுகிறார்.

உருசியாவில் மக்கள் உடைமைகளை விட்டொழித்துக் கூட்டாய்ப் பண்ணைகள் நிறுவி, பாடுபட்டுப் பெற்றுவரும் பயனை

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 56
2. மேலது, பக். 57
3. மேலது, 57

விளக்கிச் சொல்வதன்மூலம் சமதர்ம சமுதாயத்தின் இன்றியமை யாமை கண்ணதாசன் கவிதையில் வற்புறுத்தப்பெறுகிறது என்பதை வேங்கடபதி எடுத்துக் காட்டுகிறார்.

நிலமுடையோர் யாருமில்லை
நெஞ்சுடையோர் மட்டுமுண்டு
பலமுடையோர் பாடுபடும்
  கூட்டுப் பண்ணை – நாடு
  பயனடையப் பயிர்வளர்த்துக்
  கூட்டும் பண்ணை.[1]

கூட்டுமுயற்சி வெற்றிகளைக்கூட்டும் முயற்சியாய் அமைந்து பயன்நல்கும்.

"வறுமை வாழ்வின் துன்பத்தைக் கண்டு நெஞ்சம் கொதிப்படைந்து திருவள்ளுவர், 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'[2] என்று மனிதனைப் பிச்சை எடுக்குமாறு உலகைப் படைத்த இறைவனைச் சபிக் கின்றார். இந்நூற்றாண்டில் அதே அனுபவத்திற்கு ஆளாகிய பாரதியார், 'தனியொருவனுக்கு உணவிலையெனில் சகத்தினை அழித்திடுவோம்'[3] என்று சூளுரைக்கிறார். இரண்டிலும் சீர்திருத்த நாட்டம் புலனாகிறது; சீற்றத்தின் வேகம் புரிகிறது. எனினும், முன்னதில் கவிஞன் விலகிநின்று பேசுவது போன்ற உணர்வு உண்டாகிறது. பின்னதில் ஒரு செயலைச் சாதிக்கத் துடிக்கும் கவிஞனின் ஒருமையுணர்வு கொப்புளிக்கிறது; அடுத்துத் தோன்றிய கண்ணதாசன் கவிதை,

...இனிப்
பஞ்சைப் பராரிகள் துஞ்சி இரந்துண்ணும்
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் – நெஞ்சின்
பாரத்தை வேருடன் சாய்ப்போம்![4]

என்று குரல் கொடுக்கிறது. இக் கவிதையில் பாரதியாரின் கவிதையில் கண்ட சாதனைத் துடிப்புடன் கூடிய ஒருமையுணர்வு வீறுகொண்டிருப்பதைக் காண்கிறோம். திருவள்ளுவரின் குரலில் வெளிப்படையாய் ஒலிக்காத 'செயலாக்கப் பண்பு' பாரதியார், கண்ணதாசன் கவிதைகளில் கவிஞனுடைய ஒருமையுணர்வாய் தெளிவும் வலிவும் பெற்றிருப்பதை அறியமுடிகிறது" என வேங்கடபதி கண்ணதாசனின் கவிதைகளில் உள்ள பொரு ளாதாரச் செயலாக்கச் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.[5]

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 54
2. திருக்குறள் 1062
3. பாரதியார் கவிதைகள், பாரத சமுதாயம்
4. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 49
5. வல்லம் வேங்கடபதி, கண்ண., கவிதை-ஓர் ஆய்வு, பக்.84-85

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ'[1]

என எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் அயோத்தியி லிருந்தவர் எய்தியிருந்தனர் என்பார் கம்பர்.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்[2]

என்பார், பாவேந்தர் பாரதிதாசன். 'எல்லார்க்கும் எல்லாம்' என்னும் இத்தன்மைதான் பொதுவுடைமை எனப்படுகிறது.

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்;
வல்லான் பொருள்குவிக்கும் தனியுடைமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை.

வறுமை இருக்கும் நாட்டில் வளமிருக்க முடியாது; மக்கள் துயரின்றி வாழவும் முடியாது. வறுமையை அகற்றாவிடில் நாட்டினைச் 'சுதந்திர நாடு' என்று சொல்லமுடியாதென்கிறார். 'கொடிய பசி வந்துவிட்டால் மக்கள் குமுறும் எரிமலைதான்' எனக் கண்ணதாசன் கவிதை எச்சரிக்கிறது.

வாரத்திலே ஒருநாள் கொதிப்பேன் கஞ்சி
வார்த்துக் கொடுப்பதற் காக – பின்னர்
ஓரத்திலே பலநாள் கிடப்பேன் – நல்ல
ஓய்வு பெறுவதற் காக – வீட்டில்
உள்ள குழந்தைகள் சாக.[3]

ஏழை வீட்டுப் பானை ஒன்று கூறுவதாய்க் கண்ணதாசன் இவ்வாறு பாடியுள்ளார்.

இப்படியே பசிநீளுமென் றால்இது
என்ன சுதந்திர பூமி – ஏன்
இத்தனை ஆயிரம் சாமி?[4]

என ஆத்திரத்துடன் வினாவையும் எழுப்புகிறார்.

ஒருபுறம் செல்வப் பெருக்கால் வயிறுகள் வீங்கிக் கொண்டிருக்க மறுபுறம் வறுமையால் இதயங்கள் ஏங்கிக்கொண் டிருப்பதே இன்றைய நாட்டு நிலை.

அங்கம் பருத்துவிட்டால் அழகுக் கலைகளுக்கே
பங்கம் வருவதுபோல் பணமும் ஒருபக்கம்

---

1. கம்பராமா., நகரப்படலம், பாடல், 74
2. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, இயல் 56
3. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக் 47
4. மேலது, தொகுதி 4, பக். 48

சேர்ந்துகொண்டே போனால் சீரான சமுதாயம்
அழகிழந்து போகுமடி.[1]

செல்வம் சீராய்ப் பரவியிராது ஒரு பக்கமே குவிந்திருந்தால் அது நாட்டுக்கு அழகன்று என்பதைச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்குகின்றார்.

வீங்குகின்ற செல்வம் வீங்குவதும் ஆபத்து;
ஏங்குகின்ற நெஞ்சம் ஏங்குவதும் ஆபத்து;

என எச்சரித்துவிட்டு,

இருப்பவர்க ளெல்லாம் இப்பொழுதே கொண்டுவந்து
கொடுப்பார்க ளானால் குற்றத்தை மன்னிப்போம்[2]

என்று புரட்சியைத் தவிர்க்க வழியும் காட்டுகிறார்.

பத்தாண்டுகளுக்குள் வர்க்க வேறுபாடு ஒழிந்துவிடும் எனும் நம்பிக்கை தோன்ற,

பத்தாண்டுக் குள்ளாகப்
பணத்தொந்தி சரிந்துவிடும்[3]

எனவும் பாடுகிறார்.

கண்ணதாசனின் பல்துறைச் சமுதாயச் சிந்தனைகளை அவருடைய கவிதைகளில் காணமுடிகிறது.

நாடு முன்னேற, நலங்கள் பெருக,
வேண்டு மென்றால் விதியொன்று செய்வோம்;
ஜனநா யகத்தைச் சற்றே நிறுத்தி,
சவுக்கை எடுப்போம்! தரித்திரம் நீங்கும்[4]

எனப் பாடுவதன்வழி தீமைகளை எதிர்த்துப் போரிடவும் தயாராக வேண்டுமெனும் எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்.

கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள் பற்றிக் குறிப்பிடும் போது, "கண்ணதாசன் தன் இன்ப துன்பங்களை எண்ணிக் களிக்கவும் கலங்கவுமே தன் கவிதைகளைப் பயன்படுத்துகிறார்; தீவிர சமுதாயப் பார்வை இவரிடம் இல்லை" என்றொரு சாரார் கூறுவது உண்டு. இந்தக் குற்றச்சாட்டுகளில் ஓரளவு உண்மை யிருக்கிறது என்பதில் ஐயமில்லை. தன்னைப் பற்றிப் பாடும் வழக்கம் அவரிடம் உண்டு. ஆயினும் சமுதாயத்தில் நிலவும் சிக்கல்களையும் சிறுமைகளையும் சுட்டிக் காட்டி அவை நீக்கப்பட

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 110
2. மேலது, பக். 111
3. மேலது, தொகுதி 4, பக். 110
4. கண்ணதாசன், கவிதாஞ்சலி 3, பக். 54

வேண்டுமென்று வலியுறுத்தி, அதற்காக வழிகாட்டி, புதிய உலகம் படைக்கும் வேட்கையுடன் கண்ணதாசனும் நிறையவே பாடியுள்ளார். "தன்னைப்பற்றி எண்ணி அவர் பாடிய பாடல்களைவிட இந்த மண்ணைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் துடிப்பானவை!" எனத் திறனாய்வாளர்கள் கூறியிருப்பதும் எண்ணத்தக்கதாம்.

பக்திநெறி

இளமையில் கண்ணதாசன் பழுத்த ஆத்திகராய் இருந்தவர். திராவிடர் இயக்கத்தில் சேர்ந்ததன் வாயிலாய் அவர் நாத்திகம் பேச வேண்டியவராயினார். வாய் நாத்திகம் பேசிய போதும் அவர் உள்ளம் எப்போதும் இறையுணர்வில் திளைத்ததாகவே இருந்திருக்கிறது. அன்பே தெய்வம் என்பது அவர் நெறி. கண்ணனே அவருடைய மனமுதல் தெய்வமாய் இருந்திருக்கின்றார். இறைவன் ஒருவன் உண்டு என நிறுவிக் காட்டுவதோடு அவ்விறைவனிடத்தில் ஈடுபாடு கொள்வதற்கு, அருளைப் பெறுவதற்கு மக்கள் மனத்தைத் தூண்டவல்ல கூறுகள் பலவும் அவர் கவிதைகளில் இடம் பெற்றுள்ளன.

கையறுநிலைப் பாடல்கள்

கண்ணதாசனின் கையறுநிலைப் பாடல்கள் அவர் பாடியுள்ள மற்ற பாக்களைவிட மிகவும் உருக்கமானவை; நெஞ்சை ஈர்க்க வல்லவை. துக்கத்தில் தோய்ந்த உணர்ச்சியின் வெளிப்பாடுகளாய் அவருடைய கையறுநிலைக் கவிதைகள் விளங்குகின்றன. ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்த போது குடவாயிற்கீரத்தனார் "வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"[1] என அரற்றிய புலம்பலும்,

அற்றைத் திங்கள், அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம்;எம் குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள், இவ்வெண் நிலவில்,
வென்றெறி முரசின் வேந்தர்,எம்
குன்றும் கொண்டார்;யாம் எந்தையும் இலமே[2]

எனும் பாரி மகளிரின் புலம்பலும் தோற்றுவிக்கின்ற உணர்ச்சியினும் மிகுதியான அவலத்தைக் கண்ணதாசனின் பாடல்களில் உணர முடிகிறது. இக்காலக் கவிஞர்களுள் கையறுநிலைப்

1. புறநானூறு, 242
2. மேலது, 112

பாடல்களை மிகுதியாய்ப் பாடியிருப்பவர் கண்ணதாசனாகத்தான் இருக்க முடியும்.

கண்ணதாசன் கவிதைகளை ஒன்பது இயல்களில் ஆய்வு செய்துள்ள வல்லம் வேங்கடபதி, ஓர் இயலைக் கண்ணதாசனின் கையறுநிலைப் பாடல்கள் ஆய்வுக்கென ஒதுக்கியுள்ளார். இறந்த ஒருவர்மீது இரங்கிப் பாடும் பாடல் 'கையறுநிலை' எனப்படும். தனிமனிதர் இறப்பு மட்டுமன்றி, உடைமை இழப்பு, தனிப்பட்ட தோல்வி குறித்து எழும் உணர்வுகள் ஆகியனவும் கையறு நிலையனவே! மனப்புலம்பலில் எழுதப்பெறும் எதுவுமே கையறுநிலையதாம்!

அழுவதற்கென்றே தன்னைத் தம் தாய் பெற்றெடுத்ததாய்க் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

சீசரைப் பெற்ற தாயும்
சிறப்புறப் பெற்றாள்! இன்று
நாசரைப் பெற்ற தாயும்
நலம்பெறப் பெற்றாள்! காம
ராசரைப் பெற்ற தாயும்
நாட்டிற்கே பெற்றாள்! என்னை
ஆசையாய்ப் பெற்ற தாயோ
அழுவதற் கென்றே பெற்றாள்[1]

என அவர் அழுது புலம்புகிறார்.

உள்ளத்தின் உள்ளே கவலையை அடக்கிக் குமுறிக் கொண்டிருப்பதைவிட்டு அழுது புலம்புவதால் கவலை குறையும்.

அழுகையால் கவலை தீரும் என்பதால்,
என்னை அழவிடு என்னை அழவிடு...[2]
கண்ணீர் ஒன்றே கவலையைத் தீர்க்கும்;
அஞ்சும் நெஞ்சும் அழுதால் தெளியும்..[3]

எனும் கவிஞரின் இக்கூற்றுகள் அவர் கையறுநிலைப் பாடல்களை மிகுதியும் எழுதினதேன் என்பதற்கு விளக்கங்களாயுள்ளன.

இறந்தவர்க்குக் கடிதம் எழுதும் போக்கிலும்; இறந்தவருடன் உரையாடும் முறையிலும்; சாவை, சஞ்சலத்தை, தீயை, தெய்வத்தை நொந்து கொள்ளும் நிலையிலும்; இறந்தவர் மறைவால் தாமும் பிறரும் அடையும் துயரங்களைச் சொல்லி இரங்கலை வெளிப்படுத்தலும் என்பன போன்று இருபத்துமூன்று

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 141
2. மேலது, பக். 232
3. மேலது, பக். 232

வகைகளாய்க் கண்ணதாசனின் கையறுநிலைப் பாடல்களை வேங்கடபதி பிரித்துக்காட்டுகிறார்.[1]

"கண்ணதாசனின் கையறுநிலைப் பாடல்களில் நேருபற்றி எழுதியவையே மிகுதியானவை. சங்கத்தமிழ் இலக்கியத்தில் பாரி-கபிலர் போன்று, இன்றைய தமிழ் இலக்கியத்தில் நேரு-கண்ணதாசன் காணப்படுகின்றனர். பாரி மறைவு குறித்துக் கபிலர் பாடியதாய்ப் புறநானூற்றில் ஒன்பது பாடல்கள் உள்ளன. நேரு மரணம்பற்றிக் கண்ணதாசன் பாடியுள்ள பாடல்கள் பதினொன்று." [2]

"நேருபற்றிக் கண்ணதாசன் பாடியுள்ள இரங்கற் கவிதைகள் இயல்பானவை, உருக்கமானவை, உண்மையானவை, உயிர்த் துடிப்புள்ளவை" என்கிறார் வல்லம் வேங்கடபதி.[3]

கண்ணதாசன் நேருவின் மறைவுக்காக அழுவது மட்டுமா? வானுலகம் சென்று அவரைக் காணவேண்டும் என்றும் துடிக்கிறார்.

தனியே எனக்கோர் இடம்வேண்டும்; – தலை
 சாயும் மட்டும்நான் அழவேண்டும்;
வானகம் போய்வர வழிவேண்டும்; – எங்கள்
 மன்னனை நான்பார்த்து வரவேண்டும்.[4]

நேருவைக் கொண்டுசென்ற சாவினைச் சபிக்கிறார்; அவரை எரித்த நெருப்பினைக் கவிஞர் தன் கவிதைச் சூட்டால் பொசுக்குகிறார்.

சாவே உனக்கொருநாள்
 சாவுவந்து சேராதோ!
சஞ்சலமே நீயுமொரு
 சஞ்சலத்தைக் காணாயோ!
தீயே உனக்கொருநாள்
 தீமூட்டிப் பாராமோ!
தெய்வமே உன்னையும்நாம்
 தேம்பி அழவையோமோ![5]

நாதசுரமேதை இராசரத்தினம் பிள்ளை மறைவின்போது கண்ணதாசன் பாடியுள்ள பாடல் மிகவும் உருக்கமானது. மறைந்தவருடன் நேரில் நின்று பேசுவது போலப் பாடல் முழுதும்

1. வல்லம் வேங்கடபதி, கண்ணதாசன் கவிதைகள்-ஓர் ஆய்வு, பக். 166-183
2. மேலது, பக். 182
3. மேலது, பக். 181
4. கண்ண., கவிதை, தொகுதி 3, பக். 38
5. மேலது, பக். 34

அமைந்துள்ளது. இராசரத்தினம் பிள்ளை நாதசுரம் இசைத்தால் அந்த இசை எங்கிருந்து தோன்றுகிறது என அறியமுடியாத திகைப்பு ஏற்படுமாம்.

கையிலே இசையா, பொங்கும்
காற்றிலே இசையா, துள்ளும்
மெய்யிலே இசையா, மின்னும்
விழியிலே இசையா என்றே
ஐயநின் இசையைக் கேட்போர்
அனைவரும் திகைப்பர்! இன்று
கையறு நிலையிற் பாடக்
கருப்பொருள் ஆனாய்! ஓய்ந்தாய்.[1]

இராசரத்தினம் பிள்ளை 'தோடி' இசைப்பதில் மிகுவல்லவர். 'தோடி' என்றதுமே நினைவில் அவர் பெயர் மட்டுமே தோன்றும். தோடியைத் தொடுத்துக் கவிஞர் பாடியுள்ள பாடல் படிப்போரின் நெஞ்சினை இராசரத்தினத்தின் தோடியில் தோயச்செய்து உருக்கிவிடும்.

செவியினில் ஓடி, எங்கள்
சிந்தையில் ஓடி, இந்தப்
புவியெலாம் ஓடி, நின்பாற்
பொங்கிய 'தோடி', வேறிங்
கெவரிடம் போகும்? ஐய!
இனிஅதைக் காப்பார் யாவர்?
அவிந்தநின் சடலத் தோடே
அவிந்தது 'தோடி' தானும்![2]

"மேடைக்கு நீதான்! உந்தன் மேனிதான்! இடுப்பைச் சுற்றும் ஆடைதான்! காதில் தொங்கும் அழகிய கடுக்கண்தான்! மணம் வீசப் பூசியுள்ள மார்புச் சந்தனந்தான்! இவையாவுமே பாடைக்குள் ஒடுங்கிவிட்டன! என்றாலும் அவை என்றுமே எங்கள் பார்வையைவிட்டு மறையமாட்டா!" எனக் கண்ணதாசனின் இரங்கலும் பாடலின் நேர்த்தியும் கைகோத்துச் செல்லுகின்றன.

தாம் இறந்துவிட்டால் இரங்கல் எவ்வாறு அமையும் என்பதைக் கவிஞரே கற்பனையாய்ப் பாடியுள்ள பாடல் ஒன்று உண்டு.

கவிஞன் மடியலாம்; கவிதை மடியாது; அவன் உடலைத் தீண்டும் நெருப்பும் கவிதையாகும் ஆற்றலைப் பெறும் எனும் கருத்தை அப்பாடலில் அமைத்திருக்கிறார், கவிஞர்.

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக். 58
2. மேலது, பக். 60

கொட்டியசெந் தமிழ்(அ)ந்தக் கொழுந்தினிலும்
பூப்பூத்த கோல மென்னே![1]
ஏற்றியசெந் தீயே!நீ எரிவதிலும்
அவன்பாட்டை எழுந்து பாடு![2]

அவருடைய உடலை எரிக்கும் தீ அவருடைய பாட்டை' பாடவேண்டுமாம்!

"வாழ்க்கையின் மேலான பண்புகளும் நிலையான உண்மைகளும் கண்ணதாசனின் கையறுநிலைக் கவிதைகளில் தெளியப்படுவதால் இரங்கல் உன்னதமாகிறது" என்கிறார் ஆய்வாளர் வல்லம் வேங்கடபதி.

த்த்துவம்

உயர்ந்த தத்துவங்களை எளிய சொற்களில் அழுத்தமாய் வெளிப்படுத்துகின்ற ஆற்றல் கண்ணதாசனின் பாடல்களில் கரைபுரண்டு ஓடுகிறது.

'எல்லாம் அவன்செயலே' என்பதற்கு என்னபொருள்?
உன்னால் முடிந்ததெலாம் ஓரளவே என்று பொருள்.[3]

சுமமா இருப்பவன் சோம்பேறி; அவனிடம்
சொர்க்கத்துக் கென்ன வேலை?[4]

என்பன போன்ற இனிய எளிய விளக்கங்களைக் கொண்டு ஆழமான நுட்பமான தத்துவங்களை விளக்கும் திறமை கண்ணதாசனின் பாடல்களுக்குரிய தனிச் சிறப்பு.

கவிஞன், கவிதைபற்றிய கருத்துகள்

கவிஞன், கவிதை பற்றிய கண்ணதாசனின் கருத்துகளும் இந்நூலுள் எடுத்தோதப்பட்டுள்ளன. கண்ணதர்சன் முந்தையோர் இலக்கியங்களை நன்கு பயின்று அதன் வழி நின்று தனக்கென ஒரு தனிமுறையை அமைத்துக்கொண்டு எழுதியவர். கண்ணதாசன் பாடல்களில் பல, முந்தையோர் பாடல்களின் புத்தாக்கமேயன்றி அவருடைய சொந்தப் படைப்பன்று என்பாரும் உண்டு. முந்தையோர் கருத்துகளை அவர் எடுத்துக் கொண்டது உண்மை. ஆனால் அவற்றிற்குத் தன் எண்ணமாகிய மெருகை ஊட்டியே எழுதியுள்ளார்.

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 117
2. மேலது, பக். 118
3. மேலது, தொகுதி 6, பக். 89
4. மேலது, தொகுதி 4, பக். 89

வீதியில் செல்கிறோம்; வீட்டின் முன்னே ஒரு குழந்தை விளையாடுகிறது; அதைப் பார்த்து, "குழந்தாய்! நீ உன் அப்பா போலவே இருக்கிறாய்" என்று சொல்லும்போது குழந்தைக்கும் சிறப்பு; தந்தைக்கும் பெருமை. குழந்தையைப் பார்த்ததும், "உனக்கும் உன் அப்பாவுக்கும் சம்பந்தமேயில்லையே! உன் அப்பாவைப்போல நீ இல்லையே" என்றால் குழந்தைக்கும் பெருமையில்லை; அப்பாவுக்கும் சிறப்பில்லை.

முந்தையோர் கவிதை அப்பாவைப் போன்றது; இன்றையோர் கவிதையோ குழந்தை போன்றது. குழந்தை அப்பாவைப்போல் என்றால் அப்பாவின் சாயலைக் கொண்டிருக்கிறது என்பது பொருள். சாயல் அப்பாவினுடையது என்றாலும் அந்தக் குழந்தைக்கு எனத் தனித்த ஆற்றல் உண்டு. அது போலத்தான் முந்தையோர் கவிதைக் கருத்துகளை எடுத்துக்கொண்டாலும் கவிஞன் தன் சொந்தக் கருத்துமணத்தை அதனுடன் ஏற்றிப் பாடும்போது அது இன்னும் பொலிவு பெறுகிறது. இஃது அப்பா-பிள்ளை இருவரும் சிறப்புப் பெறுவது போன்றதேயாம்!

கவிதையாற்றல் ஒரு பிறவிக்கூறு. "கவிதை எழுதுவதற்கான முறையினை இலக்கணம் அளித்திடும்; அறிகின்றோம்; பொருட் செறிவுக்கு இலக்கணம் துணைநிற்கிறது; புரிகிறது. ஆயின், கவிதா உள்ளம் பெறுதல் எங்ஙனம்? அதற்குத் துணை எங்கிருந்து பெறுவது? இது சிக்கலான பிரச்சினை மட்டுமன்று; அறுதியிட்டு விடைகூற இயலாததொன்றுமாகும். கவிதா உள்ளம் இதுதான் என்று திட்டவட்டமாய்க் கூறிட இயலாது என்பதனாலேதான் போலும்... ஆண்டவன் அடியெடுத்துக் கொடுத்தார்... கவிஞர் அம்பிகை உபவாசம் இருந்தார்... கடவுள் கனவில் உரைத்துச் சென்றார் என்றெல்லாம் கவிஞர்களைப்பற்றி முன்பு கூறினர்" என்று அறிஞர் அண்ணாதுரை அவர்கள் தெரிவித்துள்ள கருத்து 'கவிஞர்கள் இறையருள் பெற்றவர்கள்' என்ற நம்பிக்கையுடன் முரண்படுவதாய் இருந்தாலும் கவிதையாற்றல் இயல்பானது; பிறவிக்கூறு என்ற நம்பிக்கையுடன் மாறுபடவில்லை" என்பதை வல்லம் வேங்கடபதி எடுத்துக்காட்டுகிறார்.[1]

'கவிதையாற்றல்' ஒரு பிறவிக்கூறு; இயல்பானது என்பதனைக் கண்ணதாசனின் கவிதைகளும் அனுபவமாய்க் காட்டுகின்றன.

---

1. இந்நூல், பக். 249

தாயார் மடியிருந்து தங்கமணி கையெடுத்துத்
தனப்பால் குடிக்கையிலே தன்பாலும் கொடுத்தவளே!

என இவைபோன்றுள்ள கண்ணதாசனின் கவிதைகள் 'கவிதையாற்றல்' பிறவிக்கூறு என்பதை உறுதிப்படுத்துகின்றன. அவருடைய,

தோண்டுகின்ற போதெல்லாம் சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம் விளைகின்ற நித்திலமே!

என்பன போன்ற கவிதையடிகள் 'கவிதையாற்றல்' இயல்பானது என்பதை மெய்ப்பிக்கின்றன.[1]

அவர் பாடல்களில் அவரையுமறியாது கவிதையாற்றல் அமைந்துவிடுகிறது என்பதை அவரே, "நான் பொறுமையில்லாமலேயே எழுதிய கவிதைகளிலும் பொருள் காணப்படுவது என்னை நானே வியந்துகொள்ளத்தக்க அம்சமாகும்" என்று குறிப்பிடுவார்.[2]

பாரதியார், பாரதிதாசன் ஆகிய இருவர் செல்வாக்கு, கண்ணதாசனின் கவிதைகளில் மிகுதி என்பதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார். தம் கவிதைச் சிறப்புக்குப் பாரதிதாசன் கவிதைகளே முழுப் பொறுப்பு என்பதை அவரது ஒரு பாடல் தெளிவுபடுத்துகிறது.

குலத்தலைவா! யான்கற்ற கல்வி கொஞ்சம்;
நாடெனையும் நோக்கும்வகை நான்வ ளர்ந்தேன்;
யாவுமுனைக் கற்றதனால் பெற்ற பேறு...

ஊன்பாய்ந்து உயிர்பாய்ந்து மணக்கும் உந்தன்
உயர்கவிதை கண்டதனால் கவிஞ னாகி
'நான்கண்ட கவிஞ'னெனப் பாட வந்தேன்.[3]

பாரதியார் கவிதைகள் தம் கவிதையாற்றலுக்கு உந்து சக்தியாய் விளங்கியதைக் கூறும் கண்ணதாசன், அவர் இத்தகைய பாடல்களை எப்படித்தான் எழுதினாரோ என்று வியக்கிறார்.

பத்துவிரல் களுள்ளும்
  பாட்டினை ஊற்றிவைத்து
முத்தாய் உதிர்த்தானடி – பாரதி
  முடிகொண் டமர்ந்தானடி.[4]

பாரதியின் பத்துவிரல்களும் பாடல்களாலேயே உருப்பெற் றுள்ளனவாம்!

---

1. இந்நூல், பக். 249-50
2. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, வாக்குமூலம்
3. மேலது, பக். 59-60
4. மேலது, பக். 219

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவரையும் இணைத்தே கண்ணதாசன் எண்ணுகிறார். தமிழுணர்வுக்கான பாதையை,

வகுத்தவன் முன்னோன்; காத்தவன் பின்னோன்
வாழும் தமிழின் காவலர் இவர்கள்.[1]

பாரதி பல்லவி சொன்னான் – தாசன்
பாக்கியைப் பாடித்தன் பாட்டை முடித்தான்.[2]

புறவுணர்ச்சிப் பாடல்களில் இவ்விருபெருங்கவிஞரைப் பின்பற்றிய கண்ணதாசன், தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாடும்பொழுது தம்வழியைத் தனியாய் அமைத்துக்கொண்டார்.

கவிஞன் என்று சொல்வதே ஒருவனுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய பதவி. செல்வத்தில் எவ்வளவு கீழ்நிலையில் இருந்தாலும், அவனிடம் கவிதை பிறக்குமாயின் அவனைவிட உலகில் உயர்ந்தார் எவருமிலர்.

கூடாகிப் போனாலும்
  குடிசையிலே வாழ்ந்தாலும்
ஓடேந்தி ஏந்தி
  ஊரெங்கும் இரந்தாலும்
பாடுகின்ற கவிஞனுக்குப்
  பதவி பெரும்பதவி.[3]

கவிஞன் எனும் பதவிக்கு ஈடாய் வேறு எதுவும் கிடையாது.

தாம் கவிஞர் என்பதில் கண்ணதாசன் தனிப்பெருமை கொள்கிறார். தமிழே தான், தானே தமிழ் எனத் தமிழ்ச் செருக்குடன் பேசுகிறார்.

என்னை அறியாயா!
  இழந்தாயே பேரின்பம்!
நான்தான் கவிஞன்
  நானின்றித் தமிழில்லை![4]

தான் பெற்ற செல்வனை ஏன் பெற்றோம் என்று தாய் அன்று மாண்டுபோனாள்; இப்பிள்ளை உருப்படாதென்று தந்தையும் தணலில் வெந்தார். என்னை உண்டாக்கிய கடவுளோ உயரத்தில் ஒளிந்துகொண்டார்.

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 303
2. மேலது, பக். 305
3. மேலது, பக். 66
4. மேலது, தொகுதி 1 & 2, பக்.

உதிரத்தின் அணுவிலே தமிழன்னை மட்டுமே
உறவாக வந்து நின்றாள்;
வான்பெற்ற பேறுபோல் யான்பெற்ற தமிழிலே
வாழ்கிறேன் வண்ண மயிலே![1]

எனத் தமிழாலேயே தாம் வாழ்வதாய்ச் சொல்கிறார்.

தம்மிடத்தில் தமிழைத் தவிர வேறு ஏதுமில்லை. தமிழே தம் செல்வம் எனச் செம்மாந்து பாடுகிறார். உலகைக் கருக்கல் தழுவியது; சோலைக் குயில்கள் சுதியடங்கிக் கூடடைந்தன; மங்கையர் மென்னடையிட்டெனத் தென்றல் குழைந்தசைந்தது; வெங்கதிர் மறைய வெண்ணிலவு எழும்பியது; நிலாப்பானையில் சோறு பெற மீன்கள் தட்டேந்தி வந்தன; வானுக்கும் போகாமல் மண்ணிடத்தும் தோயாமல் ஞானக் கிறுக்கரைப்போல் அலைந்து திரிந்தன, கார்முகில்கள். இத்தனையையும் கண்டு களித்த பூமிப் பெண்ணின் கண்களை இரவு பொத்த வந்தது. இந்த இரவைப் பாட ஏடெடுத்துச் செல்கிறார், கவிஞர். காரிருளில் அவர் மட்டுமே தனித்திருக்கிறார். இருந்தாலும் யார் வந்து அவரை என்ன செய்ய முடியும்? இங்குக் கவிஞர் எழுதுகிறார் :

தட்டிப் பறித்தாலும்
தமிழல்லால் ஏதுமில்லை[2]

அவரிடமிருந்து தட்டிப்பறிக்கத் தமிழன்றி ஏதுமிலையாம்!

"கண்ணதாசன் கவிதைகளைப் பொறுத்தவரை மதுவும் மங்கையும் வெறும் புலன்நுகர்ச்சிப் பொருள்களாய்த் தாழ்ந்துவிடாமல் கவிதையாக்கத்துக்கான 'உயிர் ஊற்று'களாய் இருத்தலைக் காண்கிறோம்.

வண்ணமணிக் கிண்ணத்தில் வார்க்கும் மதுவகைகள்
இல்லா திருந்தால் இன்றோர் கவிஞனில்லை.[3]

பொங்கு தடந்தோளில் புல்லரித்து வீழ்ந்துவிட்டால்
தங்குதடை யில்லாமல் தமிழ்க்கவிதை ஊறுமடி.[4]

ஓர்கையிலே மதுவும் ஓர்கையில் மங்கையரும்
சேர்ந்திருக்கும் வேளையிலே ஜீவன் பிரிந்தால்தான்
நான்வாழ்ந்த வாழ்க்கை நலமாகும்; இல்லையெனில்
ஏன்வாழ்ந்தாய் என்றே இறைவன் எனைக்கேட்பான்.[5]

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 72
2. மேலது, தொகுதி 1 & 2, பக். 97
3. மேலது, தொகுதி 4, பக். 159
4. மேலது, தொகுதி 6, பக். 97
5. மேலது, தொகுதி 4, பக். 16

மது, மங்கை இரண்டும் கவிஞனின் புலன்நுகர்ச்சியோடு நின்றுவிடாமல் அவனுக்கு ஆன்ம நிறைவுதரும் அளவுக்கு உயர்ந்து நிற்கின்றன; கவிதைகளுக்கும் காவியங்களுக்கும் அவை 'செயல் ஊக்கி'களாய்ப் பயன்படுகின்றன. எனவே, அவற்றிடம் கவிதைகள் 'சுழல் மயக்கம்' கொள்கின்றன. அந்த மயக்கத்தில் வெறும் உலகியல் காமம் கொப்புளிக்கவில்லை; தெய்விகக் காமமே ஊறிப்பாய்கிறது என்பதை அறிகிறோம்" என ஆய்வாளர் வேங்கடபதியார் அறுதியிட்டுக் கூறுகிறார்.[1]

காலத்தைக் கணிக்கும் கவித்துவம் தன்னிடமிருக்கிறது என்பதைக் கவிஞர் கண்ணதாசன் உணர்கிறார்.

கவிஞன் யானோர் காலக் கணிதம்;
கருப்படு பொருளை உருப்பட வைப்போன்;

இவைசரி என்றால் இயம்புவது என்தொழில்;
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை;

வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு;

நானே தொடக்கம், நானே முடிவு,
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்.[2]

எனச் செம்மாப்புடன் கண்ணதாசன் பாடிடக் காண்கிறோம்.

உவமைகள்

அணிகளின் தாய் உவமை என்பர். சங்கப் பாடல்களில் பிற அணிகள் குறைந்து உவமை அணியே மிகுந்திருக்கக் காண்கிறோம். சங்கப் பாடல்களில் சில பாடல்களை எழுதியவர் யார் எனத் தெரியாதவிடத்து அணிலாடு முன்றிலார், செம்புலப் பெயனீரார், தேய்புரிப் பழங்கயிற்றினார் என அப்புலவர்கள் ஆண்டுள்ள உவமைத் தொடர்களாலேயே பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளனர். உவமையைச் சரிவரக் கையாள்வதன் வாயிலாய்க் கவிஞர்கள் பெரு வெற்றி பெறுகின்றனர். கண்ணதாசன் கையாண்டுள்ள இலக்கியத் துறை சார்ந்த உவமைகள் பலவும் அவருடைய கவிமனக் கூறுகளையும் இலக்கிய நல உணர்வுகளையும் அறிய உதவுகின்றன. என்பதை இவ்வாய்வு நூலாசிரியர் வெகு சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

கவிதையைச் சுவைக்க உவமைகள் இன்றிமையாதவை. எந்த ஒரு கருத்தையும் உவமை வாயிலாய்ச் சொல்லும்போதுதான் கவிதை சிறக்கும் என்பது கண்ணதாசன் கருத்து.

---

1. இந்நூல், பக். 241-42
2. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 5, பக். 53-54

ஒவ்வொன் றுக்கும் ஒவ்வோர் உவமை
கண்டு பிடித்துக் கவிதை வடிப்போம்[1]

என்பது அவர் கூற்று.

கருத்து விளக்கத்திற்காகக் கண்ணதாசன் பல உவமைகளை நிரலே ஒரு சேரக் கையாளும் போக்கினைப் பல இடங்களில் காணமுடிகிறது. இராசா முத்தையாச் செட்டியாரின் அறுபது வயது நிறைவுக்குப் பாடியுள்ள கவிதையில் வானுறு மதியம், வளர்பொன்னி நதி, கானுறு தரு, கம்பன்சொற் கவிதை, தென்பாங்குத் தேனீ என உவமைகளை வரிசையாய் அடுக்கிச் செல்கிறார்.

வானுறு மதியம் போலும்
வளர்பொன்னி நதியும் போலும்
கானுறு தருவைப் போலும்
கம்பன்சொற் கவிதை போலும்
தீநறுந் தேன்சேர்க் கின்ற
தென்பாங்குத் தேனீ போலும்
ஆயவர்க் கறுப தாண்டு
ஆயது வாழ்பல் லாண்டு.[2]

பல பொருள்களை உவமையாய்க் கூறும்போது கவிஞரின் உணர்ச்சி வெளிப்பாடு தெளிவாய்ப் புலப்படுகிறது.

ஆயன் குழலுக்(கு) அடங்கும் பசுக்களைப்போல்
மாயன் முகத்துக்கு மயங்கும் மகளிரைப்போல்
தாயின் குரலுக்குத் தாவிவரும் மக்களைப்போல்
தமிழின் ஒலிகேட்கச் சபைநிறைந்த பெரியோரே![3]

பல்பொருள் உவமைகளை கவிஞர் இவ்வாறு பல இடங்களில் கையாண்டிருக்கக் காண்கிறோம்.

அன்றாடம் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளைக் காண்கி றோம். ஆனால் அப்பொருள்களில் காணப்படும் ஒப்புமைகள் நம் அறிவிற்படுவதில்லை. நாம் கண்டும் காணாத பொருள்களை விளக்க உதவுவதுடன், அடிக்கடி காணும் பொருள்களின் தனிச் சிறப்பை விளங்கிக் கொள்ளவும் புலவர்கள் உவமையைக் கையாளுகின்றனர்.

கிழவி ஒருத்தியின் முகத்தைக் காண்கிறோம். முதுமையினால் அவள் முகத்தில் சுருக்கங்கள் ஏற்பட்டிருப்பதை

1. கண்ணதாசன் பாடல்கள், தொகுதி 5, பக். 50
2. கண்ணதாசன் பாடல்கள், தொகுதி 3, பக். 221
3. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 5, பக். 110

அறிகிறோம். குழந்தை ஒன்றின் முகத்தில் கன்னக் கதுப்பையும் காண்கிறோம்! நம் அறிவு இரண்டனையும் தனித்தனியே பார்க்கிறது; அவ்வளவே! இவற்றைக் காணும் கவிஞரோ, இரண்டையும் ஒன்றுபடுத்தி வறட்சியால் கிழவியின் முகம்போல வெடிப்புண்டிருந்த நிலம், மழைபெற்றுக் குளிர்ந்து செழித்துக் குழந்தையின் கன்னக் கதுப்புப்போல விளங்கியது என அவற்றிடையே ஓர் ஒப்புமையை ஏற்படுத்தி விடுகிறார்.

கிழவியின் முகத்தைப் போல
  கீறிட்ட நிலங்க ளெல்லாம்
குழவியின் முகத்தைப் போல
  குளிரட்டும், மழைபொ ழிந்து[1]

கிழவி, குழவி எனும் முரணிய சொற்களைக் கொண்டு, ஓர் அழகிய காட்சி ஓவியத்தை உருவாக்கிக் காட்டிவிடுகிறார், கவிஞர்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு[2]

எழுத்துகளுள் அகரம் முதலாவது போல, உலகத்திற்கு ஆதி பகவன் முதல்வனாகின்றான் என்பது இக் குறளின் பொருள். இதில் 'போல' என்னும் உவம உருபு கொடாமல் செய்தி கூறப் பட்டுள்ளது. இஃது எடுத்துக்காட்டுவமை என்பதை அறிவோம்.

கண்ணதாசனின் கவிதைகளில் எடுத்துக்காட்டு உவமைகள் பல உள. எனினும், கண்ணதாசனின் இவ்வுவமைகள் உவம உருபு பெற்றுப் பல இடங்களில் காணப்படுவதை ஆய்வாசிரியர் தம் ஆய்வுக் குறிப்பாய்ச் சுட்டியிருக்கிறார்.

விளையாட்டுப் பிள்ளையும் பறிக்கப் பலாமரம்
  வேரிற் பழுத்த தேபோல்,
விரும்பினால் சமைக்கின்ற விதத்திலே கோழிகள்
  வீட்டினில் வளர்வ தேபோல்[3]

நெருங்கி வருபவர்க்குத் தான் எளியனாய் இருக்கும் நிலையைத் தெளிவுபடுத்தக் கண்ணதாசன் கூறியுள்ள இந்த எடுத்துக் காட்டுவமையில் 'போல்' எனும் உவமஉருபு பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தொன்ம, காப்பியச் செய்திகளை உவமைகளாக்கிக் கருத்துப் புலப்பாடு செய்யும் போக்கும் கவிஞரிடம் காணப்படுகிறது.

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 6, பக். 241
2. திருக்குறள் 1
3. கண்ண. கவிதை., தொகுதி 4, பக். 70

கலந்ததற்குப் பின்னால்
கணவனல்லன் என்றறிந்த
அகலிகைபோல் என்நெஞ்சம்
அலைமோத......[1]

கணவன் என நினைத்துப் புணர்ந்ததன்பின், அவன் கணவல்லன் என்றறிந்தபோது அகலிகையின் உள்ளம் எவ்வாறு அலைமோதி யிருக்குமோ அதுபோலக் கலங்கியிருந்ததாம், கவிஞர் நெஞ்சம். நெஞ்சக் கலக்கத்தின் மிகுதி அவரை இத்தொன்ம நிகழ்ச்சியை நினைக்கச் செய்கிறது.

தலைவனைப் பிரிந்திருந்த தலைவி வருந்தியிருந்தனைக் காணும் கவிஞர்க்குக் கோவலனைப் பிரிந்து வருந்தியிருந்த கண்ணகியின் நினைவு வருகிறது.

கோதை,கண் ணகியாள் கொண்ட
ஆவலை மனத்தே வைத்து
அந்தநாள் வாழ்ந்தாற் போல[2]

தலைவி கவலையுடனிருந்தாள் எனக் காப்பியச் செய்தியை இங்குக் கவிஞர் உவமையாக்கிக் கொள்கிறார்,

கண்ணதாசன் பழமொழிகளையும் உவமைகளாய்க் கையாண்டுள்ளார்.

கள்ளனையோர் தேள்கடித்த கதையும், காதற்
கதைநடுவில் பிள்ளையழும் கதையும் ஒன்றே.[3]

இவ்வுவமையிலுள்ள சுவை சொல்லி மாளாது. 'திருடனைத் தேள் கடித்தது போல' என்னும் பழமொழியைக் கவிஞர் இங்கே எடுத்தாண்டுள்ளார். கள்ளன் - தேள் கடி; காதற்கதை நடப்பு பிள்ளை அழுகை. 'கதை' எனும் சொல்லில் புதைந்துள்ள கதைகள் தாம் எத்துணை?

இலக்கியம், மொழி சார்ந்துள்ள உவமைகள் பலவும் அவருடைய கவிமனக் கூறுகளையும் இலக்கிய நல உணர்வு களையும் அறிய உதவுகின்றன.

தன் மனைவியைக் கண்டு ஆவலோடு தாவி வந்தான் கணவன். மனைவி அவன் மார்பில் சாய்ந்தாள்; அவன் அரவணைத்தான். அப்போது அவர்கள் நிலை என்ன? கவிஞர் கூறுகிறார், அவனும் அவளும் தமிழும் பொருளுமானார்களாம்!

1. கண்ண., கவிதை., தொகுதி 1 & 2, பக். 101-102
2. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 136
3. மேலது, தொகுதி 1 & 2, பக். 35

அவன் மார்பில்
சாய்ந்தேன் அரவணைத்தான்!
தமிழோடும் பொருளானோம்![1]

தமிழும் பொருளும் ஒன்றானது போல, பிரிக்க முடியாதவர் களாய் அவர்கள் ஒன்றினார்கள்.

நம்பி ஒருவனும் நங்கை ஒருத்தியும் இணைந்ததைச் சொல்லொடும் பொருளாய் ஒன்றினர் எனப் பிறிதோரிடத்திலும் கூறியுள்ளார்.

நல்லிசை வீணை நங்கையும் – மீட்டும்
நயக்காந் தள்விரல் நம்பியும் – இன்று
சொல்லொடும் பொருளாய் ஒன்றினர்.[2]

நம்பியும் நங்கையும் சொல்லொடும் பொருளாய் ஒன்றினர்.

கவிஞரின் நுண்கலை ஈடுபாட்டிற்குச் சான்றுகளாய்ப் பல உவமைகள் உள்ளன. பாட்டு, பண், பரதம் முதலியவற்றைக் கவிஞர் உவமைகளாய் வழங்கியுள்ளார்.

பண்ணொடு இசையும் சேரப்
பரதமும் ஜதியும் போல
பெண்ணொடும் கலந்தேன்! சற்றும்
பிரிவிலா திருந்தேன்.[3]

மக்களின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாய் அவர்க ளிடத்தில் காணப்படும் பண்புகள் கண்ணதாசன் கவிதைகளில் உவமைகளாய் வடிவம் தாங்கியுள்ளன. கோணலின்றி நேராய் எடுக்கப்பெற்ற நடுவகிட்டினை நன்றி, நேர்மை முதலிய பண்புகளுக்கு உவமையாய்க் காண்கிறார், கண்ணதாசன்.

நன்றியும் நேர்மை யும்போல்
நடுவகி டெடுத்து[4]

என்பது அவருடைய பாடலடி.

முன்னையோர் உவமைகளில் உள்ளம் தோய்ந்து, பின்வரும் ஒருவர் அவற்றைத் தம் கவிதைகளில் எடுத்தாளுவதுமுண்டு. பாரதியார் தம் குயிற்பாட்டில்,

நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறிபடுமோ? யார்படுவார்?[4]

எனப் பாடியுள்ள இவ்வுவமையை உள்ளத்திலேற்றி,

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 1 & 2, பக். 102
2. மேலது, பக். 45
3. மேலது, தொகுதி 4, பக்.
4. மேலது, தொகுதி 4, பக்.

தாளம் படும்பாடு
 தாம்படுமோர் பேதையர்க்கு[1]

எனக் கண்ணதாசன் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

பெண்கள் நடை உடை செயல்களைப் பாடுவதில் கிறங்கி விடுபவர், கண்ணதாசன். அவர்களுடைய செயல்களை எவ்வளவு கூர்மையாய்க் கவனிப்பவர் என்பதை அவருடைய உவமைகள் வாயிலாய் அறிந்துகொள்ள முடிகிறது. கதிரவன் மலைகளிடையே மறைந்தான் என்பதைக் கவிஞர்,

மார்பகத்தின் ஆடைக்குள் கடிதம் வைக்கும்
மங்கையரின் கைபோல, மலைக ளூடே
தேர்உருட்டிக் கதிர் சென்றான்...[2]

எனப் பாடுகிறார். கடிதம் எங்கே வைக்கப்பட்டது என்பதை உவமை நன்கு விளக்குகின்றதன்றோ?

நேரடியாய் வெளிப்படையாய்ச் சொல்லமுடியாததை உவமை வாயிலாய் புரிய வைப்பதில் கைதேர்ந்தவராய் இருக்கிறார், கண்ணதாசன்.

கன்றோடிப் பாலுண்ணும் நிலையிற் காளை
கண்மூடித் தேனுண்ணப் புதிய இன்பம்
கொண்டாடும் புதுப்பாவை புதுச்சு கத்தில்
குதிக்கின்றாள் இடைஇடையே! காளை கைகள்
நண்டுறும் படிமெல்ல நடந்து போக
நாணத்தால் பொற்பாவை திரும்பிச் சாய்ந்தாள்![3]

பாவை நிலை, காளை செயல், கைநகர்வு இக் காட்சிகளை எழுதியள்ள விதமே தனி.

இயற்கை, உயிரினங்கள், தாவரங்கள், சமயங்கள், நாடுகள், தொழில்கள், உலோகங்கள் முதலியவை கொண்டு கண்ணதாசன் கூறியுள்ள உவமைகளையெல்லாம் கவிஞர் வல்லம் வேங்கடபதி இந்நூலில் விரிவாய் ஆராய்ந்து, உவமை கூறுவதில் கண்ணதாச னுக்குள்ள தனித்தன்மையை மிகவும் சிறப்பாய் விளக்கியுள்ளார்; மேலும் கவிஞருடைய சிந்தனைக் கூர்மை, தெளிவு, கற்பனை வளம், உணர்ச்சிநலம் முதலியவற்றை அறிய அவருடைய உவமைகள் உதவியாயுள்ளன என்பதையும் புலப்படுத்தியுள்ளார்.

கண்ணதாசனின் கவிதைகளில் சிலேடை அணி இயல்பாய் அமைந்து எளிதில் பொருள் விளங்கக் கூடியதாய் உள்ளது;

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 6, பக். 18
2. மேலது, 1 & 2, பக். 40
3. மேலது, பக். 43

வலிந்து அமைக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. எனினும் அவர் கவிதைகளில் இவ்வணி அருகிய வழக்கமாய் உள்ளது என வேங்கடபதி கூறுகிறார். கண்ணதாசனுடைய சிலேடை ஒன்று :

தைமகள் இன்றே வருகின்றாள் – அத்
தைமகள் இங்கே வருகின்றாள்[1]

இப் பாடல் தை முதல்நாள் பொங்கல் திருநாள் பற்றி எழுதியுள்ள பாடல்.

தைமகள் தைத் திங்கள் என்னும் பெண்; இன்றே வருகின்றாள் இன்று அத் திங்களின் முதல் நாள் என்பது பொருள்.

அத்தைமகள் என்பது ஒரு பொருள். இவ்வாறு இயல்பாய்ச் சிலேடை கண்ணதாசன் கையில் வந்து தவழ்கிறது.

சிலேடை பாடுவது புலமைத்திறம் எனக் கருதப்பட்டு, முன்னாளில் பெரும்புலவர்கள் மிகுதியும் சிலேடைப் பாடல்கள் எழுதிவந்தனர். 1907 மார்ச் 10ஆம் நாள் சென்னை விக்டோரியா மண்டபத்தில் நூறு கவனகர் (சதாவதானி) செய்குதம்பிப் பாவலரின் கவனக நிகழ்ச்சி நடைபெற்றது. 'சிலேடைப்பாட்டு ஒன்று பாடுங்கள்' என்பதே அவரை நோக்கி எழுந்த முதல்வினா. பாவலர் உடனே பாடினார் :

சிரமா றுடையான் செருமா வடியைநீ
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்

என்பது அவர் பாடிய பாடல். 'சிரமா றுடையான்' என்பது பாடலிலுள்ள சிலேடைத் தொடர். பாடலைப் பாடியதுடன், 'ஐம்பொருளையும் விளக்குகின்ற இறைவனுடைய திருவடியை மறவாது மனக்கோயிலினுள் நிறுத்தித் தலைதாழ்ந்து வணங்கி, பிறபெண்கள்மீது இச்சை வையாது இறைவனையே எண்ணி உருகுகின்றவர்கள் பெருந்தவத்தினராய் விளங்கிச் சிறப்புறுவர்' எனப் பொருள்விளக்கமும் தந்தார்.

சிரமா றுடையான்

(அ) சிரம் ஆறு உடையான் சிரத்தில் (தலையில்) கங்கையாற்றை உடையவன் (சிவன்)

(ஆ) சிறம் மாறுடையான் இயல்புக்கு மாறான தலையையுடையவன் (பிள்ளையார்)

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, பக். 206

(இ) சிரம் ஆறு உடையான் - ஆறு தலைகளை உடையவன் (முருகன்)

(ஈ) சிரம் ஆறு உடையான் - திருவரங்கத்தில் தலைப்காகத்தில் ஆறு ஓடும் படியாய்ப் பள்ளிகொண்டுள்ள திருமால்

(உ) சிரம் ஆறு உடையான் - முதன்மையான நல்வழிகளைக் காட்டும் அல்லாஹ்

எனச் 'சிரமா றுடையான்' என்பதற்கு ஐந்து பொருள்களைக் கூறி அவையினரை வியக்க வைத்தார்.

சிலேடை பாடுவது ஒரு கலையாக இருந்த நிலைமாறி இன்று தைமகள் அத்தைமகள் என பாடற்போக்கில் இயல்பாய் சிலேடை அமையும்நிலை பாடல்களில் இடம்பெறுகின்றன. சிலேடையாகவே பாடிக்கொண்டிருக்க இது காளமேகப் புலவர் காலமன்று; சிலேடையாய்ப் பாடித்தான் ஆகவேண்டுமென்றின்றி இயல்பாய் இருபொருள் அல்லது பல்பொருள் அமைந்து விடும்படிப் பாடற் போக்கில் சொற்கள் அமைந்து விடுகின்ற கண்ணதாசன் காலம் இது.

யாப்பு

கவிஞனுக்கு யாப்பறிவு இன்றியமையாதது என்னும் கருத்தினைக் கண்ணதாசன் கவிதைகள் வலியுறுத்துகின்றன.

பெண் ஒருத்தியின் அழகைக் கூறவரும் அவர்,

யாப்பிலே அவளை நெய்வேன்[1]

என்கிறார். யாப்பின்றேல் கவிதைக்கு வாழ்வில்லை என்பது அவர் முடிவு.

பூப்புக்கு முன்பாகப்
புருஷர்க்கு விலைபோகும்
பூவைக்கு வாழ்க்கை யுண்டோ?
யாப்புக்கு முறையின்றிப்
பணிவின்றிப் பொருளின்றிப்
பாடுவார் வளர்வ துண்டோ?
யாப்புக்கு வழிகண்டு
ஆயிரம் பொருள்கொண்டு
அதன்மூலம் வந்த புகழே![2]

யாப்பின் வாயிலாய்த்தான் பாட்டுக்கே புகழ் சேர்கிறது என்கிறார். பாவகைகள், பாவினங்களை மதிக்கிறார்; போற்றுகிறார்;

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 5, பக். 70
2. மேலது, பக். 33

அவற்றை ஏற்று எழுதவேண்டுமென்கிறார். ஆசிரியப்பா எழுதுவதில் அவருக்கு மிகுதியும் ஈடுபாடு இருந்திருக்கிறது.

''அவசரத்தில் எழுதுவதற்கு ஆசிரியப்பாவைப் போல் கைகண்ட துணைவன் கிடையாது.

"வைத்த பேனாவை எடுக்காமல் 'அவசரப் பா' எழுதி முடிக்க 'ஆசிரியப் பா' தான் துணை நிற்கிறது.

''இந்நூலில் (தொகுதி 3இல்) ஆசிரியப்பாவும் அறுசீர் விருத்தங்களுமே அதிகம்." [1]

> தாய்லாந் தில்நான் தழுவிய பெண்ணை
> கம்பன் விருத்தக் கவிதையில் உரைத்தேன்[2]

என விருத்தப்பாவின் பெருமை பேசுகிறார்.

நாட்டுமக்கள் வழங்கிய அளவடியற்ற இசைமிகுந்த பாடல்கள் அனைத்தும் 'சிந்து' என வழங்கப்படுகின்றன. பாரதியும் பாரதிதாசனும் பல சிந்துப் பாடல்கள் பாடியுள்ளனர். கண்ணதாசன் சிந்து பாடுவதில் பெருவிருப்புடையவராயிருந் திருக்கிறார்.

> கள்ளிச் செடிதன்னைத்
> தோட்டத் திலேவைத்துக்
> கண்களில் காத்தாலும் – அது
> முல்லைமலர் ஒன்று
> தந்து விடாதென
> நாமறிவோம் நெஞ்சே – நன்னெஞ்சே
> நாமறிவோம் நெஞ்சே![3]

என்பன போன்ற ஓசை நயமிக்க காவடிச்சிந்துகளைக் கண்ணதாசன் நிறையப் பாடியுள்ளார்.

"கவிதை என்பதைத் தேமா, புளிமா என்றெல்லாம் பிரித்து நான் பார்ப்பதில்லை. ஓசைக்கு அடங்கியதாகவே பார்க்கிறேன். அதனால்தான் வெண்பாவில் நான் அதிகம் எழுதுவதில்லை" எனக் கண்ணதாசனே கூறுகிறார்.[4]

மேலும், "சில இடங்களில் ஓசைநயம் கெடாமல் இலக்கண வரம்பை வளைத்துக்கொண்டுமிருக்கிறேன். ஏதாவதொரு இடத்தை வைத்துக்கொண்டு இதற்கு இலக்கணத்தில் விதி எங்கே?

---

1. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3, வாக்குமூலம், பக். vi
2. மேலது, தொகுதி 5, தலைவாசல், பக். 9
3. கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 4, பக். 33–34
4. கண்ணதாசன், வாழ்க்கையெனும் சாலையிலே, பக். 32–33

என்று யாராவது கேட்டால், பழைய இலக்கணங்களைப் புரட்டாதீர்கள்; என்னிடம் வாருங்கள் சொல்கிறேன்" என எழுதியுமுள்ளார்.[1]

தம்முடைய மாங்கனி காப்பியத்திற்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில் "இலக்கண வரம்பை உணர்ச்சி தாண்டியபோது நான் குறுக்கே நிற்கவில்லை. ஆகவே இந்தக் காவியத்தில் காணப்படும் 'சட்டத்தை மீறிய குற்றங்கள்' வேகமாய் ஓடிய என் உணர்ச்சியின் விளைவுகளே! காய முனையும் புலவர்கள் மன்னிக்க" என்கிறார்.

யாப்பு வரையறையின்றி இசை ஒழுங்கு மட்டுமே கொண்டவை திரையிசைப் பாடல்கள்; தரப்படுகின்ற தத்தகாரத்திற்கு ஏற்பப் பாடல்கள் அமைந்தால் போதுமானது. அப்பாடல்களில்கூட சொற்களில் வல்லின ஒற்றுகள் மிகுதியும் வந்தால் இசையமைப்புக்கு ஒத்துவராது என்பார்களாம், இசையமைப்பாளர்கள். எந்த இசையிலும் எந்த வகையிலும் பாடக்கூடிய ஆற்றல் பெற்றவர், கண்ணதாசன்; ஆதலின் இசையமைப்பாளர்கள் ஒத்துவராது என்று சொல்வதையே ஒத்துவரும்படியாய்ப் பாடல் புனைய முடியும் என அவர் நிறுவியுள்ளார் என அறிஞர் ஒருவர் கூறி, அதற்கான சான்றுகளும் தந்துள்ளார்.

"இசையமைப்பாளர்கள் கூற்றினை மாற்றிக் காட்டுவது போல கண்ணதாசன் ஒரு பாட்டு எழுதினார்.

அத்தான் – என்னத்தான் – அவர்
என்னைத்தான்...
எப்படிச் சொல்வேனடி? – அவர்
கையைத்தான் கொண்டு மெல்லத்தான் – வந்து
கண்ணைத்தான்... எப்படிச் சொல்வேனடி!

மொட்டுத்தான் கன்னி சிட்டுத்தான்
முத்துத்தான் உடல் பட்டுத்தான் – என்று
தொட்டுத்தான் – கையில்
இணைத்தான், வளைத்தான், சிரித்தான், அணைத்தான்
எப்படிச் சொல்வேனடி?...

இப்பாடலில் எத்தனை வல்லின ஒற்றுகள்?

இன்னொரு பாடல்

கட்டித் தங்கம் வெட்டி எடுத்து
காதல் என்னும் சாறு பிழிந்து

1. கண்ண. கவி., தொகுதி 1 & 2, முன்னுரை (1955)

தட்டித் தட்டிச் சிற்பிகள் செய்த உருவமடா – அவள்
தளதளவென்று ததும்பி நிற்கும் பருவமடா!
தொட்டுத் தொட்டு நின்றன கைகள்
சுட்டுச் சுட்டுக் கொன்றன கண்கள் – நான்
கிட்டக் கிட்ட வந்தது கண்டு
எட்டி எட்டிச் சென்றது வண்டு!

இந்தப் பாட்டில்தான் எத்தனை 'ட்'டுகள் - அத்தனையும் இன்பச் சொட்டுகள்" என வியந்து போற்றுகிறார் அவ்வறிஞர்.

எதையும் ஒழுங்குக்குட்படுத்தி எழுதமுடியும் என்றுள்ள கண்ணதாசன் யாப்பின்வழி கவிதைகள் அமைய வேண்டும் என வலியுறுத்தி வந்தார்.

கவிதை யாப்புக்குட்பட்டு இருக்கவேண்டுமென்பது கண்ணதாசன் அவர்களின் கருத்தெனினும், அதில் கண்மூடித் தனமும் கட்டுப்பெட்டித்தனமும் கூடாது என்னும் கருத்துடை யவராயும் அவர் திகழ்ந்தார். தேவைப்படுகிற நேரத்தில் சூழ்நிலைக்குத் தக்கவாறு யாப்பில் நெகிழ்வுப் போக்கைப் மேற்கொள்ளலும் புதிய யாப்பை உருவாக்கிக் கொள்ளலும் வரவேற்கத்தக்கது எனும் உணர்வுடையவராய்க் கவிஞர் காணப்பட்டார். மேலும், அவரே தம் கவிதைப் படைப்பில் நெகிழ்வுப்போக்குகளைப் பொருத்தமுறப் புகுத்தி வெற்றி கண்டுள்ளார் என்பதை ஆய்வாளரும் புலப்படுத்தியிருக்கிறார்.

யாப்புக்குட்பட்டே கவிதைகள் அமையவேண்டுமென்ற கருத்துடையவராயினும் யாப்பில் அடங்காத புதுக்கவிதைகளில் உள்ள கருத்து நயத்தையும் சொல் வீச்சையும் அவர் பாராட்டத் தவறவில்லை.

இவ்வாறு பன்முகப் பார்வை கொண்ட கண்ணதாசனின் பாடல்களைக் கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்கள் நாட் டொருமையுணர்வு, சமுதாயச் சிந்தனைகள், பக்தி நெறி, கையறுநிலைப் பாடல்கள், தத்துவம், கவிதை - கவிஞன் பற்றிய கருத்துகள், உவமைகள், யாப்பு என்ற வகையில் ஆய்ந்து மிகத் தெளிவான முடிவுகளை இந்நூலுள் தந்துள்ளார்.

கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகளை உவமையாகப் பிரித்து ஆய்ந்திருப்பதும்; பக்தி மனத்தின் சீரிய பண்புகளாகக் கவிஞர் கண்டதாகப் பதினோரு பண்புகளை எடுத்துக் காட்டியிருப்பதும்; கையறு நிலைக் கவிதைகளில் தூதுநெறி, கடித நெறி, கதை உரை நெறி, மேடைப்பொழிவு நெறி என்பன போன்று பத்து நெறிகளாகப் பகுத்து ஆய்ந்திருப்பதும்; கண்ணதாசன்

கவிதைகளில் கடவுள், சமயம், பிறப்பு, வாழ்க்கை, வாழ்க்கைச் சிறப்புகள் மற்றும் பிற பற்றிய உண்மைகளை வலியுறுத்தத் தத்துவம் என்னும் சொல் கையாளப் பெற்றுள்ளது என விளக்கியிருப்பதும்; கவிதை கவிஞன் பற்றிய கருத்துகளில் கவிதைப் பிறப்புக்கும் சிறப்புக்கும் இன்றியமையாத கவிமனக் கூறுகளை ஆய்ந்து தேர்ந்து அவற்றைக் கவிஞன்பால் சார்த்திக் காட்டியிருப்பதும்; பரந்துபட்ட உவமைகள் ஒருபாலிருக்கச் செறிவாய் அமைந்த உருவகங்களும் தெளிவுற அமைந்த சிலேடையும் கவிஞருடைய கவிதையாற்றலின் வெளிப்பாடாக இருப்பதை மெய்ப்பித்திருப்பதும்; யாப்பு விதிகள் பற்றிய கண்ணதாசன் மனோநிலையைப் பாங்குறத் தெளிவுபடுத்தி யிருப்பதும் பாராட்டத்தக்கன.

கண்ணதாசன் மதிப்பீடு

வல்லம் வேங்கடபதியின் இவ் ஆய்வேட்டினைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களே பார்வையிட்டுத் தம் மதிப்புரையை வழங்கியுள்ளார். இது கவிஞர் வேங்கடபதி அவர்களுக்குக் கிட்டியுள்ள ஒரு தனிச் சிறப்பு எனக் கூறலாம். கண்ணதாசன் எழுதுகிறார் :

"வேங்கடபதியின் கணிதம் என்னையேகூட மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.

'நாமா இப்படி....?' எனச் சற்றுப் பின்னாலே தள்ளிப் பார்க்க வைத்தது அவரது ஆராய்ச்சி.

வேங்கடபதி என்னைப் போலவே 'எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம்' என மதிப்பவர்.

நான் நிறைய எழுதவேண்டும் என்று தூண்டியவரும் அவரே; எழுதியவற்றை ஆராய்ச்சி செய்தவரும் அவரே.

பிறரைப்போல் எழுதப் பழகாமல் தனித்தன்மையைக் காப்பாற்றி வருகிறார்.

கசப்பும் காழ்ப்பும் பொறாமையும் வயிற்றெரிச்சலும் நிறைந்த உலகத்தில், இத்தகைய நண்பர்களைப் பார்க்கும்போது எனக்குக் கண்ணீர் மல்குகிறது."[1]

வேங்கடபதியின் ஆய்வுரை கவிஞரின் மனத்தைத் தொட்டிருக்கிறது என்பது அவருடைய எழுத்தில் பளிச்சிடுகிறது.

---

1. கவிஞர் கண்ணதாசன், குமுதம் (1-1-1981) இதழில்

வேங்கடபதியின் முன்னுரை

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மறைவுக்குப் பிறகு, வெளிவந்த கண்ணதாசன் கவிதைகள் தொகுதி 7க்கு இவ்வாய்வேட்டின் ஆசிரியர் வல்லம் வேங்கடபதி சிறந்ததொரு முன்னுரை எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ளது

"எதுபற்றிப் பாடினாலும் எப்போது பாடினாலும் பாடியதையே பாடினாலும் புதியது பாடினாலும் அவர் பாடலில் ஏதோ ஒரு கிறக்கம் இருக்கிறதே, அது என்ன? அது இன்னது, இப்படிப்பட்டது என்று சொற்கள் கொண்டு என்னால் விளக்க முடியவில்லையே! ஒருவேளை அவரைக் கொள்ளை கொண்ட கள்ளே நம் நெஞ்சை அள்ளும் கவிதையாக உருமாறியதோ என்னவோ?

பாரதியாரைவிட, பாரதிதாசனாரைவிட அவரென்ன அப்படிக் கொட்டிக் கவிழ்த்துவிட்டார்? என்று சிலர் கேட்பது என் காதில் விழுகிறது. உண்மைதான். ஒன்றுமில்லைதான். பாடுபொருள், யாப்பு, சந்தம் எல்லாம் பழையனவே. ஆயினும், அவர் கவிதைகளில் ஏதோ ஒன்று இருந்துகொண்டு நம்மை ஆட்டுவிக்கின்றதே! அது என்ன? அது பாரதி அல்ல; பாரதிதாசன் அல்ல; பாரதி-பாரதிதாசன் கூட்டும் அல்ல. வேறென்ன? வேறொன்றுமல்ல; அது கண்ணதாசன்." [1]

இம்முன்னுரை, கண்ணதாசனிடம் வேங்கடபதி கொண்டுள்ள பற்றினையும், பாசத்தினையும், பிணைப்பினையும் காட்டுகிறது. கண்ணதாசன்மீது கொண்டுள்ள மதிப்பினால் வேங்கடபதியின் ஆய்வு, எந்த இடத்திலும் ஒருபாற்கோடியதாய் இல்லை; ஆய்வு சமன்செய்து சீர்தூக்கியதாகவே உள்ளது. ஆய்வாளரும் ஆய்வுக்குரியவரும் ஒருவரையொருவர் வியந்து போற்றுபவரெனினும் ஆய்வு 'காமம் செப்பாது கண்டதே' மொழியும் திறத்ததாயுள்ளது.

கவிஞரைக் கவிஞர் பார்த்துள்ள பார்வை

"கற்பனைகள் ஆசையோடு குதித்தெழும்போது தலையான கவிதை பிரசவமாகிறது.

எண்ணங்கள் தடையின்றி இதிலிருந்து இதுவரை என வரப்பின்றிப் பிரவாகமாக ஓடும்போது அபூர்வமான முத்துகள் சிதறுகின்றன.

1. வல்லம் வேங்கடபதி, கண்ணதாசன் கவிதைகள் ஏழாவது தொகுதி - முன்னுரை பக். v - vi

சொல்லும் பொருளும் கைவந்ததாகிவிட்டால் சொல்லுகின்ற எந்தப் பொருளும் சுவையாகிறது'' என்பது கண்ணதாசனின் கூற்று. அவருடைய இந்தக் கூற்றுக்கு அவருடைய கவிதைகளே சான்றாய் இருப்பதைக் கவிஞர் வேங்கடபதியார் மிகச் சிறப்பாய் எடுத்து மொழிந்துள்ளார்.

புகழ்மிக்க கவிஞர் ஒருவரை, புகழ்மிக்க கவிஞர் ஒருவர் பார்த்த பார்வை என்பது இந்நூலின் தனிச்சிறப்பு. "பாம்பின கால் பாம்பறியும்.'' கவிஞன் மனத்தைக் கவிஞன்தானே சிறப்பாய் அறியமுடியும்! சமகாலத்தில் வாழ்ந்து மறைந்த கவிஞர் ஒருவர் பாடல்களை ஆய்ந்து நடுநிலையோடு கருத்துகளைச் சொல்லும் வேங்கடபதியார் போன்ற நல்லுள்ளங்கள் நாட்டில் பெருக வேண்டும். ஆய்வாளர்க்கு என் அன்பார்ந்த பாராட்டுகள்.

நூல் ஆக்கம்	கவிஞர் வல்லம் வேங்கடபதி
வகைமை	ஆய்வேடு
வெளியீடு	வல்லம் வேங்கடபதி வெளியீடு. (1988)